திட்டமிட்ட வளர்ச்சி! தமிழ்நாட்டின் எழுச்சி!!



2 ஈடில்லா ஆட்சி

ஈராண்டே சாட்சி

மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

04.05.2023

வாழ்த்துச் செய்தி

தாய்த் தமிழ்நாட்டையும் – மக்களையும் – மொழியையும் காக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி ஆறாவது முறையாக பொறுப்புக்கு வந்த நாள் 2021 மே 7.

ஈராண்டு காலத்தில் இந்தியத் துணைக்கண்டத்தில் வேறு எந்த அரசும் சாதிக்க முடியாத சாதனைகளைச் செய்து உலகத்தையே திரும்பிப்பார்க்க வைக்கும் மகத்தான செயல்களைச் செய்து காட்டி வருகின்றோம்.

ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டின் ஒவ்வொரு தனிமனிதரையும் காக்கும் நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். ஏழை – எளிய விளிம்புநிலை மக்கள், பிற்படுத்தப்பட்ட – மிகவும் பிற்படுத்தப்பட மக்கள், சிறுபான்மையினர், பட்டியலின – பழங்குடி மக்கள், பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் என அனைத்துத் தரப்பு மக்களின் ஆட்சியாக நடைபெற்று வருகிறது.

கல்வித்துறையில் மாபெரும் புரட்சி நடந்து வருகிறது. கல்வி நீரோடை பாயாத இடமில்லை என்ற வகையில் மாணவ சமுதாயத்தைச் செழிக்க வைத்துள்ளது. அரசுப் பள்ளிகளை நோக்கி லட்சக்கணக்கான பிள்ளைகள் சேர்ந்துள்ளது பெருமகிழ்ச்சிக்குரியது. 'நான் முதல்வன்' திட்டம் மாணவ,மாணவியரையும் இளைஞர்களையும் தன்னம்பிக்கை உள்ளவர்களாக மாற்றி வருகிறது.

மகளிருக்கு வழங்கப்பட்டுள்ள கட்டணமில்லாப் பேருந்து வசதி, சமூகத்தின் சரிபாதியான பெண்ணினத்தை சமூக, பொருளாதார ரீதியாக மட்டுமல்ல மனவியல் அடிப்படையிலும் வளர்த்துள்ளது. அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்விக்கு வரும் மாணவியர்க்கு வழங்கப்படும் ஆயிரம் ரூபாய் என்பது, பெண்கல்வியை அதிகமாக ஊக்கப்படுத்தி இருக்கிறது. மகளிருக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையை வரும் ஆண்டில் வழங்க இருக்கிறோம்.

தமிழ்நாட்டை நோக்கி உலக முதலீட்டாளர்கள் வந்து கொண்டு இருக்கிறார்கள், புதிய புதிய முதலீடுகள் ஈர்க்கப்பட்டு வருகிறது. உற்பத்தியும் ஏற்றுமதியும் அதிகரித்து வருகிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது இந்தியாவில் மற்ற மாநிலங்களை விட உயர்ந்ததாக உள்ளது.

வேளாண் உற்பத்தியில் பாசனப் பரப்பு அதிகமாகி உணவுப் பொருட்களின் விளைச்சல் அதிகரித்து வருகிறது. இப்படி கல்வி, மருத்துவம், மக்கள் நல்வாழ்வு, தொழிலாளர், சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம் ஆகிய அனைத்துத் துறைகளும் சீர்மிகு செயல்பாடுகளால் தமிழ்நாட்டை மேன்மையடைய வைத்துள்ளோம். சாலை வசதிகள், நகர்ப்புற வளர்ச்சி உள்ளிட்டவை தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பை உலகத் தரத்திற்கு உயர்த்தி உள்ளது.

இந்த ஈராண்டு காலத்தில் 5 ஆண்டுகள் செய்ய வேண்டிய சாதனைகளை செய்து உள்ளோம். ஈராண்டு காலம் என்பது ஐந்தாண்டு காலத்தில் பாதிக்கும் குறைவானதுதான். ஆனால் நிறைவான ஆட்சியாக அமைந்திருக்கிறது. இந்த சாதனைச் சரித்திரத்தின் குவியலாக தமிழ்நாடு அரசு செய்தித்துறையின் சார்பில் வெளியாகும் 'தமிழரசு' மலர் அமைந்துள்ளதைப் பார்த்து பெருமையடைகிறேன்.

இரண்டாம் ஆண்டில் செய்து தரப்பட்ட திட்டங்களைத் துறைவாரியாகத் தொகுத்து வழங்கி இருப்பது மிகப்பெரிய ஆவணமாக அமைந்துள்ளது. துறைரீதியாகப் பார்க்கும்போது இத்தனை திட்டங்களா என்ற மலைப்பு எனக்கே ஏற்படுகிறது. ஓராண்டு காலத்தில் ஒவ்வொரு துறையும் துடிப்போடு செயல்பட்டு வந்திருப்பதற்கு இவை சாட்சியங்களாக அமைந்துள்ளன.

இந்த மலருக்கு மகுடம் வைப்பது என்பதைவிட, நமது ஆட்சிக்கு மகுடம் வைப்பதைப் போல 12 ஆளுமைகளின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஆட்சியின் பன்முகக் கூறுகளை எடைபோட்டு கட்டுரைகள் வழங்கியுள்ள திரு. ஆர்.பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்., திரு. பாலச்சந்திரன் ஐ.ஏ.எஸ்., திரு. விஜயசங்கர், திரு. ஏ.எஸ்.பன்னீர்செல்வன், திரு. ஜென்ராம், திரு. சுரேஷ் சம்பந்தம், திரு. சூரியா சேவியர், திரு. மதிவண்ணன், திரு. முருகேஷ்பாபு, திருமிகு. மதிவதனி, மருத்துவர் திருமிகு. யாழினி, திரு. சூரியா கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பாகவும் சிறப்பாகவும் இதனை உருவாக்கித் தந்துள்ள செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களுக்கும், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் இ.ஆ.ப. அவர்களுக்கும், தமிழரசு ஆசிரியர் குழுவினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிஞர்கள் – ஆளுமைகள் பார்வையில் திராவிட மாடல் அரசு, தமிழ்நாடு நாள் ஜூலை 18 சிறப்பு மலர், நூற்றாண்டு கண்ட கல்விப் புரட்சி, வ.உ.சி. 150 பிறந்த ஆண்டு சிறப்பு மலர்,

பாரதி நினைவு நூற்றாண்டு சிறப்பு மலர், இலக்கியமலர் –2023 ஆகிய பல்வேறு காலப் பெட்டகங்கள் 'தமிழரசு' சார்பில் கடந்த இரண்டு ஆண்டுகளாக வெளியிடப்பட்டுள்ளன. அந்த வரிசையில் இந்த ஈராண்டு மலரும் காலப்பெட்டகமாக அமைந்துள்ளது.

ஈராண்டு காலம் சிறப்பான ஆட்சி நடந்திருக்கிறது என்பதற்குச் சாதனைகளே சாட்சி என்றால், அந்த சாதனைகளை அறிய 'தமிழரசு' மலரே சாட்சி! இது படிக்க மட்டுமல்ல, பாதுகாக்கவுமான ஆவணம்!

ஈராண்டில் இணையற்ற சாதனைகளைச் செய்த திராவிட மாடல் அரசானது மூன்றாவது ஆண்டில் முழுவீச்சில் தனது சாதனைப் பயணத்தைத் தொடர்கிறது.

அன்புடன்,

(மு.க.ஸ்டாலின்)

மு.பெ. சாமிநாதன்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

02.05.2023
நாள்.....

நுழைவாயில்

தந்தை பெரியாரின் கொள்கை வலிமையும்,
பேரறிஞர் அண்ணாவின் மாளுடப்பற்றும்,
முத்தமிழறிஞர் கலைஞரின் விடாமுயற்சியும்

– கொண்டு கண்துஞ்சாது உழைத்து தமிழ்நாட்டை காத்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஈராண்டுகளில் எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்திக் காட்டியதன் மூலம் தமிழ்நாட்டை இந்தியாவின் நம்பர் 1 மாநிலமாக மாற்றி பெருமை சேர்த்துள்ளார்கள்.

கொரோனா என்ற கொடிய நோய் தொற்றினால் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்ட நேரத்திலும், தமிழ்நாட்டு மக்கள் எந்த பாதிப்பும் அடையா வண்ணம், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4,000 நிவாரணம், ஆவின் பால் விலை ரூ.3 குறைப்பு, அரசு நகரப்பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லாப் பயணம், பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடித்தீர்வு காணும் "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டம், கொரோனாவிற்கு தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுபவர்களுக்கான கட்டணத்தை அரசே ஏற்கும் போன்ற முத்தான ஐந்து திட்டங்களினால் தனித்துவம் வாய்ந்த அரசாக தமிழ்நாடு அரசு திகழ்ந்து வருகிறது.

அனைவருக்குமான வளர்ச்சி, அனைத்துத் துறையினுடைய வளர்ச்சி, அதனையும் தாண்டி அனைத்துச் சமூக வளர்ச்சியாக வடிவமைக்கப்பட்டுள்ள 'திராவிட மாடல்' ஆட்சியானது, மக்களைத்தேடி மருத்துவம் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், இல்லம் தேடிக் கல்வி திட்டம், புதுமைப்பெண் திட்டம், மாற்றுத் திறனாளிகளுக்கான ஓய்வூதியம் உயர்வு, நான் முதல்வன் திட்டம், ரூ.1,000 ரொக்கத்துடன் பொங்கல் பரிசுத்தொகுப்புத் திட்டம், விவசாயிகளுக்கு 1 இலட்சம் இலவச மின்

இணைப்புகள் வழங்கும் திட்டம் ஆகிய மக்கள் நலத்திட்டங்கள், இவை அனைத்திற்கும் முத்தாய்ப்பாக கடைக்கோடி மக்களுக்கும் இத்திட்டங்கள் போய் சேருவதைக் கண்காணிக்க "கள ஆய்வில் முதலமைச்சர்" போன்ற தரணி போற்றும் தன்னிகரில்லா சிறப்புமிகு திட்டங்களால் அனைத்துத் துறைகளும் தமது பணிகளை செவ்வனே செய்து வருகிறது.

பத்து வருடங்கள் ஆட்சியில் இருந்தால் என்னென்ன செய்திருக்க முடியுமோ அதைவிட அதிகமான அளவிற்கு **"திராவிட நாயகனாக" திகழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** பொறுப்பேற்ற இரண்டு வருடத்தில் பல திட்டங்களை, சாதனைகளைச் செய்து காட்டியிருக்கும் தமிழ்நாடு அரசு, இத்தகைய வரலாற்றுச் சாதனைகள் அனைத்தையும் தொகுத்து செய்தித் துறை, "தமிழரசு" அச்சகத்தின் வாயிலாக "ஈராண்டுச் சாதனை மலர்" ஒன்றினை உருவாக்கியிருக்கிறது.

செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்களின் சீரிய முயற்சியால் உருவாக்கப்பட்டிருக்கும் "ஈராண்டுச் சாதனை மலரினை" அனைத்து மக்களும் படித்து பயன்பெற வேண்டும் என அன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி!! வணக்கம்!!

அன்புடன்

25/5/2023

(மு.பெ.சாமிநாதன்)

வெ. இறையன்பு
தலைமைச் செயலாளர்

தலைமைச் செயலகம்
சென்னை–600 009

வாழ்த்துரை

தமிழ்நாடு அரசு, ஏழையெளிய மக்கள் வாழ்க்கையில் ஏற்றத்தைக் கொண்டு வருவதற்காக, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக கல்விப் பரவலாக்கம், உயர் கல்வியில் மேம்பாடு, திறன் வளர்ச்சி நலத் திட்டங்கள் என பல அறிவிப்புகளை அளித்து, அரசாணைகளாக வெளியிட்டு, செயல்படுத்தி வருகிறது. அவற்றின் காரணமாக, பல விரும்பத்தக்க மாற்றங்கள் தமிழ்நாடு முழுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

தீட்டிய திட்டங்களையும், செயல்படுத்திய விவரங்களையும் ஆவணப்படுத்துவது மிகவும் முக்கியம். ஆவணப்படுத்துவது, நாம் நடந்து வந்தப் பாதையைத் தெளிவுபடுத்துவதற்கும், கடக்கவேண்டிய தூரத்தைத் துரிதப்படுத்துவதற்கும் சாதகமாக இருக்கும். திட்டங்களை அசைபோடுவதற்கும், மேம்படுத்துவதற்கும், மெருகேற்றுவதற்கும் கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செய்த சாதனைகளைத் தொகுப்பது அவசியம். அந்த வகையில், இன்று தமிழ்நாடு அரசு இரண்டு ஆண்டுகளாக அறிவித்து, செயல்படுத்திய திட்டங்கள் நேர்த்தியாகவும், செம்மையாகவும், ஒரு சிறப்பு மலராகத் தொகுக்கப்பட்டு, உங்கள் கைகளில் தவழ்கிறது.

இதை நுட்பமாகத் தொகுத்து, நுணுக்கமாக வடிவமைத்து, வெளியிட்ட செய்தித் துறை இயக்குநர் திரு.மோகன் அவர்களுக்கும், செய்தித் துறை அலுவலர்களுக்கும், தமிழரசு அச்சக அலுவலர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெ.இறையன்பு

தொலைபேசி: 044–25671555 நகரி: 044–25672304 மின்அஞ்சல்: cs@tn.gov.in

மரு. இரா. செல்வராஜ், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

அணிந்துரை

நல்லதோர் நாட்டை உருவாக்க தொலைநோக்குப் பார்வையும், நல்லெண்ணமும்தான் தேவை என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அரசின் அளப்பரிய திட்டங்களால் அனைத்து வளமும் கொண்ட மாநிலமாக தமிழ்நாட்டை முன்னிலைப்படுத்துவதை இலட்சியமாக்கி அதனை செயல்படுத்தியதை மெய்ப்பிக்கும் வகையில் "ஈராண்டுச் சாதனை மலர்" ஒன்றினை தொகுத்து வழங்குவதில் செய்தித்துறை மிக்க மகிழ்ச்சி கொள்கிறது.

எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்

-என்ற வான்புகழ் வள்ளுவப் பெருந்தகையின் வரிகளுக்கேற்ப, கிடைத்த காலத்தை சரியாகப் பயன்படுத்தி ஏழை, எளிய விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, தனது சிந்தையில் உதித்த திட்டங்கள் அனைத்தையும் உடனுக்குடன் மக்களுக்கு கொண்டு சேர்த்து மக்கள் பாராட்டும் முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்.

அனைத்துத் துறைகளும் செயல்படுத்திய அளப்பரிய சாதனைகளை தொகுத்து "ஈராண்டுச் சாதனை மலர்" என்ற தலைப்பில் வெளிக்கொணர்ந்துவர அயராது உழைத்த செய்தித்துறையின் அலுவலர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த "ஈராண்டுச் சாதனை மலரினை" அனைவரும் படித்து பயன் நல்க வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்

(இரா. செல்வராஜ்)

தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009. மின்னஞ்சல் : tdinfosec@tn.gov.in
தொலைபேசி (அலுவலகம்) : 044–25672887, நகரி : 044–25672021

த. மோகன், இ.ஆ.ப.
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

ஆசிரியர் உரை

நிகழ்காலத்தைப் பொற்காலமாக மாற்றும் முயற்சியில் ஓயாமல் சுற்றும் பூமிபோல் நித்தமும் தமிழ்நாட்டு மக்களின் நலன் ஒன்றையே தனது கொள்கையாக நினைத்து செயல்பட்டு வரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தன்னிகரற்ற தலைமையிலான அரசு இரண்டாண்டுகளில் படைத்த சாதனைகளைத் தொகுத்து "ஈராண்டு சாதனை மலர்" ஒன்றினை செய்தித் துறை "தமிழரசு" அச்சகம் வெளியிட்டுள்ளதை பெருமையாகக் கருதுகிறேன்.

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்

– என்ற உலகத் திருமறை திருக்குறள் சொல்படி, தனது திறம்பட்ட செயல்திறனால் நாட்டு மக்களின் மேன்மைக்காக எண்ணிலடங்கா ஈடு இணையற்ற திட்டங்களை அறிவித்து அதனை செயல்படுத்தி வெற்றி கண்டு தமிழ்நாட்டு மக்கள் மனதில் என்றும் நீக்கமற நிறைந்து நிற்கும் ஒப்பற்ற மனிதராகத் திகழ்கிறார் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

சாமானிய அடித்தட்டு மக்களுக்காக நடத்தப்படுகிற இந்த ஆட்சியின் மக்கள் நலத்திட்டங்களனைத்தையும், மக்களுக்கு பயனளிக்கும் வகையில், துறைவாரியாக, பட்டியலிட்டு செயல்படுத்திய சாதனைத் தொகுப்புகளை மாலையாகக் கோர்த்து கொடுத்துள்ளது செய்தித் துறை.

இச்சாதனை மலரினைத் தொகுத்து வழங்கும் முயற்சியில் அரும்பாடுபட்ட செய்தித் துறை அலுவலர்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

(த. மோகன்)

தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009. மின்னஞ்சல் : dipr@tn.gov.in
தொலைபேசி (அலுவலகம்) : 044–25671300, நகல் : 044–25677777

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம் : சித்திரை - வைகாசி
மே 2023
திட்டமிட்ட வளர்ச்சி!
தமிழ்நாட்டின் எழுச்சி!
ஈராண்டு சாதனை மலர்
சிறப்பு வெளியீடு

ஆசிரியர் - வெளியிடுபவர்
த. மோகன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
கு. சுபாஷ்
இரா. பாலாஜி
மு. பரத்குமார்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீநந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.



கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி. - குறள்: 390

நல்வாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்கு புகழொளி சேர்ப்பதாகும்.

- திருக்குறள் கலைஞர் உரையிலிருந்து...

ஈராண்டில் பல்வேறு துறை சாதனைகள்...

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 1

2. மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்
திரு. **துரைமுருகன்** அவர்கள் 13

3. மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்
திரு. **கே.என்.நேரு** அவர்கள் 19

4. மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. **இ.பெரியசாமி** அவர்கள் 41

5. மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்
திரு. **க.பொன்முடி** அவர்கள் 47

6. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு. **எ.வ.வேலு** அவர்கள் 51

7. மாண்புமிகு வேளாண்மை மற்றும்
உழவர் நலத்துறை அமைச்சர்
திரு. **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** அவர்கள் 63

8. மாண்புமிகு வருவாய் மற்றும்
பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
திரு. **கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்** அவர்கள் 83

9. மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்
திரு. **தங்கம் தென்னரசு** அவர்கள் 91

10. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் 105

11. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்
திரு. **எஸ்.ரகுபதி** அவர்கள் 121

12. மாண்புமிகு வீட்டுவசதி மற்றும்
நகர்ப்புர வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. சு.முத்துசாமி அவர்கள் 127

13. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள்..... 131

14. மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில்
நிறுவனங்கள் துறை அமைச்சர்
திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் 135

15. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள்..... 141

16. மாண்புமிகு சமூக நலன் மற்றும்
மகளிர் உரிமைத்துறை அமைச்சர்
திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள் 147

17. மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும்
கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்
திரு. அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்
அவர்கள்..... 155

18. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர்
நலத்துறை அமைச்சர்
திரு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்
அவர்கள்..... 173

19. மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
திரு. கா.ராமச்சந்திரன் அவர்கள்..... 177

20. மாண்புமிகு உணவு மற்றும்
உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர்
திரு. அர.சக்கரபாணி அவர்கள்..... 183

21. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்
திரு. வி.செந்தில் பாலாஜி அவர்கள் 187

22. மாண்புமிகு கைத்தறி மற்றும்
துணிநூல்துறை அமைச்சர்
திரு. ஆர்.காந்தி அவர்கள்..... 195

23. மாண்புமிகு மருத்துவம் மற்றும்
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள்..... 201

24. மாண்புமிகு வணிகவரி மற்றும்
பதிவுத்துறை அமைச்சர்
திரு. பி.மூர்த்தி அவர்கள் 223

26. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு. எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள்..... 231

26. மாண்புமிகு இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்
திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள்..... 235

27. மாண்புமிகு நிதி மற்றும்
மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்
முனைவர் பழனிவேல் தியாகராஜன்
அவர்கள்..... 243

28. மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
திரு. சா.மு.நாசர் அவர்கள்..... 253

29. மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்
திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான்
அவர்கள்..... 257

30. மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி
அவர்கள்..... 265

31. மாண்புமிகு சுற்றுச் சூழல் மற்றும்
காலநிலை மாற்றத்துறை அமைச்சர்
திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் 275

32. மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. சி.வி.கணேசன் அவர்கள் 283

33. மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும்
டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்
திரு. த.மனோ தங்கராஜ் அவர்கள் 287

34. மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
டாக்டர் மா.மதிவேந்தன் அவர்கள்..... 291

35. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திருமதி என்.கயல்விழி செல்வராஜ்
அவர்கள்..... 295

கட்டுரைகள்

தமிழரின் பெருமையை உணர்த்தும் அரசு 303
- ஆர்.பாலகிருஷ்ணன்

இது வளமான எதிர்காலத்திற்கு அடித்தளமான அரசு!..... 309
- கோ.பாலச்சந்திரன்

மு.க.ஸ்டாலின்: நவீன ஆட்சிமுறையின் குறியீடு..... 313
- ஏ.எஸ்.பன்னீர்செல்வன்

இல்லம்தேடி வரும் அரசு.....317
- ஆர்.விஜயசங்கர்

சமூகநீதியே அரசின் சுவாசம்!..... 323
- ஜென்ராம்

அடுத்த பத்தாண்டு வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட இரண்டாண்டுகள்! 329
- சுரேஷ் சம்பந்தம்

முன்னேற்றங்களின் முதல்வர்..... 333
- சூர்யா சேவியர்

எளிய மனிதர்களை முன்னிறுத்தி நடைபெறும் நல்லாட்சி 339
- ம.மதிவண்ணன்

இனி எவரெஸ்ட் எட்டிப் பிடிக்கும் உயரம்தான்!..... 345
- சி.முருகேஷ் பாபு

மகளிர் நிலை உயர, மாநிலம் உயரும்!..... 351
- வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி

'அனைவருக்கும் அனைத்தும்' உள்ள நலமான தமிழ்நாடு..... 357
- மருத்துவர். ப.மீ.யாழினி

இரு நூற்றாண்டு கனவும்,
ஈராண்டு கால திராவிட மாடல் அரசும் 365
- சூரியா கிருஷ்ணமூர்த்தி



**பொது, பொது நிருவாகம்,
இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி,
இந்திய வனப் பணி மற்றும் அகில இந்திய பணி,
மாவட்ட வருவாய் அலுவலர்கள்,
காவல், உள்துறை, சிறப்பு முயற்சிகள் மற்றும்
மாற்றுத்திறனாளிகள் நலன்**

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின்
அவர்கள்

ஓய்வூதியம்

- விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.20,000ஆகவும், குடும்ப ஓய்வூதியம் ரூ.10,000ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.
- வீரபாண்டிய கட்டபொம்மன், மருதுபாண்டிய சகோதரர்கள், முன்னாள் இராமநாதபுர மன்னர் முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட தியாகி செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் வழித்தோன்றல் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியம் ரூ.8,500லிருந்து ரூ.10,000ஆக உயர்வு.



காவல் துறை

- 3,949 சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, பல திட்டமிட்ட குற்ற கும்பல்களின் தீயதிட்டங்கள் முறியடிப்பு.
- கஞ்சா வேட்டை நடவடிக்கையில் 9,906 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 13,491 கஞ்சா வியாபாரிகள் கைது செய்யப்பட்டனர். 24 டன் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு, 4,141 வங்கிக் கணக்குகள் முடக்கம்.
- போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவை, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுடன் இணைத்து, புதிதாக அமலாக்கப் பிரிவு இயக்குநரகம்-குற்றப் புலனாய்வுத்துறை உருவாக்கம்.
- ஆவடி மற்றும் தாம்பரத்தில் புதிய ஆணையரகங்கள் தொடக்கம்.
- இரவு ரோந்துப் பணியை மேற்கொள்ளும் காவல்துறையினர் ஒவ்வொருவருக்கும் இரவு சுற்றுக்காவல் படி வழங்க ஆணை.
- பணியின்போது உயிரிழந்த 1,132 காவல் ஆளிநர்களின் வாரிசுதாரர்கள் 'தரவு உள்ளீடு உதவியாளர்கள்' மற்றும் 'காவல் நிலைய வரவேற்பு அலுவலர்களாக' கருணை அடிப்படையில் பணி நியமனம்.
- சட்டம்-ஒழுங்கு உள்ளிட்ட பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டிற்கு "இந்தியா டுடே"வின் "2022ஆம் ஆண்டிற்கான மாநிலங்களில் சிறந்த மாநிலம்" விருது.
- கௌரவமிக்க இந்தியக் குடியரசுத் தலைவரின் வண்ணக் கொடியை சென்னையில் நடைபெற்ற விழா ஒன்றில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு இந்திய குடியரசுத் துணைத் தலைவரிடமிருந்து இக்கொடியை பெற்றுக் கொண்டு, தமிழ்நாடு காவல் தலைமை இயக்குநரிடம் ஒப்படைத்தார்.
- காவல் துறையினரின் பணி, குடியிருப்பு மற்றும் நலன்கள் மேம்படுத்த ஐந்தாவது காவல் ஆணையம் உருவாக்கம்.
- கொரோனா நோய்த்தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் காவல் ஆளிநர்களுக்கு ரூ.5 கோடி செலவில் பாதுகாப்பு உபகரணங்கள்.
- கொரோனா தடுப்பு களப்பணியில் ஈடுபட்டுள்ள 1.17 இலட்சம் காவல் ஆளிநர்களுக்கு தலா ரூ.5,000 ஊக்கத் தொகை.
- கொரோனா நோய்த்தடுப்பு பணியில், நோய்த்தொற்றால் உயிரிழந்த 84 காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களின் 13 சட்டரீதியிலான வாரிசுதாரர்களுக்கு 20.05.2021 அன்று தலா ரூ.25 இலட்சம் வீதம் ரூ.3.25 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டது. மீதமுள்ள 71 காவல் ஆளிநர்களில், 36 நபர்களுக்கான முன்மொழிவு பெறப்பட்டு, அவர்களுக்கு தலா ரூ.25 இலட்சம் வீதம் ரூ.9 கோடி வழங்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். மீதமுள்ள 35 நபர்களுக்கான முன்மொழிவு பெற்ற பின்னர், அவர்களுக்கும் தலா ரூ.25 இலட்சம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- சென்னை மெரினா கடலில் மக்கள் மூழ்கும் சம்பவங்களைத் தடுக்கும் வகையில் சென்னை காவல்துறையில் "மெரினா கடல் உயிர்காக்கும் பிரிவு" உருவாக்கம்.
- காவல் ஆளிநர்களுக்கு வழங்கப்படும் இடர்படி ரூ.900லிருந்து, ரூ.1,000ஆக உயர்த்தி ஆணை.
- சென்னையிலுள்ள சிறப்புப் பிரிவுகளில் பணியாற்றும் முதல்-நிலைக் காவலர்கள் முதல் காவல் ஆய்வாளர் வரையிலானவர்களுக்கு மாதாந்திர உணவுப்படி வழங்கப்பட்டுவருகிறது.
- தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுரம் சரகங்களில் புதிய சிறப்பு நுண்ணறிவுப் பிரிவுகள் உருவாக்கப்பட்டு, 11 சரகங்களில் 11 காவல் துணை கண்காணிப்பாளர்கள் பணியிடம் உருவாக்கம். மேலும், தாம்பரம், ஆவடி மற்றும் திருப்பூர் மற்றும் செங்கல்பட்டு, தென்காசி ஆகிய மாவட்டங்களில் தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் புதிய அலகுகள் உருவாக்கம்.



- மாநில நுண்ணறிவுப் பிரிவிலுள்ள திட்டமிட்ட குற்றங்கள் தடுப்புப் பிரிவில் பணியாற்றும் காவலர்களுக்கும் 5 சதவீத சிறப்பு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.
- முதல்-நிலைக் காவலர்கள் முதல் தலைமைக் காவலர்கள் வரை, வாரம் ஒருநாள் விடுப்பு வழங்கப்படும் என்று அறிவிப்பு.
- காவல் ஆளிநர்களின் கணவன் அல்லது மனைவிமார்களுக்கும் வருடாந்திர முழு உடற் பரிசோதனை மற்றும் பெண்களுக்கு சிறப்பு உடற் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.
- 38 மாவட்டங்கள் மற்றும் 7 மாநகராட்சிகளில் காவல் உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்க ரூ.90 இலட்சம் (தலா ரூ. 2 இலட்சம் வீதம்) அறிவிப்பு.
- மாவட்ட, சரக மற்றும் மண்டல அளவில் காவல் ஆளிநர்கள் தங்கள் குறைகளை தெரிவிக்க ஏதுவாக ஒரு பிரத்யேக செயலி ரூ.25 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.
- புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஆறு மாவட்டங்களில் புதிய காவல் அங்காடிகள் அமைக்கப்படும்.
- பெண் காவலர்களுக்கான ஆஜர் அணிவகுப்பு (roll call), காலை 7 மணிக்கு பதிலாக காலை 8 மணிக்கு நடத்தப்படும் என அறிவிப்பு.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பாதுகாப்புப் பிரிவில் ஒன்பது பெண் காவலர்கள் (உதவி ஆய்வாளர்-1, தலைமைக் காவலர்-1 மற்றும் காவலர்கள்-7) பணியமர்த்தப்பட்டதானது பன்முகத் தன்மைக்கு வழிவகுத்தது.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

- இத்துறை பணியாளர்கள் 19,206 தீ விபத்து அழைப்புகளிலும், 83,916 மீட்பு அழைப்புகளிலும் பணியாற்றி 6,275 மனித உயிர்களையும், ரூ.249.65 கோடி மதிப்புள்ள உடைமைகளையும் காப்பாற்றி உள்ளனர்.

பணியாளர் நலன்

- தீயணைப்பு பணியாளர்களின் பாதுகாப்பிற்காக ரூ.55.62 கோடி செலவில் தலைக்கவசம் மற்றும் காலணியுடன் கூடிய 1,850 தீ பாதுகாப்பு உடைகள். 650 மூச்சுக் கருவிகள், பாதுகாப்பு உபகரணங்களுடன் கூடிய 3,500 மீட்பு உடைகள் வாங்க ஆணை.
- பணியாளர்கள் நலன் கருதி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களது இடர்பாடு படி மற்றும் மிகைப்பணி ஊதியம் உயர்த்தி வழங்க ஆண்டுதோறும் ரூ.3.03 கோடி ஒப்பளிப்பு.
- தீயணைப்பு மற்றும் மீட்புப்பணியாளர்களின் சேமநல நிதிக்கான மானியத்தினை



ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.40 இலட்சமாக உயர்த்தியும், மண்டல மற்றும் மாநில அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கான செலவினத் தொகையின் உச்ச வரம்பு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.6 இலட்சமாக உயர்த்தியும், தீயணைப்பு மற்றும்மீட்புப்பணிகள்துறை பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் காப்பீட்டு இடர் பாதுகாப்பு தொகை உயர்த்தியும், ரூ.10.08 இலட்சம் செலவினத்தில் மெரினா தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலைய பணியாளர்களுக்கு இடர்பாட்டுப்படி ரூ.6,000 ஆக உயர்த்தப்படவுள்ளது.

- மாவட்ட தலைநகர் தீயணைப்பு நிலையங்களுக்கு 39 உதவி மாவட்ட அலுவலர் பதவிகள் தரம் உயர்த்தி ஆணை.

நவீன வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல்

- ரூ.72.82 கோடி செலவினத்தில் 75 புதிய நீர்தாங்கி வண்டிகள், 12 அவசரகால சிறிய மீட்பூர்திகள், 44 பெரும தண்ணீர் லாரிகள், ஒரு வான்நோக்கி நகரும் ஏணி கொண்ட ஊர்தி, 7 அதி உயரழுத்த நீர்தாங்கி வண்டி மற்றும் 1 சிறிய நுரைநகர்வு ஊர்தி ஆகியன ஒப்பளிப்பு.
- ரூ.46.23 கோடி செலவினத்தில் 35 நீர்தாங்கி வண்டிகள், 27 பெரும தண்ணீர் லாரிகள், 7 ஈப்புகள், 3 அனைத்து நிலப்பரப்பு வாகனங்கள் கொள்முதல்.
- ரூ.14.01 கோடி செலவில் 50 ட்ரோன்கள், 4 புகை வெளியேற்றும் கருவி, 21 கோம்பி கருவிகள், 4 ஆட்களை ஏற்றிச் செல்லும் ஊர்திகள், 5 காற்று அழுத்தும் கருவி, 5 புகை வெளியேற்றும் கருவி, 10 நீரியியல் அழுத்தத்தில் இயங்கும் கருவிகள், 1 காற்று பிடிக்கும் கருவி ஆகியனவும் தீயணைப்பு சேவைக்காக ஒப்பளிப்பு.
- ரூ.354 இலட்சம் செலவினத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்ககத்தில் உள்ள அவசரகால கட்டளை மையம் வலுப்படுத்தப்படவுள்ளது.



❖ ரூ.76.35 இலட்சம் செலவினத்தில், தன்னார்வ தொண்டர்கள் திட்டத்தை வலுப்படுத்த தன்னார்வலர்களுக்கு அடையாள வில்லை மற்றும் மதிப்பூதியம் வழங்கப்படவுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு புதிய கட்டிடம்

❖ ரூ.34.93 கோடி செலவினத்தில் காஞ்சிபுரம், தேனாம்பேட்டை, திருவையாறு, கடமலைக்குண்டு. இராஜபாளையம். செங்குன்றம், மணலி, வண்ணாரப்பேட்டை ஆகிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் மற்றும் காஞ்சிபுரம், அம்பத்தூரில் சென்னை புறநகர் மாவட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஒப்பளிப்பு.

❖ ரூ.40.63 கோடி செலவில் செங்குன்றம், போடிநாயக்கனூர், துறையூர், இராணிப்பேட்டை, சிவகாசி, பெரும்பாக்கம் ஆகிய இடங்களில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 172 குடியிருப்புகள் கட்ட ஒப்புதல்.

❖ ரூ.16.87 கோடி செலவினத்தில் திருவல்லிக்கேணி, சேலம், ஸ்ரீரங்கம் ஆகிய 3 இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு புதிய கட்டடம்.

தீயணைப்பு கட்டடங்கள் பராமரிப்பு

❖ ரூ.7.04 கோடி மதிப்பீட்டில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளின் பராமரிப்புப் பணிகள்.

புதிய தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையங்கள் அமைத்தல்

❖ ரூ.62.18 கோடி செலவினத்தில் திங்கள்நகர், கோவைபுதூர், சின்னமனூர், வாய்மேடு, தெள்ளார், அண்ணியூர், திருப்பரங்குன்றம், ஏழாயிரம் பண்ணை, கொளத்தூர், காலவாக்கம். கண்ணமங்கலம், ஆட்டையாம்பட்டி, ஊத்துக்குளி, இளையாங்குடி. வையம்பட்டி குமராட்சி மற்றும் நயினார்பாளையம் ஆகிய 17 இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் மற்றும் சிவகாசி, ஓசூர், தாம்பரம் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 4 தரம் உயர்த்தப்பட்ட தீயணைப்பு நிலையங்களும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

❖ ரூ.7.25 கோடி செலவினத்தில் ஓரகடம், திருவெறும்பூர். இராதாபுரம், ரிஷிவந்தியம் ஆகிய 4 இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் மற்றும் பூந்தமல்லி, கீழ்ப்பாக்கம் ஆகிய 2 இடங்களில் ரூ.1.06 கோடி செலவினத்தில் மேம்படுத்தப்படவுள்ளது.

நிர்வாக சீரமைப்பு

❖ ரூ.13.55 இலட்சம் செலவில் சேலத்தினை தலைமையிடமாகக் கொண்ட தீயணைப்பு மண்டலம் ஒன்றும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் நிர்வாக சீரமைப்பின் ஒரு பகுதியாக மதுரையை தலைமையிடமாகக் கொண்ட தென்மண்டலத்தினை இரண்டாகப் பிரித்து



திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மண்டலம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையின் செயல்பாட்டினை வலுப்படுத்தும் விதமாக நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் என்ற புதிய பணியிடம் உருவாக்கம்.
- தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் இயக்ககத்தில் சட்ட விவகாரங்களில் உதவிட சட்ட ஆலோசகர் என்ற புதிய பணியிடம் உருவாக்கப்படவுள்ளது.
- தீ மற்றும் உயிர் மீட்புப் பணிகளில் புதிய தொழில் நுணுக்கங்களை செயல்படுத்தவும், கட்டடங்களுக்கு வழங்கப்படும் தீப்பாதுகாப்பு சான்றிதழ் வழங்குதல் தொடர்பான பணிகளை முறைப்படுத்தவும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை பணியாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு அவர்களுக்குத் தேவையான திட்டங்களையும் புதிய பயிற்சி முறைகளையும் பரிந்துரைக்கும் நோக்கத்துடன் தீ ஆணையம் ஒன்று புதியதாக அமைக்கப்படவுள்ளது.
- 1985 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தீயணைப்புச் சேவை சட்டம் முழுமையாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

மாநில பயிற்சிக் கழகம் அமைத்தல்

- ரூ.39.30 கோடி செலவினத்தில் மாநில பயிற்சிக் கழகம் மற்றும் உலகத்தரத்திலான நிகழ்நேர மாதிரி கூடம் ஒன்றும் காலவாக்கத்தில் அமைக்க ஒப்பளிப்பு ஆணை.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம், காவல், சிறை & சீர்திருத்த பணிகள் மற்றும் தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறைகளிலுள்ள 11,741 + 72 (பின்னடைவு காலிப்பணியிடங்கள்) இரண்டாம் நிலைக் காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர்கள் தற்காலிகமாகத் தேர்வு.
- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம், 444 சார்பு ஆய்வாளர் (தாலுகா & ஆயுதப்படை) 438 விண்ணப்பதாரர்கள் (பொது – 349, தாலுகா - 317 & ஆயுதப்படை - 32) & (துறை - 89, தாலுகா - 80 & ஆயுதப்படை - 9) தற்காலிகமாகத் தேர்வு.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்

- 2,779 காவல் துறை வாடகைக் குடியிருப்புகள் ரூ.465.50 கோடி செலவிலும், 29 காவல் நிலையங்கள் ரூ.30.63 கோடி செலவிலும் மற்றும் 8 இதர காவல் துறை கட்டடங்கள் ரூ.39.89 கோடி செலவிலும் கட்டப்பட்டுள்ளன.
- 168 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை குடியிருப்புகள் ரூ.28.43 கோடி செலவிலும், 15 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையக் கட்டடங்கள் ரூ.21.50 கோடி செலவிலும் மற்றும் 2 இதர தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை கட்டடங்கள் ரூ.2.45 கோடி செலவிலும் இந்த காலக் கட்டத்தில் கட்டப்பட்டுள்ளன.
- 51 சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை குடியிருப்புகள் ரூ.9.71 கோடி செலவிலும் 26 சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் இதர கட்டடங்கள் ரூ.21.86 கோடி செலவிலும் கட்டப்பட்டுள்ளன.



- ரூ.95.79 இலட்சம் மதிப்பீட்டில், சேலம் மாவட்டம், சேலம் மத்திய சிறை வளாகத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டுள்ளது.

அமலாக்கத்துறை

- மதுவிலக்கு தொடர்பான 49,678 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 4,138 பெண் குற்றவாளிகள் உட்பட 49,449 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
- ரூ.85.66 இலட்சம் மதிப்புள்ள 4,28,326 லிட்டர் சாராய ஊறல் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.
- ரூ.33.62 இலட்சம் மதிப்புடைய 84,056 லிட்டர் கள்ளச் சாராயம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.
- ரூ.17.67 இலட்சம் மதிப்புடைய 17,671 லிட்டர் எரிசாராயம் கைப்பற்றப்பட்டது.
- ரூ.2.94 இலட்சம் மதிப்புடைய 14,718 லிட்டர்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.
- ரூ.44.10 கோடி மதிப்பிலான இந்திய தயாரிப்பு வெளிநாட்டு மதுபானங்கள் 6,40,967 கைப்பற்றப்பட்டது.
- வாகன தணிக்கையின் மூலம் மதுவிலக்கு குற்றங்களில் தொடர்புடைய 1 வேன்கள், 72 கார்கள், 14 ஆட்டோக்கள் மற்றும் 1,002 இரு சக்கர வாகனங்கள் உட்பட மொத்தம் 1,089 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.
- மதுவிலக்குக் குற்றங்களில் தொடர்புடைய 68 குற்றவாளிகள் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது.

சிறப்பு முயற்சிகள் துறை

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்

- சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-IIஇன்கீழ், 3 வழித்தடங்களுடன் மொத்தம் 118.9 கி.மீ. நீளத்திலான கட்டுமானப் பணிகள் துவக்கம்.
- ரூ.4,625 கோடி மதிப்பீட்டில், 15.46 கி.மீ. நீளத்தில் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-Iஇன் நீட்டிப்புத் திட்டத்தின்கீழ், விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரையிலான சென்னை மெட்ரோ இரயிலின் நீட்டிப்புத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல்.
- கோயம்புத்தூர் பெருந்திரள் துரித போக்குவரத்து திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
- மதுரை பெருந்திரள் துரித போக்குவரத்து திட்டத்திற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பு.



- இரண்டாம் நிலை நகரங்களான, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி நகரங்களின் பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பினைச் செயல்படுத்துவதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணி.
- ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் பன்முக போக்குவரத்து ஒருங்கிணைப்பு பொதுமக்கள் மற்றும் பயனிகளுக்கான வசதிகளுடன், கத்திப்பாரா மேம்பாலத்திற்கு அடியில் கத்திப்பாரா நகர்ப்புற சதுக்கம் துவக்கம்.
- ரூ.34.22 கோடி மதிப்பீட்டில் உலகத் தரத்திற்கு இணையான பொதுமக்கள் பயன்படுத்தும் வசதிகள் அடங்கிய மத்திய சதுக்கத் திட்டத்தின் ஒரு பகுதி மார்ச் 2022இல் பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறப்பு.
- பூந்தமல்லி புறவழிச் சாலையிலிருந்து திரும்பெரும்புதூர் வரை திருமங்கலம் முதல் ஆவடி வரை மற்றும் சிறுசேரி முதல் கிளாம்பாக்கம் வரையிலான சென்னை மெட்ரோ இரயில் கட்டம்-II இன் நீட்டிப்புகளுக்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணிகள் துவக்கம்.
- சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமையகக் கட்டடம் (மெட்ரோஸ்) 2022 இல் துவக்கம்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

- ரூ.883.04 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2,36,456 பயனாளிகளுக்கு தலா ரூ.2,000 வீதம் மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை.
- ரூ.2.53 கோடி செலவினத்தில் 2,413 நபர்களுக்கு ரூ.1,000 வீதம் உயர் ஆதரவு தேவைப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை.
- ரூ.125.52 கோடி மதிப்பீட்டில் 75,428 மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள், சிறப்புச் சக்கர நாற்காலிகள், காதுக்கு பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் உள்ளிட்ட 23 வகையான உதவி உபகரணங்கள்.

- 24,411 மாணவர்களுக்கு ரூ.825.14 இலட்சம் கல்வி உதவித்தொகை.
- "தமிழ்நாடு 2021ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான தேர்வுகளை நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்" வெளியீடு.
- மனநலம் பாதிக்கப்பட்டுக் குணமடைந்து வீடு திரும்ப இயலாதவர்களுக்கான 5 பராமரிப்பு மையங்களுக்கு ரூ.201.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- மாநில அரசு பதிவு செய்த மாற்றுத்திறனாளிகளுக்கும் ஒன்றிய அரசால் வழங்கப்படும் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை பெறுவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு, இதுவரை 10,31,244 மாற்றுத்திறனாளிகளுக்கு ஒன்றிய அரசால் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.
- அரசுத்துறை / பொதுத்துறை நிறுவனம், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 4 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை.
- அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களைக் கண்டறிந்து அப்பணியிடங்களில் தடையற்ற சூழலை உருவாக்கி நியமனம் செய்வதற்கென "சமவாய்ப்பு கொள்கை" 1,514 தனியார் நிறுவனங்கள், 2,320 தொழிற்சாலைகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகளுக்கான உகந்த பணியிடங்களாக 3,525 பணியிடங்கள் கண்டறியப்பட்டு, தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இதுவரை 915 மாற்றுத்திறனாளிகள் பணியமர்த்தம்.
- தமிழக அரசின் அனைத்து சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகள் துணையாளர் ஒருவருடன் கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்ள அனுமதி.
- தேசிய மாற்றுத்திறனாளிகள் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சுயதொழில் தொடங்க கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடனை திருப்பி செலுத்துபவர்களுக்கு,



வட்டித் தொகை முழுவதும் அரசே செலுத்தும் திட்டத்தில், 12,399 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.55.81 கோடி கடனுதவி.

- சிறுதொழில்கள் மற்றும் பெட்டிக் கடைகள் நடத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு அல்லது ரூ.25,000 இதில் எது குறைவானதோ அத்தொகையினை மானியமாக வழங்கும் திட்டத்தில் 2,000 பயனாளிகளுக்கு ரூ.5 கோடி கடனுதவி. சுயதொழில் தொடங்குவதற்கென பெறப்பட்ட கடன் தொகையில் 5 சதவிகிதம் விளிம்புத் தொகையாக 32 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.7.63 இலட்சம் மானியம்.
- வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு திட்டத்தில் 67 மாற்றுத்திறனாளிகளால் பெறப்பட்ட கடன் தொகையில் ஐந்து சதவிகித பங்குத் தொகை ரூ.10.64 இலட்சம் அரசால் செலுத்தப்பட்டுள்ளது.
- 177 ஆவின் பாலகங்களை அமைக்க மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.88.50 இலட்சம் வைப்புத் தொகை.
- பூந்தமல்லிபார்வைக்குறைவுடையோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியில் மாதம் ரூ.300 வீதம் உதவித்தொகையுடன் 22 நபர்களுக்குப் புத்தகம் கட்டுநருக்கான பயிற்சி.

- ரூ.37.38 இலட்சம் செலவில் 250 கை, கால் பாதிக்கப்பட்டோர் மற்றும் செவித்திறன் குறைவுடையோருக்காக தேசிய டிஜிட்டல் புகைப்படப் பயிற்சி.
- வருவாய் துறை மூலம் 4,48,183 மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ.1,000லிருந்து ரூ.1,500ஆக உயர்த்தப்பட்டு ஜனவரி 2023 முதல் வழங்கப்பட்டுவருகிறது.
- திருமண நிதியுதவித் திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு முழுத்தொகையும் ரொக்கமாக வழங்க அரசாணை பெறப்பட்டு 2022-2023ஆம் ஆண்டில் இதுவரை நான்கு கட்டமாக 680 பயனாளிகளுக்கு ரூ.2.67 கோடி வழங்கிட சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.
- வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம், இதுவரை வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு தகுதியின் அடிப்படையில் முன்னுரிமையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் 555 நபர்களும், கிராமப்புறத்தில் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மூலம் 44 நபர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.
- மாற்றுத்திறனாளிகள் சுயதொழில் புரிவதற்காக தையல் இயந்திரங்கள் வழங்க வயது உச்சவரம்பினை 46லிருந்து 60ஆக நீட்டித்து ரூ.1.48 கோடி செலவில் 3,764 தையல் இயந்திரம் வழங்க ஆணையிடப்பட்டு, 18-45 வயதுள்ள 3,302 பயனாளிகளுக்கும், 46-60 வயதுள்ள 462 பயனாளிகளுக்கும் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ரூ.3.92 கோடி கூடுதல் செலவில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் சிறப்பு பள்ளிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் விடுதியில் தங்கி கல்வி பயிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான உணவூட்டு மானியம் ரூ.900லிருந்து ரூ.1,200ஆக உயர்வு.
- வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கான வேலை உருவாக்குத் திட்டத்தின் (UYEGP) மூலம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 2022-2023ஆம் ஆண்டில் 96 பயனாளிகளுக்கு ரூ.68 இலட்சத்திற்கான சிறு மற்றும் குறுந்தொழிலுக்கான கடன் தொகை மானியம், தமிழ்நாடு தொழில் மற்றும் வணிகத்திற்கான ஆணையர் மற்றும் இயக்குநரகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.91.72 இலட்சம் மதிப்பில் அறிவுசார் குறைபாடுடையோர், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லங்கள் புதியதாக திருநெல்வேலி, சேலம், திருச்சி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நாமக்கல், தஞ்சாவூர், தூத்துக்குடி ஆகிய 8 மாவட்டங்களில் தொடக்கம்.
- ரூ.100 கோடி செலவில் முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்கான 3 இல்லங்கள் திருவண்ணாமலை, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் தொடக்கம்.
- அரசு உதவியுடன் நடத்தப்படும் தன்னார்வ தொண்டு கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் சிறப்பாசிரியர் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் மாத மதிப்பூதியம் ரூ.14,000லிருந்து ரூ.18,000ஆக உயர்வு.
- பொது கட்டடங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு தடையற்ற சூழல் அமைத்த சிறந்த அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ.1.60 இலட்சம் மதிப்பில் இரண்டு மாநில விருதுகள் வழங்கப்பட்டது.
- அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில், மாவட்ட ஆட்சியர் கூட்டம் நடைபெறும்போதும் மற்றும் முக்கிய நிகழ்வுகளின்போதும் செவித்திறன் பாதிக்கப்பட்டோர் பயன்பெறும் வகையில் சைகைமொழி பெயர்ப்பாளர் நியமனம் செய்யப்பட்டு ஒரு மாவட்டத்திற்கு ரூ.15,600 வீதம் நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் எளிதில் பயனடையும் வகையில் ரூ.1.51 கோடி

மதிப்பில் கூடுதலாக வடசென்னையில் ஒரு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலகம் கட்டப்படவுள்ள நிலையில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அலுவலகம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

❖ அரசுத் துறை கட்டடங்களில் முக்கியமாக வருவாய்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைக்கு சொந்தமான 790 கட்டடங்களில் ரூ.4.74கோடி செலவிலும், 200 சுற்றுலா இடங்களில் ரூ.1.20 கோடி செலவில் தடையற்ற சூழல் அமைக்க தணிக்கை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை.

❖ உலக வங்கி நிதியுதவியுடன் மாற்றுத்திறனாளிகளுக்கு உரிமைகள் திட்டம் ரூ.1,763.19 கோடி செலவில் 6 வருடங்களுக்கு செயல்படுத்த நடவடிக்கை. முதற்கட்டமாக இத்திட்டத்தின் செயல்பாட்டின் தொடர்ச்சியாக 18 வயதிற்குட்பட்ட மாற்றுத்திறனாளி குழந்தைகளின் குறைபாட்டினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அதனை கட்டுப்படுத்தும் மறுவாழ்வுப்பணி மேற்கொள்வதற்காக நிலையான வழிகாட்டுதல் முறைகளை 12 முக்கிய துறைகளை ஒருங்கிணைத்தும் மாநில மற்றும் மாவட்ட அளவில் குழுக்களை அமைத்து மறுவாழ்வுப்பணிகளை கண்காணிக்கும் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

முதல்வரின் முகவரித்துறை

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பரப்புரையின்போது பெறப்பட்ட மனுக்கள் மீது 100 தினங்களுக்குள் உரியத் தீர்வு காணப்படும் என்ற வாக்குறுதியை மெய்ப்பிக்கும் வகையில் "உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை" என்ற தனித்துறை உருவாக்கம்.

❖ இச்சேவைகள் அனைத்தும் பொதுமக்களுக்குத் தொடரும் பொருட்டு, முதலமைச்சரின் தனிப்பிரிவு, முதலமைச்சரின் உதவி மையம் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு மற்றும் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு "முதல்வரின் முகவரி" என்ற துறை உருவாக்கம்.

❖ இத்துறையின் மூலம், 37,97,850 மனுக்கள் பெறப்பட்டு, அதில் 36,72,029 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டன.

❖ புதிய முயற்சியாக, முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் மாவட்ட ஆட்சியரகங்களில் தரக் கண்காணிப்புப் பிரிவு உருவாக்கம்.

❖ சரியான முறையில் தீர்வு செய்யப்படாத மனுக்கள் மீளவும் திறக்கப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு திருப்பி அனுப்பப்படுகின்றன. தற்போதுவரை 1,13,442 மனுக்கள் மீளத் திறக்கப்பட்டு நடவடிக்கை.

❖ உயர்கல்வி பயிலும் 48 ஏழை மாணவர்களுக்குத் தலா ரூ.50,000 வீதம் ரூ.24 இலட்சம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

"விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு,
நமது நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளுக்கும்,
அவர்தம் குடும்பத்தினருக்கும் உதவிகள் வழங்குவதில்
தமிழ்நாடு அரசு எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



சென்னை, அண்ணாசாலையில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று மகளிர் தின வாழ்த்து தெரிவித்தல் - 08.03.2023



மதுரை, அரசு ஆய்வு மாளிகையில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெறுதல் - 06.03.2023



சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச்சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்

மாண்புமிகு
நீர்வளத்துறை அமைச்சர்
திரு. துரைமுருகன்
அவர்கள்

நீர்வளத்துறை

- காவேரி டெல்டா குறுவை பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டு, கடைமடைப் பகுதிகள்வரை பாசனத்திற்கு தேவையான தண்ணீர் வழங்கப்பட்டது.
- முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 18 நாட்கள் 142 அடியாக இருந்தது.
- காவிரி டெல்டாப் பகுதிகளில் ரூ.66.90 கோடி மதிப்பீட்டில் 678 தூர்வாரும் பணிகள் 4,213.54 கி.மீ. நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டன.
- ரூ.80 கோடி மதிப்பீட்டில் காவிரி டெல்டா மாவட்டங்களில் 4,964.11 கி.மீ. நீளத்திற்கு 683 தூர்வாரும் பணிகள் தொடக்கம்.
- ரூ.3 கோடி மதிப்பீட்டில் திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள பவானி, அமராவதி, பரம்பிக்குளம் ஆழியாறு துணைப் படுகைகளில் 56 தூர்வாரும் பணிகள்.





- ரூ.4 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட பாசன வாய்க்கால்களில் 125 தூர்வாரும் பணிகள்.
- ரூ.2.95 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள 10 கால்வாய்களில் தூர்வாரும் பணிகள்.
- ரூ.250 கோடி மதிப்பீட்டில் அடையாறு மற்றும் கொசஸ்தலையாறுகளை அகலப்படுத்துதல், நீர்வழித்தடங்களை மேம்படுத்துதல் மற்றும் வடிகால்கள் அமைத்தல் போன்ற 8 வெள்ளத் தணிப்புப் பணிகள்.
- ரூ.184.22 கோடி மதிப்பீட்டில் சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் அவசரகால வெள்ள நீர் கடத்தும் வடிகால் இணைப்புப் பணிகள்.
- ரூ. 70.05 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் தாம்பரம் அருகே அடையாற்றின் வெள்ள பகுதிகளில் அவசரகால வெள்ள நிவாரணப் பணிகள்.
- மேட்டூர் அணையின் மழைக்கால வெள்ள உபரிநீரைச் சேலம் மாவட்டம், சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு வழங்கும் நீரேற்று திட்டம் 4,238 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி உறுதி செய்யும் வகையில் ரூ.565 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயலாக்கம்.
- ரூ.649.55 கோடி மதிப்பீட்டில் 16 உபவடி நிலங்களில் 906 ஏரிகள், 181 அணைக்கட்டுகள் ஆகியவற்றை புனரமைத்தல் மற்றும் 37 செயற்கை முறை நீர் செறிவூட்டும் கிணறுகள் அமைக்கும் பணிகள்.
- ரூ. 43.63 கோடி மதிப்பீட்டில் உலக வங்கியின் பின்னேற்பு நிதியின் கீழ் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 57 ஏரிகள் மற்றும் 2 பிரதான பாசன வாய்க்கால் புனரமைக்கும் பணிகள்.

கட்டம் I

- ரூ,743.56 கோடி மதிப்பீட்டில் 18 உபவடி நிலங்களில், 1,325 ஏரிகள், 107 அணைக்கட்டுகள் புனரமைத்தல் மற்றும் 42 செயற்கை முறை நீர் செறிவூட்டும் கிணறுகள் அமைக்கும் பணிகள்.

கட்டம் II

கட்டம் III, கட்டம் IV இல்

- ரூ.461.99 கோடி மதிப்பீட்டில் 17 உபவடி நிலங்களில் 341 ஏரிகள், 67 அணைக்கட்டுகள் ஆகியவற்றை புனரமைக்கவும், 16 செயற்கை முறை நீர் செறிவூட்டும் கிணறுகள் 11.10 கி.மீ. வாய்க்கால் மற்றும் 11 கால்வாய்களை புணரமைக்கும் பணிகள்.



நீர்நிலைகளை செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் திட்டம் (RRR – PMKSY–HKKP)

- மத்திய அரசிடமிருந்து ரூ.23.103 கோடி பெறப்பட்டு ரூ.46.81 கோடி மதிப்பீட்டில் 83 ஏரிகளை புனரமைக்கும் பணிகள்.
- மத்திய அரசிடமிருந்து ரூ.29.67 கோடி பெறப்பட்டு ரூ.258.97 கோடி மதிப்பீட்டில் 309 ஏரிகளை (கட்டம் V, VI, VII மற்றும் VIII) புனரமைக்கும் பணிகள்.

தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்பு கால்வாய் திட்டம் (PMKSY– AIBP)

- ரூ.933.23 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 56,932 ஏக்கர் பாசனப்பரப்பு பயனடையும் வகையில்தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டம் மத்திய அரசின் PMKSY-AIBP-இன் கீழ் சேர்க்கப்பட்டு, செயலாக்கத்தில் உள்ளது.

காவிரி வடிநிலத்திலுள்ள பாசன அமைப்புகளை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டம் (ERM)

- ரூ.3,384 கோடி மதிப்பீட்டிலான காவிரி உப வடிநில பகுதியில் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டப்பணிகள்.
- ரூ.1,036.70 கோடி மதிப்பீட்டிற்கு கல்லணைக் கால்வாய் பகுதியில் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டப் பணிகள்.
- ரூ.933.10 கோடி மதிப்பீட்டில் கீழ் பவானி திட்ட அமைப்புகளில் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டப்பணிகள்.
- ரூ.335.50கோடிமதிப்பீட்டில்கட்டளைஉயர்மட்ட கால்வாய் பாசன அமைப்பில், நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டப்பணிகள்.
- ரூ.184 கோடி மதிப்பீட்டில் இராஜ வாய்க்கால் பாசன அமைப்பில் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டப்பணிகள்.

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே முக்கொம்பில் புதிய நீரொழுங்கி (மேலணை)

- கொள்ளிடம் ஆற்றின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் ஒரு புதிய நீரொழுங்கியை அமைக்க நபார்டு நிதியுதவியுடன் ரூ.414 கோடி திருத்திய மதிப்பீட்டில் பணிகள். இதன்மூலம் 7 மாவட்டங்களிலுள்ள 12,58,460 ஏக்கர் பாசனப்பரப்பு பயனடையும்.
- ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சகத்தால் நீர் மேலாண்மையில் நாட்டிலேயே மூன்றாவது

சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டிற்கு விருது வழங்கப்பட்டது.

❖ சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையம் (ICID) காலிங்கராயன் அணைக்கட்டு, கல்லணை, கீழணை மற்றும் வீராணம் ஏரி ஆகிய 4 பாரம்பரிய கட்டுமானங்களுக்கு உலக பாரம்பரிய நீர்ப்பாசன கட்டமைப்புகள் என உலகளாவிய அங்கீகாரத்தை வழங்கியது.

❖ நீர்-சுற்றுச்சூழல் பொறியியல் மற்றும் ஆராய்ச்சிக்கான சர்வதேச சங்கத்தின் (IAHR - APD) ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியப் பிரிவின் "நீர் பாரம்பரிய விருது" கல்லணைக்கு சென்னையில் வழங்கப்பட்டது.

❖ சிறந்த முறையில் பராமரிக்கப்படும் திட்டங்கள் / கட்டமைப்புகள் (குறைந்தபட்சம் 50 ஆண்டுகள்) வகையின் கீழ் "மத்திய நீர்ப்பாசனம் மற்றும் மின்வாரியம் விருது 2022" தஞ்சாவூர் மாவட்டம் கச்சமங்கலம் அணைக்கட்டிற்கு புதுதில்லியில் வழங்கப்பட்டது.

சட்டமன்றப் பேரவைச் செயலகம்

❖ தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவையொட்டி முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் திருவுருவப் படத்தினை, 02.08.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் திறந்து வைத்து விழா சிறப்புமலர் வெளியிட்டார்.

❖ தமிழக வரலாற்றில் முதல் முறையாக மின் நிதிநிலை அறிக்கைகள் (e-Budget) பேரவைக்கு அளிக்கப்பட்டன.

❖ "காகிதமில்லா சட்டமன்றம்" திட்டத்தினைச் செயல்படுத்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கையடக்க தொடுதிரை கணினி மற்றும் சிம் கார்டுகள் வழங்கப்பட்டன.

❖ தமிழ்நாட்டிலுள்ள 234 சட்டப் பேரவை உறுப்பினர் அலுவலகங்களிலும் செயல்படும் இ-சேவை மையங்களின் பயன்பாட்டிற்கென நவீன மேசை கணினிகள் அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டன.

❖ தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் 1921ஆம் ஆண்டு முதல் சட்டமன்றத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்த ஆவணங்கள் ரூ.2.17 கோடியில் கணினிமயமாக்கத் திட்டம்.

❖ தூர்தர்ஷன் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் முதல் சேனல் மூலமாக பேரவை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு.

❖ தமிழ்நாடு சட்டமன்ற 16 ஆவது பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடரில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உரை நேரடி ஒளிபரப்பு.

❖ 06.01.2022 மற்றும் 07.01.2022 ஆகிய இரண்டு நாட்களிலும் வினாக்கள்-விடைகள் நேரம் முதல் முறையாக நேரடி ஒளிபரப்பு. 07.01.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உரையின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை நேரடி ஒளிபரப்பு. Youtube, Twitter, Facebook போன்ற





சமூக ஊடகங்களுக்கும் செய்தி மக்கள் தொடர்புத்துறை மூலமாக வீடியோ தொகுப்பும் வழங்கப்பட்டது.

❖ 08.02.2022 அன்று NEET தேர்வு விலக்கு தொடர்பாக நடைபெற்ற சிறப்புக் கூட்டம் முழுவதும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. மேலும், 18.03.2022 முதல் 24.03.2022 வரை, 06.04.2022 முதல் 10.05.2022 வரை, 17.10.2022 முதல் 19.10.2022 வரை மற்றும் 09.01.2023 முதல் 13.01.2023 வரையிலான கூட்டத் தொடர்களின் பேரவை நிகழ்வுகளும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன. மேலும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கென பிரத்யேகமாகத் தொடங்கப்பட்ட YouTube Channel-லும் 04.05.2022 முதல் பேரவை நிகழ்வுகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன.

❖ சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தின் நுழைவாயில் அருகில் புதிய ஆவின் பாலகம்.

❖ சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தை ஒட்டியுள்ள பகுதியில் ரூ.4.29 கோடி செலவில் இறகுப்பந்து விளையாட்டுக் கூடம், புதிய பூங்காக்கள், புதிய மழைநீர் கால்வாயுடன் கூடிய நடைபாதை, சுவாமி சிவானந்தா சாலை மற்றும் வாலாஜா சாலைகளை இணைக்கும் புதிய உட்புற சாலை வசதி.

❖ அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பில் ரூ.99.48 இலட்சம் செலவில் பழுது நீக்கம் செய்யும் பணிகள்.

❖ சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தின் உபவசதிக் கட்டடத்தில் ரூ.1.83 கோடி செலவில் புதிய மின் தூக்கி அமைக்கும் பணிகள்.

❖ 2023-2024ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை அளித்தல் ஆகியவை தேசிய இ-விதான் திட்ட செயலியின் இணைய முகப்பில் (Portai) நிகழ்நேர ஒளிபரப்பு (Live streaming) மேலும் வினாக்கள் விடைகள் நேரமும் (Live streaming) முறையில் ஒளிபரப்பு.

❖ 18.03.2022 முதல் 24.03.2022 வரை 06.04.2022 முதல் 10.05.2022 வரை, 17.10.2022 முதல் 19.10.2022 வரை மற்றும் 09.01.2023 முதல் 13.01.2023 வரையிலான கூட்டத் தொடர்களின் பேரவை நிகழ்வுகளும் நேரடி ஒளிபரப்பு.

❖ 20.03.2023 முதல் 21.04.2023 வரையிலான கூட்டத் தொடர்களின் பேரவை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் இணையவழி 2022 விளையாட்டுகளை ஒழுங்கு முறைப்படுத்துதல் 23.03.2023 அன்று மறு ஆய்வு செய்யப்பட்டு. ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட நிகழ்வு முழுவதும் நேரடியாக ஒளிபரப்பு.

❖ ரூ.65 இலட்சம் செலவினத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக 30 நாட்கள் பதிவு வசதியுடன் கூடிய 84 எண்ணிக்கையிலான கடுங்கண்காணிப்புக் கேமராக்கள் (CCTV) பொருத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

❖ ரூ.11 இலட்சம் செலவினத்தில் சுவாமி சிவானந்தா சாலை நுழைவு வாயிலின் முகப்பினை அழகுபடுத்தும் -விதமாகவும், சட்டமன்றப் பேரவை அமைப்பு எல்லையினை வரையறுக்கும் விதத்திலும் நுழைவாயிலில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகம் என்னும் வாசகத்துடன் கம்பீர தோற்றத்துடன் கூடிய அலங்கார வளைவு.

❖ ரூ.94.80 இலட்சம் செலவினத்தில் தடையில்லா மின்சாரம் வழங்கிடும் வகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகம் மற்றும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் விடுதி ஆகியவற்றில் இயங்கி வரும் 6 மின் மாற்றிகள் (Transformers) இடமாற்றம்.

கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்

❖ கனிம வளங்கள் மூலம் 2021-2022ஆம் நிதியாண்டில் ரூ.1,212.87 கோடியும், 2022-2023ஆம் நிதியாண்டில் ரூ.1,572.84 கோடியும் (தற்காலிகம்) வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

❖ விவசாய நிலங்களை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு சிறுகனிமச் சலுகை விதிகள், 1959ல்



விதி 44ஐ சேர்த்து, பட்டா நிலங்களில் இருந்து மண் எடுக்க குறுகியகால அடிப்படையில், அனுமதி வழங்க திருத்தம் வெளியிடப்பட்டு, மூன்று மாதங்களுக்கு மிகாமல் பட்டா நிலங்களில் இருந்து மண் எடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டு, வேளாண் நில மேம்பாட்டிற்காக எடுக்கப்படும் செங்கல் மண்ணை உரிய உரிமக்கட்டணம் செலுத்தி செங்கல் சூளை உரிமையாளர்களுக்கு மட்டும் வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டு, நிலங்கள் மேம்படுத்தப்பட்டு விவசாய பயன்பாட்டிற்கு உகந்ததாக மாற்றப்பட்டு பயிர்கள் விளைச்சல் அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

❖ தொன்மையான நினைவுச் சின்னங்கள், சமணர் படுகைகள் மற்றும் தொல்பொருள் தளங்களைப் பாதுகாக்கும் பொருட்டு 300 மீட்டர் இடைவெளிக்குக்குப் பின்னரே குவாரிப் பணிகள் மேற்கொள்ள விதிகள் தமிழ்நாடு சிறுகனிமச் சலுகை விதிகள், 1959இல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

❖ பயன்பாடற்ற பழைய சுரங்கங்கள் மற்றும் குவாரிகளை மறுபயன்பாட்டிற்கு பயன்படுத்திட 36 மாவட்டங்களில் பசுமை நிதியம் உருவாக்கப்பட்டு ரூ.45.27 கோடி பசுமை நிதியாக வசூலிக்கப்பட்டுள்ளது.

❖ பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அரிய பழங்கால களஞ்சியத்தை பாதுகாக்க, புவியியல் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது.

❖ தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள், 1959இல் விதி 12(2)(a) திருத்தங்கள் செய்து சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் அமைந்துள்ள ஏரிகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் படிந்துள்ள வண்டல் மண், களிமண் மற்றும் கிராவல் கனிமத்தினை தூர் வாருவதற்கும், மண்பாண்ட தொழிலாளர்கள் பயன்பாட்டிற்காக மாவட்ட ஆட்சியரால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள ஏரிகள் மற்றும் நீர்த்தேக்கங்களிலிருந்து மட்பாண்டங்கள் தயாரிக்க கட்டணமில்லாமல் 60 கன மீட்டருக்கு மிகாமல் களிமண் எடுப்பதற்கும், விவசாயிகளின் நன்செய் நிலத்திற்கு ஹெக்டர்க்கு 185 கனமீட்டருக்கு மிகாமலும், விவசாயிகளின் தரிசு நிலங்களின் மேம்பாட்டிற்காக ஏரிகளிலிருந்து ஹெக்டர் ஒன்றுக்கு 222கனமீட்டருக்குமிகாமல்வண்டல் மண் எடுத்து பயன்படுத்துவதற்கும் மற்றும் பொதுமக்களின் இதர சொந்த பயன்பாட்டிற்காக 30 கன மீட்டருக்கு மிகாமல் மண் / கிராவல் எடுப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

❖ கடற்கரைமணல்கனிமங்களைவெட்டியெடுத்து சந்தைப்படுத்துவதற்காக, தமிழ்நாடு கனிம நிறுவனம் IREL நிறுவனத்துடன் 09.01.2023 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது. கனிமங்கள் பிரித்தெடுக்கும் இரண்டு தொழிற்கூடங்களை நிறுவி, அதன் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ.3,000 கோடி வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ❖



நகராட்சி நிருவாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்
திரு. **கே.என்.நேரு**
அவர்கள்

நகராட்சி நிருவாக இயக்குநரகம்

- மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் அவற்றின் தரத்திற்கு ஏற்றவாறு அலுவலர்கள் அமைப்பு முறை உருவாக்கம்.
- குப்பையில்லா நகரங்கள் (Garbage free Cities) உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 (SBM 2.0) திட்டத்தில் ரூ.2,540.25 கோடி மதிப்பீட்டில் "நகர திடக்கழிவு மேலாண்மை திட்டம்" (City Solid Waste action plan).

கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்

- ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணிகள்.
- "கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்" நகராட்சிகளில் ரூ.1,153.19 கோடி மதிப்பீட்டில் 1,164 பணிகள்.



நமக்கு நாமே திட்டம்

❖ நமக்கு நாமே திட்டத்தின்கீழ், மாநகராட்சிகளில் ரூ.66.21 கோடி மதிப்பீட்டில் 384 பணிகள், நகராட்சிகளில் ரூ.120.56 கோடி மதிப்பீட்டில் 1,126 பணிகள் அனுமதி பெறப்பட்டு, அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்.

தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம்

❖ தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், ரூ.75 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2,04,860 நபர்களுக்கு பணிகள் வழங்கப்பட்டு 8,71,006 மனிதசக்தி நாட்கள் உருவாக்கம்.

நூலகம்/அறிவு சார் மையங்கள்

❖ கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத்திட்டம், மூலதன மானிய நிதி, சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ், ரூ.153.97 கோடி மதிப்பீட்டில் 77 நூலகம் மற்றும் அறிவு சார் மையங்கள் அமைக்கும் பணிகள்.

நீர் நிலைகள் புதுப்பித்தல்

❖ கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத்திட்டம், நமக்கு நாமே திட்டம், அம்ரூத் 2.0, ஜெர்மன் வங்கி நிதியுதவி, மூலதன மானிய நிதி, 15ஆவது மத்திய நிதிக்குழு நிதியுதவியுடன் ரூ.258.06 கோடி மதிப்பீட்டில் 14 மாநகராட்சிகள் மற்றும் 121 நகராட்சிகளில் உள்ள 313 நீர் நிலைகள் புதுப்பிக்கும் பணிகள்.

மின் மயானம்

❖ ரூ.24.74 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளிலுள்ள 18 புதிய மின்மயானங்கள் அமைத்தல், ரூ.91.19 கோடி மதிப்பீட்டில் 70 மயானங்களை மின் மயானங்களாக மாற்றும் பணிகள்.

பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் சமுதாயக் கழிப்பிடங்கள்

❖ தூய்மை இந்தியா திட்டம் 2.0வின் கீழ், ரூ.64.80 கோடி மதிப்பீட்டில் 162 சமுதாயக் கழிப்பிடங்கள், ரூ.81.96 கோடி மதிப்பீட்டில் 49 பொது கழிப்பிடங்கள் புதியதாகக் கட்டும் பணிகள். மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.17.52 கோடி மதிப்பீட்டில் 446 கழிப்பிடங்கள் புதுப்பிக்கும் பணிகள் மற்றும் தூய்மை இந்தியா திட்டம் 2.0வின்கீழ் ரூ.28.47 கோடி மதிப்பீட்டில் 110 பொது / சமுதாய கழிப்பிடங்கள் புதியதாக கட்டும் பணிகள்.

தேக்கத் திடக் கழிவுகள் அகற்றுதல்

❖ 369 ஏக்கர் நிலங்கள் பையோ - மைனிங் முறையின் மூலம் மீட்டெடுக்கப்பட்டு, அந்நிலங்களை பசுமையாக்கும் பொருட்டு ரூ.1.72 கோடி மதிப்பீட்டில் மரங்கள் நடும் பணிகள்.

❖ மதுரை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகளில் ரூ.70.75 கோடி மதிப்பில் 18 நகராட்சிகளில், ரூ.41.77 கோடி மதிப்பீட்டில் தேக்கதிடக் கழிவுகள் அகற்றும் பணிகள்.

பூங்காக்கள் சீரமைத்தல்

❖ கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத்திட்டம், நமக்கு நாமே திட்டம், மூலதன மானிய நிதி, 15ஆவது மத்திய நிதிக் குழு நிதியுதவியுடன் ரூ.155.30 கோடி மதிப்பீட்டில் 307 பூங்காக்கள் சீரமைக்கும் பணிகள்.

தெரு விளக்குகள்

❖ 1,11,327 புதிய தெரு விளக்குகள் அமைத்தல் மற்றும் 3,49,599 தெரு விளக்குகளை மின் சேமிப்பு ஆற்றலுள்ள, ரூ.577.66 கோடி மதிப்பீட்டில் தெரு விளக்குகளாக மாற்றுதல்.

சந்தைகள்

❖ மூலதன மானிய நிதி, கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத்திட்டம் மற்றும் பொது நிதியின்கீழ், 64 புதிய சந்தைகள், ரூ.88.65 கோடி மதிப்பீட்டில் 32 சந்தைகள் மேம்பாடு. ரூ.259.35 கோடி மதிப்பீட்டில் 53 புதிய சந்தைகள் அமைத்தல் மற்றும் 13 சந்தைகள் மேம்பாடு.

சாலைகள்

❖ கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத்திட்டம், மூலதன மானிய நிதி, 15ஆவது மத்திய நிதிக்குழு மற்றும் மாதிரி நகர திட்டம் நிதியுதவியுடன் ரூ.277.66 கோடி மதிப்பீட்டில் 710 புதிய சாலைகள். ரூ.884.37 கோடி மதிப்பீட்டில் 1,230.38 கி.மீ. நீளத்திலான 7,064 சாலைகள் சீரமைக்கும் பணிகள்.



பேருந்து நிலையங்கள்

- ரூ.794.76 கோடி மதிப்பீட்டில் I & A நிதியின் கீழ் 29 புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கும் பணி மற்றும் KNMT திட்டத்தின் கீழ் 23 பேருந்து நிலையங்கள் மேம்பாட்டு பணிகள்.

குடிநீர் வழங்கல்

- நகர்ப்புர உள்ளாட்சிகளின் குடிநீர் தேவையினை முழுமையாக நிறைவடையச் செய்யும் நோக்கில் அம்ரூட் 2.0 திட்டத்தின் மூலம் 23 நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் ரூ.1,052.26 கோடி மதிப்பீட்டில் குடிநீர்பணிகள்.

பேரூராட்சிகள் நிருவாக இயக்குநரகம்

நபார்டு திட்டம்

- நபார்டு நிதியுதவி திட்டத்தின் கீழ் ரூ.401.40 கோடி மதிப்பீட்டில் 351 சாலைப் பணிகள் மற்றும் 11 பாலங்கள் அமைக்கும் பணிகள்.

தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்புத் திட்டம்

- தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.164.20 கோடி மதிப்பீட்டில் 239.46 கிலோ மீட்டர் நீளத்திற்கு 295 சாலைப் பணிகள்.

- தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்புத் திட்ட சேமிப்பு மற்றும் வட்டி தொகை கீழ் ரூ.74.26 கோடி மதிப்பீட்டில், 110.02 கிலோ மீட்டர் நீளத்திற்கு 107 சாலைப் பணிகள்.

மூலதன மானிய நிதி திட்டம்

- மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.388.16 கோடி மதிப்பீட்டில் பணிகள்.

இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி திட்டம்

- இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி திட்டத்தின் கீழ் ரூ.140.39 கோடி மதிப்பீட்டில் பணிகள்.

15ஆவது நிதி ஆணைய மானியம்

❖ 15ஆவது நிதி ஆணைய மானியத் திட்டத்தின் கீழ், ரூ.252.12 கோடி நிபந்தனை மானியம். ரூ.168.07 கோடி நிபந்தனையற்ற மானியத்தில் பணிகள்.

பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம் (நகர்ப்புரம்) – அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம் (பயனாளிகள் தாமாக வீடுகளை கட்டுதல்)

❖ பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம் (நகர்ப்புரம்) – அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 11,514 வீடுகள் கட்டுவதற்கு ஒப்புதல்.

தேசிய நகர்ப்புர வாழ்வாதார திட்டம்

❖ சாலையோர வியாபாரிகளை கண்டறிய கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு தொகை ரூ.2.57 கோடி ஒதுக்கீடு. தேசிய நகர்ப்புர வாழ்வாதார திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கன்னி பேரூராட்சியில் 228 சாலையோர வியாபாரிகளுக்கு ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் தள்ளுவண்டிகள்.

பிரதம மந்திரி – தெருவோர வியாபாரிகளின் ஆத்ம நிர்பார் நிதி

❖ பிரதம மந்திரி தெருவோர வியாபாரிகளின் ஆத்ம நிர்பார் நிதியின் கீழ் 68,358 சாலையோர வியாபாரிகளின் விபரங்கள் PM-SVANidhi இணையதளத்தில் பதிவேற்றம் மற்றும் 34,325 வியாபாரிகளுக்கு கடன் உதவி.

கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்

❖ கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.939.61 கோடி மதிப்பீட்டில் 1,091 பணிகள்.

நமக்கு நாமே திட்டம்

❖ நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.65.40 கோடி மதிப்பீட்டில் சாலைகள் அமைத்தல், நீர்நிலைகள் புனரமைத்தல், பூங்காக்கள் அமைத்தல் உட்பட 575 பணிகள்.

தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம்

❖ தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.27.75 கோடி நிதி ஒதுக்கீட்டில் 37 பேரூராட்சிகளில் 192 பணிகளின் மூலம் 6,01,811 மனித நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

அம்ரூத் 2.0

❖ அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.1,740.34 கோடி மதிப்பீட்டில் பேரூராட்சிகளில் குடிநீர் பணிகள், பூங்கா மேம்பாடு மற்றும் நீர் நிலைகள் புனரமைத்தல் மற்றும் மேம்பாட்டு பணிகள்.

சாலை விபத்து தடுப்பு அமைப்பு

❖ கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.5.06 கோடி மதிப்பீட்டில் மலைப்பிரதேசப் பகுதிகளுக்கான சாலை விபத்து தடுப்பு அமைப்பு பணிகள்.

தெரு விளக்குகள்

❖ 439 பேரூராட்சிகளில் தற்போது பயன்பாட்டிலுள்ள 2,66,953 தெரு விளக்குகளை ரூ.155.56 கோடி மதிப்பீட்டில் மாநில நகர்ப்புர உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் மின் சேமிப்பு ஆற்றல் மிகு விளக்குகளாக (எல்.இ.டி.) மாற்றியமைத்திட நடவடிக்கை.

தூய்மை இந்தியா திட்டம் 2.0

❖ தூய்மை இந்தியா திட்டம் 2.0 இன் கீழ் ரூ.250.84 கோடி மதிப்பீட்டில் தனி நபர் கழிப்பிடம் 41,858, சமுதாய கழிப்பிடம் 190, சிறுநீர் கழிப்பிடம் 113, உயிரி அகழ்வு முறையில் நிலங்களை மீட்டெடுத்தலில்-107, திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணி 1. பயன்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை திட்டத்தில் 8 பணிகள். கசடு கழிவு மேலாண்மை திட்டத்தில் 10, மக்கும் கழிவுகளை தீர்வு செய்வதற்கான செயலாக்க கட்டமைப்பு பணி 354 (ம) மக்காத கழிவுகளை தீர்வு செய்வதற்கான செயலாக்க கட்டமைப்பு பணி 313 பணிகள்.

கோவிட்–19 கொரோனா நோய் தடுப்பு

❖ கோவிட்-19 கொரோனா நோய்தொற்று பரவாமல் தடுக்க ரூ.7.07 கோடி நிதி உதவியுடன் அனைத்து பேரூராட்சிகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்.

விருதுகள்

❖ சிறப்பாக செயல்பட்ட கருங்குழி, கன்னியாகுமரி மற்றும் சோழவந்தான் பேரூராட்சிகளுக்கு சுதந்திர தின விழாவில் "மாண்புமிகு முதலமைச்சர் விருது" வழங்கப்பட்டது.

கருணை அடிப்படையில் பணி நியமனம்

❖ பேரூராட்சிகளில் பணிபுரிந்த காலத்தில் இயற்கை எய்திய 78 அரசு பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம்.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

❖ சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில், கடந்த 43 ஆண்டுகளில் முதல் முறையாக 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் நாளொன்றுக்கு சராசரியாக 1,000 மில்லியன் லிட்டர் குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

❖ சென்னை குடிநீர் வாரியம், பருவமழைக்கு முன்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து பகுதிகளிலும் உள்ள கழிவுநீர் கட்டமைப்புகளை தூர்வாரும் பணிகளை மேற்கொண்டது.

❖ மக்கள் நெருக்கம் அதிகமாக வசிக்கக் கூடிய பகுதிகளாக கண்டறியப்பட்ட 801 தெருக்களில் 258 தூர்வாரும் இயந்திரங்கள், 142 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 54 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்களைக் கொண்டு முழுமையாக தூர் வாரும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

❖ வடகிழக்கு பருவமழையின்போது சென்னை மாநகரின் பகுதிகளில் தேங்கியிருந்த மழைநீரை விரைந்து வெளியேற்றுவதற்கு 59 நீர் உறிஞ்சும் வாகனங்களும், கழிவுநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்ய 142 ஜெட்ராடிங் இயந்திரங்களும், 260 தூர்வாரும் ஆட்டோக்களும் 2,000 களப்பணியாளர்களைக் கொண்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

❖ பருவமழையின் போது வீடுகளுக்குள் பெருக்கெடுக்கும் கழிவு நீரைக் கட்டுப்படுத்தவும் மற்றும் பொது சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட கூடுதலாக 110 கழிவுநீர் வாகனங்கள் மற்றும் 219 நீர் வெளியேற்றும் பம்ப் செட்கள் கழிவுநீரை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திட்டங்கள்

❖ ரூ.107.74 கோடி மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட இடையன்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், மாத்தூர், ஜல்லடியான்பேட்டை ஆகிய பகுதிகளில் நடைபெற்றுவந்த குடிநீர் வழங்கல் பணிகள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.





- ரூ.25.52 கோடி மதிப்பீட்டில் ஆலந்தூர், நிலமங்கை நகர் கழிவு நீரிறைக்கும் நிலையத்தில் கூடுதல் கழிவு நீரிறைக்கும் நிலையம் அமைப்பதற்கான பணிகள் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.
- சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளையின் (CRRT) கீழ் கூவம் ஆற்றின் கரையோரம் – சேத்துப்பட்டில் 10 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட தொகுப்பு முறை இரண்டாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.
- மடிப்பாக்கம் பகுதிக்கு ரூ.256.90 கோடி திட்ட மதிப்பீட்டிலான பாதாள சாக்கடை திட்ட பணி.
- நீலாங்கரை மற்றும் செம்மஞ்சேரி பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் பணிகளுக்கு ரூ.112.67 கோடி மதிப்பிற்கு நிருவாக ஒப்புதல்.
- ஈஞ்சம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஒக்கியம் துரைப்பாக்கம், நந்தம்பாக்கம், புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், செம்மஞ்சேரி, உத்தண்டி, இடையன்சாவடி, சடையான்குப்பம் மற்றும் கடப்பாக்கம் ஆகிய 16 பகுதிகள் மற்றும் மாதவரத்தில் விடுபட்ட தெருக்களுக்கு ரூ.2,288 கோடி மதிப்பிற்கு புதிய பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ள நிருவாக ஒப்புதல்.
- அடையாறு நதி சீரமைப்பு திட்டத்தின் கீழ் அடையாறு ஆற்றில் 39 இடங்களில் கழிவுநீர் நேரடியாக கலப்பதைத் தடுக்கும் பொருட்டு 7 இடைமறித்தல் மற்றும் திசை திருப்பும் பணிகள் மற்றும் 2 முன்மாதிரி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகள்.
- ரூ.385.38 கோடி மதிப்பீட்டில் அடையாறு, கூவம் மற்றும் பக்கிங்ஹாம் கால்வாயின் வடிகால்களில் கழிவுநீர் வெளியேறுவதைத் தடுக்கும் பணிகள் முதல் கட்டமாக 36 பணிகள்.
- "முதல்வரின் முகவரி" திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 10,163 மனுக்களில் 9,092 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 828 மனுக்கள் பிறதுறைகள் சம்பந்தப்பட்டிருப்பதால் மேல்நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 243 மனுக்கள் மீதான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திட்டங்கள்

- ரூ.170.97 கோடி மதிப்பீட்டில், கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து, 10 ஆண்டுகள் இயக்கி, பராமரிக்கும் திட்டம்.
- ரூ.82.61 கோடி மதிப்பீட்டில் புழல், புத்தகரம், சூரப்பட்டு மற்றும் கதிர்வேடு பகுதிகளுக்கான விரிவான குடிநீர் வழங்கல் திட்டம்.
- ரூ.47.24 கோடி மதிப்பீட்டில், நெசப்பாக்கத்தில் இருந்து தினசரி ஒரு கோடி லிட்டர் உயர்தர மறுசுழற்சி நீர் நிலையம் (TTUF) அமைத்தல் மற்றும் போரூர் நீர்ப்பகிர்மான நிலையத்திற்கு அருகில் தினசரி 60 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட புதிய நீர் சுத்திகரிப்பு நிலையம் (WTP).
- ரூ.16.16 கோடி மதிப்பீட்டில் சென்னை நதிகள் சீரமைப்புத்திட்டத்தின்கீழ் அடையாறில் மழைநீர் வடிகால் மூலமாக கலக்கும் கழிவுநீரை தடுத்து மாற்று வழிகள் அமைத்தல் மற்றும் அதற்குத் தேவையான கட்டுமானப் பணிகள்.
- ரூ.6.36 கோடி மதிப்பீட்டில் சென்னை நதிகள் சீரமைப்பு திட்டத்தின்கீழ் அடையாறில் நேரடியாக கலக்கும் கழிவுநீரை தடுத்து நந்தனம் விரிவாக்கம், டர்ன்புல்ஸ் ரோடு பகுதியில் தற்போது பயன்பாட்டில் உள்ள கழிவுநீர் அமைப்புடன் இணைத்தல் மற்றும் ராதாகிருஷ்ணாபுரம் குடிசைப் பகுதிகளுக்கான கழிவுநீர் திட்டப் பணிகள்.
- ரூ.5.04 கோடி மதிப்பீட்டில் சென்னை நதிகள் சீரமைப்பு திட்டத்தின்கீழ் அண்ணா நூற்றாண்டு நூலகம் அருகில் மற்றும் மாம்பலம் கால்வாயில் நேரடியாக கலக்கும் கழிவுநீரை சுத்திகரிக்க தாடண்டர் நகரில் உள்ள நாளொன்றுக்கு 4 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பும் பணிகள்.



- ரூ.18.73 கோடி மதிப்பீட்டில் கிண்டி மற்றும் ஈக்காட்டுத்தாங்கல் பகுதியில் அடையாறில் நேரடியாக கலக்கும் கழிவுநீரை தடுக்கும் பணிகள்.
- ரூ.10.62 கோடி மதிப்பீட்டில் சென்னை நதிகள் சீரமைப்பு திட்டத்தின்கீழ் ஜாபர்கான்பேட்டை மற்றும் சாமியார் தோட்டம் பகுதியில் அடையாறில் நேரடியாக கலக்கும் கழிவுநீரை கழிவுநீரிறைக்கும் நிலையங்களுக்கு அனுப்பும் பணிகள்.
- ரூ.4.31 கோடி மதிப்பீட்டில் சென்னை நதிகள் சீரமைப்பு திட்டத்தின்கீழ் அடையாறில் மழைநீர் வடிகால் மூலமாக கலக்கும் கழிவுநீரை சுத்திகரிக்க நாளொன்றுக்கு 0.6 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள்.
- ரூ.14.21 கோடி மதிப்பீட்டில் மாம்பலம் கால்வாய் வழியாக அடையாறில் கலக்கும் கழிவுநீரை சுத்திகரிக்க தாடண்டர் நகரில் நாளொன்றுக்கு 4 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கும் பணிகள்.
- ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய தலைமை அலுவலகம் ரூ.24.92 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்ட கட்டிடத்தில், புகார் பிரிவை மேலும் மேம்படுத்துவதற்காக, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம்.
- நீலாங்கரை குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு, சிங்காரச் சென்னை திட்டத்தின் கீழ் ரூ.45.68 கோடி நிருவாக ஒப்புதல். செம்மஞ்சேரி குடிநீர் வழங்கல் திட்ட பணிக்கு, அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ், ரூ.46 கோடி மதிப்பீட்டிற்கு, நிருவாக ஒப்புதல்.
- நந்தம்பாக்கம் பாதாள சாக்கடை திட்டப் பணிக்கு ரூ.24.65 கோடி மதிப்பீட்டிற்கு நிருவாக ஒப்புதல். ஒக்கியம்-துரைப்பாக்கம் பாதாள சாக்கடைத் திட்ட பணிக்கு ரூ.256.91 கோடி மதிப்பீட்டிற்கும் நிருவாக ஒப்புதல்.
- ஈஞ்சம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை மற்றும் உத்தண்டி ஆகிய பகுதிகளுக்கான விரிவான பாதாள சாக்கடை திட்டப் பணிக்கு ரூ.644.59 கோடி மதிப்பீட்டிற்கும், புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், செம்மஞ்சேரி, இடையான்சாவடி, சடையான்குப்பம் மற்றும் கடப்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கான விரிவான பாதாள சாக்கடை திட்டப் பணிக்கு ரூ.865.55 கோடி மதிப்பீட்டிற்கும், அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் நிருவாக ஒப்புதல்.
- மேலும், மாதவரம் பகுதியில் உள்ள விடுபட்ட தெருக்களுக்கு, பாதாள சாக்கடை வசதி ஏற்படுத்த ரூ.404.08 கோடி மதிப்பிற்கு அம்ரூட் 2.0 திட்டத்தின்கீழ், நிருவாக ஒப்புதல்.
- பகுதி 10, கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள அண்ணா பிரதான சாலையில் நிலவும் கழிவுநீர் கட்டமைப்பில் உள்ள

குறைபாடுகளுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில், அசோக் நகர் கழிவுநீரகற்றும் நிலையத்திலிருந்து, நெசப்பாக்கம் கழிவுநீரகற்றும் நிலையம் வரை உள்ள கழிவுநீர் சேகரிப்பு அமைப்பு மேம்படுத்த, சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் ரூ.45.68 கோடி மதிப்பிற்கு நிருவாக ஒப்புதல்.

- ஆலந்தூர் பகுதியில் (பகுதி 12) கழிவுநீர் கட்டமைப்பில் அடிக்கடி ஏற்படும் பழுதுகளால், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதால், தற்போதுள்ள கழிவுநீர் கட்டமைப்புகளை மேம்படுத்த, அம்ரூட் 2.0 திட்டத்தின்கீழ், ரூ.122.63 கோடி நிருவாக ஒப்புதல்.
- சென்னையில் உள்ள கூவம், அடையாறு ஆறுகள், பக்கிங்காம் கால்வாய் ஆகியவைகளின் வடிநில பகுதிகளில் உள்ள பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க,ரூ.385.38கோடி மதிப்பிற்குதிருத்தப்பட்ட நிருவாக ஒப்புதல்.
- ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட பகுதி 9இல் அடிக்கடி ஏற்படும் கழிவுநீர் வழிந்தோடல் பிரச்சனைகளுக்கு தீர்வாக அங்குள்ள கழிவுநீர்கட்டமைப்புகளை பெரிதாக்குவதற்கும், உந்து நிலையங்கள் அமைப்பதற்கும் ரூ.52.69 கோடி மதிப்பிற்கு அம்ரூட் 2.0 திட்டத்தின்கீழ், நிருவாக ஒப்புதல்.
- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட, அன்னை சத்யா நகர், சிவானந்தா காலனி, எம்.கே.பி. காலனி மற்றும் படவேட்டம்மன் தொழிற்பேட்டை ஆகிய பகுதிகளுக்கு, பாதாள சாக்கடை வசதி ஏற்படுத்த ரூ.18.19 கோடி மதிப்பிற்கு அம்ரூட் 2.0 திட்டத்தின்கீழ், நிருவாக ஒப்புதல்.
- பக்கிங்காம் கால்வாயில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க, தண்டையார்பேட்டை F கழிவுநீரிறைக்கும் நிலையத்திலிருந்து, கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் வரை செல்லும் தற்போதுள்ள பிரதான கழிவுநீர் உந்து குழாய் கட்டமைப்பை வலுவூட்டுவதற்காக, ரூ.101.58 கோடி மதிப்பிற்கு அம்ரூட் 2.0 திட்டத்தின்கீழ், நிருவாக ஒப்புதல்.
- குடிநீர் விநியோகத்தின்போது ஏற்படும் பெருமளவு இழப்புகளை கண்டறிவதற்கு, குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், குடிநீர் பகிர்மான நிலையங்கள் மற்றும் குடிநீர் நிரப்பு நிலையங்களில், ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்த, சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ் ரூ.43.01 கோடி மதிப்பீட்டிற்கு நிருவாக ஒப்புதல்.

குடிநீர்த் திட்டங்கள்

- ரூ.140.22 கோடி மதிப்பீட்டில் முசிறி, தாத்தையங்கார் பேட்டை, துறையூர் மற்றும் உப்பிலியாபுரம் ஒன்றியங்களிலுள்ள 1.59 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 293 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூ.28.24 கோடி மதிப்பீட்டில், ஊத்தங்கரை பேரூராட்சி மற்றும் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தில் 52,000 மக்கள் பயன்பெறும் வகையில், 50 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர்திட்டம்.
- ரூ.275.11 கோடி மதிப்பீட்டில், வேலூர் மாநகராட்சியில் 7.20 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.
- ரூ.241 கோடி மதிப்பீட்டில், அன்னூர், மூப்பேரிபாளையம், அவிநாசி, சூலூர் மற்றும் பல்லடம் திருப்பூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 94,000 மக்கள் பயன்பெறும் வகையில் 155 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்.
- ரூ.8.10 கோடி மதிப்பீட்டில், ஓசூர் ஒன்றியத்திலுள்ள 17,000 மக்கள் பயன்பெறும் வகையில் நாகொண்டபள்ளி மற்றும் 27 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூ.8.46 கோடி மதிப்பீட்டில், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 21,000 மக்கள் பயன்பெறும் வகையில் ராயகோட்டை மற்றும் 28 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ரூ.81.41 கோடி மதிப்பீட்டில், தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 73,000 மக்கள் பயன்பெறும் வகையில் 274 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்.
- ரூ.99.24 கோடி மதிப்பீட்டில், பல்லடம் மற்றும் திருப்பூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1.92 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் 155 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூ.69.31 கோடி மதிப்பீட்டில், பொள்ளாச்சி தெற்கு, பொள்ளாச்சி வடக்கு மற்றும் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 70,000 மக்கள் பயன்பெறும் வகையில் 212 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்.
- ரூ.185.24 கோடி மதிப்பீட்டில், நாமக்கல் நகராட்சி 1.59 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் அபிவிருத்தி திட்டம்.
- ரூ.224 கோடி மதிப்பீட்டில், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலுள்ள பெருந்துறை மற்றும் 7 பேரூராட்சிகள் மற்றும் 547 வழியோர ஊரக குடியிருப்புகளுக்கான 4.49 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம்.
- ரூ.85.75 கோடி மதிப்பீட்டில், திருப்பூர் மாவட்டம், 5 பேரூராட்சிகள் மற்றும் மடத்துக்குளம் மற்றும் உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 318 குடியிருப்புகளில் 3.37 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம்.
- ரூ.9.21 கோடி மதிப்பீட்டில், கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 17 குடியிருப்புகள் மற்றும் அண்ணா கிராமம் ஒன்றியத்தைச் சார்ந்த 18 குடியிருப்புகளில் 42,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூ.9.90 கோடி மதிப்பீட்டில், கிருஷ்ணகிரி ஒன்றியத்தைச் சார்ந்த வெலகலஹல்லி மற்றும் 39 குடியிருப்புகளில் 11,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம்.
- ரூ.9.62 கோடி மதிப்பீட்டில், பாலசமுத்திரம் பேரூராட்சியில் 16,000 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் அபிவிருத்தி திட்டம்.
- ரூ.31.82 கோடி மதிப்பீட்டில், பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிகரளப்பள்ளி மற்றும் 143 ஊரகக் குடியிருப்புகளுக்கான 41,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம்.



- ரூ.56.94 கோடி மதிப்பீட்டில், கோபிசெட்டிபாளையம் மற்றும் நம்பியூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 96 ஊரகக் குடியிருப்புகளுக்கான 64,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக்குடிநீர் திட்டம்.
- ரூ.8.97 கோடி மதிப்பீட்டில், ஆனையூர் நகராட்சி 72,000 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் அபிவிருத்தி திட்டம்.
- ரூ.399.46 கோடி மதிப்பீட்டில், சங்ககிரி, ஆலம்பாளையம் மற்றும் படவீடு பேரூராட்சிகள், பள்ளிபாளையம், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 4.92 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் 669 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூ.174 கோடி மதிப்பீட்டில், இரணியல் பேரூராட்சி மற்றும் 319 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 3.10 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர் திட்டம்
- ரூ.49.95 கோடி மதிப்பீட்டில் தொட்டியம் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 58,000 மக்கள் பயன்பெறும் வகையில் 138 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்திட்டம்.
- ரூ.46.55 கோடி மதிப்பீட்டில், கீழப்பாவூர் பேரூராட்சி, பாப்பாக்குடி, கடையம் மற்றும் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 1.81 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 163 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்திட்டம்.
- ரூ.32.40 கோடி மதிப்பீட்டில், மானூர் மற்றும் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 1.33 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் 170 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டம்.
- ரூ.50.50 கோடி மதிப்பீட்டில், ஆலங்குளம் மற்றும் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 48 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் முக்கூடல் பேரூராட்சியை சார்ந்த 1 குடியிருப்பிலுள்ள 50,000 மக்கள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர் திட்டம்.
- ரூ.76.15 கோடி மதிப்பீட்டில், போடிநாயக்கனூர் நகராட்சியிலுள்ள 90,000 மக்கள் பயன்பெறும் வகையிலான குடிநீர் அபிவிருத்தி திட்டம்.
- ரூ.30 கோடி மதிப்பீட்டில், போடிநாயக்கனூர் நகராட்சிக்கு குடிநீர் அர்ப்பணிப்புத் திட்டம்.
- ரூ.8,765.55 கோடி மதிப்பீட்டில் 16 மாவட்டங்களைச் சார்ந்த 2 நகராட்சிகள், 12 பேரூராட்சிகள் மற்றும் 7,639 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 49.34 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 30 கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு நிருவாக ஒப்புதல்.
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், தூத்துக்குடி, திருவள்ளூர், கடலூர், திண்டுக்கல், இராமநாதபுரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 6 மாவட்டங்களைச் சார்ந்த 5 நகராட்சிகள், 8 பேரூராட்சிகள் மற்றும் 4,208 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 24.08 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான 7 கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஜல் ஜீவன் மற்றும் அம்ரூத் 2.0 திட்ட நிதி ஆதாரங்களுடன் ரூ.5,119.50 கோடிக்கு நிருவாக ஒப்புதல்.
- கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட சின்ன வேடம்பட்டி, வெள்ளக்கிணறு மற்றும் சரவணம்பட்டியில் 64,000 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.279.05 கோடிக்கு, அம்ரூத் 2.0 நிதி ஆதாரத்துடன் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான அரசின் நிருவாக ஒப்புதல்.
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சி மற்றும் தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மாநகராட்சியின் விடுபட்ட மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில், பகுதி சார்ந்த வளர்ச்சி அல்லாத (Non Area Based Development) பிற பகுதிகளுக்கான 2 பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, 2.68 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் அம்ரூத் 2.0 நிதி ஆதாரத்துடன் ரூ.727.10 கோடிக்கு அரசின் நிர்வாக ஒப்புதல்.



பாதாள சாக்கடைத் திட்டங்கள்

- ரூ.34.39 கோடி மதிப்பீட்டில், திருச்சிராப்பள்ளி, மணச்சநல்லூர் பேரூராட்சியில் 36,000 மக்கள் பயன்பெறும் வகையில் பாதாள சாக்கடைத் திட்டம்.
- ரூ.21.58 கோடி மதிப்பீட்டில், திருச்சிராப்பள்ளி, எஸ்.கண்ணனூர் பேரூராட்சியில் 18,000 மக்கள் பயன்பெறும் வகையில் பாதாள சாக்கடைத் திட்டம்.
- ரூ.35 கோடி மதிப்பீட்டில், தஞ்சாவூர், வல்லம் பேரூராட்சியில் 20,000 மக்கள் பயன்பெறும் வகையில் பாதாள சாக்கடைத் திட்டம்.
- ரூ.51.50 கோடி மதிப்பீட்டில், ஈரோடு, பெருந்துறை பேரூராட்சியில் 33,000 மக்கள் பயன்பெறும் வகையில் பாதாள சாக்கடைத் திட்டம்.
- ரூ.95 கோடி மதிப்பீட்டில், தூத்துக்குடி மாநகராட்சியில் 2.65 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பாதாள சாக்கடைத் திட்டம்.
- ரூ.170.22 கோடி மதிப்பீட்டில், கோயம்புத்தூர், பொள்ளாச்சி நகராட்சியில் 1 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பாதாள சாக்கடைத் திட்டம்.
- ரூ.41.72 கோடி மதிப்பீட்டில், தேனி, மேலசொக்கநாதபுரம் பேரூராட்சியில் 22,000 மக்கள் பயன்பெறும் வகையில் பாதாள சாக்கடைத் திட்டம்.
- ரூ.140.13 கோடி மதிப்பீட்டில், சிவகங்கை, காரைக்குடி நகராட்சியில் 1.39 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பாதாள சாக்கடைத் திட்டம்.
- ரூ.100.08 கோடி மதிப்பீட்டில், கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம் நகராட்சியில் 77,000 மக்கள் பயன்பெறும் வகையில் பாதாள சாக்கடைத் திட்டம்.

- ரூ.48.39 கோடி மதிப்பீட்டில், விருதுநகர், சாத்தூர் நகராட்சியில் 36,000 மக்கள் பயன்பெறும் வகையில் பாதாள சாக்கடைத் திட்டம்.

- ரூ.7,890 கோடிக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம். இத்திட்டத்தின் மூலம் ஒசூர் மாநகராட்சி, தருமபுரி நகராட்சி 16 பேரூராட்சிகள் மற்றும் 20 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 6,802 ஊரக குடியிருப்புகளைச் சார்ந்த 38.82 இலட்சம் மக்கள் பயன்.

- ரூ.1,363.40 கோடி மதிப்பீட்டில், 56 கூட்டுக் குடிநீர் திட்டங்களில் மறுசீரமைப்பு பணிகளுக்கான நிர்வாக ஒப்புதல். இத்திட்டப் பணிகளின் மூலம் 50.76 இலட்சம் மக்கள் பயன்.

பொது சுகாதாரத்துறை

கோவிட் தடுப்பூசி செலுத்துதல்

- கோவிட் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

டயாலிசிஸ் மையங்கள்

- சிறுநீரகம் செயலிழந்து உள்ள நோயாளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், சென்னையில் 8 இடங்களில் தொடங்கிய டயாலிசிஸ் மையங்களில் உள்ள 97 டயாலிசிஸ் இயந்திரங்களின் மூலம் 335 நபர்கள் பயன்.

பூச்சித் தடுப்புப் பிரிவு

- பறக்கும் கருவிகள் (Drone) மூலம் கால்வாய்கள் மற்றும் நீர்வழிப் பாதைகளில் கொசுப்புழு நாசினி தெளிக்கும் பணி.

கால்நடை மருத்துவம்

நாய் இனக்கட்டுப்பாடுத் திட்டம்

- பெருநகர சென்னை மாநகராட்சியில் பெருகிவரும் தெருநாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த 3 இனக்கட்டுப்பாடு மையங்கள்.

- 1913 இலவச அழைப்பின் மூலம் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகாரின் அடிப்படையில் மற்றும் அதிகமான நாய்கள் தொல்லை இடங்களில் 16 தெருநாய்கள் பிடிக்கும் வாகனங்கள் மூலம் 36,373 தெருநாய்கள் பிடிக்கப்பட்டு, நாய்களுக்கு இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்க்கடி தடுப்பூசி.

- 29,176 தெருநாய்களுக்கு நாய் இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை, மீனம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூரில் புதியதாக நாய் இனக்கட்டுப்பாடு மையங்கள் மூலம் 46,536 செல்லப் பிராணிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

சுற்றித்திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துதல்

- தெருக்களில் சுற்றித்திரியும் 9,960 கால்நடைகள் பிடிக்கப்பட்டு 'ஜி' மற்றும் 'டி' மாட்டுத்தொழுவங்களில் அடைக்கப்பட்டு, பராமரிப்பு செலவு மற்றும் அபராதத் தொகை ரூ.2,000 கால்நடை உரிமையாளர்களுக்கு விதிப்பு.

- 9,960 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ.1.6 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம்

- சென்னையில் 4 செல்லப்பிராணிகள் சிகிச்சை மையங்களில் 46,536 நாய்களுக்கு இலவச சிகிச்சை.

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம்

- தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் மூலம் 2025க்குள் காசநோயினை ஒழிக்கத் திட்டம், 36 காசநோய் மையங்கள், 162 நுண்ணோக்கி மையங்கள், 13 CBNAAT மையங்கள் மற்றும் 13 TRUNAT மையங்கள், மருந்து உணர்திறன் காசநோய் (DS-TB) மற்றும் பன்மருந்து எதிர்ப்பு காசநோய் (DR-TB) ஆகிய இரண்டிற்கும் சிகிச்சை.

- தனியார் மருத்துவமனைகளில் காசநோய் கண்டறியப்பட்ட 8,031 நோயாளிகளுக்கு சிகிச்சை.

- பெருநகர சென்னை மாநகராட்சியில் 19,304 நபர்களுக்கு காசநோய் கண்டறியப்பட்டு சிகிச்சை.

- தண்டையார்பேட்டையில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் காசநோய்க்கென புதிய வார்டு.

சென்னை மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கம்

- பார்வை இழப்பு தடுப்புத் திட்டத்தில் 43 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கண் பரிசோதனை. 2025க்குள் பார்வை இழப்பின் விகிதத்தை 0.25 சதவிகிதமாகக் குறைக்கத் திட்டம்.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்குப் பார்வைத்திறன் குறைபாட்டினை சரிசெய்து 4,515 இலவசக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளது. 26,924 கண்புரை அறுவை சிகிச்சைகள் மற்றும் கண் வங்கிகள் மூலம் 3,684 கண்கள் சேகரிப்பு.

சிறப்பு சேவைகளுடன் கூடிய பல்நோக்கு மருத்துவமனை மையங்கள்

- நகர்ப்புர மக்கள் பயனடையும் வகையில் பல சிறப்பு மருத்துவ சேவைகளுடன் 40 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களில் "வெளிநோயாளிகள் சிறப்பு மருத்துவமனை"
- "நிலையான நாட்கள் நிலையான சிறப்பு மருந்துவமனை" திட்டத்தில் மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை மருத்துவ ஆலோசனை. 40 பல்நோக்கு மருத்துவமனைகளில் 1,42,886 நோயாளிகள் பயன்.

மக்களைத் தேடி மருத்துவம் (MTM)

- 15 மண்டலங்களிலும் தமிழ்நாடு பெண்கள் மேம்படுத்தப்பட்ட கழகம் மூலம் "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டம்.
- நகர்ப்புர மக்களுக்கு வீடு தேடி தொற்றாநோய் கண்டறிதல்,மருந்துகளை விநியோகிப்பதற்கும், நோய்த்தடுப்பு சிகிச்சை வழங்குவதற்கும் 15 நடமாடும் குழுக்கள் செவிலியருடன் உருவாக்கப்பட்டு உடற்பயிற்சி சிகிச்சை, நோய்த்தடுப்பு மற்றும் பெரிட்டோனியல் டயாலிசிஸ் சேவைகள்.
- 35,66,818 நபர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்க்காக பரிசோதிக்கப்பட்டு 1,09,560மருந்துப்பெட்டிகள்வழங்கப்பட்டுள்ளது.
- 5,740 நபர்களுக்கு நோய்த்தடுப்பு சிகிச்சை, 11,867 உடற்பயிற்சி சிகிச்சை, 37 நாள்பட்ட சிறுநீரக நோயாளிகளுக்கு நோய்த்தடுப்பு பராமரிப்பு செவிலியர் மற்றும் 32,868 CAPD பைகள்.



வீடற்றோருக்கான காப்பகங்கள்

- 38 வீடற்றோருக்கான காப்பங்கள், 12 சிறப்பு காப்பகங்கள் வெற்றிகரமாக இயக்கம், கூடுதலாக 33 காப்பகங்கள் திறக்க நடவடிக்கை.

மருத்துவ சேவைகள் துறை

- பெருநகர சென்னை மாநகராட்சியில் மருத்துவ சேவைகள் துறையில் 15 மண்டலங்கள் மூலமாக 16 பெருநகர சமுதாய நல மருத்துவமனைகள், 3 இருபத்து நான்கு மணிநேர அவசரகால மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவை தரம் உயர்த்தப்பட்டு தேவையான உபகரணங்களுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

- பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் 2.24 கோடி புறநோயாளிகள் சிகிச்சை பெற்று பயன்.

- சுகப்பிரசவம் மூலம் 13,419 தாய்மார்களுக்கும் மற்றும் சிசேரியன் அறுவை சிகிச்சை மூலம் 11,530 தாய்மார்களுக்கும் பிரசவம் நடைபெற்றுள்ளது. பிரசவித்த தாய்மார்களின் எண்ணிக்கை 24,949 அறுவை அரங்குகளின் சிறப்பு அம்சமாக பிரசவம் மற்றும் கருத்தடை அறுவை சிகிச்சைகளுக்கு ஒரு முறை மட்டுமே உபயோகப்படுத்தக் கூடிய Disposable LSCS Delivery Kit, Video Laproscopy மற்றும் sonomammogram ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

- பெண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சை மூலம் 12,077 தாய்மார்களுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை நடைபெற்றுள்ளது.

- ஆண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சை மூலம் 144 தந்தையர்களுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை நடைபெற்றுள்ளது.

- 1,883 தாய்மார்களுக்கு பாதுகாப்பான கருக்கலைப்பு செய்யப்பட்டுள்ளது.

- தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி அனைத்து தடுப்பூசிகளும் இலவசமாக அனைத்து நலவாழ்வு மையங்களிலும் மற்றும் களப்பணியின் போதும் போடப்படுகின்றன.

- பி.சி.ஜி. 1,48,581 குழந்தைகளுக்கு போடப்பட்டுள்ளது.

- பென்டாவேலன்ட் வேக்சீன் தடுப்பூசி, ரோட்டா வைரஸ் தடுப்பூசி, ஊசி மூலம் கொடுக்கப்படும் தடுப்பூசி மற்றும் ஓரல் போலியோ டிராப்ஸ் 1,57,014 குழந்தைகளுக்கு போடப்பட்டுள்ளது.

- தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி 9 மாதம் முடிவடைந்த குழந்தைகளுக்கு 1,60,689 போடப்பட்டுள்ளது.

- பெண்களுக்கு எளிய முறையில் கருப்பை வாய் புற்றுநோய் ஆரம்ப நிலையில் கண்டறியும் பரிசோதனை அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் 1,76,021 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம்

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் மூலம் அரசு மருத்துவமனைகளில் பரிசோதனை மற்றும் பிரசவம் மேற்கொண்ட 1,05,473 கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.59.71 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம்

- பிரசவித்த தாய்மார்களுக்கு ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.600 வழங்கப்படுகிறது. 2021 முதல் 2023 வரை 13,355 பயனாளிகளுக்கு ரூ.80.13 இலட்சம் வழங்கப்பட்டது.

கல்வித்துறை

- பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 98,783 ஆக உள்ளது.

- ரூ.67.83 கோடி செலவில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி 22 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், அனைத்து பள்ளிகளில், சீர்மிகு வகுப்பறைகள்.

- நிர்பயா திட்டத்தின் கீழ், ரூ.23.66 கோடி செலவில் 132 பள்ளிகளில் பயிலும் பெண் குழந்தைகளின் நலனை பேணிக்காக்க கழிப்பறை வசதிகள் 159 பள்ளிகளுக்கு நாப்கின்கள்.

- நிர்பயா திட்டத்தின் கீழ், ரூ.5.47 கோடி செலவில் பெண் குழந்தைகளின் பாதுகாப்பை மேம்படுத்த 159 பள்ளிகளில் கண்காணிப்பு கேமராக்கள்.

- நிர்பயா திட்டத்தின் கீழ், ரூ.6.91 கோடி செலவில் பெண் குழந்தைகளின் உடல் திறனோடு பல்வேறு போட்டிகளில் பங்குபெற பாதுகாப்பான விளையாட்டு திடல்கள் / மைதானம் 93 பள்ளிகளில் அமைக்கப்பட்டு வருகிறது.

- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அரசு மற்றும் சென்னை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களை முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயில போட்டித் தேர்வுகளில் பங்குபெற்று வெற்றி பெறச் செய்ய ரூ.3.59 கோடி செலவில் இரண்டு உண்டு உறைவிட மாதிரிப்பள்ளிகள்.

- அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு Smart City திட்டத்தின் வாயிலாக 10,279 சிறந்த சாய்வு இருக்கைகள் TANSI நிறுவனம் மூலமாக ரூ.9.80 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

- இதுவரை 2,000 ஆசிரியர்களுக்கான ICT பயிற்சி (CITIIS) ரூ.1.50 கோடி செலவில் வழங்கப்பட்டு வருகிறது.

- சென்னைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள், உதவி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மூத்த ஆசிரியர்களுக்கான தலைமைத்துவ வளர்ச்சி பயிற்சி (CITIIS) ரூ.2.45 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

- சென்னை பள்ளிகளுக்கான SMS மற்றும் LRMS அமைப்பு மேம்பாடு பயிற்சி (CITIIS) ரூ.59 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளது.

- CITIIS (நகர முதலீடுகள் புதுமை, ஒருங்கிணைத்தல் மற்றும் நிலைத்திருத்தல்) முன்முயற்சி திட்டத்தின் கீழ் 18 வளாகங்களில் உள்ள 28 பள்ளிகளை "மாதிரி மற்றும் சீர்மிகு" பள்ளிகளாக மாற்றியமைக்க ரூ.95.25 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதில் AFD (பிரெஞ்சு மேம்பாட்டு நிறுவனம்) ரூ.76.2 கோடியும், சீர்மிகு சென்னை நிறுவனம் ரூ.19.05 கோடி பங்களித்துள்ளது.

- மண்டலம்-9 இல் பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற (NCVT - National Council of Vocational Training) தொழில் பயிற்சி நிறுவனத்தின் மூலம் தொழிற்கல்வி சார்ந்த பயிற்சிகளான பிளம்பர், பொருத்துனர், மெக்கானிக், எலக்ட்ரீசியன், மோட்டார் மெக்கானிக் மற்றும் கணினி சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது. பயிற்சி முடித்த மாணவர்களுக்கு தொழில் பயிற்சி நிறுவனத்தின் மூலமாக வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

- பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் நாட்டுப்பிள்ளையார் கோவில் தெரு, சுந்தரம் தெரு, புரசைவாக்கம் மற்றும் சி.விராமன் தெரு, ஆழ்வார்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் சமுதாய கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இச்சமுதாய கல்லூரிகள் மூலம் மென்பொருள் கணினி, சுகாதார உதவியாளர்கள், துணை மருத்துவ படிப்புகள், அடுமனை & இனிப்பு தயாரித்தல் மற்றும் சணல் பை உற்பத்தி செய்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- பள்ளி மாணவ / மாணவியரிடையே பாலின பாகுபாடு இல்லாமல் நேர்மறை சிந்தனையை உருவாக்கவும் ஆரோக்கியமான அறிவுப்பகிர்தலை ஊக்குவிக்கும் வகையில் சென்னைப்பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்புகளில் பயிலும் ஒரு பள்ளிக்கு 30 மாணவர்களைக் கொண்டு பாலினக் குழுக்கள் அமைக்கப்பட்டு, பாலின சமத்துவம் குறித்தான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் மாணவர்களுக்கு பாலின சமத்துவம் குறித்த விழிப்புணர்வு வழங்கப்பட்டு வருகிறது.

- 38 உயர்நிலைப் பள்ளி மற்றும் 32 மேல்நிலைப் பள்ளிகளில் இணைய இணைப்பு (Internet Connection) வழங்கப்பட்டுள்ளது.

- 281 சென்னை தொடக்க / நடுநிலை / உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் விதமாக ரூ.20 இலட்சம் செலவில் கண்காட்சிகள் அமைக்கப்பட்டது.

- 30 பள்ளிகளுக்கு மாண்டிசோரி உபகரணங்கள் வழங்கப்பட்டு, மாண்டிசோரி முறையில் மழலையர் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், 35 மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கு மாண்டிசோரி பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

- சிட்டிஸ் (CITIIS) திட்டத்தின் கீழ் School Management System (SMS), Learning Resources Repository Management System (LRRMS) ஆகியவற்றிற்கு ரூ.59 இலட்சம் மற்றும் ரூ. 2.45 கோடியில் School Leadership Development & Transformation (SLDT) பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், மட்டைப்பந்து (Cricket) மற்றும் கால்பந்து (Football) விளையாட்டுகளில் தலைசிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு மாணவர்களுக்கு பயிற்சி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1, 3, 4 மற்றும் 5ஆவது மண்டலங்களில் உள்ள சென்னை பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது..

- சென்னை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இளைஞர் பாராளுமன்ற (Youth Parliament) செயல்பாட்டின் வழிமுறைகளின் படி பள்ளித் தலைமையாசிரியர்களின் தலைமையில் இளைஞர் பாராளுமன்ற உயர்மட்ட ஆசிரியர் குழு SCYP (Staff Committee for the Youth Parliament) அமைக்கப்பட்டு இளைஞர் பாராளுமன்றம் நடத்தப்பட்டு வருகிறது.

- அனைத்து சென்னை தொடக்க / நடுநிலை / உயர்நிலை (ம) மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்த "பள்ளி இல்ல நூலகம்" அமைக்கப்பட்டுள்ளது.

- சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே பொறுமை, தலைமை பண்பு, சரியான முடிவு எடுத்தல், சகிப்புத் தன்மை, குழுவாக பணிசெய்தல் போன்ற பண்புகளை வளர்ப்பதற்காக ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களை நான்கு குழுக்களாக பிரித்து (சிவப்பு, ஊதா, பச்சை மற்றும் மஞ்சள்) குழுத் தலைவர்களுக்கும், பள்ளி அளவில் தலைவர், துணை தலைவர் என நியமித்து மாணவர்களுக்கு அதற்கான பேட்ஜ் வழங்கப்பட்டுள்ளது. மேலும், விளையாட்டுத் திறனில் சிறந்து விளங்கும் மாணவர்களை அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கான பேட்ஜ் வழங்கப்பட்டுள்ளது.

- சென்னை பள்ளிகளில் ஆங்கிலம் பேசும் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. மாணவர்களிடையே ஆங்கிலம் பேசும் திறனை வளர்ப்பதால் உயர்கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் உலகத்தின் எப்பகுதிக்கு சென்றாலும் எதிர்கொள்ளும் ஆற்றலை மேம்படுத்தும் விதமாக பல பள்ளிகளில் ஆங்கில மொழி பேசும் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மைத்துறை

- பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தினை மீட்டெடுக்கும் வகையில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டு குவிந்துள்ள திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து (Bio-mining) பயனுள்ள பொருட்களை பிரித்தெடுத்தல் பணி ரூ.350.65 கோடி மதிப்பீட்டில் SBM திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அரசின் நிருவாக அனுமதி.

- கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டு குவிந்துள்ள திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து (Bio-mining) பயனுள்ள பொருட்களை பிரித்தெடுத்தல் பணிக்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை (Detail Feasibility Report) தயாரிக்க (TNUIFSL) (தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள்) மூலம் நியமிக்கப்பட்ட கலந்தாலோசகரால் மதிப்பீடு ரூ.648.38 கோடியில் தயாரிக்கப்பட்டு SBM திட்டத்தின்கீழ் மேற்கொள்ள நிருவாக அனுமதி.

- திடக்கழிவுகளை வீட்டுக்கு வீடு திறம்பட சேகரிப்பதற்காக ரூ.42.38 கோடி மதிப்பீட்டில் 1,684 லித்தியம் அயன் பேட்டரியுடன் கூடிய பேட்டரி மூலம் இயங்கும் வாகனம்.
- ரூ.8.60 கோடி மதிப்பீட்டில், 1,100 லிட்டர் கொள்ளளவு கொண்ட 3,850 உலோக குப்பைத் தொட்டிகள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- ரூ.1.72 கோடி மதிப்பீட்டில், வீடுகள்தோறும் குப்பைகளை தரம் பிரித்தெடுப்பதற்காக 100 லிட்டர் கொள்ளளவு கொண்ட 10,000 எல்.எல்.டி.பி.இ. குப்பைத் தொட்டிகள் கொள்முதல்.
- மாதவரத்தில் பொது மற்றும் தனியார் பங்களிப்பில் (PPP mode) நாளொன்றுக்கு 100 டன் ஈரக்கழிவுகளை கொண்டு இயற்கை உயிரி எரிவாயு (பயோ-சி.என்.ஜி.) நிலையம்.
- மெரினாவில் கனத்துடன் கூடிய எரியூட்டும் கலன் 5 M.T. தனியார் பங்களிப்பில் (CSR) நிறுவப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.

மழைநீர் வடிகால்வாய் துறை

ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி (கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதி)

- கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால், 769 கி.மீ. நீளத்தில் ரூ.3,220 கோடி மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி (ADB) நிதியின் கீழ் 46 சிப்பங்களில் பணிகள் நடைபெற்று ரூ.1,182.66 கோடி செலவினத்தில் 45 சதவிகிதப் பணிகள் நிறைவு. அம்பத்தூர். மணலி, மாதவரம் மற்றும் திருவொற்றியூர் ஆகிய பகுதியில் வாழும் 30 இலட்சம் மக்கள் பயன்.

ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி (கோவளம் வடிநிலப் பகுதி)

- கோவளம் வடிநிலப் பகுதியில், M1, M2 மற்றும் M3 என்ற திட்டக் கூறுகளில் ரூ.1,714 கோடி மதிப்பீட்டில் 360 கி.மீ நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டமைப்புகள்.
- முதற்கட்டமாக ரூ.150.45 கோடி மதிப்பீட்டில் 39.78 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்.
- இரண்டாம் கட்டமாக 9 சிப்பங்கள் ரூ.447.03 கோடி மதிப்பீட்டில் 120.55 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்.
- M3 திட்டக்கூறு பணிகள் 11 சிப்பங்கள் ரூ.270.30 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது. பெருங்குடி, சோழிங்கநல்லூர் மற்றும் ஆலந்தூர் மண்டலப் பகுதியில் வாழும் 9 இலட்சம் மக்கள் பயன்.

சிதிலமடைந்த மழைநீர் வடிகால் இடித்து புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் விடுபட்ட இடங்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி – உலக வங்கி நிதி

- தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) மூலம் உலக வங்கி நிதியின் கீழ், மழைநீர் வடிகால்கள் அமைப்பதற்கு ரூ.120 கோடியில் 43 சிப்பங்கள் 44.88 கி.மீ நீளத்தில் விடுபட்ட இடங்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்
- உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின்கீழ் மழைநீர் வடிகால் அமைத்தல்.
- ரூ.26.28 கோடி மதிப்பீட்டில் 9.81 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்.
- தமிழக அரசின் மூலதன மானிய நிதியின்கீழ் மழைநீர் வடிகால் அமைத்தல்.
- ரூ.7.40 கோடி மதிப்பீட்டில் 2.05 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்.
- சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ், மழைநீர் வடிகால் அமைத்தல்.
- சர்வதேசத் தரத்திற்கு சென்னை மாநகரை உயர்த்த சிங்காரச் சென்னை 2.0 திட்டம்.
- சிங்காரச் சென்னை 20 திட்ட நிதியின்கீழ், ரூ186.47 கோடி மதிப்பீட்டில் 45.23 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்.
- ரூ.70 கோடி மதிப்பீட்டில் 20.15 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்.

- வெள்ள நிவாரண நிதியின் கீழ், ரூ.291.06 கோடி மதிப்பீட்டில் 101.15 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்.
- நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்க 20 நீர்நிலைகளை ரூ.200 கோடி மதிப்பீட்டில் புனரமைக்க தேர்வு. முதற்கட்டமாக 12 நீர்நிலைகளை சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ் ரூ.17.96 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள்.
- நமக்கு நாமே திட்டத்தின்கீழ், 2 நீர்நிலைகள் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி.

பேருந்து சாலைகள் துறை

- தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு 2021-2022 திட்டத்தின் கீழ், ரூ.17.38 கோடி மதிப்பீட்டில் 13.58 கி.மீ நீளமுடைய 22 சாலைகள் பணிகள்.
- 2021-2022ஆம் நிதியாண்டில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.37.58 கோடி மதிப்பீட்டில் 39.87 கி.மீ நீளமுடைய 59 சாலைப் பணிகள்.
- சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு மண்டலங்களில் உள்ள 4,681 (பேருந்து தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகள்) சாலை பெயர் பலகைளில் (street name boards) அமைந்துள்ள பழைய பெயர் பலகைகளை நீக்கி ரூ.8.43 கோடி மதிப்பீட்டில் புதிதாக டிஜிட்டல் பெயர் பலகைகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு பணிகள்.
- சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், மெரினா கடற்கரையில் (காந்தி சிலைக்கு பின்னால்) மாற்றுத்திறனாளிகள் கடல் அலை வரை சென்று பார்வையிட நிரந்தர பாதை அமைக்கும் பணிக்கு ரூ,1.14 கோடி மதிப்பீட்டில் பணிகள்.
- 2022-2023ஆம் நிதியாண்டில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.8.39 கோடி மதிப்பீட்டில் 8.58 கி.மீ நீளமுடைய 15 சாலைப் பணிகள்.

உட்புற சாலைகள்

- தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சிநிதி (TNUDF) திட்டத்தின் கீழ், 47.66 கி.மீ. நீளத்தில் ரூ.18.88 கோடி மதிப்பீட்டில் 279 உட்புறச் சாலைப் பணிகள்.
- சிறப்புசாலைகள் திட்டத்தின் கீழ், ரூ.79.40 கோடி மதிப்பீட்டில் 169.44 கி.மீ. நீளத்தில் 1,102 உட்புறச்சாலைப்பணிகள்.
- 2021-2022ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் 130.23 கி.மீ. நீளத்தில் ரூ.76.75 கோடி மதிப்பீட்டில் 821 உட்புற சாலைப் பணிகள் .
- மாநில பேரிடர் மேலாண்மை திட்டம் 2021-2022இன் கீழ், ரூ.59.33 கோடி மதிப்பீட்டில் 105.41 கி.மீ நீளமுடைய 610 உட்புற சாலைகள் பணிகள்.
- சிங்கார சென்னை 2.0 2022-2023 திட்டத்தின் கீழ் ரூ.10.46 கோடி மதிப்பீட்டில் 19.90 கி.மீ நீளமுடைய 150 சாலைப் பணிகள்.
- தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு 2021-2022 (Savings) திட்டத்தின் கீழ் ரூ.12.34 கோடி மதிப்பீட்டில் 21.59 கி.மீ. நீளத்தில் 126 உட்புற சாலைப் பணிகள்.
- தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு 2022-2023 திட்டத்தின் கீழ் ரூ.10.09 கோடி மதிப்பீட்டில் 19.69 கி.மீ. நீளத்தில் 103 உட்புற சாலைப் பணிகள்.

பாலங்கள் துறை

- ரூ.629.78 கோடி மதிப்பீட்டில் பாலம், மேம்பாலம், இரயில்வே மேம்பாலம், நடை மேம்பாலம், பாலம் புனரமைக்கும் பணி என 17 பணிகள்.
- ரூ.250.36 கோடி மதிப்பீட்டில் 3 இடங்களில் மேம்பாலம், உயர்மட்ட பாலம்.

சிறப்புத் திட்டங்கள் துறை

- படேல் நகரில் உள்ள சென்னை ஆரம்பப் பள்ளியில் ரூ.5.92 கோடி மதிப்பீட்டிலும், படேல் நகரில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளி ரூ.3 கோடி மதிப்பீட்டிலும், புதிய சந்தை பண்ணை சென்னை உயர்நிலைப் பள்ளி ரூ.5.13 கோடி மதிப்பீட்டிலும், மார்க்கெட்

தெருவில் உள்ள சென்னை பெண்கள் உயர்நிலைப்பள்ளி ரூ.1.06 கோடி மதிப்பீட்டிலும், பந்தர் கார்டன் தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி ரூ.4.37 கோடி மதிப்பீட்டிலும், குக்ஸ் சாலையில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி ரூ.6.5 கோடி மதிப்பீட்டிலும், புல்லா அவென்யூவில் உள்ள சென்னை பெண்கள் உயர்நிலைப்பள்ளி ரூ.3.86 கோடி மதிப்பீட்டிலும், நுங்கம்பாக்கம் சென்னை பெண்கள் உயர்நிலைப்பள்ளி ரூ.5.09 கோடி மதிப்பீட்டிலும், நுங்கம்பாக்கம் சென்னை ஆண்கள் உயர்நிலைப்பள்ளி ரூ.2.88 கோடி மதிப்பீட்டிலும், ஆழ்வார்பேட்டையில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி ரூ.2.06 கோடி மதிப்பீட்டிலும், எம்.ஜி.ஆர் நகரில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி ரூ.1.78 கோடி மதிப்பீட்டிலும், சைதாப்பேட்டை சென்னை ஆண்கள் உயர்நிலைப்பள்ளி ரூ.2.52 கோடி மதிப்பீட்டிலும், சைதாப்பேட்டை சென்னை பெண்கள் உயர்நிலைப்பள்ளி ரூ.3.95 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் கோட்டூர் சென்னை உயர்நிலைப்பள்ளியில் ரூ.6 கோடி மதிப்பீட்டிலும் கட்டுமானப் பணிகள் மற்றும் புதுப்பிக்கும் பணிகள்.

- விலங்கு பிறப்பு கட்டுப்பாடு (ABC) மையம் லாயிட்ஸ் காலனியில் ரூ.7.13 கோடி மதிப்பீட்டிலும், கண்ணம்மாப்பேட்டையில் ரூ.7.21 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் புளியந்தோப்பில் ரூ.5.38 கோடி மதிப்பீட்டிலும் கட்டுமானப் பணிகள்.
- விக்டோரியா பொது மண்டபம் ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பு, மற்றும் நில அதிர்வு மறு சீரமைக்கும் பணிகள்.
- பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை ரூ.4.79 கோடி மதிப்பீட்டில் செயல்பாட்டில் உள்ளது.
- 641 இருக்கைகள் 93 பள்ளிகளுக்கு பெண் குழந்தைகளுடன் கூடிய பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பாதுகாப்பான கழிவறைகளை ரூ.11.03 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கும் பணிகள்.
- ரூ.20 கோடி மதிப்பீட்டில் கஸ்தூரிபாய் நகர் எம்.ஆர்.டி.எஸ் இரயில் நிலையம் முதல் திருவான்மியூர் எம்.ஆர்.டி.எஸ் இரயில் நிலையம் வரை பக்கிங்ஹாம் கால்வாய் கரையில் மிதிவண்டி பாதை அமைத்து சுற்றுப்புறத்தை மேம்படுத்தும் பணிகள்.
- பெண்கள் சுகாதார திட்டத்திற்காக ரூ.6.52 கோடி மதிப்பில் 99 பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் 654 இருக்கைகள் கொண்ட பாதுகாப்பான கழிவறைகள்.
- சர்மா நகரில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில் ரூ.2.4 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கும் பணியும், மணிகண்டன் தெரு சென்னை உயர்நிலைப் பள்ளியில் ரூ.4.53 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டுமானம் மற்றும் புதுப்பிக்கும் பணியும், சுப்பராயன் தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கும் பணியும், நெசப்பாக்கம் சென்னை உயர்நிலைப் பள்ளியில் ரூ.3.4 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டுமானம் மற்றும் புதுப்பிக்கும் பணியும் மற்றும் காந்தி கிராமம் சென்னை நடுநிலைப் பள்ளியில் ரூ.2.06 கோடி மதிப்பீட்டிலும் புதுப்பிக்கும் பணியும் முடிவடைந்துள்ளது.

மின்துறை

- பெருநகர சென்னை மாநகராட்சி 2,91,415 மின் சேமிப்பு வகை எல்.இ.டி. தெருவிளக்குகளை பராமரித்து வருகிறது.
- சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.1.81 கோடி மதிப்பீட்டில் ரிப்பன் கட்டடத்தை மாறும் வண்ண விளக்குகளால் (RGB Dynamic lighting) ஒளிரூட்டும் பணிகள்.
- சென்னை ஸ்மார்ட் சிட்டி நிதியில் ரூ.2.02 கோடி மதிப்பீட்டில் வில்லிவாக்கம் குளம், மாறும் வண்ண விளக்குகளால் (Dynamic lighting) ஒளிரூட்டும் பணிகள்.
- பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 10 மண்டலங்களில் ஓராண்டிற்கு தனியார் மூலம் ரூ.26.77 கோடி மதிப்பீட்டில் தெரு விளக்கு பராமரிப்பு பணிகள்.
- பெண்களின் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட நிர்பயா திட்டத்தின் கீழ்,

ரூ.61.66 கோடி மதிப்பீட்டில் 10,569 புதிய தெருவிளக்கு கம்பங்கள் மற்றும் 10,662 எல்.இ.டி. தெருவிளக்குகள் அமைக்கும் பணிகள்.

பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்

பூங்காத்துறை

- ரூ.24.43 கோடி மதிப்பீட்டில் 27 பூங்காக்கள் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டு, 23 பூங்காக்கள் திறந்தவெளி நிலத்தில் அமைக்கப்பட்டு பணிகள்.
- பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களிலிருந்து 141 திறந்தவெளி நிலங்கள் / இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவ்விடங்களில் முதற்கட்டமாக, ரூ.16.79 கோடியில் 45 பூங்காக்கள், இரண்டாம் கட்டமாக, ரூ.5.76 கோடியில் 21பூங்காக்கள் அமைக்கும் பணிகள்.
- மூன்றாவது கட்டமாக 9.26 கோடியில் 54 பூங்காக்கள் மற்றும் 4.65 கோடியில் 21 பூங்காக்கள்.
- சென்னை மாநகரை பசுமையாக்கி அழகுபடுத்த குடியிருப்பு நல சங்கங்களுடன் இணைந்து 2,63,742 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

விளையாட்டுத்துறை

- ரூ.12.57 கோடி மதிப்பீட்டில் 17 விளையாட்டுத் திடல்கள் அமைக்க ஒப்புதல்.
- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களிலிருந்து, 51 திறந்த வெளி நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு முதற்கட்டமாக ரூ.4.76 கோடி மதிப்பீட்டில் 13 விளையாட்டு திடல்கள், இரண்டாம் கட்டமாக ரூ.5.70 கோடி மதிப்பீட்டில் 19 விளையாட்டு திடல்கள் அமைக்கும் பணிகள்.

சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை

- சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் மழைநீர் செல்லும் கூவம் மற்றும் அடையாறு ஆறுகளின் கரையிலுள்ள ஆக்கிரமிப்புகளை, நீர்வள ஆதாரத்துறை (பொதுப்பணித்துறை) மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்து அகற்றி அப்பகுதிவாழ் மக்களுக்கு மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றம் செய்து விட்டு ஆற்றின் இருபகுதி கரைகளிலும் நிரந்தர சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள்.

கூவம்

- கூவம் ஆற்றில் பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியான நேப்பியர் பாலம் முதல் மதுரவாயல் புறவழிச்சாலை மேம்பாலம் வரையிலான மொத்தம் 23.92 கி.மீ நீளத்திற்கு (இருபகுதி கரைகளையும் சேர்த்து) ரூ.45.68 கோடி மதிப்பீட்டில் நிரந்தர சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள்.
- கூவம் ஆற்றில் நேப்பியர் பாலம் முதல் மதுரவாயல் புறவழிச்சாலை மேம்பாலம் வரையிலான இரு கரைகளிலும் ரூ.7.13 கோடிக்கு 49,800 மரக்கன்றுகள் அமைக்கும் பணிகள்.

அடையாறு

- அடையாறு ஆற்றில் பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியான திரு.வி.க.பாலம் முதல் விமான நிலைய ஓடுதள பாலம் வரையுள்ள மொத்தம் 24.67 கி.மீ நீளத்திற்கு (இருபகுதி கரைகளையும் சேர்த்து) ரூ.66.16 கோடி மதிப்பீட்டில் நிரந்தர சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள்.
- அடையாறு ஆற்றில் திரு.வி.க.பாலம் முதல் கோட்டூர்புரம் பாலம் வரையிலும் மற்றும் விமான நிலைய ஓடுபாதை பாலம் முதல் நந்தம்பாக்கம் பாலம் வரை இரு கரைகளிலும் கோடிக்கு 63,456 மரக்கன்றுகள் அமைக்கும் பணிகள்.

கட்டடங்கள் துறை

- 8 இரவு காப்பகங்கள் ரூ.5.76 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

- 1 அங்கன்வாடி மையம் ரூ.0.30 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.
- 1 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையம் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.
- 1 மயான பூமி (எம்.ஜி.ஆர் நகர்) ரூ.3.26 கோடி மதிப்பீட்டில் LPG தகன மேடை முடிக்கப்பட்டுள்ளது.
- சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.6.38 கோடி மதிப்பீட்டில், 9 பள்ளிகட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டு, ரூ.2.07 கோடி மதிப்பீட்டில், 8 மயான பூமிகளில் திரவ பெட்ரோலிய வாயு அமைப்பை மேம்படுத்துதல் மற்றும் மாற்றுதல் பணி, ரூ.2.68 கோடி மதிப்பீட்டில், 6 மயான பூமிகளில் திரவ பெட்ரோலிய வாயு அமைப்பை மாற்றுதல் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- 13 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையம் ரூ.44.32 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
- 2 நகர்ப்புர சமூக சுகாதார மையம் ரூ.18.33 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
- 1 இரவு காப்பகம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
- 1 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேமிப்பு அறை ரூ.9.08 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
- கொடுங்கையூர் மயானத்தில் ரூ.6.30 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.
- கலை மற்றும் கலாச்சாரம் கட்டட பணி ரூ.2.41 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
- வார்டு அலுவலகம் கட்டும் பணி ரூ.0.67 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
- மீன் அங்காடி (லூப் சாலை) கட்டும் பணி ரூ.9.56 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
- 5 லாரி நிலையங்கள் மேம்படுத்தும் பணி ரூ.3.80 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
- சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.44.18 கோடி மதிப்பீட்டில், 14 பள்ளி கட்டடங்கள் கட்டும் பணி, ரூ.4.06 கோடி மதிப்பீட்டில், 2 மயானம் அமைக்கும் பணி, ரூ.13.47 கோடி மதிப்பீட்டில், 13 மயானங்களில் LPG அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

பொதுத்துறை

- கொரோனா நோய்த் தொற்றால் மரணமடைந்தவர்களின் வாரிசுதாரர்கள் / காணாமல் போன பணியாளர்கள் / மருத்துவ இயலாமை ஓய்வில் சென்ற அலுவலர்கள் / பணியாளர்களின் வாரிசுதாரர்கள் / திருமணமான பெண் வாரிசுதாரர்கள் என 208 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- பெருநகர சென்னை மாநகராட்சியில் முதல்வரின் முகவரித்துறையின் மூலம் 15,058 மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் 14,405 மனுக்கள் மீது.

வருவாய்த் துறை

- சொத்து வரி மற்றும் தொழில் வரி முறையே ரூ.2,203.33 கோடி மற்றும் ரூ.879.93 கோடி என மொத்தம் ரூ.3,083.16 கோடி வசூலிக்கப்பட்டது.
- பொதுமக்கள் சமுதாய நலக்கூடத்தை முன்பதிவு செய்ய உத்தேசித்துள்ள நாளில் ஏற்கெனவே முன்பதிவு செய்யப்பட்டுள்ளதா என்ற விவரத்தினை இணையதளம் மூலம் அறிந்து கொள்ளும் வசதியும், சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகங்களிலேயே முன்பதிவு மேற்கொள்ள வழிவகையும் செய்யப்பட்டுள்ளது.
- திரு.வி.க. நகரில் உள்ள சமுதாய நலக்கூடம் ஏழை, எளிய மக்கள் குறைந்த வாடகையில் குளிர்சாதன வசதி மற்றும் நவீன வசதிகளுடன் முன்பதிவு செய்து சுபநிகழ்ச்சிகள் நடத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖



சென்னை, அண்ணாசாலையில் விபத்துக்குள்ளானவரை முதலுதவி சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு ஏற்றிச்செல்வதை பார்வையிடல்- 21.10.2022



சேலம் மாவட்டத்தில், "கள ஆய்வில்" முதலமைச்சர் திட்டத்தின் கீழ், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அளித்த கோரிக்கை மனுக்களை பெறுதல் - 15.02.2023



ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்

மாண்புமிகு

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்

திரு. இ.பெரியசாமி

அவர்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

நிதி விடுவிப்பு

- ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதிக்குழு மானியமாக 2021-2022ஆம் நிதியாண்டில், ரூ.6,149.23 கோடியும் 2022-2023ஆம் நிதியாண்டில், ரூ.7436.80 கோடியும் விடுவிக்கப்பட்டு, 2022-2023ஆம் நிதியாண்டில், ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாயாக ரூ.1,003 கோடியும் விடுவிப்பு.
- 15ஆவது மத்திய நிதிக்குழு மானியம் 2021-2022ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.2666 கோடியும் 2022-2023ஆம் நிதியாண்டில், ரூ.2761 கோடியும் விடுவிப்பு.

"நம்ம கிராம சபை" கைபேசி செயலி

- கிராம சபை நிகழ்வுகளை கண்காணித்திட "நம்ம கிராம சபை" என்கிற புதிய கைபேசி செயலி அறிமுகம்.

ஊரக நூலகங்களை புதுப்பித்தல்

- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட அனைத்து நூலகங்களும் மூன்றாண்டுகளுக்குள்



படிப்படியாக முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பயன்பாட்டிற்கு உகந்த கட்டமைப்புகளுடன் புனரமைக்க 2021-2022ஆம் ஆண்டில் 4,116 நூலகங்கள் ரூ.91.75 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்தும் புதுப்பிப்பு.

❖ 2022-2023ஆம் ஆண்டில் 3,808 நூலகங்கள் ரூ.84.27 கோடி மதிப்பீட்டில் புனரமைக்க எடுத்துக்கொள்ளப்பட்டு, 487 நூலகங்கள் புனரமைக்கப்பட்டு,மீதமுள்ளபணிகள் நடைபெற்று வருகின்றன.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – II

❖ 2021-2022ஆம்ஆண்டில்2,657கிராமஊராட்சிகளில் ரூ.1,455 கோடி மதிப்பீட்டில் 21,972 பணிகள் எடுக்கப்பட்டு 11,523 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ளபணிகள்முன்னேற்றநிலையில்உள்ளன.

❖ 2022-2023ஆம் ஆண்டில் 2544 கிராம ஊராட்சிகளில் ரூ.1155.20 கோடி மதிப்பீட்டில் 16,019 பணிகள் எடுக்கப்பட்டு 4,343 பணிகள் முடிக்கப்பட்டு. மீதமுள்ள பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

பெரியார் நினைவு சமத்துவபுரம்

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 24.06.2021 அன்று ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்தின் போது தமிழகத்தில் கட்டப்பட்ட 238சமத்துவபுரங்களும்சீரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, முதற்கட்டமாக 149 சமத்துவபுரங்களை 2021-2022ஆம் ஆண்டில் சீரமைப்பதற்காக ரூ.190.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

❖ இரண்டாம் கட்டமாக 2022-2023ஆம் ஆண்டிற்கு மீதமுள்ள 88 சமத்துவபுரங்களை சீரமைக்க ரூ.67.01 கோடி நிதி ஒதுக்கீடு.

முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

❖ ஊரக பகுதிகளில் 10,000 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகள் மேம்பாடு செய்ய ரூ.4,000 கோடி நிதி ஒதுக்கீடு.

குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

❖ முதன் முறையாக ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பழுதடைந்த கட்டடங்களுக்கு பதிலாக 5,483 புதிய வகுப்பறைகள் ரூ.823 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு அனுமதி.

சாலைகள், பாலங்கள், பள்ளிகள் மற்றும் அடிப்படை வசதிகள்

❖ 10,949.59 கி.மீ. நீளமுள்ள 6,229 சாலைப்பணிகள் மற்றும் 83 பாலங்கள் ரூ.4,308.38 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத்திட்டம்

❖ ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு 2,124 அடிப்படை வசதி பணிகள் ரூ.136.46 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம்

❖ ஊரகப்பகுதிகளில் வாழும் மக்களின் மேம்பாட்டிற்காக 664 உட்கட்டமைப்பு பணிகள் ரூ.220.73 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

❖ 56 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 10 எரிவாயு தகன மேடை கட்ட ரூ.244.30 கோடி நிதி ஒதுக்கீடு.

❖ 135 உயர்மட்ட பாலங்கள் கட்ட ரூ.509.47 கோடி நிதி ஒதுக்கீடு.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)

❖ தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசால் பிரதம மந்திரி ஊரக குடியிருப்பு திட்டத்தின் கீழ், 8,17,439 வீடுகள் ஒதுக்கீடு.

❖ 2016-2017 முதல் 06.05.2021 வரையிலான காலகட்டத்தில் 2,89,730 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 2,07.468 வீடுகள் 07.05.2021 முதல் 20.03.2023 வரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது இதில் 07.05.2021 முதல் 06.11.2022 வரை 1,54,552 வீடுகளும், 07.11.2022 முதல் 20.03.2023 வரை 52,916 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளின்

கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன, நிலுவையில் உள்ள வீடுகள் 31.12.2023 க்குள் கட்டி முடிக்கப்படும்,

- ஒன்றிய அரசால் விடுவிக்கப்படாமல் இருந்த தொகையில் ரூ.768.10 கோடி மற்றும் அதற்கு இணையான மாநில அரசின் பங்கு தொகை ரூ.512.06 கோடியும் சேர்த்து ரூ.1,280.16 கோடி, ஜனவரி 2022 மற்றும் மார்ச் 2022இல் விடுவிக்கப்பட்டுள்ளது.
- இந்நிதியாண்டில் ஒன்றிய அரசு ரூ.1495.74 கோடியும் அதற்கு இணையாக மாநில அரசின் பங்கு தொகை ரூ.997.16 கோடியும் சேர்த்து ரூ.2492.90 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.
- ரூ.3,773.06 கோடியில் இதுவரை திட்ட பயன்பாட்டிற்காக ரூ.2,743.05 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- காங்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக மார்ச் 2022இல், ரூ.605 கோடி மற்றும் பிப்ரவரி 2023இல், ரூ.555.99 கோடியும் மாநில அரசால் விடுவிக்கப்பட்டது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

- 2021-2022ஆம் ஆண்டில் 67.76 இலட்சம் குடும்பங்களில் உள்ள 79.80 இலட்சம் பயனாளிகளுக்கு வேலை வழங்கியதன் மூலம் 31.97 கோடி மனித சக்தி நாட்கள் எய்தப்பட்டுள்ளது.
- 2022-2023 ஆம் ஆண்டில் 65.17 இலட்சம் குடும்பங்களில் உள்ள 75.02 இலட்சம் பயனாளிகளுக்கு வேலை வழங்கியதன் மூலம் 31.99 கோடி மனித சக்தி நாட்கள் எய்தப்பட்டுள்ளது.
- 86.36 சதவிகிதம் மகளிருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு, தேசிய சராசரியான 57.35%-ஐ விட அதிகமாகும்.மேலும்30%வேலைவாய்ப்புபட்டியலின மற்றும்பழங்குடியினருக்குவழங்கப்பட்டுவருகிறது.
- 1,28,707 மாற்றுதிறனாளிகளுக்கும் வேலை வழங்கப்பட்டுள்ளது.
- திறன் சாரா தொழிலாளர்களுக்கு ரூ.14,023.48 கோடி ஊதியமாகவும், ரூ.5,357.94 கோடி பொருட்கூறு மற்றும் திறன் சார்ந்த தொழிலாளர்களுக்கான ஊதியமாகவும், மொத்தம் ரூ.19,381.42 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- 73.95% இயற்கை வள மேலாண்மை பணிகளுக்கும் 78.12% விவசாயம் மற்றும் அதனை சார்ந்த பணிகளுக்கும் செலவிடப்பட்டுள்ளது.
- 100% தொழிலாளர்களுக்கு ஊதியம் குறித்த காலமான 15 நாட்களுக்குள் வழங்கப்பட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டம் (ஊரகம்)

- மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் 1997-1998ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நமக்கு நாமே திட்டமானது புதிய வழிகாட்டு நெறிமுறைகளுடன் 2021-2022ஆம் ஆண்டு மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தினை செயல்படுத்த தலா ரூ.100 கோடிக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு 2,772 பணிகள் எடுக்கப்பட்டு 1,749 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

- 2021-2022ஆம் நிதியாண்டில் ஒரு தொகுதிக்கு ரூ.3 கோடி வீதம் ரூ.702 கோடி ஒதுக்கப்பட்டு 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் விடுவிக்கப்பட்டது.2022-2023ஆம் ஆண்டு மொத்த ஒதுக்கீடான ரூ.702 கோடியில் 50% நிதி இரண்டாம் தவணையாக ரூ.351 கோடி 234 சட்டமன்ற தொகுதிகளுக்கு விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2021-2022 மற்றும் 2022-2023ஆம் நிதி ஆண்டில் 15,673 பணிகள் எடுக்கப்பட்டு 7,411 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

- 2,312 பணிகள் எடுக்கப்பட்டு 946 பணிகள் முடிக்கப்பட்டு,மீதமுள்ளபணிகள்முன்னேற்றத்தில் உள்ளன.

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)

- ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாப்பான கழிப்பறை வசதிகள் பெரும் பொருட்டு, 96,541 குடும்பங்களுக்கு கழிப்பறை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் பிற குடியிருப்புகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு கழிப்பறை கட்ட போதிய இட வசதி இல்லாத காரணத்தினால், 2,552 சமூக சுகாதார வளாகங்கள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது.

ஜல் ஜீவன் இயக்கம்

- ரூ.2,558.59 கோடி மதிப்பீட்டில் 18,510 குடிநீர் பணிகள் எடுக்கப்பட்டு ரூ.1595.42 கோடி மதிப்பீட்டில் 15,427 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.
- கடந்த இரண்டாண்டுகளில் 40,94,645 வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 1,25,51,754 ஊரக வீடுகளில் 79,00,647 வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம்

- இடைநிரவல் நிரப்பு நிதி மற்றும் பல்வேறு திட்டங்களின் நிதியினை ஒருங்கிணைத்து ரூ.269 கோடி மதிப்பீட்டில் குடிநீர் விநியோகம், சாலை இணைப்பு, பொருளாதார நடவடிக்கைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள், மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளுக்கான உட்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் உட்பட 649 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி நிருவாகம்

- ஊராட்சித் தலைவர்களுக்கு மாதாந்திர மதிப்பூதியம் ரூ.1,000 லிருந்து ரூ.2,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- 80 புதிய ஊராட்சி மன்ற அலுவலகங்கள் கட்டுவதற்கு ஒரு கட்டடத்திற்கு ரூ.23.64 இலட்சம் வீதம் அனுமதி வழங்கப்பட்டு, ஊராட்சியின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- 648 கிராம ஊராட்சிகளில், பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் கிராம ஊராட்சி அளவில் ஒருங்கிணைக்க கிராம செயலகக்கட்டடங்கள் ரூ.260 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.
- 15ஆவது ஒன்றிய நிதி ஆணையத்தின் கீழ் பல்வேறு வகையான 245 புதிய மருத்துவக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது.
- கிராம ஊராட்சிகளில் சிறப்பான சேவைகள் உறுதிசெய்திடும் விதமாக மேம்பட்ட தகவல் தொழில்நுட்பக் கட்டுமானத்துடன் புதிய கணினி உபகரணங்கள் இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.
- அனைத்து கிராம ஊராட்சிகளிலும் இணைய வரி முனையம் மூலமாக சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, தொழில் உரிமம் மற்றும் வரியல்லா வருவாய் ஆகியவற்றை எளிதில் பெறுவதற்கு இணைய சேவை துவங்கப்பட்டுள்ளது. மேலும், மனைப்பிரிவு அனுமதி, கட்டிட அனுமதி மற்றும் தொழிற்சாலை நிறுவுதல் அனுமதி போன்ற சேவைகளை இணையதள வாயிலாக விரைவில் செயல்படுத்தப்படும்.
- ஆண்டிற்கு 4 கிராமசபைகள் கட்டாயமாக நடத்துவதன் வரம்பை 6 ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டிற்கு கூடுதலாக உலக தண்ணீர் தினம் (மார்ச் 22) மற்றும் உள்ளாட்சிகள் தினம் (நவம்பர் 1) ஆகிய இரண்டு நாட்களில் கிராமசபைகள் நடத்தப்படும்.
- கிராம ஊராட்சிகளுக்கு நிருவாக அனுமதி அளிக்கும் வரம்பு ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாகவும், வட்டார ஊராட்சிகளுக்கு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாகவும், மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு அமர்வுத்தொகை 5 மடங்கு முதல் 10 மடங்கு வரை உயர்வு.
- நவம்பர் 1 ஆம் நாளினை உள்ளாட்சிகள் தினமாகக் கொண்டாடிட அரசு ஆணை பிறப்பித்து அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராமசபைக் கூட்டங்கள் சிறப்பாக நடத்திட உத்தரவு.

- மாநிலத்தின் சிறப்பாக செயல்புரியும் கிராம ஊராட்சிகளுக்கு உரிய அங்கீகாரத்தினை வழங்கும் பொருட்டு "உத்தமர் காந்தி விருது" மீண்டும் நிறுவப்பட்டு, ரூ.10 இலட்சத்திற்கான ஊக்கத்தொகையுடன் மாவட்டத்திற்கு ஒரு கிராம ஊராட்சி வீதம் 37 கிராம ஊராட்சிகளுக்கு இவ்விருது வழங்கப்படும்.

- சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படும் தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் விதமாக, சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படும் நிறுவனங்களுக்கான விருதினை ஏற்படுத்தியுள்ளது. இதன்மூலம் தனியார் நிறுவனங்கள் தங்களுடைய நிதியினையும், தொழில்நுட்பங்களையும் ஊராட்சிகளுக்கு அளித்து ஊரக வளர்ச்சிக்கு உறுதுணை புரிய ஊக்கமளிக்கப்பட்டுள்ளது.

- ஊராட்சிகளுக்கான மாநில நிதிக்குழு மானியம் மற்றும் சொந்தவருவாய் இனங்களை பராமரிக்க மாநில அளவிலான ஒற்றை மையக்கணக்கு மூலம் சிறந்த நிதி நிருவாகத்தினை கிராம ஊராட்சிகளில் ஏற்படுத்தி, வேலைப் பளுவினை குறைத்து கணக்குகளை எளிதாக பராமரித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- 388 ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களும் பயன்படுத்திடும் வகையில் புதிய வாகனங்களை வழங்க நடவடிக்கை.

- ஊரகப் பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள சுகாதாரப் பணியாளர்களின் நலனுக்கான பணிகளை மேற்கொள்ள தூய்மை பணியாளர் நலவாரியத்திற்கு ரூ-5 கோடி நிதி.

- தெருவிளக்குகள் பராமரித்தலில் தானியங்கி முறையினை புகுத்திடும் வகையில் இண்டர்நெட் ஆப் திங்ஸ் (Internet of Things) முறையில் செயல்படுத்திட, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மாம்பாக்கம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கருங்காடு ஆகிய இரண்டு கிராம ஊராட்சிகளில் சோதனை முயற்சி.

- ஆதிதிராவிடர், பழங்குடியினர், பெண்கள் மற்றும் விளிம்புநிலை சமுதாயத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு உரிய வழிகாட்டுதல், கலந்துரையாடல்கள் மற்றும் கண்காணிப்பு மூலமாக ஆகஸ்ட் 15 மற்றும் ஜனவரி 26 ஆகிய நாட்களில் தேசியக்கொடி ஏற்ற உரிய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது குறித்த புகார்கள் தெரிவிக்க குறைதீர்வு தொலைபேசி எண்களாக அனைத்து மாவட்டங்களின் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)களின் கைபேசி எண்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களுக்கு வழிகாட்டும் வழிமுறையாக '155340' என்ற எண்ணுடன் ஒரு உதவி மையம் (Help Desk) இயக்குநரகத்தில் 24X7 என்ற வகையில் முழுநேரம் செயல்படும் வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

"நமது பொருட்களை உலகம் முழுவதும் கொண்டு செல்வோம்,
உலக நாடுகளைத் தமிழ்நாடு நோக்கி வர வைப்போம்.
ஏற்றுமதியில் ஏற்றம் காண்போம்,
முன்னேற்றப் பாதையிலேயே எப்போதும் நடப்போம்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு
அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துதல் - 13.04.2023



முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 99ஆவது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு
அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துதல் - 03.06.2022



தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர்கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

மாண்புமிகு
உயர்கல்வித்துறை அமைச்சர்
திரு. **க.பொன்முடி** அவர்கள்

உயர்கல்வித்துறை

- 16,647 பொறியியல் கல்லூரிகளில் அரசுப் பள்ளியில் பயின்ற மாணவர்கள், 7.5 விழுக்காடு சிறப்பு உள் ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கை. ரூ.151.73 கோடி நிதி ஒதுக்கீட்டில், இம்மாணவர்களுக்கான கல்விக்கட்டணம், விடுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் ஆகியவற்றை அரசே ஏற்பு.
- அரசுக் கல்லூரிகளில் புதியதாக நியமனம் செய்யப்படவுள்ள 4,000 உதவிப் பேராசிரியர்களைத் தெரிவு செய்யும் பணிக்குச் சிறிது கால அவகாசம் தேவைப்படும் என்பதால், மாணாக்கர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, உதவிப் பேராசிரியர் பணியிடங்களில் காலியாக உள்ள 1,895 பணியிடங்களை, மாதாந்திரத் தொகுப்பூதியம் ரூ.20,000/- என்ற அடிப்படையில், 11 மாத காலத்திற்கு கௌரவ விரிவுரையாளர்களைக் கொண்டு நிரப்ப முடிவு செய்யப்பட்டது. கௌரவ விரிவுரையாளர்களை நியமிப்பதற்கான நடைமுறை மாற்றம் செய்யப்பட்டு,





இணைய வழியில் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. நியாயமான மற்றும் வெளிப்படையான தெரிவு முறையைப் பின்பற்றித் தகுதியான விரிவுரையாளர்களைத் தேர்வு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டு இக்குழுவினால் கௌரவ விரிவுரையாளர்களை தெரிவு செய்யும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு, இதுவரை அரசு கல்லூரிகளில் 1,772 கௌரவ விரிவுரையாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

- ஈரோடு மாவட்டம், பெருந்துறை சாலை மற்றும் போக்குவரத்து தொழில்நுட்பக் கல்லூரி அரசு பொறியியல் கல்லூரியாக மாற்றம்.
- முதுநிலை பட்டமேற்படிப்பு மாணாக்கர்கள் படிப்பில் கவனம் செலுத்த ஊக்குவிப்பதற்கான ஊக்கத்தொகை பெறும் மாணவர் எண்ணிக்கை 1,200ஆக அதிகரிப்பு.
- அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழக துறைகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் முதுநிலைப் பட்ட மேற்படிப்பு பயிலும் 1,200 மாணாக்கர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.6,000 உதவித்தொகை வழங்க ரூ.8.64 கோடி நிதி ஒதுக்கீடு.
- 10 அரசு பொறியியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு ஜெர்மனி, பிரென்ச், ஜப்பானிய மற்றும் சீன மொழிகள் கற்பித்தல்.
- வணிகப் பயிற்சியில் பட்டயப் படிப்பு / நவீன அலுவலக நடைமுறை பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்ற 84 மாணாக்கர்களுக்கு, பி.காம். பட்டப்படிப்பில் இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை.
- 50 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் ரூ.10 கோடி செலவில் திறன்மிகு வகுப்பறைகள்.
- அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில், அமைப்பியல் மற்றும் இயந்திரவியல் துறைகளில் தமிழ் வழியில் பட்டயப்படிப்பு அறிமுகம்.
- IIT, IIM, IISc மற்றும் பல உயர்கல்வி நிறுவனங்களில், அரசுப் பள்ளி மாணாக்கர்கள் பயிலுவதற்கான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் போன்றவற்றை அரசே ஏற்பு.
- மாணவியர்களின் சேர்க்கை விகிதத்தினை அதிகரிப்பதற்கு, மகளிருக்கான பட்டயம் மற்றும் குறுகிய காலச்சான்றிதழ் படிப்புகள் துவக்கம்.
- சுயதொழில் தொடங்குவதை ஊக்குவிக்கச் சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடி மண்டலங்களில் மையங்கள் (Hubs) நிறுவப்பட்டு தொழில் முனைவு மேம்பாடு மற்றும் புத்தாக்கப் பயிற்சி.
- ரூ. 42.12 இலட்சம் செலவில் 10 அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் 500 மாணாக்கர்களுக்கு, CAT/ GMAT / GRE / IELTS மற்றும் TOEFL போன்ற போட்டித் தேர்வுகளுக்கு, தீவிர பயிற்சி.
- பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு மாணாக்கர்களுக்கு, ரூ.3 கோடி செலவில், 3,000 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு குறுகிய கால திறன்பயிற்சி சான்றிதழ்.
- கோயம்புத்தூர், சேலம், காரைக்குடி மற்றும் வேலூர் அரசு பொறியியல் கல்லூரிகளில் ரூ.34.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் கூடுதல் விடுதிக் கட்டடங்கள்.
- ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் மேலாண்மை அமைப்பின் தேர்வு மற்றும் அறிமுகம்



போன்றவற்றிற்காகவும், 2021-2022ஆம் ஆண்டில் ரூ.4.09 கோடி நிதி ஒப்பளிப்பு.

- அண்ணா பல்கலைக்கழகத்தின் மெட்ராஸ் தொழில்நுட்பப் பயிலகத்துடன் இணைந்து "தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம்".
- புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1,000 உதவித்தொகையாக கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,27,767 மாணவிகள், அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளில் 4,806 மாணவிகள், அரசு பொறியியல் கல்லூரிகளில் 12,711 மாணவிகள் பயன்.
- ரூ.50 கோடி நிதி ஒதுக்கீட்டில், 2023-2024ஆம் ஆண்டு முதல், முதலமைச்சரின் ஆராய்ச்சி மாணியத் திட்டம் அறிமுகம்.
- தமிழக முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ், 120 ஆராய்ச்சி மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உதவித்தொகை ரூ.5,000/- முதுநிலை மாணாக்கர்களுக்கு 2024-2025ஆம் ஆண்டு வரையும், எம்.பில். மாணாக்கர்களுக்கு 2023-2024ஆம் ஆண்டு வரையும் நீட்டிக்கப்படும்.
- திருச்சுழி, திருக்கோயிலூர், தாளவாடி, ஒட்டன்சத்திரம், மானூர், தாராபுரம், ஏரியூர், ஆலங்குடி, சேர்க்காடு மற்றும் கூத்தாநல்லூர் (மகளிர்) ஆகிய 20 இடங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.
- மணப்பாறை, செஞ்சி, தளி, திருமயம், அந்தியூர், அரவக்குறிச்சி, திருக்காட்டுப்பள்ளி, ரெட்டியார் சத்திரம், வடலூர், திருப்பெரும்புதூர் கல்லூரிகள் ஒவ்வொன்றுக்கும் தலா 17 ஆசிரியர் மற்றும் 17 ஆசிரியரல்லாப் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, ரூ.52.05 கோடி ஒதுக்கீடு.
- புதிய 10 அரசுக் கலைக் கல்லூரிகளில் ரூ.93 இலட்சம் செலவில் மின்னணு நூலகங்கள்.
- ரூ.10 கோடி செலவில் 50 அரசு பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரிகளில் திறன்மிகு வகுப்பறைகள்.
- 17 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் செயல்படும் மின்னணு நூலகங்களை ரூ.85 இலட்சம் செலவில் தொழில்நுட்பத்துடன் மேம்படுத்த ஆணை.
- ரூ.116.64 கோடி நிதி ஒதுக்கீட்டில் சங்கரன்கோயில், ஆலங்குளம், ஜம்புகுளம், வானூர், காட்டுமன்னார் கோவில், இராமேஸ்வரம், ரிஷிவந்தியம், புலியங்குளம், தரகம்பட்டி, திருவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு நிரந்தரக் கட்டடம்.
- 2021-2022 மற்றும் 2022-2023 ஆகிய ஆண்டுகளில் புதியதாகத் தொடங்கப்பட்ட 20 அரசுக் கல்லூரிகளில் தற்போது 10 அரசுக் கல்லூரிகளுக்கு நிரந்தரக் கட்டடங்கள் கட்ட ரூ.128.17 கோடி நிதி ஒப்பளிப்பு.
- பெருந்தலைவர் காமராஜர் கல்லூரிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 55 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு ரூ.100 கோடி நிதி ஒப்பளிப்பு. சென்னை பாரதி மகளிர் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் நூலகங்கள் கட்டுவதற்கு, ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு.



- ரூ.16.60 கோடி நிதி ஒதுக்கீட்டில், 2,500 அரசு பொறியியல் கல்லூரி மாணாக்கர்கள் மற்றும் 7,500 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணாக்கர்களுக்கு 25 நாட்களுக்கு தொழிலக உட்பயிற்சி அளிப்பதற்கு, ஒரு மாணாக்கருக்கு ரூ.16,600/- வீதம் நிதியுதவி.
- 20 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முனைவர் பட்ட ஆய்வுப் படிப்புகள் துவக்கம்.
- நான் முதல்வன் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து, தொழில் சார்ந்த திறன்களை ஊக்குவிப்பதற்காக புதிய பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்தப்பட்டு, 4,60,734 பொறியியல் மாணவர்களும், 8,11,879 கலை மற்றும் அறிவியல் மாணவர்கள் பதிவு. 12,582 பொறியியல் ஆசிரியர்களும், 9,183 கலை மற்றும் அறிவியல் ஆசிரியர்களும் பயிற்சி.
- ரூ.2 கோடி செலவில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் ஒருங்கிணைந்து 100 பாடப்புத்தகங்கள் தமிழில் மொழிபெயர்க்க ஆணை.
- ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மண்டல அறிவியல் மையம் மற்றும் திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையத்தில் பள்ளி மாணவர்கள் பயன்பாட்டிற்காக நிறுவப்பட்டுள்ள புத்தாக்க மையங்கள்.
- ரூ.160.11 இலட்சம் செலவில் பொறியியல் மற்றும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களின் படைப்பாற்றல் மற்றும் தனித்திறன்களை மேம்படுத்த 5 மண்டலங்களில் செய்கலைஞர் ஆய்வுக்கூடம்.
- இந்தியாவிலேயே அதிக அளவில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் 2,631 மாற்றுத்திறனாளி மாணவர்கள் பட்டம் பெற்றுள்ளனர்.
- சென்னை, மாநிலக் கல்லூரியில், 2022-2023ஆம் கல்வியாண்டில் 22 செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணாக்கர்கள் முதுகலை வணிகவியல் பாடப்பிரிவில் சேர்க்கை.
- ரூ.209.14 கோடி ஒதுக்கீட்டில் 17 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு புதியதாக நிரந்தரக் கட்டடம்.
- 3 ஆண்டுகளாக நடத்தப் பெறாமல் இருந்த பொது இடமாறுதல் கலந்தாய்வு 199 பேராசிரியர்களுக்கு இடமாறுதல்.
- 2015ஆம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்ட 959 உதவிப் பேராசிரியர்களுக்கு பணிவரன்முறை.
- 4,000 உதவிப்பேராசிரியர் பணியிடங்களை நிரப்பிட ஆணை.
- ரூ.12 கோடி மதிப்பீட்டில், 150 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளுக்கு இணைய வசதியை வழங்க நடவடிக்கை.
- தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் பயிலும் சிறைக்கைதிகள் மற்றும் திருநங்கைகளுக்கு கல்வி கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு.
- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மயிலாடுதுறை, சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் 4 மையங்கள் உருவாக்கம். இப்பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் இருக்கையும் நிறுவப்பட்டுள்ளது.

❖ ❖ ❖



பொதுப்பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

மாண்புமிகு
பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு. எ.வ.வேலு அவர்கள்

- மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கவளாகத்தில் ரூ.114 கோடி மதிப்பீட்டில், உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய கலைஞர் நினைவு நூலகக் கட்டடம் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. விரைவில் உட்புற பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.
- இந்திய சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டினை நினைவுகூறும் வகையில், ரூ. 1.95 கோடி மதிப்பீட்டில், சென்னையில் நினைவுத்தூண் ஒன்று பொதுப்பணித் துறையினரால் நிறுவப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.08.2021 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- ரூ.39 கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குச் சென்னை காமராஜர் சாலையில் நினைவு மண்டபம் கட்டும் பணிகள்.



- ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு சென்னை அண்ணா சாலையில், அரசினர் தோட்டம், ஓமந்தூரார் மருத்துவ வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கும் பணி. முடிவுற்று திறந்து வைக்கப்பட்டது.
- மதுரை, கீழ்க்கரை கிராமத்தில் ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டுமானப் பணிகள் ரூ. 44.06 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.
- ரூ.1.95 கோடியில் இந்தியச் சுதந்திரத்தின் 75 ஆவது ஆண்டினை நினைவுகூறும் வகையில் சென்னையில் நினைவுத் தூண்.
- ரூ.12.69 கோடியில் சென்னை பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையை 300 படுக்கைகள் கொண்ட கோவிட் மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் பணிகள்.
- ரூ.37.82 கோடி மதிப்பீட்டில் சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகக் கட்டடம் புனரமைத்தல்.
- கோவிட்-19 நோய்த்தொற்று அலைகளை எதிர்கொள்ளத் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் ஆரம்பச் சுகாதார மையங்களில் 14,683 எண்ணிக்கையிலான கூடுதல் ஆக்ஸிஜன் இணைப்புகளுடன் கூடிய படுக்கை வசதிகள்.
- தமிழ்நாடு கோவிட் அவசர சிகிச்சை தொகுப்பு 2 திட்டத்தின்கீழ் ரூ.60.784 கோடி செலவில் 50 அரசு மருத்துவமனைகள், 37 மாவட்ட தலைமையிட மருத்துவமனைகள் மற்றும் 116 மாவட்ட துணை மருத்துவமனைகளில் 2,096 தீவிர சிகிச்சைப் பிரிவு ஆக்சிஜன் படுக்கை வசதிகள்.
- ரூ.230 கோடி மதிப்பீட்டில் சென்னை, கிண்டி கிங் நோய்த்தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டும் பணி.
- தொழிலக தரத்திற்கு இணையாக 71 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களை ரூ.264.83 கோடி மதிப்பீட்டில் தொழில்நுட்ப மையங்களாக மாறுதல் செய்வதற்கான பணிகளில், 69 தொழிற்பயிற்சி நிறுவனக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகக் கட்டடத்தில் ரூ.37.82 கோடி மதிப்பீட்டு செலவில் புனரமைத்தல் மற்றும் சீரமைக்கும் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, நூலகம் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.
- ரூ.57.46 கோடி மதிப்பீட்டில் நபார்டு ஆர்.ஐ.டி.எப். திட்டத்தின் கீழ், கால்நடை மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்த 88 புதிய கால்நடை மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணிகள்.
- ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் திரு.கி.ராஜநாராயணன் அவர்களுக்கு நினைவகம்.
- பேராசிரியர் K. அன்பழகன் அவர்களின் நூறாவது பிறந்த வருடத்தினை நினைவுகூறும் வகையில், சென்னை, நுங்கம்பாக்கத்தில் டி.பி.ஐ.வளாகத்தில் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் அலங்கார வளைவுகட்டும் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலைமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் ரூ.2.48 கோடி மதிப்பீட்டில் திரு.அயோத்திதாச பண்டிதர் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்தல், தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள அதியமான் கோட்டையினை ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் மற்றும் சென்னை, காந்திமண்டபம் மற்றும் அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராஜர் நினைவு மண்டபம், பெரியவர் பக்தவச்சலம் நினைவு மண்டபம் ஆகியவற்றை ரூ.3.36 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.





- கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியில் திரு.வி.கே.பழனிசாமி கவுண்டர், திரு. சி.சுப்பிரமணியம் மற்றும் பொள்ளாச்சி திரு.நா.மகாலிங்கம் ஆகியோருக்கு ரூ. 4.28 கோடி மதிப்பீட்டில் கூட்ட அரங்கம், அருங்காட்சியக அறை மற்றும் சிலை அமைக்கும் பணிகள், திருப்பூர் மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் தளிபாளையக்காரர் மலையாண்டி வெங்கிடு பதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களுக்கு ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கும் பணிகள், ஈரோடு மாவட்டம், பவானிசாகரில், தியாகி அய்யா திரு. M.A. ஈஸ்வரன் அவர்களுக்கு ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கும் பணிகள் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் ராவ்பகதூர் குரூஸ்பர்னாந்தீஸ் அவர்களுக்கு மணிமண்டபம் ரூ.77 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- நபார்டு ஆர்.ஐ.டி.எப், XXVIII திட்டத்தின்கீழ் ரூ.25 கோடி மதிப்பீட்டில் 37 புதிய கால்நடை மருத்துவ கட்டடங்கள் கட்டுமான பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் வேலூரில் பெண்களுக்கான புதிய ஆதிதிராவிடர் கல்லூரி விடுதிக் கட்டடம், விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம் மரவனேரி ஆகிய இடங்களில் ஆண்களுக்கான புதிய ஆதிதிராவிடர் கல்லூரி விடுதிக் கட்டடம் கட்டும் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

- சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள எம்.சி.ராஜா விடுதி வளாகத்தில் ரூ.44.50 கோடி மதிப்பீட்டில் புதிய விடுதிக் கட்டடம் கட்டும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- இராமநாதபுரம் மாவட்டம் செட்டிநாடு கால்நடை பண்ணையில் ரூ.14.74 கோடி மதிப்பீட்டில் நாட்டுக் கோழி இனப்பெருக்க பண்ணை கோழிக் குஞ்சுபொரிப்பகம் மற்றும் தீவன ஆலை ஆகியவைநிறுவும்பணிகள்மற்றும்திருநெல்வேலி மாவட்டம், அபிசேகப்பட்டியில் ரூ.19.52 கோடி மதிப்பீட்டில் மாவட்ட கால்நடைப் பூர்விக வளர்ப்பு பண்ணை மற்றும் குஞ்சு பொரிப்பகத்தை நிறுவுதல் பணிகள் நடைப்பெற்று வருகின்றன.
- உதகை, மாவட்ட கால்நடை பண்ணை குருத்துக்குளியில் முகப்பு வாயிலிலிருந்து தனிமைப்படுத்தும் நிலையத்திற்கு (Quarantine Shed) ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- நபார்டு நிதி உதவித் திட்டத்தின் கீழ், அனுமதிக்கப்பட்ட அரசு உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான ரூ.50.09 கோடி மதிப்பீட்டிலான 92 திட்டங்களில், கள்ளர் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், 47 திட்டங்கள் முடிக்கப்பட்டு, 37 திட்டங்கள் நடைபெற்று வருகின்றன, 8திட்டங்கள் தொடங்கப்படவுள்ளன.
- தென்காசி மாவட்டத்தில் சங்கரன்கோவிலில் ரூ.3.31 கோடி மதிப்பீட்டில் கல்லூரி மாணவர்களுக்கான விடுதிக் கட்டடங்கள் மற்றும் சோலைச்சேரியில் ரூ.3.29 கோடி மதிப்பீட்டில் கல்லூரிப் பெண்களுக்கான பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் விடுதிக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- 7 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் கல்லூரி மற்றும் விடுதி கட்டடங்களுக்கு ரூ. 1.01 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்புச் சுவர் அமைப்பதற்கான பணிகளில் 5 பணிகள் முடிக்கப்பட்டு 2 பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.
- இராமநாதபுரம் மாவட்டத்தில், கோவிலங்குளத்தில் ரூ.4.05 கோடி மதிப்பீட்டில் பள்ளி மாணவர்களுக்கான சீர்மரபினர் விடுதிக் கட்டடங்கள் மற்றும் நயினார்கோவிலில் மாணவிகளுக்கான ரூ.3.36 கோடி மதிப்பீட்டில் பள்ளி மாணவர்களுக்கான சீர்மரபினர் விடுதிக் கட்டடங்கள்கட்டும்பணிகள்துவங்கப்படஉள்ளன.
- பெரம்பூர், ஈரோடு, தருமபுரி மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள வேப்பந்தட்டை, திட்டமலை, பாலக்கோடு, காரைக்குடி ஆகிய இடங்களில் மொத்தம் ரூ.22.21 கோடி மதிப்பீட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி பெண்கள் விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.
- திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டத்தில் உள்ள மன்னவனூர் கிராமத்தில் தேசிய அளவிலான கூட்டுறவு கல்வி நிறுவனத்திற்கு ரூ.126 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் ரூ.75.75 கோடி மதிப்பீட்டில் புதிய கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், நாமக்கல், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், திருப்பூர், நீலகிரி, திருவள்ளூர், அரியலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 11 மாவட்டங்களில் ரூ.1,393.17 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.
- காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் புற்றுநோய்க்கான மேன்மைமிகு மையத்திற்காக ரூ.100 கோடி மதிப்பீட்டில் கூடுதல் தளங்கள் கட்டும் பணி தொடங்கப்பட உள்ளது.



- தேனி மாவட்டத்தில் உத்தமபாளையம், பெரியகுளம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில், திருமயம் ஆகிய 3 இடங்களில் மொத்தம் ரூ.22 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு விபத்து மற்றும் அவசரமுன் முயற்சி மையக் கட்டடமாக மேம்படுத்தும் பணிகள் தொடங்கப்பட உள்ளன.
- காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் அரசு மருத்துவமனையில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் புதியகட்டடம்கட்டும்பணிதொடங்கப்பட உள்ளன.
- செங்கல்பட்டு, தருமபுரி, திருவாரூர், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் சிவகங்கை ஆகிய 6 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மற்றும் ஒட்டன்சத்திரம், சீர்காழி, மேலூர், ஊத்தங்கரை ஆகிய 4 அரசு மருத்துவமனைகளிலும் ரூ.237.50 கோடி மதிப்பீட்டில் தலா 50 படுக்கைக் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு அமைக்கும் பணிகள் தொடங்கப்பட உள்ளன.
- சென்னை, பெரியார் நகர் மருத்துவமனையில் முழுஉடல் பரிசோதனை, விபத்து காய சிகிச்சை பிரிவு, தொற்றா நோய்பிரிவு, டயாலிசிஸ், இரத்தவங்கி போன்ற சேவைகள் வழங்க உலக வங்கி திட்டத்தின்கீழ் ரூ.55.07 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணிகள் தொடங்கப்பட உள்ளன.
- சென்னை – ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூ.60 கோடி மதிப்பீட்டில் புதிய நரம்பியல் பிரிவு கட்டடம் கட்டும் பணிகள் தொடங்கப்பட உள்ளன.
- கடலூர் அரசு மருத்துவமனையில் ரூ.40.05 கோடி மதிப்பீட்டில் 100 படுக்கை வசதி கொண்ட புதிய தீவிர சிகிச்சைபிரிவு அமைக்கும் பணிகள் தொடங்கப்பட உள்ளன.
- சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயர் சிறப்புச் சிகிச்சை வழங்க உலக வங்கி திட்டத்தின்கீழ் ரூ.125 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் மற்றும் கருவிகள் வழங்கும் பணிகள் தொடங்கப்பட உள்ளன.
- ரூ.30 கோடி மதிப்பீட்டில், 25 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், ரூ.50.30 கோடி மதிப்பீட்டில் 6 இடங்களில் புதிய மகப்பேறு மற்றும் குழந்தைகள் மையம் மேம்படுத்தும் பணிகள், ரூ.30 கோடி மதிப்பீட்டில் 24 புதிய நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் பணி, ரூ.20 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலையில் புதிய மகப்பேறு மற்றும் குழந்தைகள் மையம் கட்டும் பணி, ரூ.10 கோடி மதிப்பீட்டில் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் பராமரிப்பு பிரிவிற்கு 100 படுக்கைகள் கொண்ட புதிய கூடுதல் கட்டடம் கட்டும் பணி, ரூ.15 கோடி மதிப்பீட்டில்

12 மாவட்ட அரசு மருத்துவமனைகளில் புதிய ஒருங்கிணைந்த ஆய்வகங்கள், ரூ.5 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அரசு மருத்துவமனையில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும் பணி, ரூ.3 கோடி மதிப்பீட்டில் 25 அரசு மருத்துவ மனைகளில் பச்சிளங்குழந்தைகளின் செவித்திறன் கண்டறிவதற்காக ஒலிபுகா அறை அமைக்கும் பணி, ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் மேட்டுப்பாளையம் திருவரங்கம் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவமனைகளில் சிறப்பு பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் அமைக்கும் பணி, செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.66 இலட்சம் மதிப்பீட்டில் நவீன தடுப்பூசி சேமிப்புக் கிடங்கின் கூடுதல் கட்டடம் கட்டும் பணி மற்றும் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் திருநெல்வேலி, பத்தமடை பிரதான / மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார மேட்டுப்பாளையம் திருவரங்கம் மற்றும் திருநெல்வேலி நிலையத்தில் மருத்துவர் குடியிருப்புகள் மற்றும் செவிலியர் குடியிருப்புகள் கட்டும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

- ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் சேலம் மாவட்டம், ஏற்காடு அரசு மருத்துவமனையில் உலக வங்கி திட்டத்தின் கீழ் நவீன பிரேத பரிசோதனைக் கட்டடம் மற்றும் கருவிகள் வழங்கும் பணி மற்றும் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டம், களக்காடு அரசு மருத்துவமனையில் உலக வங்கி திட்டத்தின் கீழ் விஷ முறிவு சிகிச்சைமையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றன.
- தேனி மாவட்டம், இராஜதானி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் 24 மணி நேர இலவச சிகிச்சை வழங்கும் பொருட்டு உலக வங்கி திட்டத்தின் கீழ் செவிலியர் குடியிருப்பு அமைக்கும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- திருவாரூர், அரியலூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், விருதுநகர், நாமக்கல், தென்காசி மற்றும் திண்டுக்கல் ஆகிய 9 மாவட்டங்களில் ரூ.22.24 கோடி மதிப்பீட்டில் நகர் ஊரமைப்பு இயக்கக அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் தொடங்கப்பட உள்ளன.
- சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், அண்ணா மேலாண்மை நிறுவன வளாகத்தில் ரூ.3.48 கோடி மதிப்பீட்டில் கூடுதல் பணியாளர் வாடகை குடியிருப்பு கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.
- மதுரையில், சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் ரூ.4.28 கோடி மதிப்பீட்டில் வழக்குரைஞர்களுக்கான கூடுதல் வளாக கட்டடம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- தருமபுரி மாவட்டம், தருமபுரியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டட வளாகத்தில் ரூ.2.16 கோடி மதிப்பீட்டில் மாவட்ட சட்ட சேவைகள் ஆணையத்தின் தலைவர், நிரந்தர லோக் அதாலத் மற்றும் செயலாளர் ஆகியோருக்கான குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைப்பெற்று வருகின்றன.
- சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் ரூ.20.24 கோடி மதிப்பீட்டில் சென்னை உயர் நீதிமன்றத்தின் பல்வேறு பிரிவுகளுக்கான புதிய ஒன்பது மாடிக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சென்னை, புரசைவாக்கத்தில் ரூ.315 கோடி மதிப்பீட்டில் சென்னை உயர் நீதிமன்றத்தின் சார் நீதிமன்ற கட்டடங்களை (60 சார் நீதிமன்ற அரங்குகள்) பன்னடுக்கு கட்டடமாக கட்டும் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது.
- கோயம்புத்தூர் மாவட்டம், சீனிவாசபுரத்தில் ரூ.82.94 இலட்சம் மதிப்பீட்டில் வணிக நீதிமன்றம் மற்றும் வணிக மேல் முறையீட்டு நீதிமன்றம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சேலம் மாவட்டம், சேலத்தில் ரூ.59.43 கோடி மதிப்பீட்டில் இரண்டு பன்னடுக்கு ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடங்கள் (16 நீதிமன்ற அரங்குகள்) கட்டும் பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.



- நாமக்கல் பெருந்திட்ட வளாகத்தில் ரூ.92.31 கோடி மதிப்பீட்டில் அரசு சட்டக் கல்லூரிக் கட்டடங்கள், மாணவ மாணவியர் விடுதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணி நடைப்பெற்று வருகிறது.
- திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரியில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் புதியதாக நூலகக் கட்டடம் கட்டும் பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
- வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் புதிதாக நூலகக் கட்டடம் கட்டும் பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
- சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப் பெரும்புதூரில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் விளையாட்டுத் திடல் நிறுவும் பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
- புதியதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் ரூ.34.17 கோடி மதிப்பீட்டில் 5 புதிய சுற்றுலா மாளிகை கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- வேலூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, செய்யாறு மற்றும் ஜமுனாமரத்தூர் ஆகிய 5 இடங்களில் ரூ.26.09 கோடி மதிப்பீட்டில் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- வாணியம்பாடியில் ரூ.1.69 கோடி மதிப்பீட்டில் ஆய்வு மாளிகை கட்டுவதற்கான பணி தொடங்கப்படவுள்ளது.
- விருதுநகர் மாவட்டத்தில், சாத்தூரில் ரூ.2.43 கோடி மதிப்பீட்டில் புதிய சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- மதுரை மாவட்டம் மதுரையில் ரூ.4.48 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மாளிகை பிரதானக் கட்டடம் மேம்படுத்தவும் மற்றும் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- கடலூரில் ரூ.4.43 கோடி மதிப்பீட்டில் 3 துணைப் பிரிவு அலுவலகங்கள் மற்றும் 5 பிரிவு அலுவலகங்கள் உள்ளடக்கிய கட்டுமான மற்றும் பராமரிப்புக் கோட்ட அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.
- கள்ளக்குறிச்சியில் ரூ.2.73 கோடி மதிப்பீட்டில் கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்ட அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்பட உள்ளது.

- திண்டுக்கல்லில் ரூ.44.88 இலட்சம் மதிப்பீட்டில் உபகோட்ட அலுவலகம் கட்டும் பணிகள் நிறைவடைந்துள்ளன.
- மதுரையில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் உபகோட்ட அலுவலகம் கட்டும் பணி நிறைவடைந்துள்ளது.
- காரைக்குடியில் ரூ.93.28 இலட்சம் மதிப்பீட்டில் உபகோட்ட அலுவலகம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.
- தூத்துக்குடியில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் உபகோட்ட அலுவலகம் கட்டுவதற்கானப் பணி முடிவுறும் தறுவாயில் உள்ளது.
- சென்னை தரமணியில் உள்ள பொதுப்பணித் துறை வளாகத்தில் ரூ.4.67 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைப்புகள், உட்புற சாலைகள், சுற்றுச்சுவர் மற்றும் இதர மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள பொதுப்பணித் துறை குடியிருப்பு வளாகத்தில் ரூ.67.88 இலட்சம் மதிப்பீட்டில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு உணவருந்தும் கூடம் கட்டும் பணிகள் தொடங்கப்படவுள்ளது.
- நீலகிரியில் ரூ.5.21 கோடி மதிப்பீட்டில் பழைய குடியிருப்புகளுக்கு மாற்றாக அரசு ஊழியர்களுக்கான 16 புதிய குடியிருப்புகள் கட்டும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- சென்னை, சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் ரூ.99.76 கோடி மதிப்பீட்டில் புதிய பன்னடுக்கு "சி" வகை குடியிருப்புகள் (190 எண்கள்) கட்டும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- சென்னை தண்டையார்பேட்டையில் உள்ள பொதுப்பணித்துறை பணிமனை பணியாளர் குடியிருப்பில் உள்ள 54 வீடுகளை உள்ளடக்கிய 9 பிளாக்குகளை ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் ரூ.103.74 கோடி மதிப்பீட்டில் 17 பாரம்பரிய கட்டடங்களில் பாதுகாப்பு, புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- பொதுப்பணித்துறையில் அனைத்து மண்டல அலுவலகங்களுக்கும் தேவைப்படும், பொறியியல் உபகரணங்கள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வக உபகரணங்கள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படவுள்ளன.
- தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ரூ.36.62 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய கூடுதல் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.25.03 கோடி மதிப்பீட்டில் 5 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 8 வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடங்கள் கட்டும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- நாகப்பட்டினம் வட்டம், நம்பியார் நகர் கிராமத்தில் ரூ.6.35 கோடி மதிப்பீட்டில் புயல் பாதுகாப்பு மையக் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.
- சென்னை கன்னிமாரா பொதுநூலகக் கட்டடத்தை ரூ.3.19 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் அரசு டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் நினைவு மாதிரி நூலகக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- திருநெல்வேலியில் ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் எம்.டி.டி. இந்து மேல்நிலைப் பள்ளியில் ஆடிட்டோரியம், கூடுதல் வகுப்பறை மற்றும் நுழைவாயில் வளைவு கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- இராமநாதபுரம் மாவட்டத்தில் அபிராமத்தில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் சென்னாப்புலவர் ஆர். கார்மேகனார் கிளை நூலகக் கட்டடம் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ஈரோடு மாவட்டம், சொக்குமரிபாளையம், நஞ்சைபுளியம்பட்டி, குறிச்சி மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பச்சேரி தரிசுக்காடு மற்றும் வாணாபுரம் ஆகிய 6 இடங்களில் தங்குமிட பள்ளிகளில்



ரூ.6.03 கோடி மதிப்பீட்டில் ஓய்வில்லம் மற்றும் வகுப்பறைக் கட்டடம் கட்டும் பணிகளில் 5 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 1பணி தொடங்கப்படவுள்ளது.

- 2021-2022ஆம் ஆண்டில் நபார்டு உதவித் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட 18 திட்டங்களில், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.32.85 கோடி மதிப்பீட்டில் வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் குடிநீர் வசதிகளை ஏற்படுத்தும் 17 திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன மற்றும் 1 பணி தொடங்கப்படவுள்ளது.
- செங்கல்பட்டு மாவட்டம், ஆத்தூர் அரசு பிற்காப்பு அமைப்பு வளாகத்தில் ரூ.15.95 கோடி மதிப்பீட்டில், தீர்ப்பு குற்றவாளி காவல்வைப்பு மற்றும் நவீன சமையலறை கட்டடத் தொகுப்புகள் கட்டும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆத்தூரில் அரசு பிற்காப்பு பராமரிப்புநிறுவனத்தில் ரூ.27 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்பதற்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம் கட்டும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- தஞ்சாவூரில் குழந்தைகள் கண்காணிப்பு இல்லத்தில் ரூ.63 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி தொடங்கப்படவுள்ளது.
- சென்னை அரசு மத்திய அச்சகத்தில் ரூ.93 இலட்சம் மதிப்பீட்டில் கோமாரி கட்டடத்தினை புதுப்பித்தல் மற்றும் சிறப்பு பழுதுபார்ப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- நாகப்பட்டினம் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் அரசுக்கு சொந்தமான பாரம்பரிய கட்டடத்தை ரூ.1.39 கோடி மதிப்பீட்டில் மீட்டுருவாக்கி மாற்றியமைக்கும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ் கோட்டையின் சுற்றுச் சுவற்றினை ரூ.63 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சென்னை அரசு இசைக் கல்லூரியில் உள்ள பாரம்பரிய பிராடி கேசில் கட்டடத்தினை ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

- சென்னை அடையாரில் உள்ள இயல் இசை நாடக மன்றத்தின் பொன்னி வளாகம் ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- கடலூர் மாவட்டத்தில் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் மாவட்ட இசைப் பள்ளி கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சென்னை, அடையாரில், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் திறந்த வெளி கலையரங்கத்தினை ரூ.1.43 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- அரியலூர் மாவட்டத்தில் வாரண வாசியில் உள்ள புதையுயிரி படிம அருங்காட்சியக வளாகத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கருப்பொருள் பூங்கா அமைக்கும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர்புரம் கிராமம், மேலப்பாளையம் நகரத்தில் ரூ.33.02 கோடி மதிப்பீட்டில் பொருநை அருங்காட்சியகம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- விழுப்புரம் மாவட்டம் விழுப்புரத்தில் ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு அருங்காட்சியகம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

சாலைப் பணிகள்

- ரூ.5,412.26 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 3,670.91 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 869 பாலம் / சிறுபாலப் பணிகள்.
- ரூ.887.41 கோடி மதிப்பில் 3,592.33 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் சாலை ஓடுதளப் பரப்பினை மேம்படுத்தும் பணிகள்.
- ரூ.23 கோடி மதிப்பில் 5.4 கி.மீ நீளமுள்ள இலுப்பூர் புறவழிச்சாலை பணிகள்.
- ரூ.2,111.65 கோடி மதிப்பில் 2,325 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி/ஊராட்சி ஒன்றிய சாலைகள் தரம் உயர்வு.
- ரூ.129.94 கோடி மதிப்பில் விருத்தாச்சலம் பரங்கிப்பேட்டை சாலை மேம்பாடு பணிகள்.
- ரூ.209.18 கோடி மதிப்பில் நக்க சேலம் (ம) குரும்பலூர் புறவழிச்சாலைகளுடன் தரம் உயர்வு பணிகள்.
- ரூ.1.97 கோடி மதிப்பில் ஜவான்ஸ் பவன் சாலை மேம்பாடு.
- ரூ. 2311.15 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 832.09 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 474 பாலம்/சிறுபாலப் பணிகள்.
- ரூ. 346.53 கோடி மதிப்பில் 423.67 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் சாலை ஓடுதளப் பரப்பினை மேம்படுத்தும் பணிகள்.
- ரூ. 131.19 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 373 சாலைப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் ரூ. 56.95 கோடி மதிப்பில் சாலை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 66 சாலைப் பாதுகாப்புப் பணிகள்
- ரூ. 66.99 கோடி மதிப்பில் 48.62 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி/ஊராட்சி ஒன்றிய சாலைகள் தரம் உயர்வு.

உயர்மட்ட பாலங்கள்

- நபார்டு கடனுதவி திட்டத்தின் கீழ், ரூ.340.64 கோடி மதிப்பில் 120 உயர்மட்ட பாலங்கள்.
- ரூ.17.04 கோடி மதிப்பில் திருவண்ணாமலை மாவட்டம், தண்டரை - எரையூர் சாலை, செய்யார் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்.
- ரூ.90.96 கோடி மதிப்பில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கல்லணையில் உயர்மட்ட பாலம்.
- ரூ.27.92 கோடி மதிப்பில் பெண்ணையாற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம் மற்றும் ரூ.7.98 கோடி மதிப்பில் பவானி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம்.



- 435 தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக மாற்றும் பணிகள்.
- நபார்டு கடனுதவி திட்டம் மற்றும் மாநில நிதியின் கீழ். ரூ 98.97 கோடி மதிப்பில் 25 உயர் மட்ட பாலங்கள்.
- 123 தரைப்பாலங்களை உயர்மட்டப்பாலங்களாக மாற்றும் பணிகள்

சாலை மேம்பாலங்கள்

- ரூ.53.12 கோடி மதிப்பில் மதுரை - தொண்டி சாலை மற்றும் மதுரை சுற்றுச் சாலை சந்திப்பு பல்வழிச்சாலையில் மேம்பாலம்.
- ரூ.67 கோடி மதிப்பில் தரமணி இணைப்பு சாலையிலிருந்து வேளச்சேரி புறவழிச்சாலை செல்லும் இரண்டாம் அடுக்கு பாலப்பகுதி பணி மற்றும் ரூ. 78.49 கோடி மதிப்பில் வேளச்சேரி புறவழிச்சாலையிலிருந்து வேளச்சேரி-தாம்பரம் சாலையை இணைக்கும் முதல் அடுக்குப் பாலப்பகுதி பணிகள்.
- ரூ.93.50 கோடி மதிப்பில் கோயம்பேடு ஜவஹர்லால் நேரு சாலையில் காளியம்மன் கோயில் தெரு மற்றும் சென்னை புறநகரப் பேருந்து நுழைவு வாயில் சந்திப்பில் மேம்பாலம்.
- ரூ.95.21 கோடி மதிப்பில் மேடவாக்கம் சாலை சந்திப்புகளை இணைக்கும் வகையில் மேம்பாலம், தாம்பரத்திலிருந்து வேளச்சேரி செல்லும் பாலப்பகுதி.

இரயில்வே மேம்பாலங்கள்

- ரூ.72.82 கோடி மதிப்பில் அண்ணனூர் அருகில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.25.74 கோடி மதிப்பில் கடம்பத்தூர் இரயில் நிலையம் அருகில் கடம்பத்தூர் - திருவாலங்காடு இரயில் நிலையங்களுக்கிடையில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.59.63 கோடி மதிப்பில் காஞ்சிபுரம் இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.34.50 கோடி மதிப்பில் ஊரப்பாக்கம் அருகில் வண்டலூர் - கூடுவாஞ்சேரி இரயில் நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம்.

- ரூ.20.96 கோடி மதிப்பில் ஒலக்கூர் பீடர் சாலையில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.22.63 கோடி மதிப்பில் திருவெண்ணை நல்லூர் - பரிக்கல் இரயில் நிலையங்களுக்கு இடையே இரயில்வே மேம்பாலம்.
- ரூ.22.23 கோடி மதிப்பில் டி.கே.வி.கோட்டா சாலையிலிருந்து விரிஞ்சிபுரம் செல்லும் சாலையில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.38.74 கோடி மதிப்பில் தண்டரை - திருவண்ணாமலை இரயில் நிலையங்களுக்கு இடையே இரயில்வே மேம்பாலம்.
- ரூ.48.48 கோடி மதிப்பில் பொள்ளாச்சி - கிணத்துக்கடவு இரயில் நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம்.
- ரூ 24.81 கோடி மதிப்பில் ஓமலூர் மற்றும் மேச்சேரி இரயில்வே நிலையங்களுக்கு இடையில் சாலை மேம்பாலம்.
- ரூ.12.08 கோடி மதிப்பில் சிவாடி - தருமபுரி இரயில்வே நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம்.

இரயில்வே கீழ்ப்பாலம்

- ரூ.14.52 கோடி மதிப்பில் நாங்குநேரி - வள்ளியூர் இரயில்வே நிலையங்களுக்கிடையில் இரயில்வே கீழ்ப்பாலம்.
- ரூ. 30.13 கோடி மதிப்பில் ஓமலூர்-மேச்சேரி இரயில் நிலையங்களுக்கிடையில் இரயில்வே மேம்பாலம். (கடவு எண்-18)

ஒன்றிய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சக நிதி பணிகள்

- ரூ.1,555.50 கோடி மதிப்பில் தேசிய நெடுஞ்சாலைகளில் சாலைப் பணிகள்.
- ரூ.45.20 கோடி மதிப்பில் காலமுறை புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் தேசிய நெடுஞ்சாலையில் சாலைப் பணி.
- ரூ.70.15 கோடி மதிப்பில் ஆண்டுத்திட்டத்தின் கீழ் சாலை மற்றும் பாலப் பணிகள்.

நடைபெற்றுவரும் பணிகள்

- முதலமைச்சர் சாலை மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ரூ.3,530.35 கோடி மதிப்பில் நான்கு வழித்தட சாலைகள் மற்றும் ரூ.1,668.29 கோடி மதிப்பில் இரு வழிச் சாலைகள்.
- நகரப்பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ், ரூ.694.50 கோடி மதிப்பீட்டில் 186 பணிகள்.
- ரூ.200 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 403 சாலைப் பாதுகாப்புப் பணிகள்.
- ரூ.874.50 கோடி மதிப்பில் நபார்டு கடனுதவி திட்டத்தின்கீழ், 158 பாலங்கள்.
- ரூ.140.49 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் உக்கடம் ஆற்றுப்பாலத்தில் சாலை மேம்பாலம்.
- ரூ.1,621.30 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் கோல்டுவின் முதல் உப்பிலிப்பாளையம் வரை உயர்மட்டச் சாலை அமைக்கும் பணி.

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டப் பணிகள்

- ரூ.314.48 கோடி மதிப்பில் மியாட் மருத்துவமனை முதல் முகலிவாக்கம் வரை மேம்பாலம் அமைக்கும் பணி மற்றும் ரூ.45.50 கோடி மதிப்பில் மடிப்பாக்கம் அருகே வாகன சுரங்கப்பாதை.
- ரூ.49.59 கோடி மதிப்பில் சர்தார் பட்டேல் சாலையுடன் ராஜீவ்காந்தி சாலை இணையும் மத்திய கைலாஷ் சந்திப்பில் மேம்பாலம்.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சாதனைகள்

- தமிழ்நாட்டின் மத்திய மற்றும் மேற்கு மாவட்ட தொழிற்சாலைகளுக்குத் தேவையான சரக்குகளை மேம்படுத்தப்பட்ட கடலூர் துறைமுகத்தைப் பயன்படுத்தி சிறு மற்றும் நடுத்தர கப்பல்களின் மூலம் கையாளுவதற்கு ஏதுவாக, திறமையான துறைமுக இயக்குபவரை தேர்ந்தெடுத்து சந்தைப்படுத்தி, பராமரிப்புடன் இயக்குவதற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அரசாணையின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖



வேளாண்மை, வேளாண்மை பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவு சங்கங்கள், தோட்டக்கலை, சர்க்கரை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்

திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்

அவர்கள்

உணவு தானிய இயக்கம்

- தமிழ்நாட்டில் முதன்முறையாக வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கை.
- 119.98 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்து சாதனை. இது கடந்த ஆண்டின் உற்பத்தியை விட 11.74 இலட்சம் மெட்ரிக் டன் அதிகமாகும்.
- 39.09 இலட்சம் எக்டரில் உணவு தானியப் பயிர் சாகுபடி 122.15 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்து சாதனை.
- 7.5 இலட்சம் மெட்ரிக் டன், பயறு வகை உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 4.99 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி.

நெல்

- தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் ரூ.20.90 கோடி மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கத்தில் ரூ.7.51 கோடி நிதியில் விவசாயிகளுக்கு நெல் விதை



உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கான ஊக்கத் தொகை மற்றும் இடுபொருட்களுக்கான மானியம் வழங்கும் திட்டம் செயலாக்கம்.

- ரூ.15.10 கோடியில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் ரூ.4.57 கோடியில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
- தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் ரூ.3.60 கோடியில், 1,20,000 எக்டர் பரப்பளவில் மண்வளத்தை மேம்படுத்திட திரவ உயிர் உரங்கள் பயன்படுத்தும் திட்டம் செயலாக்கம். இதுவரை 1,20,000 விவசாயிகள் பயன்.
- 22.05 இலட்சம் எக்டர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 1.7 இலட்சம் எக்டர் கூடுதலாகும்.

குறுவை சாகுபடி தொகுப்பு திட்டம்

- தமிழ்நாட்டில் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணை திறந்துவைத்து, ரூ.61.09 கோடியில் குறுவை தொகுப்புத் திட்டத்தை அறிவித்தார்.
- காவிரி டெல்டா பகுதிகளில் குறுவை நெல் சாகுபடி பரப்பு 3.50 இலட்சம் ஏக்கர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 4.90 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் கூடுதலாகப் பயிரிடப்பட்டது.
- 2,870 மெ.டன் நெல் விதைகள் ரூ.5 கோடியில் 1,33,560 ஏக்கருக்கு விநியோகிக்கப்பட்டு 1,11,355 விவசாயிகள் பயன்.
- 31,045 மெ.டன் உரங்கள் ரூ.41.07 கோடியில் 1,88,471 ஏக்கருக்கு விநியோகிக்கப்பட்டு 1,59,465 விவசாயிகள் பயன்.
- 4.80 மெ.டன் பசுந்தாள் உர விதைகள் ரூ.3.36 கோடியில் 24,000 ஏக்கருக்கு விநியோகிக்கப்பட்டு 16,342 விவசாயிகள் பயன்.
- ரூ.9.21 கோடி செலவில் 239 விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரங்கள் மற்றும் பண்ணை குட்டைகள் அமைப்பு.
- நடப்பாண்டில் பாசனத்திற்காக எப்போதும் இல்லாத வகையில் 19 நாட்களுக்கு முன்கூட்டியே, மே மாதம் 24 ஆம் தேதி அன்று மேட்டூர் அணை திறக்கப்பட்டு, ரூ. 61.12 கோடி மதிப்பில் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டதாலும், நெல் பயிரில் குறுவைப் பருவத்தில் 5.36 இலட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையானது அடையப்பட்டுள்ளது.
- ரூ.4.20 கோடி செலவில் 1,20,000 ஏக்கர் நெற்பயிருக்கு 2,400 மெ.டன் நெல்விதைகளும், ரூ.46.73 கோடி செலவில் 1,89,478 ஏக்கருக்கு 22,743 மெ.டன் உரங்களும், விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

அறுவடைக்கு பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்காக தார்ப்பாய் வழங்குதல்

- தானியங்களில் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்கு ரூ.5 கோடி செலவில் தார்ப்பாய்கள் கொள்முதல் செய்யப்பட்டு இதுவரை 54,933 விவசாயிகள் பயன்.

நெற்பயிரில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக துத்தநாக சல்பேட் மற்றும் ஜிப்சம் வழங்குதல்

- நெற்பயிரில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 50,000 ஏக்கரில் துத்தநாக சல்பேட் மற்றும் ஜிப்சம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு 50,000 விவசாயிகள் பயன்.

சிறுதானியங்கள்

- "சிறுதானிய இயக்கம்", தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் - மக்காச்சோளம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் - தரிசு நில மேம்பாடு திட்டம் மற்றும் திரவ உயிர் உரங்கள் விநியோகம் ஆகிய திட்டங்களுக்கு ரூ.68.42 கோடியில் 9.24 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு 1,11,494 விவசாயிகள் பயன்.



- ஊட்டச்சத்து மிகுந்த கம்பு, கேழ்வரகு, வரகு, தினை, குதிரைவாலி, சாமை போன்ற சிறு தானியப்பயிர்களின் பரப்பளவு, உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், மானாவாரி நிலங்களில் சாகுபடியினை அதிகரிக்கவும் கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி, பெரம்பலூர், அரியலூர், சிவகங்கை, தென்காசி, கரூர், ஈரோடு மற்றும் திருச்சி ஆகிய 22 மாவட்டங்களை ஒருங்கிணைத்து 2 சிறுதானிய சிறப்பு மண்டலங்கள்.

பயறுவகைப் பயிர்கள்

- பலன் தரும் பயறு பெருக்குத் திட்டத்திற்கு ரூ.45.97 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை சிறப்புத் திட்டங்கள் வாயிலாக ரூ.38.48 கோடியில் 1,91,356 விவசாயிகள் பயன்.

- "பயறு பெருக்குத் திட்டம்" ரூ.57.17 கோடி நிதி ஒதுக்கீடு. துவரை சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை மற்றும் சேலம் மாவட்டங்களை உள்ளடக்கிய "துவரை சிறப்பு மண்டலம்" உருவாக்கம்.

- நெல்லுக்கு பின் பயறுவகை சாகுபடி திட்டம் 10 இலட்சம் ஏக்கர் பரப்பில், ரூ.30.30 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு உளுந்து/பச்சைப்பயறு விதைகளை 50 சதவிகிதம் மானியத்தில் ஏக்கருக்கு ரூ.400 வீதம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு, 2,264 மெட்ரிக் டன் விதைகள் விநியோகம்.

- குறுவையில் மாற்றுப் பயிராக பயறு சாகுபடி செய்யும் சிறப்புத்திட்டம் மற்றும் தரிசுநிலங்களை விளைநிலங்களாக மாற்றும் சிறப்புத் திட்டம் ஆகியன செயல்படுத்தப்பட்டு இதுவரை 2,59,666 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எண்ணெய்வித்துக்கள்

- ஏற்றம் தரும் எண்ணெய் வித்துக்கள் திட்டத்திற்கு ரூ.53.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூ.41.70 கோடியில் 1,48,812 விவசாயிகள் பயன்.

- முதற்கட்டமாக தஞ்சாவூர், சேலம், திருவள்ளூர், திருநெல்வேலி, விழுப்புரம் கடலூர் ஆகிய மாவட்டங்களில் 'தங்கப் பயறு-சோயா பீன்ஸ் சாகுபடிப் பரப்பளவை அதிகரித்தல் திட்டம்' 2,400 ஹெக்டர் பரப்பளவில் ரூ.1.20 கோடி நிதி ஒதுக்கீட்டில்

செயல்படுத்தப்பட்டு, 2,211 ஹெக்டர் பரப்பளவில் ரூ.90.35 இலட்சம் செலவில் சோயாமொச்சை செயல்விளக்கத்திடல்கள் அமைக்கப்பட்டு 1,590 விவசாயிகள் பயன்.

பருத்தி

- "நீடித்த நிலையான பருத்தி இயக்கம்" மற்றும் "தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம்- பருத்தி" ஆகிய திட்டங்கள் ரூ.21.32 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு, 75,116 பருத்தி பயிரிடும் விவசாயிகள் பயன்.

தென்னை

- தென்னை வளர்ச்சி வாரிய திட்டங்களுக்கு ரூ.26.34 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூ.18.52 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 15,540 விவசாயிகள் பயன்.

நுண்ணீர்ப் பாசனத் திட்டம்

- சிறு / குறு விவசாயிகளுக்கு 100 சதவிகிதம் மானியத்திலும் மற்றும் இதர விவசாயிகளுக்கு 75 சதவிகிதம் மானியத்திலும் நுண்ணீர் பாசனம் அமைக்க, 2,23,560 எக்டருக்கு ரூ.627.43 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 83,726 விவசாயிகளுக்கு நுண்ணீர்ப் பாசனம் அமைத்துத்தரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா)

- 35,170 மெட்ரிக் டன் நெல் விதைகளும், 1533 மெட்ரிக் டன் சிறுதானிய விதைகளும், 9,921 மெட்ரிக் டன் பயறுவகை விதைகளும், 7,773 மெட்ரிக் டன் எண்ணெய் வித்து விதைகளும், 46 மெட்ரிக் டன் பருத்தி விதைகளும், மொத்தம் 54,444 மெட்ரிக் டன் விதைகள் வேளாண்மைத்துறை விதைப் பண்ணைகளிலிருந்து கொள்முதல்.

- 36,534 மெட்ரிக் டன் நெல் விதைகளும், 1,379 மெட்ரிக்டன் சிறுதானிய விதைகளும், 8,147 மெட்ரிக் டன் பயறுவகை விதைகளும், 4,068 மெட்ரிக் டன் எண்ணெய்வித்து விதைகளும், 42 மெட்ரிக்டன் பருத்தி விதைகளும், மொத்தம் 54,313 மெட்ரிக் டன் விதைகள் வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் விநியோகம்.

நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்

- மருத்துவ குணமிக்க பாரம்பரிய நெல் இரகங்களைப் பாதுகாத்திட நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டு, வேளாண்மைத் துறையின் கீழ், செயல்படும் 33 அரசு விதைப்பண்ணைகளில் 16 வகையான பாரம்பரிய நெல் இரகங்கள் 200 ஏக்கர் பரப்பளவில் பயிரிட்டு, 50 சதவிகித மானிய விலையில் ரூ.25 இலட்சம் செலவில் விவசாயிகளுக்கு விநியோகம்.

உழவர் பெருமக்களுக்கு வேளாண் உபகரண தொகுப்புகள் வழங்குதல்

- பொது விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியத்திலும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு 90 சதவிகித மானியத்திலும் 1,65,734 வேளாண் உபகரணத் தொகுப்புகள் வழங்க ரூ.15 கோடி ஒதுக்கீடு. இதுவரை 1,24,146 விவசாயிகளுக்கு ரூ.29.75 கோடியில் வழங்கப்பட்டுள்ளது.

பயிர் பாதுகாப்பு

- 3.5 இலட்சம் எக்டரில் மக்காச்சோளப் பயிர் சாகுபடி, மக்காச்சோளப்பயிரில் படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான இடுபொருட்கள் ரூ.20 கோடியில், 80,000 எக்டருக்கு வழங்கப்பட்டு இதன் வாயிலாக 77,399 மக்காளச்சோளம் பயரிடும் விவசாயிகள் பயன்.

- தமிழ்நாட்டில் 4.5 இலட்சம் எக்டரில் தென்னை பயிர் செய்யப்பட்டு வருகிறது. தென்னையில் வெள்ளை ஈ தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கு மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி மற்றும் கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள் 20,000 எக்டருக்கு ரூ.2 கோடி மதிப்பீட்டில் விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்பட்டு 15,366 தென்னை பயிரிடும் விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர்.

- விவசாயிகளிடம் இயற்கை வேளாண்மை முறையை ஊக்குவிப்பதற்காக, 24 உயிரியல் பூச்சிக்கொல்லி கட்டுப்பாட்டு ஆய்வகங்களின் வாயிலாக சுமார் 854 மெட்ரிக் டன் உயிரி பூச்சிக்கொல்லிகளும், 142.73 இலட்சம் எண்களுக்கு மேலாக உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளும் வழங்கப்பட்டுள்ளன.

- மாறிவரும் காலநிலைகளினால் பயிர்களில் திடீரென்று ஏற்படும் பூச்சி, நோய் தாக்குதலை எதிர் கொள்ளும் வகையில், ரூ.5 கோடி நிதி ஒதுக்கீட்டில், அரியலூர் மாவட்டத்தில் கரும்பு பயிரில் ஏற்பட்ட பொக்காபோயங் நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் செயல்படுத்தப்படும் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் கிராமப் பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைத்து 5,201 கிராம பஞ்சாயத்துகளில் ரூ.420.78 கோடி நிதி ஒதுக்கீடு.

2021-2022ஆம் ஆண்டு திட்ட சாதனை

- 980 தரிசு நில தொகுப்புகள் ஏற்படுத்தப்பட்டு, 506 ஆழ்துளை / குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

- 370 இடங்களில் மின் இணைப்புகள் பெறப்பட்டு, 67 இடங்களில் சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

- தரிசு நிலத் தொகுப்புகளில் 55 தொகுப்புகளில் நுண்ணீர் பாசனம் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, 107 இடங்களில் திறந்த வெளி கிணறுகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மூலம் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ஆதிதிராவிட / பழங்குடியின விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் 270 இடங்களில் கிணறுகள் அமைக்கப்பட்டு, 79 இடங்களில் மின் இணைப்பு பெறும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

- 500 இடங்களில் பண்ணைக்குட்டைகள் ஏற்படுத்தப்பட்டு, வேளாண்மை பொறியியல் துறை இயந்திரங்களை கொண்டு நீர் வள ஆதாரங்களை சீரமைத்து மேம்படுத்தும்



பணிகள் 1,147 இடங்களில் முடிக்கப்பட்டு, 1,247 விசை உழுவை இயந்திரங்கள் விவசாயிகளுக்கு விநியோகம்.

- வேளாண்மை பொறியியல் துறைக்கு 10 டிராக் வகை நெல் அறுவடை இயந்திரம், 10 டிராக் வகை நெல் அறுவடை இயந்திரத்தினை சுமந்து செல்லும் வாகனம் கொள்முதல் செய்யப்பட உள்ளது.
- 11.92 இலட்சம் தென்னங்கன்றுகள், 29,790 எக்டர் பரப்பிற்கு பயறு விதைகள் மற்றும் 34,516 தெளிப்பான்கள், 16,499 தார்பாய்கள் மற்றும் 14,966 பண்ணைக்கருவிகள் தொகுப்புகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.
- வீட்டுத் தோட்டம் அமைக்க 2.50 இலட்சம் காய்கறி விதைத் தளைகளும், தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியினை ஊக்குவிக்க 10,000 எக்டர் பரப்பிற்கான இடுபொருட்களும், 28,650 பழக் கூடைகள் 2.19 இலட்சம் பழச்செடிகள் மற்றும் மரக்கன்றுகள் தொகுப்புகள் மற்றும் 6,393 எக்டர் பரப்பிற்கு பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கத்திற்கான நடவு செடி தொகுப்புகள் விநியோகம் செய்து முடிக்கப்பட்டு, 69 காளான் வளர்ப்பு கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளது.
- 40 பல்நோக்கு உலர்கலன்கள் அமைக்கப்பட்டு, கரும்பு வளச்சிக்காக 255 எக்டர் பரப்பில் பருசீவல் நாற்றுகள் மற்றும் 495 எக்டர் பரப்பில் ஒரு பரு விதைக் கரும்பு விநியோகம் செய்து முடிக்கப்பட்டு, இதுவரை 9.86 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

2022-2023ஆம் ஆண்டு திட்ட செயலாக்கம்

- 792 தரிசு நிலத் தொகுப்புகள் ஏற்படுத்தப்பட்டு, 612 இடங்களில் நிலத்தடி நீர் ஆய்வு பணிகள் முடிக்கப்பட்டு,337 ஆழ்துளை / குழாய் கிணறுகள் /திறந்தவெளி கிணறுகள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டு 28 ஆழ்துளை / குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.
- 13.79 இலட்சம் நெட்டை தென்னங்கன்றுகள், 1.18 இலட்சம் எக்டர் பரப்பிற்கு திரவ உயிர் உரங்கள் மற்றும் 2,180 விசைத் தெளிப்பான்கள் விநியோகம்.
- 8,039 எக்டர் பரப்பிற்கு காய்கறி சாகுபடியை ஊக்குவிக்க இடுபொருட்களும், 2.21 இலட்சம் பழச்செடி தொகுப்புகளும், 3.20 இலட்சம் காய்கறி விதைத் தளைகளும் 7,786 எக்டர் பரப்பிற்கு தோட்டக்கலைப் பயிர்கள் பரப்பு விரிவாக்கத்தின் கீழ் பழச்செடிகள் தொகுப்புகள் விநியோகம் முடிக்கப்பட்டு, 88 காளான் வளர்ப்பு கூடாரங்கள்.
- 220 பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டு, பஞ்சாயத்து ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரி, குளம், ஊரணி மற்றும் வரத்துக் கால்வாய்களில் 4,200 இடங்களில் தூர்வாருதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 27 இடங்களில் பணிகள்.
- 20 டிராக்டரால் இயங்கக்கூடிய நிலம் சமன் செய்யும் கருவி, 50 ரோட்டவேட்டர், 20 ஜந்து கொத்து கலப்பை, 7 டிராக் வகை நெல் அறுவடை இயந்திரம், 3 மண் தள்ளும் இயந்திரத்தை சுமந்து செல்லும் கனரக வாகனம், 15 நில நீர் ஆய்வுக் கருவி தொகுப்புகள் கொள்முதல்.
- 135 பல்நோக்கு உலர்களங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 21 இடங்களில் பணிகள்.
- 232 எக்டர் பரப்பிற்கு பருசீவல் நாற்றுகளும், 177 எக்டர் பரப்பிற்கு ஒருபரு விதைக் கரணையும் உற்பத்தி செய்து கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, இதுவரை 13.68 விவசாயிகள் பயன்.

முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம்

- ரூ.128.71 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் என்ற புதிய திட்டம் 7.5 இலட்சம் ஏக்கர் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இத்திட்டத்தில் இதுவரை 4.25 இலட்சம் ஏக்கரில் சிறுதானியங்கள், 2.30 இலட்சம்





ஏக்கரில் பயறு வகைகள், 65 ஆயிரம் ஏக்கரில் எண்ணெய்வித்து பயிர்கள், 30 ஆயிரம் ஏக்கரில் பருத்தி, சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

- 655 பண்ணைக் குட்டைகள், 3,251 ஏக்கரில் வயல்வெளி வரப்புகள், 167 பண்ணை இயந்திர வாடகை மையங்கள் மற்றும் 33 மதிப்புக் கூட்டு மையங்கள் அமைக்கப்பட்டு, 13.33 இலட்சம் உயர் மதிப்பு கொண்ட மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 3.08 இலட்சம் சிறு குறு விவசாயிகள் பயன். நடப்பாண்டில், இத்திட்டத்தின்கீழ், 2,81,273 விவசாயிகளுக்கு ரூ. 63.80 கோடி நிதி செலவிடப்பட்டுள்ளது.

"தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம்"

- தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம் என்ற புதிய வேளாண் காடு வளர்ப்புத் திட்டத்தில் விவசாயிகளுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்குவதற்கு ரூ.22.95 கோடி நிதி ஒதுக்கீட்டில் இதுவரை 150 இலட்சம் மரக்கன்றுகள் 75,389 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நீர்ப்பாசன நவீனமயமாக்கல் திட்டம்

- தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டத்தின்கீழ், பயிர் சார்ந்த மற்றும் பயிர் சாராத காரணிகளைச் செயல்படுத்த ரூ.16.55 கோடி நிதி ஒதுக்கீடு. மாதிரி கிராம திட்டத்திற்கு ரூ.15.58 இலட்சம் நிதி ஒதுக்கீடு. 1,94,157 சிறு, குறு விவசாயிகள் பயன்.

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா)

- அட்மா திட்டத்தில் நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த 15,280 பயிற்சிகள், 4,543 கண்டுணர் பயணங்கள், 737 பண்ணைப் பள்ளிகள் மற்றும் 20,519 செயல் விளக்கத் திடல்கள் ரூ.45.47 கோடியில் நடத்தப்பட்டு 8,55,189 விவசாயிகள் பயன்.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம்

- 2022-2023 பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 18.54 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டு 39.64 இலட்சம் ஏக்கர் பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

- மொத்த சாகுபடி பரப்பளவில் 50 சதவிகிதம் காப்பீடு செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு 72 சதவிகிதம் சாதனை எய்தப்பட்டுள்ளது. ரூ.4,007 கோடி காப்பீட்டுக் கட்டண மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு.

- 2020-2021ஆம் ஆண்டிற்கான இழப்பீட்டுத் தொகையாக ரூ.2,609 கோடி, 13.02 இலட்சம் விவசாயிகளுக்கும் 2022-2023 ஆம் ஆண்டில், 'விதைப்பொய்த்தல்' ரூ.34.30 கோடி 19,282 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மண்வள மேலாண்மை

- 3.22 இலட்சம் மண்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு விநியோகம். 3,985 மண் சேகரிப்பு முகாம்கள் நடத்தப்பட்டது.

இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல்

- ரூ.1.85 கோடி மதிப்பீட்டில் 185 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு அக்ரி கிளினிக் அல்லது வேளாண் சார்ந்த தொழில் தொடங்குவதற்கு பட்டதாரி ஒருவருக்கு தலா ரூ.1 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

வேளாண் மண்டல குழுக்கள் அமைத்தல்

- வேளாண் மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டு, மாவட்டத்தில் நிலவும் நீர் ஆதாரம், நிலவளம், தட்பவெப்பம், இயற்கை பாதிப்புகள் உள்ளிட்ட சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு விவசாயிகளை இயற்கை பேரிடர்களிலிருந்து பாதுகாத்திட உரிய ஆலோசனைகள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டுப்பண்ணையம்

- 20 சிறு, குறு விவசாயிகள் கொண்ட 5,500 உழவர் ஆர்வலர் குழுக்கள் அமைப்பு. இத்தகைய 5 உழவர் ஆர்வலர் குழுக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு 100 விவசாயிகளைக் கொண்ட 1,100 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கம்.

- உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் விவசாயம் செய்வதற்குத் தேவையான பண்ணை இயந்திரங்கள் கொள்முதல் செய்திட மூலதன நிதியாக ரூ.55 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பண்ணையம்

- 24,800 ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் ரூ.117.35 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சர்க்கரைத் துறை

- கரும்பு இடைக்கால உற்பத்தி ஊக்கத்தொகையாக ரூ.33.31 கோடி, 91,120 விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

- கரும்பு சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.331.81 கோடி, 2,11,887 விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

- கரும்பு உற்பத்திக்கான சிறப்பு திட்டத்தில் அதிக மகசூல், அதிக சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு விதைப்பொருட்களான வல்லுநர் விதை கரும்பு, திசுவளர்ப்பு நாற்றுக்கள், பருசீவல் நாற்றுக்கள் ஆகியன வாங்குவதற்கு 2,037 விவசாயிகளுக்கு ரூ.2 கோடி மானியம் வழங்கப்பட்டது.

- நுண்ணீர்ப்பாசன திட்டத்தில் கரும்பில் 8,955 எக்டர் பரப்பில் நுண்ணீர்ப்பாசனம் அமைக்கப்பட்டு, 6,592 விவசாயிகள் பயன்.

- தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் (NADP) அதிக மகசூல், அதிக சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு விதைப்பொருட்களான வல்லுநர் விதை கரும்பு, திசுவளர்ப்பு நாற்றுக்கள், பருசீவல் நாற்றுக்கள், ஒருபரு விதைக்கரும்பு ஆகியன வாங்குவதற்கு 4,698 விவசாயிகளுக்கு ரூ.4.82 கோடி மானியம் வழங்கப்பட்டது.

- கலைஞரின் அனைத்துக்கிராம வேளாண்மை வளர்ச்சித்திட்டதில் அதிக மகசூல், அதிக சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு விதைப்பொருட்களான பருசீவல் நாற்றுக்கள், ஒருபருவிதைக்கரும்புஆகியன வாங்குவதற்கு 962 விவசாயிகளுக்கு ரூ. 0.86 கோடி மானியம் வழங்கப்பட்டது.

- கூட்டுறவு, பொதுத்துறை, தனியார் சர்க்கரை ஆலைகளுக்கான கரும்பு பதிவு பரப்பு (95,000 எக்டரிலிருந்து 1,50,000 எக்டராக) 55,000 எக்டர் அளவிற்கு அதிகரித்துள்ளது.

- கூட்டுறவு பொதுத்துறை, தனியார் சர்க்கரை ஆலைகளில் 2,55,12,387 மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது.

- தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 12 மெ.வாட் இணை மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள் முடிக்கப்பட்டு பயன்.
- எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 15 மெ,வாட் இணை மின் உற்பத்தி திட்டம், கள்ளக்குறிச்சி -1 மற்றும் 2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பணிகள் இயக்கம்.
- கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் 64,93,298 மெ.டன் கரும்பினை அரவை செய்து 9.08 சதவிகிதம் சர்க்கரை கட்டுமானத்தில் 5,83,099 மெ.டன் சர்க்கரையை உற்பத்தி செய்து உள்ளன.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

பிரதம மந்திரியின் நுண்ணீர்ப்பாசனத் திட்டம்

- பிரதம மந்திரியின் நுண்ணீர்ப்பாசனத் திட்டத்தில், 1,61,149 எக்டர் பரப்பளவில் செயல்படுத்திட ரூ.1,138.10 கோடி நிதியில் நுண்ணீர் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டு, 1,59,269 விவசாயிகள் பயன்.

தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM)

- மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே 60:40 நிதி பங்களிப்புடன் ஒரு உப திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தோட்டக்கலைப் பயிர்களின் முழுமையான வளர்ச்சிக்காக ரூ.205.23 கோடி செயல்படுத்தப்பட்டுள்ளது.
- நடவு செடிகள் உற்பத்தி இனத்தின் கீழ், 136 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்களுக்கான விதை உற்பத்தி திடல்கள் 49.291 எக்டர் பரப்பளவில் ரூ. 9,214.57 இலட்சம் நிதி சாதனை.
- பாதுகாக்கப்பட்ட சூழலில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியினை ஊக்குவிக்க 3,13,828 ச.மீ பரப்பளவில் பசுமைக்குடில், 1,01,500 ச.மீ. பரப்பளவில் நிழல் வலைக் குடில் மற்றும் 1,360 எக்டர் பரப்பளவில் நிலப்போர்வை ரூ.18.06 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு, ஒருங்கிணைந்த உரம் மற்றும் பூச்சி மேலாண்மையினை ஊக்குவிக்க 11,000 எக்டர் பரப்பிற்கு ரூ.1.16 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.



- 1,296 எண்கள் பண்ணை இயந்திரங்கள், விவசாயிகளுக்கு ரூ.3.12 கோடி நிதியில் வழங்கப்பட்டுள்ளது.
- அறுவடைக்குப் பின் செய் இழப்புகளை குறைக்க 870 சிப்பம் கட்டும் அறைகள், 2,835 எண்கள் குறைந்த செலவிலான வெங்காய சேமிப்பு கிடங்குகள் அமைக்கப்பட்டு, இதுவரை ரூ.38.05 கோடி நிதி மானியமாக விடுவிப்பு.
- ரூ.3.28 கோடி நிதியில், சந்தை உட்கட்டமைப்பு வசதிகள் அமைத்தல் இனத்தின் கீழ், 2,693 நடமாடும் விற்பனை வண்டிகள்.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

- பந்தல் வகை காய்கறிகளின் தரம் மற்றும் உற்பத்தியை அதிகரித்து, விவசாயிகள் 837.5 எக்டர் பரப்பில் நிரந்தர பந்தல் அமைத்து சாகுபடி செய்ய ரூ.14.19 கோடி நிதி செலவிடப்பட்டது.
- நஞ்சில்லா காய்கறிகளை உற்பத்தி செய்து மக்கள் உண்பதை உறுதி செய்யும் நோக்கத்துடன் ரூ.38.51 கோடி நிதியில் 20,000 எக்டர் பரப்பிலான காய்கறி பயிர்களை அங்கக முறையில் சாகுபடி செய்ய ஊக்கமளிக்கப்பட்டது.
- தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க பழங்கள், காய்கறிகள், சுவை தாளித பயிர்கள் ஆகியவை 21,713.6 எக்டரில் பயிரிடுவதற்கு ரூ.3,158.06 இலட்சம் நிதி
- விவசாயிகள் தரமான வாழைத்தார்களை உற்பத்தி செய்யும் விதமாக, 1,000 எக்டர் பரப்பிலான வாழை தோட்டங்களுக்கு, வாழைத்தார் உறைகள் ரூ.1.25 கோடி நிதியில் வழங்கப்பட்டன.

மானாவாரி பகுதி மேம்பாடு

- தோட்டக்கலை சார்ந்த பண்ணையம், கறவை மாடு மற்றும் ஆடு வளர்ப்பு அடங்கிய ஒருங்கிணைந்த பண்ணைய முறை அலகுகள் 6,200 எண்களில் ரூ.28.80 கோடி நிதியில் அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீன மயமாக்கல் திட்டம்

- 13,830 எக்டர் பரப்பில் பயிர் செயல் விளக்கத்திற்கு ரூ.28.17 கோடி நிதியும், 4,924 எக்டர் பரப்பில் நுண்ணீர் பாசனம் அமைப்பதற்கு ரூ.50.15 கோடி நிதியும், 2,664 எக்டர் பரப்பில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பிற்கு ரூ.0.31 கோடி நிதியும், 259 எக்டர் பரப்பில் நிலப்போர்வை அமைத்து பயிர் சாகுபடி செய்வதற்கு ரூ.0.39 கோடி நிதியும், 1,307 விவசாயிகள் கண்டுணர் பயணம் மேற்கொள்ள ரூ.0.26 கோடி நிதியும், 95 மாதிரி கிராமங்கள் அமைக்க ரூ.94.60 இலட்சம் நிதியும் செலவிடப்பட்டுள்ளது.

மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டம்

- தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பினை அதிகரிக்கவும், விளைச்சலைப் பெருக்கவும், தோட்டக்கலை விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் 100 சதவீத மாநில அரசின் பங்களிப்பில் 70.03 கோடி நிதியில் திட்டம் செயல்படுத்தப்பட்டு, இதுவரை ரூ.27.52 கோடி நிதி சாதனை.

பனை மேம்பாட்டு இயக்கம் (PDM)

- ரூ.1.588 கோடி நிதியில், 100 % மானியத்தில் 10 இலட்சம் பனை விதைகள் வழங்குதல், 50 % மானியத்தில் பனை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைத்தல், 50% மானியத்தில் பனை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க உபகரணங்கள் வழங்குதல், பனை ஏறும் விவசாயிகளுக்கு 75% மானியத்தில் கருவிகள் வழங்குதல் போன்ற திட்டக்கூறுகளுடன் செயல்படுத்தப்பட்டு, ரூ.0.87 கோடி செலவிடப்பட்டு, இதுவரை 86 இலட்சம் பனை விதைகளும் மற்றும் 1 இலட்சம் பனங்கன்றுகளும் முழு மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய மூங்கில் இயக்கம்

- மூங்கில் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக பொது நிலங்களில் 541 எக்டர் பரப்பளவிலும், தனியார் நிலங்களில் 220 எக்டர் பரப்பளவிலும், மொத்தம் 761 எக்டர் பரப்பில் ரூ.2.91 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டது.



❖ 382 எக்டர் எண்ணெய்ப்பனை சாகுபடி பரப்பு விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டு, மொத்த நிதி ரூ. 2.82 கோடியில், ரூ.0.47 கோடி சாதனை அடையப்பட்டுள்ளது.

கூட்டுப் பண்ணையத் திட்டம்

❖ கூட்டுப் பண்ணைய திட்டத்தின் மூலம், 500 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்பட்டு ரூ.25 கோடி தொகுப்பு நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு 50,000 சிறு,குறு விவசாயிகள் பயன்.

தோட்டக்கலைப் பயிர்களில் பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம்

❖ 2,62,696 விவசாயிகள் 80,103 எக்டர் பரப்பளவில் அறிவிப்பு செய்யப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களில் பயிர்க் காப்பீடு செய்துள்ளனர்.

❖ 2020-2021ஆம் ஆண்டு பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்களில் காப்பீடு செய்த விவசாயிகளில், 20,569 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.61.39 கோடி வழங்கப்பட்டுள்ளது.

அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

❖ 583 மெ.டன் காய்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வீட்டுக் காய்கறித் தோட்டங்களுக்கு விநியோகம்.

❖ 186 மெ.டன் உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள், 69 மெ.டன் உயிரி உரங்கள், 1,812 மெ.டன் ₹மண்புழு உரம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம்.

❖ உற்பத்தி செய்யப்பட்ட மொத்த நடவு செடிகள் 7247.62 இலட்ச எண்கள் ஆகும். விவசாயிகளுக்கு திட்டங்கள் மூலமாகவும் மற்றும் நேரடி விற்பனை மூலமாகவும் விநியோகம்.

வேளாண்மைப் பொறியியல் துறை

❖ வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின் கீழ், ரூ.61.54 கோடி மானியத்தில் 3,718 விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள்.

❖ கிராம அளவிலான 239 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க விவசாய குழுக்களுக்கு ரூ.19.05 கோடி மானியம்.

- வட்டார அளவிலான 51 வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைக்க விவசாய குழுக்கள், தொழில்முனைவோர், பெண்கள் சுய உதவி குழுக்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோருக்கு ரூ.4.92 கோடி மானியம்.

- கரும்பு சாகுபடிக்கான வேளாண் இயந்திரங்களை குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு வழங்கிட ரூ.8.35 கோடி மானிய உதவியுடன் 20 கரும்பு சாகுபடிக்கான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 10 மையங்கள் ரூ.4.64 கோடி மானியத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

- விவசாயிகள் தாங்கள் விளைவித்த வேளாண் விளைபொருட்களின் சேமிப்புகால அளவினை அதிகரித்து, அவற்றின் மதிப்பைக் கூட்டிட 809 வேளாண் விளைபொருட்கள் மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் ரூ.4.12 கோடி மானியத்தில் தனிப்பட்ட விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், சுய உதவி குழுக்கள், விவசாய பயன்பாட்டு குழுக்கள், தொழில்முனைவோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டும் இயந்திர சேவை மையங்கள் 37 உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.1.82 கோடி மானியம்.

- வேளாண் மையில் சூரிய சக்தி உபயோகத்தினை பிரபலப்படுத்தும் வகையில் நீர்ப்பாசன வசதிக்காக விவசாயிகளுக்கு ரூ.37.40 கோடி மானிய உதவியில் சூரிய சக்தியால் இயங்கும் 1,857 பம்பு செட்டுகள்.

- விவசாயிகளுக்கு ரூ.3.62 கோடி மானியத்தில், 200 பாலி கார்பனேட் பசுமை குடில் போன்ற சூரிய கூடார உலர்த்திகள்.

- ரூ.2.34 கோடி மானியத்தில், தமிழ்நாட்டின் வனப்பகுதியை ஒட்டியுள்ள விவசாய நிலங்களை சேதப்படுத்தும் விலங்குகளிடம் இருந்து தங்களது பயிர்களை பாதுகாத்திட 253 விவசாயிகளுக்கு சூரிய மின்வேலி அமைத்துத் தரப்பட்டுள்ளது.

- ரூ.9.19 கோடி செலவில், வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை பாதுகாப்பாக வைத்திட 42 வேளாண் இயந்திரங்களுக்கான பாதுகாப்பு கூடங்கள்.



- 15 வேளாண் இயந்திரங்கள் பழுது நீக்கும் பராமரிப்பு மையங்கள், ரூ.59.50 இலட்சம் மானியம்

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதி உதவியுடன் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள 6 பணிமனைகளில் 24 பயிற்சிகள் 353 ஊரக இளைஞர்களுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தி பம்பு செட்டுகள் கையாளுதல், பராமரித்தல் மற்றும் இயக்குதல் தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சி.

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ்,

- ரூ.33.33 கோடி செலவில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் ஏற்படுத்தப்பட்ட அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கிராம பஞ்சாயத்துகளில் வேளாண்மைப் பொறியியல்துறை மூலம் பாசன பரப்பு இல்லாத தேர்ந்தெடுக்கப்பட்ட தரிசு நில தொகுப்பிற்கு 525 ஆழ்துளை கிணறுகள்.
- ரூ.6.57 கோடி செலவில், தனிப்பட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில், 293 கிணறுகள் (ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள்) அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.
- ரூ.5.77 கோடி செலவில், விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில், 669 பண்ணைக் குட்டைகள்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 1,097 சிறுபாசன குளங்கள், ஊரணிகள், குளங்கள், வரத்து கால்வாய்கள் மற்றும் இதர நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் ரூ.5.03 கோடி செலவில் தூர்வாரி மேம்படுத்தப்பட்டுள்ளது.
- ரூ.9.22 கோடி மானியத்தில், 1,122 விவசாயிகளுக்கு விசை உழுவை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.
- நீர்வடிப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள நீர் சேகரிப்பு கட்டமைப்புகளுக்கு வரும் நீரோட்டத்தை அதிகரிக்க, நீர் சேகரிப்பு கட்டமைப்புகளைத் தூர்வாரி, ஆழப்படுத்தி அவற்றின் கொள்ளளவை அதிகரித்திட வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்கள் மூலம் 899 கட்டமைப்புகளில் ரூ.1.79 கோடி செலவில் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.
- நதிப்பள்ளத்தாக்கு திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள தென்பெண்ணையாறு மற்றும் சிறப்புப்பகுதி மேம்பட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.31.18 கோடி செலவில் நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பல்வேறு மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகள்.
- ரூ.3.41 கோடி செலவில், மயிலாடுதுறை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 573 எக்டர் உவர் நிலங்கள் வேளாண் உற்பத்திக்கு பயன்படும் வகையில் சீரமைப்பு.
- ரூ.8.73 கோடி மானியத்தில், பிரதம மந்திரி வேளாண் பாசனத் திட்டம் - ஒவ்வொரு வயலுக்கும் நீர் என்ற உபகூறின் கீழ், நிலத்தடி நீர்ப்பாசன வசதி சிறு குறு, ஆதி திராவிட விவசாய குழுக்களுக்கு 165 கிணறுகள்.
- ரூ.73.87 இலட்சம் மானியத்தில், உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்வள நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ் 146 பண்ணைக் குட்டைகள்.
- ரூ.4.97 கோடி செலவில் காவிரி, வெண்ணாறு வடிநிலப்பகுதியில் உள்ள தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் கடலூர் ஆகிய 5 மாவட்டங்களில் 1,587.87 கிலோ மீட்டர் நீளத்திற்கு "சி", "டி" பிரிவு வாய்க்கால்களில் தூர்வாரும் பணிகள்.
- விவசாயிகள் பாசன நீரை இறைத்திட உதவும் வகையில் 845 புதிய மின்மோட்டார் பம்புசெட்டுகள் ரூ.83 இலட்சம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- 185 டிராக்டர்கள், டிராக்டரால் இயங்கக்கூடிய 185 ரோட்டவேட்டர்கள், 185 கொத்துக் கலப்பைகள், 10 நெல் அறுவடை இயந்திரங்கள் மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்களையும், கருவிகளையும் பழுது பார்த்திட 3 நடமாடும் பழுது நீக்கும் வாகனங்கள் வேளாண்மைப் பொறியியல் துறையால் ரூ.25.80 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளின்

பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசு நிர்ணயித்த குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

- 4,456 இயந்திரங்களின் உரிமையாளர் பெயர், விலாசம், அலைபேசி எண் போன்ற விவரங்கள் வட்டாரம் மற்றும் மாவட்ட வாரியாக, உழவன் செயலியில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்கள் பற்றிய 50 செயல் விளக்கங்கள்

- 256 ஆதிதிராவிட சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.1.61 கோடி 20 சதவிகிதம் கூடுதல் மானிய உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

புதிய கல்லூரிகள்

- கரூர், நாகப்பட்டினம், சிவகங்கை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அரசு வேளாண்மை மற்றும் தோட்டக்கலைக் கல்லூரிகள் ரூ.40 கோடியில் துவக்கம்.

- ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்வழிக் கல்வித் திட்டத்தின்கீழ், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டப்படிப்புகளை துவங்க ஆணை.

புதிய மையங்கள்

- ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் ரூ.2 கோடியில் மஞ்சள் ஆராய்ச்சி மையம்.

- ரூ.3 கோடியில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் செயல்பாட்டில் உள்ள வளம்குன்றா அங்கக வேளாண்மைத் துறையினை, நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையமாக மேம்பாடு.

- செட்டிநாட்டில் வறட்சி நில பயிர்களின் ஆராய்ச்சி மேம்பாட்டுத் திட்டம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் துவங்கப்பட்டுள்ளது.

புதிய ஆராய்ச்சித் திட்டங்கள்

- ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கிள்ளிகுளத்தில் பனைமர ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டம்.

- தமிழ்நாட்டின் 24 மாவட்டங்களில் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் கல்லூரிகளில் பல்கலைக்கழக பயிற்சி மையங்கள் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் துவக்கம்.

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் அதிக மகசூல் தரும் பயிர் வகைகளை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த ரூ.5.57 கோடி ஒதுக்கீடு.

- தொலையுணர்வு தொழில்நுட்பம் மூலம் இயற்கை வளங்களை ஆராய்ந்து பயிர், மண் மற்றும் நீர் குறித்த தகவல்கள் கணினிமயமாக்க ரூ.72 இலட்சம் ஒதுக்கீடு.

- வேளாண் வணிகத்தில் தொழில்முனைவோரை ஊக்குவிக்க ரூ.130 இலட்சம் ஒதுக்கீடு.

- விதை உற்பத்தித் திறனை அதிகரித்து புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களை உற்பத்தி செய்து வழங்குவதற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு.

- நானோ தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, கிராமப்புற விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அதிகரிக்க ரூ.200 இலட்சம் ஒதுக்கீடு.

- திருச்சி மாவட்டம், குமுளூர் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இரண்டு வருட வேளாண் பொறியியல் பட்டப்படிப்பு துவங்க வேளாண்மைப் பொறியியலில் பட்டயப்படிப்பு அறிமுகப்படுத்த ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு.

- பண்ணைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்த டிஜிட்டல் விவசாயத்தை ஊக்குவிக்க ரூ.200 இலட்சம் ஒதுக்கீடு.

- பல்கலைக்கழக வேளாண் தொழில்நுட்ப இணையதளம் மற்றும் சமூக ஊடகங்களை மறுசீரமைக்க ரூ.40 இலட்சம் ஒதுக்கீடு.

- வேளாண் அறிவியல் நிலையங்களில் ஒற்றைச் சாளர விற்பனை மையங்களை நிறுவுவதற்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு.



- பூச்சி அருங்காட்சியகத்தை பலப்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும் ரூ.125 இலட்சம் கூடுதல் மதிப்பீட்டில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலங்களில் களர் மற்றும் உவர் நிலங்களுக்கு உகந்த மாற்று பயிர்களைக் கண்டறிதல் மற்றும் உகந்த வேளாண் உத்திகளை செயல்படுத்துவதற்காக ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- காவிரிப் படுகை மண்டலத்தில் சிக்கனமாக நீர் உபயோகித்தல் மற்றும் சிறந்த பயிர் சுழற்சிகளின் மூலம் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சித்திட்டத்திற்கு ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் விவசாயிகளின் நலனுக்காக, 17 புதிய பயிர் இரகங்கள், 3 மேலாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் 5 பண்ணை கருவிகள்.

தரவரிசை

- கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தென்னிந்தியாவில் உள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகங்களுக்கிடையே முதலிடத்தையும், இந்திய அளவில் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளதாகக் கல்வி உலகம் பத்திரிகை நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2020 ஆம் ஆண்டிற்கான இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக தரவரிசையில் எட்டாவது இடத்தை பெற்றுள்ளது. இந்த பல்கலைக்கழகமானது இந்தியாவில் உள்ள 67 வேளாண் நிறுவனங்களில் எட்டாவது இடத்தையும் தேசிய அளவிலான மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் நான்காவது இடத்தையும், தென்னிந்திய வேளாண்மைப் பல்கலைக்கழகங்களுக்கிடையே இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது.

- இந்திய வேளாண் வணிக மேலாண்மைக் கல்வி நிறுவனங்களின் செயல் திறன் குறித்த தரவரிசைப் பட்டியலில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் மற்றும் ஊரக மேலாண்மைத் துறை, 15ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

- குவாக்கரெல்லி சைமண்ட்ஸ் உலக தரவரிசை அமைப்பில் பட்டியலிடப்பட்ட இந்தியாவின் ஒரே வேளாண் பல்கலைக்கழகம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

ஆகும், மேலும் தெற்கு ஆசிய பல்கலைக் கழகங்களில் ஒட்டுமொத்த தரவரிசையில் 65ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.

விருது

- தேசிய அளவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பசுமை மற்றும் தூய்மையான வளாக விருது, தோட்டக்கலை, வனவியல் மற்றும் வேளாண் பொறியியல் துறையில் முதுகலை விருது என இரண்டு விருதுகளைப் பெற்றுள்ளது.
- இந்திய அரசின் தோட்டக்கலைத் துறையின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுக்கான திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியமைக்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் விருது.
- 2021ஆம் ஆண்டிற்கான சர்தார் பட்டேல் சிறந்த இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழக விருது.
- 2021ஆம் ஆண்டின் சிறந்த பல்கலைக் கழகத்திற்கான விருது. 17ஆவது FICCI உயர்கல்வி மாநாட்டில் வழங்கப்பட்டது.

விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத்துறை

- 133,054 ஹெக்டேர் பரப்பளவில், 2,49,279 மெட்ரிக் டன் அளவு விதைகளுக்கு சான்றளிப்பு.
- 1,46,705 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதைத் தரங்களை உறுதி செய்திட 1,07,621 விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு 4,706 மெட்ரிக் டன் விதைகள் விற்பனைக்குத் தடை.
- தரமான விதைகள் விவசாயிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்வதற்காக 30 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில், 2,16,042 விதை மாதிரிகளின் தரங்கள் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.
- பயிற்சிப் பிரிவின் மூலம் நவீன உத்திகள் குறித்து 48,036 விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விதை சாகுபடியாளர்களுக்குப் பயிற்சி.
- 32 அங்ககச்சான்று நிறுவனங்களில், அங்ககச் சான்றளிப்பிற்காக 86,284 ஏக்கர் பரப்பு பதிவு.



❖ தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையில் மின் ஆளுமையை செயல்படுத்தும் பொருட்டு களப்பணியாளர்களுக்கு தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் விதை மாதிரிகள் சேமிப்பு வசதி வழங்குவதன் மூலம் விதைத் தரக் கட்டுப்பாட்டு பிரிவினை வலுப்படுத்துவதற்காக ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

❖ கொரோனா-19 பெருந்தொற்று காலத்திலும், 284 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தங்கு தடையின்றி செயல்பட்டு வருகின்றன. ரூ.325 கோடி மதிப்பிலான 1.15 இலட்சம் மெட்ரிக்டன் விளைபொருட்கள் பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டு 510 கிடங்குகளில் 77,766 மெ.டன் விளைபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. பொருளீட்டுக் கடனாக 225 விவசாயிகள் ரூ,3.73 கோடி பெற்றுள்ளனர்.

❖ உழவர் சந்தை விவசாயிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களால் 48,388 மெ.டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் வாகனங்கள் மூலம் நுகர்வோர்களுக்கு நேரடியாக விற்பனை.

❖ மாநில அளவிலும் மற்றும் ஒவ்வொரு மாவட்ட அளவிலும் விவசாயிகள் உதவி மையத்துடன் கூடிய கட்டுப்பாட்டு அறை.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

❖ ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 44.33 இலட்சம் மெ.டன் வேளாண் விளைபொருள் வர்த்தகம். ரூ.210.24 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

❖ 2022-2023ஆம் ஆண்டில் தேசிய அளவில் தமிழ்நாட்டில் முதன்முறையாக 101 கிடங்குகளுக்கு கிட்டங்கி மேலாண்மை ஒழுங்கு முறை ஆணையத்திடம் ஒப்புதல் பெறப்பட்டு ஒன்றிய அரசின் அங்கீகாரமும் பாராட்டும் பெறப்பட்டுள்ளது.

❖ 127 மின்னணு தேசிய வேளாண் சந்தைகளில் ரூ.1,352 கோடி மதிப்பிலான 32 இலட்சம் தேங்காய் மற்றும் 62 இலட்சம் குவிண்டால் இதர விளைபொருட்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டு, 4.22 இலட்சம் விவசாயிகளுக்கு மின்னணு தேசிய வேளாண் சந்தை வலைத்தளத்தின் வழியாக ரூ.1,256 கோடி பரிவர்த்தனை.

❖ திருவாரூர் மாவட்டத்தில், திருவாரூர், திருத்துறைப்பூண்டி, பூந்தோட்டம் மற்றும் மன்னார்குடி ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.14 கோடி மதிப்பீட்டில், 9,500 மெ.டன் கொள்ளளவில் 5 சேமிப்பு கிடங்குகள்.

❖ 6,500 மெ.டன் கொள்ளளவு கொண்ட 6 சேமிப்பு கிடங்குகள், 50 உலர்களங்கள், 2 தொடர் ஓட்ட உலர்விப்பான், 2- மறு சுழற்சி தொகுப்பு உலர்விப்பான், ரூ.16.50 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதியுதவி மூலம் ஏற்படுத்த ஆணை.

❖ வரத்து மிகுதியுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு அருகில், 10 இடங்களில் 500 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு வசதியுடன் கூடிய துணை விற்பனைக்கூடங்கள் ரூ.9.40 கோடி மதிப்பீட்டில் பணிகள்.

❖ திருவாரூர் மாவட்டத்தில் பருத்தி விவசாயிகள் நலனுக்காகப் பருத்தி விதை நீக்கும் இயந்திரம் நாளொன்றுக்கு 50 மெ.டன் திறனுடன் ரூ.5 கோடி மதிப்பில் ஏற்படுத்த ஆணை.

❖ புதுக்கோட்டை மாவட்டம், சிதம்பரவிடுதி, நாமக்கல் மாவட்டம், எருமபட்டி, திருப்பூர் மாவட்டம், பூலவாடி மற்றும் ஈரோடு மாவட்டம், பர்கூர் ஆகிய இடங்களில் 250 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள்.

❖ ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 28 இடங்களில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் உலர்க்களங்கள் அமைக்க ஆணை.

❖ நீலகிரி மாவட்டத்தில் ரூ.35 இலட்சத்தில் விவசாயிகள் பயன்பாட்டிற்காகச் சிறு தானியங்கள் பதப்படுத்தும் அலகு. நீலகிரி



மாவட்டம், எடப்பள்ளியில் ரூ.2 கோடியில் ஒருங்கிணைந்த கிராம வேளாண் சந்தை வளாகம்.

❖ நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை பகுதியில் ரூ.50 இலட்சத்தில் விளையும் மிளகினை விவசாயிகள் பதப்படுத்தும் வகையில், மிளகிற்கான பதப்படுத்தும் மையம்.

❖ தஞ்சாவூர் மாவட்டத்தில், ரூ.5.20 கோடியில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தென்னை மதிப்புக் கூட்டும் மையம்.

❖ விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் மேலும் இரண்டாம் கட்டமாகச் சேலம், ஈரோடு, திருவள்ளூர், காஞ்சிபுரம் செங்கல்பட்டு, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் கரூர் ஆகிய 9 மாவட்டங்களில் நபார்டு வங்கி ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மூலம் ரூ.102.47 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்தும் பணி.

உழவர் சந்தைகள்

❖ உழவர் சந்தைகளில். நாள் ஒன்றுக்கு ரூ.6.86 கோடி மதிப்புள்ள 2,066 இலட்சம் மெட்ரிக் டன் காய்கனிகள், 7,950 இலட்சம் விவசாயிகளினால் 3.19 இலட்சம் நுகர்வோருக்கு விற்பனை.

❖ 50 உழவர் சந்தைகளை நவீன வசதிகளுடன் புனரமைத்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்கு ரூ.12.5 கோடி ஒதுக்கீடு.

❖ உழவர் சந்தைகளின் காய்கறி கழிவுகளை உரமாக்குவதற்கு 25 உழவர் சந்தைகளில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் உரம் தயாரிக்கும் அலகுகள்.

❖ ரூ.4.53 கோடி மதிப்பீட்டில், 10 மாவட்டங்களில் பேரூராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளில் புதியதாக 10 உழவர் சந்தைகள். மாநகராட்சி பகுதிகளில் ரூ.60 இலட்சத்தில் பண்ணை காய்கனிகள் கிடைக்க 30 நடமாடும் காய்கனி அங்காடிகள்.

❖ ரூ.2.30 கோடி மதிப்பீட்டில், 50 உழவர் சந்தைகள் மற்றும் 50 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மின்னணு விலை பலகைகள்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்

❖ 381 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையால் உருவாக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

❖ இடைநிலை மூலதன உதவித் திட்டத்தின்கீழ், 273 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு

ரூ.23.30 கோடி வணிகம் செய்வதற்காகக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

❖ உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிகம் செய்வதற்காக ரூ.5 கோடி செலவில் 50 சிறப்பு அங்காடிகள். 140 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிகம் செய்வதற்காக ரூ.12.45 கோடி நிதியுதவி.

❖ பாரதப் பிரதமர் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்துதலுக்கான திட்டத்தில் 8,298 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 1,809 கடன்கள் ஒப்பளிப்பு.

வேளாண் உட்கட்டமைப்பு நிதி (AIF)

❖ இத்திட்டத்தில் 2381 கடன்கள் மூலம் ரூ. 586 கோடி வழங்கப்பட்டுள்ளது.

விலை ஆதரவு திட்டம்

❖ ரூ.31 கோடி மதிப்பிலான 4,283 மெ.டன் மெ.டன் பயறு வகைகள் 4640 விவசயிகளிடமிருந்தும் ரூ.419 கோடி மதிப்பிலான 39,543 மெ.டன் கொப்பரை 33,573 விவசயிகளிடமிருந்தும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

உணவுப் பூங்காக்கள் அமைத்தல்

❖ திருநெல்வேலிமாவட்டம்,கங்கைகொண்டான் சிப்காட் தொழிற் பூங்காவில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் ரூ.77.02 கோடி மதிப்பீட்டில் பெரிய அளவிலான உணவுப் பூங்கா.

❖ ரூ.191.88 கோடி திட்ட மதிப்பீட்டில், 10 ஏக்கர் பரப்பளவில் கடலூர், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், மதுரை ஆகிய ஏழு இடங்களில் "வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள் அமைத்தல்" திட்டத்தின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வேளாண் ஏற்றுமதி வளர்ச்சி

❖ ரூ.1 கோடி மதிப்பீட்டில், சென்னை, கிண்டியில் உள்ள வேளாண் பசுமைப் பூங்கா வளாகத்தில் தேவையான உள்கட்டமைப்புகளுடன் கூடிய வேளாண் ஏற்றுமதி வசதி மையம்.

❖ விவசாய ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு ரூ.2 இலட்சம் ரொக்கப் பரிசு.

❖ மாநிலத்தின் தனித்துவமான பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறும் நடவடிக்கைகள்.

❖ சோழவந்தான் வெற்றிலை, பண்ருட்டி பலா, முந்திரி போன்றவற்றிற்கான புவிசார் குறியீடு பெறப் பதிவு செய்யும் பணி நிறைவடைந்துள்ளது. மீதமுள்ள பொருட்களுக்கான புவிசார் குறியீடு பெரும் பணியும் நடைபெற்று வருகிறது.

❖ தேனி, திண்டுக்கல், கரூர், தூத்துக்குடி, அரியலூர், திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய ஏழு மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியை முருங்கை ஏற்றுமதி மண்டலமாக அறிவிக்கப்பட்டு, முருங்கைக்கென மதுரையில் சிறப்பு ஏற்றுமதி சேவை மையம்.

❖ தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பயிற்சி மையம் மூலம் ரூ.23.30 இலட்சம் மதிப்பில் 1,813 தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 68 பயிற்சிகள்.

மின்னணு மயமாக்குதலுக்கான ஏற்பாடுகள்

❖ ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் வணிகர்களுக்கான மின்னணு உரிமம்.

❖ மின்னணு முறை மூலம் கிடங்குகள் மற்றும் குளிர்பதன கிடங்குகளில் முன்பதிவு.

❖ உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பொருட்களை மின்னணு சந்தையில் வணிகம்.

❖ உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாடுகளை கண்காணிக்கும் பொருட்டு தகவல் மேலாண்மை அமைப்பு.

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

❖ "பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு"" நிதியின் கீழ் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப் பகுதிகளில் பருவநிலை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ரூ.7.51 கோடி நிதி விடுவிப்பு.

❖ ❖ ❖



மயிலாடுதுறை மாவட்டம், நல்லாடை கிராமத்தில் இயந்திரம் மூலம் நடவு செய்யும் பணியினை பார்வையிடல் - 31.05.2022



'ஊட்டச்சத்தை உறுதி செய்' திட்டத்தின் கீழ், குழந்தைகளின் வளர்ச்சியை கண்டறிவதற்கான சிறப்பு மருத்துவ முகாமை பார்வையிடல் - 21.05.2022



வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்

திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்

அவர்கள்

வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம்

- சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், 5,80,933 பயனாளிகளுக்கு புதியதாக ஓய்வூதிய ஆணை.
- வருவாய்த்துறை மூலம் ஓய்வூதியம் பெற்றுவரும் கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்வு.

கொரோனா நிவாரணம்

- கொரோனா நோயினால் இறந்த 77 வருவாய்த் துறை முன்களப் பணியாளர்களுக்கு தலா ரூ.25 இலட்சம் நிவாரணம்.
- சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வழங்கும் ஓய்வூதியத் தொகைக்கான நிதி ஒதுக்கீடு ரூ.4,807.56 கோடியாக உயர்வு.





❖ கிராம உதவியாளர் நிலையில், 1,988 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை

❖ மாண்டஸ் புயல் கரை கடந்த போது Cell Broadcast மூலம் பாதிப்புக்குள்ளாகும் நான்கு பகுதிகளுக்கு TATASkyமூலம்எச்சரிக்கைசெய்திவழங்கப்பட்டது.

❖ 2022ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவமழை காலத்தில், 8.226.81 ஹெக்டேர் பரப்பில் நிவாரணமாக 12,093 விவசாயிகளுக்கு ரூ.11.05 கோடி வழங்கப்பட்டுள்ளது.

❖ 2022ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில், 38,155.44 ஹெக்டேர் பரப்பில் சேதமடைந்த பயிர்களுக்கு நிவாரணமாக 49,681விவசாயிகளுக்குரூ.51.41கோடிநிதிஒதுக்கீடு.

❖ மாண்டஸ் புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களான செங்கல்பட்டு, சென்னை, இராமநாதபுரம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் மீனவர்களுக்கு ரூ.467.04 இலட்சம் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு.

❖ மாண்டஸ் புயலின் காரணமாக, 22 மாவட்டங்களில் சேதமடைந்துள்ள 54,91.84 ஹெக்டேர் நிலப்பரப்புள்ள வேளாண் பயிர்களுக்கு ரூ.7.34 கோடி நிவாரணத் தொகை மற்றும் 10 மாவட்டங்களில் சேதமடைந்துள்ள 1,244.4 ஹெக்டேர் நிலப்பரப்புள்ள தோட்டக் கலைப் பயிர்களுக்கு ரூ.1.75 கோடி நிவாரணத் தொகை.

❖ நாகப்பட்டினம் மாவட்டத்தில் நம்பியார் நகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்களை பேரிடர் காலங்களில் பாதுகாப்பாக தங்க வைக்க ரூ.6.35 கோடி மதிப்பீட்டில் பேரிடர் மீட்பு மையம்.

❖ தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் செயல் திறனைவலுப்படுத்த ரூ.2.31கோடி நிதி ஒதுக்கீடு.

❖ தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறைக்கு உபகரணங்கள் கொள்முதல் பயிற்சி வழங்கவும் ரூ.10.51 கோடி நிதி ஒதுக்கீடு.

❖ பேரிடர் காலங்களில், மீட்புப் பணிக்கான அத்தியாவசிய கருவிகள் வாங்குவதற்காக சென்னை மாநகர காவல்துறைக்கு ரூ.74.98 இலட்சம் நிதியும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிதுறைக்குரூ.4.70கோடிநிதியும்ஒதுக்கீடு.

- மாண்டஸ் புயலினால் பாதிக்கப்பட்ட மின் உற்பத்தி மற்றும் பகிர்மான வாரியத்தின் உள்கட்டமைப்புகளை சீர் செய்வதற்கு ரூ.1.27 கோடி நிதி ஒதுக்கீடு.
- பருவம் தவறிய மழையால், 9 மாவட்டங்களில் 93,873 ஹெக்டேர் பரப்பில் பாதிக்கப்பட்ட 1,33,907 விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.112.72 கோடி நிதி ஒதுக்கீடு.
- மாநில பேரிடர் மேலாண்மை கொள்கை வெளியீடு.
- தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை திட்டம் 2023 வெளியீடு.
- சென்னை வடிநிலப் பகுதிகளான (basin) அடையாறு, கூவம், கொசஸ்தலையார் மற்றும் கோவளம் பகுதிகளுக்கு ரூ.71.22 கோடி மதிப்பீட்டில், சென்னை நிகழ் நேர வெள்ள முன்னறிவிப்பு மற்றும் இடம் சார் முடிவுகள் மேற்கொள்ள உதவும் அமைப்பு.
- ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் அதிவேக அச்சுப் பொறிகள் (Printers) வழங்கப்பட்டுள்ளது.
- பல்வேறு பேரிடர் தணிப்பு பணிகளுக்காக மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ரூ.373.50 கோடி நிதி ஒதுக்கீடு.
- தமிழ்நாடு மாநில அவசர நிலை மேலாண்மை தரவுதளம் அமைக்கப்பட்டுள்ளது.
- வெள்ளம் குறித்த முன்னெச்சரிக்கையை வழங்க புயல் சீற்ற மாதிரி (Storm Surge Model) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நில நிருவாகம்

- மாநிலம் முழுவதும் நில எடுப்புப் பணிகளை ஒருங்கிணைக்கவும்,துரிதப்படுத்தும்விதமாகவும்40 பணியிடங்களைஉள்ளடக்கியபிரத்யேகஅமைப்பாக தமிழ்நாடு நில எடுப்பு முகமை (LAATAN) என்ற தனி அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- நில நிருவாக ஆணையத்தின் நில எடுப்புப் பிரிவுகளும் தமிழ்நாடு நில எடுப்பு முகமையுடன் 6,844 ஹெக்டர் பரப்பில் ரூ.9,784 கோடி இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

கிராம நிருவாக அலுவலர்களுக்கான ஒருவழி / இருவழி மாறுதல்கள்

- மாவட்ட மாறுதல்களுக்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.10.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, 261 கிராம நிருவாக அலுவலர்களுக்கு ஒருவழி மாவட்ட மாறுதல் வழங்கியும், 134 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மனமொத்த இருவழி மாவட்ட மாறுதல் வழங்கியும் இணையதளம் மூலம் ஆணை.

வருவாய்த்துறை கட்டடங்கள்

- ரூ.114.48 கோடி நிதி ஒதுக்கீட்டில் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு,புதியமாவட்டஆட்சியர்அலுவலகப் பெருந்திட்ட வளாகம்.
- ஒருங்கிணைந்த நாகப்பட்டினம் மாவட்டத்தை இரண்டாக பிரித்து புதியதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை வட்டத்திற்கு, மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம் அமைத்திட மயிலாடுதுறை மாவட்டம், மன்னம்பந்தல் கிராமத்தில் 8.57 ஹெக்டேர் நிலத்தினை கிரயம் செய்திட ஏதுவாக ரூ.10.32 கோடி நிதி ஒதுக்கீடு.
- விருதுநகர் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடம் கட்ட ரூ.70.57 கோடி நிதி ஒதுக்கீடு.
- மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் கட்ட ரூ.7.39 கோடி நிதி ஒதுக்கீடு.
- தருமபுரி மாவட்ட ஆட்சியரக வளாகத்தில், கூடுதல் கட்டடம் (தரைதளம் + 5 தளங்கள்) கட்ட ரூ.36.62 கோடி நிதி ஒதுக்கீடு.
- திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் மக்கள் குறைதீர்வு கூட்டரங்கம் மற்றும் கூடுதல் அலுவலக கட்டடங்கள் கட்ட ரூ.12.17 கோடி நிதி ஒதுக்கீடு.
- ஐந்து வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் எட்டு வட்டாட்சியர் குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.25.03 கோடி நிதி ஒதுக்கீடு.

பேரிடர் மேலாண்மை

- வடகிழக்கு பருவமழை காலத்தில், பேரிடர் தொடர்பான எச்சரிக்கை தகவல்கள் 1,70,71,336 நபர்களுக்கு குறுஞ் செய்தி வாயிலாக அனுப்பப்பட்டுள்ளன.
- மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தின் 1070 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் வரப்பெற்ற 7,539 புகார்கள் மீது தீர்வு.
- மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையத்தின் கட்டணமில்லாத் தொலைபேசி 1077 எண்ணிற்கு வரப்பெற்ற 10,327 புகார்கள் மீது நடவடிக்கை.
- சமூக அளவிலான முதல்நிலை மீட்பாளர்களை உருவாக்கும் வகையில், 14 கடலோர மாவட்டங்களில் முதல்நிலை மீட்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்திற்கு ரூ.20.42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 65,000 குடியிருப்பு வாசிகள் முதல்நிலை மீட்பாளர்களாகப் பயிற்சி.
- 14 கடலோர மாவட்டங்களில் பேரிடர் காலங்களில் அத்தியாவசியப் பணிகள் எவ்விதத் தடையுமின்றி தொடர்ச்சியாக நடைபெறும் வகையில் 38 வருவாய் அலுவலகங்களுக்கு 2 கிலோவாட் திறன் கொண்ட 66 மின்னாக்கிகள் வாங்க ரூ.41 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள் வட்டங்களில் பெய்யும் மழையை உடனுக்குடன் அளவிட 1,400 தானியங்கி மழைமானிகள் மற்றும் 100 தானியங்கி வானிலை மையங்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு.
- 1,400 தானியங்கி மழைமானிகள் மற்றும் 100 தானியங்கி வானிலை மையங்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு.
- வடகிழக்குப் பருவமழை காலத்தில் 09.11.2022 அன்று தென்மேற்குப் வங்கக்கடல் மற்றும் அதன் அருகில் மத்திய இந்தியப் பெருங்கடல் பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்ததாழ்வு மண்டலம் காரணமாக பல்வேறு மாவட்டங்களில் கனமழை மற்றும் மிககனமழைப் பொழிவு ஏற்பட்டதால், 20,305 குடும்பங்களைச் சேர்ந்த 57,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர், மருத்துவவசதிகள் மற்றும் பிற அடிப்படை வசதிகள்.
- கனமழையால் பாதிப்பிற்குள்ளான மக்களுக்கு இதுவரை, மனித உயிரிழப்பு, கால்நடை இறப்பு மற்றும் குடிசை சேதம் ஆகியவற்றிற்கு 15,091 குடும்பங்களுக்கு ரூ.12.73 கோடி நிவாரணம்.
- மயிலாடுதுறை மாவட்டத்தில், சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டங்களில் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்பு அடைந்த 1,61,647 குடும்பங்களுக்கு ரூ.1,000 வீதம் 16.16 கோடி வழங்கப்பட்டது.



- பாதிப்பிற்குள்ளான 4,803.24 ஹெக்டேர் வேளாண் பயிர்களுக்கு நிவாரணமாக 58,976 விவசாயிகளுக்கு ரூ.6.42 கோடி இடுபொருள் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- டிசம்பர் 9 அன்று இரவு மாமல்லபுரம் கடற்கரை அருகே கரை கடந்த மாண்டஸ் புயலின் தாக்கத்திலிருந்து 3,771 குடும்பங்களைச் சார்ந்த 10,843 நபர்கள் 216 நிவாரண முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டு உயிர் சேதம் பெருமளவில் தவிர்க்கப்பட்டது.

- மாண்டஸ் புயல் கரையை கடந்தவுடன் ஒரே நாளில் மக்களின் அன்றாட வாழ்க்கை எவ்வித பாதிப்புமின்றி இயல்புநிலை திரும்பியது. மாண்டஸ் புயலை எதிர்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவுரைகளின் பேரில் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக பெரும்சேதம் தவிர்க்கப்பட்டதை ஊடகங்களும், சமூக வியலாளர்களும் பாராட்டியுள்ளனர்.

நில நிருவாகத் துறை

இலவச வீட்டுமனை ஒப்படை

- வீடற்ற ஏழை, எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனை ஒப்படை வழங்கும் வகையில் 50,601 நபர்களுக்கும், ஆதிதிராவிடர்/பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை நிலங்களில் குடியிருந்துவரும் 1,49,092 நபர்களுக்கு, புறம்போக்கு நிலங்களில் குடியிருந்துவரும் 26,297 நபர்களுக்கும் இலவச வீட்டுமனை பட்டாக்களும், நத்தம்/நகர நிலவரித் திட்டத்தின் கீழ் 1,20,072 நபர்கள் என மொத்தம் 3,46,062 நபர்களுக்கு இணைய வழியாக பட்டாக்கள்.

விரைவுப் பட்டா மாறுதல் திட்டம்/இணையதள வழியிலான பட்டா மாறுதல் திட்டம்

- 19,60,211 இனங்களுக்கு இணைய வழியாகப் பட்டாக்களும், 24,30,486 உட்பிரிவு இல்லாத இணையவழி பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன.

நில மாற்றம்

- மாநில அரசுத் துறைகளுக்கு நிலக் கிரயமின்றி 1,129.34 ஏக்கர் அரசு நிலங்கள் 87 இனங்களில் நில மாற்றம்.

நில உரிமை மாற்றம்

- அரசு நிலங்கள், பொதுப் பயன்பாட்டிற்காக, உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மாநில அரசு நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் மத்திய அரசு நிறுவனங்களுக்கும், சில அரிய நேர்வுகளில் தனியார்நிறுவனங்களுக்கும்வணிகநோக்கமில்லா நேர்வுகளில், நிலக்கிரயத் தொகையாக, ஒரு மடங்கும், வணிக நோக்கமுடைய இனங்களில் நிலக்கிரயத் தொகையாக, இரு மடங்கும் வசூலித்து 2,300 ஏக்கர் அரசு நிலங்கள் 208 இனங்களில் நில மாற்றம்.

ஆக்கிரமணங்களை அகற்றுதல்

- நீர்நிலை புறம்போக்குகள் 9,102.33 எக்டர், மேய்க்கால், சாலை, கோவில் 3,942.51 எக்டர், காடு ஆகிய இதர புறம்போக்குகள் என மொத்தம் 13,044.85 எக்டர் ஆக்கிரமணங்கள் அகற்றம்.

நிலக் குத்தகை

- அரசு புறம்போக்கு நிலங்கள், கட்டடங்கள், நிலத்துடன் கூடிய கட்டடங்களைத் தனியாருக்கு தற்காலிகமாகக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட 571 குத்தகை இனங்களில், நடப்புக் குத்தகையில் ரூ.25.67 கோடி, நிலுவைக் குத்தகையில் ரூ.36.19 கோடி, என மொத்தம் ரூ.61.86 கோடி குத்தகைத் தொகை தனியாரிடமிருந்து வசூல்.

- அரசு நிலங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்தும் பொருட்டு, அரசின் கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் மற்றும் மேலாண்மைத்துறை அவர்களின் தலைமையில் குழுஒன்றுஉருவாக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக நிலக்குத்தகைகுறித்துஒரேமாதிரியானகொள்கை/வழிகாட்டி நெறிமுறைகள் தயார் செய்யப்படும்.

- அனைத்து மாவட்டங்களிலும் அடையாளம் காணப்பட்ட 1,90,225 பயனாளிகளில் 13,403 பயனாளிகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

- ரூ.50 கோடி அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றவும், வேலியிட்டு, அவைகளைப் பாதுகாக்கவும், நிதி பகிர்ந்தளிப்பு.

நில நிருவாக ஆணையரக கணினிமயமாக்கும் திட்டம்

❖ காகிதமில்லா நிலையினை உறுதி செய்ய, இணைய முகப்பு உருவாக்கப்பட்டு "நில நிருவாக ஆணையரக கணினிமயமாக்கும் திட்டம்".

நிலச்சீர்திருத்தம்

❖ முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 1,47,44,017 நபர்கள் உறுப்பினர்களாகவும், 1,35,88,380 நபர்கள் உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் உறுப்பினர்களாகவும் என மொத்தம் 2,83,32,397 நபர்கள் கணக்கெடுக்கப்பட்டு ரூ.334.07 கோடி 2,83,184 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு, ரூ.374.44 கோடி அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் ஒதுக்கீடு.

❖ பயிரிடு குத்தகைதாரர்கள் மற்றும் நில உடைமைதாரர்களுக்கிடையே ஏற்படும் தகராறுகள் 10 வருவாய் நீதிமன்றங்களால் நிலுவையில் உள்ள 7,259 வழக்குகளில் 4,859 வழக்குகள் முடிக்கப்பட்டு, 2,400 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

❖ 30.04.2021 அன்று 2,965 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 01.05.2021 முதல் 31.03.2023 வரை 5,794 வழக்குகள் வரப்பெற்று மொத்தம் நிலுவையில் உள்ள 8,759 வழக்குகளில் 01.05.2021 முதல் 31.03.2023 வரை 6,213 வழக்குகள் முடிக்கப்பட்டு, 20.03.2023 அன்று 2,546 வழக்குகள் மாவட்டத்தில் உள்ள 10 வருவாய் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

❖ 21.54 ஏக்கர் பூமிதான நிலங்கள், 314 பயனாளிகளுக்கும், 8 அரசு துறை நிறுவனங்களுக்கு 156.33 ஏக்கர் நிலங்கள் விநியோகம்.

❖ 314.19 ஏக்கர் பூமிதான வாரியத்தின் நிலங்களில் உள்ள ஆக்கரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

நில அளவை மற்றும் நிலவரித் திட்டத்துறை

❖ இணையவழி நில ஆவணங்களிலுள்ள பிழைகளை முழுமையாகக் களைவதற்குரிய ஒரு சிறப்பு நடவடிக்கையாக ஒவ்வொரு கிராமத்திலும் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 46,387 விண்ணப்பங்களுக்கு பட்டா தொடர்பான குறைகள் களையப்பட்டன.

நகர்ப்புர நில ஆவணங்கள்

❖ 33.12 இலட்சம் நகரப்புலங்களில் 32.61 இலட்சம் புல எண்களுக்கான நில ஆவணங்கள் ஒப்பிடப்பட்டு, 7.08 இலட்சம் பிழைகள் கண்டறியப்பட்டு அவற்றில் 6.92 இலட்சம் பிழைகள் களையப்பட்டுள்ளன.

இணையவழிப் பட்டா மாறுதல் திட்டம்

❖ 19.80 இலட்சம் இணையவழிப் பட்டா மாறுதல்கள்.





❖ 2021 ஆம் ஆண்டில் 12,36.555 பட்டா மாறுதல், மனுக்கள் தீர்வு செய்யப்பட்ட நிலையில், 2022ஆம் ஆண்டில் 53% கூடுதலாக 18,90,983 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

தானியங்கி பட்டா மாறுதல்

❖ உட்பிரிவு செய்ய வேண்டிய தேவை இல்லாத நிலப் பரிவர்த்தனைகளுக்கான 2,88,054 பட்டா மாறுதல்கள் தானியங்கியாக மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

உரிமம் பெற்ற நில அளவர்கள்

❖ நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பலவிதமான நிலஅளவைப் பணிகளை விரைந்து நிறைவேற்ற, கட்டுமான பொறியியலில் மூன்றாண்டுகள் பட்டயப் படிப்பில் தேர்ச்சி மற்றும் ஓரத்தநாடு நில அளவை பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற 863 நபர்களில் 350 இணையவழிப் பட்டா மாறுதல் பணியிலும், 210 நபர்கள் பிற அரசுத்துறைகளிலும் ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மறு நில அளவை

❖ நவீன நில அளவைக் கருவிகளான வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவைக் கருவியைப் பயன்படுத்தி கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 708.93 ச.கி.மீ. பரப்பளவிற்கு மறு நில அளவை செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புர நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புர நிலவரி

❖ தமிழ்நாடு நகர்ப்புர நிலவரிச் சட்டத்தின்கீழ், ரூ.16.25 கோடி நகர்ப்புர நிலவரித் தொகை வசூல்.

❖ அறியாக் கிரயம் பெற்றோர் திட்டத்தின்கீழ், 12.11 இலட்சம் சதுர மீட்டர் பரப்பளவு நிலங்கள் 5,321 இனங்களில் வரன்முறை செய்ய அரசால் இசைவளிப்பு.

❖ ரூ.41.97 கோடி நிலமதிப்புத் தொகையாக அறியாமல் கிரயம் பெற்ற மனுதாரர்களால் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

❖ ரூ.8.70 இலட்சத்தில் 15 நவீன கணினிகள்.

முன்னேற்றத்தில் உள்ள பணிகள்

❖ புல எல்லையை அளந்து அத்துக் காட்டக் கோரி இணையம் வாயிலாக விண்ணப்பிக்கும் வசதி உருவாக்கப்பட்டு வருகிறது.

❖ நத்தம் நில ஆவணங்களை இணையம் வழியே பராமரிப்பதற்கான மென்பொருள்.

❖ கணினியில் வரையப்பட்ட கிராம வரைபடங்களில் நிலவியற் ஆயப்புள்ளிகளைப் பதிவு செய்யும் பணி விவசாயத் துறை மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தேவைப்படும் இதர அரசுத் துறைகளுக்கு பகிரப்படும்.

❖ கையினால் தயாரிக்கப்பட்ட பழமையான ஆவணங்களை ஒளிபிம்பநகலெடுத்து பராமரிக்கும் பணி சென்னையில் உள்ள ஆவணக் காப்பகம் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரகத்தில் நடைபெற்று வருகிறது. 24.05.2022 முதல் 20.03.2023 வரையில் 5,16,105 தாட்கள் ஒளிபிம்ப நகலெடுத்து பாதுகாக்கப்பட்டுள்ளன.

நவீன அளவை / மறு நிலஅளவை

❖ வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவைக் கருவி ஆகிய நவீன நில அளவைக் கருவிகளைப் பயன்படுத்தி கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மறு நில அளவைப் பணி நடைபெற்று வருகிறது. மொத்தப் பரப்பளவான 8,185 ச.கி.மீ இல், இது வரையில் 1219.43 ச.கி.மீ பரப்பளவிற்கு மறு நில அளவைப் பணி முடிவு பெற்றுள்ளது. இதில், 07.05.2021 முதல் 20.03.2023 வரையான காலத்தில் மட்டும் 708.93 ச.கி.மீ பரப்பளவிற்கு மறுநில அளவைப் பணி முடிவு பெற்றுள்ளது.

❖ வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவியைப் பயன்படுத்தி நீர்நிலைகளை நில அளவை செய்யும் பணி அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது, இதுவரையில் 7,119 நீர்நிலைகளின் எல்லைகள் அளவை செய்யப்பட்டு அவற்றில் 1,747 நீர்நிலைகளின் வரைபடங்கள் அரசுத் துறைகள் மற்றும் பொதுமக்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளும் பொருட்டு https://tngis.tn.gov.in/waterbodies/ எனும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. 07.05.2022 முதல் 20.03.2023 வரையில் 7,119 நீர்நிலைகளின் எல்லைகள் அளவை செய்யப்பட்டுள்ளன.

❖ வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவைக் கருவிகளைப் பயன்படுத்தி வேலூர் நகரில் நவீன நகரளவைப் பணி நடைபெற்று வருகிறது. மொத்த பரப்பளவான 87.90 ச.கி.மீ இல் இதுவரையில் 70.3 ச.கி.மீ அளவிற்கு நில அளவைப் பணி நிறைவு பெற்றுள்ளது. 07.05.2021 முதல் 20.03.2023 வரையில் 23.21 ச.கி.மீ பரப்பளவிற்கு நில அளவைப் பணி செய்யப்பட்டுள்ளது.

நிருவாக சீர்திருத்தங்கள்

இணைய வழியில் மனுக்களைப் பெற்று நடவடிக்கை எடுத்தல்

❖ பொதுமக்களிடமிருந்து குறைதீர்ப்பு மனுக்களை அரசின் https://gdp.tn.gov.in எனும் இணைய தளம் வழியாகப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளும் நடைமுறை இத்துறையில் அறிமுகம் செய்யப்பட்டு இதுவரை 1,746 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

பயிற்சி

❖ 07.05.2021 முதல் 20.03.2023 வரையில் 913 வருவாய்த்துறை அலுவலர்களுக்கு, உதவி இயக்குநர்களால் 26 சிறப்பு மையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

❖ இது தவிர. கட்டுமானப் பொறியியல் பட்டயதாரர்களுக்கு, நில அளவை செய்வதற்கான உரிமம் வழங்குவதற்கான, மூன்று மாத கால நில அளவைப் பயிற்சி மேற்குறிப்பிட்ட இரண்டு பயிற்சி நிலையங்களிலும், இதுவரையில் 863 பேருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 350 உரிமம் பெற்ற நில அளவர்கள் இணைய வழி பட்டா மாறுதல் பணியில் ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் மற்றும் 210 பேர் பல்வேறு அரசுத் துறைகளில் பலதரப்பட்ட நில அளவைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நில ஆவணங்களில் பிழைகளைக் களைவதற்கான சிறப்பு செயலாக்க நடவடிக்கைகள்

❖ அனைத்து கிராமங்களிலும், நில ஆவணங்களில் உள்ள பிழைகளைக் களையக் கோரி, நில உரிமையாளர்கள் அளிக்கும் விண்ணப்பங்களைத் தீர்வு செய்வதற்கான சிறப்பு முகாம்கள், ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் நடத்தப் பெற்று 46,387 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, நில உரிமையாளர்களின் குறைகள் களையப்பட்டுள்ளன.

❖ நகர்ப்புர நில ஆவணங்களைப் பொறுத்த வரையில், கணினிப்படுத்தப்பட்ட நில ஆவணத் தரவுகள் நில ஆவணங்களுடன் ஒப்பிடப்பட்டு, பிழைகள் கண்டறியப்பட்டு நீக்கம் செய்யப்பட்டு, மொத்தமுள்ள 33.12 இலட்சம் நகரப்புல எண்களில், 32.61 இலட்சம் நகரப் புல எண்கள் ஒப்பிடல் செய்யப்பட்டு, இதுவரையில் 7.08 இலட்சம் பிழைகள் கண்டறியப்பட்டு அவற்றில் 6.92 இலட்சம் பிழைகள் நீக்கப்பட்டுள்ளன.

❖ ❖ ❖



தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்

மாண்புமிகு
தொழில்துறை அமைச்சர்
திரு. தங்கம் தென்னரசு
அவர்கள்

தொழில்துறை

- சென்னை, கோயம்புத்தூர், தூத்துக்குடி மற்றும் ஜக்கிய அரபு நாடுகளில் நடத்தப்பட்ட ஐந்து முதலீட்டு மாநாடுகள் மூலம் ரூ.2,72,322 கோடி முதலீட்டில், 4,09,651 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க 131 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்.
- வருடாந்திர முதலீட்டாளர்கள் சந்திப்பு 2022இன் போது ஆசிய-ஒசியான மண்டலத்திற்கான சிறந்த முதலீட்டு நிறுவனத்திற்கான விருது தமிழ்நாட்டின் வழிகாட்டி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.
- தமிழ்நாட்டைப் பெரிய அளவில் தொழில் மயமாக்க அடுத்த 5 ஆண்டுகளில் 45,000 ஏக்கர் பரப்பளவில் நில வங்கி உருவாக்குவதற்காக சிப்காட் நிறுவனம் சுமார் 33,489 ஏக்கர் நிலம் தெரிவு செய்துள்ளது. இதில், 22,941 ஏக்கர் நிலம் அரசின் நிருவாக அனுமதி பெற்று கையகப்படுத்தப்பட்டு வருகிறது.



- தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை 2021, தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை 2021 ஆகியவை வெளியீடு. ஒற்றைச் சாளர இணையம் 2.0, ஒற்றைச் சாளர கைப்பேசி செயலி வழிகாட்டி நிறுவனத்தின் மேம்படுத்தப்பட்ட இணையம் மற்றும் தமிழ்நாடு நிலத் தகவல் இணையம் ஆகியன துவக்கி வைப்பு.

- நிதிநுட்பப் பிரிவு, ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு மற்றும் பணி ஆய்வகப் பிரிவு ஆகிய சிறப்புப் பிரிவுகள் வழிகாட்டி நிறுவனத்தில் அமைத்தல்.

- ஆக்சிஜன் உற்பத்தி தொழில்களில் முதலீடு செய்யும் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்த ஆக்சிஜன் செறிவூட்டிகள், ஆக்சிஜன் சிலிண்டர்கள், மருத்துவ ஆக்சிஜன் மற்றும் பெரிய திரவ ஆக்சிஜன் ஆலைகளின் வணிக உற்பத்தியைத் தொடங்கும் முதலீட்டாளர்களுக்கு இதர சலுகைகளுடன், 30 சதவிகித மூலதன மானியம் வழங்க ஆணை.

- தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் 412 தொழில் நிறுவனங்களுக்கு 3,008.49 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து, ரூ.42,494.84 கோடி முதலீட்டில் 1,32,037 நபர்களுக்கு வேலைவாய்ப்பு. 5,960 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு சிப்காட் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- மணப்பாறை, தேனி, திண்டிவனம் ஆகிய மூன்று இடங்களில் உணவுப் பூங்காக்கள், மாநல்லூரில் மின்வாகனப் பூங்கா, ஓரகடத்தில் மருத்துவ சாதனங்கள் பூங்கா, விருதுநகரில் ஆடைப்பூங்கா, பனப்பாக்கத்தில் தோல் பூங்கா, சூளகிரியில் வருங்கால நகர்திறன் பூங்கா, கரூரில் ஜவுளிப் பூங்கா, நெமிலியில் தயார் நிலையிலுள்ள தொழிற்சாலைகள் மற்றும் வல்லம்-வடகால், ஓரகடம் மற்றும் பெருந்துறை ஆகிய தொழிற்பூங்காக்களில் ஆயத்தத் தொழிற்கூட வசதிகள், சிறுசேரி மற்றும் பர்கூரில் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் நிறுவிட தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் நடவடிக்கை.

- தொழில் பூங்காக்கள், தொழில் நிறுவனங்கள், புதிய கண்டுபிடிப்புகளுக்கான புத்தாக்க மையங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைக்காக ரூ.500 கோடி மதிப்பீட்டில் தொழில் சுற்றுச்சூழல் அமைப்பு நிதி உருவாக்கம்.

- திருவள்ளூர் மாவட்டம், மப்பேடு கிராமத்தில், ரூ.1,424 கோடி முதலீட்டில் பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா அமைக்க தேசிய நெடுஞ்சாலை லாஜிஸ்டிக்ஸ் மேலாண்மை நிறுவனம், சென்னை துறைமுகம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்.

- தமிழ்நாடு 3,003 மில்லியன் அமெரிக்க டாலர்கள், அதாவது ரூ.22,396 கோடி முதலீடுகளை ஈர்த்து, அகில இந்திய அளவில், அந்நிய நேரடி முதலீடு ஈர்க்கும் தரவரிசையில் நான்காவது இடத்தில் உள்ளது. தமிழ்நாடு 4,567 மில்லியன் அமெரிக்க டாலர்கள், அதாவது ரூ.34,668 கோடி முதலீடுகளை ஈர்த்துள்ளது.

- 2022-2023ஆம் ஆண்டுகளில் சுவிட்சர்லாந்து, டாவோஸில் நடந்த உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திரக் கூட்டத்தில் முதலீட்டுக் குழு பங்கேபு.

- இந்தியா டுடே வெளியிட்ட "மாநிலங்களுக்குள் சிறந்த மாநிலம் 2022" (State of States 2022) தரவரிசைப் பட்டியலில், ஒட்டு மொத்த தரவரிசையில், தொடர்ந்து 5ஆவது ஆண்டாக, அகில இந்திய அளவில், மாநிலங்களிலேயே முதல் இடத்தினை தக்கவைத்துக் கொண்டுள்ளது. தமிழ்நாடு உள்ளடக்கிய வளர்ச்சியில் (inclusive development) தரவரிசையில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

- CARE தரவரிசை குழுமத்தின் அறிவு சார் பகுப்பாய்வு நிறுவனமான கேர்எட்ஜ் (CareEdge) நிறுவனம், மாநிலங்களுக்கான தரவரிசையில், பெறப்பட்ட கூட்டு மதிப்பெண்களின் அடிப்படையில், 3ஆவது சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலமாக (பெரிய மாநிலங்களில்) தமிழ்நாட்டினை தரவரிசைப் படுத்தியுள்ளது. சமூக நலப் பிரிவில் 2ஆவது இடத்திலும், நிதிசேர்ப்பு அடிப்படையில் 3ஆவது இடத்திலும் தமிழ்நாடு தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

- சிப்காட் நிறுவனம், பெருந்தொழில் நிறுவனங்களுக்கு அரசின் தொகுப்பு ஊக்க நிதியுதவி வழங்கும் தமிழ்நாடு அரசின் முகவாண்மை அமைப்பாகவும்



செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், சிப்காட் நிறுவனம் ரூ.1,956 கோடியை 33 நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பன்னாட்டு அறைகலன் பூங்காவிற்கு (International Furniture Park) அடிக்கல் நாட்டப்பட்டு, ரூ.2,800 கோடிக்கும் மேலான முதலீடுகளுக்கான 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன.
- திருப்பெரும்புதூர் மற்றும் ஓசூர் சிப்காட் தொழிற்பூங்காக்களில் புத்தாக்க மையங்கள் ரூ.33.46 கோடி மதிப்பீட்டில் உருவாக்கம்.
- ஓரகடத்தில் மருத்துவ உபகரண தொழிற்பூங்காவினை சிப்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது. இப்பூங்காவிற்கான முதல் நில ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்பட்டு, அண்ணா பல்கலைக்கழகத்தை தொழில் நுட்ப பங்குதாரராக நியமித்து அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் சிப்காட் நிறுவனம் மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்திற்கு இடையே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.
- சிப்காட் நிறுவனம் எறையூரில் தொழிற்பூங்கா ஒன்றினை உருவாக்கி வருகிறது. இப்பூங்காவிற்கான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு. தொழிற்பூங்கா வை திறந்து வைத்து, ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணி பூங்காவிற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தோடு ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணி பூங்கா மற்றும் அதன் 10 தொகுப்பு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- மணப்பாறை, தேனி மற்றும் திண்டிவனம் தொழிற்பூங்காக்களில் தலா 150 ஏக்கர் பரப்பளவில் 3 உணவுப் பூங்காக்களை சிப்காட் நிறுவனம் நிறுவி வருகிறது. மணப்பாறை உணவுப் பூங்காவில் உட்கட்டமைப்பு வசதிகள் முடிவடைந்து திறந்து வைக்கப்பட்டது. மணப்பாறை உணவுப் பூங்காவில் ஒரு நிறுவனத்திற்கும், பொது பொறியியல் பூங்காவில் 3 நிறுவனங்களுக்கும் நில ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்பட்டது.
- தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் முறையே தூத்துக்குடியில் 60 MLD கொள்ளவு கொண்ட கடல் நீர் சுத்திகரிப்பு மையம் ஒன்றினையும், ஓசூரில் 20 MLD கொள்ளளவு கொண்ட TTRO கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையையும் உருவாக்க சிப்காட் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.
- பணிபுரியும் மகளிர் தங்குவதற்கு வசதியாக பெருந்துறை (222 நபர்கள் தங்குமிட வசதி), தூத்துக்குடி (252 நபர்கள் தங்குமிட வசதி)

தொழிற்பூங்காக்களில் மகளிர் விடுதிகள் கட்டுவதற்காக முறையே ரூ.6.43 கோடி மற்றும் ரூ.5.88 கோடிக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- பணிபுரியும் மகளிருக்கான விடுதிகளை சிறுசேரியிலும் (800 நபர்கள் தங்குமிட வசதி) மற்றும் சூளகிரியிலும் (600 நபர்கள் தங்குமிட வசதி) கட்டுவதற்காக திட்ட மதிப்பீடுகள் சிப்காட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.
- வல்லம்-வடகால் சிப்காட் தொழிற் பூங்காவில் திருவாளர்கள் ஃபாக்ஸ்கான் மற்றும் பிற நிறுவனங்களில் பணிபுரியும் 18,720 தொழிலாளர்கள் தங்குவதற்காக ஒரு ஒருங்கிணைந்த பணியாளர் விடுதி ரூ.670 கோடி மதிப்பீட்டில் சிப்காட் கட்டி வருகிறது.
- இராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கத்தில் தோல் பொருட்கள் உற்பத்திப் பூங்கா நிறுவுவதற்காக நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி சிப்காட் தொழிற்பூங்காவில் 300 ஏக்கர் பரப்பளவில் ரூ.300 கோடி திட்ட மதிப்பீட்டில் வருங்கால நகர்திறன் பூங்கா சிப்காட் நிறுவனத்தால் உருவாக்கம்.
- மின்னணு பொருட்கள் தயாரிக்கும் இரண்டு சிறப்பு தொழிற்தொகுப்புகள் பிள்ளைப்பாக்கம் (379.3 ஏக்கர்) மற்றும் மாநல்லூர் (536.58 ஏக்கர்) தொழிற்பூங்காக்களில் முறையே ரூ.536.58 கோடி மற்றும் ரூ.663.59 கோடி சிப்காட் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) திருவள்ளூர் மாவட்டம், மப்பேடு கிராமத்தில், பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா ஒன்றினை நிறுவி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தேசிய நெடுஞ்சாலை சரக்கு போக்குவரத்து மேலாண்மை நிறுவனம், சென்னை துறைமுக பொறுப்புக் கழகம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இடையே ரூ.1,424 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இத்திட்டத்திற்கு 25.05.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.
- தரமணியில், DLF-யின் தகவல் தொழில்நுட்ப பூங்கா, டிஎல்எஃப் டௌன்டவுன் பேஸ் II-இல் ஸ்டான்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸ்-ன் மிகப்பெரிய உலகளாவிய அலுவலக வளாகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. 70,000க்கும் அதிகமான தகவல் தொழில்நுட்ப நிபுணர்களுக்கு இந்த டௌன்டவுன் செயல் திட்டம் வேலை வாய்ப்புகளை வழங்கும்.
- தமிழ்நாடு பாதுகாப்பு தொழில்துறை பெருவழித்தடத்தில் (TNDIC) பாதுகாப்புத்துறை சார்ந்த பொது நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழில் நிறுவனங்கள் மொத்தம் ரூ.14,918 கோடி வரை முதலீடு செய்ய உறுதி செய்துள்ளன. இதில் சுமார் ரூ.3,861 கோடி வரை முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளில் இந்தப் பாதுகாப்பு பெருவழித்தடம் கணிசமான முதலீடுகளை ஈர்ப்பதோடு, 10,000 நபர்களுக்கு நேரடியாகவும், 25,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை உருவாக்கும்.
- தமிழ்நாடு அரசு திருத்தப்பட்ட வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் கொள்கையை 2022இல் வெளியிட்டது. இதன் மூலம் ரூ. 75,000 கோடி முதலீடு ஈர்க்கப்படுவதுடன் 1,00,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பினை அடுத்த 10 ஆண்டுகளில் உருவாக்க முடியும்.
- தமிழ்நாடு அரசு, மேம்பட்ட உற்பத்தியில் சிறந்து விளங்கும் திறன்மிகு மையங்களை (CoE) நிறுவியுள்ளது. டான்கேம் (Tamil Nadu Center of Excellence for Advanced Manufacturing), டான்சேம் (Tamil Nadu Smart and Advanced Manufacturing Centre), டாம்கோ (Tamil Nadu Advance Manufacturing Centre of Excellence) ஆகிய மூன்று திறன்மிகு மையங்களை Dassault Systemes, Siemens and GE Aviation ஆகிய தொழில் நிறுவனங்களுடன் இணைந்து நிறுவியுள்ளது. இந்த திறன்மிகு மையங்கள் மேம்பட்ட அதிநவீன உற்பத்தித் தொழில்நுட்பங்களான, சேர்க்கை உற்பத்தி, நான்காம் தலைமுறை தொழில்வளர்ச்சி



(4.0), 3D வடிவமைப்பு, அச்சிடுதல், மெய்நிகர் மற்றும் ரோபாட்டிக்ஸ் போன்ற வசதிகளை தொழில்துறையினருக்கு(MSMEs)வழங்குகிறது.

❖ கோயம்புத்தூரில் வான்வெளி உதிரி பாகங்களின் பிந்தைய செயல்பாடுகளுக்கான பொது வசதி மையத்தை (CFC) அமைப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் GTN Engineering (India) Limited நிறுவனத்துடன் டிட்கோ நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

❖ தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த உள்கட்டமைப்பு வசதிகளை தமிழ்நாடு முழுவதும் விரிவடையச் செய்யும் நோக்கில் டைடல் பார்க் நிறுவனம் மாநிலத்தின் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் 50,000 முதல் 1,00,000 சதுர அடி கட்டுமான பரப்பளவு கொண்ட சிறு தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை படிப்படியாக நிறுவி வருகிறது.

❖ விழுப்புரம் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் அமையவுள்ள டைடல் சிறு தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களுக்கு அடிக்கல் நாட்டியது மற்றும் வேலூர் மாவட்டத்தில் மினி டைட்டல் பார்க் அடிக்கல் நாட்டியதைத் தொடர்ந்து, அதன் கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேலும், வேலூர், தஞ்சாவூர், தூத்துக்குடி, சேலம் மற்றும் உதகமண்டலத்தில் டைடல் சிறு தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை நிறுவுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, 3 சதவிகித வட்டி மானியத்துடன் 174 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.185.69 கோடி அளவிற்கும், 6 சதவிகித வட்டி மானியத்துடன் 888 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.636.48 கோடி அளவிற்கும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடன் வழங்கியுள்ளது.

❖ படித்த இளைஞர்கள், முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவெடுக்க உதவுவதை குறிக்கோளாகக் கொண்ட மாநில அரசின் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு (NEEDS) திட்டத்தை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நடைமுறைப்படுத்தி, 240 பயனீட்டாளர்களுக்கு, ரூ.196.52 கோடி அளவிற்கு கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு காகித நிறுவனம் மரக்கூழ் தயாரிக்க ஆலை விரிவாக்கத்திட்டம் அலகு-II (Unit-II) நிறுவி வருகிறது. இயந்திரங்கள் நிறுவும் பணிகள் நிறைவு பெற்று, மரக்கூழ் தயாரிக்கும் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

❖ தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் மெ.டன் உற்பத்தித் திறன் கொண்ட புதிய நவீன சிமெண்ட் ஆலை ஒன்றை அரியலூரில் நிறுவியுள்ளது. அதன்மூலம் டான்செம் நிறுவனத்தின் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டு ஒன்றுக்கு 17 இலட்சம் மெ.டன்னாக உயர்ந்துள்ளது. புதிய ஆலை சீரான முறையில் இயக்கப்பட்டு, 19.53 இலட்சம் மெ.டன் கிளிங்கர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

- ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, ரூ.36.33 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது. இது ஆலை நிறுவப்பட்டது முதல், ஆண்டு ஒன்றில் ஈட்டப்பட்ட அதிகபட்ச இலாபமாகும்.

- டான்செம் தனது புதிய ஆலையில் உற்பத்தி செய்யப்படும் சிமெண்ட்டை தனியார் சிமெண்ட் ஆலைகளின் சிமெண்ட் விலையை விட குறைவான விலையில் விற்பனை செய்வதற்காக "வலிமை" என்ற புதிய வகையினை அறிமுகப்படுத்தியுள்ளது. 10,40,328 மெ.டன் வலிமை சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

- செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பகுதியில் முதல் கட்டமாக 500 ஏக்கர் பரப்பளவில் இயந்திரத்தின் மூலமாக உப்பு உற்பத்தி மேற்கொள்ளத்தக்க வகையில் ரூ.5.90 கோடி திட்ட மதிப்பீட்டு செலவில் உப்பு தொழிற்சாலையை நிறுவி உள்ளது.

- தமிழ்நாடு உப்பு நிறுவனம் அயோடின் கலந்த கல் உப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு ஆகியவற்றை "நெய்தல் உப்பு" என்ற வணிகப் பெயரில் வெளிச்சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

- மழைக்கால நிவாரணமாக 12,842 உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூ.6.41 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சித்துறை

- தமிழ் வளர்ச்சித்துறை வாயிலாக வழங்கப்படும் விருதுகளுக்கான விருதுத்தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்வு.

- திருவள்ளுவர் விருது – 2022, பேரறிஞர் அண்ணா விருது – 2021, பெருந்தலைவர் காமராசர் விருது – 2021, மகாகவி பாரதியார் விருது – 2021, பாவேந்தர் பாரதிதாசன் விருது – 2021, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது – 2021 ஆகிய விருதுபெறும் விருதாளர்களுக்கு விருதுத்தொகையாக ரூ.2 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடை வழங்கப்பட்டது.

- தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது - 2021, கபிலர் விருது – 2021, உ.வே.சா விருது – 2021, அம்மா இலக்கிய விருது – 2021, காரைக்கால் அம்மையார் விருது – 2021 ஆகிய விருதுபெறும் விருதாளர்களுக்கு விருதுத்தொகையாக ரூ.5 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை மற்றும் மூன்று நபர்களுக்கு இலக்கியமாமணி விருது - 2021 வழங்கப்பட்டது.

- சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது-2021, பத்து விருதாளர்களுக்கு விருதுத்தொகையாக ரூ.2 இலட்சம், தகுதியுரை மற்றும் பொன்னாடை வழங்கப்பட்டது.

- தமிழ்ச் செம்மல் விருது - 2021, முப்பத்தெட்டு விருதாளர்களுக்கு விருதுத்தொகையாக ரூ.25,000, பாராட்டுச் சான்று மற்றும் பொன்னாடை வழங்கப்பட்டது.

- திருவள்ளுவர் விருது - 2023, தந்தை பெரியார் விருது, அண்ணல் அம்பேத்கர் விருது, பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, திரு.வி.க விருது, கி.ஆ.பெ. விசுவநாதம் விருது, தேவநேயப்பாவாணர் விருது ஆகிய விருதாளர்களுக்கு விருதுத்தொகையாக ரூ.2 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடை வழங்கப்பட்டது.

- ஹூஸ்டன் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட தமிழ்நாடு அரசின் நிதியுதவியாக ரூ.2.50 கோடி (மூன்று இலட்சம் அமெரிக்க டாலர்) 15.11.2022 அன்று வழங்கப்பட்டது.

- புதுதில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில், தமிழ் இலக்கியவியல்' என்ற தனித்துறை உருவாக்க ரூ.5 கோடிக்கான காசோலையை 21.12.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத் துணை வேந்தரிடம் வழங்கப்பட்டது.

- தமிழறிஞர் இராபர்ட் கால்டுவேல், தொல்காப்பியர், மறைமலையடிகளார், திரு.வி.க., வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர், உ.வே.சா, ஔவையார், கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மலர் வணக்கம் செய்யப்பட்டது.

- மாணவர்களின் தமிழ் ஆர்வத்தை அதிகரிக்க, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் மருத்துவக்



கல்லூரி ஆகியவற்றில் மாணவர் தமிழ் மன்றங்கள் அமைத்து மாணவர்களிடையே தமிழ் சார்ந்த போட்டிகள் ஆண்டுதோறும் நடத்திடவும் இதற்கென ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ.5 இலட்சம் வீதம் 100 கல்லூரிகளுக்கு ரூ.5 கோடியும், இவ்வாண்டு போட்டிகள் நடத்திட ரூ.36 இலட்சமும் என மொத்தம் ரூ.5.36 கோடி வழங்கிட ஆணை.

❖ அண்ணா பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழில்நுட்ப தமிழ் வளர்ச்சி மையத்தில் பயிலரங்கம் நடத்திடவும் மண்டல மற்றும் மாநில அளவில் தமிழில் பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் போட்டிகள் நடத்திட ரூ.16 இலட்சம் வழங்கி ஆணையிடப்பட்டது. முதற்கட்டமாக ரூ.6 இலட்சம் அண்ணா பல்கலைக் கழக பொறியியல் தொழில்நுட்ப தமிழ் வளர்ச்சி மைய இயக்குநருக்கு வழங்கப்பட்டு, சென்னை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் பயிலரங்கம் நடத்தப்பட உள்ளது.

❖ பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு தமிழின் மீது ஆர்வத்தையும் தமிழில் எழுதுவதை ஊக்குவிக்கும் வகையிலும் மாவட்ட அளவில் தமிழ் கையெழுத்துப் போட்டிகள் நடத்திட ரூ.16.72 இலட்சம் வழங்கிட ஆணை.

❖ புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் தம் சந்ததியினர் மொழி வரலாறு குறித்து அறிந்துகொள்ளும் வகையில் அங்குள்ள நூலகங்களுக்கு தமிழ் நூல்கள் வழங்கிட ரூ.20 இலட்சம் வழங்கிட ஆணை.

❖ அண்ணல் அம்பேத்கருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள் செம்பதிப்பாக தமிழில் வெளியிடுவதற்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ரூ.41,55,590 நிதி ஒப்பளிப்பு செய்யப்பெற்றும் இத்திட்டத்தை மூன்று ஆண்டுகளில் நிறைவேற்ற நிருவாக அனுமதியும் வழங்கி அரசாணை.

❖ பெரியார் சிந்தனைகள் அடங்கிய தொகுப்பு – 21 இந்திய, உலக மொழிகளில் அச்சு மற்றும் மின்னூல் பதிப்புகளை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வாயிலாக வெளியிட ரூ.5 கோடி செலவினத்திற்கு நிருவாக அனுமதி மற்றும் 2022-2023ஆம் நிதியாண்டிற்கு ரூ.29.05 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை.

❖ உத்தமம் நிறுவனம் மற்றும் தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகமும் பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனமும் இணைந்து தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் 21ஆவது தமிழ் இணைய மாநாடு நடத்தியமைக்கு ரூ.5 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டது.

- சென்னை மாவட்டத்தில் ஆட்சிமொழி சட்டவாரத்தின் ஒரு நிகழ்வான ஆட்சிமொழி சட்டம் விழிப்புணர்வுப் பேரணி சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள நீதியரசர் பசீர் அகமது சயீத் மகளிர் கல்லூரி வளாக சாலையில் நடைபெற்றது. அதில் 300க்கும் மேற்பட்ட மாணவிகள், அரசுப் பணியாளர்கள், தமிழறிஞர்கள் கலந்து கொண்டனர்.

- பெருநகர சென்னை மாநகராட்சியில் கணினித் தமிழ் ஒருங்குறி பயன்பாடு, ஆட்சிமொழி சட்டம் வரலாறு, ஆட்சிமொழி அரசாணைகள், மொழிபெயர்ப்பு, மொழிப் பயிற்சி குறித்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

- ஆட்சிமொழி குறித்த பட்டிமன்றம் மாநிலக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இராயப்பேட்டை, எம்.எஸ். மகாலில் வணிக நிறுவனங்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

- மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் இளந்தமிழர் இலக்கியப் பட்டறைக்கு ரூ.20.30 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- தமிழ் இலக்கியத்திற்கு வளம்சேர்க்கும் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் 3 நபர்களுக்கு ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் கூடிய இலக்கிய மாமணி விருது.

- ஞானபீட விருது, சாகித்திய அகாடமி விருது, கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள், தமிழ் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 10 தமிழ் எழுத்தாளர்களுக்கு ஆண்டுதோறும் அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் அல்லது விரும்பும் மாவட்டத்தில் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், 6 நபர்களுக்கு குடியிருப்பு ஒதுக்கீடு ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

- ஜெர்மனி நாட்டிலுள்ள கொலோன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை தொடர்ந்து செயல்படுவதற்கு ரூ.1.25 கோடி ஒதுக்கீடு.

- 16 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு ரூ.2.30 கோடி நூலுரிமைத் தொகை.

- குறள் முற்றோதல் செய்யும் மாணவர்கள் அனைவருக்கும் குறள் பரிசு உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டு, 219 மாணவர்களுக்கு ரூ.25.18 இலட்சத்தில் குறள் பரிசு.

- நவி மும்பை தமிழ்ச் சங்கக் கட்டட மேம்பாட்டிற்கு ரூ.75 இலட்சம்.

- தீராக் காதல் திருக்குறள் என்ற பெயரில் தமிழ் இணையக் கல்விக் கழகம் வாயிலாக ரூ.25 இலட்சத்தில் குறளோவியம் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, மாணவர்கள் வரைந்த ஓவியங்களைக் கொண்டு திருக்குறள் நாட்காட்டி உருவாக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

- தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வாயிலாக ரூ.1 கோடி வழங்கப்பட்டு அயல்நாடு, வெளி மாநிலங்களில் வாழும் தமிழர்களுக்கு தமிழ் கற்பிக்க தமிழ் பரப்புரைக் கழகம் உருவாக்கம்.

- ரூ.15 இலட்சம் செலவில் சங்க இலக்கிய நூல்களிலுள்ள வாழ்வியல் தத்துவங்கள், கருத்துக்களை ஓவியங்களாக வரைந்து காஃபி மேசைப் புத்தகமாக வெளியிட நடவடிக்கை.

- புகழ்பெற்ற தலைவர்கள், தமிழறிஞர்களின் அரிய ஒலி/ஒளிப் பொழிவுகள் இணைய தளத்தில் ஆவணமாக்க தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு ரூ.10.40 இலட்சம் வழங்கப்பட்டு, வடிவமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ரூ.10 இலட்சத்தில் பழந்தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் மற்றும் சிறார் இலக்கியங்கள் ஒலி நூல்களாக வெளியிட நடவடிக்கை.

- திருக்கோயில்களில் தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றோடு திருக்குறள் வகுப்பு.

- நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் கருத்துக்களையும், சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்க அவர்களது பிறந்த நாளன்று பேச்சுப் போட்டிகள் நடத்திட ஆணையிடப்பட்டு, நடத்தப்பட்டு வருகிறது.

- ரூ.27.20 இலட்சம் ஒதுக்கீட்டில், தமிழ்மொழி இலக்கியத் திறனை மாணவர்கள் மேம்படுத்திக்



கொள்ளும் வகையில் தமிழ்மொழி இலக்கிய திறனறிவுத் தேர்வு.

❖ சங்க இலக்கிய நூல்களை சந்தி பிரித்து உரையுடன் தொகுப்பு நூலாகவும் மற்றும் திராவிடக் களஞ்சியம் எனும் தொகுப்பு நூலை உருவாக்க ரூ.10 இலட்சம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கு வழங்கப்பட்டு பணிகள் அச்சிட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டது.

❖ மகாகவி பாரதியின் வாழ்க்கை குறித்தும் அவரது படைப்புகள் குறித்தும் ஆய்வு செய்த, மறைந்த பெ.தூரன், ரா.அ.பத்மநாபன், தொ.மு.சி.ரகுநாதன், இளசை மணியன் ஆகியோரின் நினைவாக அவர் குடும்பத்தாருக்கும், மூத்த ஆய்வாளர் திரு.சீனி விசுவநாதன், பேராசிரியர் மணிகண்டன் ஆகியோர்களுக்கும் தலா ரூ.3 இலட்சம் வீதம் விருதுத் தொகையுடன் பாரதி நினைவு நூற்றாண்டு விருதுகள்.

❖ கப்பல் தொடர்பான துறைகளில் ஈடுபட்டு, சிறந்த பங்காற்றி வரும் தமிழருக்கு 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது' ரூ.5 இலட்சம் விருதுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழ்.

❖ ரூ.1.10 கோடி ஒதுக்கீட்டில், எல்லைப் போராட்டத் தியாகிகள் 76 பேருக்கு சிறப்பு நேர்வாக தலா ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டது.

❖ தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள் பிறந்த நாளன்று, ஆண்டுக்கு 12 இடங்களில் இலக்கியக் கூட்டங்கள் 3 மாவட்டங்களில் நடத்திட ரூ.3.75 இலட்சம் ஒதுக்கீடு. இந்த ஆண்டு 7 மாவட்டங்களில் நடத்திட ரூ.11.25 இலட்சம் ஒதுக்கீடு.

❖ தமிழ் வளர்ச்சித்துறை வாயிலாக வழங்கப்பட்டு வந்த அரசு விருதுகளுக்கான விருதுத்தொகை ரூ.2 இலட்சமாக உயர்வு.

❖ பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக பாரதியின் கையெழுத்துப் பிரதிகள், சித்திரக் கதை நூல், பாரதியாரின் சிறந்த நூறு பாடல்களைத் தேர்வு செய்து ஓவியங்களுடன் கூடிய நூலாகவும், பாரதியாரின் படைப்புகள், பாரதியார் குறித்த முக்கிய ஆய்வு நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் வெளியிடும் பெருந்திட்டப் பணிகள்.

❖ "பன்முக ஆளுமையாளர் கலைஞர்" என்னும் பொருண்மையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக 16 நாட்கள் இணையவழி பன்னாட்டுக் கருத்தரங்கம்.

❖ தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம் வாயிலாக வ.உ.சிதம்பரனார் குறித்த இணைய வழிக் கருத்தரங்கம்.

- தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்களுக்கு ரூ.28.80 இலட்சம் உதவித்தொகை.
- தமிழ் இலக்கியங்களை உலகமொழிகளில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிடத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.12 இலட்சம். கலைஞரின் சங்கத் தமிழ் நூல் பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளில் மொழியாக்கம் செய்வதற்காகப் பணிகள்.
- தமிழ்ப் பணிகள் தொடர்பாகப் பிற பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களுடன் பன்னாட்டு அளவில் 4, உள்நாட்டு அளவில் 11 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்.
- தமிழ்ப் பல்கலைக்கழகம் சார்பாக 15 இந்திய ஆட்சிப் பணியாளர்களுக்கு அடிப்படைத் தமிழ்ப் பயிற்சி.
- வீரமாமுனிவரின் பிறந்தநாள் "தமிழ் அகராதியியல் நாள்" விழாவாகக் கொண்டாடப்பட்டு, பள்ளி மாணவர்களுக்கு ஓவியப்போட்டி, சொல்லாக்கப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள்.
- "தமிழ் அகராதியியல் நாள்" விழாவின் பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளின் ஆய்வுமலர் அச்சிட்டு, விலையின்றி விநியோகம்.
- தூயதமிழ் பேசுவோர் 6 பேருக்கு பரிசுத் தொகை, சான்றிதழ். 36 பேருக்குத் தூய தமிழ்ப் பற்றாளர் விருது, 2 தூயதமிழ் ஊடக விருது, 2 நற்றமிழ்ப் பாவலர் விருது.
- சொற்குவையின் சொற்கள், தமிழ் மின் நூல்கள், அரசுத் தளங்களின் உள்ளடக்கங்கள், அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடுகள், விக்கிப்பீடியாவில் பதிவேற்றம்.
- உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை வாயிலாக 3 இணைய தமிழ்க் கூடல், 12 இணைய வழிப் பன்னாட்டுக் கருத்தரங்கங்கள்.
- "பாரெங்கும் பாரதி" தலைப்பில் உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் இணைய வழிப் பன்னாட்டுக் கருத்தரங்கம் மற்றும் பன்னாட்டுக் கவியரங்கம்.
- பள்ளி, கல்லூரிகளுக்கு தனித்தனியே அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.
- புரட்சிக்கவி பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 131ஆவது பிறந்தநாளைப் போற்றும் வகையில் தமிழ்க் கவிஞர் நாள் விழா கொண்டாடப்பட்டது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

- பாவேந்தர் பாரதிதாசன் ஆய்விருக்கை சார்பில், பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் நிகழ்வாக "புரட்சிக் கவிஞர் வாழ்கிறார்" என்ற பொருண்மையில் சொற்பொழிவு.

உலகத் தமிழ்ச் சங்கம்

- நெதர்லாந்து சூரிய தமிழ் தொலைக்காட்சி, கல்லிடைக்குறிச்சி தேசிய கல்வி அறக்கட்டளை, தில்லி கலை இலக்கியப் பேரவை இணைந்து சர்வதேச மகளிர் நாளினை முன்னிட்டு இணையவழி பன்னாட்டுக் கவியரங்கம்.
- இச்சங்கத்தில் நடைபெற்ற நூல் அரங்கேற்றம் நிகழ்வில் 16 நூல்கள் அரங்கேற்றம்.

கலை மற்றும் பண்பாட்டுத்துறை

- 75ஆவது சுதந்திர ஆண்டையொட்டி, ரூ.164 இலட்சம் செலவில் 75 நாட்டுப்புறக் கலை வடிவங்களை, 75 ஒளிப்படங்களாக தயாரித்து இணையவழியில் வெளியிடும் பணி தொடக்கம்.
- "கால் கொண்ட கவிதைகள்" என்ற பெயரில், விரைவு தகவல் குறியீட்டு முறையுடன் நாட்காட்டி வெளியீடு.
- ரூ.31.19 இலட்சம் மதிப்பில், 733 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள்.
- நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டத்தின்கீழ், 1,000 நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.3,000 நிதியுதவி.
- மறைந்த புகழ்பெற்ற 18 கலைஞர்களின் குடும்பங்களுக்கு ஒருமுறை குடும்ப பராமரிப்பு நிதியாக தலா ரூ.25,000.
- மகாகவி பாரதியாரின் 100ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஓவியப் போட்டி.





- நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டத்தின்கீழ், 123 நலிந்த கலைஞர்களின் மரபுரிமையினர்களுக்கு ரூ.91.11 இலட்சம் நிதியுதவி.
- வறுமைக்கோட்டின்கீழ் வாழும் புகழ்பெற்ற கலைஞரான திரு.எம்.கே.தியாகராஜ பாகவதரின் பேரன் திரு.சாய்ராம் என்பவருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் நிதியுதவி.
- மாவட்டக் கலை மன்றம் வாயிலாக வழங்கப்படும் விருதுகளின் எண்ணிக்கை 15 ஆக உயர்வு. ரூ.71 இலட்சத்தில் 525 கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.
- "விடுதலைப் போரில் தமிழகம்" அலங்கார ஊர்திகள் சென்ற தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கலை பண்பாட்டுத் துறையின் சார்பாகக் கலை நிகழ்ச்சிகள். கலைஞர்களுக்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பூதியம்.
- சுற்றுலாத்துறை மற்றும் தென்னக பண்பாட்டு மையத்துடன் இணைந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு கலைஞர்களுக்கு ரூ.44.30 இலட்சம் மதிப்பூதியம்.
- யுடியூப், முகநூல், டிவிட்டர் மற்றும் வாட்ஸ்ஆப் குழுக்கள் வாயிலாக கலை பண்பாட்டுத் துறையின் செயல்பாடுகள் மற்றும் தகவல்கள் பரிமாற்றம்.
- நம்ம ஊரு திருவிழா என்ற பெயரில் பிரம்மாண்டமான நாட்டுப்புறக் கலை விழா 500 நாட்டுப்புறக் கலைஞர்களைக் கொண்டு நடத்தப்பட்டது.
- துபாயில் நடந்த உலக வர்த்தக கண்காட்சியில் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகள் இத்துறையின் மூலம் நடத்தப்பட்டது.
- சண்டிகர் தமிழ்சங்கத்தில் நடைபெற்ற சித்திரைத் திருவிழாவில், 20 கலைஞர்களைக் கொண்டு தஞ்சாவூர் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக கலை நிகழ்ச்சிகள் மாநிலங்களிடையே கலைப் பரிமாற்ற திட்டத்தின்கீழ் ரூ.3 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- நீலகிரி மாவட்டம் உதகையில் கோடை விழாவில், கோயம்புத்தூர் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக ரூ.3 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் நடைபெற்ற கோடைவிழாவில், மதுரை மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக ரூ.2.50 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- சேலம் மாவட்டம், ஏற்காட்டில் நடைபெற்ற கோடை விழாவில், சேலம் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக ரூ.1 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- கிருஷ்ணகிரியில் நடைபெற்ற மாங்கனி விழாவில், சேலம் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக ரூ.1 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- சென்னையில், தமிழ்நாடு நாள் விழாவில் ரூ.5.35 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- முசோரியில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக அகாடமியில் காஞ்சிபுரம்

மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக அயல்மாநிலங்களில் கலைப் பரிமாற்ற திட்டத்தின்கீழ் ரூ.1.14 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

❖ உலக செஸ் ஒலிம்பியாட் ஜோதி ஓட்டத்தில், இராமநாதபுரம் மற்றும் மதுரையில், மதுரை மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாகவும், தொடர்ந்து சென்னையில் காஞ்சிபுரம் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக ரூ.2.50 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

❖ நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் நடைபெற்ற வல்வில் ஓரி விழாவில் ரூ.1.50 இலட்சம் செலவிலும், தருமபுரி மாவட்டம் ஒகேனக்கலில் நடைபெற்ற ஆடிப்பெருக்கு விழாவில் ரூ.1.50 இலட்சம் செலவிலும் சேலம் மண்டல கலை பண்பாட்டு மையத்தால் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

❖ தென்காசி மாவட்டம் குற்றலாத்தில் நடைபெற்ற சாரல் விழாவில், திருநெல்வேலி மண்டல கலை பண்பாட்டு மையத்தால் ரூ.4.50 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

❖ 75ஆவது சுதந்திர தின விழாவையொட்டி, முதல் பெண் விடுதலைப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலு நாச்சியாரின் நினைவாக, சென்னை கலைவாணர் அரங்கில் வரலாற்று நாட்டிய நாடகம் ரூ.12 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து கோவை, மதுரை ஆகிய நகரங்களிலும் நடத்தப்பட்டது.

❖ ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி மையத்தில் 75ஆவது சுதந்திரத் திருநாள் அமுதப்பெருவிழாவினை முன்னிட்டு கோயம்புத்தூர் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக ரூ.1 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

❖ நாட்டுப்புறக் கலை வடிவங்களை பிரபலபடுத்தும் வகையில், 'கலை சங்கமம்' என்னும் கலை விழாவினை சென்னை அரசு அருங்காட்சியகத்தில் தொடங்கி வைக்கப்பட்டு, பூங்காக்கள், கடற்கரைகள், அருங்காட்சியகங்கள் மற்றும் தமிழ்நாட்டில் மக்கள் கூடும் இடங்கள் போன்ற பல்வேறு இடங்களில் வார இறுதி நாட்களில் கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

❖ தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் ஆதரவற்ற நிலையில் வாழும் கலைமாமணி விருது பெற்ற 10 நபர்களுக்கு ஒருமுறை பொற்கிழி நிதியுதவி ரூ.10 இலட்சம் மதிப்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

❖ தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இசைக்கருவிகள், ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் வாங்குவதற்கு ரூ.50 இலட்சம் மதிப்பில் நிதியுதவி வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

❖ இராஜஸ்தான் மாநிலம், ஜெய்பூரில் நடைபெற்ற தேசிய லோங்ரங் கலை விழாவில் மதுரை மற்றும் சேலம் மண்டலத்தை சேர்ந்த 60 கலைஞர்களைக் கொண்டு நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் ரூ.9.70 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

❖ இராஜராஜ சோழனின் பிறந்த தினமாக ஐப்பசி சதய நட்சத்திரம் 1037ஆவது ஆண்டு பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, தஞ்சாவூர் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக ரூ.1.50 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

❖ அரசு இசை, கவின் கலை, கட்டடக் கலை மற்றும் சிற்பக் கல்லூரிகளில் முதன்முறையாக வளாக நேர்காணல் நடத்தப்பட்டு 173 மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

❖ சென்னை, அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் அரசு கவின் கலை, கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை கல்லூரி விரிவுரையாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன.

❖ தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் சிறந்த வல்லுநர்கள் மூலம் அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் இசைப் பள்ளிகளின்

விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடத்தப்பட்டது.

❖ சென்னை மற்றும் கும்பகோணத்தில் உள்ள அரசு கவின் கலைக் கல்லூரி மற்றும் மாமல்லபுரத்தில் உள்ள அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை மேம்படுத்த 33 பயிலரங்குகளும், 6 கலை கண்காட்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

அருங்காட்சியகங்கள் துறை

❖ ரூ.6 கோடி மதிப்பில், மதுரை காந்தி நினைவு அருங்காட்சியக பாரம்பரிய கட்டடம் மேம்பாடு.

❖ ரூ.2.5 கோடி செலவில், சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ஒருங்கிணைந்த பாதுகாப்பு மேலாண்மையை நிறுவும் பணிகள்.

❖ சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் 23 மாவட்ட அரசு அருங்காட்சியகங்களில் பல்வேறு கல்வி சார் நிகழ்ச்சிகள்.

❖ ரூ.5.41 கோடி செலவில், சென்னை, அரசு அருங்காட்சியக பாந்தியன் கட்டடத்தை மீட்டுருவாக்கி காட்சிக் கூடங்களை மேம்படுத்தும் திட்டப்பணிகள்.

❖ ரூ.2.81 கோடி நிதி ஒதுக்கீட்டில், ஒரு பழைய பாரம்பரிய கட்டடத்தை மீட்டுருவாக்கி அதில் பாரம்பரிய சூழல் மற்றும் உட்கட்டமைப்பு கொண்ட உணவகம்.

❖ ரூ.4.80 கோடி மதிப்பீட்டில், தற்போதுள்ள நிருவாகக் கட்டடத்திற்கு பதிலாக புதிய நிருவாகக் கட்டடம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்.

❖ ரூ.90 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், அரியலூர் புதையுயிரி படிவ அருங்காட்சியகத்தில் சுற்றுச்சுவர்.

தொல்லியல்துறை

❖ ரூ.16.93 கோடியில் சார்ஜாமாடி, தஞ்சாவூர், டேனிஷ்கோட்டை தரங்கம்பாடி மற்றும் மதுரை திருமலைநாயக்கர் அரண்மனை புனரமைப்பு பணிகள். இந்நிதியாண்டிற்கு ரூ.43.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

❖ கொடுமணல், சிவகளை மற்றும் கீழடியினை சுற்றியுள்ள அகரம் மற்றும் கொந்தகை இடங்களை தொல்லியல் தளங்களாக அறிவிப்பதற்கான முன்னிலை அறிவிக்கை வெளியீடு.

❖ கீழடியில் திறந்தவெளி தொல்லியல் அருங்காட்சியகம் அமைக்க நடவடிக்கை.

❖ கொற்கையின் கரையோரப் பகுதிகளில் முன்கள ஆய்வு ரூ.150 இலட்சத்தில் மேற்கொள்ள திட்டம். இதில், தொல்லியல் துறையால் ரூ.64 இலட்சம் ஒப்பளிக்கப்பட உள்ளது.

❖ தொல்லியல் அகழாய்வுகளை அறிவியல் முறைப்படி மேற்கொள்ள தொடரும் செலவினம் ரூ.5 கோடியாக உயர்த்தி ஒதுக்கீடு.

❖ சிவகங்கை மாவட்டத்தில் கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலூர், அகரம், கொந்தகை, அரியலூர் மாவட்டத்தில் கங்கைகொண்ட சோழபுரம் (மாளிகைமேடு) இடங்களில், தொல்லியல் அகழாய்வுப் பணிகள்.

❖ ரூ.1.58 கோடி நிதி ஒதுக்கீட்டில், சிவகங்கை மாவட்டம், கீழடியில் புதிய உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகத்திற்கு 34 கூடுதல் பணியிடங்கள்.

❖ தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனத்தில், ஈராண்டு முதுநிலை கல்வெட்டியல் பட்டயப் படிப்பு தொடக்கம்.

❖ தொல்பொருட்கள் மற்றும் கல்வெட்டுகளை மின்னணு முறையில் ஸ்கேன் செய்ய ரூ.60 இலட்சத்தில் இரண்டு உயர்நிலை கையடக்க 3D ஸ்கேனர் மற்றும் உபகரணங்கள்.

❖ பாறை ஓவியங்களை மின்னணு முறையில் ஆவணப்படுத்த தொல்லியல் அலுவலர், புவியியலாளர், மானுடவியலாளர், நாட்டுப் புறவியல் நிபுணர்கள் அடங்கிய வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, 50 இடங்களில் களஆய்வு.

❖ கீழடி, அதனைச் சுற்றியுள்ள பகுதிகள், ஆதிச்சநல்லூர், சிவகளை, அதனைச் சுற்றியுள்ள பகுதிகள், கொற்கை, கொடுமணல்,



மயிலாடும்பாறை மற்றும் கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய ஏழு இடங்களில் அகழாய்வு பணிகள்.

❖ வேலூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் புதிய கற்கால இடங்களைக் கண்டறிதல் மற்றும் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகத்தைக் கண்டறிதல் என இரு கள ஆய்வுகள்.

❖ அரிட்டாப்பட்டி, முதலைக்குளம், தொண்டூர், நெகனூர் மற்றும் பூலாங்குறிச்சி ஆகிய இடங்களில் உள்ள தமிழி கல்வெட்டுகள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிப்பு.

❖ "ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை பகுதிகளில் அகழாய்வின்போது கிடைத்த அரிய பொருட்களைக் காட்சிப்படுத்த, திருநெல்வேலி நகரில் ரூ.33.02 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் "பொருநை அருங்காட்சியகத்திற்கு" 13 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு.

❖ கீழடியில் வெளிக்கொணரப்பட்ட தொல்பொருட்களைக் காட்சிப்படுத்த சிறப்பு கண்காட்சி துவக்கம்.

❖ உலக மரபு வாரவிழா கொண்டாடப்பட்டு, அனைத்து அகழ்வைப்பகங்களிலும் கோயில்களின் பாதுகாப்பு மற்றும் தொல்லியல் சின்னங்களைப் பராமரித்தல் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு.

❖ 45ஆவது சென்னை புத்தகத் திருவிழாவில் 5,000 சதுர அடியில் அமைக்கப்பட்ட பொருநை கண்காட்சி அரங்கு, ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை பகுதிகளில் அகழாய்வின் போது கிடைத்த அரிய தொல்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டது.

❖ 5ஆவது நெல்லை புத்தகக் கண்காட்சியில் பொதுமக்கள் பயனடையும் வகையில் ஒரு சிறப்புக் கண்காட்சி. தமிழ்நாட்டு கல்வெட்டுகள் என்னும் தலைப்பில் 6 கல்வெட்டுத் தொகுதிகள் வெளியீடு.

❖ கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் லித்திக் டெக்னாலஜி எனப்படும் கற்தொழில்நுட்பம் குறித்த தேசிய அளவிலான பயிலரங்கம்.

❖ சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பண்டைய தமிழ்ப்பண்பாடும், மரபும் என்னும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம்.

❖ ❖ ❖



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்

இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு
மேம்பாட்டுத்துறை அமைச்சர்

திரு. உதயநிதி ஸ்டாலின்
அவர்கள்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை

- முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுக்கான பரிசுத்தொகை ரூ.1 இலட்சமாக உயர்வு.
- போலந்து, ராக்லோவ் நகரில் உலக வில்வித்தை இளைஞர் வாகையர் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற செல்வி எஸ்.ரிது வர்ஷினி அவர்களுக்கு ரூ.6 இலட்சம் நிதி.
- ஜப்பான் டோக்கியோவில் மாற்றுத்திறனாளர்களுக்கான பாராலிம்பிக் 2020 போட்டிகளில் தடகள விளையாட்டில் உயரம் தாண்டுதலில் வெள்ளிப்பதக்கம் வென்ற திரு.டி.மாரியப்பன் அவர்களுக்கு ரூ.2 கோடி நிதி.



- 2020ஆம் ஆண்டுக்கான ஃபிடே உலக சதுரங்க ஆன்லைன் குழு வாகையர் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற திரு. ஆனந்த் விஸ்வநாதன், திரு. வி.ஆர். அரவிந்த் சிதம்பரம், திரு. ஆர்.பிரக்ஞானந்தா மற்றும்செல்விஆர்.வைஷாலி,அணித்தலைவர் மற்றும் பயிற்சியாளர் திரு. ஸ்ரீநாத் நாராயணன் ஆகியோருக்கு ரூ.92 இலட்சம் நிதி.
- 2021ஆம் ஆண்டுக்கான ஃபிடே உலக சதுரங்க ஆன்லைன் குழு வாகையர் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற திரு. ஆனந்த் விஸ்வநாதன், திரு. பா.அதிபன், திரு. ஆர்.பிரக்ஞானந்தா, செல்வி ஆர். வைஷாலி, செல்வி பா.சவிதா ஸ்ரீ மற்றும் ஆண்கள் அணியின் பயிற்சியாளர் திரு. ஸ்ரீநாத் நாராயணன் மற்றும் பெண்கள் அணியின் பயிற்சியாளர் திரு. மோ.ஷ்யாம் சுந்தர் ஆகியோருக்கு ரூ.57.50 இலட்சம் நிதி.
- கஜகஸ்தான், அஸ்தானா நகரில் நடைபெற்ற ஃபிடே உலக சதுரங்க குழு வாகையர் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. பா.அதிபன் அவர்களுக்கு ரூ.20 இலட்சம் நிதி.
- 2019ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் சர்வதேச கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற திரு. ப.இனியன் அவர்களுக்கு ரூ.5 இலட்சம் நிதி.
- 2019 ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் மகளிர் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற செல்வி ஸ்ரீஜா சேஷாத்திரி அவர்களுக்கு ரூ.5 இலட்சம் நிதி.
- 2020ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் மகளிர் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற செல்வி வி.வர்ஷினி மற்றும் செல்வி பி.வி.நந்திதா ஆகியோருக்கு தலா ரூ.5 இலட்சம் நிதி.
- 2020ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்ற திரு. வி எஸ்.ரத்னவேல், திரு. மு.பிரனேஷ் ஆகியோருக்கு தலா ரூ.3 இலட்சம் நிதி.
- 2021ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் மகளிர் சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்ற செல்வி பா.சவிதா ஸ்ரீ அவர்களுக்கு ரூ.3 இலட்சம் நிதி.
- 2019ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் சர்வதேச மாஸ்டர் பட்டம், 2022ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற செல்வன் எச்.பரத் சுப்ரமணியம் அவர்களுக்கு ரூ.8 இலட்சம் நிதி.
- 2015 (மற்றும்) 2019ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் அபுதாபியில் நடைபெற்ற சிறப்பு ஒலிம்பிக் உலக கோடைக்கால விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.3.90 கோடி சிறப்பு நிதி.
- டாக்காவில் நடைபெற்ற தெற்காசிய கராத்தே சாம்பியன்ஷிப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற செல்வி என். ஹர்ஷா அவர்களுக்கு ரூ.8 இலட்சம் நிதி.
- 2018ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் சர்வதேச மாஸ்டர் பட்டம், 2021ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற செல்வன் எஸ். அர்ஜுன் கல்யாண் அவர்களுக்கு ரூ.8 இலட்சம் நிதி.
- கத்தாரின் தோஹாவில் நடைபெற்ற ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில் வெண்கலப்பதக்கம் வென்ற செல்வி நிவேதிதா வி நாயர் அவர்களுக்கு ரூ.2 இலட்சம் நிதி.
- தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை திட்டத்தின் கீழ், விளையாட்டு வீரர்களுக்கு ரூ.83.69 இலட்சம் உதவித்தொகை.
- பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்வதற்கு ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ், விளையாட்டு வீரர்களுக்கு ரூ.1.40 கோடி நிதி.
- ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற 2020 ஒலிம்பிக் போட்டியில்



தடகளப் பிரிவில் கலந்துகொண்ட செல்வி எஸ். தனலெட்சுமி மற்றும் செல்வி வி.சுபா ஆகியோர்களுக்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திலும், 2020 பாராலிம்பிக் உயரம் தாண்டும் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற திரு.ட்டி.மாரியப்பன் அவர்களுக்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகிதங்கள் குழுமத்திலும் பணி நியமனம்.

- தமிழ்நாட்டின் பாரம்பரிய தற்காப்புக் கலைகளில் ஒன்றான சிலம்பம் விளையாட்டு 3 சதவிகித விளையாட்டு இட ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.
- வேலூர் மாவட்டம், காட்பாடியில் ரூ.16.45 கோடி மதிப்பீட்டில் திறந்தவெளி மாவட்ட விளையாட்டு வளாகம்.
- ரூ.7.94 கோடி மதிப்பீட்டில் சென்னை ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் பெண்களுக்கான புதிய விளையாட்டு விடுதி.
- கிருஷ்ணகிரி, ஓசூர் விளையாட்டரங்கில் ரூ.3.69 கோடி மதிப்பீட்டில் கூடைப்பந்து ஆடுகளம், கையுந்துபந்து மைதானம், இறகுப்பந்து உள் விளையாட்டரங்கம், நடைபாதை மற்றும் உடற்பயிற்சிக் கூடம்.
- வேலூர் மாவட்டம், காட்பாடியில் திறந்தவெளி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ரூ.37 இலட்சத்தில் கூடுதல் வசதிகள்.
- ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.3 கோடி, வெள்ளிப்பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.2 கோடி, வெண்கலப்பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.1 கோடி ஊக்கத்தொகையாக உயர்வு.
- டோக்கியோ ஒலிம்பிக், பாராலிம்பிக் 2020 போட்டிகளில் கலந்து கொண்ட தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.55 இலட்சம் சிறப்பு ஊக்கத்தொகை.
- செல்வி சி.ஏ. பவானி தேவிக்கு டோக்கியோ ஒலிம்பிக் 2021இல் இந்தியா சார்பாகக் கலந்துகொள்ள ரூ.5 இலட்சம் ஊக்கத்தொகை.

- சதுரங்க விளையாட்டில் சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்ற செல்வன். பரத் சுப்ரமணியம் அவர்களுக்கு ரூ.8 இலட்சம் நிதி.
- 2022 ஆம் ஆண்டு ஸ்காட்லாந்தில் நடைபெற்ற WSF உலக ஸ்குவாஷ் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற திருவாளர்கள். தீபிகா பல்லிக்கல் கார்த்திக், சவுரவ் கோஷல் மற்றும் ஜோஷ்னா சின்னப்பா ஆகியோர்களுக்கு ரூ. 3 கோடி ஊக்கத்தொகை.
- ரூ.22.04 கோடி மதிப்பீட்டில் வேலூர் மாவட்டத்தில் பல்நோக்கு திறந்தவெளி விளையாட்டு வளாகம்.
- தேசிய அளவிலான வாகையர் போட்டிகளில் பதக்கம் வென்ற 291 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.5.94 கோடி ஊக்கத்தொகை.
- 2022 சென்னை ஓபன் WTA சர்வதேச டென்னிஸ் வாகையர் போட்டிகள் நடத்த ரூ.5 கோடி நிதி.
- 71 ஆவது சீனியர் தேசிய கூடைப்பந்து வாகையர் போட்டியில் பதக்கம் வென்ற 24 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.42 இலட்சம் ஊக்கத்தொகை.
- பிரேசிலில் நடைபெற்ற 24ஆவது கோடைகால காது கேளாதோர் ஒலிம்பிக்கில் பங்கேற்க தகுதி பெற்ற ஆறுவிளையாட்டு வீரர்களுக்கு தலா ரூ.1 இலட்சம் நிதி.
- மத்தியப் பிரதேசம், போபாலில் நடைபெற்ற 12 ஆவது சீனியர் தேசிய வாகையர் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாடு ஆண்கள் ஹாக்கி அணியின் 18 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.27 இலட்சம் ஊக்கத்தொகை.
- தென் கொரியாவின் சுங்ஜுவில் நடைபெற்ற ஆசிய படகோட்டுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற திரு.லக்ஷ்மன் ரோஹித் மரடபா என்பவருக்கு ரூ.5 இலட்சம் ஊக்கத்தொகை.
- பிரேசிலில் நடைபெற்ற 24வது கோடைகால காது கேளாதோர் ஒலிம்பிக் போட்டியில் பேட்மிண்டன் பிரிவில் 3 தங்கப் பதக்கங்களைப் வென்ற செல்வி.ஜே.ஜெர்லின் அனிகாவுக்கு ரூ.75 இலட்சமும், டென்னிஸ் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற திரு.பிருத்வி சேகருக்கு ரூ.35 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1.10 கோடி உயரிய ஊக்கத் தொகை.
- 31ஆவது மூத்தோர் தேசிய வாள்வீச்சு வாகையர் போட்டியில் பதக்கம் வென்ற 4 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.4 இலட்சம் ஊக்கத்தொகை
- 2022ஆம் ஆண்டு சதுரங்க கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற திரு.வி.எஸ்.ராகுலுக்கு ரூ.3 இலட்சம் ஊக்கத்தொகை.
- கொலம்பியாவில் நடைபெற்ற இன்லைன் ஸ்பீடு ஸ்கேட்டிங் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற திரு.ஆனந்த் குமார் வேல்குமாருக்கு ரூ.4 இலட்சம் ஊக்கத்தொகை.
- அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற 144 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.2.13 கோடி ஊக்கத்தொகை.
- தமிழ்நாடு அகில இந்திய குடிமைப் பணிகள் மற்றும் மத்திய அரசுப் பணியாளர்கள் போட்டியை (TACS) நடத்த ரூ.26.42 இலட்சம் நிதி.
- அறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டிகள் நடத்துவதற்கான நிதி ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.38 இலட்சமாக உயர்வு.
- 2021 போலந்தின் ரோக்லாவில் நடைபெற்ற உலக வில்வித்தை இளைஞர் வாகையர் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற கோவையைச் சேர்ந்த எஸ். ரிது வர்ஷினிக்கு ரூ.6 இலட்சம் ஊக்கத் தொகை.
- பெண்கள் சதுரங்கத்தில் சர்வதேச மாஸ்டர் பட்டம் பெற்ற 2 விளையாட்டு வீராங்கனைகளுக்கு தலா ரூ.3 இலட்சம் ஊக்கத்தொகை.
- சதுரங்கத்தில் சர்வதேச மாஸ்டர் பட்டம் பெற்ற 3 விளையாட்டு வீரர்களுக்கு தலா ரூ.3 இலட்சம் ஊக்கத்தொகை.
- "கோவ்லாங் கிளாசிக் மற்றும் மஹாப்ஸ் பாயின்ட் பிரேக் சேலஞ்ச் 2022 இன் ஒன்பதாவது பதிப்பு" தேசிய மற்றும் சர்வதேச



அலைச்சறுக்கு போட்டிகளுக்கு பிளாட்டினம் ஸ்பான்சராக ரூ.30 இலட்சம் நிதி.

- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பழங்குடியினருக்கு தினசரி பயிற்சித் திட்டம் மற்றும் உலக வெற்றியாளர்களின் திறமையை கண்டறியும் திட்டம் - பேட்டரி ஆப் டெஸ்ட் ஆகியவற்றின் கீழ், ரூ.25 இலட்சம் நிதி.
- வேலூர் மாவட்டம் காட்பாடியில் கல்லூரி மாணவிகளுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதியை அமைப்பதற்காக ரூ.69 இலட்சம் நிதி.
- மாநில விளையாட்டு சங்கத்திற்கு வழங்கப்பட்ட நிதி உதவி ரூ.4 கோடியாக உயர்த்தப்பட்டது.
- 25ஆவது ஆசிய டேபிள் டென்னிஸ் வாகையர் போட்டியில் பதக்கம் வென்ற 2 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.20 இலட்சம் ஊக்கத்தொகை.
- 77ஆவது SRFI தேசிய ஸ்குவாஷ் வாகையர் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற செல்வி ஜோஷ்னா சின்னப்பாவுக்கு ரூ.5 இலட்சம் ஊக்கத் தொகை.
- உலக உடற்கட்டமைப்பு மற்றும் உடற்தகுதி விளையாட்டு வாகையர் போட்டிகளில் பதக்கம் வென்ற 3 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.35 இலட்சம் ஊக்கத்தொகை.
- நீலகிரி மாவட்டத்தில் விளையாட்டு விடுதி கட்டுமானப் பணிகளுக்கு ரூ. 2.53 கோடி நிதி ஒதுக்கீடு.
- நலிவடைந்த நிலையில் உள்ள சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம் ரூ.6,000 ஆக உயர்வு.
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நவீன விளையாட்டு மைதானங்களை பராமரிக்க ரூ.30 கோடி நிதி.
- 22ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற 4 விளையாட்டு வீரர்கள் மற்றும் அவர்களது பயிற்சியாளர்களுக்கு ரூ.3.91 கோடி ஊக்கத்தொகை.
- 44ஆவது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணியினருக்கு ரூ.2 கோடி நிதி.
- சிறந்த நடுவர்கள் மற்றும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது, சிறந்த பயிற்சியாளர்கள், சிறந்த உடற்கல்வி இயக்குநர்கள் / உடற்கல்வி ஆசிரியர்களுக்கு முதலமைச்சரின் விருது என ரூ.16.30 இலட்சம் நிதி.

- சென்னையில் 44ஆவது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் நடத்துவதற்கு ரூ.114.39 கோடி நிதி.
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு விடுதியில் சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்கான வருடாந்திர மானியம் ரூ.1.74 கோடியாக உயர்வு.
- 2022 இந்தோனேசியாவில் நடைபெற்ற ஆசிய கோப்பை ஹாக்கி வாகையர் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற திரு.எஸ்.மாரீஸ்வரன் மற்றும் திரு. எஸ்.கார்த்தி ஆகியோருக்கு தலா ரூ. 10 இலட்சம் ஊக்கத்தொகை.
- சப் ஜூனியர் / ஜூனியர் / யூத் / சீனியர் அளவிலான தேசிய வாகையர் போட்டிகளில் பதக்கம் வென்றதற்காக 291 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.5.94 கோடி ஊக்கத்தொகை.
- நான்கு நபர்களுக்கு 2022ஆம் ஆண்டிற்கான முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது.
- தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு சிற்றுண்டி படி ஒரு மணி நேரத்திற்கு ரூ.10லிருந்து ரூ.25 ஆக உயர்வு.
- தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான மலையேறுதல் பயிற்சிக்கட்டண மாநில அரசின் பங்கான 25 சதவிகிதம் கூடுதல் நிதி.
- தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான மைக்ரோலைட் பறக்கும் பயிற்சியை மேம்படுத்த ரூ.4.56 இலட்சம் நிதி.
- கடலோர மாவட்டங்களில் தேசிய மாணவர் படை விரிவாக்கத்திற்காக ரூ.72.98 இலட்சம் நிதி.
- 2022-2023ஆம் ஆண்டிற்கான நடப்பு / முன்மொழியப்பட்ட தேசிய மாணவர் படை முகாம்கள் மற்றும் பயிற்சிக்காக ரூ.1 கோடி நிதி.
- தேசிய மாணவர்படை அலுவலகங்களில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட காவலர்களுக்கான கட்டணமான ரூ.8.81 கோடி தள்ளுபடி.
- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் ரூ.13.33 கோடியில் இறகுப்பந்து பயிற்சிக் கூடம், ரூ.12.60 கோடியில் மேசைப்பந்து பயிற்சிக்கூடம், ரூ. 14.59 கோடியில் மாணவர் விடுதி, ரூ.13.12 கோடியில் முதன்மை உயிர் இந்திரவியல் ஆய்வகம், ரூ.1.6 கோடியில் பாரம்பரிய களரிப்பயட்டு மற்றும் சிலம்பம் பயிற்சி மையம், ரூ.51.72 இலட்சத்தில் உணவு மற்றும் சமையலறைக் கூடம், ரூ.73 இலட்சத்தில் வாகனநிறுத்துமிடம், ரூ.5.83 கோடியில், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், ரூ.1.10 கோடியில் பேபில் ஃபைரிங் ரேஞ்ச்.

சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் வழங்கப்பட்டுவருகின்ற சிறப்புத் திட்டங்களின் மூலம், 1,32,348 படித்த இளைஞர்களுக்கு திறன் பயிற்சி வழங்கப்பட்டு அவர்களுள் 83,285 நபர்களுக்கு வேலைவாய்ப்பு.

குறுகிய கால திறன் பயிற்சி (Short Term Skill Training)

- வேளாண்மை, வாகனம், வங்கி, நிதி சேவை மற்றும் காப்பீடு, கட்டுமானம், மின்னணுவியல், உணவு பதப்படுத்துதல், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு, சுகாதாரம், தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகள், மேலாண்மை, ஊடகம், பொழுதுபோக்கு, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் போன்ற 30க்கும் மேற்பட்ட தொழிற்துறைகளில் குறுகிய கால திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, 1,32,348 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் (Recognition of Prior Learning)

- அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் என்பது அனுபவத்தின் மூலம் கற்ற திறனை மதிப்பீடு செய்து உரிய



சான்றிதழ் வழங்குவது. இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டுகளில் இதுவரை 1,11,371 நபர்களுக்கு திறன் சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

- பாரம்பரிய கலை மற்றும் கைவினைப் பொருட்கள் செய்யும் கைவினை கலைஞர்களுக்கு அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் (RPL) மூலமாக மதிப்பீடு மற்றும் சான்றிதழ் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அழிந்து வரும் பாரம்பரிய தமிழர் கலைகளான சிலை வடித்தல், பனை ஓலை நெய்தல் திறன், தேங்காய் ஓடு நகை மற்றும் கைவினைப் பயிற்சி, பாய் பின்னுதல், இயற்கை சாயம் பயன்படுத்தும் திறன் பயிற்சி மற்றும் மரப்பாச்சு பொம்மைகள் தயாரித்தல் ஆகியவற்றை மீட்டெடுத்து பாதுகாக்கும் வண்ணம் (RPL) சான்றிதழ் வழங்கப்படும்.
- கிராமப்புறங்களில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலமாக நடத்தப்படும் சமுதாய திறன் பள்ளிகளை நடத்தும் பயிற்றுநர்களுக்கு அவர்களின் திறனை அங்கீகரித்தல் மூலமாக அவர்கள் Master Faculty ஆக அறிவிக்கப்பட்டு மற்ற இளைஞர்களுக்கு திறன் பயிற்சி கற்றுத்தர தகுதிபடுத்த திட்டமிடப்பட்டு, 1395 சமூகத் திறன் பள்ளிகளுக்கான பயிற்றுநர்கள் பயன் அடைவர்.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்கென தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்க "நான் முதல்வன்" திட்டத்தைத் 01.03.2022 அன்று தொடங்கி வைத்துள்ளார். இத்திட்டமானது ஆண்டிற்கு 10 இலட்சம் இளைஞர்களுக்கு திறன் பயிற்சிகளை வழங்கும் நோக்கத்தில் வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றது.
- நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பள்ளி மாணவர்களின் தனித்திறன்களைக் கண்டறிந்து, அதற்கேற்ப கற்றல் பாதைகளை தெரிவு செய்ய உரிய வழிகாட்டுதல் வழங்கி, அவர்களின் விருப்பத்திற்கேற்ப எதிர்கால பணிவாய்ப்புகளை தேர்ந்தெடுப்பதற்கு வழி வகுக்கிறது. கல்லூரி மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டத்தில்

கல்வித்துறையில் தொழில் நிறுவனங்களின் தொடர் ஈடுபாட்டுடன் கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு இடையே உள்ள திறன் இடைவெளியைக் குறைத்து, வளர்ந்து வரும் தொழில்நுட்ப மாற்றத்திற்கேற்ப திறன் பயிற்சிகள் மற்றும் நேரடி பயிற்சியின் மூலம் தொழில்துறை தொடர்பான திறன்களை வழங்குவது, இளைஞர்களை மிகச்சிறந்தவர்களாக்க வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோருக்கான திறன்களை வழங்குவது, நிரலோட்டம்போட்டிகளைநடத்திதிறமையான இளைஞர்களை கண்டறிந்து அவர்களை உலகத்திறன் போட்டிகளின் தரத்திற்கு பயிற்சி அளித்து பங்குபெறச் செய்வது போன்றவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டமானது பொறியியல் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக், மற்றும் பிற தொழிற்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் பயன்பெற உதவுகிறது.

- நகர்ப்புறத்தில் இருக்கும் மாணவர்களுக்கு இணையாக ஊரக பகுதி மாணவர்களும் தங்கள் திறனை அதிகரித்துக் கொள்ளும் வகையில் இலவசமாக உலகத் தரத்திலான திறன் பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டு மைக்ரோசாப்ட், ஐ.பி.எம், எச்.சி.எல், டி.சி.எஸ், இன்ஃபோசிஸ், கேம்பிரிட்ஜ், மற்றும் கூகுள் போன்ற பன்னாட்டு நிறுவனங்களுடன் இணைந்து வளர்ந்து வரும் தொழில் வாய்ப்புகளான பிக் டேட்டா, இன்டர்நெட் ஆப் திங்ஸ், ரோபோடிக்ஸ், செயற்கை நுண்ணறிவு திறன், மெஷின் லேர்னிங் போன்றவற்றை கற்று துறைசார் நிபுணர்கள் மூலம் 12.9 இலட்சம் மாணவர்களுக்கு திறன் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. திறன் வகுப்புகளை மாணவர்கள் எளிதிலும் இலவசமாகவும் பெற ஏற்றவாறு பிரத்யேகமாக இணையதளம் ஒன்று (www.naanmudhalvan.tn.gov.in) வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 37,554 பள்ளிகளில் 52,75,203 மாணவர்கள் எதிர்கால வேலை வாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு பெற்றுள்ளனர். 2,25,400 ஆசிரியர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்பட்டது. உயர் படிப்புகளுக்கான 150க்கும் மேற்பட்ட கல்வி உதவித் தொகைகள் பற்றிய தகவல்கள் மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

பொறியியல் கல்லூரிகளில் நான் முதல்வன்

- பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் திறனை மேம்படுத்த நான் முதல்வன் திட்டம் பல பயிற்சிப் பாடங்களை தன் தளத்தில் வழங்குகிறது.

- நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி தொடங்கப்பட்ட பொறியியல் கல்லூரிகளில் 41கட்டாய திறன் பயிற்சிகள்.

- 483 கல்லூரிகளில் 4,60,734 மாணவர்கள் எதிர்கால வேலை வாய்ப்புக்குத் தேவையான திறன் பயிற்சியைப் பெற்றுள்ளனர். தமிழ்நாடு அரசோடு ஒப்பந்தம் செய்து 26 முன்னணி நிறுவனங்கள் கட்டாயப் படிப்புகளை வழங்கி வருகின்றது.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நான் முதல்வன்

- 842 கல்லூரிகளில் 8,29,391 மாணவர்கள் தொழில்துறைக்கு ஏற்ற வேலைவாய்ப்பு பெறும் வகையில் திறன் பெற்று பயனடைந்துள்ளனர்.

பாலிடெக்னிக் கல்லூரிகளில் நான் முதல்வன்

- 464 கல்லூரிகளில் 1,18,043 மாணவர்கள் தொழில்துறைக்கு ஏற்ற வேலைவாய்ப்பு பெறும் வகையில் திறன் பெற்று பயனடைய உள்ளனர்.

வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் முன்னணி தொழில் நிறுவனங்களின் பயிற்சி திட்டங்கள்

எச்.சி.எல் HCL "டெக்பீ"' பயிற்சித் திட்டம்

- 2,000 அரசுப் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு ரூ.20 கோடி



திட்ட செலவில், HCL டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் வேலைவாய்ப்பு உத்தரவாதம் தரும் திட்டம் தொடங்கி நடைபெற்று, 176 அரசுப் பள்ளி மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

டி.சி.எஸ். ஐயான் (TCS iON) – பை – தகவல் தொழில்நுட்பத் துறையில் டிஜிட்டல் கற்றல் திட்டம்

- அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு ரூ.5.49 கோடி திட்ட மதிப்பீட்டில் IT-ITeS துறையில் 2,500 இளைஞர்களுக்கு முன்னணி தொழில்நுட்பப் பயிற்சி வழங்குவதற்காக TCS iON உடன் திறன் பயிற்சித் திட்டம் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதுவரை 7,835 மாணவர்கள் NQT எடுத்ததின் மூலம் 2,600 மாணவர்கள் TCS நிறுவனத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

Gedee ஜெர்மன் B & A நிலை சான்றிதழ் படிப்பு

- ரூ.1.65 கோடி திட்ட செலவில் 200 மாணவர்கள் டூல் மேக்கிங் தொழில்நுட்பத்தில் ஜெர்மன் VET பயிற்சி நோக்கத்தின்படி இரண்டு வருட பயிற்சித் திட்டம் தொடங்கி நடைபெற்று வருகிறது. உற்பத்தி மற்றும் ஃபவுண்டரி தொழில்நுட்பத்தில் GKD ITR பயிற்சி
- ரூ.3.66 கோடி திட்ட மதிப்பீட்டில், 900 மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக GKD அறக்கட்டளையின் கீழ் GKD இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜிக்கல் ரிசர்ச் ஒத்துழைப்புடன் துவங்கப்பட்ட திட்டத்தில் 568 இளைஞர்களுக்கு பயிற்சி தொடங்கி நடைபெற்று வருகிறது. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும், பாலிடெக்னிக் கல்வி நிலையங்களில் திறன் பயிற்சி.
- அதிக எண்ணிக்கையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக நிதி உதவியோடு குறுகிய கால திறன் பயிற்சி வகுப்புகள் கட்டணமின்றி நடத்தப்படுகின்றன. இதுவரை 98 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் பதிவு செய்யப்பட்டு, தற்பொழுது 28 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் குறுகியகால பயிற்சி தொடங்கப்பட்டு இதில் 720 மாணவ / மாணவிகளுக்கு திறன் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

நிரலோட்டம் (ஹேக்கத்தான்) மூலம் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்தைக் வெளிக்கொணர்தல்

- நான் முதல்வன் திட்டத்தின்கீழ் அன்றாட வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் சில அழுத்தமான பிரச்சினைகளுக்கு புதுமையான தீர்வுகளைக் கண்டறியும் வகையில் நான் முதல்வன் நிரல் திருவிழா தளத்தை உருவாக்கியுள்ளது. மைக்ரோசாப்ட், கூகுள், ஆட்டோடெஸ்க் போன்ற பல்வேறு முன்னணி நிறுவனங்களுடனும், ஜஜடி-பாம்பே, ஜஜடி-மெட்ராஸ் முன்னணி கல்வி நிறுவனங்களுடனும் இணைந்து பல நிரலோட்டங்கள், இன்டர்ன்ஷிப்கள் மற்றும் போட்டிகள் நடந்து வருகின்றன.

சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்ப கழகத்தின் (ஐஐடி மெட்ராஸ்) ஆராய்ச்சி பூங்கா மாணவர்களுக்கான பணிசார்ந்த பயிற்சித் திட்டம்

- நான் முதல்வன் திட்டத்தின் மூலம் ஐஐடி மெட்ராஸ் ரிசர்ச் பார்க் உடன் இணைந்து மாணவர்களுக்கான உட்பயிற்சி (INTERNSHIP) திட்டத்தை நடத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு தொழில்துறை நிபுணர்கள் மூலம் வழிகாட்டி, ஐஐடி மெட்ராஸ் ரிசர்ச் பார்க் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படும். மேலும், ஐஐடி மெட்ராஸின் ஒத்துழைப்புடன் ரிவர்ஸ் இன்ஜினியரிங் குறித்த மனநிலையை வளர்ப்பதற்காக அடுத்த செமஸ்டர் முதல் கற்றல் திட்டம் தொடங்கப்பட உள்ளது.

மும்பையில் உள்ள இந்திய தொழில் நுட்பக் கழகத்துடன் (ஐஐடி மும்பை) FOSSEE எனும் மென்பொருள் கல்வியில் இணைந்து செயல்படுவது

- பாம்பே போசி (IIT Bombay FOSSEE) உடன் இணைந்து நடத்தப்பட்ட நிரலோட்டம், இதில் மாணவர்கள் இலவச மற்றும் திறந்த மூல மென்பொருளைப் பயன்படுத்தி ரிமோட் சென்சிங் தரவைப் பயன்படுத்தி வரைபடங்களை உருவாக்குவார்கள். அதிக பங்கேற்பு அணிகளைக் கொண்ட கல்லூரிகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் அங்கீகரிக்கப்படும் மற்றும் சிறந்த செயல்திறன் கொண்டவர்களுக்கு IIT பாம்பேயில் இன்டர்ன்ஷிப் வழங்கப்பட்டு வேலை வாய்ப்பு முகாம்களுக்கான பிரத்யேக அழைப்புகள் கிடைக்கும்.

மும்பையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் (ஐஐடி மும்பை) நிகழ்நிலையில் நடைபெறும் மெய் நிகர் தொழில் நுட்ப போட்டி(Virtual Walk Through Competition) போட்டியில் கலந்து கொள்ளுதல்

- நான் முதல்வன் கட்டாயப் படிப்பை முடித்த மாணவர்களுக்கு, ஐஐடி பாம்பே மற்றும் கலாச்சார அமைச்சகம், ஒன்றிய அரசு ஆகியவற்றால் நடத்தப்படும் மெய்நிகர் நடைமுறை போட்டியில் பங்கேற்று கட்டடக்கலை காட்சிப்படுத்தல் வாய்ப்பு வழங்கப்படும்.

- ஐஐடி பாம்பே, "நேஷனல் விர்ச்சுவல் லைப்ரரி ஆஃப் இந்தியா மற்றும் இந்திய கலாசாரத்துடன்" இணைந்து "கற்கும் போதே சம்பாதிக்கும்" திட்டத்தை நடத்துகிறது. ஐஐடி பாம்பேயின் சான்றிதழுடன் இது ஒரு ஃப்ரீலான்சிங் வாய்ப்பு. இந்தியாவின் பல்வேறு மாவட்டங்களில் மாணவர்கள் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்துக்கு தொடர்புடைய முக்கிய நபர்கள், பற்றி 200 வார்த்தைகளுக்கு ஒரு துணுக்கு எழுத வேண்டும், அவர்கள் எழுதும் ஒவ்வொரு துணுக்கிற்கும் ரூ.400 வழங்கப்படும். நான் முதல்வன் கேம்பிரிட்ஜ் ஆங்கிலப் பயிற்சி பெற்ற மாணவர்களிடமிருந்து ஒரு சமர்ப்பிப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பிளாக் செயின் (Block Chain) பணித்தொடர்பு பயிற்சி

- நான் முதல்வன் IBC மீடியாவுடன் இணைந்து மாணவர்களின் திறன் மேம்படுத்த இன்டர்ன்ஷிப்பை நடத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 3 வெவ்வேறு படிப்புகளில் பங்கேற்று, திட்டத்தை முடிக்கும்போது, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் மாணவர்களை மேம்படுத்துகிறார்கள்.

- மென்பொருள் குறியீட்டு முறையை கற்றுக்கொள்ளுங்கள்: RUST, Polka dot Ecosystem போன்ற பல்வேறு தலைப்புகளில் ஆழ்ந்து குறியீட்டு முறையைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பை,தொழில் வல்லுநர்களால் 15 நாட்கள் தொழில்நுட்பப் பயிற்சியின் மூலம் மாணவர்கள் பெறுகிறார்கள்.

- ஆன் கிரவுண்ட் ஆல்ட் ஹேக்: வெப்3 மற்றும் பிளாக்செயின் போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் மாணவர்கள் மேம்பாடு அடைய 8 நாட்கள் புத்துணர்வு முகாம் நடத்தப்படும்.



நிபுணர்களைக் கொண்டு உருவாக்குதல்

❖ இந்தத் திட்டத்தில் 45 நாட்களுக்கு தொழில் வல்லுநர்களுடன் நேரடி உலக வணிகத்தின் தீர்வுகளை கட்டமைக்கும் வாய்ப்பை மாணவர் பெறுவார்.

அண்ணா பல்கலைக்கழகத்தில், சியட் நிறுவனத்துடன் இணைந்து Fusion 360 வடிவமைப்பு போட்டி

❖ நவீன தொழில் நுட்ப யுக்திகளில் தமிழக மாணவர்களை தயார் செய்யும் விதமாக Fusion 360 எனும் மென்பொருள் வடிவமைப்பு சவாலை ஆட்டோடெஸ்க் நிறுவனம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இனைந்து அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆட்டோமோட்டிவ் டெக்னாலஜியின் ஆராய்ச்சி மையம் மூலம் (சியட்) நடத்தியது.

❖ எதிர்கால திறன் மேம்பாட்டிற்காக மாணவர்களை மேம்படுத்துவதாகும் இந்த திட்டமானது, ஜெனரேட்டிவ் டிசைன் (AI- அடிப்படையிலான கற்றல்), சேர்க்கை உற்பத்தி போன்ற புதிய வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு மாணவர்களை தயார்படுத்த உதவுகிறது. இதன் மூலம் அவர்களின் வடிவமைப்பு திறன் சிந்தனையில் அவர்களின் திறன்களை மேம்படுத்துகிறது.

❖ சென்னை, கோவை, மதுரை, திருநெல்வேலி, மற்றும் திருச்சி ஆகிய 5 மண்டலங்களில் முதற்கட்டப் போட்டி 3 நிலைகளில் நடத்தப்பட்டது. 2ஆம் ஆண்டு முதல் இறுதியாண்டு வரையிலான பொறியியல் மற்றும் டிப்ளமோ மாணவர்கள் இந்த வடிவமைப்பு சவாலில் பதிவு செய்து கலந்து கொண்டனர். இன்ஜினியரிங் மாணவர்களுக்கும், பாலிடெக்னிக் மாணவர்களுக்கும் இரண்டு வெவ்வேறு நிலைகளில் போட்டி தளங்கள் இருந்தன.

❖ மூன்று நிலைகளின் வெற்றியாளர்களிடம் இருந்து 320 மாணவர்களைக் கொண்ட 120 அணிகள் Fusion 360 மேல்நிலை சவாலுக்கு அழைக்கப்பட்டன. பங்கேற்பாளர்களுக்கு வெவ்வேறு தலைப்புகள் வழங்கப்படுகின்றன. டெய்ம்லர் டிரக் இன்னோவேஷன் சென்டர் இந்தியா பிரைவேட் லிமிடெட், சீமென்ஸ் கேம்சா, ரெனால்ட் நிசான் டெக்னாலஜி, போஷ், ஜஜிசிஏஆர், கேட்டர்பில்லர் இந்தியா பிரைவேட் லிமிடெட் போன்ற பல்வேறு

நிறுவனங்களின் புகழ்பெற்ற தொழில்துறை நடுவர்களால் மதிப்பீடுகள் திட்டமிட்டபடி நடத்தி முடிக்கப்பட்டு, வெற்றியாளர்களுக்கு உயர் மதிப்பு திறன் திட்டங்கள் மற்றும் இன்டர்ன்ஷிப்கள் வழங்கப்படும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் வழங்கப்பட்ட சிறப்புத் திட்ட பயிற்சிகள்

- தமிழ்நாடு நகர்புற வாழ்விட வாரியத்தில் வசித்து வரும் 10ஆவது, 12ஆவது மற்றும் பட்டபடிப்பை முடித்தவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்க தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தில் நடைபெற்று வரும் ஒரு சில பயிற்சிகள் அவர்களுக்கு 2021-2022ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அவைகள் அழகுக்கலைப் பயிற்சி, General Duty Assistant, வாகன ஓட்டுநர் பயிற்சி போன்றவை 236 பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது.
- கண்ணகி நகரில் உள்ள "முதல் தலைமுறை பயிற்சி" மையத்தில் அங்குள்ள 1,060 பயிற்றுநர்களுக்கு பயிற்சி வழங்க 28ஆவது இயக்குநர் குழுக்கூட்டத்தில் Hand Embroidery, Beautician, இருசக்கர வாகனம் பழுதுபார்த்தல். கணினி திறன் பயிற்சி, Nursing assistant, Lab assistant, Auto driving, Multicuisine cook, Electrician போன்ற பயிற்சிகள், ஒரு சில நிறுவனங்கள் மூலம் வழங்கப்படவுள்ளது.
- சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு தொழில் முறையிலான ஆங்கிலத் திறன் பயிற்சி கடந்த ஆண்டு 280 மாணவர்களுக்கு முன்னோட்ட அடிப்படையில் 3 மாவட்டங்களில் பயிற்சி வழங்கப்பட்டு,14 சட்டக் கல்லூரிகளில் 2,920 மாணவர்களுக்கு பயிற்சி.
- முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழத்தின் மூலமாக மாவட்ட வாரியாக உள்ள இலங்கை தமிழர்களுக்கு திறன் பயிற்சி அளித்திடும் வகையில் 32 மாவட்டத்திலுள்ள 2,796 பயனாளிகளுக்கு பயிற்சி வழங்கி வேலைவாய்ப்பு.
- தமிழ்நாடு தூய்மை பணியாளர்களின் குழந்தைகளை கண்டறிந்து, அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்திடவும், கல்லூரிப் படிப்புக்கு உகந்தவர்களாக அவர்களின் திறனை மேம்படுத்துவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இயலும் என ஆய்வுகள் மேற்கொண்டு "உறைவிட திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்களை அமைத்திட" தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திடம் கேட்டுக் கொண்டது.
- முன்னோட்ட அடிப்படையில் திருநெல்வேலி மாவட்டதில் "உறைவிட திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தை" அமைத்திட அனுமதி பெற்று 21 குழந்தைகளுக்கு மட்டும் பயிற்சிகள் வழங்கப்பட்டு அதற்குண்டான நிதி வழங்கப்பட்டது.
- அனைத்து வகை சிறைவாசிகளின் மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்புக்காக சீர்திருத்த சிறைகள் என்ற திட்டத்தின் படி சிறையிலுள்ள தண்டனை மற்றும் விசாரணை சிறை வாசிகளுக்கு விடுதலைக்குப்பின் வேலைவாய்ப்பு பெற்றிடும் வகையில் 20 பயனாளர்களுக்கு தையல் பயிற்சி அளிக்கப்பட்டது.
- 2,500 இளைஞர்களுக்கு ஒட்டு கட்டுதல், பதியன் போடுதல், கவாத்து செய்தல், பசுமைக் குடில் பராமரித்தல், நன்நீர் பாசன அமைப்பு பராமரித்தல், தோட்டக்கலை இயந்திரங்கள் இயக்குதல், வேளாண் இயந்திரங்கள் பழுது நீக்குதல், சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை பழுது நீக்குதல் போன்றவற்றில் 944 மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.
- முன்னாள் படைவீரர்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை மாவட்ட அளவில் வழங்கிட 20 மாவட்டங்களைச் சேர்ந்த 337 முன்னாள் இராணுவத்தினர் மின்சார இரு சக்கர வாகனம் பழுதுபார்த்தல், பேட்டரி சார்ஜிங் சென்டர்ஸ், செல்போன் பழுது



பார்த்தல், கணினி தட்டச்சு பயிற்சி, வானக ஓட்டுநர் பயிற்சி / இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி, தையல் மற்றும் தச்சர் பயிற்சி போன்ற பல்வேறு திறன் பயிற்சிகளில் ஆர்வம் தெரிவித்துள்ளனர்.

❖ தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் Shuttering carpenter, சுயதையல் பயிற்சி (Self Employed tailor), Hand Embroidery, இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி, வாகன சேவை தொழில்நுட்ப வல்லுநர் (Automotive Service technician) (இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனம்) உதவி அழகுக்கலை வல்லுநர் (Assistant Spa technician) ஆகிய திறன் பயிற்சிகளுக்கு 28ஆவது இயக்குநர் குழுக்கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டு, பயிற்சி பங்குதாரர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

உலகத் திறன் போட்டிகள்

❖ இந்திய திறன் போட்டிகளில் நமது மாநிலம் 23 பதக்கங்களை வென்று தேசிய அளவில் 5ஆவது இடத்தைப் பிடித்தது. தமிழ்நாட்டில் இருந்து இந்தியத் திறன் போட்டிகள்-2021இல் வெற்றி பெற்றவர்களுக்கு 14.03.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரொக்கப் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. தங்கப்பதக்கம் வென்ற 2 பேருக்கு தலா ரூ.1 இலட்சமும், வெள்ளிப் பதக்கம் வென்ற 8 பேருக்கு தலா ரூ.50,000மும், வெண்கலப் பதக்கம் வென்ற 8 பேருக்கும், சிறப்பு விருது பெற்ற 5 நபர்களுக்கும் தலா ரூ.25,000மும் வழங்கப்பட்டது.

நான் முதல்வன் போட்டித் தேர்வுகள்

❖ மாண்புமிகு இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் 2023 மார்ச் 7-ம் தேதி அன்று "நான் முதல்வன் - போட்டித் தேர்வுகள்" பிரிவு துவங்கி வைக்கப்பட்டது.

❖ ஒன்றிய அரசு தேர்வாணையங்கள் நடத்தும், குடிமைப்பணி தேர்வு (UPSC), வங்கித்துறை தேர்வுகள், இரயில்வே துறை தேர்வுகள் (RRB, RRC), மத்திய பணியாளர் தேர்வாணையம் (SSC) தேர்வுகள் ஆகிய தேர்வுகளில் தமிழ்நாட்டு இளைஞர்கள் அதிக அளவில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்கத்தினை கருத்தில் கொண்டு "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் "போட்டித் தேர்வுகள்" பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

❖ "நான் முதல்வன்" போட்டித் தேர்வுகள் பிரிவின் மூலம் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரிகளோடு இணைந்து வங்கி தேர்வு (IBPS), மத்திய பணியாளர் தேர்வாணையம் (SSC) நடத்தும் தேர்வுகள் மற்றும் இரயில்வே துறை தேர்வுகள் (RRB) ஆகிய தேர்வுகளுக்கு நேரடியாகவும் மற்றும் இணையம் வழியாகவும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

- குடிமைப் பணிகள் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு மேம்பட்ட பயிற்சி மற்றும் பயிற்சிப் பொருட்கள் வழங்கும் திட்டத்தை அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியுடன் இணைந்து தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் செயல்படுத்தும்.
- ஒவ்வோராண்டும் மதிப்பீட்டுத் தேர்வு மூலம் 1,000 மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் முதல்நிலை தேர்விற்குத் தயாராகுவதற்காக மாதத்திற்கு ரூ. 7,500 வீதம் 10 மாதங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும். முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு ரூ.25,000 ஊக்கத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் IIT, தேசியசட்டப் பல்கலைகழகம், AIIMS முதலிய உயர் கல்வி நிறுவனங்களில் தமிழ்நாட்டு மாணவர்கள் அதிக அளவில் இடம்பெறும் வண்ணம் சிறப்பு வல்லுநர்களை கொண்டு ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்பட்டு, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் மாணவர்களுக்கு அத்தேர்வுகளை சிறப்பாக எதிர்கொண்டு வெற்றி பெற ஏதுவாக சிறப்பான முறையில் பயிற்சி வழங்கப்படும்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன அமைப்பின் சாதனைகள்

புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

- ஊரக பகுதிகளில் உள்ள 4,64,709 சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு 45,238 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சமுதாய நிதி (திட்ட நிதி)

- ரூ.41.73 கோடி சுழல் நிதி, ரூ.483.92 கோடி சமுதாய முதலீட்டு நிதி மற்றும் ரூ.14.59 கோடி வறுமை குறைப்பு நிதி விடுவிப்பு.

நிதி உள்ளாக்கம்

- 8,57,949 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடனாக ரூ.47,034,53 கோடி வழங்கப்பட்டுள்ளது.

வாழ்வாதாரத் திட்டங்கள்

பண்ணை வாழ்வாதாரம்

- 77 உற்பத்தியாளர் குழுக்கள் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ரூ.154 இலட்சம் நிதி விடுவிப்பு.
- கிராமப்புற வீடுகளில் 5,00,000 ஊட்டச்சத்து தோட்டம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்துடன் ஒன்றிணைந்து முருங்கை மற்றும் பப்பாளி நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன.
- 50 இயற்கை விவசாய தொகுப்புகள் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டு, பண்ணை விளை பொருட்களை 'இயற்கை விவசாயப் பொருள்' குறிச்சொல்லின் கீழ் விற்பனை செய்வதற்கான ஸ்கோப் சான்றிதழ் பெற்று ரூ.300 இலட்சம் நிதி விடுவிப்பு.
- ரூ.3,540 இலட்சம் நிதியுதவியுடன் 177 ஒருங்கிணைந்த பண்ணைய தொகுப்புகள் உருவாக்கம்.
- 6,135 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவை பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூ.12,270 இலட்சம் சுழல்நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

பண்ணை சாராத வாழ்வாதாரம்

தொடக்க கிராம தொழில் முனைவோர் திட்டம் (SVEP)

- 2,574 நிறுவனங்களுக்கு சுழல் நிதியாக ரூ.510.36 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

- 8,250 சிறு மற்றும் குறு நிறுவனங்களுக்கு ரூ.2,750 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.
- 248 தொழில் தொகுப்புகள் உருவாக்கப்பட்டு, சுழல் நிதியாக ரூ. 620 இலட்சம் வழங்கப்பட்டது.
- பிரதம மந்திரி சிறு, குறு உணவு உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டம் (PMFME) 2,374 நிறுவனங்களுக்கு தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் பரிந்துரைத்ததன் அடிப்படையில் விதை மூலதன நிதி (Seed Captial) ரூ.1,186 இலட்சம் நிதி விடுவிப்பு.



தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத்திட்டம்

❖ 1,000 சிறு மற்றும் குறு நிறுவனங்களுக்கு ரூ.600 இலட்சம் கடன் இணைப்பு வழங்கப்பட்டது.

கூடுகை மற்றும் கூட்டாண்மை

❖ சமூக பொருளாதார விளிம்பு நிலையில் வாழும் நபர்களைக் கண்டறிந்து அவர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்த 23,048 சிறப்பு சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு. 1,19,274 நபர்கள் பயன்.

❖ 23,048 சிறப்பு சுய உதவிக் குழுக்களில் 9,020 மாற்றுத்திறனாளிகள் குழுக்கள் அமைக்கப்பட்டு ரூ. 4.85 கோடி சுழல் நிதியாகவும் மற்றும் ரூ. 14.59 கோடி கிராம வறுமை ஒழிப்பு நிதியாகவும் வழங்கப்பட்டுள்ளது.

❖ 6,800 மாற்றுத்திறனாளி குழுக்களுக்கு தொழில் துவங்கிடும் நோக்கில் சமுதாய முதலீட்டு நிதியிலிருந்து ரூ.83.62 கோடி வழங்கப்பட்டுள்ளது.

❖ பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் மீதான வன்கொடுமைகளுக்கு எதிராக குரல் எழுப்புவதற்காக ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒருபாலின பாகுபாடு நீக்கும் நபர் நியமிக்கப்பட்டு, வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்காக அமைப்பில் சேர்ந்து குரல் எழுப்புவர்.

❖ அனைத்து வட்டாரங்களிலும் மாதாந்திரம் ஒருங்கிணைப்புகுழு கூட்டங்களையும் நடத்தி அரசின் அனைத்து துறைகளின் திட்டங்களும் இச்சிறப்பு குழுக்களுக்கு கிடைத்திட மண்டல அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, 3,032 பயனாளிகள் பயன்.

தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற இளைஞர் திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY)

திறன் வளர்ப்பு பயிற்சி

❖ தீந்தயாள் உபாத்யாய கிராமப்புற இளைஞர் திறன் பயிற்சி திட்டத்தின் மூலம், 18 முதல் 35 வரை உள்ள கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கு ரூ.41.91 கோடி செலவில் 6,985 இளைஞர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டு, 1,335 இளைஞர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

வேலைவாய்ப்பு முகாம்

❖ 43 வேலைவாய்ப்பு முகாம்கள் ரூ.0.43 கோடி செலவில் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு 27,766 இளைஞர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளது.

சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID)

❖ தமிழ்நாடுமுழுவதும்நகர்ப்புறஏழைமக்களின்சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக 40,438 புதிய சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

❖ 38,053 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.38.05 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

❖ சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க புதிதாக 861 பகுதி அளவிலான மற்றும் 9 நகர அளவிலான கூட்டமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

❖ 632 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.3.17 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.



❖ **சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEP)**

சுய வேலை வாய்ப்புத் திட்டம் – தனிநபர் (SEP–I)

❖ சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 16,182 தனி நபர்களுக்கு தொழில் தொடங்க ரூ.84.32 கோடி வங்கிக் கடன்.

சுய வேலை வாய்ப்புத் திட்டம் – குழு (SEP–G)

❖ சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 9,398 குழுக்களுக்கு தொழில் தொடங்க ரூ. 311.52 கோடி வங்கிக் கடன்.

சுய வேலை வாய்ப்புத் திட்டம் (வங்கி இணைப்பு) SEP–BL)

❖ நகர்ப்புரங்களில் செயல்படும் 54,240 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2,563.06 கோடி வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வு (EST&P)

❖ 27,865 நகர்ப்புர ஏழை இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டு, ரூ.62.15 கோடி நிதி விடுவிப்பு.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

❖ 3,512 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 3,235 உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.24.26 கோடி துவக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

❖ 1,002 தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 760 தொழில் குழுக்களுக்கு ரூ.5.70 கோடி துவக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

❖ 53 உற்பத்தியாளர் கூட்டமைப்புகள், நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, ரூ.7 கோடி துவக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

❖ 1,619 சமுதாய திறன் பள்ளிகளை (CSS) அமைக்கப்பட்டு, அதில் 34,429 இளைஞர்களுக்கு ரூ.12.14 கோடி செலவில் திறன் பயிற்சி.

❖ 5,392 சமுதாய பண்ணைப் பள்ளிகள் (CFS) அமைக்கப்பட்டு, 1,64,128 உற்பத்தியாளர்களுக்கு ரூ.45.75 கோடி செலவில் பயிற்சி.

❖ 5,391 தொழில் முனைவோர்களுக்கு, தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூ.1.31 கோடி செலவில் பயிற்சி.

❖ ❖ ❖



சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்

மாண்புமிகு
சட்டத்துறை அமைச்சர்
திரு. **எஸ்.ரகுபதி** அவர்கள்

- திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகளுக்கு ரூ.4.70 கோடி திருத்திய நிர்வாக ஒப்பளிப்பு.
- ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமன முறையில் தெரிவு செய்யப்பட்ட 12 நபர்களை அரசு சட்டக் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்களாக தற்காலிகமாக நியமனம் செய்து ஆணை.
- 15 அரசு சட்டக் கல்லூரி நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்கிட ரூ.3 கோடி நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, அதில் 2022-2023ஆம் கல்வியாண்டுக்கென ரூ.1கோடிக்கு நிதி ஒப்பளிப்பு.
- சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகரத்தில் 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு சட்டப் படிப்பில் முதலாம் ஆண்டில் தலா 80 மாணவர்களுடனும் ஒரு அரசு சட்டக் கல்லூரியினை துவங்கிட ரூ.92.01 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.



- திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் அதிவேக இணைய வசதியுடன் கூடிய கம்பியில்லா மண்டலம் அமைத்திடும் பணிகளுக்கென ரூ.30 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- அரசு சட்டக் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர்களுக்கு, ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் புத்தாக்கப் பயிற்சியினை நடத்திட ரூ.14 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.
- 14 அரசு சட்டக் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு சர்வதேச பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் சட்ட மாநாடுகள் நடத்திட ஆண்டொன்றுக்கு ரூ.28 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.
- அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் ஆங்கிலத் திறன் மேம்பாட்டு பயிற்சி.
- திருச்சிராப்பள்ளி,கோயம்புத்தூர்,திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிகளில் உள்ளரங்கு விளையாட்டுத் திடல்மற்றும்உடற்பயிற்சிக்கூடம்நிறுவுவதற்கு ரூ.28 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு.
- நாமக்கல் அரசு சட்டக் கல்லூரிக்கென மாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய நிரந்தரக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள ரூ.92.31 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு.
- சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம், செங்கல்பட்டு மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் கூடுதலாக முதுநிலை (எல்.எல்.எம்.) பட்டப்படிப்பு 2022-2023ஆம் கல்வியாண்டு முதல் தொடக்கம்.
- அனைத்து அரசு சட்டக் கல்லூரி நூலகங்களுக்கும் புத்தகங்கள் வாங்கிட ரூ.3 கோடிக்கு நிருவாக அனுமதி ஆணை.
- தமிழ்நாட்டிலுள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் 2022-2023ஆம் கல்வியாண்டு மாதிரி நீதிமன்ற போட்டிகளை கல்லூரி அளவிலும், அரசு சட்டக் கல்லூரிகளுக்கிடையேயும், மாநில அளவிலும், தேசிய அளவிலும் நடத்துவதற்கும் மற்றும் சர்வதேச அளவிலான மாதிரி நீதிமன்ற போட்டிகளில் மாணவர்கள் கலந்து கொள்ளவும் ரூ.70 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- வேலூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளுக்கு நூலகக் கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.13.02 கோடிக்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.
- திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவிடும் பொருட்டு ரூ.25 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.
- பட்டறைப்பெரும்புதூர், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் கால்பந்து மற்றும் மட்டைப்பந்து விளையாட்டுத் திடல் நிறுவப்படும் பொருட்டு, ரூ.1.57 கோடிக்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.
- தமிழ்நாட்டில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகள் மற்றும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் 5 ஆண்டு ஒருங்கிணைந்த சட்டப் பட்டப்படிப்பு அல்லது 3 ஆண்டு சட்டப் பட்டப்படிப்பு முடித்த 17 சட்டப் பட்டதாரிகளை தேர்வு செய்து தன்னார்வ பயிற்சித் திட்டத்திற்கு ஒப்புதல்.
- சேலம், நாமக்கல் மற்றும் தேனி அரசு சட்டக் கல்லூரிகளுக்கென இயந்திரமும் சாதனமும் மற்றும் கணினியும், அதன் துணைப்பாகங்களும் வாங்கிடும் பொருட்டு, ரூ.35.92 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு.
- தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தில் இணைய வழியில் சட்ட வரலாற்று மாநாடு நடத்தியதற்கு ரூ.4.40 இலட்சம் மீள் ஒப்பளிப்பு.
- தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தில் இளநிலை சட்டப்படிப்பு பயின்ற தமிழகத்தைச் சேர்ந்த 2 முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கு அவர்கள் கல்வி கட்டணமாக செலுத்தியுள்ள ரூ.2 இலட்சம் மீள் ஒப்பளிப்பு.
- திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தில், சட்டம் மற்றும் வேளாண்மைக்கான மையம் மற்றும்



முதலீடுகளுக்கான சட்டங்கள் மையம் ஆகிய இரு புதிய சட்ட ஆராய்ச்சி மையங்களை நிறுவிட ரூ.20 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.

❖ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டு வரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் செவியுணர் மற்றும் காணொளி ஊடக மையம் நிறுவிட ரூ.46.58 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி.

❖ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டு வரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் நிறுவிடும் பணிகளுக்கென ரூ.1.67 கோடிக்கு நிருவாக அனுமதி.

❖ சீர்மிகு சட்டப் பள்ளியில் இளநிலை சட்டப் படிப்புகளில் தெரிவுப் பாடமாக தேசிய மாணவர் படைத் திட்டம் அறிமுகம்.

❖ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் இணையவழி-சட்டம் மற்றும் நீதி என்ற புதிய பாடப்பிரிவில் முதுநிலை சட்டப் படிப்பு (எல்.எல்.எம்) ரூ.1.18 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் சட்ட ஆராய்ச்சித் துறையின் திறனை சர்வதேச அளவில் மேம்படுத்தும் திட்டம் ரூ.15 இலட்சம் செலவில் தொடங்கநடவடிக்கை.

❖ அரசு சட்டக்கல்லூரிகளில் எல்.எல்.எம். சட்ட முதுநிலை படிப்பு மாணவர் சேர்க்கையினை இணைய வழியில் நடத்திட அனுமதி.

❖ திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில், இணைய சட்டங்கள் மற்றும் இணையப் பாதுகாப்பு ஆகியவை தொடர்பான ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் பயிற்சி மையம், வணிகம் மற்றும் மனித உரிமைகள் மையம் ஆகிய இரு புதிய சட்ட ஆராய்ச்சி மையங்கள் நிறுவுவதற்காக ரூ.20 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.

❖ தமிழ்நாடுடாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக் கழகத்திற்கு 2021-2022 மற்றும் 2022-2023ஆம் ஆண்டிற்கான தொகுப்பு நல்கையாக ரூ.10.86 கோடி நிதி ஒப்பளிப்பு.

❖ திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் இளநிலை சட்டப் படிப்பு முதலாம் ஆண்டு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த 20 முதல் தலைமுறை பட்டதாரி

மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகையாக ரூ.27 இலட்சம் வழங்கி ஆணை.

❖ தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சி சட்டப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையில் அகில இந்திய இடஒதுக்கீட்டுக்கான 50சதவிகிதம் இடங்களையும், தமிழ்நாடு அரசின் இடஒதுக்கீட்டுக் கொள்கையான 69 சதவிகிதம் போன்றே பின்பற்றிட அரசு ஆணை.

சிறைத்துறை

❖ சிறைவாசிகளின் சீர்திருத்தம் தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ சிறைவாசிகளின் தேநீர் விடுதியில், வாரம் ஒன்றிற்கு சிறைவாசிகள் செலவு செய்யும் தொகையின் உச்சவரம்பினை, 'அ' மற்றும் 'ஆ' வகுப்பு சிறைவாசிகளுக்கு முறையே ரூ.750லிருந்து ரூ.1,000 ஆகவும், மற்றும் ரூ.450லிருந்து ரூ.750 ஆகவும் உயர்வு.

❖ சிறைவாசிகள் ஈட்டும் ஊதியத்திலிருந்து (Prisoners Wages), அவர்கள் கணக்கிற்கு பங்கீடு செய்யப்படும் தொகையின் விகிதத்தை 50 விழுக்காட்டிலிருந்து 80 விழுக்காடாக உயர்வு.

❖ சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவிற்காக செலவிடப்படும் தற்போதைய தொகையான ரூ. 50யை ரூ.100 ஆக உயர்த்தி, ஆண்டு ஒன்றுக்கு ரூ.39 இலட்சம் கூடுதல் தொடர் செலவினம் வழங்கப்பட்டது.

❖ அனைத்து வகையான சிறைவாசிகளையும் நல்வழிப்படுத்தி மறுவாழ்வு அளிக்க, "சீர்திருத்தச்சிறகுகள்" என்கிற புதிய திட்டம் ரூ.100 இலட்சம் செலவினத்தில் அறிமுகம்.

❖ தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் மூலமாக மதுரை, சேலம் மற்றும் பாளையங்கோட்டை மத்திய சிறைகளில் குடியிருப்புகள் கட்டப்பட்டு ஒப்படைக்கப்பட்டு, தற்சமயம் கோயம்புத்தூர் மத்திய சிறை உதவி சிறை அலுவலர்களுக்கு 6 குடியிருப்புகள் ரூ.1.27 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, அதில் 6 குடியிருப்புகள் 12.04.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

❖ கோயம்புத்தூர் மத்திய சிறை உதவி சிறை அலுவலர்களுக்கு 6 குடியிருப்புகள் ரூ.127.97 இலட்சங்கள் செலவில் கட்டி முடிக்கப்பட்டு, அக்குடியிருப்புகள் 12.04.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

❖ ரூ.2.35 கோடி செலவில் அம்பாசமுத்திரம் சப் ஜெயில் ஊழியர்களுக்கு, ஒரு உதவி ஜெயிலர் குடியிருப்பு மற்றும் 10 வார்டர் குடியிருப்புகள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகம் மூலம் கட்டப்பட்டு, அக்குடியிருப்புகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.08.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

❖ தமிழ்நாட்டில் உள்ள 12 மாவட்ட சிறைகளில் சிறைவாசிகள் சோதனை அடையாள அணிவகுப்பு அறை (Prisoners test identification parade room) ரூ.269.84 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 25.11.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

❖ சிறைவாசிகளின் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்காகவும் எழுத்தறிவு மூலம் சீர்திருத்தம் மேற்கொள்ளும் பொருட்டும், சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறை, முதல் முறையாக 46ஆவது சென்னை மற்றும் பிறமாவட்டங்களில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில், தமிழ்நாடு அரசு மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கங்கத்துடன் இணைந்து பங்கேற்று, சிறை நூலகங்கள் குறித்து பல்வேறு புத்தக விற்பனையாளர்கள், பதிப்பாளர்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஒரு அரங்கு அமைத்து, சிறை நூலகங்களுக்கு புத்தகங்கள் விருப்பமுள்ளவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டன.

❖ சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியின் போது, சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக 70,000க்கும் மேற்பட்ட புத்தகங்கள்



நன்கொடையாகப் பெற்று சிறை நூலகங்கள் மூலம் சிறைவாசிகளின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது.

- பொது நூலக இயக்குநர், 9 மத்திய சிறைகளுக்கு தலா 2,000 புத்தகங்களும், 5 பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் 14 மாவட்ட சிறைகளுக்கு தலா 500 புத்தகங்களும், 113 மாவட்ட சிறைகளுக்கு தலா 100 புத்தகங்களும் மாதத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை மாவட்ட நூலகங்களிலிருந்து சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் உடன் இணைந்து, ஆயத்த ஆடை வடிவமைப்பு பயிற்சியினை ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு மையம் மூலம் மத்திய சிறை-1 புழல் சிறைவாசிகளுக்கு வழங்கியது 15.02.2023 அன்று, பயிற்சி சான்று மற்றும் பணியாணைகள் விடுதலை பெற்ற சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும், புழல் பெண்கள் தனிச் சிறையில் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பெண் சிறைவாசிகளுக்கு வயர் நாற்காலி, கூடை, கட்டில் பின்னுதல், வயர் கூடைப் பின்னுதல் மற்றும் மெழுகுவர்த்தி தயாரிப்பதற்கான பயிற்சி அளித்து, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

- சிறைவாசிகள் அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் நேர்காணல் அறையில் பேசும்பொழுது ஏற்படும் இரைச்சலை குறைத்திட நேர்காணல் அறையில் தொலைபேசி வழியாக உரையாடும் வசதி அறிமுகம். சிறைவாசிகள் இந்த வசதியினை ஏற்படுத்தி தந்தமைக்காக தங்களது நன்றியை அரசுக்கு தெரிவித்தனர்.

- சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறைவாசிகளிடம் ஆதார் ஆவணங்கள் இல்லாத காரணத்தால், ஆதார் அட்டை வழங்கும் வகையில், சிறைகளில் ஆதார் பதிவு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. சிறைவாசிகள் அவர்களது விடுதலைக்கு பின்னர் கண்ணியமாக வாழவும், அவர்களது வாழ்வாதாரத்திற்கு தேவையான வேலைவாய்ப்பு/நிதி கடன்களுக்கு விண்ணப்பிக்க இது உதவும்.

- சிறைவாசிகளின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தை பேணுவதற்காக, மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறை, மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு 15 கனரக சலவை இயந்திரங்கள் சிறைகளில் நிறுவப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

❖ ❖ ❖



சென்னை, எழிலகத்தில், மாநில அவசர செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று மாண்டஸ் புயல் சின்னம் குறித்து கள நிலவரங்களை கேட்டறிதல் - 09.12.2022



காவலர்களின் குறைகளை களைந்திடும் வகையில் "உங்கள் துறையில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ் காவலர்களிடம் மனுக்களை பெறுதல் - 22.09.2022



வீட்டுவசதி, ஊரக வீட்டுவசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டுவசதி மேம்பாடு, இடவசதி கட்டுப்பாடு, நகரத்திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. சு.முத்துசாமி
அவர்கள்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

- தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 5,835 ஒதுக்கீட்டு ஆணைகள் மற்றும்1,898 விற்பனைப் பத்திரங்கள் தமிழில் வழங்கப்பட்டுள்ளது.
- 11,528 ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. சிறப்பு முகாம்கள் மற்றும் விற்பனைப் பத்திர மேளா ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்களுக்கு வாரியத்தின் அனைத்து கோட்டங்களிலும் நடத்தப்பட்டு விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகிறது.
- மதுரை, சேலம், குடியாத்தம், அம்பத்தூர் மற்றும் ஓசூர் ஆகிய 5 இடங்களில் ரூ.33.71 கோடி மதிப்பீட்டில் 615 மனை மேம்பாட்டுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.



- 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர் சட்டம் 1994இல், திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அதற்கேற்ப விதிகளும் உருவாக்கப்படும்.
- தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் 83 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம்.
- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ஞானபீடம், சாகித்ய அகாதமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள், புகழ்பெற்ற உலகளாவிய அமைப்புகளின் விருதுகள் பெற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறையால் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 விருதாளர்களுக்கு - முதல் கட்டமாக 6 விருதாளர்களுக்கு ஒதுக்கீட்டு ஆணை 03.06.2022 அன்று வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் வீடு / மனை குடியிருப்பு ஒதுக்கீடு பெற்றவர்களில், விற்பனைப் பத்திரம் பெற்றிடாத 14,563 ஒதுக்கீடுதாரர்களுக்கு ரூ.53 கோடியிலான வட்டித் தள்ளுபடி சலுகை மீண்டும் நவம்பர் 2022இல் அறிமுகம். இதுவரை ரூ.10.45 கோடி தள்ளுபடி செய்யப்பட்டு 454 ஒதுக்கீடுதாரர்கள் பயன்.

கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் பதிவாளர்

- தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், 4 தொடக்க கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் கூட்டமைப்பு முறையில் நிறைவேற்றும் வீட்டுமனைத் திட்டங்களுக்கு ரூ.60.23 கோடியினை திட்டக் கடனாக வழங்கியுள்ளது.
- தற்போது நிறைவேற்றத்தில் உள்ள 5 மனைத் திட்டங்களில் 1,492 எண்ணிக்கையிலான மனைகள் விற்பனை செய்யப்பட்டு ரூ.408.66 கோடிக்கு வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 8 மனைத் திட்டங்களுக்கு 254.61 ஏக்கர் பரப்பளவில் நிறைவேற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- 164 தொடக்க கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் ரூ.994.1 கோடிக்கு கடன்களை வழங்கி ரூ.2,420 கோடிக்கு கடன் நிலுவை கொண்டு செயல்பட்டு வருகிறது.
- 79 தொடக்க கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள், கடைகள், திருமணமண்டபங்கள், சமுதாயக் கூடங்கள் போன்ற 1,146 சொத்துக்களை வாடகைக்கு விட்டு ரூ.761.11 இலட்சத்தினை வருமானமாக ஈட்டியுள்ளது.
- 4 தொடக்க கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் நடத்தும் 5 கூட்டுறவு மருந்தகங்கள் ரூ.631.55 இலட்சத்திற்கு மருந்துகள் விற்பனை செய்து ரூ.65.34 இலட்சத்திற்கு நிகர இலாபம் ஈட்டியுள்ளது.
- 4 தொடக்க கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் 2055.05 மெட்ரிக் டன்கள் அளவிற்கு அரசு சிமெண்டினை ரூ.88.38 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.
- தொடக்க கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் நடத்தும் 39 பொது சேவை மையங்கள் மூலமாக 80,199 எண்ணிக்கையிலான சேவைகள் வழங்கப்பட்டு ரூ.40.87 இலட்சத்திற்கு வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 1,500 சங்கப் பணியாளர்கள் மற்றும் அவர்களது 2,500 குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் செயல்படுத்தி வருகிறது. இதன் மூலமாக ரூ.62.15 இலட்சத்திற்கு 187 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- ரூ.105 இலட்சம் செலவில், செங்கல்பட்டு மண்டலத்தில் உள்ள கார்த்திகேயபுரம் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் கல்யாண மண்டபம் நவீனமயமாக்கப்பட்டுள்ளது.
- ரூ.98 இலட்சம் செலவில், வேலூர் மண்டலத்தில் உள்ள காட்பாடி நகர கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் 24 கடைகளுடன் கூடிய வணிக வளாகங்கள் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

நகர் மற்றும் ஊரமைப்பு துறை

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ.5 கோடி மதிப்பீட்டில், மதுரை மாவட்டத்தில் நகர் ஊரமைப்பு அலுவலக கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.



- கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவிற்கு தயாரான நிலையில் உள்ளன.
- மண்டலத்திட்டங்கள் தயாரிப்பதற்காக, மாநிலம் 12 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, மண்டலத் திட்டம் (தயாரிப்பு, பிரசுரம் மற்றும் அங்கீகாரம்) விதிகள் 2021இல் உருவாக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மண்டலங்களுக்கான திட்டங்கள் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் போபாலில் உள்ள திட்டமிடல் மற்றும் கட்டடக்கலை பள்ளி மூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஆசிய வளர்ச்சி வங்கி வழங்கிய ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 8 மண்டலங்களுக்கான திட்டங்கள் தயாரிப்பதற்காக ரூ.41.63 கோடி நிதி ஒதுக்கீடு.
- மயிலாடுதுறை மாவட்டத்தில் நகர் ஊரமைப்பு அலுவலகம் 16.12.2021அன்று புதியதாக துவக்கம்.
- 18 மாவட்டங்களுக்கு ரூ.60 கோடி மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடங்கள் கட்ட கொள்கை அளவில் ஒப்புதல் ஆணை.
- தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, ஆமதாபாத்தில் உள்ள சுற்றுச்சூழல் மற்றும் திட்டமிடல் மையம் மூலம் மறுஆய்வு வரைவு சட்ட திருத்தம் தயாரிக்கப்பட்டு இறுதி செய்வதற்கு பரிசீலனையில் உள்ளது.
- மதுரை, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஓசூர் ஆகிய நகரங்களுக்கு நகர்ப்புற வளர்ச்சித் திட்டக் குழுமங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- பொதுமக்கள் பயன்பெறும் வகையில் திட்ட அனுமதிக்கான கால அவகாசம் 5 ஆண்டுகளிலிருந்து 8 ஆண்டுகளாக காலநீட்டிப்பு.
- திட்டமில்லாப் பகுதிகளில் அனுமதியின்றி கட்டப்பட்ட கல்விக் கட்டடங்கள் வரன்முறை திட்டத்தின் கீழ், 1,423 கல்வி கட்டடங்களுக்கு தீர்வு.
- மாநிலத்தின் 7 சதவிகிதமாக உள்ள திட்டப் பகுதியை 22 சதவிகிதமாக உயர்த்திட 111 முழுமைத்திட்டங்கள் மறுஆய்வுக்கும், 24 நகரங்களுக்கு புதிய முழுமைத்திட்டங்கள் தயாரிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு திட்ட தயாரிப்பு பணி துவக்கம்.

- இத்துறையால் 9,196 குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு திட்ட அனுமதியும், 2,785 கட்டடங்களுக்குத் திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.
- ஒற்றைச்சாளர முறையில் சிறு, குறு, நடுத்தரத் தொழிற்சாலைகளுக்கான (MSME) மற்றும் Guidance Bureau மூலமாக விண்ணப்பித்தவர்களுக்கு 276 விண்ணப்பங்களுக்குத் திட்ட அனுமதி.
- மனைப்பிரிவு விண்ணப்பங்கள் முதல் திட்ட அனுமதி மற்றும் நிலஉபயோக விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாக பெறப்பட்டு பரிசீலணை செய்யப்பட்டு வருகிறது.
- B-Plan-க்கு AICTE ஒப்புதல் பெறப்பட்டு சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் வகுப்புகள் நடைப்பெற்று வருகிறது. நகர் ஊரமைப்புத் துறை மூலம் ரூ.2 கோடி நிதி அண்ணா பல்கலைக்கழகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.
- ரூ.50 இலட்சம் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும நிதியிலிருந்து திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்காக விடுவிக்கப்பட்டு உதவி இயக்குநர் மற்றும் கட்டட கலை / திட்ட உதவியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.2,070.65 கோடி மதிப்பீட்டிலான உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படைவசதி நிதியின் கீழ் 41 திட்டங்களை மேற்கொள்ள பெருநகர் சென்னை மாநகராட்சி நகராட்சி நிருவாகத்துறை, சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரேற்று வாரியம், நகர் ஊரமைப்புத்துறை , சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேலாண்மை வாரியம் மற்றும் தொல்லியல் துறைக்கு மாநில உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் மேம்பாட்டு குழுவினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீட்டில் ரூ.1,589.30 கோடிக்கு அரசினால் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி, வண்ணத்துப்பூச்சி பூங்காவிற்குச் செல்லும் கொள்ளிடம் வலதுகரை சாலையினைச் சீர்செய்ய திருச்சி உள்ளூர் திட்டக்குழும நிதியிலிருந்து ரூ.3,10,84,000/- மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- சிங்கா நல்லூரிலிருந்து பீளமேடு வழியில் அவினாசி சாலையினை ஒட்டி நேஷனல் மாடல் பள்ளி எதிர்புறம் அமைந்துள்ள 40 அடி அகல திட்டச்சாலை பகுதியினை மாற்றியமைப்பதற்காக Realignment of Scheme Road - தனியாரிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்வதற்கு தேவையான இழப்பீட்டுத் தொகை ரூ.9,06,39,937 கோவை உள்ளூர் திட்டக் குழும நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி.
- ரூ.124.94 கோடி மதிப்பீட்டில் நகராட்சி நிருவாகத் துறை, நகர் ஊரமைப்புத் துறை மற்றும் போக்குவரத்துத் துறைக்கு மாநில உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் மேம்பாட்டு குழுவினால் நான்கு உட்கட்டமைப்பு திட்டங்களை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீட்டில் ரூ.580.56 கோடிக்கு இக்காலக்கட்டத்தில் அரசினால் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- 27 உதவி இயக்குநர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்டு பணி நியமன ஆணை வழங்கப்பட்டு, திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

> “குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும் உயர்த்திட வேண்டும், அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்திட வேண்டும்.”
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



கூட்டுறவு

மாண்புமிகு
கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. கே.ஆர்.பெரியகருப்பன்
அவர்கள்

கூட்டுறவு

- கூட்டுறவு நிறுவனங்களில் ஒரு குடும்பத்தில் 5 பவுனுக்குள் நகைக்கடன் பெற்று நிலுவையில் இருந்த 13,12,717 பயனாளிகளுக்கு ரூ.4,818.88 கோடி தள்ளுபடி.
- 31.03.2021 நிலுவையிலிருந்த ரூ.2,755.99 கோடி மகளிர் சுய உதவிக் குழுக் கடன் தள்ளுபடி, 1,17,617 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 15,88,309 மகளிர் பயன்.



- பயிர்க்கடனை உரிய கெடு தேதிக்குள் திரும்ப செலுத்திய 31,53,351 விவசாயிகளுக்கு ரூ.23,126.50 கோடி வட்டியில்லா பயிர்க்கடன்.
- உழவர் கடன் அட்டை (KCC) திட்டத்தின் கீழ், 3,11,306 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்புப் பணிகளுக்கான ரூ.1,447.50 கோடி வட்டியில்லாக் கடனுதவி.
- மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான கடன் உச்சவரம்பு ரூ.12 இலட்சத்திலிருந்து ரூ20 இலட்சமாக உயர்வு. 74,416 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.2,275.27 கோடி கடனுதவி.
- 7,889 கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு 5 சதவீத வட்டியில் ரூ.15.32 கோடி கடனுதவி.
- மாற்றுத்திறனாளிகளை சுயசார்பு உடையவர்களாக மாற்றவும், நிதி சுதந்திரத்தை வளர்க்கவும், 21,720 பேருக்கு ரூ.100.66 கோடி கடனுதவி.
- மகளிர் பொருளாதார நிலையை மேம்படுத்த 8,058 பணிபுரியும் பெண்களுக்கு ரூ.214.12 கோடி கடனுதவி.
- மகளிர் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் 20,910 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.129.37 கோடி கடனுதவி.
- தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல்சேவை மையங்களாக மாற்றுவதற்கு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் ரூ.192.08 கோடி மதிப்பிலான 2,043 திட்டப்பணிகளுக்கு நிதியுதவி.
- 113 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் ரூ.1,701.42 கோடி வேளாண் விளைபொருட்கள் விற்பனை.
- நுகர்வோர் கூட்டுறவுடன் இணைந்த விற்பனைத்திட்டத்தில், வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் ரூ.172.12 கோடி மதிப்பிலான பொருட்கள் விற்பனை.
- வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் ரூ.157.26 கோடி தானிய ஈட்டுக்கடன்.



- வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ரூ.632.82 கோடி அளவிற்கு நகைக்கடன்கள்.
- ரூ.157,26 கோடி தானிய ஈட்டுக் கடன் மற்றும் ரூ.632.82 கோடி நகைக்கடன் வழங்கி, மொத்தம் ரூ.4,727.38 கோடி வணிகம்.
- 25 பெரும் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ.259.24 கோடி பயிர்க்கடன், ரூ.18.45 கோடி மத்திய காலக்கடன்கள், ரூ.97.65 கோடி நகைக்கடன்கள்.
- ரூ.14.91 கோடி கட்டுப்பாட்டு பொருட்கள், ரூ8.71 கோடி கட்டுப்பாடற்ற பொருட்கள் ரூ.18.52 கோடி விவசாய இடுபொருட்கள் விற்பனை.
- குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டத்தின்கீழ், 2,02,836 விவசாயிகளுக்கு 8,515.31 மெ.டன் யூரியா, 9,466.02 மெ.டன் டி.ஏ.பி, 4,728.14 மெ.டன் பொட்டாஷ் வழங்கப்பட்டுள்ளது.
- பழங்குடியின மக்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கும் 25 பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்ட மாநில அளவிலான பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் இணையம்.
- 70 புதிய கூட்டுறவு மருந்தகங்கள் வாயிலாக ரூ.14.88 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை. மொத்தம் 380 கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் ரூ.1,460.15 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை.
- தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மூலம் மாநிலம் முழுவதும், மைய மருந்து கொள்முதல் துவக்கப்பட்டு மாத மருந்து விற்பனையின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் தானே தேவைப்பட்டியலை தயாரிக்கவும், காலாவதியான மருந்துகளின் விவரங்களை அறியவும் மென்பொருள் உருவாக்கப்பட்டு, 380 கூட்டுறவு மருந்தகங்களிலும், பிராண்டட் மருந்துகள் மற்றும் ஜெனரிக் மருந்துகள் பொதுமக்களுக்கு ரூ.3.48 கோடி மதிப்பிற்கு விற்பனை.
- பண்ணை பசுமை நுகர்வோர் கூட்டுறவு கடைகளின் சந்தை குறுக்கீடு நடவடிக்கை மூலம் 276 மெட்ரிக் டன் தக்காளி, 1,100 மெட்ரிக் டன் காய்கறிகள் ரூ.4.77 கோடிக்கு வெளிச்சந்தை விலைக்கும் குறைவாக விற்பனை.
- 3,753 நியாய விலைக் கடைகளுக்கு ISO:9901 தரச்சான்றிதழும் 12 நியாயவிலைக் கடைகளுக்கு ISO: 28000 தரச்சான்றிதழும், ISO:9001 மற்றும் ISO: 28000 ஆகிய இரண்டு சான்றிதழ்களும் 2,019 நியாய விலைக் கடைகளுக்கு பெறப்பட்டுள்ளது.
- மாநிலம் முழுவதிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் 75 நியாய விலைக் கடைகளை பொலிவுறச் செய்யும் திட்டத்தின் கீழ், இதுவரை 3,572 எண்ணிக்கையிலான கடைகள் புதுப்பிப்பு.
- ரவை, சம்பா ரவை மற்றும் சேமியா ஆகியவை கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகள் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் பயன்பாட்டிற்காக வழங்கல்.
- கூட்டுறவு சங்கங்கள் மூலம் 2 கிலோ மற்றும் 5 கிலோ FTL எரிவாயு உருளை விற்பனை. இருப்பிடச் சான்று கட்டாயமின்மையால் நடைபாதை வியாபாரிகள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பயன்.

பொது விநியோகத்திட்டம்

- ரூ.13.91 இலட்சம் மதிப்பிலான பனைவெல்லம் காதி மற்றும் கிராமத் தொழில் வாரியத்தால் கொள்முதல் செய்யப்பட்டு கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் நியாய விலைக்கடைகளில் விற்பனை.
- உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகளினால் கொள்முதல் செய்யப்படும் கேழ்வரகு, கம்பு, தினை, குதிரைவாலி, சாமை மற்றும் வரகு ஆகிய சிறுதானியங்கள், சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில் கூட்டுறவுகள்/தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் மூலம் நடத்தப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட நியாயவிலைக்கடைகள்/சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் ரூ.16.09 இலட்சம் மதிப்பிலான சிறுதானியங்கள் விற்பனை.

❖ ❖ ❖



உதகை அரசினர் கலைக் கல்லூரி மைதானத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, அவர்களுடன் உரையாடல் - 21.05.2022



சென்னை, காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் மரக்கன்றுகளை நடவுதல் - 22.09.2022



குடிசைத் தொழில்கள், சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத்தொழில்கள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

திரு. தா.மோ.அன்பரசன்

அவர்கள்

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கோவிட்-19 பெருந்தொற்று கால விளைவுகளை எதிர்கொள்ள அரசு மூலதன மானியமாக ரூ.602.52 கோடி வழங்கியது. 5,461 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.360 கோடி முழுவதும் மூலதன மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- இந்தியாவிலேயே கடன் உத்தரவாதத் திட்டத்தை (TNCGS) உருவாக்கிய முதல் மாநிலம் தமிழ்நாடு.

- படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ. 332.23 கோடி மானியம் 1,868 திட்டங்களுக்கு நிதி நிறுவனங்களால் இறுதி ஒப்பளிப்பு. தனிநபர் முதலீட்டு மானியம் ரூ.216.67 கோடியும், பின் முனைவட்டி மானியம் ரூ. 20.64 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

- படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான, வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ், 6,763 பயனாளிகளுக்கு, ரூ. 66.18 கோடி மானியம்.







- பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், ரூ.172.84 கோடி 6,903 பயனாளிகளுக்கு விளிம்புத் தொகை மானியம்.
- மாநில நிதியுதவித் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வரும் குறுந்தொழில் குழும மேம்பாட்டு திட்டத்திற்காக (MCDP) ரூ. 50 கோடி 25 குறுந்தொழில் குழுமங்களுக்கு 2023-2024 இல் இத்திட்டத்திற்கு ரூ-75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூர் மாவட்டம், கிட்டாம்பாளையம் கிராமத்தில் 316.04 ஏக்கர் பரப்பில் அறிஞர் அண்ணா தொழிற் கூட்டுறவு தொழிற்பேட்டையில் ரூ.24.61 கோடி திட்ட மதிப்பில் ரூ.10 கோடி அரசு மானியத்துடன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- கோவிட் பெருந்தொற்று காலத்தில் சிட்கோ நிறுவனத்திற்கு தவணைத்தொகை மற்றும் வாடகைத் தொகையைச் செலுத்துவதற்கு ஆறு மாத கால அவகாசம். 47 குறு மற்றும் சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூ.15.76 இலட்சம் முத்திரைக் கட்டண மானியம்.
- அனைத்து விண்ணப்பங்களையும் ஆன்லைனில் பதிவு செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் ஒற்றைச் சாளர தகவு (www.tnswp.com) உருவாக்கப்பட்டுள்ளது. இணையதளத்தில் பெறப்பட்ட 18,014 விண்ணப்பங்களில் 15,468 விண்ணப்பங்கள் தீர்வு காணப்பட்டுள்ளன.
- கோவிட்-19 பெருந்தொற்று நோயால் பாதிக்கப்பட்ட தொழில்முனைவோருக்கு உதவ 'கோவிட் உதவி மற்றும் நிவாரணத் திட்டம் (CARE)' CARE-I என்ற கடன் திட்டத்தின்படி அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரை மூலதன மானியமும் CARE-II திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரை மூலதன மானியமும் மற்றும் CARE-I & II திட்டத்திற்காக ரூ.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தாமதமாக பணம் செலுத்தும் சிக்கலைத் தீர்க்க, விரைவான பட்டியல் தள்ளுபடியைப் பெற உதவும் வகையில் TN TREDS இயங்குதளம் உருவாக்கப்பட்டு அதில் 87 தமிழ்நாடு அரசு நிறுவனங்கள் தங்களை TNTReDS தளத்தில் பதிவு செய்து 2022-2023 இல் ரூ.200 கோடி மதிப்பிலான பட்டியல்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் ரூ.310.30 கோடி மதிப்பிலான 980 தொழில்மனைகள் மற்றும் 35 தொழிற்கூட அலகுகள் தொழில்முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

- பொது வசதி மையத்தை நிறுவுவதற்கான ஒன்றிய அரசின் MSE-CDP திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. மேலும், நடப்பாண்டில் ரூ. 21 கோடி மானியம் பெறப்பட்டுள்ளது.

- திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் துல்லிய உற்பத்தி பெருங்குழுமம் மற்றும் திண்டிவனம் சிப்காட் தொழிற்பூங்காவில் மருந்துப் பொருட்களுக்கான பெருங்குழுமம் ரூ.202.63 கோடி மதிப்பில் அமைப்பதற்கான நடவடிக்கை.

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான புதிய தொழிற்பேட்டைகள் 5 மாவட்டங்களில் 186.04 ஏக்கர் மொத்த பரப்பில் 549 தொழில் மனைகளுடன் உருவாக்கப்பட்டுள்ளன.

- நான்கு மாவட்டங்களில் 394 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.218 கோடி மதிப்பில் 4 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கும் பணிகள்.

- சிட்கோ தொழிற்பேட்டைகளில் 371 ஏக்கர் நிலப்பரப்பில் 1,341 தொழில் மனைகள் ஒதுக்கீட்டிற்குத் தீர்வுகாண திருத்திய மனை மதிப்பீட்டுக் கொள்கை உருவாக்கம். இத்திருத்திய மனை கொள்கை மதிப்பீட்டின்படி, தொழிற்பேட்டைகளில் மனை மதிப்பு 5% முதல் 75% வரை குறைக்கப்பட்டுள்ளது.

- சிட்கோ தொழிற்பேட்டைகளில் அரசு புறம்போக்கு வகைப்பாட்டில் உள்ள நிலங்களுக்கு பட்டா வழங்க 32 தொழிற்பேட்டைகளின் 1,542 ஏக்கர் நிலத்திற்குப் பட்டா வழங்க அதிகாரம் பெற்ற குழுவின் ஒப்புதல் பெற்று இரயத்துவாரி மனையாக மாற்றம் செய்து ஆணை.

- அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ.29.47 கோடி மதிப்பில் 810 பணியாளர்கள் தங்குவதற்காக பணியாளர் தங்கும் விடுதி கட்டும் பணிகள்.

- குறிச்சி தொழிற்பேட்டையில் கோயம்புத்தூர் ரூ.22 கோடி மதிப்பில் 510 தொழிலாளர்கள் தங்கும் விடுதி கட்டும் பணிகள்.

- பொது உற்பத்தி கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரும் திட்டத்தின்கீழ், ரூ.2.5 கோடி மானியத்தில், கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளலூரில் ரூ.4.76 கோடி மதிப்பில் வார்ப்புக்குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரையில் ரூ.4.44 கோடி மதிப்பில் பொறியியல் குழுமம் மற்றும் வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் ரூ.3.61 கோடி மதிப்பில் தீப்பெட்டி குழுமம் அமைக்க நடவடிக்கை.

- தமிழ்நாடு புத்தொழில் விதை நிலை மானிய நிதி திட்டத்தின்கீழ், 40 நிறுவனங்களுக்கு ரூ.2 கோடி மானியம்.

- புத்தாக்கப் பற்றுச்சீட்டுத் திட்டத்தின் மூலம் 434 கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ.11.70 கோடி நிதியுதவி.

- 19,837 ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு நான்கு கட்டங்களாகப் பல்வேறு பயிற்சிகள்.

- 1,862 நிறுவனங்களுக்கு ரூ.16.98 கோடி குறைந்தழுத்த மின் மானியம்.

- 83 குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.177.80 இலட்சம் ஊதியப்பட்டியல் மானியம்.

- 1,469 குறு, சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ.4.77 கோடி பின் முனை வட்டி மானியம்.

- 582 நிறுவனங்களுக்கு ரூ.5.04 கோடி ஆற்றல் தணிக்கை, ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்ட மானியம்.

- 337 நிறுவனங்களுக்கு ரூ.2.98 கோடி தரச்சான்றிதழ் பெறுவதற்கான மானியம்.

- நான்கு சிறு தொழில் நிறுவனத்திற்கு மூலதன சந்தைகளிலிருந்து நிதி திரட்டுவதற்காக செலவிட்ட ரூ.81.16 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

- 96 நிறுவனங்களுக்குக் காப்புரிமை பதிவு, வர்த்தக முத்திரை பதிவுக்காகவும் ரூ.22.21 இலட்சம் மானியம்.

- குறு மற்றும் சிறுதொழில் நிறுவனங்கள் திறன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி திட்டத்தின் கீழ், 417 குறு, சிறு மற்றும்



நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் 22,364 பயனாளிகளுக்குப் பயிற்சி.

- 117 வசதியாக்கக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு 1,011 குறு மற்றும் சிறுதொழில் நிறுவனங்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை ரூ.184.65 கோடி பெற்றுத்தரப்பட்டுள்ளது.
- RIDF பாகம்-1 திட்டத்தின் கீழ், நீலகிரி மாவட்டத்தில் 5 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் ரூ.17.68 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கல்.
- RIDF பாகம்-2 திட்டத்தின் கீழ், நீலகிரி மாவட்டத்தில் 10 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள், ரூ.50.06 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு மூலதனக் கடன் வழங்குவதற்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC), தாய்கோ வங்கி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- கொலுசு உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் சேலம் மாவட்டம், அரியகவுண்டம் பட்டியில் 1.20 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் அடுக்குமாடி தொழில் வளாகம்.
- சென்னை மெட்ரோ மையத்துடன் கூடுதலாக ஈரோடு, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் டான்சிமின் மூன்று மண்டல மையங்கள் மூலம் 15,751 நபர்கள் இணைந்துள்ளார்கள்.
- புத்தொழில்களை சிறப்பாக வளர்க்க உதவும் வகையில் தமிழ்நாடு இன்குபேட்டர் மெச்சூரிட்டி மாடல் ப்ரேம்வொர்க் என்ற அமைப்பு துவக்கி வைக்கப்பட்டுள்ளது.
- StartupTN இல் அனைத்து பங்குதாரர்களையும் உள்ளடக்கி மொத்தம் 37 சமூக வட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- டான்சியின் உற்பத்தி பொருட்களை அறிந்து கொள்ள மின் வணிக இணைய முகப்பு.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

- ரூ.1,225.54 கோடி செலவில், நகர ஏழை குடும்பங்களுக்காக 5,430 தனி வீடுகள் ரூ.176.09 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, 2,882 பயனாளிகளுக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 4,932 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன.
- நகர ஏழை குடும்பங்களுக்காக 1,123 திட்டப்பகுதிகளில் 60,827 தனி வீடுகள் ரூ.1995.78 கோடி செலவில் கட்ட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, 66,088 வீடுகளுக்கான பணிகள் முடிவுற்று, 1,03,043 வீடுகளுக்கான பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

- நகர ஏழை குடும்பங்களுக்காக 38 திட்டப் பகுதிகளில் 16,173 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.2,293.83 கோடி செலவில் கட்ட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, 11,055 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் முடிவுற்று, 95,336 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- இவ்வீட்டுவசதி பணிகளுக்காக ரூ.3,477.40 கோடி செலவிடப்பட்டுள்ளது.

- "அனைவருக்கும் வீடு" திட்டத்தின்கீழ் ஆசிய மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் சென்னை தவிர இதர நகரங்களில் நீர்நிலைகளின் கரைகளில் வாழும் குடும்பங்களை மறுகுடியமர்த்த நகர்ப்புற ஏழை மக்களுக்கு பேரிடர்களை எதிர்கொள்ளும் நிலைத்திருக்கக்கூடிய 6,000 வீடுகள் ரூ.1,591 கோடி செலவில் கட்ட திட்டமிடப்பட்டு, கையெழுத்திடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசால் ரூ.481 கோடி வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 876 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பணிகள் தொடங்கப்பட்டு, மீதமுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

- சென்னை மற்றும் இதர நகரங்களில் கட்டப்பட்டுள்ள 42 அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில் உள்ள 13,745 சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை மீண்டும் கட்டுவதற்கு இறுதி செய்யப்பட்டு, 3 திட்டப் பகுதிகளில் உள்ள 2,218 சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடிக்கும் பணிகள் முடிவுற்றுள்ளன, மேலும், 6 திட்டப் பகுதிகளில் உள்ள 1,688 சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடிக்கும் பணிகள் நடைபெறுகிறது.

- ரூ.60.28 கோடி செலவில் அடுக்குமாடிக் குடியிருப்புகளின் கட்டமைப்பு உறுதித்தன்மை மற்றும் ஆயுட்காலத்தினை அதிகரிக்க 123 திட்டப் பகுதிகளிலுள்ள, 77,390 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பழுது நீக்கும் மற்றும் புதுப்பித்தல் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. இத்திட்டத்தின்கீழ் பணிகள் 77 திட்டப் பகுதிகளில் முடிவுற்றும், 18 திட்டப் பகுதிகளில் முன்னேற்றத்திலும் உள்ளன. இதற்காக ரூ.28.07 கோடி செலவிடப்பட்டுள்ளது.

- சென்னை மற்றும் இதர நகரங்களில் உள்ள 65 அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதிகளில் உள்ள 26,483 அடுக்குமாடிக் குடியிருப்புகளை ரூ.68.74 கோடி செலவில் புதுப்பிக்க திட்டப்பணிகள் ஒப்புதல் வழங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தின்கீழ் பணிகள் 7 திட்டப் பகுதிகளில் முடிவுற்றுள்ளன, 20 திட்டப் பகுதிகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மற்றும் 23 திட்டப்பகுதிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள திட்டப்பகுதிகளில் பணிகள் விரைவில் தொடங்க ஆணை.

- 28 அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதிகளில் உள்ள 23,546 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.79.15 கோடி செலவில் புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ள இறுதி செய்யப்பட்டுள்ளன.

- ரூ.364.80 கோடி செலவில் சென்னை மற்றும் இதர நகரங்களில் உள்ள 6 திட்டப்பகுதிகளில் அடுக்குமாடிக்குடியிருப்புகளுக்கு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஆணை.

- சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகரில் உள்ள 14 அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வசதிகளை மேம்படுத்த ரூ.42.73 கோடி நிதி கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. மேலும், அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டு வசதி திட்டத்தில் முன்னேற்றத்திலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில் ரூ.322.07 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.



- ரூ.50 கோடி மதிப்பீட்டில் பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் 446 திட்டப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, 277 திட்டப் பகுதிகளில் முடிவுற்றுள்ளன. 70 திட்டப்பகுதிகளில் பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. இத்திட்டப்பணிகளுக்காக ரூ.26.83 கோடி செலவிடப்பட்டுள்ளன.
- அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ஒதுக்கீட்டின்போது பயனாளிகள் பங்களிப்பு தொகையினை ஒரே தவணையாக செலுத்தும் முறை ரத்து.
- சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளின் மறுகட்டுமானத்திற்காக, பயனாளிகள் மாற்று இடங்களில் வசிப்பதற்காக வழங்கப்படும் கருணைத் தொகை ரூ.8,000லிருந்து ரூ.24,000 ஆக உயர்த்தப்பட்டு, 6,352 குடும்பங்களுக்கு ரூ.10.61 கோடி கருணைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
- ஒதுக்கீட்டாணைகள் மற்றும் விற்பனை பத்திரங்கள் மகளிர் பெயரில் வழங்கப்படுகிறது.
- 15,147 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டாணைகள் வழங்கப்பட்டுள்ளன.
- அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பராமரிப்புப் பணிகளில் குடியிருப்போர் நல சங்கங்களை ஈடுபடுத்தி நன்முறையில் பராமரிக்க "நம் குடியிருப்பு-நம் பொறுப்பு" என்ற புதிய திட்டம் நல்ல முன்னேற்றத்தினை கண்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், ஏற்படுத்தப்பட வேண்டிய குடியிருப்போர் 694 நலச் சங்கங்கள், ஏற்படுத்தப்பட்ட குடியிருப்போர் 630 நலச் சங்கங்கள், பதிவு செய்யப்பட்ட குடியிருப்போர் 446 நலச் சங்கங்களுக்கு ரூ.1.52 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.
- 1,929 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 1,124 மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கான விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- சமுதாய மேம்பாட்டு திட்டத்தின் ஒரு பகுதியாக, 1,737 நபர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. வாழ்வாதார பணிகள் மூலம் 240 நபர்கள் பயன் பெற்றுள்ளனர். 262 உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளன.

❖ ❖ ❖



செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்

மாண்புமிகு
செய்தித்துறை அமைச்சர்
திரு. **மு.பெ.சாமிநாதன்**
அவர்கள்

செய்தித்துறை

- கொரோனா தொற்றினால் உயிரிழந்த பத்திரிகையாளர்களின் வாரிசுகளுக்கு இழப்பீட்டுத் தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தி 20 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்களுக்கு தலா ரூ.5,000 வீதம் 5,784 நபர்களுக்கு கொரோனா கால சிறப்பு ஊக்கத்தொகை ரூ.2.89 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- மரணமடையும் பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் குடும்ப உதவி நிதி ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்வு.









- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மக்கள் நலத்திட்டங்களை சமூக ஊடகங்களின் வாயிலாக உடனுக்குடன் பொதுமக்களுக்குக் கொண்டு செல்வதற்கு ஏதுவாக, "சமூக ஊடகப்பிரிவு" என்ற தனிப்பிரிவு புதியதாக உருவாக்கம்.

- பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு, பணிக்காலத்தில் உயிரிழந்த 11 பத்திரிகையாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி திட்டத்தின் கீழ் நிவாரண உதவிகளும், ஓய்வுபெற்ற 45 பத்திரிகையாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

- இளம் பத்திரிகையாளர்களை இந்திய அளவில் புகழ் பெற்ற பத்திரிகை சார்ந்த கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி பயில நிதியுதவி. 5 நபர்களுக்கு தலா ரூ.3 இலட்சம் வீதம் ரூ.15 இலட்சம் நிதியுதவி.

- இதழியல் துறையில் ஒரு சிறந்த இதழியலாளருக்கு ஆண்டுதோறும் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் கூடிய கலைஞர் எழுதுகோல் விருது.

அரசு மற்றும் தனியார் பொருட்காட்சிகள்

- அரசு பொருட்காட்சிகள் மூலம் ரூ.2.86 கோடியும் தனியார் பொருட்காட்சிகள் மூலம் ரூ. 2.47 கோடியும் அரசு வருவாய் ஈட்டியுள்ளது.

திரைப்படத் தொழில்நுட்பம்

- தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளருக்கு, "கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது". விருதாளர்களுக்கு விருது தொகையாக ரூ.10 இலட்சம் மற்றும் நினைவுப்பரிசு. இவ்விருது திரைப்பட வசனகர்த்தா திரு. ஆருர்தாஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

- "எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்", "தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்" என பெயர் மாற்றம்.

- ரூ.1.58 கோடி மதிப்பிட்டில் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.

- தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தினை நவீனத்தொழில்நுட்பத்துடன் உலகத் தரத்திற்கு உயர்த்திட, முதற்கட்டப் பணிகளுக்கு ரூ.10 இலட்சம் நிதி.

- ரூ.5.09 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் அமைந்துள்ள குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத் தளத்தினை புனரமைக்கும் பணிகள், படப்பிடிப்புக் கட்டடங்களை சீரமைக்கும் பணிகள், படப்பிடிப்புத் தளத்தில் மையப்படுத்தப்பட்ட குளிர்சாதனக் கருவிகள் புதிதாக அமைக்கும் பணிகள், இரண்டு புதிய மின்மாற்றிகள், இதர மின் சீரமைப்புப் பணிகள்.

நினைவகங்கள்

- ரூ.39 கோடி மதிப்பீட்டில், நவீன விளக்கப் படங்களுடன், சென்னை, காமராஜர் சாலை, அண்ணா நினைவிட வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பளவில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தின் கட்டுமானப் பணிகள்.

- ரூ.1.70 கோடியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சென்னை அண்ணா சாலை, அரசினர் தோட்டம், ஓமந்தூரார் மருத்துவ வளாகம் உள்பகுதியில் திருவுருவச் சிலைத் திறப்பு.

- சென்னை இராஜா அண்ணாமலை புரத்திலுள்ள அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில் அன்னாருடைய திருவுருவச் சிலை திறப்பு.

- 1987 ஆம் ஆண்டு இடஒதுக்கீட்டுப் போராட்டத்தில் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 21 சமூகநீதிப் போராளிகளுக்கு ரூ. 4 கோடி மதிப்பீட்டில், விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் மணிமண்டபம்.

- மறைந்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களுக்கு, கோவில்பட்டியில் அரசின் சார்பில் ரூ. 1.51 கோடியில் திருவுருவச்சிலை மற்றும் நூலகத்துடன் கூடிய நினைவரங்கம் திறப்பு.

- உத்தரப் பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீட்டைத் தமிழக அரசின் சார்பில் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு.

- தூத்துக்குடியில் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களின் மணிமண்டபத்திற்கு அடிக்கல்.









- சென்னை காந்தி மண்டபத்தில், ரூ.42.43 இலட்சம் மதிப்பீட்டில் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு மார்பளவு சிலை.
- ரூ.72.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒட்டப்பிடாரம் வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்ந்த நினைவு இல்லம் புனரமைப்பு பணிகள் மற்றும் திருநெல்வேலியில் உள்ள வ.உ.சிதம்பரனார் மணிமண்டபத்தில் வ.உ.சி வாழ்க்கை வரலாறு ஒலி-ஒளிக் காட்சிப் பணிகள்.
- கோயம்புத்தூர் வ.உ.சிதம்பரனார் பூங்காவில், ரூ.43.70 இலட்சம் மதிப்பீட்டில் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்குத் திருவுருவச் சிலை.
- வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைத்திட நிதியொப்பளிப்பு செய்து அரசாணை.
- ரூ.34 இலட்சம் மதிப்பீட்டில் சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கு சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச் சிலை.
- சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்கு, கடலூரில் திருவுருவச் சிலை.
- டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களுக்கு சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் திருவுருவச் சிலை.
- வங்கக்கவி இரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு சென்னை இராணி மேரி கல்லூரியில் திருவுருவச் சிலை.
- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் திருவுருவச் சிலை.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கு, புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் திருவுருவச் சிலை.
- இந்தியத் திருநாட்டின் 75 ஆவது சுதந்திர நாள் விழாவை முன்னிட்டு விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களை மேம்படுத்தி 10 நினைவிடங்களில் ஒலி-ஒளிக்காட்சி அமைத்திட நடவடிக்கை.
- ரூ.3.38 கோடி மதிப்பீட்டில் சென்னை, காந்தி மண்டபம் - அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராஜர் நினைவு மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் நினைவுமண்டபம், மூதறிஞர் இராஜாஜி நினைவுமண்டபம் ஆகியவற்றை மேம்படுத்திட நடவடிக்கை.
- சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் திருவுருவச் சிலையும், திருமூர்த்தி அணை அருகில் அரங்கமும் அமைத்திட நிதி ஒதுக்கீடு.

- பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டப்பணிகள் நடைபெற்றபோது ஏற்பட்ட விபத்தில் உயிர்நீத்தவர்களுக்கு நினைவு மண்டபம். பொள்ளாச்சியில் செயல்படும் நீர்வளத்துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்தில் விவசாயப் பெருமக்களுக்குப் பயிற்சிகள் கருத்தரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்திட ஏதுவாக, ரூ.4 கோடி மதிப்பீட்டில் இரண்டு அடுக்குகள் கொண்ட புதிய அரங்கு, மற்றும் மேனாள் சட்டமன்ற உறுப்பினர், வி.கே.பழனிசாமிகவுண்டர்,மேனாள் அமைச்சர் சி.சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம், ஆகியோருக்கு திருவுருவச் சிலைகள்.

- சென்னை மாகாணத்தின் மேனாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களுக்கு ரூ.17.50 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை காந்தி மண்டபத்தில் திருவுருவச்சிலை . மேலும், நாமக்கல் நகரில் அன்னாரின் பெயரில் ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் அரங்கம்.

- ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் உத்தமத் தியாகி ஐயா திரு.ஈஸ்வரன் அவர்களுக்கு ஈரோடு மாவட்டம் பவானிசாகர் நகரியத்தில் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம்.

- ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் மேனாள் அமைச்சர் திரு.ஏ.கோவிந்தசாமி அவர்களின் நினைவாக விழுப்புரம் மாவட்டம் வழுதரெட்டி கிராமத்தில் திருவுருவச்சிலை மற்றும் அரங்கம்.

- நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களுக்கு சென்னை, சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை வளாகத்தில், மார்பளவு வெண்கலச் சிலை திறப்பு.

- தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபத்தில், ரூ.48.66 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சிலை.

- தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை அவர்களுக்கு மயிலாடுதுறையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் அரங்கம் மற்றும் சிலை.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

- அரசு துறைகளுக்குத் தேவையான அனைத்து நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், நிலைப்படுத்தப்படாத படிவங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை அச்சிட்டு வழங்கும் பணியினையும், அனைத்து துறைகளுக்கு எழுது பொருட்கள் கொள்முதல் செய்து வழங்கும் பணியினையும் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை மேற்கொண்டுவருகிறது.

- இயக்ககம், திருச்சி மற்றும் மதுரை கிளை அச்சக வளாகங்களில் இயங்கும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையங்கள் மூலமாக தமிழ்நாடு அரசிதழ்கள், விதிமுறை நூல்கள் மற்றும் சட்டத் தொகுப்புகள் ஆகியவை விற்பனை.

பணிநியமனம்

- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் கருணை அடிப்படையில் 6 நபர்கள் பணி நியமனம்.

நிதி சார்ந்த சாதனைகள்

- பல்கலைக்கழகங்களுக்கான விடைத்தாள்கள் அச்சிடும் பணி, பிறஅரசுத்துறை மற்றும் அரசு நிறுவனங்களுக்கான அச்சுப்பணி செயலாக்கத்தின் மூலம் ரூ.28.78 கோடி மற்றும் பெயர் மாற்ற அறிவிக்கைகள் மற்றும் அரசிதழ்கள் வெளியீடு விற்பனை மூலம் ரூ.2.37 கோடி என ரூ.31.15 கோடி அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

- வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவளர்ச்சிக்கேற்பதனியார் அச்சகங்களுக்கு இணையாக அதி நவீன ரக இயந்திரங்கள் கொள்முதல் செய்ய எழுதுபொருள் அச்சுத்துறைக்கு ஒவ்வொரு நிதியாண்டிலும் போதிய நிதி ஒதுக்கீடு.

- ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை அரசு மைய அச்சகத்திற்காக சிப்பம் கட்டும் இயந்திரம் கொள்முதல்.



- அரசு மைய அச்சகத்திற்கு, ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் சுமை ஊர்தி கொள்முதல்.
- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு முதல் முறையாக அச்சுத்துறைக்கு தரக்கட்டுப்பாடு ஆய்வகம் ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டு ஆய்வகம் அமைத்திட நடவடிக்கை.
- ரூ.1.15 கோடி மதிப்பில் நான்கு வண்ண எண்ணிம உற்பத்தி அச்சுப்பொறி (Four Colour Toner Based Digital Production Printer), ரூ.95.89 இலட்சம் மதிப்பில் ஆறு எண்ணிக்கை கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி இயந்திரங்கள் (Black and White Inkjet Digital Production Printer), ரூ.59.35 இலட்சம் மதிப்பில் இரண்டு எண்ணிக்கை நான்கு வண்ண எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி இயந்திரங்கள் (Four Colour Digital Inkjet Production Printer) ரூ.20.59 இலட்சம் மதிப்பில் நெகிழி அடித்தட்டுகள் (Plastic Pallets) கொள்முதல்.
- 34.54 கோடி மதிப்பீட்டில் அரசு அச்சக குடியிருப்பில் நவீன வசதிகளுடன் கூடிய 96 குடியிருப்புகளின் கட்டுமானப்பணிகள் பொதுப் பணித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளது.
- அரசு எழுதுபொருள் அலுவலகம் புனரமைப்பதற்கு ரூ.1.25 கோடி ஒதுக்கீடு.
- பழுதடைந்துள்ள சேலம் அரசு கிளை அச்சக கட்டடம், அரசு மைய அச்சகத்தில் பிரதான அச்சு இயந்திரம் அமைந்துள்ள கட்டடம், திருச்சி அரசு கிளை அச்சக கட்டடம், மதுரை அரசு கிளை அச்சக கட்டடம் மற்றும் விருத்தாசலம் அரசு கிளை அச்சக மின் பராமரிப்பு பணிகள்.அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் அலகில் கட்டட பராமரிப்பு பணிக்காக ரூ.19.83 இலட்சம் மதிப்பீட்டில் மின் பணிகள். சென்னை அரசு மைய அச்சகத்தில் புனரமைப்பு பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

❖ ❖ ❖



மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூகச் சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

மாண்புமிகு
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர்
திருமதி **பி.கீதா ஜீவன்**
அவர்கள்

- "ஊட்டச்சத்தை உறுதி செய்" என்னும் திட்டத்தின் கீழ், 6 மாதம் முதல் 6 வயது வரையுள்ள 1,11,216 கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்துவதற்காக, ரூ.18.68 கோடி செலவினத்தில் 8 வார காலத்திற்கு, சிறப்பு ஊட்டச்சத்து உணவு வழங்க அரசு ஆணை.
- மேலும், பிறந்ததிலிருந்து 6 மாதம் வரையுள்ள 11,917 கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளின் தாய்மார்களுக்கு, அவர்களின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்தி குழந்தைகளுக்கு தேவையான தாய்ப்பால் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில்



2 ஊட்டச்சத்து பெட்டகங்களும், அதுபோன்றே 16,415 மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளின் தாய்மார்களுக்கு 1 ஊட்டச்சத்து பெட்டகமும் வழங்க ரூ.8.68 கோடி நிதி ஒதுக்கீடு.

❖ குழந்தைகள் மையங்களில் சிறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் மருந்துப் பெட்டிகள் மற்றும் குழந்தைகளிடையே சுகாதாரப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், அங்கன்வாடி மையங்களில் அவர்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்க சுகாதாரப் பெட்டிகளும் வழங்க ரூ.779.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

❖ குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரும் சத்துமாவின் தரம் இந்தியத் தரச்சான்று-இன்படி மாற்றியமைத்து புதிய கலவையிலான சத்துமாவு 2023 ஜனவரி மாதம் முதல் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு, கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் புதிய கலவையிலான சத்துமாவு 2023 ஜனவரி மாதம் முதல் அனைத்து பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

❖ ரூ.12.59 கோடி செலவில் அரசு சொந்த கட்டடங்களில் செயல்படும் 41,989 அங்கன்வாடி மையங்களுக்கு, வருடாந்திர பராமரிப்பு தொகையாக தலா ரூ.3,000 என ஆணை.

❖ ரூ.15.90 கோடி செலவில் முன்பருவ கல்வி விளையாட்டு பொருட்டுகள் வழங்குவதற்கு ஆணை.

❖ ரூ.8.44 கோடி செலவில் குழந்தைகள் மையப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு சீருடை சேலைகள் மற்றும் மேலங்கிகள் வழங்குவதற்கு ஆணை.

❖ கர்ப்ப காலத்திலும் பிரசவத்திற்கு பின்னரும் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தை கருவுற்ற மகளிருக்கு தெளிவுபடுத்திட சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, 90,000 கருவுற்ற மகளிர் பயனடைந்துள்ளனர்.

❖ புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும், பஞ்சாயத்து தலைவர்களுக்கும், ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க, ஒருநாள் வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடத்துவதற்காக ரூ.3.5 கோடி ஒப்பளிக்கப்பட்டு, வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

❖ முதன்மை அங்கன்வாடிப் பணியாளர், குறு அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களில் 25 சதவிகிதம் விதவைகள்/ கணவனால் கைவிடப்பட்டோருக்கு பணிநியமனம்.

❖ குழந்தைகள் மையங்களில் பணிபுரியும் அங்கன்வாடி உதவியாளர்களின் பணி ஓய்வு பெறும் வயது 60 ஆக உயர்வு.

❖ அங்கன்வாடி மையங்களில் பணியாற்றும் குறு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்கள், பணிக்காலத்தில் காலமாணவர்களின் தகுதி பெற்ற பெண் வாரிசுதாரர்களுக்கு அங்கன்வாடி பணியாளர்களாக பணிநியமனம்.

❖ ஐந்து வருடம் பணிமுடித்த குறுஅங்கன்வாடி பணியாளர்களுக்கு அங்கன்வாடி பணியாளராக பதவி உயர்வு வழங்க ஆணை.

❖ ரூ.7.76 கோடி செலவில் 7,757 குழந்தைகள் மையங்களுக்கு தலா ரூ.10,000 வீதத்தில் மின்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖ வாடகைக் கட்டடங்களில் செயல்படும் 7,228 குழந்தைகள் மையங்களின் வாடகையினை உயர்த்த ரூ.18.17 கோடி நிதி ஒதுக்கீடு.

❖ அரசு சொந்த கட்டடங்களில் செயல்படும் 43,214 குழந்தைகள் மையங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு தொகையாக தலா ரூ.3,000 வீதம் ரூ.12.96 கோடி நிதி ஒதுக்கீடு.

❖ ரூ.23.91 கோடி செலவில் 25 மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் மையங்களில் முன்பருவக்கல்வி பயிலும் 2 முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ணச்சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.

❖ 2022-2023ஆம் ஆண்டிற்கு ரூ.3.72 கோடி செலவில் 7 மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் மையங்களில் முன்பருவக்கல்வி பயிலும் 2 முதல் 6 வயது வரையிலான 1,58,063 குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ணச்சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.



- மாநில அளவில் மண்டல வாரியாக (4 மண்டலங்கள்) ஒப்பந்தப்புள்ளி முறை அறிமுகப்படுத்தப்பட்டு, சத்துணவுத் திட்ட பயனாளி குழந்தைகளுக்கு அக்மார்க் தரத்திலான முட்டைகள் கொள்முதல் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கையின் மூலம் நாள்தோறும் சுமார் 60 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

- 01.11.2022 முதல் குழந்தைகள் மையங்களில் பதிவு செய்யப்பட்ட ஒன்று முதல் இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வாரத்திற்கு ஒருமுறை வழங்கப்பட்டு வந்த முட்டையின் எண்ணிக்கையை உயர்த்தி வாரத்திற்கு மூன்று முட்டைகளாக வழங்கப்படுகிறது.

- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் பயனடைந்து வரும் சுமார் 28 இலட்சம் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தும் பொருட்டு, வல்லுநர் குழு ஒன்றினை அமைத்து, அக்குழுவின் பரிந்துரையின்படி குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரும் சத்துமாவின் தரம் இந்தியத் தரச்சான்று ISO 11536:2022இன்படி மாற்றியமைத்து ஆணை வெளியிடப்பட்டு, உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதேபோன்று கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் புதிய கலவையிலான சத்துமாவு.

- ஆரம்பகால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி, மூன்று கட்டங்களில் இயற்கையான பொருட்களை கொண்டு நச்சுத்தன்மை இல்லாத விளையாட்டு பொருட்களை தானே செய்யும் வகையில் பயிற்சி, ஆடிப்பாடி விளையாடு பாப்பா பாடத்திட்டத்திற்கு ஏற்ப அனைத்து நிலை களப்பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இது குழந்தைகளின் வளர்ச்சியை மேம்படுத்தும் ஒரு புதுமையான திட்டமாகும்.

- விளையாட்டு மூலம் கற்றல் என்ற குழந்தையின் முழு வளர்ச்சியை தூண்டக்கூடிய தூண்டுதல் செயல்பாடுகள் அடங்கிய புத்தகம், இல்லத்தில் பயன்படுத்தும் வகையில் 9,79,902 பெற்றோர் மற்றும் பேணுவோர்களுக்கு பயிற்சியுடன் வழங்கப்பட்டுள்ளது.

- ரூ.1.30 கோடி செலவில் 27 மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் மையங்களில் 2 வயதிற்குட்பட்ட இளம்சிறார் மற்றும் குழந்தைகளின் உணவூட்டும் முறைகளை மேம்படுத்தி ஊட்டச்சத்து குறைபாட்டினை களைவதற்கு பெற்றோர் மற்றும் குழந்தைகளை பேணுவோருக்கு சுயமதிப்பீட்டு தாள்கள் வழங்கப்பட்டுள்ளது.

- "ஊட்டச்சத்தை உறுதிசெய்" விதி-110இன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பு. ஏப்ரல் 2022இல் ஒரு சிறப்பு வளர்ச்சி கண்காணிப்பு முகாம் தொடங்கப்பட்டு 37 இலட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர். ஊட்டச்சத்து குறைபாடுள்ள

குழந்தைகள் RBSK குழுவில் கண்டறியப்பட்டு மருத்துவ கவனிப்பு தேவைப்படும் குழந்தைகள் மூன்றாம்நிலை பராமரிப்பு மையங்கள் மூலம் பயன் பெற்றனர். 6 மாதங்கள் முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு ரூ.18 கோடி செலவில், ஊட்டச்சத்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் தகவல்கள் TNeGAஇன் உதவியுடன் உருவாக்கப்பட்ட புதிய TN-ICDS செயலி மூலம் கண்காணிக்கப்படுகிறது.

- "இரத்தசோகை விழிப்புணர்வு பிரச்சாரம்" 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இரத்தசோகை பாதிப்பு, மாநில சராசரியைவிட அதிகமாக உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 20 மாவட்டங்களில், தீவிர இரத்தசோகை விழிப்புணர்வு பிரச்சாரம் ரூ.4.75 கோடி செலவில் 3மாதங்களுக்கு நடத்தப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்ட பயனாளிகளான கர்ப்பிணிப்பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் பெற்றோர் ஆகியோருக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட சேவைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், முறையாக அவை பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்யவும், கருத்துகளைப் பெறுவதற்கும், கல்வி அளிப்பதற்கும் ஒரு பயனாளி சேவை மையம் ரூ.1.5 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

- குறைந்த எடையுள்ள குழந்தைகளைக் கண்காணிக்கும் பொருட்டு, செயலியுடன் இணைக்கப்பட்ட 1000 எடை, உயரம் அளவீட்டு "ஐ.சி.டி. அடிப்படையிலான ஸ்மார்ட் எடை கருவிகள், 434 வட்டரங்களுக்கு ரூ.85 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

- பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சார்ந்த பெண்களின் உயர்கல்வியை உறுதி செய்யும் வகையில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதி புதுமைப் பெண் திட்டம் ஆகஸ்ட் 2022 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று தடையில்லாமல் உயர்கல்வியை தொடரும் பொருட்டு, அனைத்து மாணவிகளுக்கும் மாதம் தோறும் ரூ.1,000 ஊக்கத் தொகையாக அவர்களின் வங்கிகணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், மாதந்தோறும் 2.02 இலட்சம் மாணவிகள் பயனடைந்த வகையில் ரூ.103.29 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- திருமண நிதியுதவி திட்டங்களின் கீழ், 2021-2022ஆம் நிதியாண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ.762.22 கோடி நிதியில் 53,599 பட்டதாரிகள் மற்றும் 41,101 பட்டதாரி அல்லாதோருக்கு ரூ.379 கோடி மதிப்பில் 8 கிராம் தங்க நாணயம் மற்றும் ரூ.383 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டதில், 94,700 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

- 2022-2023ஆம் ஆண்டிற்கு திருமண நிதியுதவித் திட்டங்களான, விதவைகளின் பெண் குழந்தைகள் திருமண உதவித்திட்டம், ஆதரவற்ற பெண் குழந்தைகள் திருமண உதவி திட்டம், விதவை மறுமணம் திருமண உதவித்திட்டம், கலப்பு திருமண உதவி திட்டங்களின் மூலம் தங்க நாணயம் மற்றும் நிதியுதவி வழங்கும் வகையில் ரூ.64.44 கோடி நிதி ஒதுக்கப்பட்டு 7,012 பயனாளிகள் பயனடைய உள்ளனர்.

- சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில், மகளிருக்கு கட்டணமில்லா பயணத் திட்டத்தின் கீழ், அனைத்து மகளிரும் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொண்ட வகையில் 12.07.2021 முதல் 22.03.2023 வரை ரூ.4,098.56 கோடி செலவினத்தில் 256.16 கோடி பாதுகாப்பான பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளனர்.

- தமிழ்நாட்டிலுள்ள திருநங்கைகளுக்கு அரசுப் போருந்துகளில் கட்டணமில்லா பயணச் சலுகையை நீட்டித்த வகையில் 12.07.2021 முதல் 14.03.2023 வரை ரூ.234.08 கோடி செலவினத்தில் 14.63 இலட்சம் கட்டணமில்லா பயணங்களை திருநங்கைகள் மேற்கொண்டுள்ளனர்.

- கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் முதற்கட்ட நிவாரண உதவித்தொகையாக குடும்ப அட்டை இல்லாத 8,493 திருநங்கைகளுக்கு தலா ரூ.2,000மும், இரண்டாம் கட்ட நிவாரண உதவித்தொகையாக 8,591 திருநங்கைகளுக்கு தலாரூ.2,000வீதம்ரூ.3.40கோடிவழங்கப்பட்டுள்ளது.

- 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற திருநங்கைகளுக்கு ரூ.1,000/- வீதம் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ், 1,178 திருநங்கைகள் பயனடைந்து வருகின்றனர். ஓய்வூதிய தொகை ரூ.1,500 ஆக உயர்வு

- திருநங்கைகளுக்கு சொந்த தொழில் துவங்க மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 403 திருநங்கைகள் பயனடைந்துள்ளனர்.

- திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், 20 திருநங்கைகளுக்கு சென்னை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி வாயிலாக திறன் பயிற்சியும், நாமக்கல் மாவட்டத்தை சார்ந்த 15 திருநங்கைகளுக்கு ஆடை வடிவமைப்பு பயிற்சியும், தஞ்சாவூர் மாவட்டத்தை சார்ந்த 30 திருநங்கைகளுக்கு அப்பளம், ஊறுகாய் மற்றும் மசாலா பொடி தயாரிப்பு பயிற்சியும் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் 30 திருநங்கைகளுக்கு வாகன ஓட்டுநர் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

- 38 மாவட்டங்களில் 21 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதி செயல்பாட்டில் உள்ளது.

- திருச்சி, கூடுவாஞ்சேரி மற்றும் தாம்பரம் ஆகிய மூன்று இடங்களில், ரூ.31.07 கோடியில் 729 பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில், பணிபுரியும் மகளிருக்கான மூன்று அரசு விடுதிகள், கட்டப்பட்டு வருகிறது.

- இரண்டாம் கட்டமாக 542 மகளிர் பயன்பெறும் வகையில் தோராயமாக திட்ட செலவு ரூ.43.52 கோடியில் ஓசூர், திருவண்ணாமலை, செயிண்ட் தாமஸ் மவுண்ட் (செங்கல்பட்டு) மற்றும் கிருஷ்ணகிரி (கொத்தபெட்டா) ஆகிய 4 இடங்களில் புதிய தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட உள்ளன.

- ரூ.4.21 கோடி மதிப்பீட்டில் சேலம், தஞ்சாவூர், பெரம்பலூர், வேலூர், விழுப்புரம், திருநெல்வேலி, மற்றும் சென்னையிலுள்ள அடையாறு மற்றும் வடபழனி ஆகிய 8 இடங்களில் தற்போதுள்ள தங்கும் விடுதிகளில் மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. சிசிடிவி, இணையச்சேவை, பொருத்தப்பட்ட அறைகள், இன்வெர்ட்டர், கீசர் மற்றும் 24x7 பாதுகாப்பு சேவைகள் போன்ற மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் விடுதிகள் செயல்படும்.

- முதியோர் இல்லங்களுக்கு ரூ.2.06 கோடி அரசு மானியம் விடுவிக்கப்பட்டு, 1,428 முதியோர்கள் பயனடைந்துள்ளனர்.

- ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஒருங்கிணைந்த வளாகங்களில் உள்ள பயனாளிகளுக்கு ரூ.5.96 கோடி அரசு மானியம் விடுவிக்கப்பட்டு, 2,021 முதியோர்கள் மற்றும் 1,860 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

- முதியோர்களுக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினமாக ஜூன் 15 அனுசரிக்கப்பட்டு ரூ.4 இலட்சம் செலவில் முதியோர் வன்கொடுமை குறித்த விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- மாநில மற்றும் மாவட்ட அளவில் "சர்வதேச முதியோர் தினம்" ரூ.5.23 இலட்சம் செலவில் அனுசரிக்கப்பட்டது.

- மாநில மூத்த குடிமக்கள் வரைவு கொள்கைக்கான இறுதி வரைவு விரைவில் வெளியிடப்படவுள்ளது.

- மூத்த குடிமக்கள் நலனுக்கான தேசிய செயல் திட்டத்தினை செயல்படுத்த முதல் தவணையாக ரூ.1.18 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.143.11 கோடி செலவில் 57,291 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

- முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் 87,904 பெண் குழந்தைகளுக்கு ரூ.217.76 கோடி முதிர்வுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

- தொட்டில் குழந்தைத் திட்டத்தின் கீழ், 604 குழந்தைகள் (ஆண்-264, பெண்-340) மீட்கப்பட்டுள்ளனர். 5,678 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

- சத்துணவு மையங்களில் பணிபுரியும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் வயதினை 58லிருந்து 60ஆக உயர்த்தி ஆணை.



- பள்ளி சத்துணவு மையங்களின் தரத்தினை உயர்த்துவதற்கு 100 பள்ளி சத்துணவு மையங்களுக்கு ISO சான்றிதழ்கள் வழங்குவற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- மாணவ, மாணவியரின் ஊட்டச்சத்து நிலையை கண்டறிய ரூ.2 கோடி செலவினத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்து பள்ளிகளில் பயிலும் 46,70,458 சத்துணவு பயனாளிகளுக்கு உடல் நிறை குறியீட்டு எண் (Body Mass Index) கணக்கீடு செய்யும் பணி.
- சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்களில் வைப்பறையுடன் கூடிய சமையலறைகள் கட்டுவதற்காக ரூ.69.70 கோடி செலவில் 1,291 சமையலறைகள் கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, 931 பணிகள் முடிவுற்றுள்ளன.
- சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்களில் மாணவ மாணவியர்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு ரூ.80 இலட்சம் செலவில் 1,000 சத்துணவு மையங்களுக்கு தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது.
- பள்ளி சத்துணவு மையங்களில் சுகாதாரமான முறையில் உணவு சமைத்திட 25,000 பள்ளி சத்துணவு மைய சமையலருக்கு இரண்டு நீள அங்கிகள், ஒரு தலைக் கவசம், ஒரு நகவெட்டி, 5 கை துடைக்கும் துண்டுகள், 6 கிருமி நாசினி சோப்புகள் ஆகியவை ரூ.1.62 கோடியில் வழங்கப்பட்டுள்ளது.
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ், மாநகராட்சி, நகராட்சி, ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப் பகுதிகளில் செயல்படும் 1,969 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1,54,108 தொடக்கப் பள்ளி (1 முதல் 5ஆம் வகுப்பு வரை) குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திட ரூ.33.65 கோடி ஒதுக்கீடு.
- சென்னை பெருநகர மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர், ஏனைய மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில், நகராட்சி நிர்வாகத் துறை, கிராமப்பகுதி மற்றும் மலைப் பகுதிகளில் மகளிர் திட்டத்தின் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ முதலமைச்சரின் காலை உணவு திட்டம் முதற்கட்டமாக 15.09.2022 அன்று மதுரை மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களாலும், 16.09.2022 அன்று மதுரை தவிர்த்து ஏனைய அனைத்து மாவட்டங்களில் மாண்புமிகு அமைச்சர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகளாலும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

❖ கொரொனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு பெற்றோர் இருவரையும் இழந்த அல்லது ஏற்கெனவே தாய் அல்லது தந்தையை இழந்து, கொரொனா நோய் தொற்றினால் மற்றொரு பெற்றோரையும் இழந்த 379 குழந்தைகளின் பெயரில் தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.18.95 கோடி வைப்பீடு. பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு 18 வயது நிறைவு செய்யும் போது வட்டியுடன் வழங்கப்படும்.

❖ கொரொனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு தாய் அல்லது தந்தையை இழந்த 18 வயதுக்குட்பட்ட 13,291 குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தலா ரூ.3 இலட்சம் வீதம் ரூ.398.73 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

❖ கொரொனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு பெற்றோர் இருவரையும் இழந்து உறவினர் அல்லது பாதுகாவலரின் அரவணைப்பில் வளர்ந்து வரும் 365 குழந்தைகளுக்கு மாத பராமரிப்பு தொகையாக ரூ.3,000 வீதம் ரூ.161.07 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

❖ பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2012இன் கீழ், "தமிழ்நாடு பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான இழப்பீட்டு நிதி" அரசால் உருவாக்கப்பட்டு, பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்கும் பொருட்டு ரூ.18.42 கோடி அரசால் கூடுதலாக ஒதுக்கப்பட்டு, 1,263 குழந்தைகளுக்கு ரூ.18.38 கோடி வழங்கப்பட்டுள்ளது.

❖ குழந்தைகளை குடும்ப சூழலில் வைத்து பராமரிப்பதை ஊக்குவிக்கும் நோக்கில் நிதி ஆதரவு திட்டத்தின் கீழ், 2,260 குழந்தைகளுக்கு மாதம் ரூ.2,000 வீதம் ரூ.4.01 கோடி வழங்கப்பட்டுள்ளது.

❖ முதன் முறையாக, குழந்தைகளின் பாதுகாப்பு சேவைகள் குறித்து யுனிசெஃப் நிறுவனத்துடன் இணைந்து அனைத்து பங்குதாரர்களுக்கும் பயிற்சி வழங்க "சமூக மேம்பாட்டுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம்" உருவாக்க நிதி ஒதுக்கீடு.

❖ குழந்தைகளின் ஒட்டுமொத்த நல்வாழ்வினை மேம்படுத்தும் நோக்கில் "தமிழ்நாடு மாநில குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை 2021" வெளியிடப்பட்டது.

❖ சென்னை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் சிறுவர்களிடையே உள்ள போதை பழக்கத்தை கட்டுபடுத்துவதற்கு ரூ.21.54 இலட்சம் மதிப்பீட்டில் போதை தடுப்பு மையங்கள் அமைக்கப்பட்டு 164 குழந்தைகள் பயன்.

❖ புதியதாக உருவாக்கப்பட்டுள்ள ஆறு மாவட்டங்களில் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள், இளைஞர் நீதி குழுமம் மற்றும் குழந்தை நலக் குழு ஆகியவற்றை ஏற்படுத்த அரசு ஆணை.

❖ செங்கல்பட்டு மாவட்டத்தில் "பாதுகாப்பு இல்லம்" புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.15.95 கோடி நிதியும், சென்னை மாவட்டத்தில் கூடுதலாக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு அமைக்க ரூ.68.53 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

❖ குழந்தைகள் இல்லங்கள் அதிகளவில் உள்ள 6 மாவட்டங்களில் அவ்வில்லக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் வாழ்வியல் வழிகாட்டு மையங்கள் அமைக்க ரூ.48.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

❖ மாற்று கருவறை தாய் மூலம் குழந்தைகள் பெற்று பராமரிக்கும் அரசு பெண் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 270 நாட்கள் குழந்தை பராமரிப்பு விடுப்பு.

❖ தஞ்சாவூர் அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு கூடுதல் பாதுகாப்பு வசதியுடன் கூடிய சுற்றுச்சுவர் அமைப்பதற்கு ரூ.63,52,175 நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை.

❖ ❖ ❖



பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்குதல் - 13.08.2022



54 மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட மணமக்களுக்கு
திருமணத்தை நடத்திவைத்து அவர்களை வாழ்த்துதல் - 20.11.2022



மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்

திரு. அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்

அவர்கள்

கால்நடை பராமரிப்புத்துறை

- தமிழகத்தில் உள்ள அனைத்து கால்நடை நிலையங்களிலும் ரூ.6.54 கோடி சிகிச்சைப்பணிகள், 38.31 இலட்சம் முதலுதவி, 685.22 இலட்சம் தடுப்பூசிப்பணி, ரூ.6.85 கோடி குடற்புழு நீக்கப்பணிகள், மற்றும் 85.73 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல் பணிகள்.
- 125 விவசாயிகளின் வயல்களில் ரூ.1.17 கோடி மதிப்பீட்டில் மானாவாரி பகுதிகளில் பருவ காலத்தில் அதிகம் கிடைக்கும் பசுந்தீவனத்தை ஊறுகாய் புல்லாக பதப்படுத்தி பசுந்தீவனம் கிடைக்காத வறட்சிக் காலங்களில் கால்நடைகளுக்கு தீவனம் அளித்திட மாதிரி ஊறுகாய்புல் தயாரிக்கும் அலகுகள்.
- வணிக ரீதியில் ஊறுகாய் புல் தயாரிக்கும் ஒரு அலகிற்கு, தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கு, அலகு நிறுவப்பட்ட பிறகு 25 சதவீத மானியமாக ரூ. 10.50 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.



- சென்னை, நீலகிரி மற்றும் நாகப்பட்டினம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் 2,000 ஏக்கர் பரப்பளவில் ஒரு முன்னோடித் திட்டமாக விவசாயிகள் விருப்பத்திற்கேற்ப தோப்புகள்/ பழத்தோட்டங்களில் பல்லாண்டுத் தீவனப் புற்கள் / தானிய வகைகளுடன் ஊடுபயிராக சாகுபடி செய்திட ஊக்கத்தொகையாக ஏக்கருக்கு ரூ.3,000 வழங்கப்பட்டு வருகிறது.

- பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க 42.10 இலட்சம் தீவன புல்கரணைகள், துறையின் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம்.

- கால்நடை பண்ணைகளின் மூலம் 818 செம்மறியாட்டு குட்டிகள், 609 நல்மரபின ஆட்டுக்குட்டிகளும், 1,330 பன்றிகுட்டிகளும், 106 மாட்டினங்களும் கால்நடை வளர்ப்போருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

- 90.29 இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகமெங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

- கால்நடை வளர்போர் தங்கள் கால்நடைகளை மேம்படுத்திட 1,672 மேச்சேரி செம்மறியாட்டு குட்டிகள் வழங்கல்.

- நடமாடும் கால்நடை அவசர ஊர்தி சேவையின் மூலம் 1,55,474 கால்நடைகளுக்கு அவைகளின் இருப்பிடத்திற்கே சென்று சிகிச்சை.

- 227 கால்நடை நிலையங்களுக்கு ரூ.125.76 கோடி செலவில் புதிய கட்டடங்கள் மாநில நிதி உதவியுடன் ரூ.14.64 கோடி செலவில் 10 களக் கண்காணிப்பு அலுவலக கட்டடங்கள், 2 கால்நடை பன்முக மருத்துவமனைகள் மற்றும் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ரூ.12 கோடி செலவில் 4 ஒருங்கிணைந்த மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் ஒரு கால்நடை பன்முக மருத்துவமனைக் கட்டடம் .

- தமிழகத்தில் அஸ்காட் திட்டத்தின் கீழ் சுமார் 57,89,600 கால்நடைகளுக்கு அடைப்பான், தொண்டை அடைப்பான், சப்பைநோய் மற்றும் ஆட்டம்மை நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

- சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் திட்டத்தின் கீழ் ரூ.15.52 கோடி நிதி ஒதுக்கீட்டில் 11,900 முகாம்கள் நடத்தப்பட்டு 13.22 இலட்சம் விவசாயிகளின் 1.29 கோடி கால்நடைகள்/ கோழியினங்கள்.

- தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் இரண்டாவது சுற்றில் சுமார் 86.33 இலட்சம் தகுதியுள்ள மாட்டினத்திற்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

- தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 37 மாவட்டங்களில் உள்ள 1,981 பயனாளிகளுக்கு தலா 500/1000 நாட்டுக் கோழிக்குஞ்சுகள், ஒரு மாதத்திற்கு தேவையான தீவனம் மற்றும் குஞ்சு பொரிப்பான் ஆகியவை 50 சதவிகித மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

- விழுப்புரம் மற்றும் தேனி மாவட்டங்களில் தலா 200 பயனாளிகளுக்கு ரூ.2.25 கோடியில் கறிக்கோழிப் பண்ணைகள் அமைக்கும் பணி.

- புதுக்கோட்டை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தலா 200 பயனாளிகளுக்கு ரூ.1 கோடி செலவில் குறைந்த முதலீடு தொழில்நுட்பம் கொண்ட கோழிப் பண்ணைகள் அமைக்கும் பணி.

- 32 கால்நடை மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை அரங்குகள் நிறுவ, அறுவை சிகிச்சை கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.3.02 கோடி செலவில் கொள்முதல்.

- தேசிய கால்நடை இயக்கத்தின் கீழ் கால்நடை காப்பீடு திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மூலமாக ரூ.11.50 கோடி செலவில் 2.50 இலட்சம் கால்நடை அலகுகளுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

- ஓசூர் மாவட்ட கால்நடை பண்ணையில் கரு மாற்று மற்றும் ஆய்வுக்கூட கருத்தரிப்பு தொழில்நுட்பத்தின் வழி 689 கருக்கள் சேகரிக்கப்பட்டு 448 கருக்கள் மாற்றப்பட்டு, 53 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு 221 கருக்கள் சேமிப்பு.

- தேசிய செயற்கை முறை கருவூட்டல் திட்டம் பகுதி IIஇன் கீழ் அதிக உற்பத்தித் திறன்வாய்ந்த காளைகளின் உறைவிந்தினை



பயன்படுத்தி 6.67 இலட்சம் கால்நடை வளர்போரின் 7.68 இலட்சம் பசு மற்றும் எருமைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டது.

- தேசிய செயற்கை முறை கருவூட்டல் திட்டம் பகுதி IIIஇன் கீழ் அதிக உற்பத்தித் திறன் வாய்ந்த காளைகளின் உறைவிந்தினை பயன்படுத்தி 9.55 இலட்சம் கால்நடை வளர்போரின் 13.66 இலட்சம் பசு மற்றும் எருமைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டன.
- ஏழ்மை நிலையில் உள்ள 38,800 கிராமப்புற கணவனை இழந்த / கணவனால் கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு தலா 5 வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் விகிதத்தில் மொத்தம் 1,94,000 வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் ரூ.75.63 கோடி நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.
- 1,40,005 எண்ணிக்கை கால்நடைகளுக்கு இல்லத்திற்கே சென்று செயற்கை முறை கருவூட்டல்களும், 3,238 பாலினம் பிரிக்கப்பட்ட உறை விந்து கருவூட்டல்களும், 12,554 மரபணு உறை விந்து கருவூட்டல்களும் மேற்கொள்ளப்பட்டு, 12,348 கன்றுகளுக்கு குடற்புழு நீக்கமும், 15,486 கன்றுகளுக்கு இலவச தாது உப்புக் கட்டிகளும் வழங்கப்பட்டு, 18,497 கால்நடைகளுக்கு இலவச மடிவீக்க நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 4,518 கால்நடைகளுக்கு இலவச மடிநோய் சிகிச்சை அளிக்கப்பட்டு, 2,205 இலவச மலடு நீக்க சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு, 22,005 திட்டமிட்ட இனப்பெருக்க சிகிச்சை கருவிகள் பொருத்தப்பட்டது. 1,755 ஹெக்டர் நிலப்பரப்பில் இலவச தீவன பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
- 17 அலுவலக உதவியாளர்கள், 5 இளநிலை உதவியாளர்கள், 4 பதிவரை எழுத்தர்கள், 1 கால்நடை பராமரிப்பு உதவியாளர் மற்றும் 5 இரவு காவலாளிகள் கருணை அடிப்படையில் நியமனம்.
- கால்நடை உதவி மருத்துவர் காலி பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் 1,089 கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் நியமனம்.
- தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் 1,089 கால்நடை உதவி மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- தமிழகத்தில் உள்ள அனைத்து கால்நடை நிலையங்களிலும் 1.03 கோடி சிகிச்சைப் பணிகள், 6.82 இலட்சம் முதலுதவி, 153.70 இலட்சம் தடுப்பூசிப்பணி, 1.01 கோடி குடற்புழு நீக்கப்பணிகள், 13.23 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல் பணிகள் கால்நடைகளுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- வணிகரீதியில் ஊறுகாய்புல் தயாரிக்கும் ஒருஅலகிற்கு, தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கு, அலகு நிறுவப்பட்ட பிறகு 25 சதவீத மானியமாக ரூ.10.50 இலட்சம் என்ற விகிதத்தில் கோவை, சேலம், திருநெல்வேலி (ம) திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் தலா 1 பயனாளி தேர்வு செய்யப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- சென்னை, நீலகிரி மற்றும் நாகப்பட்டினம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் 2,000 ஏக்கர் பரப்பளவில் ஒரு முன்னோடித் திட்டமாக விவசாயிகள் விருப்பத்திற்கேற்ப தோப்புகள்/ பழத்தோட்டங்களில் பல்லாண்டுத் தீவனப்புற்கள் / தானிய வகைகளுடன் ஊடுபயிராக சாகுபடி செய்திட ஊக்கத்தொகையாக ஏக்கருக்கு ரூ.3,000 வழங்கப்பட்டு வருகிறது. 1,955 ஏக்கரில் தீவன பயிர் உற்பத்தி செய்யப்பட்டு, 2,756 விவசாயிகள் பயன்.

- பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க 5.55 இலட்சம் எண்ணிக்கையிலான தீவன புல்கரணைகள், துறையின் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம்.

- கால்நடை பண்ணைகளின் மூலம் 286 செம்மறியாடு குட்டிகள், 272 வெள்ளாட்டு குட்டிகளும், 250 பன்றிகுட்டிகளும், 31 கன்றுகளும் கால்நடை வளர்போருக்கு விற்பனை.

- 15,22,477 உறைவிந்து குச்சிகள் மாவட்ட கால்நடை பண்ணைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

- கால்நடை வளர்போர் தங்கள் கல்நடைகளை மேம்படுத்திட 482 மேச்சேரி செம்மறியாடு குட்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

- நடமாடும் கால்நடை அவசர ஊர்தி சேவையின் மூலம் 31,664 கால்நடைகளுக்கு அவைகளின் இருப்பிடத்திற்கே சென்று சிகிச்சை.

- தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் மூன்றாம் சுற்றில் நாளது வரை 78.67 இலட்சம் தகுதியுள்ள மாட்டினத்திற்கு கோமாரி நோய் தடுப்பூசியும், 4 முதல் 8 வயதுடைய தகுதியுள்ள 6.14 இலட்சம் கிடேரி கன்றுகளுக்கு கன்றுவீச்சு நோய்த் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது.

- தமிழகத்தில் அஸ்காட் திட்டத்தின் கீழ் சுமார் 27,77,900 கால்நடைகளுக்கு அடைப்பான், தொண்டை அடைப்பான், சப்பை நோய் மற்றும் ஆட்டம்மை நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

- 3,452 சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு 4.30 இலட்சம் விவசாயிகளின் 33.07 இலட்சம் கால்நடைகள்/ கோழியினங்கள் பயன்.

- நாட்டுக்கோழி வளர்ப்பில் தொழில்முனைவோரை ஊக்குவிக்க சிறிய அளவிலான (250 கோழிகள் / அலகு) 100 நாட்டுக் கோழிப் பண்ணை அலகுகள், 50 சதவிகித மானியத்தில் திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, தேனி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், கடலூர், அரியலூர் (ம) பெரம்பலூர் ஆகிய 10 மாவட்டங்களில் ரூ.1.80 கோடி செலவில் நடப்பு நிதியாண்டில் நிறுவப்பட்டு வருகின்றன.

- திருநெல்வேலி மாவட்டத்தில், அபிசேகப்பட்டி, மாவட்ட கால்நடைப் பண்ணையில், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 60:40 என்ற வீதத்தில் ஒன்றிய, மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன், நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம் மற்றும் கோழிக் குஞ்சு பொரிப்பகம் ரூ.9.42 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவ கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகிறது.

- சிவகங்கை மாவட்டத்தில், செட்டிநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணையில், மாநில அரசின் நிதியில் நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம், கோழிக் குஞ்சு பொரிப்பகம் மற்றும்

தீவன ஆலை ரூ.13.82 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவ கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகிறது.

- 362 வெறிநோய் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு, 47,784 நாய்களுக்கு வெறி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மேலும் 56,440 பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு மேற்படி முகாம்களில் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.
- தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தின் மூலம் "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" திட்டத்தின் கீழ் 16.01.2023 அன்று திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு, உணவு, மருத்துவ வசதி, ஆம்புலன்ஸ் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக ரூ.2.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் கட்டமாக ரூ.88.05 இலட்சம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஐந்து அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் / விலங்குகள் நல அமைப்புகளுக்கு வழங்கப்பட்டது.
- 157 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள். தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் 20 கால்நடை மருத்து பட்டதாரிகள் நியமனம் .

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தரவரிசைப் பட்டியல் 2020இன்படி மாநில அளவிலான கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகங்களில் முதல் இடத்தையும், அனைத்து வேளாண் பல்கலைக்கழகங்களுக்கிடையில் 12ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம். கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடு சார் பரிமாற்றத் தளத்தின் ஆய்வக வசதிகளைப் பயன்படுத்தி, துவக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பின் உறுப்பினரான இல்லும் ஜீன் எனும் துவக்க நிலை நிறுவனத்தின் மூலம், கள அளவில் நாய்களைத் தாக்கும் இரத்த ஓரணு ஒட்டுண்ணிகளைக் கண்டறியும் சேவை தொடக்கம்.
- கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலியில் கூடுதல் கல்விக் கூட கட்டடங்கள் மற்றும் விடுதிக் கட்டடங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை.
- ரூ. 1.49 கோடியில் கால்நடைத் தீவன விதை உற்பத்திப் பிரிவு நாமக்கல்லில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவுதல்.
- ரூ. 1.80 கோடியில் தருமபுரி மாவட்டத்தில், திருச்சி கருப்பு செம்மறியாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல்.
- ரூ.1.52 கோடியில் தமிழ்நாட்டின சென்னை மாதவரத்தில் சிறுவிடை கோழியின வள மையம் நிறுவுதல்.
- ஒரத்தநாட்டில், ரூ.1.97 கோடியில் தமிழகத்தின் பட்டணம் செம்மறியாட்டின வள மையம் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல்.
- ரூ.2.50 கோடியில் சென்னை மாதவரத்திலுள்ள பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவிமயமாக்கல் மையத்தின் வளாக வசதிகளை மேம்படுத்துதல்.
- ரூ.1.61 கோடியில் விலங்கு வழி பரவும் நோயறி ஆய்வகம் மற்றும் சுகாதாரத் தளம் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலியில் நிறுவுதல்.
- கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாட்டில் தானியங்கி மூலிகை மாத்திரை தயாரிப்பு வசதி மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பண்ணைக் கட்டடங்கள் திறப்பு.
- தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில்

உருவாக்கப்பட்ட கால்நடை மற்றும் கோழித் தீவனத் தொழில்நுட்ப மையம் திறப்பு.

தேசிய மாட்டினப்பெருக்க திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு, ரூ.551.40 இலட்சம் செலவில் பின்வரும் புதிய திட்டங்களை செயல்படுத்திட அனுமதி.

- நாட்டின மாடுகள் வளர்ப்பினைப் பிரபலப்படுத்துவதற்கென நாட்டின மாடுகள் பிரிவு நிறுவுதல்.
- நீலகிரி மலையில் அழிந்து வரும் தோடா எருமைகளின் நிலைப்புத் தன்மைக்காக பழங்குடியினருடன் கூடிய சமூகப் பங்கேற்பு அணுகுமுறை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள பின்வரும் ஐந்து புதிய திட்டங்களை ரூ.548.97 இலட்சத்தில் இப்பல்கலைக்கழகம் செயல்படுத்துகிறது.
- கரூர் மாவட்டத்தில் புறக்கடை கோழி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் நிறுவுதல்.
- ஒரத்தநாட்டில் உம்பளாச்சேரி மாடுகளின் இனத்தைப் பல்துறை அணுகுமுறையின் மூலம் அதன் பூர்வீக வாழ்விடங்களில் பாதுகாத்தல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்.
- தென்காசி மாவட்டத்தில், தமிழ்நாட்டில் உள்ள நாட்டின நாய்களுக்கான (இராஜபாளையம், கன்னி, சிப்பிப்பாறை மற்றும் கோம்பை) இனப்பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் நிறுவுதல்.
- கிராமப்புற முன்னேற்றத்திற்கான வெண்பன்றி இனப்பெருக்கம் மற்றும் உள்ளீட்டு மையம் காட்டுப்பாக்கத்தில் உள்ள கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவுதல்.
- நாட்டுக்குட்டை மாடுகளுக்கான பாதுகாப்பு மையம் காட்டுப்பாக்கத்தில் உள்ள கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் அமைத்தல்.
- 27.09.2022 மற்றும் 28.09.2022 ஆகிய தேதிகளில் அதன் உறுப்புக் கல்லூரிகளில் வெறிநோய்த் தடுப்பு தடுப்பூசி திட்டத்தில் மூலம் 4,388 நாய்கள் பயன்.
- 'என் விரல் நுனியில் என் நூலகம்' எனும் செயலி பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் அறிவியலாளர்களின் நன்மைக்காக சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் தொடக்கம்.
- புதுக்கோட்டை. மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் "கால்நடை இனப்பெருக்க மேலாண்மையில் நோய் கண்டறிய நகலெடுப்புத் தொழில் நுட்பப் பயன்பாடு", "தீவன உற்பத்தித் தொழில் நுட்பத்தில் அண்மைக்கால முன்னேற்றங்கள் "மற்றும் "மூலிகை கால்நடை மருத்துவம் சார்ந்த கால்நடை மருத்துவ சிகிச்சையியல்" குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டதில் 120 கால்நடை உதவி மருத்துவர்கள் பயன்.
- சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் "நிலையான எதிர்காலத்திற்கான உணவு மற்றும் பான தொழில்நுட்பத்தில் புதுமைகள்" என்ற இணையவழி சர்வதேச மாநாடு நடத்தப்பட்டதில் 92 ஆசிரிய உறுப்பினர்கள் மற்றும் 620 மாணவர்கள் நேரிலும் இணையவழி மூலமாகவும் பங்கேற்பு.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 09.03.2023 அன்று தேனி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.82.13 கோடி மதிப்பில் கல்வி கட்டுமானங்கள் உட்பட புதிய கட்டிடங்கள் உடுமலைபேட்டை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.82.13 கோடி மதிப்பில் கல்வி கட்டுமானங்கள் உட்பட புதிய கட்டடங்கள் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.11.94 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கால்நடைகளுக்கான மூலிகை மருத்துவப் பயிற்சிக்கூடம், விலங்குகள் வழி பரவும் நோயறி ஆய்வகம் உட்பட புதிய கட்டடங்கள் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக்

கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.7.14 கோடி மதிப்பீட்டிலான மாணவர் மற்றும் மாணவியருக்கான கூடுதல் விடுதிக் கட்டிடங்கள் திறந்து வைத்தார்.

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.4.15 கோடி செலவில் ஊரக கால்நடை பண்ணையாளர்களின் மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள நவீன சிகிச்சை வசதிகளுடன் கூடிய மண்டல கால்நடை சிறப்பு மருத்துவமனை திறந்து வைத்தார்.
- சென்னை, மாதவரத்தில் தேசிய கால்நடை இயக்ககத்தின் கீழ் ரூ.2 கோடி மதிப்பீட்டிலான கால்நடை இறைச்சி உடலங்க பயன்பாட்டு ஆலை திறந்து வைத்தார்.

தொழில்நுட்பப் பரிமாற்றம்

- பல்கலைக்கழக அறிவியலறிஞர்களால் உருவாக்கப்பட்ட 'செயலிழக்கம் செய்யப்பட்ட செம்மைப் பன்றிக் காய்ச்சல் நச்சுயிரித் தடுப்பூசி, வீரியம் அழிக்கப்பட்ட செம்மைப் பன்றிக் காய்ச்சல் நச்சுயிரித் தடுப்பூசி மற்றும் செயலிழக்கம் செய்யப்பட்ட பன்றி சிர்கோ நச்சுயிரி-2 தடுப்பூசி, 'வீரோசெல்களில் பதனிட்ட மாட்டினத் தோல் கழலை நோய்திரிபு உருவாக்கம்' ஆகியவை மூன்று நச்சுயிரித் தடுப்பூசிகள் தயாரிக்க தொழில்நுட்பங்களை தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்வதற்கென பயோவெட் தனியார் நிறுவனத்துடன் தொழில் நுட்பப்பரிமாற்றம் செய்யும்பொருட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- தடுப்பூசி தயாரிப்பிற்கான தெய்லீரியா அனுலேட்டா ஓரணு உயிரி ஹெஸ்டர் பயோசயின்சஸ் தனியார் நிறுவனம், அகமதாபாத் மற்றும் மடிக்காப்பான், தானு செக் எஸ்சிசி சாதனம், நானோ மெதிகோன், ப்ரோசிங்க் என்சி மற்றும் என்எப்ஃ ஆகியவை ஜெஷ்ரான் பயோடெக் சொல்யூஷன்ஸ் தனியார் நிறுவனம், சென்னை நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம்

- கறவை மேலாண்மை நடைமுறைகளில் போதிய திறனை கறவைமாடு வளர்ப்போரிடையே ஊக்குவிக்கும் நோக்குடன் பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு திட்டங்களை செயல்படுத்திட இப்பல்கலைக்கழகம் திருமலாபால் பொருட்கள் தனியார் நிறுவனம், சென்னை மற்றும் அசிஸ்ட் டெவெலப்மெண்ட் சொல்யூஷன்ஸ், சென்னை நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- உயிரித் தொழில்நுட்பத் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் முனைப்புடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (டிட்கோ) டைசெல் பயோபார்க் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் ஒக்லஹாமா மாகாணப் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் செயல் பாட்டில் உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் ஐந்தாண்டுகளுக்கு புதுப்பிப்பு.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும், திருவனந்தபுரத்தில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் மத்திய கிழங்கு வகைப் பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்தின் வேளாண் வணிகத் துவக்கநிலை நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் 19.10.2022 அன்று கையெழுத்திடப்பட்டது. விழுப்புரம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களின் மரவள்ளிக்கிழங்கு தொழில் பகுதிகளில் இக்கூட்டிணைவின் மூலம் துவக்கநிலைத் தொழில் மையங்கள் உருவாக வழிவகை செய்யப்படும்.
- கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இப்பல்கலைக்கழகம் ஆறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் யுனிவெர்சிடாஸ் பிரவிஜெயா, இந்தோனேசியாவிற்கும்

இடையில் ஐந்தாண்டுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம்.

- கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இப்பல்கலைக்கழகம் மேலும் பத்து நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

காப்புரிமை

கீழ்க்குறிப்பிட்டுள்ள எட்டு தொழில்நுட்பங்களுக்கு காப்புரிமைகள் பெறப்பட்டுள்ளன.

- கோழித் தோல் கொழுப்பிலிருந்து பெறப்பட்ட எண்ணெயில் இருந்து உயிரிடீசல் உற்பத்தி.
- பறவையினங்களைத் தாக்கும் புற்றுநோய் நச்சுயிரிகளைக் கண்டறிய பன்முனை பிசிஆர் பிரைமர்கள்.
- ஆந்த்ராக்ஸ் நச்சுயிரித் தடுப்பூசியின் ஊநீர்ப் பகுப்பாய்வு செய்வதற்கான அகார் ஜெல் இம்யூனோடிப்யூசன் சோதனை சாதனம்.
- மாண்டனைடு உறிஞ்சப்பட்ட ஆந்த்ராக்ஸ் ஸ்போர் தடுப்பூசியை தயாரிப்பதற்கான ஒரு செயல்முறை.
- முட்டைகளின் இருப்புத் திறனை அதிகரிக்க முட்டைத்தட்டுகளில் பூசுவதற்கான கலவை தயாரிக்கும் முறை.
- வெள்ளைக்கழிச்சல் நோயை உண்டாக்கும் குறிப்பிட்ட மரபணுவிற்கு எதிரான ஓரணு ஊடகத் தடுப்பூசி.
- சியாவிதைகளில் இருந்து பெறப்பட்ட ஒமேகா-3 கொழுப்பு அமிலத்துடன் செறிவூட்டப்பட்ட ஊட்டச்சத்து சாக்லேட்.
- முலாம்பழம் கொண்டு செறிவூட்டப்பட்ட, குறைந்த கலோரி மற்றும் கொழுப்புடைய தினை சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஐஸ்கிரீம்.
- கறவை மாடுகளில் அசைபூண் இரைப்பை நொதித்தல் மற்றும் மீத்தேன் உமிழ்வைத் தணிப்பதற்கான கலவை.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

கடல் மீன்வளம்

- டவ்தே புயல் காரணமாக கடலில் காணாமல் போன 21 மீனவ குடும்பங்களுக்கு தலா ரூ.20 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.4.20 கோடி வழங்கிட ஆணை.
- புரெவி புயல் காரணமாக சேதமடைந்த கடலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த 29 மீன்பிடி படகுகள் மற்றும் 159 உட்பொருத்தும்/ வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு நிவாரணத்தொகையாக ரூ.18.361 இலட்சம் வழங்கிட அரசாணை.
- மீன்பிடி தடைக்காலத்தில் 3,37,178 மீனவ குடும்பங்களுக்கு தலா ரூ.5,000 வீதம் மொத்தம் ரூ.168.58 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
- 2021-2022ஆம் ஆண்டில் 1,86,128 மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரணத் தொகை வழங்கிட ரூ.111.67 கோடி அரால் ஒப்பளிக்கப்பட்டு, கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,85,560 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.111.33 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2022-2023ஆம் ஆண்டில் 1,73,962 மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரணத் தொகையாக வழங்கிட ரூ.104.38 கோடி அரசால் ஒப்பளிக்ப்பட்டு, 11 டலோர மாவட்டங்களை சேர்ந்த 1,25,645 மீனவ குடும்பங்களுக்கு ரூ.75.39 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
- தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தினை மாநில அரசு திட்டமாக செயல்படுத்திட ஒப்புதல் வழங்கப்பட்டு, அரசின் பங்களிப்பு தொகையாக ரூ.63.26 கோடி 11 கடலோர மாவட்டங்களை சேர்ந்த 1,46,666 மீனவர்களுக்கு ரூ.44.06 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் அரசின் பங்களிப்பு தொகையாக ரூ.126.16 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு 11 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 3,52,075 மீனவ மகளிருக்கு ரூ.105.46 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
- பாரம்பரிய மீன்பிடிக்கலன்களை இயந்திரமாக்கும் திட்டத்தின் கீழ் ரூ.24 கோடி திட்ட மதிப்பீட்டில் நாட்டுப்படகு மீனவர்களுக்கு 2,000 உள்/வெளிபொருத்தும்



இயந்திரங்கள் ரூ.9.60 கோடி வழங்கிட அரசு ஆணை.

- நாட்டுப்படகிற்கு மாற்றாக 10 மீட்டர் மொத்த நீளம் கொண்ட கண்ணாடி நாரிழைப்படகு, இயந்திரம், மீன்பிடி வலைகள் மற்றும் பிடிக்கப்படும் மீன்களை சுகாதாரமான முறையில் பாதுகாத்திட ஐஸ் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.15 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.6.50 கோடி மானியத்தில் 300 அலகுகள் வழங்கிட ஒப்புதல்.

- தமிழகத்தில் உள்ள முக்கிய மீன்பிடித்துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்களில் மின்னணு இயந்திரம் மூலம் "QR" கோடு அடிப்படையிலான மீன்பிடி அனுமதி சீட்டுகள் வழங்கும் கருவிகள் ரூ.30 இலட்சம் செலவில் கொள்முதல் செய்திட ஒப்புதல்.

- பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.75 கோடி திட்ட மதிப்பீட்டில் 40 விழுக்காடு மானியத்தில் 500 விசைப்படகுகளில் AIS B டிரான்ஸ்பாண்டர்கள் கருவிகள் பொருத்திட ஒப்புதல்.

- பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.60கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.28.80 கோடி மானியத்தில் 50 ஆழ்கடல் மீன்பிடி படகுகள் கட்டி வழங்கிட ஒப்புதல்.

- பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கடலோர மாவட்டங்களான இராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மீனவ மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மிதவைகள் மற்றும் கயிறு மூலம் கடற்பாசி வளர்த்தல் திட்டத்தினை செயல்படுத்திட அரசால் ரூ.1.42 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ.28.49 இலட்சம் முதல் தவணை மானியத் தொகையாக 1,311 மீனவ மகளிருக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

- பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கடலோர மாவட்டங்களான இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மிதவைக் கூண்டுகளில் கடல் மீன் வளர்ப்பு திட்டத்தினை செயல்படுத்திட அரசால் ரூ.23 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ரூ.11.43 இலட்சம் முதல் தவணை மானியத் தொகையாக 36 மீனவர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

- பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் குளிர் காப்பிடப்பட்ட வாகனங்கள் வாங்கிட ரூ.1.60 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு, 20 பயனாளிகளுக்கு முதல் கட்ட தவணைத் தொகையாக ரூ.80 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

- தமிழக மீனவ இளைஞர்கள் குடிமைப் பணிகளில் சேருவதற்காக அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையத்தில் 6 மாத

கால சிறப்பு பயிற்சி வழங்கும் திட்டத்தின்கீழ், 19 மாணவர்களுக்கு ரூ.1.60 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- கடல்சார் கல்வி பயிலும் 51 மீனவ இளைஞர்களுக்கு ரூ. 13.75 இலட்சம் கல்வி உதவித்தொகையாக அரசால் விடுவிப்பு.
- மீன்பிடிக் குறைவுக் காலத்திற்கான சிறப்பு நிவாரணத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 29,203 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.17.52 கோடி சிறப்பு நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
- மாநில அரசின் தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 28,048 மீனவப் பயனாளிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.8.41 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் பங்களிப்புடன் கூடிய தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், 2015-2016ஆம் ஆண்டு முதல் 2020-2021ஆம் ஆண்டு வரையிலான நிலுவையில் இருந்த ஒன்றிய அரசின் பங்குத் தொகை ரூ.159.72 கோடி பெறப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 30,847 மீனவப் பயனாளிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.9.25 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- பாரம்பரிய மீன்பிடிக்கலன்களை இயந்திரமாக்கும் திட்டத்தின் கீழ், 764 உட்பொருத்தும் /வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்கிட ரூ.1.22 கோடி 40 சதவீத மானியத் தொகையாக விடுவிப்பு.
- ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள கடலோர மாவட்டங்களான இராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை சார்ந்த 1311 மீனவ மகளிர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் வகையில் கடற்பாசி வளர்ப்பிற்கு தேவைப்படும் 6,390 மிதவைகள் (Seaweed rafts) மற்றும் 1,770 கடற்பாசி வளர்ப்பு கயிறுகள் (Seaweed Monolines) கொள்முதல் செய்திட இரண்டாம் கட்டமாக ரூ113.97 இலட்சம் மானியம் விடுவிப்பு.
- பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள கடலோர மாவட்டங்களின் உவர்நீர் நிலப்பரப்புகளில் 100 ஹெக்டேரில் புதிய இறால் / மீன் பண்ணைகள் அமைத்திட அரசால் ரூ.14 கோடி நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ், இறால் வளர்ப்பில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கவும், நீர் பயன்பாட்டைக் குறைக்கவும், 25 எண்ணம் உயிர் கூழ்ம திரள் குளங்களில் (Biofloc) இறால் வளர்க்கும் திட்டத்தினை செயல்படுத்திட அரசால் ரூ.4.50 கோடி நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள கடலோர மாவட்டங்களான திருவள்ளூர், செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை சார்ந்த மீனவர்களுக்கு 50 மிதவை கூண்டுகள் அமைத்து கடலில் மீன் வளர்ப்பு செய்திட அரசால் ரூ.2.50 கோடி நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மயிலாடுதுறை மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் "கடல் மீன் குஞ்சு" வளர்ப்பு நாற்றாங்கால்கள் (Marine Finfish Nursery) அமைத்திட அரசால் ரூ.30 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 1,000 மீனவ இளைஞர்களுக்கு கடற்கரை உயிர்காப்பாளர்

பயிற்சி (Beach Life Guard) மற்றும் கடலோர உயிர் காக்கும் பயிற்சி (Beach Life Support) ஆகிய திறன் மேம்பாட்டு பயிற்சிகள் ரூ.47.20 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

- தமிழக மீனவ இளைஞர்கள் குடிமைப் பணிகளில் சேருவதற்காக அகில இந்திய குடிமைப் பணி தேர்வு பயிற்சி மையத்தில் 6 மாத கால சிறப்பு பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் 26 மாணவர்களுக்கு ரூ.2.93 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- கடல்சார் கல்வி பயிலும் 37 மீனவ இளைஞர்களுக்கு ரூ.12.00 இலட்சம் கல்வி உதவித்தொகையாக அரசால் விடுவிப்பு செய்யப்பட்டுள்ளது.

உள்நாட்டு மீன்வளம்

- மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 10 அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களில் 133.4 கோடி இலட்சம் நுண்மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.
- மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 39 அரசு மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகளில் 1812.30 இலட்சம் மீன்விரலிகள் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன.
- மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் 6 நீர்த்தேக்கங்கள் மீன்பாசி குத்தகைக்கு விடப்படுள்ளது.
- தமிழ்நாடு ஆறுகளில் 40 இலட்சம் மீன்விரலிகள் இருப்பு செய்ய ரூ.1.20 கோடி ஒதுக்கீடு.

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம்

- தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், பண்ணைகுட்டைகளில் கூட்டு மீன் வளர்ப்பில் இந்திய பெருங்கெண்டை ரக மீன்களுடன் நன்னீர் இறால் வளர்ப்பு மேற்கொள்ள உள்ளீட்டு மானியம் வழங்கும் திட்டம் ரூ.25.25 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டது.

பண்ணைக்குட்டைகளில், நீர் சேமிப்பு

- திறனை அதிகரித்திட ஏதுவாக பாலித்தீன் உறையிடுதல் மற்றும் மீன் வளர்த்திட ஆகும் உள்ளீட்டு செலவின மானியம் வழங்கும் திட்டத்திற்கென ரூ.75.75 இலட்சம் விடுவிப்பு.
- பண்ணை குட்டைகளில் விரால் மீன்வளர்ப்பு மேற்கொள்ள உள்ளீட்டு செலவின மானியம் வழங்கும் திட்டத்திற்கென ரூ.30.30 இலட்சம் செலவில் திட்டம் நிறைவேற்றம்.
- ரூ.4.50 கோடி செலவில் கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூர் அரசு மீன்பண்ணையில் மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் அமைக்க ஒப்புதல்.
- ரூ.70 இலட்சம் செலவில் சேலம் மாவட்டம் ஆனைமடுவு அரசு மீன்பண்ணையினை மேம்படுத்தும் பணிகள்.
- கன்னியாகுமரி மாவட்டம் சிற்றாறு-II அரசு மீன்பண்ணை ரூ.32 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது.
- கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அரசு மீன்பண்ணை ரூ.20 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது .

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம்

- தமிழ்நாட்டில் 2 தனியார் நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் அமைக்க ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு.
- புதியதாக மீன்குஞ்சு வளர்ப்பு குளங்கள் 100 ஹெக்டேர் பரப்பளவில் அமைத்திட ஆர்வமுள்ளோருக்கு மானியம் வழங்கிடும் திட்டம் அரசால் ரூ.5.06 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- புதியதாக தனியார் மீன்வளர்ப்பு குளங்கள் 100 ஹெக்டேர் பரப்பளவில் அமைத்திட மற்றும் உள்ளீட்டு மானிய தொகை வழங்கிட ரூ.5.06 கோடி செலவில் திட்டம்.
- உயிர்கூழ்ம (பயோபிளாக்) குளங்கள் வாயிலாக மீன்வளர்ப்பு மேற்கொள்ள மற்றும் உள்ளீட்டு மானிய தொகை வழங்கிட ரூ.1.32 கோடி செலவில் மொத்தம் 25 அலகுகள் அமைக்கப்பட்டு நடவடிக்கை.
- நீரினை மறுசுழற்சி முறையில் (RAS) சிறிய அளவிலான தொட்டிகள் அமைத்து நன்னீர் மீன்வளர்ப்பு செய்தல் திட்டத்தின்கீழ் மானிய உதவிகள் வழங்கிட ரூ.69 இலட்சம்

அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு மொத்தம் 20 அலகுகள் அமைக்கும் பணிகள்.

- தென்காசி மாவட்டம் இராமநதி மற்றும் கடலூர் மாவட்டம் லால்பேட்டையில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் "சினை மீன் வங்கி" அமைப்பதற்கு ஒப்புதல்.
- ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன்வள மேம்பாட்டு திட்டத்தினை 5 நீர்த்தேக்கங்களில் செயல்படுத்திட அரசால் ரூ.11.08 கோடி ஒதுக்கீடு.
- ஆறுகளில் 40 இலட்சம் நாட்டின மீன் குஞ்சு விரலிகளை இருப்பு செய்தவதற்கு ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் பணிகள்.
- மாநிலத்தில் 550 அலகுகள் பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பினை ஊக்குவித்திட உள்ளீட்டு மானியமாக வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ.1 கோடி செலவில் திட்டம்.
- பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அலங்கார மீன்வளர்ப்பினை ஊக்குவிக்க அரசால் ரூ.74.80 இலட்சம் ஒப்புதல்.
- மாநிலத்தில் அலங்கார மீன் வர்த்தகத்தை அதிகரித்திடும் நோக்கில், கொளத்தூரில் ரூ.50 கோடி செலவில் அலங்கார மீன் வர்த்தக மையம் அமைக்கும் பணிகள்.

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்

- உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், ரூ.5.31 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்கள்.
- மீன்வள திட்டங்களை செயல்படுத்திட ரூ.6.43 கோடி செலவில் பணிகள்.

உட்கட்டமைப்பு வசதிகள்

- தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி கடன் மூலம் (NABARD) ரூ.411 கோடிக்கு 7 கடற்கரை மாவட்டங்களில் 33 இடங்களில் மீன்பிடி இறங்கு தளங்கள், நேர்கல் சுவர் அமைத்தல், கடலரிப்பை தடுக்க தடுப்பு சுவர்கள் அமைக்கும் பணிகள்.
- 7 கடற்கரை மாவட்டங்களில் 11 இடங்களில் மீன்பிடி இறங்கு தளங்கள், நேர் கல்சுவர் அமைத்தல், கடலரிப்பை தடுக்க தடுப்புசுவர்கள் அமைத்தல் பணிகளுக்கு, தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி கடன் மூலம் (NABARD) ரூ.331.96 கோடிக்கு பணிகள்.
- தூத்துக்குடி மீன்பிடி துறைமுப் பகுதியை ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் தூர்வாரி, ஆழப்படுத்தி சீரமைக்கும் பணிகள்.
- ரூ.30 இலட்சம் செலவில், பூம்புகார் மீன்பிடி துறைமுகத்தின் முகத்துவாரத்தில் மீன்பிடித்தொழிலுக்கு சென்று திரும்பும் படகுகளை கண்காணித்திட "சக்திவாய்ந்த இழுவை இயந்திரம்" (Power winch) அமைக்கும் பணிகள்.
- தமிழ்நாட்டில் 6 இடங்களில் மீன்பிடி துறைமுகங்களை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க மாநில நிதி வாயிலாக ரூ.6 கோடி செலவில் பணிகள்.
- சாமந்தான்பேட்டையில் மீன்பிடி துறைமுகம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க மாநில நிதி மூலம் ரூ.15 இலட்சம் செலவில் பணிகள்.
- மல்லிபட்டினம் மீன்பிடித் துறைமுகம் நவீனமயமாக்குதல் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூர் மீன்பிடித் துறைமுகம் விரிவாக்கம் செய்தல் ஆகிய பணிகளுக்கு தேவையான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க மாநில நிதி வாயிலாக ரூ.1 கோடி மேற்கொள்ள நடவடிக்கை.
- சந்திரபாடிகிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க மீன்வள நீர்வாழ் உயிரின உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மூலம் ரூ.10 கோடி ஒதுக்கீடு.
- தேங்காபட்டினம் மீன்பிடி துறைமுகம் அலை தடுப்புச் சுவர் நீட்டிப்பு பணிக்கு மீன்வள நீர்வாழ் உயிரின உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மூலம் ரூ.116 கோடி ஒதுக்கீடு.
- பழையார் மீன்பிடி துறைமுகம் மேம்பாட்டுப் பணிக்காக பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டம் மூலம் ரூ.26.26 கோடி ஒதுக்கீடு.
- லால்பேட்டை மற்றும் ராமநதியில் அரசு மீன் விதைப் பண்ணையில் சினை மீன் வங்கி



அமைக்கவும், மீன் இறங்குதளம் மற்றும் மீன் விற்பனை அங்காடி அமைக்கவும் மேலும் தமிழ்நாட்டிலுள்ள 5 நீர்த்தேக்கங்களில் (சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணை, திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணை, கடலூர் மாவட்டம் வீராணம் அணை மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் சித்தார் அணை) மிதவைக் கூண்டுகள் அமைத்து மீன் விரலிகள் வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பு பணிக்கு பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டம் மூலம் ரூ.17.10 கோடி செலவில் பல்வேறு பணிகள்.

- தமிழ்நாட்டில் 6 திட்டங்களுக்கு மீன் பண்ணை கட்டுமானம், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்கும் பணிக்கு, ரூ.60.20 கோடி நிதி ஒப்புதல்.
- தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அணையில் பயிற்சி மையத்துடன் கூடிய ஒருங்கிணைத்த அலுவலக கட்டடம் கட்டும் பணிக்கு ரூ.8 கோடிக்கு நிருவாக ஒப்புதல்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் வண்ணமீன் காட்சியகம் மற்றும் வண்ணமீன் சில்லரை விற்பனையகம் நிறுவும் பணிக்கு ரூ.5 கோடிக்கு நிருவாக ஒப்புதல்.
- நீலகிரி மாவட்டம் அவலாஞ்சியில் உள்ள அரசு ட்ரவுட் மீன்பண்ணை நவீனமயமாக்கும் பணிக்கு ரூ.2.50 கோடிக்கு நிருவாக ஒப்புதல்.
- இராமநாதபுரம் மாவட்டம் குந்துக்கலில் மீன் இறங்குதளம் பணிக்கு மத்திய மாநில பங்களிப்பு திட்டம் மூலம் ரூ.4 கோடி ஒதுக்கீடு.
- நாட்டின மீன்களைப் பாதுகாத்து பெருக்கிட மீன்குஞ்சு பொரிப்பகங்கள்கள் அமைக்க மாநில நிதி மூலம் ரூ.4.40 கோடி ஒப்புதல்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்

- கொரோனா நோய் தொற்று காரணமாக முழு ஊரடங்கு காலத்திலும் மீன்விற்பனை பிரிவிலிருந்து இணையதளம் மற்றும் கைபேசி செயலி வாயிலாகவும், பொது மக்களின் இல்லங்களுக்கே சென்று 35,458 கேட்புகளை ஏற்று, 53,488.50 கிலோ மீன்கள் ரூ.2.91 கோடிக்கு விற்பனை.
- நவீன மீன்விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் விற்பனையகங்கள் வாயிலாக ரூ.9.28 கோடிக்கு 299.81 டன் மீன்கள் விற்பனை.
- வரிவிலக்களிக்கப்பட்ட மற்றும் வரியுடன் கூடிய 43,474 கிலோ லிட்டர் உயர்வேக

டீசல் எரியெண்ணெய் கடல் மீனவர்களுக்கு வழங்கல்.

- வணிக ரீதியிலான மண்ணெண்ணெய் மானிய விலையில் 3,492 கடல் மீனவ பயனாளிகளுக்கு 6,813 கிலோ லிட்டர் விநியோகம்.
- நீர்தேக்கம் மூலம் 1381.21 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் வாயிலாக ரூ.8.76 கோடிக்கு விற்பனை.
- தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம், சென்னை மீன்விற்பனை பிரிவிலிருந்து இணையதளம் மற்றும் கைபேசி செயலி வாயிலாக 3,187 கேட்புகளை ஏற்று 4647.50 கிலோ மீன்கள் ரூ.27.40 இலட்சத்திற்கு விற்பனை.
- நவீன மீன்விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் விற்பனையகங்கள் வாயிலாக 173.13 டன் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு ரூ.528.23 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
- வரிவிலக்களிக்கப்பட்ட 30,696 கிலோ லிட்டர் உயர்வேக டீசல் எரியெண்ணெய் கடல் மீனவர்களுக்கு விநியோகம்.
- மானிய விலையில் 3,501 கடல் மீனவ பயனாளிகளுக்கு 3,691 கிலோ லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் விநியோகம்.
- நீர்தேக்கம் வாயிலாக 591.05 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.6.22 கோடி தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் வாயிலாக வருவாய் ஈட்டப்பட்டது.
- தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த மண்ணெண்ணெயில் இயங்கும் வெளிப்பொருத்தும் இயந்திரம் கொண்ட நாட்டுப் படகுகளுக்கு மானியத்துடன் கூடிய தொழிலக மண்ணெண்ணெயினை ரூ.51.57 கோடிக்கு 14 விற்பனை மையங்கள் வாயிலாக 10,961 கிலோ லிட்டர் விநியோகம்.
- ரூ.305.28 கோடிக்கு தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தால் நிறுவப்பட்டுள்ள 18 டீசல் விற்பனை நிலையங்கள் வாயிலாக 2021-2022ஆம் ஆண்டில், 39,321 கிலோ லிட்டர் விற்பனை வரிவிலக்களிக்கப்பட்ட டீசல், இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகு மற்றும் விசைப்படகுகளுக்கு விநியோகம்.
- 40 சதவீத மானியத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ், உலர் மீன் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தும் 100 மீனவ மகளிர் குழுக்களுக்கு தேவையான அன்னக்கூடை, எடைபோடும் கருவி, குடை மற்றும் தென்னை பாய் ஆகிய உபகரணங்கள்.
- கடற்பாசி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள 51 மீனவ மகளிர் குழுக்களுக்கு குறைந்தபட்ச வட்டிவிகிதத்தில் ரூ.38.25 இலட்சம் நுண்கடன்.
- மீன்களை சுகாதாரமான முறையில் கையாள்வதற்கு, ரூ.8.80 கோடி செலவில், 5 மாவட்டங்களில் பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள், குளிர்பதன கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளது.
- மீன் விற்பனை செய்ய குளிர்சாதன பெட்டி வசதியுடன் கூடிய 225 இரு சக்கர வாகனங்கள், 6 மீன் கியாஸ்க், 50 மூன்று சக்கர மீன்விற்பனை வாகனம் மற்றும் மீன்விற்பனை நிலையங்கள் அமைத்திட ரூ. 1.60 கோடி மானியம் ஒதுக்கீடு.
- தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த மண்ணெண்ணெயில் இயங்கும் வெளிப்பொருத்தும் இயந்திரம் கொண்ட பதிவு பெற்ற நாட்டுப் படகுகளுக்கு மானியத்துடன் கூடிய தொழிலக மண்ணெண்ணெயினை ரூ.11.97 கோடிக்கு 14 விற்பனை மையங்கள் வாயிலாக 1983 கிலோ லிட்டர் விநியோகம்.
- தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தால் (TAFCOFED) நிறுவப்பட்டுள்ள 17 டீசல் விற்பனை நிலையங்கள் வாயிலாக ரூ.48.78 இலட்சத்திற்கு 6195 கிலோ லிட்டர் விற்பனை வரிவிலக்களிக்கப்பட்ட டீசல், இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகு மற்றும் விசைப்படகுகளுக்கு விநியோகம்.

தமிழ்நாடு மீனவர் நலவாரியம்

- ரூ.8.90 கோடி மதிப்பில், தமிழ்நாடு மீனவர் நலவாரியம் வாயிலாக 6,270 மீனவர் நலவாரிய உறுப்பினர்களுக்கு நிவாரணம்.
- தமிழ்நாடு மீனவர் நலவாரியம் வாயிலாக ரூ.2 கோடி செலவினத்தில் 1,882 மீனவர் நலவாரிய உறுப்பினர்களுக்கு நிவாரணம் / உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம்.

- செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காட்டில் ரூ.7.31 கோடியில் மீன்வளர்ப்பு தொழில்நுட்ப தொழில்சார் கல்வி நிலையக் கட்டடம் திறப்பு மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஜீயபுரத்தில் ரூ.2.50 கோடியில் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையக் கட்டடம் திறப்பு.
- நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறில் ரூ.4.20 கோடியில் பணியாளர் குடியிருப்புகளையும் மற்றும் நாகப்பட்டினத்தில் உள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.9 கோடியில் மீன்வள பொறியியல் கல்லூரியின் முதல் தளம் திறப்பு.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இப்பல்கலைக்கழகத்தில் மாநில நிதியுதவி ரூ.15 கோடியில் கட்டப்பட்ட இணை தொழில்சார் மீன்வளத் தொழில்நுட்ப நிலையக் கட்டடம், மாதவரம், சென்னை நபார்டு நிதியுதவி ரூ.639.71 இலட்சத்தில் கட்டப்பட்ட தலைஞாயிறு, டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவ – மாணவியர் விடுதி முதல் மற்றும் இரண்டாம் தளம் கூடுதல் கட்டடங்கள், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்ட நிதியுதவி ரூ.11.70 கோடியில் கட்டப்பட்ட இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மைய அலுவலகம் மற்றும் ஆய்வகம், மாநில நிதியுதவி ரூ.16 கோடியில் தூத்துக்குடியில், வடிவமைக்கப்பட்ட ஆழ்கடல் செவுள் வலை மற்றும் ஆயிரங்கால் தூண்டில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி விசைப்படகு மற்றும் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்ட நிதியுதவி ரூ.1 கோடியில் இலட்சத்தில் துத்துக்குடி, மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் கட்டப்பட்ட பயிற்சிக் கூடத்துடன் கூடிய ஆய்வகம் ஆகியவற்றை 09.03.2023 அன்று திறந்து வைத்தார்.
- மாணவர் சேர்க்கையில் அரசு சிறப்பு இட ஒதுக்கீடு 2022-2023ஆம் கல்வியாண்டில், பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்து இளநிலை பட்டப் படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களின் 7.5 சதவிகிதம் இடஒதுக்கீட்டின் மூலம் 17 மாணவர்களும், மீனவர் சமுதாய மாணவர்களுக்கான 20 சதவிகிதம் இடஒதுக்கீட்டின் மூலம் பி.எஃப்.எஸ்ஸி. மற்றும் பி.டெக். மீன்வளப் பொறியியல் பிரிவில் 25 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

உருவாக்கப்பட்ட புதிய தொழில்நுட்பங்கள்

- தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தால், நன்னீரில் ஆசிய கொடுவா மீன்குஞ்சுகள் நாற்றங்கால் வளர்ப்பு, சூரிய அகச்சிவப்பு கலப்பின மீன் உலர்த்தி, உறையிடப்பட்ட மத்தி மீன் சிதைவை நிகழ்நேரத்தில் கண்காணிக்க உதவும் இயற்கை நிறமியைக் கொண்ட நிறம் மாறும் உணரி, நண்டு மற்றும் இறால் ஓட்டில் இருந்து சுற்றுச்சூழலுக்கு உகந்த அழுத்த மின் நானோ உற்பத்தி ஆற்றல் எடுக்கும் இயந்திரம், பொன் மீன் உணவு, பங்காஸியஸ், இந்திய பெருங்கெண்டைகள் மற்றும் திலேப்பியா மீன்களுக்கான உணவு, பிளவர் ஹார்ன் உணவு,
- பீலிக் கணவாய் மற்றும் சிறு தானியங்கள் சேர்க்கப்பட்ட சிற்றுண்டி, சூரிய ஆற்றலில் இயங்கும் தேவைக்கிணங்கிய மீன் உணவளிக்கும் இயந்திரம், ஓமிக் ஹீட்டர் கருவி, திரவ புகை உருவாக்கும் அமைப்பு, பகுதி தானியங்கி உலர் மீன் வெட்டும் இயந்திரம், களத்திலேயே பண்ணை குட்டை நீரின் கார-அமிலத்தன்மை நிக்கல் கண்டறிய உதவும் கையடக்க கருவி, மீன் நோயறி செயலி என 14 புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்கம்.

இதர வணிகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள்

- இருவகையான பன்னடுக்குப் பைகளில் வெப்பப்பதனம் செய்யப்பட்ட மீன்

குழம்பினை தூத்துக்குடியிலுள்ள பிரிட்டோ கடலுணவு ஏற்றுமதி நிறுவனத்திற்கு ரூ.50 ஆயிரம் வணிகப்படுத்தப்பட்டது. மேலும் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த வான்டேஜ் நியூட்ரிமென்ட்ஸ் என்ற நிறுவனத்திற்கு ஐந்து வகையான மணங்களுடன், உலர்த்தப்பட்ட, இறால் ரூ.1 இலட்சத்திற்கும் வணிகமயமாக்கப்பட்டது

கல்வி

- 2021-2022ஆம் கல்வியாண்டில் மொத்தமாக 373 மாணவர்கள் இளநிலை பட்டப்படிப்பிலும், 44 மாணவர்கள் முதுகலை பட்டப்படிப்பிலும் மற்றும் 29 மாணவர்கள் முனைவர் பட்டப்படிப்பு பயின்று வருகின்றனர்.
- 2021-2022ஆம் கல்வியாண்டில், 15% கூடுதல் மீன்வர் ஒதுக்கீட்டின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 18 மற்றும் 7.5% அரசு பள்ளி மாணவர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 19.

ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள்

- ஆறு தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டங்களுக்கு மொத்தம் ரூ.8.82 கோடி மற்றும் நபார்டு நிதியுதவி மூலம் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.26.09 கோடி அனுமதி.

மாணவர்கள் சாதனை

- தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக மாணவர்கள் புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய 2021 ஆம் ஆண்டிற்கான அகில இந்திய நுழைவுத்தேர்வில் முதுநிலை மாணவர் சேர்க்கைக்கான தர வரிசையில் ஒரு மாணவர் ஐந்தாம் இடத்தையும், 28 மாணவர்கள் முதல் 100 இடங்களுக்குள்ளும், 10 மாணவர்கள் முதல் 25 இடங்களுக்குள்ளும் தேர்வாகியுள்ளனர்.
- புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய 2022ஆம் ஆண்டிற்கான அகில இந்திய நுழைவுத்தேர்வில் 33 மாணவர்கள் தேர்வாகி முதுநிலை மாணவர் சேர்க்கைக்கான தர வரிசைப் பட்டியலில் இடம்பெற்று, பிற மாநிலங்களில் மத்திய மற்றும் மாநில வேளாண்மை பல்கலைக்கழகங்களில் முதுநிலை மற்றும் பி.எச்.டி., படிப்புகளில் சேர்க்கை.

மீனவர்களுக்கான சேவைகள்

- தூத்துக்குடி, தூத்தூரில் ரூ.3.82 கோடியில் இரண்டு மீன்வளத்தொழில் காப்பகம் மற்றும் தொழில்சார் பயிற்சி மையங்கள் துவங்கப்பட்டு, 4 உள்வளாகப் பயிற்சிகள் நடத்தப்பட்டு, 120 மீனவர்கள் பயன். ஆழ்கடலில் மீன்பிடித்தல் தொழில்நுட்ப அம்சங்கள் குறித்த பயிற்சி நடத்தப்பட்டு 32 மீனவர்கள் பயன்.

இந்திய மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு கருத்தரங்கம்

- தமிழ்நாடு டாக்டர்.ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம் மற்றும் ஆசிய மீன்வள சங்கம் (இந்தியக் கிளை) இணைந்து 12வது மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பு கருத்தரங்கம், சென்னையில் 05.05.2022 அன்று நடத்தப்பட்டு, 741 பிரதிநிதிகள் பங்கேற்றனர். மேலும், கடைசி நாளில் பல்வேறு மாநிலங்களில் இருந்து 200 மீன் பண்ணையாளர்கள் பங்கேற்ற "மீன் விவசாயிகள் சந்திப்பு" நடைபெற்றது.

மாநில அரசின் புதுமைப் பெண் திட்டம்

- தமிழ்நாடு அரசின் புதுமைப் பெண்கள் திட்டத்தின் கீழ் "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டத்தின்" மூலம் 2022ஆம் கல்வியாண்டில் இப்பல்கலைக்கழகத்தில் 09 இளநிலை பட்டப் படிப்புகளில் பயின்றுவரும் 570 மாணவிகளில் 31 மாணவிகள் கல்வி உதவித்தொகைப் பெற்று பயன்.

மாநில அரசின் நான் முதல்வன் திட்டம்

❖ தமிழக அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் "கல்லூரி கனவுகள்" என்ற தலைப்பில் மாணவர்களுக்கு மீன்வளக் கல்வி, அதன் முக்கியத்துவம் மற்றும் வேலை வாய்ப்பு விவரங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, சென்னையில் கண்காட்சி நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களின் கல்வி நிறுவனங்களில் மீன்வளக் கல்வி குறித்து இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள் விளக்கவுரை வழங்கினர். இதில் 10,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன்.

மாநில நிதியுதவியுடன் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள்

❖ 2022-2023ஆம் நிதியாண்டில், தேனி மாவட்டத்தில் அயிரை மீன் ஆராய்ச்சி மையம் நிறுவுதல் என்ற திட்டமானது தமிழக அரசு நிதியுதவியுடன் ரூ.268.20 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

கடற்பாசி சார்ந்த அழகு சாதனப் பொருட்கள் உருவாக்கும் மற்றும் சந்தைப்படுத்தல்

❖ தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்பட்டு வரும் "கடல் சார் உணவுப் பொருட்கள் வணிக மையம்" மீன் உணவுப் பொருட்கள் மற்றும் கடற்பாசி சார்ந்த அழகு சாதன பொருட்கள் உற்பத்தியில் 27 தொழில் முனைவோர்களை உருவாக்கியுள்ளது. மதுரையில் உள்ள ஹெர்பலிஸ் ஹெல்த் கேர் நிறுவனம் அழகு சாதன பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிறுவனமாகும். கடற்பாசியில் இருந்து தயாரிக்கப்பட்ட சாறு அல்லது பொடியைக் கொண்டு பல்வேறு விதமான அழகு சாதன பொருட்களான சோப்பு முகபொழிவு கிரீம், தலைமுடிமாஸ்க், முகப்பொழிவு ஜெல், கை கழுவும் சோப்பு போன்றவை தயாரிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு சந்தையில் விற்பனை.

காப்புரிமைகள்

❖ 2022-2023ஆம் ஆண்டில், பல்கலைக்கழகம் 16 வடிவமைப்பு காப்புரிமைகள் தாக்கல்.

மீனவர்களுக்கான பயிற்சிகள்

❖ மீனவர்களுக்கு கடலில் இயந்திரப் படகுகள் வழிசெலுத்துதல், பாதுகாப்பு, இயந்திரங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல், மேலும் கடல்சார் திறன் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கும் வகையில், தூத்துக்குடியில் 'ஆழ்கடல் மீன்பிடி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கப்பல்' வடிவமைக்கப்பட்டு இயங்கிக்கொண்டிருக்கிறது. 2022ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பயிற்சிகளின் மூலம் 150 மீனவர்கள் பயன்.

❖ ❖ ❖

மீனவர்கள் நலனில் பெரிதும் அக்கரைக்கொண்டு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் அரசு, மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும் இடர்களைக் களைய சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்





சென்னை, கொளத்தூர் ஏரியினை ஆழப்படுத்தி, கரைகளை மறுசீரமைத்து,
உபரி நீர் கால்வாயினை மேம்படுத்தும் பணிகளை தொடங்கி வைத்தல் - 13.08.2022



தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில்
அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிடல் - 08.12.2022



பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன், சீர்மரபினர் நலன், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்

மாண்புமிகு
பிற்படுத்தப்பட்டோர்
நலத்துறை அமைச்சர்
திரு. **ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்**
அவர்கள்

- 275 கல்லூரி விடுதிகளில் ரூ.274.52 இலட்சம் செலவில் "செம்மொழி நூலகங்கள்".
- பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல விடுதிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து 2 இலட்சமாக உயர்வு.
- 275 கல்லூரி விடுதிகளுக்கு ரூ.151.70 இலட்சம் செலவில் உடற்பயிற்சிக் கருவிகள் மற்றும் விளையாட்டு கருவிகள் வழங்க ஆணை.
- 275 கல்லூரி விடுதிகளில் மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி.
- 40 விடுதிகளுக்கு ரூ.10 இலட்சம் செலவில் போட்டித் தேர்வுகளுக்கான புத்தகம்.



- மாவட்ட அளவில் சிறந்த விடுதிகளுக்கு ரூ.7.80 இலட்சம் செலவில் பரிசுகள்.
- அரசு பள்ளிகளில் பயின்று 7.5 சதவீதம் இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்பில் சேர்ந்த 317 மாணவ, மாணவியருக்கு கல்வி கட்டணத்தொகையாக ரூ.11.51 கோடி மருத்துவ கல்வி இயக்ககத்திற்கு ஈடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ரூ.26.28 கோடி செலவில் 755 மாணவ,மாணவியர் பயன்.
- விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர் / காப்பாளினிகளுக்கு ரூ.49.55 இலட்சம் செலவில் புத்தாக்கப் பயிற்சி.
- 20 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு ரூ.23.60 இலட்சம் செலவில் முக அங்கீகார அடிப்படையில் பயோ-மெட்ரிக் கருவிகள்.
- 146 விடுதிகளில் ரூ.13 கோடி செலவில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள்.
- 7 மாணவியர் விடுதிகளுக்கு ரூ.1.68 கோடி செலவில் சுற்றுச்சுவர் கட்டும் பணி.
- விடுதி மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர பல்வகை செலவினத் தொகை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயாகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 150 ரூபாயாகவும் உயர்வு.
- 2 பள்ளி விடுதிகள் ரூ.14.44 இலட்சம் செலவில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்வு.
- 2 விடுதிகளுக்கு ரூ.6.61 கோடி செலவில் சொந்த கட்டடம்.
- ரூ.3.80 இலட்சம் செலவில், "கலைத்திருவிழா" என்ற பெயரில் விடுதி மாணவ,மாணவியருக்கு கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்ற போட்டிகள்.
- கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.2.50 இலட்சமாக உயர்வு. ரூ.196.72 கோடி செலவில் 7,14,516 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை.
- ரூ.9 கோடி கூடுதல் செலவில் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மாதாந்திர உண்டி மற்றும் உறையுள் கட்டணம் ரூ. 400 ரூபாயாக உயர்வு.
- 234 கள்ளர் பள்ளி கட்டடங்களில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்கு கழிப்பறை வசதிகள் ரூ.468 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டன.
- 104 கள்ளர் பள்ளி கட்டடங்களில் ரூ.7 கோடி செலவில் பழுது மற்றும் பராமரிப்புப் பணிகள்.
- 15 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 9ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள்.
- 225 கள்ளர் பள்ளிகளில் முதலாம் வகுப்பில் ஆங்கில வழியிலான வகுப்புகள் தொடக்கம்.
- கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி அளிக்க நடவடிக்கை.
- கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவியருக்கு, ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்திற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.1,00,000 ஆக உயர்வு.
- 11ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினை சார்ந்த 4,35,624 மாணவ, மாணவியருக்கு ரூ.221.25 கோடி செலவில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.
- தையல் இயந்திரங்கள், சலவைப்பெட்டிகள் மற்றும் வீட்டுமனைப் பட்டாக்கள் ஆகிய உதவிகளைப் பெற பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.1 இலட்சமாக உயர்வு.
- ஆண்டுதோறும் வழங்கப்படும் பித்தளை சலவைப் பெட்டிகளின் எண்ணிக்கை, 3,000 ஆக உயர்த்தப்பட்டு 3,000 சலவைப் பெட்டிகள் ரூ.1.46 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.
- சீர்மரபினர், நரிக்குறவர், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை ஆண்களுக்கு ரூ.3,000 ஆகவும், பெண்களுக்கு ரூ.5,000 ஆகவும் உயர்வு.
- ரூ.8 இலட்சம் செலவில் "இட ஒதுக்கீடு மற்றும் சமூக நீதி" குறித்து பல்வேறு தகவல்கள் கொண்ட புத்தகம் வெளியிடும் பணிகள்.



- தந்தைப் பெரியார் விருதுத் தொகை ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டு, ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ரூ.5 இலட்சம் விருதுத் தொகையும் திரு. க. திருநாவுக்கரசு அவர்களுக்கும், கவிஞர் கலி. பூங்குன்றன் அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 12,662 பயனாளிகளுக்கு ரூ.84.40 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.
- 275 கல்லூரி விடுதிகளில் ரூ.220 இலட்சம் செலவில் E-Library அமைப்பு.
- மாணவ, மாணவியர் குறைவாக உள்ள பள்ளி விடுதிகளை மறுசீரமைத்து, தேவைப்படும் இடங்களில் 15 கல்லூரி விடுதிகளை ரூ.148.05 இலட்சம் செலவில் துவக்கம்.
- பள்ளி மாணவியர் விடுதிகளில் காலியாக உள்ள 3224 இடங்களில் ரூ.48.36 இலட்சம் செலவில் கல்லூரி மாணவியர் தங்க ஆணையிடப்பட்டு, இதுவரை 430 கல்லூரி மாணவியர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
- வாடகை கட்டடத்தில் இயங்கிவரும் 2 விடுதிகளுக்கு ரூ.742.50 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்ட அனுமதி.
- மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் ரூ.117.90 இலட்சம் செலவில் 3 உண்டு உறைவிடப் பள்ளிகள் (Residential schools) 02.11.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டு, 160 மாணவர்கள் அனுமதி.
- மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 2 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ரூ.134.32 இலட்சம் செலவில் தரம் உயர்வு.
- 11ஆம் வகுப்பு பயிலும் கள்ளர் சீரமைப்பு பள்ளி 1,557 மாணவ, மாணவியர்யர்கள் மாநில அளவில் கல்வி சுற்றுலாவிற்கு ரூ.53.28 இலட்சம் செலவில் இராமநாதபுரம், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள வரலாற்று சிறப்புடைய மற்றும் கலாச்சார பாரம்பரியமிக்க இடங்களுக்கு அழைத்து செல்லப்பட்டனர்.
- விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் 3 முறை இலவச மருத்துவப் பரிசோதனை செய்வதற்கென வழங்கப்பட்டு வரும் இடைநிகழ்செலவினம் ரூ.1000லிருந்து ரூ.3000 ஆக ரூ.32.98 இலட்சம் செலவில் உயர்வு.
- சலவைத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றவர்களை 10 நபர்களை கொண்ட குழுவாக இணைத்து 25 நவீன முறை சலவையகங்கள் ரூ.75 இலட்சம் செலவில் ஏற்படுத்த ஆணையிடப்பட்டு, இதுவரை

ரூ.12 இலட்சம் செலவில் 4 நவீன முறை சலவையகங்கள் அமைக்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ தையல்தொழிலில்ஈடுபட்டுவருகின்றவர்களை 10 நபர்களை கொண்ட குழுவாக இணைத்து 25 ஆயத்த ஆடை அலகுகள் (Readymade Garments Units) ரூ.75இலட்சம் செலவில் அமைக்க ஆணையிடப்பட்டு, ரூ.75 இலட்சம் செலவில் 25 ஆயத்த ஆடை அலகுகள் அமைக்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் இதுவரை 15,151 பயனாளிகளுக்கு ரூ.99.62 கோடி மதிப்பீட்டில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

கதர் மற்றும் கிராமத் தொழில்வாரியம்

❖ ரூ.45.80 இலட்சம் செலவில் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே கண்டனூர் கிராமத்தில் உள்ள கதர் வளாகத்தினை புனரமைப்பு செய்து கதர் நூற்பு நிலையம், கதர் துணி உற்பத்தி அலகு, தோல் பொருட்கள் உற்பத்தி அலகு, தச்சுக் கருமாரப் பொருட்கள் உற்பத்தி அலகு. சோப்பலகு, பனை ஓலைப் பொருட்கள் அலகு, கால் மிதியடிகள் அலகு, கூடை முடைதல் அலகு மற்றும் எம்ப்ராய்டரி பொருட்கள் அலகு எனும் 9 அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ சிவகங்கை மாவட்டம் கண்டனூர் கதர் வளாகத்தில் 60 பெண்களுக்கு இராட்டைகள் வழங்கி நூற்பு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு.

❖ சென்னை குறளகம் கதரங்காடியில் அரங்குகளை ஒதுக்கீடு செய்து ரூ.10.65 இலட்சம் மதிப்பிலான கலைநயமிக்க மண்பாண்டங்கள் மற்றும் பிங்கான் பொருட்கள் விற்பனை.

❖ தேங்காய் எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்ட நூடுல்ஸ்களை பயன்படுத்தி "காதி ப்ராக்ரென்ஸ் எனும் பெயரில் ரோஸ், லேவண்டர், சந்தனம் மற்றும் செஞ் சந்தனம் எனும் 4 வகை நறுமணங்களில் புதியவகை குளியல் சோப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ கண்கவரும் கேபிள்களுடன் கூடிய புதிய வடிவிலான கண்ணாடி பாட்டில்களில் "காதித் தேன்" அறிமுகப்படுத்தப்பட்டு ரூ.1.86 கோடி மதிப்பிற்கு விற்பனை.

❖ காதி கிராமப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்திடும் பொருட்டு 5 தனிஉரிமைக் கிளைகளை நடத்துவதற்கான உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

❖ காதி கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களை விற்பனை செய்ய அனுபவம், அதிக சந்தைப் பரப்பினைக் கொண்டுள்ள 11 நிறுவனங்கள்/ தனி நபரிகனை மண்டல வாரியாக / மாவட்ட வாரியாக தேர்வு செய்து மொத்த விற்பனை முகவர்களுக்கான உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

❖ கதர் கிராமத் தொழில் வாரிய கட்டுப்பாட்டில் செயல்படும் 164 கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ1478.83 இலட்சத்திற்குக் கிராமப் பொருட்கள் உற்பத்தி செய்து ரூ.2084:32 இலட்சத்திற்கு விற்பனை.

❖ பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ். 1,895 தொழில் திட்டங்களுக்கு, விளிம்புத் தொகை மானியமாக ரூ.4,101.41 இலட்சம் விடுவிக்கப்பட்டு,11,034 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கம்."

❖ 10,126 பனைத் தொழில் கைவினைஞர்களுக்குப் பதநீர் இறக்கவும் அதனை விற்பனை செய்யவும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

❖ தூத்துக்குடி மாவட்டம் வீரபாண்டிபட்டிணத்தில் தரமான பனை வெல்லம் உற்பத்தி செய்திட ஏதுவாக ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் பனைத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் பொது பயன்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

❖ தரமான பனை வெல்லம் தயாரிப்பதற்கான பயிற்சியும், பயிற்சி பெற்றவர்களுக்கு பனை வெல்லம் காய்ச்சத் தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்திட மானியமாக ரூ.50 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு 250 பனை விவசாயிகளுக்குப் தரமான பனை வெல்லம் தயாரிப்பதற்கான பயிற்சிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

❖ கூட்டுறவுத் துறையின் நியாய விலைக் கடைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சிறப்பு அங்காடிகள் மூலம் ரூ.494.20 இலட்சம் மதிப்பில் கற்பகம் என்ற பெயரில் தரமான பனை வெல்லம் 123.10 டன் விற்பனை.

❖ ரூ.15 இலட்சம் மதிப்பில் கன்னியாகுமரி மாவட்டத்தில் நவீன தேன் பகுப்பாய்வுக் கூடம்

❖ ரூ.37.75 இலட்சம் மதிப்பிலான கிராமப் பொருட்கள் கதர் அங்காடிகள், சர்வோதயா சங்கங்கள் மற்றும் தனியார் பல்பொருள் அங்காடிகளில் விற்பனை.

❖ ரூ.30 இலட்சம் மதிப்புள்ள 10 இலட்சம் தரமான பனை விதைகளை பனை வளர்க்கும் விவசாயிகளுக்கு விற்பனை.

❖ ❖ ❖



சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

மாண்புமிகு
சுற்றுலாத்துறை அமைச்சர்
திரு. **கா.ராமச்சந்திரன்**
அவர்கள்

சுற்றுலாத்துறை

- சுற்றுலா இடங்களை மேம்படுத்த, "சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சித் திட்டம்" வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு.
- 300 சுற்றுலாத் தலங்களில் சர்வதேசத் தரத்திற்கு இணையான வசதிகளை ஏற்படுத்த, சுற்றுலா பெருந்திட்டம் தயாரிப்பு.
- கொரோனா பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட சுற்றுலா தொழிலினை மீட்டெடுக்க "சுற்றுலா மீட்டெடுக்கும் குழு" அமைப்பு.
- அணைப் பகுதிகளில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளச் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்குக் குழு.
- முதலியார் குப்பம் படகு குழாம் மற்றும் அருகில் உள்ள தீவுப் பகுதியை மேம்படுத்த ரூ.50 இலட்சம் நிதி உதவி.



- சுற்றுலா தொழில் புரியும் பல்வேறு தொழில் முனைபவர்களுக்கு 'தமிழ்நாடு மாநில சுற்றுலா விருதுகள் 2022'இல் 17 பிரிவுகளில் 52 விருதுகள் வழங்கப்பட்டது.
- ரூ.10.22 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி அய்யன் திருவள்ளுவர் சிலை இரவில் ஒளிரும் வகையில் 3D திட்ட வரைபட அமைப்பு.
- ரூ.1 கோடியில் கன்னியாகுமரி அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு இரசாயன கலவை பூச்சு.
- சுற்றுலாத் தலங்களின் மேம்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள "தமிழ்நாடுஆலோசனைக்குழுவை", "தமிழ்நாடு சுற்றுலா மேம்பாடு மற்றும் ஊக்குவித்தல் குழுவாக" மறுசீரமைப்பு.
- ரூ.2.23 கோடி செலவில் கொல்லிமலையில் சுற்றுச்சூழல் சாகசம் மற்றும் திறந்தவெளி முகாம்கள் அமைப்பு.
- ரூ.2.91 கோடி செலவில் ஜவ்வாது மலையை முதன்மை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.
- "75 ஆவது சுதந்திர திருநாள் அமுத பெருவிழாவை" செயல்படுத்தும் முயற்சியில் எண்ணற்ற சுற்றுலா வளங்களைக் காட்சிப்படுத்தும்வகையில்,பல்வேறுமின்னணு ஊடகங்களில் 75 விளம்பர காணொளிகள் காட்சிப்படுத்தப்பட்டது.
- AR/VR அடிப்படையிலான சிறு புத்தகங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைச் செயல்படுத்தும் வகையில் இணைப்பு.
- மும்பையில்நடைபெற்ற "OTM"இல் பங்கேற்பு.
- சென்னையில் நடைபெற்ற "TTF" (பயணம் மற்றும் சுற்றுலா கண்காட்சி)இல் பங்கேற்பு.
- திருவள்ளூரில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் பங்கேற்பு.
- தேனி மாவட்டத்தில் நடைபெற்ற மங்கல தேவி கண்ணகி கோவில் திருவிழாவில் பங்கேற்பு.
- மதுரையில் நடைபெற்ற சித்திரை சுற்றுலா திருவிழா-2022"இல் பங்கேற்பு.
- சிவகங்கையில் நடைபெற்ற புத்தகத் திருவிழா-2022இல் பங்கேற்பு.
- சென்னையில் நடைபெற்ற "வாவ் தமிழ்நாடு விருதுகள்-2021" இல் பங்கேற்பு.
- குற்றாலம் அருவிப்பகுதியில்சுற்றுலாவளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள ரூ.1,134.56 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- கன்னியாகுமரி, முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு அருவி ஆகிய சுற்றுலாத் தலங்களை நவீன வசதிகளுடன் சுற்றுலாத் தலமாக மேம்படுத்த ரூ.715.06 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- தருமபுரி மாவட்ட, வத்தல் மலைப் பகுதி, முத்துப்பேட்டை, அலையாத்திக் காடு பகுதி, புதுக்கோட்டை மாவட்டம், முத்துக்குடா கடற்கரைப் பகுதிகளில் பல்வேறு வசதிகள் கொண்டசுற்றுலாத்தலமாகமேம்படுத்தரூ.929.31 இலட்சம் இந்திய சிறுத் தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI)-யிடம் கடன் பெறுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- கிழக்கு கடற்கரை சாலையில் "நந்தவனம்" அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு ரூ.177.83 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- மதுரை அலங்காநல்லூர் பகுதியில் உலகத்தரம் வாய்ந்த ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டுவதற்கு ரூ.4,406 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- பிச்சாவரம் படகு இல்லம் பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்த ரூ.1,407 இலட்சம் இந்திய சிறுத் தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI)-யிடம் கடன் பெறுவதற்கு அரசாணை வெளியீடு.
- பாரம்பரிய நகரமான பூம்புகாரை மேம்படுத்த ரூ.2,360 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- இலண்டனில் நடைபெற்ற உலகப் பயணச் சந்தை-2022 (WTM-2022) இல் பங்கேற்பு.
- புதுதில்லியில் நடைபெற்ற "இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியில் (IITF)" பங்கேற்பு.
- ராஞ்சியில்நடைபெற்ற "பயண மற்றும் சுற்றுலா பஜார்-2022" இல் நிதியுதவி அளித்துள்ளது.
- திருச்சியில் நடைபெற்ற "வைகுண்ட ஏகாதசி உற்சவத்தில்" பங்கேற்பு.



- தஞ்சாவூரில் நடைபெற்ற "ராஜராஜ சோழன் சதய விழா-2022"இல் நிதியுதவி அளித்துள்ளது.
- லக்னோவில் நடைபெற்ற "IATO-2022" இல் பங்கேற்பு.
- "இந்திய நாட்டிய விழா 2022-2023" மாமல்லபுரத்தில் 23.12.2022 முதல் 12.01.2023 வரை கொண்டாடப்பட்டது.
- "இந்திய நாட்டிய விழா 2022-2023" தீவுத்திடல் மைதானத்தில் 04.01.2023 முதல் 11.01.2023 வரை மற்றும் 18.01.2023 முதல் 22.01.2023 வரை கொண்டாடப்பட்டது.
- சென்னையில் நடைபெற்ற 9ஆவது உலகளாவிய தமிழ் வம்சாவழி அமைப்பு மாநாடு மற்றும் 15ஆவது எடிசன் விருதுகள் வழங்கும் விழாவிற்கு நிதியுதவி.
- விழுப்புரம் செஞ்சி கோட்டையில் 07.01.2023 முதல் 14.01.2023 வரை நடைபெற்ற " பாரம்பரிய நடைபயண "நிகழ்வுக்கு நிதியுதவி.
- சென்னையில் தக்ஷிண்சித்ராவில் நடைபெற்ற மார்கழி கிராமிய திருவிழாவிற்கு நிதியுதவி.
- பொள்ளாச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழாவிற்கு நிதியுதவி.
- பொங்கல் விழா-2023 அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்பட்டது.
- புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவிற்கு நிதியுதவி செய்துள்ளது.
- கிருஷ்ணகிரி மற்றும் திருப்பத்தூரில் நடைபெற்ற ஓராண்டு சாதனை விளக்க பொருட்காட்சியில் பங்கேற்பு.
- திருப்பத்தூரில் நடைபெற்ற குடியரசுதின கண்காட்சிக்கு நிதியுதவி.
- சிவகங்கையில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சி – 2023 க்கு நிதியுதவி.
- பழவேற்காட்டில் நடைபெற்ற பழவேற்காடு தினத்திற்கு நிதியுதவி.
- புதுதில்லியில் வரை நடைபெற்ற பாரத் பர்வ் 2023இல் பங்கேற்பு.
- ஹரியானாவில் நடைபெற்ற 36ஆவது சூரஜ்குண்ட் சர்வதேச கைவினைப் பொருட்கள் கண்காட்சி-2023க்கு நிதியுதவி.
- மும்பையில் நடைபெற்ற OTM – 2023 பயணச்சந்தையில் பங்கேற்றுள்ளது.

- புதுதில்லியில் நடைபெற்ற தெற்காசிய பயணம் மற்றும்சுற்றுலாபரிமாற்றம்சந்தையில்பங்கேற்பு.
- செங்கல்பட்டில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சி – 2023க்கு நிதியுதவி.
- சென்னையில் நடைபெற்ற "TTF-2023"இல் பங்கேற்பு.
- புதுதில்லியில் நடைபெற்ற இந்தியா டுடே சுற்றுலா விருது-2022 வழங்கும் விழாவில், சிறந்த கடற்கரை மற்றும் கடல் சார் பகுதி பிரிவில் கன்னியாகுமரி மாவட்டம் லேமூர் கடற்கரைக்கு இவ்விருது வழங்கப்பட்டது.
- தேனியில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சி – 2023க்கு நிதியுதவி.
- ஜெர்மனியில் உள்ள பெர்லின் நகரில் நடைபெற்ற ITB-2023இல் பங்கேற்பு.
- பெர்லினில் நடைபெற்ற PATWA விருது வழங்கும் விழாவில், இந்தியாவின் சிறந்த சுற்றுலாத்துறை அமைச்சர் என்னும் விருது மாண்புமிகு தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர்அவர்களுக்குவழங்கப்பட்டது.மேலும் இந்த ஆண்டின் பாரம்பரிய சுற்றுலாவிற்கான சிறந்த இடம் என்னும் விருதும் வழங்கப்பட்டது.
- மலேசியாவில் நடைபெற்ற MATTA FAIR-2023இல் பங்கேற்பு.
- இணைய வழி வாயிலாக நடைபெற்ற 2ஆவது மெய்நிகர் கூட்டத்தில் "பயணம்,சுற்றுலாமற்றும் விருந்தோம்பல்" என்ற நிகழ்வில் பங்கேற்பு.
- புதுதில்லியில் நடைபெற்ற "7ஆவது சர்வதேச சுற்றுலா மற்றும் பயண விருது" விழாவில் பங்கேற்பு.
- மாமல்லபுரத்தில்நடைபெற்ற "Newindia.travel-setting the stage for next normal" நிகழ்வில் பங்கேற்பு.
- கொல்கத்தாவில் நடைபெற்ற "பயணம் மற்றும் சுற்றுலா கண்காட்சியில்" பங்கேற்பு.
- சென்னையில் நடைபெற்ற "உடல்நலம் மற்றும் பாரம்பரிய மருத்துவம் பற்றிய முதல் தென்னிந்திய மாநாட்டில்" பங்கேற்பு.
- சென்னையில் நடைபெற்ற IITM (இந்திய சர்வதேச பயண சந்தையில்) பங்கேற்பு.
- மெக்சிகோ லியோன்நகரில் நடைபெற்ற "சர்வதேச பலூன் திருவிழாவில்" பங்கேற்பு.
- புதுதில்லியில்நடைபெற்ற இந்தியாடுடேடூரிசம் கான்க்ளேவ் & விருதுகள் 2021இல் தமிழ்நாடு சுற்றுலாத்துறை மூன்று விருதுகளைப் பெற்றது.சிறந்தமலைத்தொடர்விருதைநீலகிரி மாவட்டம் குன்னூரும் விழாப் பிரிவில் சிறந்த விழாவாக தமிழ்நாட்டின் பொங்கல் விழாவும், இயற்கையானசாலைக்கானவிருதைநாமக்கல் மாவட்டம் கொல்லிமலையும் பெற்றது.
- புதுதில்லியில் நடைபெற்ற IITF "இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியில்" பங்கேற்பு.
- புனேயில்நடைபெற்ற "இந்திய சர்வதேச பயண சந்தையில்" பங்கேற்பு.
- ஜெய்ப்பூரில் நடைபெற்ற "இந்தியப் பயண சந்தையில்" பங்கேற்பு.
- துபாய் கண்காட்சியில் பங்கேற்று, மாநிலத்தின் சுற்றுலாத் தலங்கள் மற்றும் அனுபவங்களைக் கருத்துக்களின் வடிவமாக வீடியோக்களாகக் காட்சிப்படுத்தப்பட்டது,
- கோவளத்தில் உள்ள சர்ப்டர்ப்-இல் நடைபெற்ற "கோவலாங் கிளாசிக் 2021" விழாவிற்கு நிதியுதவி.
- "வாவ் தமிழ்நாடு 2022" இணையவழி புகைப்படக் கண்காட்சிக்கு நிதியுதவி.
- உலக சுற்றுலா தின விழாக் கொண்டாட்டம் 2021மாநிலத்தின் அனைத்துமாவட்டங்களிலும் இணையவழியில் நடத்தப்பட்டது.
- வேலூரில் நடைபெற்ற "75ஆவது சுதந்திர திருநாள் அமுத பெருவிழாவிற்கு" நிதியுதவி.
- மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா கொண்டாடப்பட்டது.
- துபாயில் நடைபெற்ற "உலக பொருட்காட்சி 2020"இல் பங்கேற்பு.
- நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் நடைபெற்ற "ஜல்லிக்கட்டு" திருவிழாவிற்கு நிதியுதவி.
- திருப்பத்தூர் மாவட்டம், பாச்சல் கிராமத்தில் நடைபெற்ற "குடியரசு தின விழாவிற்கு" நிதியுதவி.



- சென்னையில் நடைபெற்ற "கீழடி தொல்லியல் கண்காட்சிக்கு" நிதியுதவி.
- சென்னையில் நடைபெற்ற "சென்னை இரண்டு மாத புகைப்படக் கண்காட்சி 2021"க்கு நிதியுதவி.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

- ஓட்டல் தமிழ்நாடு இராணிப்பேட்டையில் ரூ.28.80 இலட்சம் மதிப்பீட்டில் 8 அறைகள்.
- ஓட்டல் தமிழ்நாடு மதுரை - II இல் ரூ.25.10 இலட்சம் மதிப்பீட்டில் மதுபானகூடம் மற்றும் கழிப்பிடம்.
- படகு குழாம் ஏற்காட்டில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் ஆகாயத் தாமரைகள் அப்புறப்படுத்துதல்.
- ஓட்டல் தமிழ்நாடு கோயம்புத்தூரில் ரூ.10.25 இலட்சம் மதிப்பீட்டில் 11 அறைகள்.
- படகு குழாம்பை காராவிற்கு ரூ.20.68 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு 4 இருக்கைகள் கொண்ட அதிவேக படகு.
- படகு குழாம் பைக்காராவிற்கு ரூ.34.55 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு 60 HP அவுட்போர்டு மோட்டர் (OBM) மற்றும் பத்து 9.9 HP அவுட்போர்டு மோட்டர் (OBM) வாங்கப்பட்டது.
- படகு குழாம் வாலாங்குளத்திற்கு ரூ.31.92 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு வகையான படகுகள், அவுட்போர்டு மோட்டர் மற்றும் உயிர்காக்கும் உபகரணங்கள்.
- படகு குழாம் முட்டுக்காடு, முதலியார் குப்பம் மற்றும் கொடைக்கானலுக்கு ரூ.4.42 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு வகையான படகுகள்.
- படகு குழாம் ஏற்காட்டிற்கு ரூ.9.68 இலட்சம் மதிப்பீட்டில் 2 மற்றும் 4 இருக்கைகள் கொண்ட பத்து மிதிபடகுகள்.
- 22 ஓட்டல்கள் மற்றும் அனைத்துச் சுற்றுலாக்களை ஆன்லைனில் பதிவு செய்யும் சேவை மூலம் ரூ.11.68 கோடி வருவாய்.
- ஆன்லைன் பயணதிரட்டிகள் (OTAs) மூலம் 7,278 முன்பதிவுகள் மற்றும் ரூ.2.59 கோடி வருவாய் ஈட்டிப்பு.
- இக்கழகம் தனது இணையதளத்தை புதுப்பித்து, பயனாளிகளுக்கு எளிதில் பயன்படுத்த ஏதுவாக மாற்றியமைப்பு.
- இக்கழகம் தனது வாடிக்கையாளர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக அனைத்து ஓட்டல்களில் ஒரு பின்னுட்ட செயல்முறை (Feedback mechanism) அமைப்பை நிறுவி, 1,927 வாடிக்கையாளர்களிடம் கருத்துக்கள் பெறப்பட்டது.

- முப்பரிமாண தொழில்நுட்பங்களைக் கொண்டு தமிழகத்தில் உள்ள 5 யுனெஸ்கோ உலக பாரம்பரிய தலங்களுக்கு மெய்நிகர் (Virtual Reality) சுற்றுலாக்கள் உருவாக்கம்.
- இக்கழகம் தனது மின் ஆளுமை செயலை மேம்படுத்தப் புதிதாக Servers நிறுவி மேன்மைபடுத்தப்பட்டுள்ளது.
- இக்கழகம் தனது டிஜிட்டல் செயல்பாடுகளை முகநூல் பிரச்சாரத்தின் மூலம், சுற்றுலா நிகழ்வுகள் அனைத்தும் 46 இலட்சத்திற்கும் அதிகமான மக்களைச் சென்றடைந்துள்ளது.
- மதுரையிலிருந்து 5 புதிய சுற்றுலாக்கள் அறிமுகம்.
- 100 சதவிகிதம் திருப்பதி விரைவு தரிசன சேவையினை பயன்படுத்தி தினசரி திருப்பதி சுற்றுலா.
- சமூக ஊடகங்களான டிவிட்டர், முகநூல் ஆகியவற்றில் தொகுப்பு சுற்றுலா பற்றிய விளம்பரங்களை அதிக அளவில் இடம் பெற நடவடிக்கை.
- உலக சுற்றுலா தினம் 2021 அன்று, வரலாறு மற்றும் பாரம்பரியத்தை மையமாகக்கொண்டு பாரம்பரிய நடை பயணங்கள்.
- உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு ஆர்வமுள்ள மாற்றுத்திறனாளிகளின் புகைப்பட திறனை மேம்படுத்தி மாநிலம் முழுவதும் பயணம் செய்ய ஊக்குவிக்க மாமல்லபுரத்தில் புகைப்படக் கலையை உள்ளடக்கிய சுற்றுலா.
- ஓட்டல் தமிழ்நாடு திருத்தனியில் சமையலறை மற்றும் உணவகம் புதுப்பிக்கப்பட்டது.
- ஓட்டல் தமிழ்நாடு காஞ்சிபுரத்தில் சொகுசு அறை மற்றும் இரண்டு நபர்கள் தங்கும் அறைகள் மேம்படுத்தப்பட்டது.
- படகு குழாம் வாலாங்குளத்திற்கு பான்டுன் (Pontoon) படகு மற்றும் ஜெட் ஸ்கி வாங்கப்பட்டது.
- படகு குழாம் பைகாராவில் புதிதாக கழிவறைகள் கட்டப்பட்டது.
- ஓட்டல் தமிழ்நாடு திருச்சியில் முதல் தளத்தில் 8 அறைகள் மேம்படுத்தப்பட்டு, உணவகம் புனரமைப்பு.
- ஓட்டல் தமிழ்நாடு கோயம்புத்தூரில் 2 சொகுசு அறைகள் புனரமைப்பு.
- படகு குழாம் பைகாராவிற்கு 60 HP (2 nos) 9.9 HP (4 nos) மற்றும் 15 HP (2 nos) அவுட் போர்டு மோட்டர்கள் வாங்கப்பட்டது.
- படகு குழாம் உதகைக்கு 9.9 HP (10 nos) அவுட் போர்டு மோட்டர்கள் வாங்கப்பட்டது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திருப்பதி சுற்றுலாவை மதுரை, கோயமுத்தூர் ஆகிய நகரங்களிலிருந்து உறங்கும் வசதி கொண்ட பேருந்து மூலமாகவும் மற்றும் கடலூர், ஓசூர் போன்ற நகரங்களிலிருந்து சாய்தள இருக்கைகள் கொண்ட பேருந்து மூலமாகவும் இயக்கி வருகிறது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில், சென்னையிலிருந்து 2 நாட்களும் மதுரையிலிருந்து 3 நாட்களும் ஜெயின் கோயில்களை உள்ளடக்கி சுற்றுலா நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

எப்போதுமே இலக்குதான் முக்கியம்,
அதை அடைய உழைப்புதான் மிகமிக முக்கியம்.
இலக்கும், உழைப்பும் ஒன்று சேர்ந்தால்
அவர்களை யாராலும் வீழ்த்த முடியாது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக்கட்டுப்பாடு

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர்

திரு. அர.சக்கரபாணி

அவர்கள்

உணவு

- கொரோனா பெருந்தொற்று காலத்தில் பொதுமக்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாக்க நிவாரண தொகையாக ரூ.4,000/- என்ற வீதத்தில் மொத்தம் ரூ.8,392.76 கோடியை 2,09,81,900 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது.
- கொரோனா பெருந்தொற்று காலத்தில் நியாய விலைக்கடைகள் மூலம் 14 மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு ரூ.977.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2,07,70,332, (99.12%) குடும்ப அட்டைதாரர்கள் பயனந்தடைந்துள்ளனர்.
- ரூ.1,297 கோடி செலவில் 2,12,17,756 அரிசி அட்டைதாரர்கள் மற்றும் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழ் குடும்பங்களுக்கு 2022ஆம் ஆண்டு பொங்கல்



பண்டிகையை கொண்டாடும் வகையில் 21 மளிகைப் பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்பட்டது.

- 14,19,473 புதிய மின்னணு குடும்ப அட்டைகள் விநியோகம்.

- தமிழ்நாட்டில் மொத்தம் 35,941 (31.03.2023 அன்றைய நிலவரப்படி) நியாய விலைக் கடைகள் தற்போது செயல்பாட்டில் உள்ளது. இதில், 311 முழு நேர நியாய விலைக் கடைகளும் மற்றும் 698 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் ஆக மொத்தம் 1,009 புதிய நியாய விலைக் கடைகள் செயல்பாட்டில் உள்ளன.

- குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் விற்பனையாளர்கள் திருப்தி அடையும் வகையில் 3,139 நியாய விலைக் கடைகளின் வெளிப்புற மற்றும் உட்புற சூழல், மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ISO 9001 மற்றும் ISO 28,000 சான்றிதழும் பெறப்பட்டுள்ளது.

- 65 நியாய விலைக்கடைகளை உள்ளடக்கி புதிய கொளத்தூர் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகம் தோற்றுவிக்கப்பட்டது.

- 2023 ஜனவரி தமிழர் திருநாளாம் தைப் பொங்கலைச் சிறப்பாக கொண்டாடும் வகையில் அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறு வாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீள கரும்பு ஆகியவற்றுடன் ரூ.1,000/- ரொக்கப்பணம் ஆகியவை 2,14,67,500 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு மாதமும் 98.0% முதல் 98.5% பரிவர்த்தனைகள் கைவிரல் ரேகை அங்கீகார முறையில் நடைபெற்று வருகின்றன.

- வட்டஅளவில் நடைபெற்ற மாதாந்திர பொது விநியோகத்திட்ட குறைதீர்க்கும் நாள் முகாம்களில் நகல் அட்டை, புதிய குடும்ப அட்டை, முகவரி மாற்றம், பெயர் சேர்த்தல், உள்ளிட்ட 1,08,902 கோரிக்கைகள் பெறப்பட்டு 1,08,902 இனங்களும் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

- புனித இரமலான் மாதத்தில் நோன்பு நோக்கும் இஸ்லாமிய பெருமக்களுக்கு கஞ்சி தயாரிக்க ஒவ்வொரு ஆண்டும் கிலோ ஒன்றுக்கு ரூ.1/- வீதம் பச்சரிசி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் 2022 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளில் 11,612.102 மெ.டன். பச்சரிசி இரமலான் நோன்புக்காக இஸ்லாமிய பெருமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- பொருளாதார நெருக்கடியால் கடுமையான சிரமங்களை எதிர்கொண்ட இலங்கை நாட்டு மக்களுக்கு உதவும் பொருட்டு ரூ.134 கோடி செலவில் 3 கட்டங்களாக 40,000 மெ.டன். அரிசி தமிழகத்திலுள்ள அரவை ஆலைகளிலிருந்து நேரடியாக கொள்முதல் செய்து இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

- நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் விளை நெல்லினை விற்க ஆன்லைன் மூலம் பதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு 88.90 இலட்சம் மெ.டன். நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

- உழவர் உதவி மையம் துவங்கப்பட்டு இதுவரை 11,199 அழைப்புகள் பெறப்பட்டு தொடர்புடைய மண்டல அலுவலகங்களால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- கொள்முதல் பருவங்களில் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.100/- ஆகவும் மற்றும் பொதுரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.75/- ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 21 நவீன அரிசி ஆலைகள் 52,500 மாதாந்திர அரைவை திறனுடனும், 602 தனியார் அரவை முகவர்கள் 9,74,991 மெ.டன். மாதாந்திர அரவை திறனுடன் நெல் அரவை செய்து வருகின்றனர்.

- 21 நவீன அரிசி ஆலைகளிலும், கருப்பு மற்றும் பழுப்பு அரிசி நீக்கும் இயந்திரம் (கலர் சார்டர்) பொருத்தப்பட்டு நெல் அரவை செய்யப்பட்டு வருகிறது. மேலும் 602 தனியார் அரவை ஆலைகளில் கருப்பு மற்றும் பழுப்பு அரிசி நீக்கும் இயந்திரம் (கலர் சார்டர்) பொருத்தப்பட்டுள்ளதுடன் 546 அரவை ஆலைகளில் கலவை இயந்திரம் (Blending Unit) பொருத்தப்பட்டு தரமான அரிசி வழங்க நடவடிக்கை.



- அரவை முகவர்களுக்கு அரவை கூலியாக ஒரு குவிண்டால் பச்சரிசி நெல் அரவை செய்ய ரூ.10/- லிருந்து ரூ.25/- ஆகவும், புழுங்கல்நெல் அரவை செய்ய ரூ.20/- லிருந்து ரூ.40/- எனவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் பருவகால பட்டியல் எழுத்தர்களுக்கு மாத ஊதியமாக ரூ.8,784/- ஆக உயர்வு, பயணப்படியாக ரூ.120/-மும், பருவகால உதவுபவர்கள் மற்றும் காவலர்களுக்கு ரூ.8,717/-ஆக உயர்த்தியும், பயணப்படியாக ரூ.100/-மும் வழங்கப்படுகிறது.

- நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் பணியாற்றும் பருவகால சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு 40 கிலோ எடையுடைய ஒரு நெல் மூட்டைக்கு ரூ.3.25/- லிருந்து ரூ.10/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்த காலத்தில் இறந்த 109 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமனம்.


- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 2012ஆம் ஆண்டு முதல் பருவகால பணியாளர்களாக பணிபுரிந்து வந்தவர்களுக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிரந்தரப் பணியாளர்களாக 591 பணியாளர்களுக்கு பணி நியமன ஆணை.

- 500 மெ.டன் அரவைத்திறன் கொண்ட ஆறு நவீன அரிசி ஆலைகள் (தஞ்சாவூர் – I, தஞ்சாவூர் - II, திருவாரூர் –I, திருவாரூர் –II, கடலூர் மற்றும் மயிலாடுதுறை) மற்றும் 200 மெ.டன் அரவைத்திறனுடன் கூடிய புதிய நவீன அரிசி ஆலை தேனி மாவட்டத்திலும் தனியார் பங்களிப்புடன் (PPA) முறையில் நிறுவப்படவுள்ளது.

- கடந்த இரண்டு ஆண்டுகளில் 63,975 எண்ணம் புதிய தார்பாலின் உறைகளும், (LDBP COVERS) மற்றும் 61,250 எண்ணம் புதிய தார்பாலின் பாய்களும் (LDBP SHEETS) கொள்முதல் செய்யப்பட்டு திறந்தவெளி சேமிப்பு மையங்கள் மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- 1401 எண்ணம் ஈரப்பதமானிகளும் (Moisture Meters) மற்றும் 1465 எண்ணம் நெல்தூற்றும் இயந்திரங்களும் (Winnowing Machines) கொள்முதல் செய்யப்பட்டு, நேரடி நெல்கொள்முதல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் இயங்கும் 21 நவீன அரிசி ஆலைகளில், முதல் கட்டமாக 13 நவீன அரிசி ஆலைகளில் கலவை இயந்திரம் (FRK Blending Machine) மண்டல அளவில் நிறுவ நடவடிக்கை.



❖ இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955இன் கீழ் 15,741 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ரூ.15.20 கோடி மதிப்பில் பொது விநியோகத் திட்டத்தின் பொருட்கள் கைப்பற்றப்பட்டது.

❖ கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் 140 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

❖ புதியதாக உருவாக்கப்பட்ட 2 மண்டலங்கள், 8 சரகங்கள் மற்றும் 6 அலகுகள் ஆகியவை செயல்படத் தொடங்கியுள்ளன. திருவள்ளூர், பொள்ளாச்சி மற்றும் உத்தமபாளையம் ஆகிய 3 சிறப்பு சுற்றுக் காவல் படைகள் உருவாக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது.

❖ குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் செயல்பாடுகளை மேம்படுத்த அனைத்து அலகுகளிலும் முதிர்ந்த நிலையில் உள்ள கணிப்பொறிகள் மற்றும் உபகரணங்கள் மாற்றப்பட்டுள்ளது மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 29 தனித்து இயங்கும் கண்காணிப்பு கேமராக்கள் (Standalone CCTV Cameras) M/s ELCOT நிறுவனத்திடம் வாங்க நடவடிக்கை.

❖ 2021-2022ஆம் ஆண்டில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் இதுவரை இல்லாத அளவில் ரூ.84.52 கோடி வருமானம் ஈட்டியுள்ளது.

❖ அனைத்து சேமிப்பு கிடங்குகளிலும் தினசரி வரவு செலவு கணக்கு விவரங்களை மென்பொருள் (Tally software) மூலம் பதிந்து செயல்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ காகிதமில்லா அலுவலக நடைமுறையினை செயல்படுத்திட மின்னணு அலுவலக நடைமுறையினை தலைமை அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளிலும், மண்டல அலுவலகங்களிலும், அனைத்து சேமிப்பு கிடங்குகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

❖ ❖ ❖



மின்சாரம், மரபு சாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு (மொலாசஸ்)

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்

திரு. வி.செந்தில் பாலாஜி

அவர்கள்

எரிசக்தித் துறை

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்

விவசாய மின் இணைப்புகள்

- ரூ.803 கோடி செலவில் 2.13 இலட்சம் ஏக்கர் விவசாய நிலத்தினை உள்ளடக்கி ஒரு இலட்சம் விவசாயமின் இணைப்புகள் ஓராண்டில் வழங்கப்பட்டு சரித்திர சாதனை.
- பொது வரிசையின் கீழ் 50,000 விவசாய மின் இணைப்புகள் 86,384 ஏக்கர் விவசாய நிலத்தினை உள்ளடக்கி, ரூ.816 கோடி செலவில் வழங்கப்பட்டது. சிறப்பு பிரிவின் கீழ் 589 விவசாய மின் இணைப்புகள்.





மின்னகம்

❖ "மின்னகம்" என்ற மாநில அளவிலான மையப்படுத்தப்பட்ட மின் நுகர்வோர் சேவை மையம் 9498794987 என்ற கைபேசி எண்ணுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 20.06.2021 அன்று தொடங்கப்பட்டது. அதில், நுகர்வோர்கள் மின்சாரத் துறை சார்ந்த 37 விதமான புகார்களையும் பதிவு செய்யலாம்.

மின் நிறுவு திறன்

❖ 32,595 மெகாவாட்டாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த மின் நிறுவு திறன் 34,706 மெகா வாட்டாக உயர்வு.

அதிகபட்ச மின் தேவை

❖ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின், மின்கட்டமைப்பு, ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 400.881 மில்லியன் யூனிட் மின்சாரத்தையும் மற்றும் 18,667 மெகாவாட் உச்ச மின் தேவையையும் எவ்வித தடங்கலுமின்றி பூர்த்தி செய்துள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

❖ காற்றாலை மூலம் பெறப்பட்ட மின்சாரம் 5,689 மெகாவாட். மேலும் காற்றாலை மூலம் கிடைக்கப்பெற்ற அதிகபட்ச மின் உற்பத்தி 120.25 மில்லியன் யூனிட்டுகள்.

❖ சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் பெறப்பட்ட அதிகபட்ச மின்சாரம் 4,866 மெகாவாட். மேலும் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற அதிகபட்ச மின் உற்பத்தி 36 மில்லியன் யூனிட்டுகள்.

❖ தமிழ்நாட்டின் மொத்த மின் நுகர்வில் 74% புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் பூர்த்தி செய்யப்பட்டது.

❖ 2,028 மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையங்கள், தமிழ்நாடு மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டதின் மூலம் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவு திறன் 6,539 மெகாவாட்டாக அதிகரிப்பு.

மின் உற்பத்தி

❖ தமிழ்நாடு மின் வாரியத்திற்கு சொந்தமான அனல் மின் நிலையங்களின் மூலம் 2020-2021 இல், உற்பத்தி செய்யப்பட்ட 15,553.52 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம், 2021-2022 ஆம் ஆண்டில் 20,391.18 மில்லியன் யூனிட்டுகளாக அதிகரித்தது. இது 31.1% கூடுதலாகும். மேலும், 2022-2023 ஆம் ஆண்டில் 22,689 மில்லியன் யூனிட்டுகளாக அதிகரித்தது.

❖ தமிழ்நாடு மின் வாரியத்திற்கு சொந்தமான புனல் மின் உற்பத்தி நிலையங்களில் இலக்கை விஞ்சிய 1,660.36 மில்லியன் யூனிட்டுகள் மற்றும் 2,261.08 கூடுதலாக உற்பத்தி.

நிலக்கரி

❖ ஒன்றிய அரசின் மின்சார அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் படி சுரங்கங்களில் இருந்து நேரடியாக 14.34 இலட்சம் டன் நிலக்கரி சாலை மற்றும் இரயில் போக்குவரத்து (RCR) மூலம் பெறப்பட்டது.

- பாரதீப் துறைமுகத்தில் ஏற்கெனவே உள்ள 2 பெர்த்களுடன் கூடுதலாக 2 பெர்த்துகள் முறையே IOHP & JSW நிறுத்துவதற்கான கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- தடையில்லாமல் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காகவும் அதிக அளவு நிலக்கரியை கையாள்வதற்காகவும், IB பள்ளத்தாக்கு நிலக்கரியை கொண்டுவருவதற்கு கூடுதல் மற்றும் மாற்று துறைமுகமாக M/s. கங்காவரம் துறைமுகம் லிமிடெட் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

மின் உற்பத்தி திட்டங்கள்

- மாநிலத்தின் சொந்த நிறுவு திறனை அதிகரிக்கும் பொருட்டு, 4,620 மெகாவாட் அளவிற்கு அனல் மற்றும் புனல் மின் நிலைய திட்டங்களுக்கான பணிகள்.
- அதிக அளவு நிலக்கரியை குறுகிய காலத்தில் கையாள்வதற்காக, தூத்துக்குடி துறைமுகம் தளம்-1இல் அதிக கொள்ளளவு கொண்ட புதிய இரண்டு நிலக்கரி கையாளும் இயந்திரங்கள், செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன.

மின் தொடரமைப்பு

- 2021 ஆம் ஆண்டு முதல் 37 புதிய துணை மின் நிலையங்கள் 3,748 எம்.வி.ஏ. நிறுவு திறனுடன் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.
- தற்போதுள்ள துணை மின் நிலையங்களில் 259 எண்ணிக்கையிலான கூடுதல் மின் மாற்றிகள் / தரம் உயர்த்தப்பட்டு, கூடுதல் 4,201 எம்.வி.ஏ. திறனுடன் நிறுவப்பட்டுள்ளன.
- 1,338.72 சுற்று கி.மீ. மிக உயர் அழுத்த மின் பாதைகள் நிறுவப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன.
- எவ்வித மின் தடங்கலுமின்றி உயர் மின் அழுத்த கோபுரங்கள் மற்றும் துணை மின் நிலையங்களில் மின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு புதிய Hot lines கோட்டம் கொரட்டூரில் உருவாக்கம்.

மின் விநியோகம்

- தஞ்சாவூர், திருவண்ணாமலை மற்றும் கரூர் ஆகிய இடங்களை தலைமையிடமாகக் கொண்டு மூன்று புதிய மண்டலங்கள் உருவாக்கம்.
- புதியதாக சேப்பாக்கம், சோழிங்கநல்லூர், பல்லாவரம், தேன்கனிக்கோட்டை, பென்னாகரம், திருவெண்ணெய்நல்லூர், ஊத்துக்குளி, வேடசந்தூர், ஜெயங்கொண்டம், சாத்தூர் மற்றும் கெங்கவல்லி என 11 புதிய கோட்டங்கள் உருவாக்கம்.
- புதியதாக வழங்கப்பட்ட மின் இணைப்புகள் 18.79 இலட்சம்.
- மாநிலம் முழுவதும் 8,905 (5,705 கூடுதல் மின்மாற்றிகளும் குறைந்த மின்னழுத்தம் நிலவிய பகுதிகளில் 3,200) புதிய விநியோக மின்மாற்றிகள் நிறுவப்பட்டு, இவற்றையும் சேர்த்து மொத்தம் 41,502 மின்மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளன.
- 36 எண்ணிக்கையிலான புதிய 33/11 கி.வோ துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டு இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன.
- 11,524 கி.மீ உயர் அழுத்த மின் பாதைகள் நிறுவப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன.







- 19,814 கி.மீ தாழ்வழுத்த மின் பாதைகள் நிறுவப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன.
- தற்போதுள்ள 33/11 கி.வோ துணை மின் நிலையங்களில் 15 எண்ணிக்கை கூடுதல் மின் மாற்றிகள் / தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும், தொகுதியின் வளர்ச்சிப்பணிகள் குறித்து, பொது மக்களுக்கு தெரிவிப்பதற்காக 234 பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- வடகிழக்குப் பருவமழை மற்றும் மாண்டோஸ் சூறாவளியின் போது, பாதிப்படைந்த மின்கம்பங்கள், மின் பாதைகள் மற்றும் மின்மாற்றிகளில் ஏற்பட்ட சேதங்கள் விரைந்து சரிசெய்து மிகக்குறுகிய காலத்தில் மின் விநியோகம்.
- 34,35,968 மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த மற்றும் சிறப்பு பராமரிப்புப் பணிகள்.
- சென்னையில், மழைக்காலங்களில் மழைநீர் தேங்கும் இடங்களில் உள்ள 4,370 மின்தூண் பெட்டிகள் (Pillar Box) தரை மட்டத்திலிருந்து 1மீட்டர் உயர்த்தப்பட்டுள்ளன.
- திண்டுக்கல், கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மின் பகிர்மான வட்டங்களில் சில துணை மின் நிலையங்களில் மழை நீர் உள்ளே புகாமல் தடுப்பதற்கு 1 மீட்டர் உயரத்திற்கு பாதுகாப்பு சுவர்களும் அமைக்கப்பட்டுள்ளது.
- 5,692 வளையச் சுற்றுத்தர அமைப்புகளில் (RMU), இதுவரை 4,654 வளையச் சுற்றுத்தர அமைப்புகள் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது,
- சட்டசபை கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் இதுவரை 11 அறிவிப்புகள் முழுமையாக (100% செயல்படுத்தப்பட்டு) முடிக்கப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்ப துறையின் மேம்பாட்டு பணிகள்:

- மின் இணைப்பு எண்ணுடன் ஆதார் எண் இணைக்கும் பணி மிகக் குறுகிய காலத்தில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.
- புதிய வேளாண் சேவை இணைப்புக்கான இணையதளம் தொடக்கம்.
- மின் கட்டண மாற்ற விண்ணப்பங்களைச் செயலாக்குவதற்கான இணையதளம் தொடக்கம்.
- ரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கான தொகையை வங்கிப் பரிமாற்றம் மூலம் ஆன்லைனில் திரும்ப பெறுவதற்கான மென்பொருள் தொடக்கம். நுகர்வோருக்கு வலைதள வங்கி பரிவர்த்தனை மூலம் பணம் செலுத்துவதற்காக ஒற்றை கட்டண நுழைவாயில் தொடக்கம்.

விருதுகள்

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் நிறுவன வள திட்டமிடல் (ERP) செயல்படுத்தியதற்கு SKOTCH தங்க விருது.
- தொழில் நுட்பத்துடன் கூடிய தானியங்கி மின் அளவிகள் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களில் பொருத்தியதற்கான வெள்ளி SKOTCH விருது.
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், இந்திய ஸ்மார்ட் கிரிட் ஃபோரம்



இன்னோவேஷன் விருது 2023 (Indian Smart Grid Forum Innovation Award 2023) இல் பங்கேற்று புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்களில் தானியங்கி மின் அளவிகள் பொருத்தி செயல்படுத்தியமைக்கான வைர விருதைப் பெற்றுள்ளது.

- பாரதீப் துறைமுகத்தில் நிலக்கரியை கையாள்வதில் "சிறந்த ஏற்றுமதியாளர்" (10.90 MMT) என தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு விருது.
- "இந்திய விண்ட் எனர்ஜி ஃபோரம் லீடர்ஷிப் விருதுகள் 2023" (India Wind Energy Forum Leadership Awards 2023) என்ற அமைப்பில் இருந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர்களுக்கான (RE Generators) தானியங்கி மின் அளவிகளை (AMR) பொருத்தியதற்கான "இந்த ஆண்டின் மிகவும் முற்போக்கான நிலை" என்ற வணிகச் சிறப்பு விருதைப் பெற்றது.

சேமிப்பு

- மின் உற்பத்தி நிலையங்களின் திறமையான செயல்பாடு, வட்டி விகிதம் குறைப்பு, உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மூலம் ரூ.2,745 கோடி சேமிப்பு.
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம், செலவினங்களில் ரூ 1,090 கோடி சேமிப்பு.

மின் கட்டண திருத்தத்திற்கு பின் நுகர்வோர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்

- வீட்டுமின்நுகர்வோர்களுக்குநிலைக்கட்டணம் இரு மாதங்களுக்கு ரூ.20/- முதல் ரூ.50/- வரை செலுத்துவதில் இருந்து முழுவிலக்கு அளிக்கப்பட்டு, நுகர்வோர்களிடம் இருந்து மின் பயன்பாட்டு கட்டணம் மட்டுமே வசூலிக்கப்பட்டதில் 2.35 கோடி வீட்டு மின் நுகர்வோர்கள் பயன்.
- கைத்தறிநெசவாளர்களுக்குஇருமாதங்களுக்கு 200யூனிட்டுகள் மட்டுமே இலவசம் என்றநிலை மாற்றியமைக்கப்பட்டு இரு மாதங்களுக்கு 300 யூனிட்டுகள் இலவசம்எனஉயர்த்திவழங்கியதில் 73,642 கைத்தறி நுகர்வோர்கள் பயன்.
- விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 750 யூனிட்டுகள் இலவசம் என்ற நிலை மாற்றப்பட்டு இரு மாதங்களுக்கு 1,000 யூனிட்டுகள் இலவசம் என உயர்வு. மேலும், மின் கட்டண உயர்வில் 35 காசுகள்/ யூனிட் இரு மாதங்களுக்கு 1,001 யூனிட் முதல் 1,500 யூனிட் வரை மற்றும் 70 காசுகள் / யூனிட் இரு மாதங்களுக்கு 1,500 யூனிட்டுகளுக்கு மேல் உள்ள மின் நுகர்வுக்கு குறைக்கப்பட்டு 1,68,000 விசைத்தறி நுகர்வோர்கள் இந்த அரசை மனதார பாராட்டி வருகின்றனர்.
- தாழ்வழுத்த சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளுக்கு உச்ச நேர மின் நுகர்விற்கான கட்டணமானது (ToD Charges)

25 சதவீத்திலிருந்து 15 சதவீதமாக குறைக்கப்பட்டு மானியமாக வழங்கி சுமார் 3.37 இலட்சம் தாழ்வழுத்த தொழிற்சாலை நுகர்வோர்கள்.

❖ பொதுமக்களிடம்படிக்கும்திறனைமேம்படுத்தும் விதமாக வணிக ரீதியில் இயங்காத நூலகங்களுக்கான மின் கட்டணத்தினை மானியம் இல்லா வீட்டு விகிதப்பட்டியலில் கணக்கீடு செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 30சதவிகிதம்கட்டணம்குறைக்கப்பட்டதில்பல நூலகங்கள் பயனடைந்துள்ளன.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை அரசு அலுவலகங்களில் சூரிய மேற்கூரை மின் அமைப்புகள்

❖ 332அரசுஉயர்நிலைப்/மேல்நிலைப்பள்ளிகளில் 1,259 கி.வாட் கூட்டுத் திறனிற்கு சூரிய மேற்கூரை அமைப்புகள் நிறுவுவதற்கு பணி ஆணை வழங்கப்பட்டு, 223 அரசு உயர்நிலைப் / மேல் நிலை பள்ளிகளில் 879 கி.வாட் திறனிற்கு சூரிய மேற்கூரை அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

❖ நெடுஞ்சாலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் 65 கி.வாட் கூட்டுத்திறனிற்கு மேற்கூரை அமைப்புகள் மற்றும் 3 எண்ணம் 500 எல்.பி.டி. சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

❖ தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்து கழகத்தில் (TAMPCOL) 110 கி.வாட். சூரிய மேற்கூரை அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளது. 20 வாட்ஸ் கொண்ட 50 எண்ணம் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

❖ சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் 160கி. வாட் கூட்டுத்திறனில் சூரிய மேற்கூரை அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

❖ கோயில்களில் சூரிய மேற்கூரை / சூரிய மின் விளக்குகள் நிறுவ ஆயத்த பணிகள்.

❖ அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் முன்னோடியாக தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தில், பொதுமக்கள் பயன்பாட்டிற்காக, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் செயல்விளக்கத்திற்காக, சூரிய ஒளியில் இயங்கும் 25 கி.வாட் திறன் கொண்ட மின்சார வாகன மின்னூட்ட நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

❖ இரண்டு (2) எண்ணம் சூரிய ஒளியில் இயங்கும் 100 கி.வாட் திறன் கொண்ட மின்சார வாகன மின்னூட்ட நிலையங்கள், மாநில திட்டகுழு (TANII) விரிவான திட்ட அறிக்கை ஒப்புதல் அளித்தும் ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு.

❖ மின்கட்டமைப்புடன் கூடிய சூரிய மேற்கூரை அமைப்பு இரண்டாம் பகுதி (GCRTS Phase -II) 506 வீடுகளுக்கு 1,956 கி.வாட் திறனிற்குரிய சூரிய மேற்கூரை நிறுவப்பட்டுள்ளது.

❖ சூரியசக்தியில் இயங்கும் தெருவிளக்குகள் ரூ.7.5 இலட்சத்தில் இருபது (20) எண்கள் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு (PEW) சோதனைச் சாவடிகளில் நிறுவப்பட்டுள்ளன.

❖ கயத்தாரில் காற்றாலை-சூரிய கலப்பின ஆலை மின்கல சேமிப்பு திறனுடன் நிறுவுவதற்காக முதற்கட்டமாக ரூ.13 கோடி செலவில் 2 மெ.வாட் திறனுள்ள நிலத்தடி சூரிய மின் நிலையம் நிறுவ ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

❖ அரசு அலுவலகக் கட்டடங்களில் 20 மெ.வாட் திறனில் சூரிய மேற்கூரைமின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க ரூ.120 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையினை மின் ஆளுமை மயமாக்குதல்

❖ ரூ.2.99 கோடி நிதியில் மின் ஆளுமை நடவடிக்கைகளின் கீழ் 74 சேவைகளை இணையவழி மூலமாக வழங்கும் வகையில் கணினிமயமாக்கும் பணிகள் தேசிய தகவல் தொழில்நுட்பமையம்மூலம்செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகத்தினை மேம்படுத்தி நவீனமயமாக்குதல்

❖ ரூ.1.93கோடிநிதியில்மின்இணைப்புவசதிகளை பொதுப்பணித்துறையின் மூலம் புதுப்பித்து மேம்படுத்தி நவீனமயமாக்கும் பணிகள் தொடக்கம்.



மனந்திருந்திய மதுவிலக்கு குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு நிதி

❖ ரூ. 3.93 கோடி நிதியில், 1,311 மதுவிலக்கு குற்றவாளிகளின் மறுவாழ்விற்காக அவர்களின் விருப்பத்திற்கேற்ப தொழில் செய்திட தலா ரூ. 30,000 வழங்கல்.

தமிழகத்தில் தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி உற்பத்தி வடிப்பாலைகள் நிறுவுதல்

❖ சாராவி உற்பத்தி வடிப்பாலைகள் தமிழ்நாட்டில் நிறுவுவதன் மூலம் அரசுக்கு நிருவாகச் சேவைக் கட்டணம் மற்றும் மதிப்புக் கூட்டுவரியின் வாயிலாக கூடுதல் வருவாயும் மற்றும் மாநிலத்தில் அதிக வேலைவாய்ப்புகள் உருவாக்குவதற்கும் வழிவகுக்கும்.

புதிய ஆர்.எல்–4 உரிமம்

❖ தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகள் 2000இன் கீழ், புதிய ஆர்.எல்-4 உரிமம் கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டம், குண்டுமாரணப்பள்ளி, கிராமம், திருவாளர்கள். ஆம்னி ஆக்டிவ் ஹெல்த் டெக்னாலஜிஸ் லிமிடெட் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் 38 சி,மீனாட்சிசாலை,இருளப்பபுரம்,நாகர்கோயில், திருவாளர்கள் இந்தியா புட் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

கருப்பஞ்சாற்றுக் கசண்டு (மொலாசஸ்)

❖ எத்தனாலுக்கு சான்றளிக்கும் அதிகாரம் வடிப்பாலை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு தமிழ்நாட்டில் முதல்முறையாக கரும்புச்சாறு மற்றும் பி ஹெவி மொலாசஸ் ஆகியவற்றிலிருந்து தற்போது எத்தனால் உற்பத்தி நடைபெற்று வருகிறது.

❖ நீர் ஆதராங்களிலிருந்து 1 கிலோ மீட்டர் முதல் 5 கிலோ மீட்டர் தூரம் வரை தொழிற்சாலைகள் நிறுவப்படுவதை தடுக்கும் 1989 மற்றும் 1998 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணைகளிலிருந்து ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள சர்க்கரை ஆலைகளுக்கு கழிவு நீர் வெளியேற்றமில்லா தொழில்நுட்பத்துடன் கூடிய எத்தனால் ஆலை அமைக்க விலக்களித்து புதிய எத்தனால் ஆலை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

❖ எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலை, சேத்தியாத்தோப்பு மற்றும் கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகியவற்றில் எத்தனால் ஆலை துவங்கிட அரசால் அறிவிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் இரு ஆலைகளிலும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. சுற்று சூழல் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ ❖ ❖



சுதந்திரத் திருநாளையொட்டி கோட்டை கொத்தளத்தில்
தேசிய கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்துதல் - 15.08.2022



மாண்டஸ் புயலால் கனமழையின் காரணமாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு
உணவு மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்குதல் - 10.12.2022



கைத்தறி மற்றும் துணிநூல் துறை, பூதானம் மற்றும் கிராம தானம்

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர்
திரு. **ஆர்.காந்தி** அவர்கள்

- துணிநூல் துறைக்குத் தனியாக ஆணையரகம் உருவாக்க ஆணையிடப்பட்டு, அதன்படி புதிய துறை 23.10.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.
- ரூ.696.30 இலட்சம் மதிப்பீட்டில் தஞ்சாவூர், கரூர், விருதுநகர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் சாயச்சாலை கட்டடங்கள் திறப்பு.
- நெசவாளர் குறைதீர்க்கும் மையம் கைத்தறி ஆணையரகத்தில் அமைக்கப்பட்டு, தொலைபேசி, இணையதளம், மின்னஞ்சல் வாயிலாக நெசவாளர்கள் குறைகள் தீர்க்கப்பட்டு பயன்.
- வேட்டி சேலை வழங்கும் திட்டம் பொங்கல் 2023இன்கீழ், ரூ.493.64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1.78 கோடி சேலைகள், 1.77 கோடி வேட்டிகள் விநியோகிக்கப்பட்டது.
- வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ், நெசவு பணிகளுக்கான கூலி கைத்தறி மற்றும் பெடல்தறி சேலைக்கு தலா ரூ.26.67ஆகவும், கைத்தறி மற்றும் பெடல்தறி வேட்டிக்கு தலா ரூ.12.36 ஆகவும் உயர்வு.



- 2022-2023ஆம் கல்வியாண்டுகளில் விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ், இணைக்கான ரூ.327.44 கோடி ஒதுக்கீட்டில் 4 இணைக்கான 534.15 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் வழங்கப்பட்டு 42.24 இலட்சம் மாணாக்கர்கள் பயன்.
- சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ், நெசவு பணிகளுக்கான கூலி கைத்தறி மற்றும் பெடல் தறி கேஸ்மெண்ட்டுக்கு தலா ரூ.4.89 ஆகவும், கைத்தறி டிரில்லுக்கு ரூ.4.69 ஆகவும் உயர்வு.
- நெசவாளர் முத்ரா திட்டத்தின் கீழ், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் குறைந்தபட்சம் ஒரு பருத்தி இரக தறிக்கு ரூ.50,000 வீதம், ஒரு பட்டு இரக தறிக்கு ரூ.1,00,000 வீதம் கடன்.
- 24,684 முத்ரா கடன் விண்ணப்பங்களுக்கு ரூ.120.80 கோடி கடன் முத்ரா வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது.
- 857 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஆகியவற்றிற்கு நிலுவையிலுள்ள தள்ளுபடி மானியத் தொகை ரூ.160.11 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- கைத்தறி இரகங்களை அயல்நாட்டிற்கு ஏற்றுமதி செய்து மிகச் சிறப்பான பங்களிப்பினை வழங்கிய முதல் மூன்று கைத்தறி ஏற்றுமதி நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- 2021-2022ஆம் ஆண்டு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.14.02 கோடி வட்டி மானியம்.
- 2022-2023ஆம் ஆண்டு ரூ.11.96 கோடி வட்டி மானியம், 757 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பயன்.
- தமிழ்நாடு அரசின் சீரிய நடவடிக்கையால், காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா கைத்தறி பட்டு பூங்கா புத்துயிர் பெற்று, 135 தறிகள் நிறுவப்பட்டு, 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- 6 புதிய வட்டார நிலை குழுமங்களில் 1,255 கைத்தறி நெசவாளர்களுக்கு தறிகள் மற்றும் உபகரணங்களும், 42 நெசவாளர்களுக்கு தறிக்கூடங்களும், 80 நெசவாளர்களுக்கு சூரிய மின்சக்தி விளக்குகள் ரூ.158.60 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.
- ரூ.933.94 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், ரூ.888.71 இலட்சம் ஒன்றிய அரசு நிதி மற்றும் ரூ.45.23 இலட்சம், பயனாளிகள் பங்களிப்புடன், கூடுதலாக 8 குழும வளர்ச்சித் திட்டங்கள் அமைப்பதற்கு ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- 73,306 கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்க ரூ.6.10 கோடி தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு விடுவிப்பு.
- 1,38,097 விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மற்றும் மானியத்துடன் மின்சாரம் வழங்க ரூ.370.46 கோடி தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு விடுவிப்பு.
- 246 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் 406 சிறப்பு காலமுறை ஊதிய பணியாளர்கள் பணிநிரந்தரம்.
- நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிந்து வரும் நிரந்தரப் பணியாளர்களுக்கு 5ஆவது ஊதிய விகிதம் நிர்ணயம் செய்வதற்கு அரசால் குழு அமைக்கப்பட்டு, 1,033 பணியாளர்கள் பயன்.
- காஞ்சிபுரம் சரகத்திலுள்ள 22 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்பெறும் வகையில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மின்னணு ஜக்கார்டு இயந்திரங்கள் பராமரிப்பு சேவை மையம் செயல்பட்டு வருகிறது.
- மாநில அளவிலான சிறந்த பருத்தி மற்றும் பட்டு நெசவாளர்களுக்கான பரிசுத் தொகை ரூ.4.50 இலட்சம் அளவிற்குக் காசோலைகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.
- கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெறும் காசுக்கடனுக்கான வட்டி சுமையைக் குறைக்க ரூ.10.73 கோடி வட்டி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.
- நெசவாளர்களின் வடிவமைப்புத் திறனை மேம்படுத்திட நெசவாளர் சேவை மையம் மூலம் 300 நெசவாளர்களுக்கு வடிவமைப்புத் திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- 300 கைத்தறி நெசவாளர்களுக்கு கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம், மதுரை மற்றும் நடேசன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம், சென்னை மூலமாக மின் வணிகப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- தேசிய வடிவமைப்பு நிறுவனம் (NID) மற்றும் தேசிய உடையலங்கார தொழில்நுட்பக் கல்லூரிகளில் (NIFT) பயின்ற



வடிவமைப்பாளர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பட்டுப் பாவாடை சட்டைகள், லினன் சேலைகள், இயற்கை பருத்தியினால் தயாரிக்கப்பட்ட குழந்தை ஆடைகள் "தமிழ் தறி" எனும் பெயரில் சிறப்பு தொகுப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

- காஞ்சிபுரம் கோ-ஆப்டெக்ஸில் சுத்த பட்டு, சுத்த ஜரிகை சேலைகளின் ஜரிகை தரம் பரிசோதிக்கப்பட்டு, பட்டுச் சேலைகளில் ஜரிகை உத்தரவாத அட்டை இணைக்கப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது.
- இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான ஆர்கானிக் ஆடைகள் உயர்ந்த தரத் தன்மைகளான சருமத்திற்கு இதம், மிருதுத் தன்மை மற்றும் எளிதாக தூய்மைப்படுத்துதல் ஆகிய அம்சங்களுடன் அறிமுகப்படுத்தப்பட்டு, சென்னையிலுள்ள கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் ஐந்து விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
- சென்னை மற்றும் சேலத்தில் நடைபெற்ற பட்டுத் திருவிழாவில் ரூ.2.10 கோடி மதிப்பிலான பட்டு இரகங்கள் விற்பனை.
- கோயம்புத்தூர், சர்தார் வல்லபாய் பட்டேல் சர்வதேச ஜவுளி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் 350 விற்பனை பணியாளர்களுக்கு விற்பனை திறன் மேம்படுத்தப் பயிற்சி.
- தமிழ்நாட்டில் இயங்கும் ஆறு கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் 75 நிரந்தரப் பணியாளர்களுக்கு 12 சதவிகித ஊதிய உயர்வு நடைமுறைப்படுத்தப்பட்டு, பயன் பெற்று வருகின்றனர்.
- நாமக்கல் மாவட்டம், இராசிபுரத்தில் புதியதாக அரசு பட்டுக்கூடு அங்காடி துவங்கப்பட்டு, 112.345 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் ரூ.589.29 இலட்சம் மதிப்பில் பரிவர்த்தனை செய்யப்பட்டு இப்பட்டுக்கூடு அங்காடியில் அரசுக்கு ரூ.8.84 இலட்சம் வருவாய்.
- கோ-ஆப்டெக்ஸ் முதல் முறையாக புதிய வடிவமைப்பு இரகங்களை வடிவமைப்பாளர் தொகுப்பு, தனித்தன்மை இரகங்கள் தொகுப்பு, பாரம்பரிய இரகங்கள் தொகுப்பு மற்றும் விருது பெற்ற இரகங்களின் தொகுப்பு என்ற பெயர்களில் தீபாவளி 2022 விற்பனையை மேம்படுத்த ஏதுவாக 25 கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் அறிமுகம்.
- கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ரூ. 367.82 கோடி விற்பனையினை ஈட்டியுள்ளது.
- பட்டு சேலைகள், பட்டு ஸ்டோல்கள், கைத்தறி மற்றும் கோரா சேலைகள் மற்றும் வீட்டு அலங்கார துணிகள் ஆகிய இரகங்களுக்கு 316 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் புதிய இரகங்கள் அறிமுகம்.
- ரூ.158.63 இலட்சம் செலவில் ஒரு தேசிய கைத்தறி கண்காட்சி, நான்கு மாநில கைத்தறி கண்காட்சிகள் மற்றும் இரு மாவட்ட கைத்தறி கண்காட்சிகள் நடத்தப்பட்டன.
- கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தனித்துவமான "இந்தியாவின் கைத்தறி இரகங்கள்" (Handlooms of India) என்ற பெயரில் விற்பனை நிலையம் துவக்க திட்டமிட்டு, இந்தியா முழுவதும் 8 மாநிலங்களில் உள்ள கைத்தறி இரகங்கள் காட்சிப்படுத்தப்பட்டு வாடிக்கையாளர்களை கவரும் வகையிலும் கைத்தறி இரகங்களின் சிறப்பை அறிந்து கொள்ளவும் புதிய விற்பனை நிலையம்.
- இந்தியாவில் உள்ள தலைமை கூட்டுறவு சங்கங்களில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில்

முதன்முறை வாடிக்கையாளர்களின் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கு கட்டணமில்லா தொலைபேசி எண் சேவை அறிமுகம்.

- தமிழ்நாடு முழுவதும் 97 தொழில்முனைவோர்கள் சிறிய அளவிலான ஜவுளிப்பூங்காக்கள் (Mini Textile Parks) அமைத்திட விருப்பம் தெரிவித்துள்ளனர்,
- சென்னையில் ஜவுளி நகரம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் முழுமைத் திட்டம் தயாரிப்பதற்கு ரூ.1 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, ஜவுளி நகரம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- முதன்முறையாக தமிழ்நாடு அரசின் ஜவுளித் துறை,மத்திய அரசின் ஜவுளி அமைச்சகம் மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்புடன் இணைந்து 25.11.2022 மற்றும் 26.11.2022 ஆகிய தேதிகளில் சென்னை ஓட்டல் ஃபெதர்ஸில் தொழில்நுட்ப ஜவுளிகள் குறித்த பன்னாட்டு கருத்தரங்கு நடைபெற்றது.
- ரூ.21 கோடி ஒதுக்கீட்டில், நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு தலா ரூ.4 இலட்சம் வீதம் மானியம் வழங்கப்படுகிறது.
- ஜப்பான் நாட்டின் டோக்கியோவில் நடைபெற்ற ஜப்பான்டெக்ஸ்-2022 என்ற பன்னாட்டு ஜவுளி கண்காட்சியை தமிழ்நாடு அரசு பார்வையிட்டு, பல்வேறு ஜவுளி உற்பத்தி நிறுவனங்கள், ஜவுளி இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களை சந்தித்து, தமிழ்நாட்டில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்டு தமிழ்நாட்டில் ஜவுளித் தொழில் வளர்ச்சிக்கு இவ்வரசு சீரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.
- ஜவுளித் துறையில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை வளர்ச்சியடையச் செய்வதற்காகவும், இத்துறையின் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்கவும், தொழில்துறையில் முன்னோடிகள், ஆராய்ச்சி மற்றும் கல்வித்துறை சார்ந்த வல்லுநர்கள் அடங்கிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- 6 கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் நிரந்தர நிருவாக மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு 7ஆவது ஊதிய குழு பரிந்துரையின்படி கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களின் ஊதியத்தில் 12 சதவிகிதம் அதிகரிப்பு.
- துணிநூல்துறையின்கட்டுப்பாட்டில்இயங்கிவரும் அண்ணா, பாரதி, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் நிரந்தர தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.2,500வீதம் ஊதிய உயர்வு வழங்கியதைத் தொடர்ந்து 421 நிரந்தர தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.
- 6 கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூலின் தரத்தை மேம்படுத்துவதுடன் உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில் ரூ.2,650.03 இலட்சம் மதிப்பில் 10 ஆட்டோ கோனர் (Auto Coner) இயந்திரங்கள், ரூ.204 இலட்சம் மதிப்பில் 6 நூல் பதப்படுத்தும் இயந்திரங்கள் (Yarn Conditioning Machine) மற்றும் ரூ.272 இலட்சம் மதிப்பில் 2 Compact Spinning ஆகிய இயந்திரங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை.
- 60 வயதினை எய்திய 26,434 நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியமாக மாதந்தோறும் ரூ.1,000/- வீதம் ரூ.65.54 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- 60 வயதுக்கு முன்னர் காலமான 1,149 நெசவாளர்களின் நியமனதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதந்தோறும் ரூ.1,000வீதம் ரூ.3.03 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.53 கோடி கூடுதல் செலவினத்தில், தற்போது வழங்கப்பட்டு வரும் விலையில்லா மின்சாரம் இரண்டு மாதத்திற்கு கைத்தறி நெசவாளர்களுக்கு 200 அலகுகள் என்பது 300 அலகுகளாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 அலகுகள் என்பது 1,000 அலகுகளாகவும் உயர்வு.
- பாரதி, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளில், தடையில்லா மின்சாரம் கிடைப்பதற்கு ஏதுவாக, 11 கிலோ வோல்ட் தனி உயர் மின்னழுத்த பாதைகள் TANGEDCO மூலம் நிறுவுவதற்கு ரூ.175 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.
- ரூ.175 இலட்சம் மதிப்பில் 500 முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு பவர் டில்லர்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.
- தனி பட்டுப்புழுவளர்ப்பு குடில் அமைத்த 838 பட்டு விவசாயிகளுக்கு ரூ.986.880 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- 10 பட்டு முறுக்கேற்றும் அலகுகள் நிறுவிடும் தனியார் தொழில்முனைவோர்களுக்கு

உதவித் தொகை வழங்குவதற்காக மாநில அரசால் ரூ.24.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, 1 பட்டு முறுக்கேற்றும் அலகு நிறுவிய தொழில்முனைவோருக்கு மாநில அரசின் பங்குத்தொகை ரூ.2.436 இலட்சம் திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

❖ கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் புதியதாக அமைக்கப்படவுள்ள 100 இலட்சம் பட்டு முட்டைகள் பதனம் செய்யும் திறன் கொண்ட பல்நிலை குளிர்பதன அலகின் கட்டுமானப் பணிகளுக்காக மாநில அரசின் பங்குத்தொகை ரூ.120 இலட்சம் நிதி பொதுப்பணித்துறைக்கு விடுவிக்கப்பட்டு பணிகள் முடிவுற்றது.

❖ நாமக்கல் மாவட்டம் இராசிபுரத்தில் புதியதாக அரசு பட்டுக்கூடு அங்காடி துவங்கப்பட்டு, 158.044 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் ரூ.822.784 இலட்சம் மதிப்பில் பரிவர்த்தனை செய்யப்பட்டு, இப்பட்டுக்கூடு அங்காடியில் வசூலிக்கப்பட்ட செவித்தொகைமூலம் அரசுக்கு ரூ.12.342 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது.

❖ தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் துவங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, பொன்விழாவை சிறப்பாக கொண்டாடும் விதமாக தமிழக அரசு ரூ.1 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது.

❖ மாமல்லபுரம் கைவினை சுற்றுலா கிராமம் கைவினைஞர்களுக்கான உலக பிரசித்தி பெற்ற மையமாக திகழும் வகையில், மாமல்லபுரத்தின் நுழைவு வாயிலில் கைவினை சுற்றுலா கிராமத்திற்கான பிரமாண்டமான சிற்பகலைத் தூண் (ஸ்தூபி) அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.07.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

❖ கள்ளக்குறிச்சி மரச்சிற்பம், கருப்பூர் கலம்காரி ஓவியம், தஞ்சாவூர் நெட்டி வேலை, அரும்பாவூர் மரச்சிற்பம் போன்ற கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பதிவகம் மூலம் பெறப்பட்ட புவிசார் குறியீடு அங்கீகார சான்றிதழ்களை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் வெளியிடப்பட்டது.

❖ துபாய் எக்ஸ்போ திடலில் அமைந்துள்ள இந்திய கூட்டரங்கில் தமிழ்நாடு வாரமாக நடைபெற்ற தொழில்துறை சார்பான கண்காட்சியினை (பூம்புகார் கைவினைப் பொருட்கள் காட்சிப்படுத்துதல்) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 25.03.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

❖ சுவாமிமலை, நாச்சியார்கோவில், தஞ்சாவூர், மதுரை, வாகைக்குளம், காஞ்சிபுரம், அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி, தம்மம்பட்டி, அரும்பாவூர் மற்றும் ஆசனூர் ஆகிய இடங்களில் ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் தலா ரூ.60 இலட்சம் செலவில் பொது வசதி மையங்கள் அமைக்கப்பட்டு, இம்மையங்களின் மூலம் தோராயமாக 5,000 கைவினைஞர்கள் பயன்.

❖ ரூ.47 இலட்சம் செலவில், திருநெல்வேலி மாவட்டம் பத்தமடையில் கோரைப் பாய்கள் மற்றும் விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் களிமண் பொம்மைகள் கைத்திறத் தொழிலுக்கான இயந்திரங்களுடன் கூடிய 2 பொது வசதி மையங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.04.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டு, இம்மையங்களின் மூலம் சுமார் 2,500 கைவினைஞர்கள் பயனடைவார்கள்.

❖ 44ஆவது உலக சதுரங்கப் போட்டியை முன்னிட்டு மாமல்லபுரத்தில் துவக்கப்பட்ட கண்காட்சியில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட "மாமல்லபுரம் கடற்கரை கோயில்" மற்றும் "சதுரங்க தம்பி" போன்ற கலைப்பொருட்களுடன் திருவள்ளுவர், பாரதியார் போன்ற தமிழ் சார்ந்த பெரியோர்களின் சிலைகள், வரலாற்று சின்னங்கள், ஓவியங்கள் கண்காட்சியின் மூலமாகவும் பூம்புகார் விற்பனை நிலையங்கள் வாயிலாகவும் விற்பனை செய்யப்பட்டது.

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.10.2021 அன்று "ஆதிரை கலெக்சன்ஸ்" எனும் பெயரில் பிளாக் பிரிண்ட் முறையில் அச்சிட்டபட்டுப்புடவைகள், மெல்லியரக காட்டன் புடவைகள், புதிய வண்ணக்கலவை மற்றும் வடிவமைப்புகளுடன் கூடிய மெத்தை விரிப்புகள் மற்றும் போர்வை இரகங்கள் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ 7ஆவது தேசிய கைத்தறி தினத்தையொட்டி ரூ.26.83 இலட்சத்திற்குக் கைத்தறி விற்பனை.

❖ ரூ.117 இலட்சம் ஒப்படைப்பில் மாநில அளவில் 6 கைத்தறி கண்காட்சி நடத்தப்பட்டு ரூ.329.18 இலட்சம் மதிப்பிற்குக் கைத்தறி விற்பனை.

❖ இளைய தலைமுறையினரைக் கவரும் வகையில் ஆன்ட்ராய்டு மற்றும் IOS வழியில் செயல்படும் "tnkhadi" எனும் கைப்பேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. இணையவழியாக ரூ.2.86 இலட்சம் மதிப்பிலான காதி கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖



கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் "சென்னை சங்கமம்- நம்ம ஊரு திருவிழா" தொடங்கி வைத்தல் - 13.01.2023



சிவகங்கை மாவட்டத்தில், பெரியார் நினைவு சமத்துவபுரத்தை திறந்தவைத்து, பயனாளிகளுடன் உரையாடல் - 08.06.2022



மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

திரு. மா.சுப்பிரமணியன்

அவர்கள்

- சென்னை, பெரியார் நகர், அரசு புறநகர் மருத்துவமனை ரூ.652.82 இலட்சத்தில் 300 படுக்கைகள் கொண்ட கோவிட் மருத்துவமனையாக மாற்றம்.
- சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில், ரூ.34.60 கோடியில் நவீன Robotic அறுவை சிகிச்சை மையம்.
- விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி மற்றும் அரியலூர் ஆகிய 7 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 150 மருத்துவ மாணவர்கள் சேர்க்கைக்கும், இராமநாதபுரம், திருப்பூர், நாமக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய 4 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 100 மருத்துவ சேர்க்கைக்கும் தேசிய மருத்துவ ஆணையம் அனுமதி.
- அரசு உட்கட்டமைப்பு, மனித சக்தியை உருவாக்குவதை விரைவுபடுத்தியதன் வாயிலாக நடப்புக் கல்வியாண்டில் 1,450 மருத்துவ மாணவர்கள் சேர்க்கைக்கு வழிவகுத்துள்ளது.



- அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் 200ஆக உயர்வு.
- 15 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 40 சிறப்புப் பிரிவுகளில் 146 பட்ட மேற்படிப்பு இடங்கள், 6 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 11 சிறப்புப் பிரிவுகளில் 21 பட்ட மேற்படிப்பு இடங்கள் கூடுதலாகத் தொடக்கம். இந்த கல்வியாண்டில் 84 மாணவர் சேர்க்கையுடன் 22 பட்ட மேற்படிப்பு தொடக்கம்.
- அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ஒட்டுமொத்த சேவைகளின் தகவல்கள் குறித்த டிஜிட்டல் காட்சி பலகை அமைத்தல்.
- அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்ட முதியோர்கள் அனைவருக்கும் புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள்.
- அரசின் தீவிர நடவடிக்கையால், அகில இந்திய இட ஒதுக்கீட்டில் 15% இளநிலை மருத்துவ இடங்கள், 50% பட்ட மேற்படிப்பு இடங்களிலும், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீட்டை நடப்புநிதியாண்டு முதல் நீதிமன்ற உத்தரவிற்கிணங்க இந்திய அரசு அமல்படுத்தியது.
- அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு மாணவர் சேர்க்கையில் 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு. 902 மருத்துவ இடங்களும், 226 பல் மருத்துவ இடங்களும் ஒதுக்கீடு. இம்மாணவர்களுக்கான விடுதிக் கட்டணம் உட்பட அனைத்து மருத்துவப் படிப்பிற்கான செலவினையும் அரசே ஏற்கும் வகையில், ரூ.16 கோடியில் சுழல் நிதி.
- அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் கொரோனா தொற்றுநோயை நிருவகிப்பதற்காக கோவிட் தனிமைப்படுத்தும் வார்டுகள் மற்றும் RTPCR கூடிய ஆய்வகங்கள்.
- கோவிட் தொற்றுநோய் மேலாண்மைக்காக, அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், கோவிட் சிகிச்சைக்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்புகளுடன் கூடிய போஸ்ட் கோவிட் கிளினிக்குகள்.
- மதுரை மருத்துவக் கல்லூரி மருந்தியல் கல்லூரியில் எம்.பார்ம் முதுநிலை இடங்கள் 45 ஆக உயர்வு.
- 22 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மனநலம் குன்றிய ஆதரவற்ற நோயாளிகளுக்கான மீட்பு சேவைகள் மையம்.
- குழந்தைகள் இணைய அடிமை நோய்க்கு ஆளாவதைத்தடுக்க அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மன நல நிபுணர் குழுவால் சிறப்பு ஆலோசனை.
- அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதியோர் மற்றும் மன நலம் குன்றியவர்களுக்கு அறிவாற்றல் மறுவாழ்வுக்காகத் தினசரி பராமரிப்பு மையங்கள்.
- அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பிரசவத்திற்குப் பிந்தைய வார்டுகளில் பச்சிளங் குழந்தைகளுக்குக் காதுகேட்கும் திறன் பரிசோதனை சேவைகள்.
- தாம்பரம் அரசு நெஞ்சக மருத்துவமனையில் நுரையீரல் மறுவாழ்வு மையம்.
- சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, மருத்துவமனையில் அமைந்துள்ள ஸ்டெம் செல் ஆராய்ச்சி மையம் ரூ.2.44 கோடி செலவில் வாழ்வூட்டும் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித் துறையாக மேம்பாடு.
- அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதுகுத் தண்டு பாதிப்பும் மற்றும் இதர நோய்களால் படுத்த படுக்கையாக இருக்கும் காரணத்தினால் ஏற்படும் உடல் புண் சிகிச்சைக்காக 10 பிரத்தியேக படுக்கைகளுடன் தனி சிகிச்சைப் பிரிவு.
- ரூ.230 கோடி மதிப்பீட்டில் தென் சென்னையில் புதிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை.

மருத்துவக் கல்வி இயக்ககம்

- ரூ.120 கோடியில், காரப்பேட்டை, காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் புற்றுநோய்க்கான





சிறப்பு மையம். மேலும், இம்மருத்துவமனையின் சிறப்பு மையக் கட்டடத்தின் இரண்டாவது மாடியில் 750 படுக்கைகளுடன் கூடுதல் தளங்கள் கட்ட ரூ.100 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுபணிகள் நடைபெற்றுவருகின்றன.

- சென்னை, கலைஞர் கருணாநிதி நகர், அரசு புனர்வாழ்வு மருத்துவமனையில் ரூ.27.95 கோடியில் ஒப்புயர்வு மையம்.
- கலைஞர் கருணாநிதி நகர் தொகுதிக்கு மருத்துவ எரிவாயு குழாய் இணைப்பு அமைப்பு மற்றும் மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கும் மற்றும் நியுரோ சயின்ஸ் பிளாக் கட்டடத்திற்கும் முறையே ரூ.4.94 கோடி மற்றும் ரூ.60 கோடி வழங்கி ஆணை.
- ரூ.71.88 கோடியில், அரசு புறநகர் மருத்துவமனையில் பெரியார் நகர் முழு உடல் பரிசோதனை நிலையத்திற்கு கட்டடம்.
- ரூ.1 கோடியில், எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் அரிதான மரபணு நோய்களைக் கண்டறிய பிரத்யேக சிறப்பு மரபணு ஆய்வகம்.
- ரூ.50.16 கோடியில், 17 மருத்துவக் கல்லூரிகளில் நவீன திறன் மேம்பாடு நிலையங்கள் உருவாக்கப்பட்டு, மருத்துவர்களுக்கும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி.
- ரூ.11.74கோடியில், CeMONC சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைக்க நிதி ஒதுக்கீடு.
- 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடாக மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்பதற்கு கடந்த ஈராண்டில் 1,137 மாணவ, மாணவியர்களுக்கு மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்பதற்கு வசதியாக ரூ.1.68 கோடி மதிப்பீட்டில் கையடக்க கணினிகள்.
- ரூ.125 கோடி ஒதுக்கீட்டில், சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில், புதிய உயர் அடுக்கு கட்டடம்.
- ரூ.24 கோடி ஒதுக்கீட்டில், சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில் CeMONC கான புதிய கட்டடம்.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்

- அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் ரூ.18.56 கோடி நிதியில் 70 PSA Plant அமைப்பு.
- புதியதாக உருவாக்கப்பட்ட 6 மாவட்டங்களுக்கு புதிய இணை இயக்குநர் நலப்பணிகள் பணியிடங்கள் உருவாக்கம்.
- ஒப்பந்த முறையில் பணியாற்றி வந்த 250 செவிலியர்களுக்குப் பணி நிரந்தரம்.
- 6 மாவட்ட அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையக் கட்டடங்கள் கட்ட ரூ.41.34 கோடி ஒதுக்கீடு.
- 5 மாவட்ட அரசு மருத்துவமனைகளில் அறுவை அரங்குடன் கூடிய கண் சிகிச்சைப் பிரிவு கட்டடங்கள் கட்ட ரூ.3 கோடி ஒதுக்கீடு.

- கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், சேலம், அரியலூர் மாவட்ட அரசு மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த அவசரகால சிகிச்சை மையக் கட்டடங்கள் கட்ட ரூ.13.53 கோடி ஒதுக்கீடு.
- அரூர், திண்டிவனம் அரசு மருத்துவமனைகளில் கலப்பு உயர் தீவிர சிகிச்சை பிரிவுக் கட்டடங்கள் கட்ட ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு.
- கொரோனா-19 பெருந்தொற்று காலத்தில் உயிரிழந்த 101 அரசு முதல் நிலை பணியாளர்கள் / 23 தனியார் முதல்நிலை பணியாளர்களுக்கு பிரதான் மந்திரி கரிப் கல்யாண் திட்டம் வாயிலாக ரூ.62 கோடி ஒதுக்கீடு.
- இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு மருத்துவமனை, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை, திண்டுக்கல் மாவட்டம், பழனி அரசு மருத்துவமனை, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அரசு மருத்துவமனை, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அரசு மருத்துவமனை, கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை, கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனை, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை, திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தமல்லி அரசு மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.78.17 கோடி ஒதுக்கீடு.
- காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், தென்காசி, இராணிப்பேட்டை, வாலாஜாபேட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள அரசு தலைமை மருத்துவமனைக்கு மாவட்ட தொடக்க நிலை இடையூட்டு சேவை மையக் கட்டடங்கள் கட்ட ரூ.5.70 கோடி ஒதுக்கீடு.
- அரியலூர், செங்கல்பட்டு, திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, கரூர், கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், நாமக்கல், புதுக்கோட்டை, இராமநாதபுரம், நீலகிரி, திருநெல்வேலி, திருவள்ளூர், திருப்பத்தூர், திருப்பூர், வேலூர், விழுப்புரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களின் அரசு மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்வு.
- ரூ.1,018.85 கோடி நிதி ஒதுக்கீட்டில், அரியலூர், செங்கல்பட்டு, திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, கரூர், கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், நாமக்கல், புதுக்கோட்டை, இராமநாதபுரம், நீலகிரி, திருநெல்வேலி, திருவள்ளூர், திருப்பத்தூர், திருப்பூர், வேலூர், விழுப்புரம், விருதுநகர், தென்காசி ஆகிய மாவட்டங்களின் அரசு மருத்துவமனைகள், தலைமை மருத்துவமனைகளுக்கு இணையாக தரம் உயர்வு.
- ரூ.67.30 கோடி நிதி ஒதுக்கீட்டில், திருச்சி-மணப்பாறை, திருப்பூர் - அவினாசி, தருமபுரி - பெண்ணாகரம், சென்னை - சைதாப்பேட்டை, திருச்சி - லால்குடி மற்றும் துறையூர், தஞ்சாவூர், பட்டுகோட்டை, தேனி - கம்பம் ஆகிய மாவட்டங்களின் மருத்துவமனைகளில் தாய்சேய் நலக்கட்டடம்.
- ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், திருச்சி - ஸ்ரீரங்கம் மற்றும் கோயம்புத்தூர் - மேட்டுப்பாளையம் ஆகிய மாவட்டங்களின் அரசு மருத்துவமனைகளில் நோயுற்ற பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள்.
- ரூ.11.62 கோடி மதிப்பீட்டில், சிவகங்கை-திருப்பத்தூர், விருதுநகர் - சாத்தூர், கடலூர் - விருத்தாச்சலம், திருவண்ணாமலை - செங்கம், தருமபுரி - பாலக்கோடு ஆகிய மாவட்டங்களின் அரசு மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு.
- ரூ.10 கோடி மதிப்பீட்டில், காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடங்கள்.
- ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில், திருநெல்வேலி மாவட்டம், களக்காடு அரசு மருத்துவமனைக்கு விஷமுறிவு சிசிச்சை மையம்.
- ரூ.5 கோடி மதிப்பீட்டில், திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அரசு மருத்துவமனையில் புதிய விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு.
- ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், தென்காசி மாவட்டம், செங்கோட்டை அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு அலகு.

- ரூ.20.78 இலட்சம் செலவில், கடலூர், காஞ்சிபுரம், ஈரோடு, பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான பதிவேடுகள் நிறுவுதல்.
- ரூ.1.05 கோடி செலவில், சேலம், ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு நவீன பிரேத பரிசோதனை கட்டடம் மற்றும் உபகரணங்கள்.
- ரூ.135 கோடி நிதி ஒதுக்கீட்டில், கடலூர் அரசு மருத்துவமனையில் 100 படுக்கைகள் மற்றும் திண்டுக்கல், மயிலாடுதுறை, கிருஷ்ணகிரி ஆகிய அரசு தலைமை மருத்துவமனைக்கு 50 படுக்கைகள் கொண்ட தீவிர அவசர சிகிச்சை பிரிவு.
- ரூ.12.50 கோடி நிதி ஒதுக்கீட்டில், திருநெல்வேலி - வள்ளியூர், சேலம் - மேட்டூர் அணை, சென்னை - சைதாப்பேட்டை, திருவள்ளூர் - திருத்தணி, செங்கல்பட்டு - தாம்பரம், திருப்பத்தூர், திண்டுக்கல் - பழனி, திருச்சி - மணப்பாறை, கோயம்பத்தூர் - பொள்ளாச்சி, மதுரை - உசிலம்பட்டி, திருவண்ணாமலை - செய்யார் ஆகிய அரசு மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம்.
- ரூ.4 கோடி செலவில், தேனி மாவட்டம், உத்தமபாளையம் அரசு மருத்துவமனை மேம்படுத்துதல்.
- ரூ.8 கோடி செலவில், தேனி மாவட்டம், பெரியகுளம் மாவட்ட தலைமை மருத்துவமனை மேம்படுத்துதல்
- ரூ.10 கோடி செலவில், புதுக்கோட்டை, திருமயம் அரசு மருத்துவமனைக்கு ஒருங்கிணைந்த அவசர சிகிச்சை பிரிவு.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்

- 2021, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் பவானி (3,211 காப்பீட்டு நபர்கள்), பூதலூர் (2,853 காப்பீட்டு நபர்கள்), பட்டுக்கோட்டை (2,079 காப்பீட்டு நபர்கள்), துரைசாமிபுரம் (3,950 காப்பீட்டு நபர்கள்), பரமக்குடி (4,425 காப்பீட்டு நபர்கள்), பர்கூர் (8,307 காப்பீட்டு நபர்கள்), மணச்சநல்லூர் (4,150 காப்பீட்டு நபர்கள்), பெரம்பலூர் (6,304 காப்பீட்டு நபர்கள்), ஏற்காடு (1,200 காப்பீட்டு நபர்கள்), அரவக்குறிச்சி (4,021 காப்பீட்டு நபர்கள்), ஒட்டன்சத்திரம் (3,486 காப்பீட்டு நபர்கள்), அத்திப்பட்டு (6,102 காப்பீட்டு நபர்கள்), ஊத்துக்கோட்டை (2,677 காப்பீட்டு நபர்கள்) ஆகிய இடங்களில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் திறப்பு.

தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டம்

- ரூ.148.29 கோடி செலவில் துணை சுகாதார நிலையங்கள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகளில் பல்வேறு திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ரூ.125 கோடியில், சென்னை- கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயர் சிறப்புச் சிகிச்சை வழங்க புதிய கட்டடம் மற்றும் கருவிகள்.
- ரூ. 65 கோடியில், சென்னை- ராஜீவ்காந்தி அரசு மருத்துவ மருத்துவமனையில் நரம்பியல் சிறப்புச் சிகிச்சை வழங்க புதிய கட்டடம் மற்றும் கருவிகள்.
- ரூ. 32.70 கோடியில், சென்னை கே.கே.நகர் அரசு புனர்வாழ்வு மையத்திற்கு கூடுதல் மனிதவளம், உபகரணங்கள் மற்றும் கட்டடங்கள்.
- ரூ. 11.74 கோடியில், சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாக CEmONC கட்டடம் மற்றும் கருவிகள்.
- ரூ.8 கோடியில், சென்னை, மண்டல கண் மருத்துவ இயல் நிலைய மருத்துவமனைக்கு(RIO) உயர் கண் மருத்துவ இயல் மருத்துவ உபகரணங்கள்.
- ரூ.5 கோடியில், திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அரசு மருத்துவமனையில் மேம்பாட்டு பணிகளுக்காக புதிய கட்டடங்கள் CT scan கருவி மற்றும் மருத்துவ உபகரணங்கள்.
- ரூ.3 கோடியில், கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் அரசு மருத்துவக் கல்லூரிகளில் கட்டன சிகிச்சை பிரிவு.
- ரூ.2.90 கோடியில், சென்னை, பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் கூடுதல் மனிதவளம் கட்டடம் மற்றும் கருவிகள்.



- ரூ.2.30 கோடியில், தருமபுரி மாவட்டம் அரசு மருத்துவமனைக்கு CT scan மற்றும் C – arm உடன் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை மேசை.
- ரூ.1.65 கோடியில், சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை, மற்றும் பெண்களுக்கான சிறப்பு முழு உடல் பரிசோதனை.
- ரூ.1.27 கோடியில், தரம் மேம்பாட்டு பணிகளை ஒருங்கிணைக்க மருத்துவக் கல்லூரி முதல்வர்/ மருத்துவக் கண்காணிப்பாளர் கீழ் 32 சுகாதார மேலாண்மை அலுவலர்கள் நியமனம்.
- ரூ.1.20 கோடியில், புதுக்கோட்டை மாவட்டம்-காரையூர் மற்றும் புதுநகர், சிவகங்கை மாவட்டம்-பூவந்தி, விருதுநகர் மாவட்டம்-தாயில்பட்டி மற்றும் ஜமீன் கொல்லன்கொண்டான், திருவண்ணாமலை மாவட்டம்-மங்களம், தூத்துக்குடி மாவட்டம்-புதுக்கோட்டை மற்றும் தென்காசி மாவட்டம்-செங்கோட்டை ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்த சேமிப்பு அலகு.
- ரூ.1.05 கோடியில், சேலம் மாவட்டம், ஏற்காடு அரசு மருத்துவமனையில் நவீன பிரேத பரிசோதனை கட்டடம் மற்றும் கருவிகள்.
- ரூ.1 கோடியில், அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு லேப்ராஸ்கோப்பி கருவிகள்.
- ரூ.50 இலட்சத்தில், நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நடமாடும் இரத்த சேமிப்பு வாகனம், HPLC கருவி மற்றும் வேதியியல் பொருட்கள்.
- ரூ.40 இலட்சத்தில், திருநெல்வேலி மாவட்டம் - களக்காடு அரசு மருத்துவமனையில் பாம்பு கடி விஷ முறிவு சிகிச்சை மையம்.
- ரூ.30 இலட்சத்தில், தேனி மாவட்டம் - இராஜதானி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேர இலவச சிகிச்சை வழங்கும் பொருட்டு செவிலியர் குடியிருப்பு.
- ரூ.20 இலட்சத்தில், இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு C – arm உடன் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை மேசை.

தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டம்

- 542 கோவிட்-19 அர்ப்பணிப்பு ஆம்புலன்ஸ்கள் மூலம் 6,30,549 பயனாளிகள் பயன்.
- 108 அவசரகால ஊர்திகளின் எண்ணிக்கை 1,353ஆக உயர்த்தப்பட்டு, 16,41,943 பயனாளிகள் பயன்.
- கொரோனா சேவைக்காக, 108 ஆம்புலன்ஸ் பணியாளர்கள் முன்களப் பணியாளர்களாக அறிவிக்கப்பட்டு தலா ரூ.15,000 ஊக்க நிதி.

- நம்மைக் காக்கும் 48 திட்டத்தின் கீழ், 30,086 பயனாளிகள் பயன்.
- ஜி.வி.கே.இ.எம்.ஆர். நிருவாகம் வாயிலாக இலவச அமரர் ஊர்தி மற்றும் இலவச தாய் சேய் நல ஊர்தி சேவைகள்.
- ரூ.484.19 கோடியில், மதுரை, அரசு ராஜாஜி மருத்துவமனை, சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நவீன மருத்துவக் கருவிகள்.
- ரூ.41.64 கோடியில், திருவள்ளூர் - ஆவடி, சேலம் - அம்மாபேட்டை, திருப்பூர் - வேலம்பாளையம்,திருநெல்வேலி-கண்டியப்பேரி மருத்துவமனைகளுக்கு நவீன மருத்துவக் கருவிகள்.
- ரூ.8.31 கோடியில், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு மருத்துவமனை மேலாண்மை பயிற்சி, மருத்துவக் கருவிகளைக் கையாளுதல் பயிற்சி, தொற்றாநோய்கள் கண்டறிதல் மற்றும் தடுப்பு முறைகள் பற்றிய பயிற்சி.
- ரூ.12 கோடியில், இராமநாதபுரம்- பரமக்குடி, தூத்துக்குடி-கோவில்பட்டி,திருச்சி-மணப்பாறை, திருப்பூர் - உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் - பொள்ளாச்சி, திருவாரூர் - மன்னார்குடி, தஞ்சாவூர் - கும்பகோணம், விருதுநகர் - சிவகாசி, சென்னை, ஓமந்தூரார் அரசு பல்நோக்கு சிறப்புமருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளில் கோவிட்-19 பரிசோதனை மையம்.
- ரூ.107.25 கோடியில்,திருவள்ளூர் - ஆவடி, சேலம் - அம்மாபேட்டை, திருப்பூர் - வேலம்பாளையம், திருநெல்வேலி - கண்டியப்பேரி ஆகிய மருத்துவமனைகளில் மூன்றாம் நிலை பராமரிப்பு மருத்துவமனைகளுக்கு புதிய கட்டடங்கள்.
- ரூ.30.11 கோடியில், திருவள்ளூர் - ஆவடி, சேலம் - அம்மாபேட்டை, திருப்பூர் - வேலம்பாளையம், திருநெல்வேலி - கண்டியப்பேரி ஆகிய மருத்துவமனைகளில் இரண்டாம் நிலை பராமரிப்பு மருத்துவமனைகளுக்கு புதிய கட்டடங்கள்.

தொலைப்பேசி மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம்

- கோவிட்-2 ஆவது அலையின் போது 104 தொலைப்பேசி மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம் வாயிலாக அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் ஆக்சிஜன் சிலிண்டர்களுடன் கூடிய படுக்கை வசதிகள் தொடர்புடைய தகவல்கள்.
- கொரோனா தொடர்பாக 6,57,737 அழைப்புகள்.
- 1,10,971 நீட் தேர்வு மாணவர்களுக்குத் தற்கொலை தடுப்பு ஆலோசனை.
- உக்ரைன் போரினால் நாடு திரும்பிய 1,524 மாணவர்களுக்கு மன அழுத்தம் நீங்க ஆலோசனை.
- ஸ்நேகா தற்கொலை தடுப்பு மையத்துடன் 104 மருத்துவ உதவி சேவை மையம் புரிந்துணர்வு ஒப்பந்தம்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம்

- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 6.26 இலட்சம் பயனாளிகள் ரூ.793 கோடி காப்பீட்டுத் தொகையில் சிகிச்சை பெற்று பயன்.
- உயிர்காக்கும் முதலமைச்சர் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் 4 ஆண்டுகளுக்கு ஒரு குடும்பத்திற்குக் காப்பீட்டு தொகை ரூ.1,00,000 வழங்கும் திட்டத்தில் 1.34 கோடி குடும்பங்கள் இணைப்பு. 3.43 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.873.81 கோடியில் சிகிச்சை.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் பயனாளி ஆவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ.1,20,000 ஆக உயர்த்தப்பட்டதன் மூலம், 52.01 இலட்சம் நபர்கள் ரூ.2,392 கோடி காப்பீட்டுத் தொகையில் சிகிச்சை பெற்றுப் பயன்.
- அரசால் அங்கீகரிக்கப்பட்ட 1,414 பத்திரிகையாளர்கள் வருமான உச்சவரம்பின்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இணைப்பு.

- ரூ.382.13 கோடி செலவில் 31,179 நபர்களுக்கு கொரோனா நோய்த் தொற்றுக்கான சிகிச்சை.
- ரூ.594.29 இலட்சம் செலவில் 2,056 நபர்களுக்குக் கருப்பு பூஞ்சை சிகிச்சை.
- ரூ.182.64 கோடி செலவில் 32,23,064 நபர்களுக்கு RT-PCR பரிசோதனை.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், கோவிட்-19 தொற்று பரிசோதனை கட்டணம் ரூ.250 ஆக, குழு மாதிரிகளுக்கு ரூ.75 ஆக, காப்பீட்டுத் திட்டப் பயனாளியாக இல்லாதவர்களுக்குத் தனியார் ஆய்வுக் கூடங்களில் பரிசோதனைக் கட்டணம் ரூ.400 ஆக குறைத்து நிர்ணயம்.
- ரூ.966.05 கோடி காப்பீட்டு தொகையில் 11,920 பயனாளிகளுக்கு உயர் சிறப்பு அறுவை சிகிச்சைகள்.
- இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டத்தின் மூலம் 1,51,020 பயனாளிகளுக்கு ரூ.133.31 கோடி செலவில் சிகிச்சை.

பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை

- மாநில அவசரகால கட்டுப்பாட்டு அறை (SEOC) மற்றும் 24X7 அவசரகால தகவல் தொடர்பு மையம் அமைப்பு.
- மாவட்ட அளவில் 24X7 மணிநேரமும் செயல்படக்கூடிய கட்டளை மையம் (War Room).
- 1,25,127 கோவிட் படுக்கை வசதி.
- கொரோனா காலத்தில் கூடுதலாக 26,126 ஆக்ஸிஜன் படுக்கைகளுடன் 79,618 படுக்கை வசதிகள்.
- கோவிட்-19 தொற்று பரவலைக் கட்டுப்படுத்த 3,075 மருத்துவர்கள், 5,362 செவிலியர்கள், 1,362 மருத்துவ பணியாளர்கள், 626 சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் 5,828 சுகாதார ஊழியர்கள் கூடுதலாக பணியமர்த்தம்.
- கொரோனா மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் பற்றாக்குறை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநில மற்றும் மாவட்டம் வாரியாக ஒருங்கிணைப்பு கட்டளை மையங்களில் கூடுதலாக 8,720 ஆக்ஸிஜன் செறிவூட்டிகள்.
- திரவ நிலை ஆக்ஸிஜன் சேமிப்பு கிடங்குகளின் அளவு 1,513 மெட்ரிக் டன் ஆக உயர்வு.
- நோய் அறிகுறிகள் கண்காணிப்புத் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டு, கூடுதலாக 501 கொரோனா கவனிப்பு மையங்கள், 62 ஆயுஷ் கொரோனா கவனிப்பு மையங்கள் அமைப்பு.
- கொரோனா நோயைப் பரிசோதிக்க அரசு மற்றும் தனியார் அரசு மருத்துவமனைகளில் 342 RT-PCR ஆய்வகங்கள்.
- அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட / வட்ட மருத்துவமனைகளில் 222 PSA நிலையங்கள்.
- மெகா தடுப்பூசி முகாம்கள் வாரந்தோறும் நடத்தப்படுகிறது.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை மற்றும் ஆய்வகங்களின் கட்டணங்கள் திருத்தியமைத்து காப்பீட்டுத் திட்டத்தில் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் வசதி.
- 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம் சிறப்பாக நடைமுறை.
- டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த 25,000 களப்பணியாளர்கள் வாயிலாகக் கொசு ஒழிப்புப் பணி.
- மலேரியா பரவலை 2030ஆம் ஆண்டிற்குள் நிரந்தரமாக நீக்க நடவடிக்கை.
- 1,57,28,139 நபர்களுக்கு மலேரியா நோய்க்கான இரத்த பரிசோதனை செய்யப்பட்டு, மலேரியா கண்டறியப்பட்ட 772 நபர்களுக்குப் பூரண சிகிச்சை.
- தமிழ்நாட்டில் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ரூ.9.62 கோடி நிதி ஒதுக்கீடு. 8,023 யானைக்கால் நோய் நிலை 4இன் பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வீதம் உதவித்தொகை.
- 104 மருத்துவ தகவல் சேவை மையம் வாயிலாக 3.61 இலட்சம் நபர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள்.



- தேசிய ஊரக நலவாழ்வு குழுமத்தின்கீழ், ரூ.22.72 கோடியில் 29 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், மருத்துவ அலுவலர் மற்றும் செவிலியர் குடியிருப்புக் கட்டட கட்டுமானப் பணிகள்.
- நடமாடும் மருத்துவமனை திட்டத்தின் வாயிலாக, 4,64,731 முகாம்கள் நடத்தப்பட்டு 3,46,41,139 பயனாளிகள் பயன்.
- தொலைதூர கிராமங்களுக்கு மருத்துவ சேவையை வலுப்படுத்த 389 புதிய நடமாடும் மருத்துவ வாகனங்களுக்கு தேசிய நலவாழ்வு குழுமம் ரூ.70.02 கோடி நிதி ஒதுக்கீடு.
- கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் மூலம் ரூ.3.85 கோடி ஒதுக்கீட்டில் 385 வட்டாரங்களில் 1,155 மருத்துவ முகாம்கள் நடத்திட ஆணை.
- புதுப்பொலிவுடன் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம். ஆண்டிற்கு 1,250 சிறப்பு முகாம்கள் நடத்தி இதுவரை 2,681 முகாம்கள் நடத்தப்பட்டு 23.09 இலட்சம் நபர்கள் பயன்.
- பெருநகர சென்னை மற்றும் மாநகராட்சிகளில் 95 முகாம்கள் நடத்த ரூ.31.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

மாதவிடாய் கால தன் சுத்தத்திற்கான திட்டம்

- 43.34 இலட்சம் 10 முதல் 19 வயது வரையுள்ள வளர் இளம் பெண்களுக்கு, 8.4 கோடி நாடா இல்லாத சானிட்டரி நாப்கின் பேக்குகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.
- அரசு மருத்துவமனையில் பிரசவிக்கும் தாய்மார்களுக்கு 5.07 இலட்சம் தாய்மார்களுக்கு விலையில்லா சானிடரி நாப்கின்கள்.
- சிறைச்சாலைகளில் உள்ள 3,000 பெண் கைதிகளுக்கும், சென்னை மனநல மருத்துவமனையில் உள்ள 1,900 பெண் உள் நோயாளிகளுக்கும் விலையில்லா சானிட்டரி நாப்கின்கள்.
- ரூ.113.10 கோடி நிதியில் 1,21,96,964 பயனாளிகள் பயன்பெறும் வகையில் சானிடரி நாப்கின்கள் கொள்முதல்.
- பள்ளி சிறார் கண் ணொளி காப்போம் திட்டத்தின்கீழ், 1,55,909 பள்ளி குழந்தைகளுக்குக் கண் பரிசோதனை செய்யப்பட்டு கண் கண்ணாடிகள் வழங்க நடவடிக்கை.
- ரூ.87.50 கோடியில் 4,49,019 பிரசவித்த தாய்மார்கள் பயனடையும் வகையில் 16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம்.
- அயோடின் பற்றாக்குறை இல்லாத தமிழ்நாட்டினை உருவாக்கும் நோக்கில் இல்லந்தோறும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

- "தேசிய சிறார் நலத் திட்டத்தின்"கீழ், 45,895 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், 54,439 அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகளுக்குப் பரிசோதனை செய்யப்பட்டு, 3,269 நோய் கண்டறியப்பட்ட குழந்தைகளுக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளது.
- தேசிய வளரிளம் பருவத்தினர் நலத்திட்டத்தின்கீழ், 2,90,413 வளரிளம் பருவத்தினருக்கு மருத்துவ சேவைகளும் 2,67,309 வளரிளம் பருவத்தினருக்கு ஆலோசனைசேவைகளும்வழங்கப்பட்டுள்ளன.
- பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறையில் 16,733 பணியாளர்களுக்கு பல்வேறு பயிற்சிகள்.
- தடுப்பூசி திட்டத்தின் கீழ், 9.15 இலட்சம் பச்சிளம் குழந்தைகள், 16.00 இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் பயன்.தடுப்பூசி போடுவதில் 99 சதவிகிதம் தொடர் சாதனை.
- தமிழ்நாட்டில் முழுமையாகத் தடுப்பூசி பெற்றவர்களின் எண்ணிக்கை 100 சதவிகிதமாக உயர்வு.
- தமிழ்நாடு போலியோ பாதிப்பு இல்லாத மாநிலமாகத் தொடர்ந்து 18 வருடம் இருந்து வருகிறது.
- 38 மெகா கோவிட் தடுப்பூசி முகாம்கள் வாயிலாக 5,51,30,576 நபர்கள் பயன்.
- 11,82,69,707 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. முதல் தவணையாக 96.56 சதவிகிதமும், இரண்டாவது தவணையாக 90.11 சதவிகிதமும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது மற்றும் முன்னெச்சரிக்கைத் தவணை 89,51,718 (17.07 சதவீதம்).
- அரசு மற்றும் தனியார் கோவிட் மையங்களில் 12,72,21,425 நபர்கள் பயனடைந்துள்ளனர்.
- தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில், 10 புதிய மாவட்டங்களில் புகையிலை கட்டுப்பாட்டு மையங்கள். புகையிலை விடுபடும் மையங்கள் வாயிலாக 12,349 நபர்களுக்கு ஆலோசனை.
- விழிப்புணர்வு கூட்டங்களின் விளைவாக 1,067 பள்ளிகள், 243 கல்லூரிகள் புகையிலையில்லா கல்வி நிறுவனங்களாக அறிவிப்பு.
- தமிழகத்தில் புகையிலையினால் விளையும் தீமைகள் மற்றும் புகையிலை கட்டுப்பாட்டுச் சட்டங்கள் குறித்த 31 பயிற்சிகளின் மூலம் 1,376 பேருக்கு பயிற்சி.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ், ரூ.18,000 நிதியுதவி 12.21 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.1,136.85 கோடி நிதியுதவி.
- அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின் கீழ் 4,848 துணை சுகாதார நிலையங்கள், 1,384 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 460 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 650 ஆயுஷ் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நலவாழ்வு மையங்களாக மாற்றப்பட்டன. மேலும் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளன.
- 4,848 இடைநிலை சுகாதார பணியாளர்கள், 2,448 பலநோக்கு சுகாதாரப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம்.
- தொலைதூர மருத்துவ சேவையானது (இ-சஞ்சீவினி) திட்டத்தில் 369 காணொளி மையங்கள், 5,996 காணொளி கிளை மையங்கள் செயல்பட்டுவருகிறது.இச்சேவையில் 3,12,63,495 பயனாளிகள் பயன்.
- "மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்" மூலம் 95.31 இலட்சம் பயனாளிகள் முதன்முறையாகச் சேவைகள் பெற்றும், 2.11 கோடி பயனாளிகள் தொடர் சேவைகளைப் பெற்று பயனடைந்துள்ளனர்.
- 15ஆவது நிதி ஆணையத்தின் பரிந்துரைக்கேற்ப கிராம மற்றும் நகர்ப்புற சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கும், மருத்துவ உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும், மருத்துவ சேவைகளை வழங்குவதற்கும் ரூ.805.93 கோடி நிதி ஒதுக்கீடு.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை

- இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகத்துடன் இணைக்கப்பட்ட "தரவு அலகு" தொடக்கம்.

- "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தின் கீழ் உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரழிவு நோய்களுக்கு சித்த மருந்துகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- ரூ.32 கோடி செலவில், 110 இந்திய மருத்துவ முறை மருந்தகங்கள் சுகாதார நலவாழ்வு மையங்களாகத் தரம் உயர்வு,
- அருகி வரும் நிலையில் உள்ள மருத்துவ தாவரங்களைப் பாதுகாப்பதற்காக மாநில மூலிகை தாவரம் வாரியத்திற்கும் மற்றும் தமிழ்நாடுவேளாண்மைபல்கலைக்கழகத்திற்கும் இடையே "புரிந்துணர்வு ஒப்பந்தம்".
- செங்கல்பட்டு ஆலத்தூர் டாம்ப்கால் நிறுவனத்தில் சூரிய ஒளி மின்சாரம் பெறுவதற்கான ரூ.70 இலட்சம் செலவில் பணிகள்.
- டாம்ப்கால் மருந்துகளை அரசு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் காதி மற்றும் கிராம தொழில் வாரியம் மூலம் விற்பனை செய்வதற்கான "புரிந்துணர்வு ஒப்பந்தம்".
- அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை இணைப்பு வளாகத்தில் "சித்த மருத்துவ பல்கலைக்கழகம்".
- பரம்பரை வைத்தியர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தை ரூ.1,000லிருந்து ரூ.3,000ஆக உயர்வு.
- நாமக்கல் மாவட்டத்தில் 50 படிக்கை வசதி கொண்ட ஒருங்கிணைந்த சித்த மருத்துவமனை துவக்கப்படும்.
- ரூ.50 இலட்சம் செலவில் காஞ்சிபுரம், ஆலத்தூரில் உள்ள டாம்ப்கால் நிறுவனத்தின் முதல் உற்பத்தி அலகுக்கு கூடுதல் மருந்து தயாரிப்புக்காக இயந்திரங்கள்.
- இந்திய மருத்துவமுறை மருந்துகள் தயாரிக்கும் தனியார் நிறுவனங்களின் மருந்துகளின் தரத்தினை பகுப்பாய்வு செய்து தரச்சான்றிதழ் இந்திய மருத்துவ மற்றும் ஒமியோபதிதுறையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகத்தால் வழங்கப்படுகிறது.
- சென்னை, அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரியில் மூன்று பாடப்பிரிவுகளில் பட்டமேற்படிப்பு துவங்க ஆணை வழங்கப்பட்டு நடப்பாண்டில் இரண்டு பாடப்பிரிவுகளில் பட்ட மேற்படிப்பு துவக்கம்.
- மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் 130 உதவி மருத்து அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமனம்.

தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை

- பயன்பாட்டில் இல்லாத 108 அவசர ஊர்திகளை பிற திட்டங்களுக்கு வழங்கும் வாகன பொது சேர்ம திட்டம்'.
- சுகாதாரத்துறை வாகன மற்றும் உதவித்திட்டம் மூலமாக 107 புகார்களுக்குத் தீர்வு.
- 'சுகாதார துறை வாகன பராமரிப்பு உதவி மற்றும் தகவல் திட்டத்தின் கீழ், குறைகளை திட்டம் மூலம் பெறப்பட்ட 180 புகார்களுக்கு தீர்வு.
- சேவைகளின் தரம் குறித்து வாகன உபயோகிப்பாளர்கள் 4,700 நபர்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டு சேவைகளின் தரம் முன்னேற்றம்.

தேசிய நலவாழ்வு குழுமம்

- "மக்கள் நலப் பதிவு" எனும் சுகாதார தகவல் இயங்குதளம் உருவாக்கம். 6,60,09,980 பயனாளிகளுக்கு அடையாள எண்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 108 அவசரகால ஊர்திகள் சேவையை வலுப்படுத்த, ரூ.69.18 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 188 புதிய வாகனங்கள்.
- ரூ.5.10 கோடி செலவில் 17 புதிய RT-PCR பரிசோதனைக் கருவிகள்.
- சென்னை டி.எம்.எஸ். வளாக பொது சுகாதார ஆய்வகத்தில் ரூ.4 கோடி செலவில் மரபணு பகுப்பாய்வுக் கூடம்.
- நகர்ப்புர கர்ப்பிணித் தாய்மார்கள் பரிசோதனைக்காக ரூ.1.10 கோடி செலவில் 10 நகர்ப்புர ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு 10 அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் கருவிகள்.
- ரூ.56.62 இலட்சம் செலவில் 38 அரசு மருத்துவமனைகளுக்கு நுரையீரல் செயல்பாட்டினை கண்டறியும் ஸ்பைரோ மீட்டர் கருவிகள்.





- கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகளுக்கான தடுப்பூசி சேவைகள் குறுஞ்செய்திகளின் மூலமாக நினைவூட்டும் திட்டம்.
- கோவிட் தொற்று நோய்களின்போது தடையற்ற தாய் சேய் நலசேவைகள்.
- தொற்று நோய் காலத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தேவையான சிகிச்சையும், மகப்பேறுக்கு பின் தொடர் பின் கவனிப்பும் தடையின்றி வழங்கப்பட்டது.
- கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தேவையான உரிய சிகிச்சைகள் குறித்துத் தக்க வழிகாட்டல் சேவைகள்.
- பாலூட்டும் தாய்மார்களுக்குத் தடுப்பூசி செலுத்தியதுடன், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் கோவிட் தடுப்பூசியைப் பரிந்துரைத்துச் செயல்படுத்தியதில் முதல் மாநிலம் தமிழ்நாடு.
- முதன்முறையாகத் திருப்பத்தூர் மாவட்டம், புதூர் நாடு, ஆரம்பச் சுகாதார நிலையத்தில் மலைவாழ் மக்களுக்காகச் சிறப்பு பச்சிளங் குழந்தைப் பிரிவு.
- மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, தஞ்சாவூர் அரசுமிராசுதாரர்மருத்துவமனையிலும் கூடுதல் சிறப்பு பச்சிளங் குழந்தைப் பிரிவு.
- பதினைந்தாவது நிதிக் குழுவின் கீழ், 2021-2022ஆம் நிதியாண்டு முதல் 2025-2026ஆம் நிதியாண்டு வரை 5 ஆண்டுகளுக்கு தமிழகத்திற்குச் சுகாதாரத் துறைக்கான மானியமாக ரூ.4,280 கோடிக்கு ஒப்புதல்.
- ரூ.116.30 கோடி செலவில் பொதுச் சுகாதார உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு நகர்ப்புறங்களில் ஆயுஷ்மான் பாரத் - சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மையங்கள்.
- அவசரகால கோவிட் மேலாண்மைக்கான நிதித் தொகுப்பு-II இன் கீழ், கூடுதல் நிதியாக ரூ.799 கோடி ஒன்றிய அரசு அனுமதித்து, தமிழக அரசின் 40 சதவிகிதம் பங்களிப்பாக ரூ.319.6 கோடி மதிப்பில் செலவிடப்பட்டு சுகாதார உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு தமிழகத்தில் கோவிட்-19 பெருந்தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின் மூலம், 4,848 இடைநிலை சுகாதார பணியாளர்கள், 2,448 பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் ஆண் / சுகாதார ஆய்வாளர் நிலை-2 தேர்வு.
- ரூ.70 கோடி மதிப்பீட்டில் தொலைதூர கிராமங்களுக்கு மருத்துவ சேவையை வலுப்படுத்த 389 புதியதாக நடமாடும் மருத்துவக் குழு வாகனங்கள்.
- ஒன்றிய அரசு நிர்ணயித்த இலக்கை அடைவதற்காக 7,000க்கும் மேற்பட்ட சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்கள் வெற்றிகரமாகச் செயல்பாடு.
- ஆயுஷ்மான் பாரத் - சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மையங்களின் கீழ், ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை

அடைந்தமைக்காக மாநிலத்திற்கு ரூ.100 கோடி கூடுதல் மானியம்.

- ஒன்றியஅரசால்ஏற்படுத்தப்படும்திட்டங்களுக்கு நிதியைப் பெறவும், பிரித்து வழங்கவும், ஒற்றை முறைமை கணக்கு தமிழ்நாட்டில் தேசிய நலக் குழும அலுவலகத்திலும் மற்றும் 3,053 பல்வேறுசெயல்முறைப்படுத்தும்முகவர்களுக்கு ஒரே வங்கியில் பூஜ்ஜிய நிலுவைத் தொகை கணக்குகள் துவக்கம்.
- உயிர் காக்கும் மயக்கவியல் திறன், பேறுகால அவசர பயிற்சி 29 மருத்துவ அலுவலர்கள் உயிர் காக்கும் மயக்கவியல் திறன் பயிற்சியிலும், 7 மருத்துவ அலுவலர்கள் பேறுகால அவசர சேவை பயிற்சி.
- அகில இந்திய அளவில் முதன் மாநிலமாக தமிழ்நாட்டில் பருவநிலை மாற்றத்தால் மக்கள் எதிர்கொள்ளும் சுகாதார பாதிப்புகளை திறம்பட நிவர்த்தி செய்ய மாநில அளவிலான பயிலரங்கு.
- 104 ஹெல்த் ஹெல்ப் லைன் மூலம் மன அழுத்தத்தைப் போக்கும் விதமாக மனநல ஆலோசனை சேவைகளைத் தொடங்கப்பட்டு 1,10,971 மாணவர்களுக்கு ஆலோசனை.
- தேசிய நலவாழ்வு குழுமம் மற்றும் SCARF நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்திட்டதின் மூலம் அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் "முதியோர் மனநலம்" சேவை.
- தேசிய நலவாழ்வு குழுமம் மற்றும் SNEHA நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்தானதன் மூலம் 104 அவசர சேவையில் பணிபுரியும் அனைத்து மனநல ஆலோசகர்களுக்கும் பயிற்சி.
- சென்னை தண்டையார்பேட்டையில், சாலைகளில் அலைந்துதிரியும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து குடும்பத்தினருடன் இணைக்கும் வகையில் அவசர சிகிச்சை மற்றும் மீட்புமையம்.
- தமிழ்நாடு தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ், பணிபுரியும் 7,823 பணியாளர்கள் புற ஆதார முறையிலிருந்து ஒப்பந்த முறைக்கு மாற்றம்.
- செவிலியர் உட்பட 28,110 மருத்துவத்துறை பணியாளர்களுக்கு ரூ.89.82 கோடி செலவில் 30 சதவிகிதம் சம்பள உயர்வு.
- தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ் பணியாற்றும் 30,164 ஒப்பந்தப் பணியாளர்களுக்கு முதன் முறையாக பணித்திறன் மதிப்பீடு.
- கொரோனா பெறுந்தொற்றின் போது கர்ப்பிணித் தாய்மார்களுக்குச் சிறப்பான மருத்துவ சேவை மற்றும் பராமரிப்பு வழங்கியதற்கு ஒன்றிய அரசின், சிறந்த செயல்பாடு, புதிய உத்திக்கான தேசிய உச்சி மாநாட்டில் சிறந்த சேவைக்காக தமிழ்நாட்டிற்கு விருது.
- கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொரோனா தடுப்பூசியைப் பரிந்துரை செய்து வழங்கியதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது. 1,30,652 கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் 5,13,190 பாலூட்டும் தாய்மார்களுக்குத் தடுப்பூசி சேவைகள்.
- கோவிட்-19 இரண்டாம் அலைகால கட்டத்தில், கோவிட்-19 ஒருங்கிணைந்த கட்டளை மையம் உருவாக்கப்பட்டு 72,300 அழைப்புகளுக்கும் மருத்துவமனைகள் மற்றும் படுக்கை வசதிகள் செய்து தருவதற்காக விவரங்கள் வழங்கப்பட்டு, 14,563 அழைப்புகளுக்குப் படுக்கை வசதிகள் செய்யப்பட்டன.
- தேசிய நகர்ப்புர சுகாதார குழுமத்தின் தலா ரூ.1.50 கோடி செலவின் மூலம் 23 நகர்ப்புர ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட நகர்ப்புர சமுதாய நல மருத்துவமனைகளாக தரம் உயர்வு.
- வால்பாறை நகராட்சிக்குட்பட்ட சோலையார் நகர், முடிஸ்நகர் மற்றும் திருநெல்வேலி நகராட்சியிலுள்ள தச்சநல்லூர் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்களாக மேம்பாடு.
- தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவை முன்னெடுப்பு திட்டத்தின் முயற்சியால் 11.12 சதவிகிதம் விபத்துகள் குறைக்கப்பட்டதுடன், விபத்தினால் ஏற்படும் மரணங்களும் 17.75 சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது.
- தேசிய நலவாழ்வு குழுமத்தின் நிதியுதவியுடன் 4 மருத்துவமனைகளில் மகப்பேறு

மற்றும் சேய்நல பிரிவுக் கட்டடங்கள், 3 மருத்துவமனைகளில் அனைத்து துறைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் 3 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள்.

- தேசிய அளவிலான மதிப்பீட்டின் அடிப்படையில், தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்திற்குக் காசநோய் சுமையை 40சதவிகிதம் குறைத்ததற்காக வெள்ளிப் பரிசு, கரூர், கன்னியாகுமரி, நாமக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, விழுப்புரம் ஆகிய 6 மாவட்டங்களுக்குக் காசநோய் சுமையை 20சதவிகிதம் குறைத்ததற்காக வெண்கலப் பரிசு.
- அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின் கீழ், நடைபெற்ற உலகளாவிய சுகாதார பாதுகாப்பு தினத்தினை முன்னிட்டு நாட்டிலேயே அதிகபட்சமாக 22 தொற்றா நோய்களுக்கான 29,88,110 பரிசோதனைகள் மேற்கொண்டதற்காகவும், பிரச்சாரத்தின்போது மூன்றாவது அதிக எண்ணிக்கையிலான 85,514 ஆரோக்கிய அமர்வுகளை நடத்தியதற்காகவும் தமிழ்நாடு இரண்டு விருதுகளை வென்றுள்ளது.
- பொது சுகாதாரத் துறையின் மைல் கற்களில் ஒன்றான "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற மகத்தான திட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 05.08.2021 அன்று தொடங்கப்பட்டு, 1,00,00,693 பயனாளிகளுக்கு முதன்முறை சேவைகளும், 2,39,85,825 நபர்களுக்கு தொடர் சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றது.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 29.12.2022 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில் ஒரு கோடியே ஒன்றாவது பயனாளி கௌரவிக்கப்பட்டு, நாளது வரை மாநில அளவில் 1,00,45,793 பயனாளிகள் முதன் முறை சேவைகளையும் 2,74,17,977 பயனாளிகள் தொடர் சேவைகளையும் பெற்று வருகின்றனர்.
- பதினைந்தாவது நிதி ஆணையம் (FC-XV) கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் / நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலம் சுகாதாரத் துறையின் குறிப்பிட்ட கூறுகளை அடைவதற்கு தமிழ்நாடு அரசுக்கு ரூ. 4,280 கோடி மானியம் ஒதுக்கீடு.
- அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின் கீழ் 4,848 துணை சுகாதார நிலையங்கள், 1,384 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 460 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 650 ஆயுஷ் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நலவாழ்வு மையங்களாக மாற்றப்பட்டு, 500 நகர்புற நலவாழ்வு மையங்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளன.
- 7,842க்கும் மேற்பட்ட சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்களை அரசு வெற்றிகரமாக செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.
- 2022ஆம் ஆண்டிற்க்கான அனைவருக்கும் நலவாழ்வுதிட்டதினவிழாவில்கிராமப்புறங்களில் நலவாழ்வு மையங்கள் மூலம் தொலைதூர மருத்துவ சேவையை செயல்படுத்தியதில் இந்திய அளவில் தமிழ்நாடு பெரிய மாநிலங்களிடையே முதலிடம் பெற்றதை பாராட்டி சான்றிதழும்,கேடயமும் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு வழங்கியது
- தேசிய வைரஸ் ஹெபடைடிஸ் திட்டத்தின் கீழ், 16,71,721 கர்ப்பிணி தாய்மார்களில், 13,42,132 தாய்மார்களுக்கு ஹெபடைடிஸ் பரிசோதனை செய்யப்பட்டு, 1,973 தாய்மார்களுக்கு ஹெபடைடிஸ் பி தொற்று கண்டறியப்பட்டு, பிரசவித்த தாய்மார்களில், ஹெபடைடிஸ் பாதிக்கப்பட்ட 843 தாய்மார்களுக்கு பிறந்த குழந்தைகளுக்கு ஹெபடைடிஸ் பி நோய் தடுப்பு மருந்துகளைப் பெற்றனர்.
- நடமாடும் மருத்துவக் குழு தொலைதூர கிராமங்களுக்கு மருத்துவ சேவையை வலுப்படுத்த 396 புதிதாக நடமாடும் மருத்துவக் குழு வாகனங்கள் ரூ.70 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டு, இக்குழு நடத்திய 2,51,935 முகாம்களில் 2,05,96,625 மக்கள் பயன்.
- தேசியதர உறுதிநிர்ணய சான்று திட்டத்தின் கீழ், 10 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள், 18 அரசு துணை மாவட்ட மருத்துவமனைகள், 29 அரசு சமுதாய சுகாதார நிலையங்கள், 70 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 14 அரசு நகர்புற சுகாதார நிலையங்கள் என மொத்தம் 141மருத்துவமனைகள் தேசிய அளவில் சான்றிதழ்கள் பெற்றுள்ளன.

- ரூ.2.06 கோடி மதிப்பீட்டில், டெலி மனாஸ்" மனநல மேம்பாட்டிற்கான ஆலோசனைகள் பெறவும் கட்டணமில்லா தொலைபேசி எண் "14416" வழியாக மனநல மருத்துவ சேவைகளைப் பெறவும் - "நட்புடன் உங்களோடு மனநல சேவையை" என்ற திட்டம் துவக்கம்.
- கொரோனா பெறுந்தொற்றின்போது மகப்பேறு சிக்கல்கள் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சிறப்பான மருத்துவ சேவை மற்றும் பராமரிப்பு வழங்கியதற்கு ஒன்றிய அரசின், சிறந்த செயல்பாடு மற்றும் புதிய உத்திக்கான தேசிய உச்சி மாநாட்டில் சிறந்த சேவைக்கான விருது தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டது.
- பிரதான் மந்திரி சுரக்க்ஷா மாத்ரித்வா அபியான் திட்டத்தின் கீழ் அதிக ஆபத்துள்ள தாய்மார்களைப் தொடர் சிகிச்சைக்காக தமிழ்நாடு முதல் பரிசு பெற்று முதலிடத்திலும், கர்ப்பிணிப் பெண்களுக்கு கண்ணியத்துடன் தரமான சேவைகளை வழங்குவதற்காக சுரக்க்ஷிட் மாத்ரித்வா ஆஷ்வாஸன் திட்டத்தின் கீழ் இரண்டாம் பரிசும் வழங்கப்பட்டுள்ளது.
- 10 இந்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் பள்ளிக்கல்வித் துறையுடன் இணைந்து RBSK திட்டம் மற்றும் பள்ளி சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய தூதுவர் திட்டத்தை செயல்படுத்தியதற்காக தமிழ்நாடு சிறந்த கன்வெர்ஜிங் மெக்கானிசம்ஸ் விருதை பெற்றுள்ளது.
- நாட்டிலேயே 22 அதிக எண்ணிக்கையிலான 29,88,110 NCD பரிசோதனைகளை மேற்கொண்டதற்காகவும், மூன்றாவது அதிக எண்ணிக்கையிலான 85,514 ஆரோக்கிய அமர்வுகளை நடத்தியதற்காகவும் தமிழ்நாடு இந்திய அரசிடமிருந்து இரண்டு விருதுகளை வென்றுள்ளது.
- ஆயுஷ் (ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) சேவைகள் தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் 475 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒருங்கிணைக்கப்பட்டு, 1,48,64,264 வெளிநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

மருந்துகள் கட்டுப்பாடுத் துறை

- 1,12,828 மருந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. 1,099 உற்பத்தி நிறுவன உரிமங்கள், 334 இரத்த வங்கி நிலையங்கள், 516 இரத்த சேமிப்பு நிலையங்கள் மற்றும் 47,376 மருந்து விற்பனை உரிமங்கள் வழங்கப்பட்டன.
- மருந்து மற்றும் அழகு சாதனச் சட்டம், 1940 மற்றும் மருந்துகள் விதிகள் 1945ஐ மீறி செயல்பட்ட 10 மொத்த விற்பனை உரிமங்கள் மற்றும் 29 சில்லரை உரிமங்கள் தற்காலிகமாக முடக்கப்பட்டன.

உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத்துறை

- 1,03,897 உணவு வணிகர்களுக்கு உணவு உரிமம், 4,28,686 உணவு வணிகர்களுக்குப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.187 கோடி உணவு பாதுகாப்பு உரிமம் மற்றும் பதிவுச் சான்றிதழ் கட்டணம் வசூலிப்பு.
- உணவு வணிகர்களுக்கு 2,790 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, 1.87 இலட்சம் மக்கள் பங்கேற்பு.
- உணவு தயாரிப்பு நிறுவனங்கள் மூலம் உணவு சேமித்து வைக்கப்பட்ட இடங்கள், விற்பனையாளர்கள் ஆய்வு செய்யப்பட்டு இதுவரை 12,815 ஆய்வுகள்.
- 91.7 டன் புகையிலை மற்றும் நிக்கோட்டின் கைப்பற்றி அழிப்பு.
- வாட்ஸ்ஆப் செயலி மூலமாக உணவு தொடர்பான புகாரினை பெற்று நடவடிக்கை எடுத்துக் குறை தீர்க்கும் (9444042322) முறை ஏற்படுத்தப்பட்டுப் பாராட்டப்பட்டுள்ளது.
- FSSAIஇன் வழிகாட்டுதலின்படி, 2,423 உணவு விடுதி மற்றும் தங்குமிடங்களுக்கு "சுகாதார மதிப்பீடு" திட்டத்தின்கீழ், சான்றிதழ்.
- ஈட் ரைட் சேலஞ்சிங்கில் ஈட் ரைட் இந்தியா திட்டத்தின் கீழ், தெரு உணவு விற்பனையாளர்களை மேம்படுத்த வியாபாரிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு தெரு உணவு மையங்களுக்குச் சான்றிதழ்.



- மாநில உணவு பாதுகாப்புத் துறையின் செயல்பாடுகளை மாநில உணவு பாதுகாப்பு குறியீடு மூலம் தர மதிப்பீடு செய்து, தமிழ்நாடு மூன்றாவது மாநிலமாக அறிவிப்பு.
- உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய சட்டம் 2006 நாடு முழுவதும் 05.08.2011 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. மாநில அளவில் உணவு பாதுகாப்புத்துறை இந்த சட்டத்தை அமல்படுத்துகிறது. இத்துறைக்கு மாநில அளவில் ஆணையர், உணவு பாதுகாப்புத் துறை தலைவர் ஆவார். மாநில அளவில் கூடுதல் ஆணையர், துணை இயக்குநர் மற்றும் சுகாதார அலுவலர் உள்ளனர். மாவட்ட அளவில் 32 நியமன அலுவலர்களும், 391 உணவு பாதுகாப்பு அலுவலர்களும் உள்ளனர்.
- உணவு பொருட்களின் தரம் இத்துறையின் கீழ் இயங்கும் சென்னை, தஞ்சாவூர், மதுரை, சேலம், கோயம்புத்துர் மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள ஆறு உணவு ஆய்வகங்களில் பரிசோதனை செய்யப்படுகிறது. இந்த உணவு பகுப்பாய்வு கூடங்கள் உணவு பகுப்பாய்வு மற்றும் தர நிர்ணய சட்டத்தின் கீழ் உணவு மாதிரிகளை பரிசோதனை செய்ய அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. ஆய்வறிக்கையின் அடிப்படையில் வழக்குகள் தொடரப்படுகின்றன.

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை

மலேரியா காய்ச்சல்

- மலேரியா பரவலை 2030ஆம் ஆண்டிற்குள் நிரந்தரமாக ஒழிக்க நடவடிக்கை.
- 44,13,241 நபர்களுக்கு மலேரியா நோய்க்கான இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டு, மலேரியா கண்டறியப்பட்ட 92 நபர்களுக்கு பூரண சிகிச்சை.

டெங்கு காய்ச்சல்

- டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த 25,000 களப்பணியாளர்கள் வாயிலாகக் கொசு ஒழிப்புப் பணி.

யானைக்கால் நோய்

- தமிழ்நாட்டில் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.9.62 கோடி நிதி ஒதுக்கீட்டில், 8,023 யானைக்கால் நோய் நிலை 4இன் பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வீதம் உதவித்தொகை.

பயிற்சி

- 15 பிரிவுகளில் உள்ள 5,366 பணியாளர்களுக்கு பயிற்சி.

தாய் சேய் நல பரிசு பெட்டகம்

- ரூ.12.50 கோடியில் 2,63,716 பிரசவித்த தாய்மார்கள் பயனடையும் வகையில்

16 பொருட்கள் அடங்கி தாய் சேய் நல பரிசு பெட்டகம்.

நலவியல் பிரிவு

- நான்கு நீர் பகுப்பாய்வகங்களில் மொத்தம் 24,687 நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

பள்ளி செயல்பாடு

- புகையிலையில்லா கல்வி நிறுவனங்கள் என அறிவிக்கப்பட்ட பள்ளிகள்: 8,032
- புகையிலையில்லா கல்வி நிறுவனங்கள் என அறிவிக்கப்பட்ட கல்லூரிகள்: 447

புகையிலை பழக்கத்திலிருந்து விடுபடுதல்

- புதியதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டங்கள் : 12
- ஆலோசனை பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை : 5,875
- புகை பழக்கத்திலிருந்து விடுபட்டவர்களின் எண்ணிக்கை : 51
- ரூ.227.50 இலட்சம் மதிப்பீட்டில், 10 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செவிலியருக்கான குடியிருப்புகள்.
- ரூ.198 இலட்சம் மதிப்பீட்டில், மயிலாடுதுறை, திருவெங்காடு பிரதான / மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒருங்கிணைந்த புறநோயாளிகள் பிரிவு மற்றும் சித்தா கட்டடம்.
- ரூ.30 இலட்சம் செலவில், தேனி மாவட்டத்தில் உள்ள இராஜதானி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் குடியிருப்பு கட்டடம்.
- ரூ.60 இலட்சம் செலவில், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பத்தமடை பிரதான / மேம்படுத்தப்பட்டஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் குடியிருப்பு மற்றும்செவிலியர் குடியிருப்பு.
- 26புதிய கிராமப்புற ஆரம்பசுகாதார நிலையங்கள் தோற்றுவிக்க அனுமதி.
- ரூ.86 இலட்சம் செலவில், திருப்பத்தூர், ஏலகிரி மலையில் உள்ள அத்தனாவூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர சிகிச்சை மையம்.
- ரூ.78 இலட்சம் செலவில் ஈரோடு மாவட்டம், தாளவாடி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடம்.

RBSK திட்டத்தின் கீழ் பரிசோதனை மற்றும் சிகிச்சை

- தேசிய சிறார் நலத்திட்டத்தின் கீழ் 45,895 அரசு மற்றும் 54,439 அரசு உதவி பெறும் பள்ளிகளில் உள்ள 2,864 குழந்தைகளுக்கு நோய் கண்டறியப்பட்டு அதில் 849 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை தேவை என்று கண்டறியப்பட்டு அதில் 646 (76%) குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

RKSK திட்டம்

- தேசிய வளரிளம் பருவத்தினர் நலத்திட்டத்தின் கீழ், (RKSK) 71,466 வளரிளம் பருவத்தினருக்கு மருத்துவ சேவைகளும் 71,341 வளரிளம் பருவத்தினருக்கு ஆலோசனை சேவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய அயோடின் பற்றாக்குறை குறைபாடுகள் தடுப்புத் திட்டம்

- உப்பு மாதிரி பகுப்பாய்வு அயோடின் பற்றாக்குறை இல்லாத தமிழ்நாட்டினை உருவாக்கும் நோக்கில் இல்லம் தோறும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.
- 2,120 உப்பு மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு அதில் 1,905 (90%) உப்பு மாதிரிகளில் அயோடின் உள்ளதை உறுதிசெய்யப்பட்டது.

அனைவருக்கும் நலவாழ்வு திட்டம் – ஒருங்கிணைந்த முதல்நிலை சுகாதார பராமரிப்பு சேவைகள்

புறநோயாளிகளுக்கான அறிக்கை

- அனைத்து நலவாழ்வு மைய துணை சுகாதார மையங்கள், ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் மூலம் மொத்தம் 4,01,64,834 பயனாளர்கள் புறநோயாளிகளாக சிகிச்சை பெற்றுள்ளனர்.

தொற்றா நோய் சேவைகளின் விவரம்

- அனைத்து நலவாழ்வு மையங்களிலும் தொற்றா நோய் சேவைகளான உயர் இரத்த அழுத்தம்

(1,26,62,115), நீரிழிவு நோய் (92,69,245). வாய்வழி புற்றுநோய் (52,58,717),மார்பகபுற்றுநோய் (19,77,728) மற்றும் கர்ப்பப்பை வாய்புற்று நோய் (14,68,793) கீழ் மொத்தம் 3,06,36,598 நபர்கள் பரிசோதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளனர்.

நலவாழ்வு சேவைகள்

- அனைத்து நலவாழ்வு மைய துணை சுகாதார மையங்கள், ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் மூலம் நடைபெற்ற ஆரோக்கிய அமர்வுகளின் கீழ் மொத்தம் 63,40,215 நபர்கள் நலவாழ்வு சேவைகளைப் பெற்றுள்ளனர்.
- தொலைதூர மருத்துவ சேவையானது (இ-சஞ்சீவினி) திட்டத்தில் 369 காணொளி மையங்கள், 6,510 காணொளி கிளை மையங்கள் மூலம் மொத்தம் 64,04,407 பயனாளிகள் பயனடைந்துள்ளார்கள். மேலும், நமது மாநிலமானது தொலைதூர மருத்துவ சேவையில் தேசிய அளவில் நாட்டிலேயே முதன்மை மாநிலம் என்ற விருதினை பெற்றுள்ளது.
- 15ஆவது நிதி ஆணையத்தின் பரிந்துரைக்கேற்ப கிராம மற்றும் நகர்ப்புற சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கும் மருத்துவ உட்கட்டமைப்பை வலுபடுத்துவதற்கும் மற்றும் மருத்துவ சேவைகளை வழங்குவதற்கும் தமிழகத்திற்கு ரூ.801.0777 கோடி நிதி ஒதுக்கீடு.

தொற்று நோய்கள்

- உருமாறிய கொரோனா வைரஸை கண்டறிய ஆய்வகம் அமைக்கப்பட்டு கொரோனா தொற்று மாதிரிகள் முழு மரபணு பகுப்பாய்வு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு 2,965 மாதிரிகள் பகுபாய்வு.
- இன்புளுயென்சா H3N2 காய்ச்சலைக் கண்டறியும் வசதி தமிழ்நாட்டில் 13 அரசு மருத்துவ கல்லூரிகள் மற்றும் 44 தனியார் ஆய்வகங்களில் உள்ளது.
- இன்புளுயென்சா காய்ச்சலுக்கு தேவையான அளவு ஒசில்டாமிவீர் மாத்திரைகள் 75 mg 7, 85,000, 30 mg 59,660 மற்றும் சிரப் 4,260 ஆகியவை தயார் நிலையில் கையிருப்பில் உள்ளது.
- முன் கள பணியாளர்களுக்கு 10,000 இன்புளுயென்சா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் காய்ச்சல் பாதிப்பு சற்று அதிகரித்ததைத் தொடர்ந்து, சிறப்பு காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து 10,049 முகாம்களில் 12,34,305 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டதில் 8,044 நபர்களுக்கு காய்ச்சல் கண்டறியப்பட்டு அவர்களுக்கு உரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளது.
- இன்புளுயென்சா காய்ச்சலால் 773 நபர்கள் (H1N1 - 712 நபர்கள், H3N2 - 61 நபர்கள்) பாதிக்கபட்டு, 43 (H1N1-26, H3N2-17) நபர்கள் மட்டுமே சிகிச்சையில் உள்ளார்கள் மற்ற அனைவரும் குணமடைந்து விட்டார்கள்.

தடுப்பூசித் திட்டம்

- 9.15 இலட்சம் பச்சிளம் குழந்தைகள், 10 இலட்சம் கர்ப்பிணி பெண்கள் பயன்.
- தமிழ்நாட்டில் முழுமையாகத் தடுப்பூசி பெற்றவர்களின் எண்ணிக்கை 100 சதவிகிதமாக உயர்வு,
- தமிழ்நாடு போலியோ பாதிப்பு இல்லாத மாநிலமாகத் தொடர்ந்து 19 வருடம் இருந்து வருகிறது.
- 1,63,227 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. முதல் தவணையாக 38,485 நபர்களுக்கும், இரண்டாவது தவணையாக 1,24,742 நபர்களுக்கும் மற்றும் முன்னெச்சரிக்கை தவணை 1,40,495 நபர்களுக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது,
- அரசு மற்றும் தனியார் கோவிட் மையங்களில் 2,85,161 & 18,561 நபர்கள் பயனடைந்துள்ளனர்.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் ரூ.18,000 நிதியுதவி 2,94,267 இலட்சம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ.260.90 கோடி நிதியுதவி,

குடும்ப நலத்திட்டம்

- 8,713 துணை சுகாதார நிலையங்கள், 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 264 மாவட்ட துணை மருத்துவமனைகள், 37 தலைமை

மருத்துவமனைகள், 36 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 2,581 அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்களில் குடும்ப நலத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- நமது மாநிலத்தின் மொத்த கருவள விகிதம் 1.4 ஆகும். இது தேசிய நிலையான 2.0க்கும் கீழே உள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், 2,30,921 பெண்களுக்கான குடும்பநல அறுவை சிகிச்சைகள், 1,168 ஆண்களுக்கான குடும்பநல அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு, 3,90,683 கருத்தடை வளையம் தேவையான தாய்மார்களுக்கு பொறுத்தப்பட்டு, 1,27,068 சாயா மாத்திரைகள் தகுதியான தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு, 61,760 அந்தாரா ஊசிகள் தகுதியான தாய்மார்களுக்கு செலுத்தப்பட்டு, 46,626 அவசர கால மாத்திரைகள் தகுதியான தாய்மார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

- "தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மூலம் ரூ.121.26 கோடிகளுக்கு சுமார் 23,103 கருவிகள் கொள்முதல்.
- "தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகமானது அனைத்து அரசு மருத்துவமனைகளின் வாயிலாக நோயாளிகளுக்கு போதிய அளவில் தேவையான மருந்துகள் மற்றும் அறுவை சாதன பொருட்கள் தடையின்றி கிடைக்கும் பொருட்டு ரூ.386.12 கோடிகளுக்கு கொள்முதல் ஆணைகள் வழங்கி, ரூ.304.11 கோடிகளுக்கான மருந்துகள் வரப் பெற்றது.
- ரூ.1.77 கோடி செலவில், 1 டெலிகோபால்ட் கருவி விழுப்புரம், அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளது.
- ரூ. 7.2 கோடி செலவில், 3 சி.டி ஸ்கேன் கருவிகள் மேட்டுப்பாளையம், தாம்பரம், பொன்னேரி அரசு மருத்துவமனைகளில் நிறுவப்பட்டுள்ளது.
- ரூ.8 கோடி மதிப்பீட்டில், அரசு வளாகத்தில் லீனியர் ஆக்சிலரேட்டர் கூடிய கதிர்வீச்சு புற்றுநோயியல் தொகுதி கட்டுமானம் விழுப்புரம், தருமபுரி, திருவண்ணாமலை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கட்டப்பட்டுள்ளது.
- ரூ.3.70 கோடி மதிப்பீட்டில் அரசு வளாகத்தில் லீனியர் ஆக்சிலரேட்டர் கூடிய கதிர்வீச்சு புற்றுநோயியல் தொகுதி கட்டுமானம். சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ளது.
- செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர் மற்றும் தென்காசி ஆகிய 4 மாவட்டங்களில் புதிய மாவட்ட மருந்து கிடங்குகள் தலா ரூ.6 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.
- ரூ.3.80 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர், மதுரை, சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கட்டண மருத்துவப் படுக்கை தொகுதிகள் அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய பள்ளி சிறார் நலத் திட்டம்

- நடமாடும் சுகாதாரக் குழுக்கள் கோவிட் தொற்று நோய்களின் போது காய்ச்சல் முகாம்களை அவுட்ரீச் சேவைகளாக நடத்தி,131,430 பிறந்த குழந்தைகளைப் பரிசோதிக்கும் இடங்களில், புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கும் பரிசோதனைகள் நடத்தப்பட்டது.
- RBSK திட்டத்தின் கீழ், பள்ளி ஆசிரியர்கள் 48,83,153 குழந்தைகளை பரிசோதித்துள்ளனர் மற்றும் 11,40,709 குழந்தைகளை பரிந்துரைத்துள்ளனர், அவர்களில் 10,37,078 குழந்தைகள் RBSK குழுக்களால் பரிசோதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் 46,681 குழந்தைகள் 4 வித குறைபாடுகள் கொண்ட குழந்தைகள் DEICக்கு மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.
- 1,20,109 குழந்தைகள் பிறப்பு குறைபாடுகளுடன் பிறந்ததை உறுதி செய்யப்பட்டுள்ளது அதில் 2,159 குழந்தைகள் பெரிய பிறப்பு குறைபாடுகளுடன் பிறந்ததை கண்டறியப்பட்டு அறுவை சிகிச்சைக்காக அடையாளம் காணப்பட்டனர் மற்றும் 1,768 குழந்தைகள் பெரிய பிறப்பு குறைபாடுகளுக்காக அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.



தமிழ்நாடு மாநில பார்வை இழப்பு தடுப்பு சங்கம்

- நோயாளிகளுக்கு அவசர கால முற்றிய கண் புரை அறுவை சிகிக்சைகள் 89 அரசு மருத்துவமனைகள் மற்றும் 61 தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு செயற்கை IOL லென்ஸ் பொருத்தப்பட்டுள்ளது.
- 20 கண் வங்கிகள் மூலம் சுமார் 500 கண்கள் தானமாக பெறப்பட்டு கண் கருவிழி மாற்ற அறுவை சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட்டு, இணைய செயலி உருவாக்கியதன் மூலம் சுமார் 10,000 கண் கொடையாளர்கள் தங்கள் கண்களை தானம் செய்வதற்கு பதிவு செய்துள்ளனர்.
- பள்ளி சிறார்களுக்கு இலவசமாக கண் பரிசோதனை செய்து சுமார் 31,872 மாணவர்களுக்கு மூக்கு கண் கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது.
- முதியோர்களுக்கு கிட்ட பார்வை குறைபாடுகளை சரி செய்வதற்கு 50,000 கண் கண்ணாடிகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது.
- ரூ.16.05 கோடி செலவில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அரசு இராசா மிராசுதார் மருத்துவமனையில் "மண்டல கண் சிகிச்சை மையம்".
- ரூ.150 இலட்சம் செலவில், கரூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களில் நடமாடும் கண் மருத்துவமனைகள்.
- ரூ.240 இலட்சம் செலவில் குடியாத்தம், காஞ்சிபுரம், மயிலாடுதுறை மாவட்ட தலைமை மருத்துவமனைகள், கோபிசெட்டிப்பாளையம், சங்கரன்கோவில், குளித்தலை, வந்தவாசி, கம்பம், துணை மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் தாம்பரம் கண் வங்கிக்கு மருத்துவ உபகரணங்கள்.
- "இ - பார்வை" - செயற்கை நுன்னறிவு மூலம் உருவாக்கப்பட்ட கைபேசி செயலியை பயன்படுத்தி கிராமங்கள் தோரும் கண் புரை ஆய்வுகள் செய்யப்பட்டு அதன் தொடர்ச்சியாக தேவைப்படும் அறுவை சிகிச்சைகள்

மேற்கொள்ளப்பட்டுபார்வைகுறைபாடுஇல்லாத மாவட்டங்களாக அறிவிப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்பு (TAEI) திட்ட செயலாக்கம்

- செங்கம், விருதாச்சலம், பாலக்கோடு, திருப்பத்தூர், சாத்தூர், வந்தவாசி, திருமயம், உத்தமபாளையம் ஆகிய 8 அரசு தாலுகா மருத்துவமனை கூடுதலாக இத்திட்டத்தில் சேர்ப்பு.
- 22மருத்துவக்கல்லூரிகளில் MD (அவசர மருத்துவம்) பட்ட மேற்படிப்பு தொடங்கப்பட்டு 84 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- IT அடிப்படையிலான TAEI ட்ரௌமா ரெஜிஸ்ட்ரியானது மாநிலத்தில் உள்ள அனைத்து TAEI மையங்களிலும் அவசரகால பராமரிப்பு சேவை வழங்குவதற்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு கட்டமைப்பை கூர்மைப்படுத்தியுள்ளது மற்றும் மதிப்புமிக்க SCOCH விருது 2022 இல் "அரை இறுதி" என சான்றளிக்கப்பட்டுள்ளது.
- இன்னுயிர்க்காப்போம், நம்மைக்காக்கும் 48 திட்டத்தின் கீழ்(IKTNK-48),6மணிநேரத்திற்குள் அவசர அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. மொத்தம் 1,51,020 சாலை போக்குவரத்து விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் ரூ.133.31கோடியில் சிகிச்சை பெற்றுள்ளனர். மேலும், 26,618 RTA நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.
- 108 அவசரகால ஊர்திகள் சேவையை மேலும் வலுப்படுத்த ரூ.25.50 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 75 அவசர சிகிச்சை ஊர்திகள் புதியதாக வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு விபத்து மற்றம் அவசர சேவை முன்னெடுப்பு திட்டத்தின் முயற்சியால் 2019ஆம் ஆண்டினை விட 2022ஆம் ஆண்டில் 1.35% விபத்தினால் ஏற்படும் மரணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.
- ரூ.180 இலட்சம் மதிப்பீட்டில், விஷ முறிவு சிகிச்சைக்காக ஸ்டான்லி மருத்துவமனை -கீழ்ப்பாக்கம், சென்னை, விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை - விழுப்புரம், இராஜாஜி மருத்துவனை - மதுரை, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை - கோயம்புத்தூர், இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை - கடலூர் ஆகிய 6 மருத்துவமனைகளில் PLEX கருவி நிறுவப்பட்டுள்ளது.
- 16 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் எலிபசை உட்கொண்டு வந்த 6,061 நோயாளிகளில், 652 நோயாளிகளுக்கு PLEX சிகிச்சை அளிக்கப்பட்டு, 64.6 % உயிரிழப்புகள் தடுக்கப்பட்டுள்ளன.
- 18 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இதய வடிகுழாய் ஆய்வகம் (Cath Labs) நிறுவப்பட்டு, CMCHIS திட்டத்தின் கீழ் நோயாளிகளுக்கு உயிர்காக்கும் அவசர இருதய சிகிச்சை சேவைகள் வழங்கப்பட்டு, 3,454 கேத் லேப் அவசர நடைமுறைகள் 24 மணி நேரத்திற்குள் முடிக்கப்பட்டன.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நகர்ப்புற மக்களின் குறிப்பாக நகர்ப்புற ஏழைகளின் சுகாதார நிலையை மேம்படுத்த விரும்பி 708 நகர்ப்புற ஆரோக்கிய மையங்கள் அமைப்பதற்கான ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.
- மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள் (U-HWCs). ஒவ்வொரு நகர்ப்புற சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையமும் 20,000 முதல் 25,000 வரை மக்கள் தொகையைக் கொண்டிருக்கும் நாட்டில் இதுவே முதல் முறையாகும் மக்களைப் பாதுகாக்கும் வீட்டு வாசலுக்கு அருகில் உள்ள ஒரு பகுதியிலிருந்து. ஒவ்வொரு 708 U-HWC-களும் ரூ.25 இலட்சம் செலவில் அந்தந்த ULB-களால் மொத்தம் ரூ.177 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

- ஒருங்கிணைக்கப்பட்ட ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்களின் சேவைகள் மூலம், 0.18-ஆக கர்ப்பிணி தாய்மார்களிடையே இருந்த



எச்.ஐ.வி பாதிப்பு, 0.17 ஆகக் குறைக்கப்பட்டு, இன்று வரை அதே பரவல் விகிதத்தை பராமரிக்கிறது.

❖ 2021-2022ஆம் ஆண்டில் எச்.ஐ.வி/எய்ட்ஸால் பாதிக்கப்பட்டு அனாதையாக்கப்பட்ட 3,151 குழந்தைகளுக்கு ரூ.1.39 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. 2022-2023ஆம் ஆண்டில் 6,786 குழந்தைகளுக்கு ரூ.2.17 கோடி நிதியுதவியை அளித்துள்ளது. இது கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் 215%-க்கும் அதிகபட்ச அளவு சாதனையாக எடுத்துக்கொள்ளலாம்.

108– அவசரகால மேலாண்மை சேவைகள்

❖ 108 அவசரகால ஊர்தி சேவை மேம்படுத்தும் பொருட்டு ஊர்திகளின் எண்ணிக்கையானது 1,303 லிருந்து 1,353 வரை உயர்த்தப்பட்டு, 6,85,066 பயனாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

❖ நம்மை காக்கும் 48ன் கீழ் 58,152பயனாளிகள் பயன்.

❖ இலவச அமரர் ஊர்தி மற்றும் இலவச தாய் சேய் நல ஊர்தி சேவைகள் இந்திய செஞ்சிலுவை சங்கத்திடமிருந்து ஜி.வி.கே. இ.எம்.ஆர். நிருவாகத்திடம் அரசு ஆணையின்படி வழங்கப்பட்டுள்ளது.

104 தொலைபேசி மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம்

❖ இச்சேவையின் மூலம், 1,55,920 நபர்கள் பயன்.

102– இலவச தாய்சேய் நல ஊர்தி சேவை (JSSK)

❖ 93,458 தாய்மார்கள் / குழந்தைகள் இச்சேவை மூலம் பயன்பெற்றுள்ளனர். தற்போது தமிழ்நாடு முழுவதும் 99 இலவச தாய்சேய் நல ஊர்திகள் இயங்கி வருகின்றன. 102 இலவச தாய்சேய் நல ஊர்திகள் தேசிய நலவாழ்வு குழும நிதியிலிருந்து இயக்கப்படுகிறது. இந்த ஊர்திகள் அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் தாய்மார்கள் மற்றும் சிகிச்சை அளிக்கப்பட்ட நோயுற்ற குழந்தைகளை இலவசமாக அவர்கள் இல்லத்திற்கு கொண்டு சேர்க்கும் சேவையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

155377–இலவச அமரர் ஊர்தி சேவை

❖ அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் இறக்க நேரிட்டால், அவர்கள் உடலை தமிழ்நாட்டில் உள்ள எந்த பகுதிக்கும் இலவசமாக அவர்களின் இருப்பிடத்திற்கோ அல்லது இடுகாட்டிற்கோ இவ்வூர்திகள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. இதுவரை 56,294 இறந்தோரது உடல்கள் இலவசமாக அவர்களின் சொந்த ஊர்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. தற்போது தமிழ்நாடு முழுவதும் 194 ஊர்திகள் இச்சேவையின் கீழ் இயங்கி வருகின்றன.

❖ ❖ ❖



வணிகவரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்
திரு. பி.மூர்த்தி அவர்கள்

வணிகவரித் துறை

❖ வணிகவரித் துறையில் ரூ. 2,29,375 கோடி மொத்த வருவாயாக (சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீடு, தற்காலிக ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமற்றும் இடைக்கால ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு உட்பட) வசூலிக்கப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டின் 2020-2021 இதே காலத்தில் வசூலிக்கப்பட்ட தொகையான ரூ.1,93,692 கோடியுடன் ஒப்பிடுகையில் 35.24% வளர்ச்சி விகிதத்துடன் ரூ.35,683 கோடி வருவாய் அதிகமாக ஈட்டியுள்ளது.

❖ 2022-2023 ஆம் ஆண்டில், மொத்த வருவாய் ரூ.1,17,326 கோடி (ஏப்ரல் 2022 முதல் மார்சு 2023 வரை) (சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீடு, தற்காலிக ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமற்றும்



இடைக்கால ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு உட்பட) வசூலிக்கப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டின் இதே காலத்தில் வசூலிக்கப்பட்ட தொகையான ரூ.1,54,064 கோடியுடன் ஒப்பிடுகையில் 56,80 சதவிகிதம் வளர்ச்சி விகிதத்துடன் ரூ.20,719.59 கோடி வருவாய் அதிகமாக ஈட்டியுள்ளது.

- கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக, வணிக பெருமக்களுக்கு உதவிடும் நோக்கில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத, ஆண்டிற்கு ரூ.40 இலட்சத்திற்குக் குறைவாக வருவாய் உள்ள வணிகர்கள், வணிகர் நல வாரியத்தில் வாழ்நாள் உறுப்பினராவதற்கு பதிவுக் கட்டணம் ரூ.500 செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- வணிகர் நல வாரிய உறுப்பினர்களுக்கு, திருமண உதவி ரூ.10,000 மற்றும் விபத்துக் கால உதவி ரூ.25,000 ஆகிய இரு புதிய நலத் திட்ட உதவிகள் அறிமுகம்.
- இறந்த வணிகர் நல வாரிய உறுப்பினர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப நல உதவித் தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்வு.
- வணிகர் நல வாரிய உறுப்பினர்களின் வணிகத் தலங்களில் ஏற்படும் தீ விபத்திற்கு வழங்கப்பட்டுவரும் இழப்பீட்டு உதவித்தொகை ரூ.5,000 லிருந்து ரூ.20,000 ஆக உயர்வு.
- வணிகர்களின் வசதிக்காக, சரக்குகளின் மீதான வரி விகிதங்கள் ஒத்திசைக்கப்பட்ட பெயரிடும் முறை (HSN) விவரங்களுடன் தமிழ்மொழியில் வெளியிடப்பட்டது.
- தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வரிவிதிப்பு அலுவலகத்திற்கு ரூ.119 இலட்சம் செலவிலும், இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வரி விதிப்பு அலுவலகத்திற்கு ரூ.75 இலட்சம் செலவிலும் சொந்த கட்டடங்கள்.
- குடியாத்தத்தில் வரி விதிப்பு அலுவலகங்களுக்கென ரூ.181 இலட்சம் செலவில் புதிய ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம்.
- தமிழ்நாட்டில், பெட்ரோல் விலை ஒரு லிட்டருக்கு ரூ.3 குறைக்கப்பட்டுள்ளது.

பதிவுத்துறை

- 2022-2023 நிதியாண்டில், பதிவுத் துறையின் வருவாயான ரூ.17,296.84 கோடி, 34,41,248 எண்ணிக்கை ஆவணங்கள் பதிவு செய்வதன் மூலம் ஈட்டப்பட்டுள்ளது.கடந்தநிதியாண்டுடன் ஒப்பிடுகையில் வருவாயில் 24.32% அதிகரிப்பு மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கையில் 14.78 % அதிகரிப்பு.
- போலியான அல்லது மோசடியான ஆவணத்தை இரத்து செய்யும் அதிகாரத்தை மாவட்டப்பதிவாளர் அல்லது பதிவுத்துறை தலைவருக்குவழங்கும்வகையில்பதிவுச்சட்டம், 1908-இல் உரிய திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு சட்டம் 41/2022 மூலம் பிரிவு 77A மற்றும்வேறுசிலபிரிவுகள்உட்புகுத்தப்பட்டன. பதிவுச் சட்ட பிரிவு 22A மற்றும் பிரிவு 22B-க்கு முரணாக பதிவு செய்யப்பட்ட ஆவணம் தொடர்பாக பெறப்படும் புகார்மனுக்களின் மீது விசாரணை மேற்கொண்டு, அவ்வாவணம் போலியான அல்லது மோசடியான ஆவணம் என கண்டறியப்பட்டால் அந்த ஆவணத்தை இரத்து செய்து மாவட்டப்பதிவாளர் அல்லது பதிவுத்துறை தலைவர் உத்தரவிடலாம்.
- இந்தச் சட்டம் 16.08.2022 முதல் அமலுக்கு வந்துள்ளது. இதன் மூலம், தங்கள் சொத்துக்களில் மோசடி அல்லது போலி பதிவினால் பாதிக்கப்பட்ட நபர்கள், நீதிமன்றங்களை அணுகவேண்டிய அவசியமின்றி, அந்தந்த மாவட்டப் பதிவாளரை அணுகி நிவாரணம் பெறலாம்.

மோசடியான பதிவுகளை தடுத்தல்

- ஆதாரைப் பயன்படுத்தி நிகழ் நேரத்தில் ஆவணதாரர்களின் அடையாளத்தினை சரிபார்த்தல்.
- ஆவணத்தை தயாரிக்கும் ஆவண எழுத்தர் அல்லது வழக்கறிஞரின் புகைப்படத்தை ஒட்டுதல்.



❖ பதிவு விதிகளில் விதி 55A உட்புகுத்துதல் - மோசடி பதிவைக் குறைக்க, பதிவின்போது ஆவணங்கள் சரிபார்ப்பு, போன்ற நடைமுறைகளுக்கு சட்டப்பூர்வமான அங்கீகாரத்தை வழங்குவதற்காக, அரசு நடவடிக்கை மேற்கொண்டு பதிவு விதி 55Aயை உட்புகுத்தப்பட்டது.

மோசடி பதிவுகளை விசாரிப்பதற்கான சிறப்பு புலனாய்வு குழு

❖ கடந்த காலங்களில் பதிவுகளில் நடந்த விதி மீறல்கள் குறித்து விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழு ஒன்றினை அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மோசடி ஆவணங்களின் பதிவை கண்டறிந்து, அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ஆவணங்களின் பதிவில் உள்ள தவறுகள் சரி செய்யப்படும். சொத்தினை இழந்த உண்மையான உரிமையாளருக்கு அதனை மீட்டு திருப்பித் தருவதற்கும், நில அபகரிப்பாளர்களிடம் தாங்கள் இழந்த சொத்தை மீட்பதில் பொதுமக்கள் சந்திக்கும் இன்னல்களைக் குறைக்கவும் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மூத்த குடிமக்களுக்கென முன்னுரிமை பதிவு வசதி

❖ மூத்த குடிமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு எழுதிக்கொடுப்பவர் அல்லது எழுதிவாங்குபவரில் யாரேனும் ஒருவர் எழுபது வயதைக் கடந்தவராக இருப்பின் தங்களின் வரிசை எண்ணுக்காக காத்திராமல், அவர்களுக்கு முன்னுரிமை அளித்து பதிவு செய்யும் வண்ணம் மென்பொருள் மாற்றி அமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தட்கல் டோக்கன் முறை

❖ பதிவர்கள் மங்களகரமாக நினைக்கப்படும் நாள் மற்றும் நேரத்தில் தங்கள் ஆவணங்களைப் பதிவு செய்ய டோக்கன் பெறும் நோக்கில் தட்கல் டோக்கன் முறையானது, ஆவணப்பதிவு அதிகம் நடைபெறும் 100 சார்பதிவாளர் அலுவலகங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளது. சாதாரண டோக்கன்கள் பூர்த்தியாகி இருந்தாலும் கூடுதல் கட்டணமாக ஒரு தட்கல் டோக்கனுக்கு ரூ.5,000/- செலுத்தி டோக்கன் பதிவு செய்து கொள்ளலாம். தட்கல் முறையில் 5,628 டோக்கன்கள் வழங்கப்பட்டு, ரூ.2,81,40,000 வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

சனிக்கிழமைகளில் சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்படுதல்

❖ அலுவலகம் செல்வோரின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, அதிக பதிவுப்பணி செய்யப்படும் 100 சார்பதிவாளர் அலுவலகங்கள் தேர்வு செய்யப்பட்டு, சனிக்கிழமைகளில் செயல்பட அரசு அனுமதி. ஒவ்வொரு

ஆவணத்திற்கும் செலுத்தப்படவேண்டிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்துடன் கூடுதலாக ரூ.1,000/- கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. 1,10,898 ஆவணங்கள் பதிவாகி ரூ.688.75 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் செயல்படும் கட்டுப்பாட்டு அறை

❖ பொதுமக்களின் குறையினை உடனுக்குடன் களையபதிவுத்துறைதலைவர் அலுவலகத்தில் மூன்று அலைபேசி எண்களுடன் ஒரு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்கள் புகார்களை அலைபேசி, வாட்ஸ்அப் மற்றும் மின்னஞ்சல் மூலமாக தெரிவிக்கலாம்.

திங்கட்கிழமைகளில் குறைதீர்க்கும் நாள்

❖ துணை பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் மாவட்டப்பதிவாளர்கள் ஒவ்வொரு திங்கள் கிழமையன்றும் குறைதீர்க்கும் நாள் முகாமை தங்கள் அலுவலகத்தில் நடத்துகின்றனர். இம்முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மற்றும் புகார்கள் உடனடியாக பரிசீலிக்கப்பட்டு பொதுமக்களின் குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்படுகின்றன.

இந்திய கிறித்துவ திருமண சான்று உண்மை வடிப்புகள் மண்டல துணை பதிவுத்துறை தலைவர்களால் வழங்கப்படுதல்

❖ கிறித்துவ பொதுமக்களின் நலன் கருதி, இந்திய கிறித்துவ திருமண சான்று வடிப்புகளின் உண்மை நகல்களை வழங்கும் பணிகளை பதிவுத்துறை தலைவர் மட்டுமே மேற்கொள்ள இயலும் என்ற நிலையை மாற்றி பதிவுத்துறையில் உள்ள 10 மண்டல துணைப்பதிவுத்துறை தலைவர்களும் வழங்க நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இணையவழி அட்டவணை திருத்தம் மற்றும் திருமண சான்று திருத்தம் மேற்கொள்ளும் வசதி

❖ வில்லங்க சான்றுகள் மற்றும் திருமண சான்றுகளில் திருத்தங்கள் தேவைப்படும் நிகழ்வுகளில் பொது மக்கள் இணைய வழியாகவே உரிய சார்பதிவாளர் அலுவலகத்திற்கு திருத்தங்கள் மேற்கொள்ள தேவையான விவரங்களை அனுப்பிடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம்பொது மக்களின் நேரம் மிச்சப்படுவதோடு, அலுவலகத்திற்கு நேரில் வர வேண்டியது தவிர்க்கப்படுகிறது.மாவட்டப்பதிவாளரின் ஒப்புதலுக்குப் பின் அத்திருத்த விவரங்கள் இணையதளத்தில் பிரதிபலிக்கும்.

ஒருங்கிணைந்த தகவல் மையம்

❖ பதிவுத்துறையின் சேவைகள் குறித்த விவரங்களை வாட்ஸ்ஆப், சாட்போட்(chatbot), வலையொளி (You tube) காணொளி போன்ற அனைத்து தகவல் தொடர்பு வசதிகளின் மூலம் அளித்திட ஆணைகள் வெளியிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த சேவை மையம்

❖ ஆவணம் தயாரித்தல், வில்லங்க சான்று வழங்குதல், சான்றிட்ட நகல் வழங்குதல், பதிவுக்கான முன்பதிவு செய்தல், இணையவழி கட்டணம் செலுத்துதல் ஆகிய பதிவுத் துறையின் சேவைகளை பொது மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் அளித்திட 'ஒருங்கிணைந்த சேவை மையம்' சென்னை மற்றும் கோயம்புத்தூரில் சோதனை அடிப்படையில் உருவாக்கி செயல்படுத்திடும் பொருட்டு அரசு ஆணை.

முத்திரைத் தீர்வை விலக்கு

❖ விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்துறை கொள்கை, 2019. தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கை, 2019. தமிழ்நாடு மின்னணு வன்பொருள் உற்பத்திக் கொள்கை, 2020. தமிழ்நாடு தொழில் கொள்கை, 2021 போன்ற விற்பனை ஆவணங்களுக்கான தொழிற்கொள்கைகளின் கீழ், முத்திரைத் தீர்வை சலுகையை அரசாங்கம் வழங்கியுள்ளது.

இணையதளத்தில் வில்லங்க சான்று பார்வையிடும் வசதி

❖ பொதுமக்கள் தங்கள் சொத்து தொடர்பான வில்லங்க சான்றினை பதிவுத்துறை



இணையதளத்தின் மூலம் எங்கிருந்தும் எப்போது வேண்டுமானாலும் கட்டணமின்றி பார்வையிடலாம் மற்றும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தினமும் ஏறத்தாழ 80,000 வில்லங்க சான்றுகள் பதிவிறக்கம் செய்யப்படுகின்றன.

மின்னணு ரேகை பதிவு கருவி மூலம் ரேகை பதிவு செய்தல்

❖ ஆவணப்பதிவின் போது வலை நிழலி (Web-Cam) மூலம் பதிவர்களின் புகைப்படமும் மின்னணு ரேகைக்கருவி மூலம் கைரேகையும் எடுக்கப்படுகின்றன. கைரேகையினை ஒத்திசைவு செய்வதன் மூலம் ஆள்மாறாட்டம் தடுக்கப்படுகிறது.

மின்னணு முறையில் சில வகை ஆவணங்களை இணையவழி பதிவு செய்தல்

❖ வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களில் கடன்பெறுவதற்காக எழுதி தரப்படும் உரிமை ஆவணங்களின் ஒப்படைப்பு ஆவணம் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்திய பிறகு எழுதித் தரப்படும் இரசீது ஆவணங்கள்.

குடியிருப்பு பயன்பாட்டிற்கான ஐந்து ஆண்டுகள் வரையிலான வாடகை அல்லது குத்தகை தொடர்பான ஆவணங்கள் முதற்கட்டமாக, இணையவழி பதிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது:

❖ ஆவணதாரர்கள் மின்னணு முறையில் ஆவணத்தினை இணையவழியாக தங்களது இல்லங்களில் இருந்தே எழுதி தரலாம். அவர்களின் கைரேகை இந்திய தனிப்பட்ட அடையாள ஆணையத்தால் (UIDAI) பராமரிக்கப்படும் ஆதார் தரவுகளுடன் ஒப்பிடப்பட்டு சரிபார்க்கப்படுகிறது. தொடர்புடைய சார்பதிவாளருக்கு ஆவணம் இணையவழி அனுப்பப்பட்டு பதிவு செய்யப்படும். இந்த ஆவணத்தை பொது மக்கள் அவர்களின் உள்நுழைவுக்கு சென்று தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இணையவழி சேவைகளுக்கான மின்கையொப்பம் (e-Sign)

❖ வில்லங்க சான்றுகள், பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள், திருமணப்பதிவு சான்றின் வடிப்புகள், சங்கங்களின் பதிவுச் சான்றுகள்,

கூட்டுபங்காண்மை நிறுவனங்களின் பதிவுச் சான்றுகள் போன்ற சான்றுகள் பதிவு அலுவலர்களது ஆதார் அடிப்படையிலான மின்கையொப்பம் இடப்பட்டு இணையவழியாக மூலம் வழங்கல்.

பெயர் மாற்றத்திற்கான தன்னிச்சை விண்ணப்ப வசதி

❖ சொத்துகள் தொடர்பான ஆவணப்பதிவு முடிவடைந்தவுடன் மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், சென்னை பெருநகர மாநகராட்சி, குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்ஆகியவைதொடர்பானஆவணங்களில் பெயர் மாற்றத்திற்கான விண்ணப்பத்தை தன்னிச்சையாக அனுப்பிடும் வசதி

தன்னிச்சையான பட்டா மாறுதல்

❖ பதிவுத்துறையின் 'ஸ்டார் 2.0' மென்பொருளும் வருவாய் துறையின் 'தமிழ்நிலம்' மென்பொருளும் இணைக்கப்பட்டுள்ளன. ஆவணப்பதிவு முடிந்தவுடன் உட்பிரிவு தேவைப்படும் இனங்கள் மற்றும் உட்பிரிவு தேவைப்படாத இனங்கள் ஆகியவற்றின் பட்டா மாற்றத்திற்கான விண்ணப்பங்கள் இணைய வழியாகவே அனுப்பப்படுகின்றன.

இந்திய கிறித்துவ திருமண பதிவு மேற்கொள்ள புதிய வசதி

❖ இந்திய கிறித்துவ திருமணச் சட்டம், 1872இன்படி இந்திய கிறித்துவர்களுக்கு திருமணத்தை நடத்தி வைக்கும் கிறித்துவ குருமார்களும் மற்றும் திருமணத்தை நடத்தி வைக்க அரசு உரிமம் பெற்ற உரிமதாரர்களும் இணைய வழியாகவே விண்ணப்பித்து திருமணத்தைப்பதிவுசெய்துகொள்வதற்கான புதியநடைமுறை.

அரசு நிலங்கள் பதிவு செய்யப்படுவதை தடுத்தல்

❖ பதிவுத்துறையின் 'ஸ்டார் 2.0' மென்பொருளானது வருவாய் துறையின் 'தமிழ்நிலம்' மென்பொருள் தரவுகளோடு மேற்காண் நில விவரங்களை நிகழ்நேரத்தில் ஒத்திசைவு செய்து அச்சொத்து தொடர்பான ஆவணப்பதிவினை தன்னிச்சையாக தடுக்கிறது.

இணைய வழியாக வங்கிகளில் கட்டணம் செலுத்திடும் முறை

❖ பதிவுத்துறைக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை பாதுகாப்பான முறையில் இணையவழி அல்லது இணைய வழியுடன் இணைந்த வங்கி முகப்பில் செலுத்திட அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் நல நிதியம்

❖ ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக தமிழ்நாடு ஆவணஎழுத்தர்கள்நலநிதியம்நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இந்நிதியத்தின் உறுப்பினராக சேர விரும்பும் ஆவண எழுத்தர் ஒருமுறை நுழைவுக் கட்டணமாக ரூ.1,000/- செலுத்தி உறுப்பினராக சேர்ந்து கொள்ளலாம்.

❖ பிற நல வாரியங்களில் அளிக்கப்படும் நலத்திட்டங்களைப் போலவே விபத்து, இறப்புக்கான உதவி, உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவி போன்ற பல்வேறு நல உதவிகள் இந்நிதியத்தின் மூலம் செயல்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் சார்பதிவாளர் அலுவலகங்களில் பதிவாகும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் தலா ரூ.10/- ஆவண எழுத்தர்கள் நல நிதியத்திற்காக வசூலிக்கப்படுகிறது.

கருணை அடிப்படையில் பணி நியமனம்

❖ 31 இளநிலை உதவியாளர்களுக்கும், 2 அலுவலக உதவியாளர்களுக்கும் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் உருவாக்கம்

❖ திருப்பத்தூர் மற்றும் மதுரை வடக்கு பதிவு மாவட்டத்தில் பதிவாளர் அலுவலகங்கள் உருவாக்கம்.



சார்பதிவாளர் அலுவலக எல்லைகள் சீரமைப்பு

❖ சார்பதிவாளர் அலுவலக எல்லைகளை வருவாய் மாவட்டங்களுக்கு ஏற்ப சீரமைத்துக்கொள்ள ஆணை.

குக்கிராமங்கள் வருவாய் கிராமங்களுடன் இணைப்பு

❖ நடப்பு ஆண்டில், வருவாய் கிராமங்களுக்கு உட்பட்ட குக்கிராமங்கள் ஒரே சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குள் அமைய வேண்டும் என அரசு உத்தரவிட்டதைத் தொடர்ந்து நடவடிக்கை.

அதிக ஆவணப்பதிவு நடைபெறும் சார்பதிவாளர் அலுவலகங்களில் பொதுமக்களுக்கு சிறப்பு வசதிகளுடன் அடிப்படை கட்டமைப்புகளை அமைத்தல்

❖ அதிக பதிவுகள் நடைபெறும் அலுவலகங்களில் பொதுமக்களுக்கான அடிப்படைக் கட்டமைப்புகள் மற்றும் வசதிகள் அவர்களது தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ரூ.50 இலட்சம் செலவில், தென் சென்னை பதிவு மாவட்டத்திலுள்ள குன்றத்தூர் மற்றும் கோயம்புத்தூர் பதிவு மாவட்டத்திலுள்ள காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகங்கள் தேர்வு செய்யப்பட்டு தலா ரூ.25 இலட்சம் செலவில் பொதுமக்களுக்கான மேம்படுத்தப்பட்ட அடிப்படை கட்டமைப்பு.

வழிகாட்டி மதிப்பு சீரமைத்தல்

❖ பதிவுக் கட்டணம்4 சதவிகிதத்தில் இருந்து 2சதவிகிதமாககுறைக்கப்பட்டதன்மூலம்ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு குறிப்பாக வங்கிக் கடன்கள் பெற்று வீடு வாங்கும் மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும்.

'ஸ்டார் 2.0' திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள வசதிகள் மற்றும் வழங்கப்படும் சேவைகள்

❖ ஸ்டார் 2.0 திட்டத்தில், பொதுமக்கள், ஆவண எழுத்தர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கென தனித்தனி உள்நுழைவு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புதிய பதிவு மாவட்டங்கள் உருவாக்கம்

❖ தென் சென்னை பதிவு மையத்தைப் பிரித்து புதிய தாம்பரம் பதிவு மாவட்டமாக மாற்ற ஆணை.

புதிய தணிக்கை அலகுகள் உருவாக்கம்

❖ சேலம், கிழக்கு, கோபிசெட்டிபாளையம் மற்றும் காரைக்குடியில் புதிய தணிக்கை அலகுகள் தோற்றுவிக்க நிதி ஒதுக்கீடு.



தரவு களஞ்சியம்

❖ 'அருகாமை தரவு மீட்பு மையம்' (Nearline Data Recovery Centre) மற்றும் புனேயில் உள்ள தேசிய தகவல் மையத்தின் பேரிடர் மீட்பு மையம் ஆகிய மூன்று இடங்களில் பதிவுத் துறையின் தரவுகள் சேமிக்கப்படுகின்றன. இதன் மூலம் ஆவணங்கள் திருத்தப்படுவதும் சிதைக்கப்படுவதும் தடுக்கப்படுகிறது.

இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் பொருத்துதல் மற்றும் நெகிழ்வட்டு வழங்குதல்

❖ சார்பதிவாளர் அலுவலகங்களில் வெளிப்படையான சேவையை உறுதிப்படுத்தும் வண்ணம் ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் 3 இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் (IP கேமரா).

❖ இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் (IP camera) மூலம் பதிவாகும் ஆவணப்பதிவு/திருமண பதிவு நிகழ்வுகள் ரூ.100/- கட்டணம் வசூலித்து, பொதுமக்களுக்கு நெகிழ்வட்டில் வழங்கப்படுகிறது.

மின்னணு பதிப்புமுறை (e-Stamping)

❖ திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் (SHCIL)ஆல் அங்கீகரிக்கப்பட்ட வசூல் மையங்களாக பல தேசிய மற்றும் தனியார் வங்கிகள் செயல்படுகின்றன.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான சொத்து மாற்ற வரி

❖ ரூ.2,032.60 கோடி சொத்து மாற்ற வரியில் ரூ.1,971.62 கோடி உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றம் செய்யப்பட்டது. மீதமுள்ள தொகை வசூல் கட்டணமாக பதிவுத்துறையால் இருத்திக்கொள்ளப்பட்டது.

புதிய பதிவு மண்டலங்கள் உருவாக்கம்

❖ மதுரை மண்டலத்தைப் பிரித்து இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய பதிவு மண்டலம் உருவாக்கம்.

❖ சென்னை பதிவு மண்டலத்தைப் பிரித்து புதியதாக சென்னை (தெற்கு) பதிவு மண்டலத்தை உருவாக்க நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு.

❖ ❖ ❖



போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திச் சட்டம்

மாண்புமிகு
போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு. **எஸ்.எஸ்.சிவசங்கர்**
அவர்கள்

போக்குவரத்துத்துறை

- நகரப் பேருந்துகளில் மகளிர், திருநங்கைகள், 40 சதவிகித மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களுக்கு கட்டணமில்லா பயண வசதி.
- மகளிர் கட்டணமில்லா பயணத்திற்கு 2023-2024ஆம் நிதியாண்டில் ரூ.2,800 கோடி நிதி ஒதுக்கீடு.
- 206 புதிய வழித்தடங்களில் 260 பேருந்துகளின் சேவை தொடக்கம்.
- 409 வழித்தடங்களில் 510 பேருந்துகள் மூலம் மீண்டும் பேருந்து சேவை தொடக்கம்.
- சென்னையில் 30 மெட்ரோ இரயில் நிலையங்களை இணைத்து 56 பேருந்து சேவைகள் தொடக்கம்.





- விழாக் காலங்களில் சென்னையிலிருந்து, தினசரி இயக்கக்கூடிய பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்புப் பேருந்துகள் பல்வேறு நகரங்களுக்கு இயக்கம்.
- விழாக்காலங்களில் சென்னை மற்றும் முக்கிய நகரங்களில் தற்காலிகமாக பேருந்து நிலையங்களை ஏற்படுத்தி நகரின் முக்கிய இடங்களிலிருந்து கூடுதல் பேருந்துகள் காலை முதல் நள்ளிரவு வரை இயக்கம்.
- விழாக் காலங்களில் பேருந்து மற்றும் வழித்தடம் குறித்த விவரங்களை பயணிகள் அறிந்து கொள்ள ஏதுவாக 20 இடங்களில் தகவல் மையங்கள் மற்றும் 24 மணி நேர பயணிகள் குறை தீர்ப்பு மையங்கள்.
- பயணிகளின் குறைகளை கேட்டறிந்து நிவர்த்தி செய்திட Grievance Whatsapp Group மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் Whatsapp Group உருவாக்கம்.
- 1,000 புதிய பேருந்துகளை கொள்முதல் செய்ய ரூ.420 கோடியும், அடிச்சட்டம் நல்ல நிலையில் உள்ள 1,000 பழைய பேருந்துகளை புதுப்பித்திட ரூ.80 கோடியும் ஒதுக்கீடு.
- சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில், அனைத்து மகளிரும் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொண்ட வகையில் 12.07.2021 முதல் 22.03.2023 வரை ரூ.4,098.56 கோடி செலவினத்தில் 256.16 கோடி பாதுகாப்பான பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.
- தமிழ்நாட்டிலுள்ள திருநங்கைகளுக்கு அரசுப் போருந்துகளில் கட்டணமில்லா பயணச் சலுகையை நீட்டித்த வகையில் 12.07.2021 முதல் 14.03.2023 வரை ரூ.234.08 கோடி செலவினத்தில் 14.63 இலட்சம் கட்டணமில்லா பயணங்களை திருநங்கைகள் மேற்கொண்டுள்ளனர்.
- 2023-2024ஆம் நிதியாண்டில் 1,000 புதிய பேருந்துகளை கொள்முதல் செய்திடவும், 500 பழைய பேருந்துகளை புதுப்பித்திடவும் ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு.
- ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதி உதவியோடு 2,213 B.S.VI. டீசல் பேருந்துகள் மற்றும் 500 மின்சாரப் பேருந்துகள் வாங்க நடவடிக்கை.
- தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் மற்றும் பொதுமக்களின் குறைகள் மற்றும் புகார்களுக்கு தீர்வுகாண 18005991500 எனும் கட்டணமில்லா தொலைபேசி எண் அறிமுகம்.
- உலக வங்கி உதவியோடு மேலும் ஆயிரம் பேருந்துகள் இயக்கிட நடவடக்கை.
- தொலைதூரப் பயணம் செய்யும் பயணிகளுக்கு உதவும் வகையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் வலைத்தளமான https:www.tnstc.in மூலமும், TNSTC செயலியின் மூலமும் பயணச்சீட்டு முன்பதிவு.
- விழா நாட்கள் நீங்கலாக இதர நாட்களில் இணையவழிப் பயணச்சீட்டு முன்பதிவு வாயிலாக இருவழிப் பயணச்சீட்டுகள் முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு 10 சதவிகிதம் தள்ளுபடி.
- ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதி (KfW) உதவியோடு பணமில்லா பரிவர்த்தனை முறை சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் அமல்படுத்த நடவடிக்கை.
- சென்னையில் தேசிய பொது இயக்க அட்டை அமல்படுத்த நடவடிக்கை.
- பேருந்து வருகை மற்றும் புறப்பாடு, தடத்தில் வரும் இடம் அறிந்து கொள்ள எதுவாக சென்னை பேருந்துச் (Chennai Bus App) செயலி அறிமுகம்.
- சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் வழித்தடம் தெரியாத புதிய பயணிகள் மற்றும் பார்வை குறைபாடுள்ளோர் தங்கள் பேருந்து நிறுத்தத்தை அறியும் விதமாக, 150 பேருந்துகளில் தானியங்கி பேருந்து நிறுத்த அறிவிப்பு முறை அறிமுகம்.
- உலக வங்கி நிதி நிறுவனத்தின் நிதி உதவியுடன் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தை உலகத் தரம் வாய்ந்த போக்குவரத்து நிறுவனமாக மாற்றுவதற்கு வணிகத் திட்டம் தயாரிக்க ஆலோசகர் நியமனம்.
- வணிக வளர்ச்சிக்காக தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக மாநகர் போக்குவரத்துக்கழகத்தில்



உள்ள 16 பேருந்து பணிமனைகள் / பேருந்து நிலையங்களை நவீனமயமாக்க ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு, வடபழனி, திருவான்மியூர் மற்றும் வியாசர்பாடி பணிமனைகளில் பணிகள் தொடக்கம்.

- மாணவர்கள் பேருந்து படிக்கட்டில் பயணம் செய்வதைத் தவிர்க்கும் பொருட்டு பள்ளிக்கல்வித் துறையுடன் இணைந்து Whatsapp குழுக்கள் உருவாக்கம்.
- தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் சென்னை, திருச்சி மற்றும் மதுரை போன்ற இடங்களில் மாதாந்திர அல்லது தினசரி வாடகை அடிப்படையில் பயணம் செய்யாத நபர்களின் சிப்பம் (Parcel) / மற்றும் தூதஞ்சல் (Courier) அனுப்பும் திட்டம் அறிமுகம்.
- கழிவு செய்யப்பட்ட பேருந்துகள் மற்றும் கழிவுப் பொருட்கள் மின்னணு முறையில் தேசிய தகவல் மையத்தின் (National Informatics Centre) மூலம் விற்பனை.
- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் அனைத்து வகை பேருந்துகளிலும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இலவசமாகப் பயணிக்கும் திட்டம் நடைமுறை.
- அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் அனைத்து பேருந்துகளிலும் புதுப்பொலிவுடன் திருவள்ளுவர் படம் மற்றும் திருக்குறள் அதன் விளக்கவுரையுடன் பொருத்தம்.
- தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு டீசல் செலவு அதிகரிப்பு விலையை ஈடு செய்ய 2021-2022ஆம் நிதி ஆண்டிற்கு மானியமாக ரூ.1014.63 கோடியும். 2022-2023ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.1,873 கோடியும், 2023-2024ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.2,000 கோடியும் ஒதுக்கீடு.
- தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு (TDFC) பங்கு மூலதன உதவியாக ரூ.424.47 கோடி நிதி ஒதுக்கீடு.

பணியாளர் நலன்

- அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்களின் அடிப்படை ஊதியத்தில் 5 சதவிகிதம் உயர்வு அளிக்கப்பட்டது.
- சாதாரண கட்டண பேருந்துகளின் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கு வழங்கப்பட்டுவரும் வசூல்படி இரட்டிப்பாக உயர்வு.
- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களின் Double duty wages ஓட்டுநருக்கு ரூ.600 ஆகவும் நடத்துநருக்கு ரூ.590 ஆகவும் உயர்வு.
- ஓட்டுநர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் சாலை போக்குவரத்து நிறுவனம் இணைந்து தயாரித்துள்ள ஓட்டுநர் கையேடு அறிமுகம்.
- அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள அலுவலகங்கள் மற்றும் இதர இடங்களில் 88.15 சதவிகிதம் மின்னணு வருகைப்பதிவு செயல்பாடு அமல்.
- ஜனவரி-2020 முதல் மார்ச்-2022 வரையிலான காலகட்டத்தில் ஓய்வு, விருப்ப ஓய்வு பெற்ற



பணியாளர்கள் மற்றும் இறந்த போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகையாக ரூ.1,048.44 கோடி வழங்கப்பட்டது.

❖ ஜூன் 2022 முதல் நவம்பர் 2022 வரை பணி ஓய்வு, விருப்ப ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் இறந்த தொழிலாளர்களுக்கு ரூ.1,032 கோடி நிதி ஒதுக்கீடு.

❖ சென்னை பஸ் செயலிக்காக ஒன்றிய அரசின் "சிறந்த நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு (ITS) கொண்ட நகரம்" விருது பெறப்பட்டுள்ளது.

போக்குவரத்து

❖ ஆதார் அட்டையினை அடையாள ஆவணமாகப் பயன்படுத்தி இணையதளம் மூலம் 3,68,793 நபர்கள் பழகுநர் உரிமத்தைப் பெறுதல், 10,481 நபர்கள் ஓட்டுநர் உரிமத்தைப் புதுப்பித்தல், 4,553 நபர்கள் ஓட்டுநர் உரிமத்தில் முகவரியை மாற்றுதல், 24 நபர்கள் ஓட்டுநர் உரிமத்திலிருந்து வாகனத்தின் வகையை ஒப்படைத்தல், 112 நபர்கள் போக்குவரத்து அல்லாத வாகனத்தின் உரிமையை மாற்றுவதற்கான அறிவிப்பு, 32 நபர்கள் தவணைக் கொள்முதல் ஒப்பந்தம் மீது மேலெழுத்து செய்தல் போன்ற சேவையின் மூலம் பயனடைந்துள்ளனர்.

பள்ளி வாகனங்களில் கேமரா மற்றும் சென்சார் கருவி பொருத்துதல்

❖ பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி 17,129 பள்ளி வாகனங்களுக்கு முன்புறம் மற்றும் பின்புறம் கேமராவுடன் கூடிய சென்சார் கருவி பொருத்தப்பட்டு இருக்கிறது.

புதிய அலுவலகக் கட்டடங்கள்

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு, விழுப்புரம் மாவட்டம் செஞ்சி மற்றும் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி ஆகிய இடங்களில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகச் சொந்தக் கட்டடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

தமிழகத்தில் உள்ள அனைத்து சோதனைச்சவாடிகளிலும் உள்ள சேவைகளை இணையம் மூலம் வழங்குதல்.

❖ தமிழகத்தில் உள்ள அனைத்து சோதனைச் சாவடிகளிலும் வழங்கப்பட்டு வந்த தற்காலிக அனுமதிச்சீட்டு, வரி மற்றும் இணக்கக் கட்டணம் போன்ற சேவைகளை இணையத்தின் வழியாக நேரடியாக கணினி மூலம் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் சோதனைச் சாவடியில் நீண்ட நேரம் காத்திராமல் நேரடியாக பயணம் செய்ய இயலும்.

❖ ❖ ❖



இந்து சமயம், அறநிலையங்கள் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்

மாண்புமிகு
இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்
திரு. **பி.கே.சேகர்பாபு**
அவர்கள்

இந்து சமய அறநிலையத் துறை

- கொரோனா நோய்த் தொற்று காலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் திருக்கோயில்கள் சார்பாக நாள்தோறும் ஒரு இலட்சம் வீதம் 44 இலட்சம் உணவுப் பொட்டலங்கள்.
- "கோரிக்கைகளை பதிவிடுக" எனும் இணையவழித் திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு, பக்தர்களின் கோரிக்கைகள் மீது 30 தினங்களுக்குள் நடவடிக்கை.
- 'அழைப்பு மையம்' பொதுமக்களின் குறைகளை தொலைபேசி மூலம் பெறப்பட்டு அவர்களுக்கு உடனடியாக குறைகளை களைய நடவடிக்கை.





- கொரோனா தொற்று காலத்தில் இந்துசமய அறநிலையத் துறையின் திருக்கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களின் வாழ்வாதாரத்தினைப் பாதுகாக்கும் வகையில் தலா ரூ.4,000 உதவித்தொகை, 10 கிலோ அரிசி மற்றும் 15 வகை மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டு 11,065 பணியாளர்கள் பயன்.

- திருக்கோயில் நிலங்களின் உரிமை ஆவணங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, முதற்கட்டமாக 3,43,647 ஏக்கர் நிலங்கள் முழுவதும் ஒத்துப்போகும் இனங்களாக கண்டறியப்பட்டு 'அ' பதிவேடு / நகரநில அளவைப் பதிவேடு மற்றும் சிட்டா ஆகியன வெளியீடு.

- அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நிலம், கட்டடம், மனை ஆகியவற்றில் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றி 4,570.19 ஏக்கர் நிலமும், 826 கிரவுண்ட் 2,318 சதுர அடி மனைகளும், 159 கிரவுண்ட் 0732 சதுர அடி கட்டடங்களும், 134 கிரவுண்ட் 0,414 சதுர அடி திருகுளக்கரைகளும் மீட்பு. மீட்கப்பட்ட நிலங்களின் மொத்த மதிப்பு ரூ.4,259.23 கோடி.

- காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பர நாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சென்னை கீழ்ப்பாக்கம் சீதா கிங்ஸ்டன் ஹவுஸ் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி நீதிமன்ற தீர்ப்பின்படி, கையகப்படுத்தப்பட்டு அருள்மிகு ஏகாம்பர நாதர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி எனப் பெயர் மாற்றம்.

- 47 முதுநிலைத் திருக்கோயில்களில் உழவாரப் பணிகள் இணையவழிமுறையில் பதிவு செய்யும் வசதி துவக்கப்பட்டு திருக்கோயில்களின் அனைத்து இடங்களிலும் உழவாரப் பணிகள்.

- மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் உட்பட 46 திருக்கோயில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை.

- "கலைஞர் தல மரக்கன்றுகள் நடும் திட்டத்தின்கீழ்" 99,998 தல மரக்கன்றுகள், 2,611 திருக்கோயில்களில் நடப்பட்டுள்ளன.

- அன்னைத் தமிழில் அர்ச்சனை மற்றும் வழிபாடு செய்ய 12 இறைவன் போற்றி பாடல் நூல்கள் வெளியிடப்பட்டு, 47 முதுநிலை திருக்கோயில்களுக்கு போற்றி பாடல் நூல்கள் வழங்கப்பட்டன.

- அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அரசாணையின்கீழ் பயிற்சிபெற்ற 24 அர்ச்சகர்கள் உள்ளிட்ட 208 நபர்கள் பணி நியமனம்.

- ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ், 15,000 திருக்கோயில்களில் பணிபுரியும் 13,991 அர்ச்சகர்களுக்கு தலா ரூ.1,000 வீதம் மாத ஊக்கத்தொகை.

- திருத்தணிகை, சமயபுரம், திருச்செந்தூர் ஆகிய திருக்கோயில்களில் "நாள் முழுவதும் அன்னதானத் திட்டம்" தொடக்கம். இத்திட்டத்தின்கீழ், நாள்தோறும் 15,890 பக்தர்கள் பயன்.

- திருக்கோயில்களில் தலைமுடி திருத்தும் பணியாளர்களுக்கு தலா ரூ.5,000 வழங்கும் திட்டம் துவக்கம். இத்திட்டத்தின்கீழ், ரூ.10.47 கோடி செலவில், 1,744 பணியாளர்கள் பயன்.



- திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன், இருக்கன்குடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்களில் பக்தர்களால் வழங்கப்பட்டு பயன்பாடற்ற பலமாற்று பொன் இனங்களை 24 காரட் தங்கக் கட்டிகளாக மாற்றுவதற்கான பூர்வாங்கப் பணிகள் துவக்கம்.
- ரூ.10 கோடி மதிப்பீட்டிலான, இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் பலமாற்று பொன் இனங்களை உருக்கி சுத்தத் தங்ககட்டிகளாக மாற்றி வங்கியில் முதலீடு செய்ய அனுமதி.
- அருள்மிகு கபாலீசுவரர் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 9 உதவிபேராசிரியர்கள், ஒரு நூலகர் மற்றும் ஒரு உடற்கல்வி ஆசிரியர் பணிநியமனம் செய்யப்பட்டு, 216 மாணவ, மாணவிகள் பயின்றுவருகின்றனர்.
- மதுரை மற்றும் திருவண்ணாமலையில் ஓதுவார் பயிற்சி பள்ளிகள் மேம்படுத்தப்பட்டு துவக்கம்.
- காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி துவக்கப்பட்டு, 857 மாணவ, மாணவிகளுக்கு இலவச சீருடை மற்றும் புத்தகப்பை வழங்கப்பட்டது.
- கொளத்தூரில் அருள்மிகு கபாலீஸ்வரர் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ, மாணவியருக்கு கல்வி தொடர்புடைய விலையில்லா உபகரணங்கள்.
- ஒருகால பூஜை திருக்கோயில்களில், பூஜைகள் செய்வதற்கு திருக்கோயில் ஒன்றுக்கு கூடுதலாக ரூ.1 இலட்சம் வீதம் அரசு மானியம் ரூ.130 கோடி விடுவிக்கப்பட்டு, ரூ.129.59 கோடி தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு.
- விளாத்திக்குளம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு, அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் ஒட்டன்சத்திரம், அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதியதாக துவக்கம். 313 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர்.
- திருக்கோயில்களிலும், திருக்கோயில்களின் திருமண மண்டபத்திலும் மாற்றுத் திறனாளிகளுக்கு கட்டணமில்லா திருமணத் திட்டம் மணமக்களுக்கு வாழ்த்துக்களுடன் பரிசுப்பொருட்கள்.
- பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மற்றும் மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் வேதபாராயணர் பள்ளிகளில் பயிலும் 18 மாணவர்கள், மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் ஓதுவார் பயிற்சி பள்ளிகளில் பயிலும் 24 மாணவர்கள் மற்றும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தவில் / நாதஸ்வர பயிற்சி பள்ளிகளில் 25 மாணவர்கள் என மொத்தம் 67 மாணவர்களுக்கான உதவித்தொகை ரூ.3,000 ஆக உயர்வு.



- கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில் நிருவாகம் மேம்பாடு மற்றும் இதர செலவினங்களுக்காக வழங்கப்படும் அரசு மானியம் ரூ.6 கோடியாக உயர்வு.
- புதுக்கோட்டை மாவட்ட தேவஸ்தான திருக்கோயில் நிருவாக மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்காக வழங்கப்படும் அரசு மானியம் ரூ.3 கோடியாக உயர்வு.
- ரூ2.10 கோடி நிதி ஒதுக்கீட்டில், ஒவ்வொரு திருக்கோயிலுக்கு ரூ.30 இலட்சம் வீதம் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், மேல்மலையனூர் அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயில், சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில், மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய ஆறு திருக்கோயில்களில் முதலுதவி மருத்துவ மையங்கள் மற்றும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் மருத்துவர் உடன் மருத்துவப் பணியாளர்களுடன் கூடிய மருத்துவ மையம் துவக்கம்.
- திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் நிரந்தரப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு. ரூ.25 கோடி கூடுதல் செலவினம்.
- தமிழர் திருநாளாம் தைத்திருநாளில் அர்ச்சகர்களுக்குப் புத்தாடைகள் மற்றும் பணியாளர்களுக்குச் சீருடைகள். 50,000 திருக்கோயில் பணியாளர்கள் பயன்.
- திருக்கோயில்களில் பணியாற்றும் முழுநேரம், பகுதிநேரம், தொகுப்பூதியம், தினக்கூலி உள்ளிட்ட பணியாளர்களுக்கு பொங்கல் கருணைக்கொடை ரூ.2,000ஆக உயர்வு.
- திண்டுக்கல் மாவட்டம், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் ரூ.23.81 கோடி மதிப்பீட்டில் பக்தர்களின் வசதிக்காக புதிய குடிநீர்த் திட்டம், புதிய அன்னதானக் கூடம், கம்பிவட ஊர்தி மேல்நிலையத்திலிருந்து மின்தூக்கி, புதிய நாதமணிமண்டபப் பணிகள் துவக்கம்.
- திருக்கோயில்களில் பக்தர்களின் வசதிகளை மேம்படுத்துவது, பராமரிப்பது, செம்மைப்படுத்துவது தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்.
- இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில், கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டு, முதுநிலை திருக்கோயில்களில் கண்காணிப்பு.
- தமிழ்நாட்டிலுள்ள 314 திருக்கோயில்களுக்கு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தால்

"உணவு தயாரித்தல் மற்றும் விநியோகத்திற்காக" BHOG தரச்சான்றிதழ்கள்.

- 374 திருக்கோயில்களுக்கு திருக்குட முழுக்கு.
- இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களுக்கு ரூ.5.08 கோடி மதிப்பில் 69 புதிய வாகனங்கள்.
- பக்தர்களுக்கு தரமான திருநீறு மற்றும் குங்குமம் பிரசாதம் வழங்குவதற்காக 8 திருக்கோயில்களில் நவீன இயந்திரம் மூலம் தயாரித்து பிற திருக்கோயில்களுக்கு வழங்கும் திட்டம் துவக்கம்.
- 550 திருக்கோயில்களில் இணைய வழி மற்றும் கணினி வழி வாயிலாக 225 கட்டணச் சேவைகள் வழங்கும் திட்டம் துவக்கம்.
- மதுரை, பழநி, திருசெந்தூர், ஸ்ரீரங்கம் உட்பட 10 திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கும் திட்டம் துவக்கம்.
- ரூ.15 கோடி செலவில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலக வளாகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய கூடுதல் கட்டடம்.
- திருக்கோயில்களில் பணிபுரியும் தினக்கூலி / தொகுப்பூதிய 33 பணியாளர்கள் பணிநிரந்தரம்.
- 18 திருக்கோயில்களில் ரூ.104.77 கோடி மதிப்பீட்டிலான 25 புதிய திட்டப் பணிகள் அடிக்கல்.
- இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகள் கூடிய கூடுதல் கட்டடப் பணிக்கு அடிக்கல்.
- திருக்கோயில்களில் பணிபுரியும் 425 தினக்கூலி / தொகுப்பூதிய பணியாளர்களுக்கு பணி வரன்முறை.



- ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட திருக்கோயில் சொத்துக்களின் விவரங்கள் அடங்கிய புத்தகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.
- ரூ.53.35 கோடி மதிப்பீட்டில், 16 திருக்கோயில்களில் ஒரு புதிய திருக்குளம் உட்பட 24 கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவதுடன், 13 திருக்கோயில்களில் 14 புதிய கட்டடங்கள் மற்றும் புனரமைக்கப்பட்ட ஒரு திருக்குளத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் சார்பாக 6 அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் உட்பட 9 பயிற்சிப் பள்ளிகள் துவக்கம்.
- இந்து சமய அறநிலையத்துறை சார்நிலைப் பணியில் செயல் அலுவலர் நிலை-1 பதவிக்கு நேரடி நியமனம் மூலம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 22 நபர்கள் பணி நியமனம்.

❖ ரூ.300 கோடி மதிப்பீட்டில், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் திருப்பணிகள் மற்றும் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகள்.

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் வள்ளலார் முப்பெரும் விழாவினை கொண்டாடுகின்ற வகையில், "வள்ளலார் – 200" இலச்சினை, தபால் உறை மற்றும் சிறப்பு மலர் ஆகியவற்றை வெளியிட்டு, 52 வாரங்களுக்கான விழாக்களில் முதல் வார நிகழ்ச்சிகளையும், ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்வையும் தொடங்கி வைத்தார்.

அறநிலையங்கள் துறை

❖ புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட 108 அரிய பக்தி நூல்களை வெளியிட்டு, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புத்தக விற்பனை நிலையத்தை திறந்து வைத்து, கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

❖ இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கிவரும் 5 கல்லூரிகள் மற்றும் ஒரு பள்ளியில் பணியாற்றி வரும் 354 தற்காலிக ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு தொகுப்பூதிய உயர்வுக்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 24 தற்காலிக ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாபணியாளர்களுக்குஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

❖ தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான நிருவாகத்திலுள்ள 88 திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் பராமரிப்புச் செலவிற்காக ரூ.3 கோடி அரசு மானியத்திற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்

சென்னைப் பெருநகரப் பகுதி விரிவாக்கம்

❖ சென்னைப் பெருநகரப் பகுதியை விரிவாக்கம் செய்து அடிப்படையில் சென்னை பெருநகரப் பகுதியை 1,225 கிராமங்களை உள்ளடக்கி 5,904 ச.கி.மீ அளவிற்கு விரிவுபடுத்த முன்மொழியப்பட்டது.

வரன்முறைப்படுத்தும் பிரிவு (கட்டடம்)

❖ 109 சிறப்பு கட்டடங்களுக்கும், 10 பன்னடுக்கு மாடி கட்டடங்களுக்கு வரன்முறைப்படுத்தும் பிரிவு (கட்டடம்) அனுமதி வழங்கி வரன்முறைப்படுத்தப்பட்டது.

அனுமதியற்ற மனை / மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்துதல் –2017

❖ சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் 560 மனைப்பிரிவுகளுக்கு கொள்கை அளவில் ஒப்புதலும் மற்றும் 43 மனைப் பிரிவுகளுக்கு ஒப்புதலும் அளித்து மொத்தமாக 603 ஒப்புதல்கள் அளித்து, இதன் மூலம் 27,971 மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

காலிப் பணியிடம் நிரப்புதல்

❖ சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் உதவி திட்ட அமைப்பாளர் பதவியில் 15 பணியிடங்கள் மற்றும் திட்ட உதவியாளர் நிலை-I பதவியில் 15 பணியிடங்கள். 10 ஓட்டுநர் பதவிக்கான பணியிடங்கள் நேரடி நியமனம்.

திட்ட அனுமதி வழங்கப்பட்ட விவரங்கள்

❖ 316 ஆணைகள் மனைப்பிரிவு/மனை உட்பிரிவு செய்து வெளியிடப்பட்டுள்ளது.

❖ 78 ஆணைகள் நில உபயோகமாற்றம்.

பரப்பு அபிவிருத்திப் பிரிவு

❖ ரூ.266.9 கோடி மதிப்பில் வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் கட்டப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து நிலையத்தின் பணிகள் 91 சதவிகிதம் நிறைவு.

❖ கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையத்தில் மின்பகிர்மான நிலையம் அமைக்கும் பொருட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 1.50 ஏக்கர் நிலம் இலவசமாக ஒப்படைக்க முடிவு.





- கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையத்தை இயற்கைத் தோற்றமாக்கும் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.
- மாமல்லபுரத்தில் பேருந்து நிலையம் அமைக்க பொது-தனியார் கூட்டு அமைக்கும் பொருட்டு சாத்தியக்கூராய்வு, விரிவான திட்ட அறிக்கை, திட்ட மேலாண்மை மற்றும் பிற பணிகளை மேற்கொள்ள கலந்தாலோசகர் நிறுவனம் பணியமர்த்தப்பட்டுள்ளது.
- கிளாம்பாக்கம், குத்தம்பாக்கம் மற்றும் மாதவரம் புறநகர் பேருந்து நிலையங்களை இயக்கவும் பராமரிக்கவும் ஒற்றை ஒப்பந்ததாரரை இனங்காணும் பொருட்டு ரூ.99.90 இலட்சம் செலவில் கலந்தாலோசகர் நிறுவனம் பணியமர்த்தப்பட்டுள்ளது.
- கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் மற்றும் சென்னை ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையங்களை இடமாற்றம் செய்த பிறகு அவ்விடங்களை சிறந்த முறையில் உபயோகிக்கும் பொருட்டு திட்டங்களை இனங்கான ரூ.36 இலட்சம் செலவில் கலந்தாலோசகர் நிறுவனம் பணியமர்த்தப்பட்டுள்ளது.
- சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் அண்மையில்கட்டப்பட்டதற்போதுகட்டப்பட்டு வரும் திட்டங்களின் தரத்தை ஆய்வு செய்ய கலந்தாலோசகர் ரூ.30.10 இலட்சம் செலவில் பணியமர்த்தப்பட்டுள்ளது.
- சாத்தாங்காடு, இரும்பு மற்றும் எஃகு அங்காடி வளாகத்தில் சாலைகள் மற்றும் பிற கட்டமைப்புகளை ரூ.12 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- கொரோனா தொற்றின் முதலாம் மற்றும் இரண்டாம் அலைகளின் போது சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் அனைத்து திட்டங்களிலும் உள்ள குத்தகைதாரர்களுக்கு 50 சதவிகிதம் வாடகை தள்ளுபடி வழங்கப்பட்டது.
- ரூ.2.67 கோடி செலவில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடியில் உள்ள தினக்கூலி பணியாளர்களின் வசதிக்காக இரவு தங்கும் விடுதி.
- காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகர், காட்டாங்குளத்தூர் கிராமத்தில் ரூ.5.85 கோடி செலவில் 1.07 ஏக்கர் பரப்பளவில் சமுதாயக் கூடம் கட்டப்பட்டு மறைமலை நகர் நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது.
- குத்தம்பாக்கத்தில் கட்டப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து நிலையத்தின் 60 சதவிகிதம் பணிகள் ரூ.183 கோடி செலவினத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடியை நவீனமயமாக்கும் பொருட்டு கலந்தாலோசகர் நிறுவனம் பணியமர்த்தப்பட்டுள்ளது.

❖ கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி மற்றும் அதனை சுற்றியுள்ளப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைப் போக்கும் பொருட்டு அங்காடியை பரவலாக்கும் திட்டத்தை மேற்கொள்ள கலந்தாலோசகர் நிறுவனம் பணியமர்த்தப்பட்டுள்ளது.

❖ மறைமலை நகர் திட்டப் பகுதி ஆளில்லா விமானத்தின் மூலம் களஆய்வு செய்யப்பட்டுள்ளது.

அமலாக்கப் பிரிவு

❖ 706 பணிநிறைவுச் சான்றிதழ், 291 மூடி முத்திரையிடப்படுவதற்கான தாக்கீதுகள், 12 மூடி முத்திரையிடப்பட்ட கட்டடங்கள், 79 பணி நிறுத்துவதற்கான தாக்கீது மற்றும் திட்ட அனுமதி வரைபடம் கோருதல் இப்பிரிவின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

பெருந்திரள் துரித இரயில் திட்டம் – II விரிவாக்கம் – வேளச்சேரி முதல் புனித தோமையர் மலை வரை

❖ பெருந்திரள் துரித இரயில் திட்டம்-II விரிவாக்க பணிகள் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு வேளச்சேரி முதல் புனிததோமையர் மலை வரை நீட்டிக்க ரூ.734.01 கோடி மதிப்பில் திட்டமிடப்பட்டு, இப்பணிகள் 2023 இறுதிக்குள் முழுமையாக முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

மத்திய சதுக்க திட்டத்திற்கு நிதியுதவி அளித்தல்

❖ உலகத்தரத்தில் மத்திய சதுக்க திட்டத்தினை ரூ.389.42 கோடிகளில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மூலம் செயற்படுத்த நிருவாக அனுமதி.

❖ சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு செலுத்தப்படவேண்டிய ரூ.269.39 கோடிகளை கழித்து சரி செய்து மீதமுள்ள ரூ.120.03 கோடிகளை சென்னை பெருநகர வளர்ச்சி குழும நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டு, உத்தரவு பிறப்பித்து நிதியுதவி வழங்கியுள்ளது.

புது நகர வளர்ச்சிப் பகுதிக்கான அறிவிப்பு

❖ சென்னைப் பெருநகரப் பகுதியின் நெரிசலைக் குறைக்கும் பொருட்டு, அதன் எல்லைப் பகுதியில் அனைத்து விதமான வசதிகளும் கொண்ட புதுநகரங்கள் அமைக்க முன்மொழியப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, திருமழிசை, செங்கல்பட்டு, மீஞ்சூர், திருவள்ளூர், மற்றும் காஞ்சிபுரம் புதுநகரங்களுக்கான எல்லை நிர்ணயித்ததற்கான நோக்கத்தின் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

❖ சென்னைப் பெருநகரப் பகுதியின் மூன்றாம் முழுமைத் திட்டத்திற்கான தொலைநோக்கு ஆவணம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக, சென்னைப் பெருநகரப் பகுதிக்கான தொலைநோக்கு ஆவணம் தயாரிக்க பொதுமக்களின் கருத்துகள் QR Code வாயிலாக பெறப்பட்டு வருகின்றன.

வரன்முறைப்படுத்தும் பிரிவு (கட்டடம்) 113A

❖ 56 சிறப்புகட்டடம், 6 பலஅடுக்குமாடிகட்டடம், 3 தொழில் மற்றும் நிறுவனங்கள் முதலான கோப்புகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பரப்பு வளர்ச்சிப் பிரிவு

❖ ரூ.289.62 கோடி மதிப்பீட்டில், வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் கட்டப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து நிலையத்தின் பணிகள் 98 சதவிகிதம் நிறைவு.

❖ ரூ.186 கோடி மதிப்பீட்டில், திருமழிசை அருகே குத்தம்பாக்கத்தில் கட்டப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து நிலையத்தின் பணிகள் 62 சதவிகிதம் நிறைவு.

பரப்புத் திட்டப் பிரிவு

❖ 174 உயரம் அல்லாத கட்டடங்கள், 20 உயரமான கட்டடங்கள் பரப்புத் திட்டப் பிரிவின் கீழ் திட்ட அனுமதி வழங்கப்பட்டது.

❖ 137 மனைப்பிரிவு / மனைஉட்பிரிவு, 54 நிலஉபயோகமாற்றம் மனைப்பிரிவு மற்றும் நில உபயோக மாற்றப்பிரிவிற்கான திட்ட அனுமதி வழங்கப்பட்டது.

சாலை மற்றும் இரயில் பிரிவு

❖ துரித இரயில் போக்குவரத்து திட்டத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்கப் பணிக்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம், தமிழ்நாடு அரசின் மீதப் பங்கான ரூ.59.28 கோடியை தமிழக அரசிடமிருந்து பெற்று பெருநகர போக்குவரத்து திட்டம் – இரயில்-க்கு அளித்துள்ளது. இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.732.89 கோடி. இதில் தமிழ்நாடு அரசின் பங்கு ரூ.488.62 கோடி மற்றும் இந்திய அரசின் பங்கு ரூ.244.27 கோடி

❖ ❖ ❖



நிதித்துறை, திட்டம், மனிதவள மேலாண்மை, ஓய்வூதியம், ஓய்வுக் கால நன்மைகள் மற்றும் புள்ளியியல் துறை

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்

முனைவர் **பழனிவேல் தியாகராஜன்**

அவர்கள்

முதலமைச்சர் பொது நிவாரண நிதி

- ரூ.578 கோடி முதலமைச்சர் பொது நிவாரண நிதி பெறப்பட்டுள்ளது.
- ரூ.260 கோடி மதிப்பீட்டில் கோவிட்-19 நோய்த்தொற்று இரண்டாம் அலை மற்றும் மூன்றாம் அலை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள நிதியுதவி.
- ரூ.25 கோடி மதிப்பீட்டில் கருப்பு பூஞ்சை நோய் சிகிச்சைக்காக உயிர் காக்கும் மருந்துகள் வாங்க நிதியுதவி.
- ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் கொரோனா ஊரடங்கு காலத்தில் ஆதரவற்ற கால்நடைகளுக்குத் தீவனப் பொருட்கள் கொள்முதல் செய்ய நிதியுதவி.





- கோவிட்-19 பெருந்தொற்று பாதிப்பினால் பெற்றோர் இருவரையும் இழந்த 379 குழந்தைகளின் பெயரில் தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.18.95 கோடி வைப்பீடு.
- கோவிட்-19 பெருந்தொற்று பாதிப்பினால் தாய் அல்லது தந்தையை இழந்த 13,291 குழந்தைகளுக்குத் தலா ரூ.3 இலட்சம் வீதம் ரூ.399 கோடி நிவாரணம்.
- கோவிட்-19 பெருந்தொற்று பாதிப்பினால் தாய் அல்லது தந்தையை இழந்த, முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் 9 குழந்தைகளுக்குத் தலா ரூ.3 இலட்சம் வீதம் ரூ.27 இலட்சம் நிவாரணம்.
- கோவிட்-19 நோய்த் தொற்றால் உயிரிழந்த 21 செய்தியாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 இலட்சம் அல்லது ரூ.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.2 கோடி நிவாரணம்.
- கொரோனா தொற்றால் உயிரிழந்த 404 முன்கள அரசுப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.25 இலட்சம் வீதம் ரூ.101 கோடி நிவாரணம்.
- கொரோனா தொற்று நோய் பணியின்போது விபத்தில் உயிரிழந்த 23 அரசுப் பணியாளர்கள் மற்றும் தற்காலிக முன்கள ஒப்பந்தப் பணியாளர்களின் குடும்பத்தினருக்குத் தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.1.15 கோடி நிவாரணம்.
- எதிர்பாரா நிகழ்வுகளில் உயிரிழந்த 746 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.8.31 கோடி நிவாரணம்.
- உயர்கல்வி பயிலும் 50 ஏழை, எளிய மாணவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் வீதம் ரூ.25 இலட்சம் தொழிற்கல்வி உதவித்தொகை.
- பல்வேறு காரணங்களால் காயமடைந்த அல்லது உயிரிழந்த 1,033 நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு சிறப்பு நிகழ்வாக ரூ.86.87 கோடி நிவாரணம்.

கருவூலக் கணக்குத் துறை ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம்

- ஓய்வூதியம் பெறும் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் IFHRMS இன் வாயிலாக, அனைத்து மாவட்ட கருவூலகங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மூலம் பட்டியல் தயார் செய்து ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.
- அரசிற்குச் செலுத்த வேண்டிய வரவினங்களை, மின்வரவுகளாக 24x7 மணி நேரமும் தங்குதடையின்றி இணையத்தின் (www.karuvoolam.tn.gov.in <http://www.karuvoolam.tn.gov.in>) மூலம் செலுத்தும் வசதி.
- கருவூலத்தில் பெறப்படும் அரசின் வருவாய் இனங்களை மின்வரவாக (e-challan) மின் செலுத்துச்சீட்டு மூலமாக பெறுவதற்கான நடைமுறை அரசின் வருவாய் ஈட்டும் முக்கிய துறைகளான வணிகவரித்துறை, மதுவிலக்கு & கலால் துறைகளை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- காப்பறை மற்றும் முத்திரைத் தாள் மேலாண்மை சார்ந்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- 32.8 இலட்சம் பயனாளிகளுக்கு முதியோர் ஓய்வூதியம் (Old Age Pension) IFHRMS மென்பொருள் வாயிலாக மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.
- முத்துலெட்சுமி திட்டத்தின் கீழ் 6.50 இலட்சம் பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.
- மூவலூர் ராமாமிர்தம் அம்மாள் புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- ஓய்வூதியர்களின் வருடாந்திர நேர்காணலுக்காக (Mustering) ஜீவன் பிரமான் (Jeevan Praman) உடன் ஒருங்கிணைக்கப்பட்டு ஜூலை-2022 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைகள்) மூலம் மேற்கொள்ளப்படும் கருவூலம் சாரா பரிவர்த்தனைகளை ஒருங்கிணைத்தல்.

செயல்படுத்தப்படும் நிலையில் உள்ள இதர ஒருங்கிணைப்பு திட்டங்கள்

- IFHRMS உடன் போக்குவரத்து துறை மற்றும் பதிவுத்துறை போன்ற வருவாய் ஈட்டும் துறைகளின் முழு ஒருங்கிணைத்தல்.
- பி.எஸ்.என்.எல் (BSNL) மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO) உடன் ஒருங்கிணைத்தல்.
- அனைத்து துறைகளிலும் மின் பதிவேடுகளை செழுமைப்படுத்துதல்



- வருமான வரி அறிக்கை தாக்கல் (24Q, 24G மற்றும் 26Q) பணம் பெற்று வழங்கும் அலுவலர்களால் தாக்கல் செய்யப்பட வேண்டிய காலமுறை வருமானக் கணக்கு அறிக்கை (24Q, 24G மற்றும் 26Q) வருமானவரி துறை மென்பொருளுடன் ஒருங்கிணைக்கும்பணிகள்நடைபெற்றுவருகிறது.
- பத்திரப்பதிவுத்துறை, போக்குவரத்துத்துறை ஆகிய துறைகளால் திரட்டப்படும் வரி வரவினங்களை IFHRMS மூலம் பெறுவதற்கான ஒருங்கிணைப்புப் பணிகள்.
- கருவூலக் கணக்கு துறைக்கு இந்தியத் தொழில் கூட்டமைப்பு நிறுவனத்தால் CII CONNECT தொழில்நுட்ப முன்மாதிரி பயன்பாட்டிற்கான விருது.

ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகத்திற்குப் பேராசிரியர் திரு. க.அன்பழகன் மாளிகை எனப் பெயரிடுதல்

- முன்னாள் நிதியமைச்சர் திரு. க.அன்பழகன் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் நினைவாக நிதித்துறை வளாகத்தில் அண்ணாரின் மார்பளவு சிலை. அக்கட்டடத்திற்கு "பேராசிரியர் திரு. க.அன்பழகன் மாளிகை" எனப் பெயர் சூட்டப்பட்டது.

கருவூல அலுவலகங்களில் (CCTV) கேமராக்களை நிறுவுதல்

- ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் 40 இடங்களில் கருவூல அலுவலகங்களுக்கு (ELCOT) நிறுவனத்தின் மூலம் சேமி 390 CCTV கேமராக்கள் கொள்முதல்.

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

- அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மேலும் நான்காண்டிற்கு நீட்டிப்பு.
- அரசு ஊழியர்கள் மட்டுமின்றி உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக்கழகங்கள் விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள் மற்றும் நிறுவன பணியாளர்கள் மற்றும் அவர்களின் தகுதியுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு ரூ.5 இலட்சம் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்.
- இப்புதிய திட்டத்தில் குறிப்பிட்ட நோய்களையும், குறிப்பிட்ட சிகிச்சைகளையும் சிறப்பினமாகக் கருதி அதற்கு ரூ.10 இலட்சம் வரை மருத்துவச் சிகிச்சை பெற உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.
- கோவிட்-19 நோய் தொற்றிற்கான சிகிச்சையைக் குறிப்பிட்ட சிகிச்சைகளின் பட்டியலில் சேர்த்து ரூ.10 இலட்சம் வரை சிகிச்சை.

- புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 86,616 நபர்களுக்கு ரூ.401.20 கோடி மதிப்பில் மருத்துவச் சிகிச்சை.

- புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டால், அதே சிகிச்சையானது கீழ்நிலையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் மேற்கொண்டால் ஆகும் செலவில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் 75 சதவிகிதம் அளவிற்கு மருத்துவ செலவினம் மீள வழங்க வழிவகை.

- தமிழ்நாடு, புதுச்சேரி, பெங்களூரு, திருவனந்தபுரம் மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் உள்ள 1,223 மருத்துவமனைகள் மற்றும் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கக்கூடிய அரசின் 16 கதிரியக்க சிகிச்சை மையங்கள் மூலம் மருத்துவ உதவியினை வழங்குவதற்கு வழிவகை.

- மேலும், புதிய மருத்துவக் காப்பீடு திட்டத்தில் இதுவரை 1,11,860 பயனாளிகள் ரூ.523.7 கோடி அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

- அரசு ஊழியர்கள், கோவிட்-19க்கான சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளில் மேற்கொள்ள ரூ.5 கோடி நிதிய மூலதனம் (Corpus Fund) உருவாக்கம். மேலும் ரூ.50 கோடி ஒதுக்கீடு.

- அங்கீகரிக்கப்படாத மருத்துவமனையில் மேற்கொண்ட கோவிட் - 19 சிகிச்சைக்கான மருத்துவ செலவினத்தை மீள வழங்க ரூ.4 கோடி காப்பீட்டு நிறுவனத்திற்கு ஒப்பளிப்பு.

மாவட்ட ஆட்சியர்களின் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

- 49 ஓய்வூதியர்களின் குறை தீர்வு கூட்டங்கள் வாயிலாக மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட 1,033 ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் மனுக்கள் அனைத்தின் மீதும் நடவடிக்கை.

ஓய்வூதிய அதாலத்

- தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையத்தால் 22.02.2002இல் உருவாக்கப்பட்ட ஓய்வூதிய அதாலத் முன்பு வைக்கப்படும் ஓய்வூதியதாரர் குறைகள் மீதான உத்தரவினை செயல்படுத்திட, ஓய்வூதிய இயக்குநர், சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாநிலக் கணக்காயரின் பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய குழு அமைப்பு.

அரசு ஊழியர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம்

- தமிழ்நாடு அரசு ஊழியர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தின்கீழ், அரசு அலுவலர்கள் பணிக் காலத்தில் இறக்கும் நேர்வில் அவர்தம் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் தொகை ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்வு. குழுக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள உள்ளாட்சித் துறை, அரசு உதவி பெறும் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிலையங்கள் முதலியனவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் நீட்டிப்பு.

ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்

- தமிழ்நாடு ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு திட்டத்தின்கீழ், ஒரு மாதத்திற்கான சந்தாத் தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு ரூ.50,000 நிதியுதவி.

- தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்களின் குடும்ப பாதுகாப்புத் திட்டத்தில் 15,003 நிலுவை விண்ணப்பங்களை நேர் செய்யப்பட்டு, ரூ.50 கோடி ஒப்பளிக்கப்பட்டு பயன்.

- ஓய்வூதியர்களின் குடும்ப பாதுகாப்புத் திட்டத்தின் மாத சந்தா தொகையானது ரூ.80லிருந்து ரூ.150ஆக உயர்வு.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

- பல்வகை நிறுவனங்கள் மற்றும் தேசிய சமூக நலத் திட்டம் உள்ளிட்ட 4,073 நிறுவனங்களின் 2020-2021ஆம் ஆண்டிற்கான தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது.

- நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 30,518 ஓய்வூதியதாரர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம்.

- உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர், குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஓய்வூதியம், தொடர்பான குறைகளைக் களைய உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம்.



- நகராட்சி ஓய்வூதியதாரர்கள் நலத்திட்டத்தின்கீழ் 105 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு ரூ.46.31 இலட்சமும் ஓய்வூதியதாரர்கள் குடும்ப பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 239 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு ரூ.106 இலட்சமும் அனுமதி.
- ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்கள் நலத்திட்டத்தின்கீழ், 167 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு ரூ.76.35 இலட்சம் அனுமதி.
- ஓய்வூதியதாரர்கள் குடும்ப பாதுகாப்பு திட்டத்தின் கீழ், 392 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு ரூ.173.54 இலட்சம் அனுமதி.
- உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக ரூ.18 கோடி அளிக்கப்பட்டுள்ளது.
- 342 அறக்கட்டளை நிறுவனங்களுக்கு உதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் வழங்க ரூ.45.99 இலட்சம்.
- 308 ஊராட்சி ஒன்றியங்களின் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் 2020-2021ஆம் ஆண்டிற்கான பங்களிப்பு ஓய்வூதிய கணக்குகளுக்கு ஒப்புதல்.
- 14 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சி பதிவேற்றம் செய்யப்பட்ட தரவுகள் தணிக்கைத் துறையினரால் சரிபார்க்கப்பட்டு தணிக்கையில் அங்கீகரித்து ஒப்புதல்.
- பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் 27,928 தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்த வகையில் ரூ.12.27 கோடி வசூல்.
- தணிக்கை தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு அனைத்து தணிக்கையாளர்களுக்கும் புத்தாக்கப் பயிற்சி.
- உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கென தணிக்கைத் தகவல் மேலாண்மை.
- தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் (ELCOT) வழிகாட்டுதல்களின்படி பயன்படுத்தப்படும் தரவுகள் மேம்பாடு.

மாநில அரசு தணிக்கைத் துறையின் சாதனைகள்

- 3,79,362 சத்துணவு மையங்கள் மற்றும் 4,239 இதர நிறுவனங்களில் தணிக்கை.
- தணிக்கைக் கட்டணமாக ரூ.8.53 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.
- 12,287 தணிக்கைத் தடைகள் நிவர்த்தி செய்யப்பட்டதன் மூலம் ரூ.1,469.6 இலட்சம் வசூல்.

சிறுசேமிப்புத் துறை

- அஞ்சலக சேமிப்பு வங்கிக் கணக்கு, அஞ்சலக மாதாந்திர வருவாய் திட்டம், அஞ்சலக தொடர் வைப்பு திட்டம், மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம் ஆகிய திட்டங்களில் சிறுசேமிப்பு உயர்வு.

உலக சிக்கன நாள் கொண்டாட்டங்கள்

❖ உலக சிக்கன நாள் விழாவில் மாணவர் / மாணவியர்களிடையே சிக்கனம் மற்றும் சேமிக்கும் பண்பினை, ஊக்குவிக்கும் வகையில் போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசுகள்.

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை

❖ தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 10 அலகுகளிலும் இறுதித் தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கை அறிக்கை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

தனி அறிக்கைகள்

❖ 2019-2020 தணிக்கையாண்டில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் 9 அலகுகளில் ரூ.120.76 கோடிக்கு சீரிய முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளது.

❖ 829 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் ரூ.6.19 கோடிக்கு சீரிய முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளது. தனி அறிக்கைகள் உரிய மேல் நடவடிக்கைக்காக நிருவாகத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத் தணிக்கை துறை

❖ இந்து சமய அறநிறுவனங்களின் வரவு செலவு கணக்குகளை தணிக்கை செய்திட இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவந்த தணிக்கைப் பிரிவு சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் இந்து சமய அறநிலையத்துறையிலிருந்து விடுவிக்கப்பட்டு தனித்துறையாக நிதித்துறையின் நிருவாக கட்டுப்பாட்டிற்கு மாற்றம்.

உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம்

சென்னை மாநகர கூட்டாண்மை

❖ "சென்னை மாநகரக் கூட்டாண்மை" என்னும் தனித்தன்மை வாய்ந்த வளர்ச்சித் திட்டம்.

சென்னை மாநகர கூட்டாண்மை – நிலையான நகர்ப்புர சேவைகள் திட்டம் – கட்டம் 1

❖ பொது சுகாதாரம், போக்குவரத்து, குடிநீர் மற்றும் கழிவுநீர் ஆகிய துறைகளில் நெகிழ்திறன் வாய்ந்த சேவைகள்.

❖ தமிழ்நாடு அரசின் நிதித் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்படும்.

❖ சென்னை மாநகர கூட்டாண்மை திட்டத்திற்கான நகர்ப்புர சேவைகள் திட்டம் மற்றும் இதற்கான வழங்கல் சார்ந்த குறியீடுகளுக்கு தமிழ்நாடு அரசு திருத்திய கொள்கை அளவிலான ஒப்புதல்.

திட்டம் மற்றும் வளர்ச்சி மாநில திட்டக்குழு

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம்

❖ மாநில திட்டக்குழுவில் அரசு துறைகளில் புதுமைகளை வளர்ப்பதற்கும் புதுமை கலாச்சாரத்தை ஊக்குவித்து ரூ.104.57 கோடி மதிப்பீட்டில் 29 முன்மொழிவுகள்.

தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம்

❖ நிலம் மற்றும் நீர் வளங்கள் தொடர்பான துறைகளில் கொள்கை குறுக்கீடுகளில் அரசுக்கு ஆலோசனைகளை வழங்கி வருகிறது மாநிலத் திட்டக்குழு.

❖ ரூ.1.52 கோடி மதிப்பீட்டில் புதியதாக 9 ஆராய்ச்சி ஆராய்வுகள் மற்றும் ஒரு கருத்தரங்கிற்கு அனுமதி.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

❖ நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், கன்னியாகுமரி, தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் மூலம் ரூ.23.81 கோடி செலவில் 263 பணிகள்.

❖ நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறையின் மூலம் ரூ.22.36 கோடி செலவில் 236 பணிகள்.

❖ வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் மூலம் ரூ.2.64 கோடி மதிப்பீட்டில் 14 பணிகளும், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் ரூ.34.70 கோடியில் 237 பணிகள்.



- ரூ.5.640 கோடி ஒதுக்கீட்டில் வேளாண்மை சந்தைப்படுத்தல் மற்றும் வேளாண் வணிகத் துறைக்கு 2 பணிகள்.
- கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் ரூ.1.848 கோடியில் 65 பணிகள்.
- ரூ.11.50 இலட்சத்தில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, அமராவதி நகரில் உள்ள அரசு பழங்குடியினர் குடியிருப்புப் பள்ளிக்கு உணவு உண்ணும் அறையுடன் கூடிய சமையலறை.
- மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் ரூ.1.715 கோடியில் 16 பணிகள்.
- தொழில் துறையின் மூலம் ரூ.7.335 கோடியில் 12 பணிகள்.
- பொதுப்பணித்துறையின் மூலம் ரூ.10.60 கோடியில் 58 பணிகள்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் ரூ.12.89 கோடியில் 78 பணிகள்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் ரூ.0.350 இலட்சத்தில் 6 பணிகள்.
- சுற்றுலாத் துறையின் மூலம் ரூ.0.920 இலட்சத்தில் 3 பணிகள்.

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

- மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை 1974ஆம் ஆண்டு முதல் இதுகாறும் சமர்ப்பித்துள்ள 793 மதிப்பீட்டு ஆய்வறிக்கைகள் அரசு கொள்கை முடிவுகள், கொள்கை உருவாக்கம்.
- தமிழ்நாட்டில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின்கீழ் காக்ளியர் உள்ளமைப்பு அறுவை சிகிச்சை மேற்கொண்ட சிறுவர்கள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.
- தமிழ்நாட்டில் "பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்" குறித்த மதிப்பீட்டாய்வு.
- பேரழிவு மற்றும் சமூக பயன்பாட்டில் ஆளில்லா வான்வழி வானூர்திகளின் வடிவமைப்பு மேம்பாடு மற்றும் செயல்பாடு குறித்த மதிப்பீட்டாய்வு.
- "சென்னை மற்றும் காஞ்சிபுரத்தில் உள்ள மறுகுடியமர்வில் மாணவர்களின் தற்போதைய நிலை மற்றும் இடை நிற்றலுக்கான காரணங்கள்" பற்றிய ஆய்வறிக்கை.
- தமிழ்நாடு ஓர் பொருளாதார ஆய்வறிக்கை முடிக்கப்பட்டு வெளியிடப்படவுள்ளது.
- சிறப்பு பொது விநியோக திட்டம் குறித்த மதிப்பீட்டு ஆய்வு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மனிதவள மேலாண்மைத்துறை

- பெண் அரசு ஊழியர்களுக்கு மகப்பேறு விடுப்பு 12 மாதங்களாக உயர்வு.

- அரசுப் பணியாளர்களுக்கு அவர்களது பணித்திறனை மேம்படுத்தும் பொருட்டு பெற்றிடும் கூடுதல் கல்வித் தகுதிக்கு ஊக்கத்தொகை.
- அரசுப் பணிகளில் நேரடி நியமனம் மூலம் பணிநியமனம் செய்யப்படுவதற்கான வயது உச்சவரம்பு இரண்டு ஆண்டுகள் உயர்வு.
- கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த இளையோர்கள் அரசுப் பள்ளிகளில் தமிழ்மொழியில் பயின்ற நபர்கள் மற்றும் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பகங்கள் மூலம் முன்னுரிமை அடிப்படையில் பணி நியமனம்.
- புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, தென்காசி ஆகிய மாவட்டங்களிலும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்கள் உருவாக்கம்.
- மாநிலம் முழுவதும் ஊழல் தடுப்பு இயக்குநரகம் சென்னை மாநகர சரகம், மத்திய சரகம், வடக்கு சரகம், மேற்கு சரகம் மற்றும் தென்சரகம் என ஐந்து சரகங்களாகப் பிரிக்கப்பட்டு அவை அனைத்தும் காவல் கண்காணிப்பாளர் நிலையில் கண்காணிப்பு.
- அரசுப் பணிகளுக்காக நடத்தப்படும் போட்டித் தேர்வுகள் அனைத்திலும் தமிழ்மொழி பாடத்தாள் கட்டாயம்.
- தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சட்டப்பூர்வமான வாரியங்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகளில் உள்ள சில பணியிடங்களை நிரப்பும் பணியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு வழங்கும் விதமாக சட்டம்.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் நான்கு உறுப்பினர்கள் நியமனம்.
- மனிதவள மேலாண்மைத்துறையில் மின்னனு அலுவலக (e-office) முறை தொடக்கம்.

தமிழ்நாடு மாநிலப் பயிற்சிக் கொள்கை 2022

- தமிழ்நாடு மாநிலப் பயிற்சிக் கொள்கை 2022 செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டதன் மூலம் அலுவலர்களின் பணித்திறன் மேம்படும்.
- பவானிசாகர் அடிப்படையிலான பயிற்சிகள் அந்தந்த மாவட்டங்களில் வழங்கியதன் மூலம் அரசு ஊழியர்கள் உரிய காலத்தில் பயிற்சியினை நிறைவு செய்து 9,200 அலுவலர்கள் பயன்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

- தேர்வாணையத்தின் அனைத்து தேர்வுகளிலும் கட்டாயத் தமிழ்மொழி தகுதித்தேர்வு அறிமுகம்.
- 12 போட்டித் தேர்வுகளுக்கான தேர்வாணைய அறிவிக்கைகள் வெளியீடு. 10 போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.
- தேர்வாணைய வரலாற்றிலேயே முதன்முறையாக துறைத்தேர்வுகளில், அனைத்து கொள்குறிவகைத் தேர்வுகளும் கணினி வழித் தேர்வாக அனைத்து மாவட்ட தேர்வுமையங்களிலும் நடத்தப்பட்டுள்ளன.
- தேர்வாணைய விண்ணப்பதாரர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் தீர்வு காணும் வகையில், தேர்வாணைய அலுவலகத்தில் "குறைதீர் அழைப்பு மையம்".

புள்ளியியல் துறை

விவசாயம்

- பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 34 பயிர்களுக்கு, காரீப் மற்றும் ராபி பருவத்தில் 99,774 பரிசோதனைகளுக்கு, சராசரி விளைச்சல் விவரங்கள் கணிக்கப்பட்டு காப்பீட்டு நிறுவனங்களுக்கு அனுப்பிவைப்பு.
- காரீப் மற்றும் ராபி பருவத்தில், 36 விவசாயம் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு 1,32,534 பரிசோதனைகள் திட்டமிடப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் கிராமபட்டியல் அனுப்பிவைப்பு.
- விற்பனை மிகுதிதிட்டத்தின்கீழ், நெல்பயிருக்கான 1,302 பரிசோதனைகளுக்கு விற்பனை மிகுதி சதவிகிதம் கணக்கிடப்பட்டு ஆண்டு அறிக்கை வெளியீடு.
- விற்பனை மிகுதி திட்டத்தின்கீழ், 1,276 பரிசோதனைகளுக்கு நெல் பயிருக்கான கிராமப் பட்டியல் அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைப்பு.
- ஒவ்வொரு மாதமும் 597 மழைப்பொழிவு நிலையங்களிலிருந்து மழை விவரங்கள் பெறப்பட்டு, சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வருடாந்திர அறிக்கை வெளியீடு.
- 385 வட்டாரங்களில் விவசாயத் தொழிலாளர்களின் தினசரி ஊதியம் குறித்த மாதக் குறியீடு



மதிப்பிடப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, ஆண்டறிக்கை வெளியீடு.

❖ பயிர்பரப்பு உரிய காலத்தில் மதிப்பீடும் திட்டத்தின்கீழ், 3,480 டி.ஆர்.எஸ் கிராமங்களில் உள்ள 9 முக்கிய பயிர்களின் பரப்பு விவரங்களைக் கொண்டு காரீப் மற்றும் ராபி பருவத்திற்கான மதிப்பீடுகள் கணக்கீடு செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு ரூ.150 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

❖ பயிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மத்திய மற்றும் மாநில மாதிரிகள் அடங்கிய 520 மாதிரி கிராமங்களுக்குப் பருவம்-1க்கான பயிர் பரப்பாய்வு பணி மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கைகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, ரூ.63 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

❖ சிறுபான்மைப் பயிர் திட்டத்தின்கீழ், சராசரி விளைச்சல் விகிதம் மற்றும் உற்பத்தி 8 பயிர்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு, ஆண்டறிக்கை வெளியிடப்பட்டு, பயிர் அறுவடை பரிசோதனைக்காக 665 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு பரிசோதனைகள் அறுவடை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இவ்வாண்டு 665 கிராமங்கள் தேர்விடப்பட்டுள்ளது.

❖ பழம் மற்றும் காய்கறிகள் திட்டத்தின்கீழ், சராசரி விளைச்சல் விகிதம் மற்றும் உற்பத்தி, 13 பயிர்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு, ஆண்டறிக்கை வெளியிடப்பட்டு, பயிர் அறுவடை. பரிசோதனைக்காக 750 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு பரிசோதனைகள் அறுவடை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இவ்வாண்டு 750 கிராமங்கள் தேர்விடப்பட்டுள்ளது.

❖ தென்னை மற்றும் கமுகு திட்டத்தின்கீழ், சராசரி விளைச்சல் விகிதம் மற்றும் உற்பத்தி மதிப்பீடு செய்யப்பட்டு, ஆண்டறிக்கை வெளியிடப்பட்டு, பயிர் அறுவடை பரிசோதனைக்காக 379 கிராமங்கள், தென்னை பயிருக்கும், 64 கிராமங்கள் கமுகு பயிருக்கும் தேர்விடப்பட்டது.

❖ உரிமையாளர்களின் நிலங்களின் தொகுப்பு எண்ணிக்கை, பல்வகை பயிர்கள், நிலப்பயன்பாட்டு வகைகள், இரசாயன உரங்களின் பயன்பாடு, உயிர் / கனிம உரங்களின் விவரம், வேளாண்மை கருவிகள், சாகுபடியாளரால் விவசாயக் கடன் பெற்ற விவரங்களை உள்ளடக்கிய பத்தாவது வேளாண்மை கணக்கெடுப்பு மூன்றாம் கட்ட அறிக்கை வெளியீடு.

❖ பருவமும் பயிரும் அறிக்கை வெளியிடப்பட்டு, பொருளாதாரத்தின் முதன்மைப் பிரிவின் முக்கிய அளவுகளுக்கான முக்கியத் தகவல்களை உள்ளடக்கியது.

❖ பயிர் முன் மதிப்பீடு அறிக்கை, ஒவ்வொரு மாதமும் இறுதி செய்யப்படும் பயிர் பரப்பு விவரங்களை அடிப்படையாகக் கொண்டு முதலாம் மற்றும் இரண்டாம் முன்மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு உரியக் காலக்கெடுவிற்குள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன.

❖ பொதுப்பயிர் மதிப்பீட்டாய்வுத் திட்டத்தின்கீழ், பயிர் மதிப்பீட்டாய்வுத் திட்ட ஆண்டறிக்கை வெளியீடு. பொதுப்பயிர் மதிப்பீட்டாய்வுத் திட்டத்தில் 17 முக்கியப் பயிர்களுக்கு, ஹெக்டேருக்கான விளைச்சல் விவரம் மற்றும் உற்பத்தி விவரம் மாவட்ட மற்றும் மாநில அளவில் கணிக்கப்பட்டு, 9,500 பரிசோதனைகள் திட்டமிடப்பட்டு

ஆய்வு நடைபெற்றது. இவ்வாண்டு 9,500 பரிசோதனைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

புள்ளிவிவரப் பகுப்பாய்வு மையம்

- கோவிட் பல்ஸ் சர்வே (தொலைபேசி ஆய்வு) அலை-4 முடிக்கப்பட்டு அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது.
- முதியோர் குறித்த தொடர் ஆய்வு கணக்கெடுப்பு அலை-1 சென்னை, திருவண்ணாமலை, திருச்சி, தருமபுரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 5 மாவட்டங்களில் முடிக்கப்பட்டு அறிக்கை நவம்பர் 2022இல் வெளியிடப்பட்டது.
- தேர்தலுக்கான அறிவுத்திறன், அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்தான அடிப்படை ஆய்வு குடிமக்களிடையே மேற்கொள்ளப்பட்டு அறிக்கை செப்டம்பர் 22இல் வெளியிடப்பட்டது.
- தேர்தலுக்கான அறிவுத்திறன் அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்தான இறுதிக்கட்ட ஆய்வு குடிமக்களிடையே மேற்கொள்ளப்பட்டு அறிக்கை தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அனுப்பப்பட்டது.
- தமிழ்நாடு மாநிலத்தின் 2021ஆம் ஆண்டிற்கான நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்த தரவுத்தாள் 04.03.2023 அன்று வெளியிடப்பட்டது.
- தமிழ்நாடு புள்ளியியல் கையேடு 2020-2021 புத்தகம் 29.12.2022 அன்றும், தமிழ்நாடு ஒரு கண்ணோட்டம் 2021-2022 புத்தகம் 15.02.2023 அன்றும் வெளியிடப்பட்டது.

நீடித்த வளர்ச்சி இலக்குகள்

- நீடித்த வளர்ச்சி இலக்கு அலகுகளுடன் தொடர்புடைய துறைகளின் முகமை அலுவலர்களுக்கு 4 நாட்கள் பயிற்சி.
- மாநிலத்திற்கென தயாரிக்கப்பட்டுள்ள மாவட்ட நல் ஆளுமை குறியீடு வாயிலாக துறை அலுவலர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி.
- நித்தி ஆயோக் அமைப்பின் ஒரு அலுவலகம் Development Monitoring and Evaluation Office உடன் இணைந்து திட்டங்களின் வெளிப்பாடு மற்றும் அவற்றின் விளைவுகள் குறித்த வரையறை குறித்த 2 நாட்கள் பயிற்சி.
- 100 நாட்களில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய 8 தொகுப்பு மாவட்டக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.
- கேரள மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் உள்ளூர்மயமாக்கல் செயல்படுத்துவது குறித்த 2 நாட்கள் பயிற்சி.
- நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பான தகவல்களைப் பரப்புவதற்கு இலச்சினை உருவாக்கப்பட்டு #tnsdggoalkeepers எனும் சமூக ஊடகங்களின் கணக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.
- நீடித்த வளர்ச்சி இலக்குகளில் அச்சு மற்றும் உள்ளூர் ஊடகங்கள் மூலம் பரப்புவதற்கான கருத்துக்களை உருவாக்க ஒரு எழுத்துப்பட்டறை உருவாக்கப்பட்டது.
- நீடித்த வளர்ச்சி இலக்கு மேசை நாட்காட்டி, நீடித்த வளர்ச்சி இலக்கு தரவுத்தாள், நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்காக தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள முதலீடுகள், நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கருப்பொருள் சார்ந்த அணுமுறை ஆகிய புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

> “நாம் பெற்றிருக்கிற வெற்றி நமக்கானதல்ல, சமூகத்திற்கானது என்று சிந்தியுங்கள். எப்படியெல்லாம் பயிற்சியில் பெறுகிற அறிவைக் களத்தில் பயன்படுத்தலாம் என்று நீங்கள் வாழ்க்கையோடு தொடர்புப்படுத்திப்பாருங்கள். அப்போதுதான் அந்தப் பயிற்சி உங்களை மின்னும் வைரமாக, ஒளிரும் மாணிக்கமாக, மங்காத தங்கமாக, மிளிரும் முத்துக்களாக மாற்றி அமைக்கும்.”
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



பால்வளம் மற்றும்
பால் பண்ணை வளர்ச்சி

மாண்புமிகு
பால்வளத்துறை அமைச்சர்
திரு. சா.மு.நாசர்
அவர்கள்

பால்வளத்துறை

- அனைத்து வகையான ஆவின் பால் விற்பனை விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் 3/- குறைப்பு
- ஆவின் பால் விற்பனை நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டர் அதிகரிப்பு.
- 4 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன் பெறும் வகையில் பால்கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தி பசும்பாலின் விலை, லிட்டருக்கு ரூ.32/-லிருந்து ரூ.35/-ஆகவும், எருமைப்பாலின் விலை லிட்டருக்கு ரூ.41/-லிருந்து ரூ.44/-ஆகவும் உயர்வு.







- ஆவின் பால் விற்பனை விலை ரூ.3/- குறைப்பினால் ஆவின் பால் நுகர்வோர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.270 கோடி சேமிப்பு.
- 2021 தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆவின் இனிப்பு வகைகள் ரூ. 82.11 கோடிக்கு விற்பனை செய்து சாதனை.
- 2022 தீபாவளி பண்டிகைக்கான ஆவின் இனிப்பு விற்பனை ரூ.116 கோடி.
- 2022ஆம் வருடத்திற்கான பொங்கல் பரிசுத் தொகுப்பில் ரூ.121 கோடி மதிப்புள்ள ரூ.2.16 கோடி எண்ணிக்கையில் 100 மி.லி. ஆவின் நெய் விநியோகம்.
- 22.07.2021 அன்று ஆவின் நிறுவனம் 43.05 இலட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்து சாதனை.
- மில்க்கேக், மாம்பழம் & ஸ்ட்ராபெரி சுவைகளில் யோகர்ட், பாயாசம் மிக்ஸ், பால் புரத நூடுல்ஸ் மற்றும் டெய்ரி ஒயிட்னர் ஆகிய புதிய பால்பொருட்கள் அறிமுகம்.
- ஜாக்புரூட் ஐஸ்கீரிம், ஒயிட் சாக்லெட், கோல்டு காபி, பட்டர் சிப்லெட்ஸ், பாசுந்தி, ஆவின் ஹெல்த் மிக்ஸ், பதப்படுத்தப்பட்ட சீஸ், பேக்டுயோகர்ட், ஆவின் மில்க் பிஸ்கட் மற்றும் ஆவின் பட்டர் முறுக்கு ஆகிய பத்து புதிய பால்பொருட்கள் அறிமுகம்.
- இந்திய தேசிய கூட்டுறவு பால் பண்ணைகளின் இணையம் மூலம் 2021-2022ஆம் ஆண்டு ஆவின் நிறுவனத்தின் பால் மற்றும் பால் பொருட்களை மின்னணு வாயிலாக ரூ.590 கோடிக்கு பரிவர்த்தனை மேற்கொண்டதற்காக ஆவின் நிறுவனத்திற்கு இந்திய அளவில் இரண்டாமிடத்திற்கான விருது.
- நுகர்வோர்களின் ஐஸ்கிரீம் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு மதுரையில் நாளொன்றுக்கு ஆயிரம் லிட்டர் உற்பத்திதிறன் கொண்ட ஐஸ்கிரீம் தொழிற்சாலை தொடக்கம்.
- ஆவின் நிறுவனத்தில் 47 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனம்.
- ரூ.15 கோடி செலவில் 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 4 எண்ணிக்கையிலான பால் குளிர்விப்பு நிலையங்கள் மற்றும் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 98 எண்ணிக்கையிலான குளிர்விப்பு நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன.
- ரூ.14 கோடி செலவில் 866 தானியங்கி பால் சேகரிப்பு அலகுகளும், 350 எண்ணிக்கையிலான செயலாக்கதரவு பால் சேகரிப்பு அலகுகளும் நிறுவப்பட்டுள்ளன.
- ஈரோடு ஒன்றியத்தில் உள்ள கால்நடை தீவன தயாரிப்பு திறனை நாள் ஒன்றுக்கு 150 மெட்ரிக் டன்னிலிருந்து 300 மெட்ரிக் டன்னாக உயர்வு.

- கிருஷ்ணகிரி ஒன்றியத்தில், புதிதாக நாள் ஒன்றுக்கு 12 மெட்ரிக் டன் உற்பத்தித்திறன் கொண்ட தாது உப்பு கலவை தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 50 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்ட நடவடிக்கை.
- ஆவின் பால்பொருட்கள் விற்பனையினை அதிகரித்திட ஏதுவாக 280 எண்ணிக்கையிலான புதிய பாலகங்கள்.
- பால் உற்பத்தியாளர்களுக்கு பண பட்டுவாடா நேரடியாக அவர்களது வங்கி கணக்கிற்கே செலுத்த நடவடிக்கை.
- மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணியாளர்களுக்கு ரூ.27.60 இலட்சமும் மற்றும் இணையத்தின் பணியாளர்களுக்கு ரூ.12.58 இலட்சமும் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை.
- 1.39 இலட்சம் பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.1,951.74 இலட்சம் போனஸ், ரூ.3,432.62 இலட்சம் பங்கு ஈவுத்தொகையாகவும் ரூ.38.63 இலட்சம் ஆதரவு தள்ளுபடி .
- நுகர்வோர்களின் ஐஸ்கிரீம் தேவையினை பூர்த்திசெய்யும் பொருட்டு சேலம் மாவட்டத்தில் நாளொன்றுக்கு 6,000 லிட்டர் உற்பத்தி திறன்கொண்ட புதிய ஐஸ்கிரீம் தொழிற்சாலை திறப்பு.
- மாதவரம் பால்பண்ணையில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் மத்திய தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம்.
- கள்ளக்குறிச்சி மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் தொடக்கம்.
- சேலம் மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு ஏற்கெனவே உள்ள பால்பண்ணையின் பால்கையாளும் திறனை 7 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யவும் மற்றும் 30 மெட்ரிக் டன் பால்பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை.
- தூத்துக்குடி மாவட்டத்தில், நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் கையாளும் திறனுடைய புதிய பால்பண்ணை அமைக்க நடவடிக்கை.
- 500 ஏக்கர் பரப்பளவில் பசுந்தீவனம் உற்பத்தி செய்ய பயிற்சி மற்றும் தீவன விதைகள் பால் உற்பத்தியாளர்களுக்கு ஆவின் நிறுவனத்தால் வழங்கப்பட்டு, 500 ஏக்கர் பரப்பளவில் பசுந்தீவனம் உற்பத்தி.

❖ ❖ ❖

அரசின் பொருளாதாரமும் தனிமனிதர்களின் பொருளாதாரமும் தன்னிறைவு பெற்றதாக மாற வேண்டும். நம்முடைய தமிழ்ச் சமூகமானது சிந்தனையால், பண்பாட்டால், நாகரிகத்தால் பழக்க வழக்கத்தால் உயர்வடைய வேண்டும். ஏற்றத்தாழ்வு அற்ற, உயர்வு தாழ்வு அற்ற ஒரு மனித உரிமைச் சமூகமாக நாம் மாற வேண்டும்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



வள்ளலார் முப்பெரும் விழாவில், "தனிப்பெருங்கருணை நாள்" முன்னிட்டு ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தல் - 05.10.2022



புதுக்கோட்டை மாவட்டத்தில், நடைபெற்ற அரசு விழாவில் மாற்றுத்திறனாளியிடம் உரையாடல் - 08.06.2022



சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வஃக்ப் வாரியம்

மாண்புமிகு
சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர்
நலத்துறை அமைச்சர்
திரு. செஞ்சி
கே.எஸ்.மஸ்தான்
அவர்கள்

- சிறுபான்மையினர் விடுதி மாணவ / மாணவியருக்கு சிறுபான்மையினர் பண்டிகைகளுக்கு சிறப்பு உணவு வழங்கப்பட்டு வருகிறது.
- ரூ.61.60 இலட்சம் செலவில், சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்தவர்கள் பயன்பெறும் வகையில் 1,000 இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகிறது.
- ரூ.1.75 கோடி செலவில், சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் 5 மாவட்டங்களில், புதிய பணியிடங்களுடன் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.
- தேனி, கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய 3 மாவட்டங்களில் தலா ஒரு முஸ்லிம் உதவி சங்கங்களும், கரூர், மதுரை மற்றும் தேனி ஆகிய



3 மாவட்டங்களில் தலா ஒரு கிறிஸ்துவ உதவி சங்கங்களும் கூடுதலாக துவங்கப்பட்டுள்ளது.

- ரூ.543.64 இலட்சம் செலவில், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உள்ள 10,583 உறுப்பினர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.
- ஜெருசலேமிற்கு புனித பயணம் செல்வதற்கு அருட்சகோதரிகள்/ கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் ரூ.37,000லிருந்து ரூ60,000ஆக உயர்த்தி வழங்க ரூ.11.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் 6,034 பயனாளிகளுக்கு ரூ.36.18 கோடி மதிப்பில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கான ஆண்டு நிருவாக மானியம் ரூ.2.50 கோடி வழங்கப்படுகிறது. வக்ஃப் நிறுவனங்களிடம் வசூலிக்கப்படும் சகாயத் தொகை விகிதத்திற்கு ஏற்ப வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் ஆண்டு நிருவாக மானியத்தினை உயர்த்தி வழங்க ஆணை.
- 4 வக்ஃப் சரக அலுவலகங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கு ரூ.64 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- வக்ஃப் சொத்துக்களை பாதுகாக்கும் பொருட்டு 60,000 வக்ஃப் சொத்துக்களை ட்ரோன்களை (Drone) பயன்படுத்தி G.P.S./G.I.S மேப்பிங் செய்ய இன்ஸ்ட்டிடியூட் ஆஃப் ரிமோட் சென்சிங், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை, ஜவஹர்லால் டெக்னாலாஜிகள் யூனிவர்ஸிட்டி, ஹைதராபாத் மற்றும் சென்னை பல்கலைக்கழகம், புவியியல் துறைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்.
- பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களை பழுது பார்ப்பதற்காகவும், புனரமைப்பதற்காகவும் ஆண்டுதோறும் வழங்கப்படும் மானியம் ரூ.6 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டு, 77 வக்ஃப் நிறுவனங்கள் பயனடைந்துள்ளன. ஆண்டுதோறும் பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்கள் புனரமைப்பிற்காக வழங்கப்படும் மானியத் தொகையினை ரூ.10 கோடியாக உயர்த்தி வழங்க ஆணை.
- கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலனுக்காக நல வாரியம் அமைக்க நடவடிக்கை.
- 275 கல்லூரி விடுதிகளில் ரூ.2.20 கோடி செலவில் E-Library அமைக்கும் பணிகள்.
- மாணவ, மாணவியர் குறைவாக உள்ள பள்ளி விடுதிகளை மறுசீரமைத்து, தேவைப்படும் இடங்களில் 15 கல்லூரி விடுதிகளை ரூ.1.48 கோடி செலவில் துவக்கம்.
- பள்ளிமாணவியர் விடுதிகளில் காலியாக உள்ள 3,224 இடங்களில் ரூ.48.36 இலட்சம் செலவில் கல்லூரி மாணவியர் தங்க அனுமதி.
- சொந்த கட்டடம் முற்றிலும் பழுதடைந்ததால் வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் 2 விடுதிகளுக்கு ரூ.7.43 கோடி செலவில் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை.
- மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் ரூ.1.17 கோடி செலவில் 3 உண்டு உறைவிடப் பள்ளிகள் துவக்கப்பட்டு 160 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்
- மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 2 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ரூ.1.34 கோடி செலவில் தரம் உயர்வு.
- 11 ஆம் வகுப்பு பயிலும் 1,757 கள்ளர் சீரமைப்பு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.53.28 இலட்சம் செலவில் மாநில அளவில் கல்வி சுற்றுலா.
- ரூ.32.98 இலட்சம் செலவில் விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் 3 முறை இலவச மருத்துவப் பரிசோதனை செய்வதற்கென வழங்கப்பட்டு வரும் இடைநிகழ் செலவினம் ரூ.1,000லிருந்து ரூ.3,000 ஆக உயர்வு.
- ரூ.75 இலட்சம் செலவில் சலவைத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றவர்களை 10 நபர்களை

கொண்ட குழுவாக இணைத்து 25 நவீன முறை சலவையகங்கள் அமைக்கும் பணிகள்.

- ரூ.75 இலட்சம் செலவில் தையல் தொழிலில் ஈடுபட்டு வருகின்றவர்களை 10 நபர்களை கொண்ட குழுவாக இணைத்து 25 ஆயத்த ஆடை அலகுகள் (Readymade Garments Units) அமைக்கும் பணிகள்.
- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 15,151 பயனாளிகளுக்கு ரூ.99.62 கோடி மதிப்பீட்டில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.
- கிராமப்புற சிறுபான்மையின மாணவியர் இடைநிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில, 3 முதல் 6ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ரூ.2.76 கோடி செலவில் ஊக்கத்தொகை வழங்குவதற்கு நடவடிக்கை.
- தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 8,785 பயனாளிகளுக்கு ரூ.55.28 கோடி மதிப்பில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.
- உலமா ஓய்வூதியதாரர் இறந்த பிறகு, அவரின் குடும்பத்தினருக்கு "குடும்ப ஓய்வூதியம்" வழங்கப்படுகிறது.
- பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம் திட்டத்தின் கீழ், ரூ.615.75 கோடி மதிப்பீட்டில் 10 மாவட்டங்களில் 62 பணிகள் மேற்கொள்ள முதல் தவணையாக ரூ.307.03 கோடி ஒதுக்கீடு.
- ரூ.4.56 கோடி செலவில் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள 1,649 பயனாளிகளுக்கு நிதி.
- கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து வழங்கும் பொருண்மை இத்துறையின் மூலம் செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டு, இத்திட்டத்திணை செயல்படுத்த தனி இணையதளம்.
- ரூ.2.50 இலட்சம் செலவில் ஆண்டுதோறும் மாநில அளவில் "சிறுபான்மையினர் உரிமைகள் தின விழா" மதுரையில் கொண்டாடப்பட்டது.

அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு

- அரசின் தொலைநோக்கு திட்டத்தின்படி "அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம்" என்ற இத்துறையின் பெயர் "அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- இலங்கை அகதிகள் முகாம் என்பதை "இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்" எனப் பெயர் மாற்றம் செய்து ஆணை.

மாதாந்திரப் பணக்கொடை

- ரூ.21.29 கோடி கூடுதல் செலவினத்தில், மாதாந்திரப் பணக்கொடை குடும்பத் தலைவருக்கு ரூ.1,500ஆகவும், ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கும் (12 வயது, அதற்கு மேல்) ரூ.1,000ஆகவும், சிறியவர்கள் (12வயதிற்கு உட்பட்டவர்கள்) ரூ.500ஆகவும் உயர்வு.

துணிமணிகள்

- ஒன்றிய அரசு நிர்ணயித்த விலையில் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு துணிமணிகள் வாங்கி வழங்க இயலாத நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, ரூ.4.52 கோடி செலவில், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கான (பெரியவர்கள் மற்றும் சிறியவர்கள்) துணிமணிகள் உயர்த்தி வழங்கப்பட்டது.

பாத்திரங்கள்

- முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள ரூ.250/-மதிப்பில் 8 வகையான சமையல் பாத்திரங்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும், இரண்டு வருடத்திற்கு ஒரு முறை விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள விலையின் அடிப்படையில் பாத்திரங்கள் வாங்கி வழங்க இயலாத நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க

பாத்திரங்களுக்கான கொள்முதல் விலையினை உயர்த்தி அரசாணை.

❖ 8 வகையான எவர்சில்வர் பாத்திரங்கள் ரூ.1,285/- மதிப்பில் சேலம் இந்திய உருக்காலை நிறுவனத்திடமிருந்து வாங்கி முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டு, ரூ.2.42 கோடி செலவிடப்பட்டுள்ளது.

முகாம்வாழ் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்

❖ உயர்த்தப்பட்ட விகிதத்தில் கல்வி உதவித் தொகை வழங்கும் பொருட்டு, ரூ.1,53,06,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு, பாலிடெக்னிக் (185), இளநிலை கலை & அறிவியல் (1,008) மற்றும் இளநிலை தொழிற்படிப்பு (68) பயிலும் 1,261 மாணவர்கள் பயன்.

❖ இளங்கலைப் பட்டப் படிப்புக்கு, தெரிவு செய்யப்பட்ட பாடப் பிரிவுகளில் கூடுதலாக 18 மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை ரூ.2,20,000/- இலங்கைத் தமிழர் நிவாரண நிதியிலிருந்து வழங்க அரசாணை.

❖ முதுநிலை பட்டப் படிப்பு பயிலும் மாணவ / மாணவியர் 64 பேர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் பொருட்டு கல்விக்கான முழு செலவையும் அரசே ஏற்கும் வகையில் ரூ.12.78 இலட்சம் வழங்க அரசாணை.

விலையில்லா அரிசித் திட்டம்

❖ ரூ.19 இலட்சம் கூடுதல் செலவினத்தில் முகாம்களில் வசிக்கும் ஒவ்வொரு இலங்கைத் தமிழ் பெரியவர் ஒவ்வொருவருக்கும், மாதம் ஒன்றுக்கு 12 கிலோ அரிசியும், 8வயதுக்குட்பட்ட குழந்தை ஒவ்வொன்றுக்கும் மாதம் ஒன்றுக்கு 6 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், முதல் 20 கிலோ அரிசி விலையில்லாமலும், கூடுதல் அரிசி ஒரு கிலோ ரூ.0.57 என்ற விலையிலும் வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க தற்போது மேற்குறிப்பிட்ட அளவிலான அரிசி முற்றிலும் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது,

விலையில்லா சமையல் எரிவாயு அடுப்பு, எரிவாயு இணைப்பு மற்றும் மானிய விலையில் சமையல் எரிவாயு உருளைகள் வழங்குதல்

❖ ரூ.8.66 கோடி நிதி ஒதுக்கீட்டில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா எரிவாயு இணைப்பு, விலையில்லா அடுப்பு வழங்கப்படும் என்றும், ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஆண்டொன்றுக்கு முதல் 5 எரிவாயு உருளைகளுக்கு ரூ.400 மானியம் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, முகாம் வாழ் இலங்கைத் தமிழர் 6,582 குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்புகள் மற்றும் அடுப்புகள் வழங்கப்பட்டு, 16,305 குடும்பங்களுக்கு எரிவாயு உருளைக்கான மானியம் ரூ.1,30,44,000 வழங்கப்பட்டுள்ளது.

வீடுகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல்

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, முதற்கட்டமாக 3,510 புதிய வீடுகள் (868 தொகுப்பு வீடுகள் மற்றும் 38 தனி வீடுகள்) கட்டிட ஏதுவாக ரூ.176,02,20,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ ரூ.17.17 கோடி நிதி ஒதுக்கீட்டில், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், தோட்டனூத்து, அடியனூத்து மற்றும் கோபால்பட்டி ஆகிய மூன்று முகாம்களை ஒருங்கிணைத்து, தோட்டனூத்து கிராமத்தில் புதிதாக 321 வீடுகள் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

❖ முகாம்களில் குடிநீர் வசதி, கழிவறை வசதி, மின்சார வசதி மற்றும் கழிவு நீர்க்கால்வாய் வசதி கூடுதலாக செய்து கொடுக்க ஏதுவாக ரூ.30 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, முதற்கட்டமாக ரூ.10 கோடி எதிர்பாரா செலவினமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மாவட்ட நிருவாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





❖ இலங்கைத் தமிழர் வாழ்க்கைத் தர மேம்பாட்டு நிதியாக ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 29 மாவட்டங்களுக்கு ரூ.5 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு 106 முகாம்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஈரோடு, கள்ளக்குறிச்சி, கரூர், கன்னியாகுமரி, சிவகங்கை, வேலூர், நாமக்கல் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் கழிவு நீர்த் தொட்டி சுத்தம் செய்யும் பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள மாவட்டங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மகளிர் சுயஉதவிக்குழு

❖ முகாம் வாழ் இலங்கைத் தமிழ்ப் பெண்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த "சமூக முதலீட்டு நிதியாக" ரூ.50,000 வீதம் 321 சுயஉதவி குழுக்களுக்கு வழங்கப்பட்டது. தற்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படி ரூ.75,000 வீதம் ஒவ்வொரு சுய உதவி குழுவிற்கும் உயர்த்தி வழங்கப்பட்டது.

❖ 300 புதிய குழுக்கள் கண்டறியப்பட்டு வருவதுடன் இவற்றில் தற்பொழுது முதற்கட்டமாக 260 குழுக்களுக்கு ரூ.1.25 இலட்சம் வீதம் ரூ.3.25 கோடி நிதியானது மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு கோவிட்–19 நிவாரண உதவியாக ரூ.4,000/– வழங்குதல்

❖ தமிழ்நாடு அரசின் கோவிட் நிவாரண உதவித் தொகை ரூ.4,000/- வீதம் முகாம்களில் வசிக்கும் 18,944 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டது. இதற்காக, ரூ.7.58 கோடி செலவிடப்பட்டுள்ளது.மேலும், 14 விதமான மளிகைப் பொருட்கள் (ரூ.465/- விலையில்) அடங்கிய பைகள் முகாம்களில் வசிக்கும் 18,944 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் ரூ.88.08 இலட்சம் செலவில் அரசால் வழங்கப்பட்டுள்ளன. முகாமிற்கு வெளியே காவல் நிலையங்களில் தங்களைப் பதிவு செய்து கொண்டு வசித்து வரும் இலங்கை தமிழர் குடும்பங்களுக்கும் இந்த நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

திறன் மேம்பாட்டுப் பயிற்சி

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படி, 5,000 முகாம் வாழ் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டு,திறன் மேம்பாட்டுத்துறையின் மூலம் மாவட்டம் தோறும் முகாம்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டு, 2,599 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, எஞ்சியுள்ள 851 நபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நீண்ட கால தீர்வுகளுக்கான ஆலோசனை குழு

❖ முகாமிற்கு உள்ளேயும் வெளியேயும் இலங்கைத் தமிழர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வுகாண ஏதுவாக ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு, முதற்கூட்டம் 29.12.2021 மற்றும் இரண்டாவது கூட்டம் 12.07.2022 அன்று நடைபெற்றது. இரண்டு துணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு

11.07.2022 மற்றும் 07.10.2022 அன்று கூட்டம் நடைபெற்றது.

இலங்கை மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குதல்

❖ இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் உணவு பொருட்கள் தட்டுபாட்டில் இன்னலுறும் மக்களுக்கு ரூ.196.83 கோடி மதிப்பிலான 40,000 மெட்ரிக் டன் அரிசி, 500 டன் ஆவின் பால்பொருட்கள் மற்றும் 101 டன் உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு தமிழ்நாடு அரசின் சார்பில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையிலிருந்து தமிழர்கள் வருகை

❖ இலங்கையில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுத் தட்டுப்பாடு காரணமாக இலங்கைத் தமிழர்கள் இராமேஸ்வரம் கடற்கரைக்கு வந்தடைந்தனர். 31.03.2023 வரை 236 நபர்கள் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் முகாமில் உணவு, தங்குமிடம் மற்றும் இதர அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ளனர். மனிதாபிமான அடிப்படையில் பள்ளி செல்லும் குழந்தைகள் அருகாமையில்உள்ளபள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அயலகத் தமிழர் நல வாரியம் அமைத்தல்

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் வாழும் தமிழர் நலன் காக்க தலைவரை உள்ளடக்கிய 15 உறுப்பினர்களைக் கொண்டு "அயலகத் தமிழர் நல வாரியம்" அமைத்து ஆணை.

ஆணையரகத்தால் வழங்கப்பட்ட உதவிகள்

❖ ரூ.72 இலட்சம் செலவில், அயல்நாடுகளில் இன்னலுற்ற 146 தமிழர்களை மீட்டுத் தாயகம் கொண்டு வரப்பட்டு, அயல்நாடுகளில் மரணமடைந்த 202 தமிழர்களின் பூத உடல்களைத் தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து, அவற்றை அவர்களின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

வெளிநாடு வாழ் தமிழர்கள் நலனுக்கான சுழல் நிதி

❖ சுழல் நிதியாக ரூ.1 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு,நோய்வாய்ப்பட்டவர்களுக்கான மருத்துவ செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு, வெளிநாடுகளில் இறந்தவர்களின் பூத உடல்களை ஒன்றிய அரசு மற்றும் தொடர்புடைய நாட்டில் உள்ள இந்திய தூதரகத்தின் ஒத்துழைப்புடன் சொந்த ஊர்களுக்கு கொண்டு வரப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அயலகத் தமிழர்கள் நலன் தொடர்பாக வெளியிட்ட அறிவிப்புகள்

❖ அயலகத் தமிழர் நலன் வாரியத்தின்கீழ், புலம்பெயர் தமிழர் குறித்த தரவு தளம் ஏற்படுத்துதல், வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு காப்பீடு திட்டம் மற்றும் அடையாள அட்டை வழங்கல்.

❖ வெளிநாடுகளுக்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித் தொகை வழங்கல்.

❖ சென்னை மட்டுமின்றி தமிழகத்தில் மேலும் 6 மாவட்டங்களில் முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையங்கள் தொடங்கிட நடவடிக்கை.

❖ புலம்பெயர் தமிழர்களுக்கு ஆலோசனை வழங்க கட்டணமில்லா தொலைபேசி வசதி (24X7), வலைதளம் மற்றும் கைப்பேசி செயலி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖ புலம்பெயர் தமிழர்களுக்கான சட்ட உதவி மையம் அமைத்தல் போன்றவை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அயலகத் தமிழர் தின விழா

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் அயல்நாடுகளில் வசித்து வரும் அயலகத் தமிழர்களையும், சேவை



ஆற்றிவரும் தமிழ்ச்சங்கங்களையும் ஒருங்கிணைக்கவும், அங்கீகரிக்கவும், ஊக்குவிக்கவும், தமிழ் இனத்தின் தொன்மை, பழம்பெருமை, கலை, இலக்கியம், பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் விதமாக "அயலகத் தமிழர் தினம்" கொண்டாடப்பட்டு வருகிறது.

- ரூ.41 இலட்சம் செலவில், கோவிட் பெருந்தொற்று காரணமாக காணொலி வாயிலாக, "தமிழால் இணைவோம்" என்னும் தலைப்பில் கொண்டாடப்பட்டது. இதில் மாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர்அவர்களின் தலைமையில் பல்வேறு நாட்டைச் சேர்ந்த தமிழ் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டில் உள்ள தமிழ் அமைப்புகள் பங்கேற்று வாழ்த்துக்களையும், கருத்துகளையும் பதிவு செய்தனர். அதுமட்டுமின்றி தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தைப் போற்றும் கவியரங்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- அயலகத் தமிழர் தினம் 2023, "உலகெங்கும் தமிழ்" என்ற கருப்பொருளில் 11.01.2023, 12.01.2023 ஆகிய நாட்களில் சென்னை கலைவாணர் அரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் சங்க நிர்வாகிகள் பங்கேற்று, வெவ்வேறு தலைப்புகளில் கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இவைதவிர, கலை பண்பாட்டுநிகழ்வுகளும் நடைபெற்றன.
- வெளிநாட்டில் வசிக்கும் தமிழர்களின் வாரிசுகளுக்கு தமிழ் மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டினைப் பயிற்றுவிப்பதற்கான ஊக்கத்தொகை மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல் தொடர்பாக ரூ.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

உக்ரைனிலிருந்து மாணவர்கள் மீட்பு

- உக்ரைனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையிலான போர் காரணமாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த 2000க்கும் மேற்பட்ட மருத்துவம் மற்றும் பிற உயர்கல்வி பயின்று வந்த மாணவர்கள் உக்ரைனில் சிக்கித் தவித்தனர். மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின்படி, உடனடியாக ஒரு மாநிலகட்டுப்பாட்டு அறை நிறுவப்பட்டது. மேலும், 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 1 சட்டமன்ற உறுப்பினர் கொண்ட உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட மாணவர்களை உக்ரைனின் அண்டை நாடுகளுடன் ஒருங்கிணைத்து அவர்களை மீட்பதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. "ஆபரேஷன் கங்கா" விமானங்களில் தாயகம் திரும்பியவர்களுக்கு புதுடெல்லியில் இருந்து அவர்களது வீடுகளுக்குச் செல்வதற்கான

அனைத்து போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. இதுவரை, 1,524 மாணவர்கள் அரசு செலவில் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பியுள்ளனர். இதற்காக தமிழக அரசால் ரூ.3.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.3.26 கோடி செலவிடப்பட்டுள்ளது.

கம்போடியா, தாய்லாந்து – மியான்மர் நாடுகளிலிருந்து தமிழர்களை மீட்டெடுத்தல்

❖ தமிழ்நாட்டைச் சேர்ந்த நபர்கள் உட்பட பல இந்தியர்கள், தகவல் தொழில் நுட்பம் சார்ந்த பணிகளில் பணியமர்த்துவதாகக் கூறி கம்போடியா, தாய்லாந்து – மியான்மர் எல்லைப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சட்டவிரோத இணையதள வேலைகளைச் செய்ய கட்டாயப்படுத்தப்படுவதாகவும், அவ்வேலைகளைச் செய்ய மறுத்தால், கடுமையாக தாக்கப்படுவதாகவும், தகவல்கள் தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு வந்தன. அதனைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட நாடுகளிலுள்ள இந்தியத் தூதரகங்களுடன் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் இணைந்து செயல்பட்டு, 73 தமிழர்கள் கம்போடியா, தாய்லாந்து, மியான்மர் நாடுகளிலிருந்து மீட்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் செலவில் விமான பயண சீட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டு தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

உத்தராகண்ட் மாநிலத்தில் ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த தமிழர்களின் உடல்களை மீட்டெடுத்தல்

❖ உத்தராகண்ட் மாநிலத்தில் உள்ள கேதார்நாத் கோவிலுக்கு புனித யாத்திரை சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மூவர் 18.10.2022 அன்று நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தனர். இவ்வாணையரகத்தின் மூலம் அரசு செலவில், இறந்தவர்களின் பூதஉடல்கள் 20.10.2022 அன்று விமானங்கள் மூலம் சென்னை கொண்டு வரப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

❖ வெளிநாட்டு வேலைநாடுநர்கள் வெளிநாட்டு வேலை வேண்டி, பதிவு செய்வதற்கு ஏதுவாக URL: https://www.omcmanpower.com என்ற வலைதளம் இந்த நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு, 3,063 நபர்கள் வெளிநாட்டு வேலை வேண்டி தங்களது பெயரை இந்நிறுவனத்தில் பதிவு செய்து, 540 நபர்களை சவூதிஅரேபியா, குவைத், ஓமன், பஹ்ரைன், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பணியமர்த்தியுள்ளது.

❖ வெளிமுகமை முறையில் 684 நபர்களை ஒப்பந்த அடிப்படையில் பல்வேறு வேலைகளில் பல்வேறு அரசுத் துறைகளில் பணியமர்த்தியுள்ளது.

❖ அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து, 15 செவிலியர் பயிற்சி (நர்சிங்) கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் 481 செவிலிய மாணவர்களுக்கு தொழில் சார்ந்த ஆங்கில மொழி சோதனை [OET] பயிற்சியினை வழங்கியுள்ளது.

மனித உரிமைகள்

❖ "மனித உரிமைக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்பவர்கள் விளிம்பு நிலை மக்களின் உரிமைக்காகப் போராடி வருபவர்களையும் இதில் எப்படி பயன்படுத்திக் கொள்வது என்பது குறித்து ஆராயப்படும்" என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க ஒருநாள் கருத்தரங்கு மற்றும் ஆலோசனைக் கூட்டம் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

❖ மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் இணையதளம் தமிழில் உருவாக்கப்படும்" என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க ஆணையத்தின் இணையதளம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

❖ "மனித உரிமை கொள்கை, கோட்பாடுகள் குறித்தும், அதனை எந்த வகையில் பின்பற்ற வேண்டும் என்பது குறித்தும் அனைத்து தரப்பினருக்கும் அறிவுறுத்த பயிற்சி முகாம்கள் ஏற்பாடு செய்யப்படும்" என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

❖ ❖ ❖



பள்ளிக் கல்வி

மாண்புமிகு

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி

அவர்கள்

- இல்லம் தேடிக் கல்வி : பள்ளி செல்லும் மாணவர்களிடையே கற்றலில் ஏற்பட்ட பெருமளவு இடைவெளியை சரிசெய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறையால் "இல்லம் தேடிக் கல்வி" திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இரண்டு இலட்சம் தன்னார்வலர்களால் 34 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் ரூ.199.96 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இல்லம் தேடிக் கல்வி திட்டம் 2022-2023 நிதியாண்டிலும் நீட்டிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- கோடை விடுமுறை காலத்தில், குழந்தைகளிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க 'ரீடிங் மாரத்தான்' என்ற தொடர் வாசிப்பு இயக்கம் நடத்தப்பட்டது.





❖ எண்ணும் எழுத்தும் இயக்கம் : 2025ஆம் ஆண்டுக்குள் ஒன்று முதல் மூன்றாம் வகுப்புகளில் பயிலும் அனைத்துக் குழந்தைகளும் பொருள் புரிந்து படிக்கவும் எழுதவும் அடிப்படைக் கணக்குகளைச் செய்யத் தெரிந்திருக்க வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு 2022-2023ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட முதன்மைத் திட்டமே எண்ணும் எழுத்தும் திட்டம் ஆகும். இத்திட்டத்திற்கென 2021-2022ஆம் கல்வியாண்டில் ரூ.66.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டன.

❖ எண்ணும் எழுத்தும் மாதிரி வகுப்புகளுக்கான காணொலிகள் உருவாக்கப்பட்டு, அனைத்துப் பாட ஆசிரியர் கையேடுகளிலும் விரைவுத் துலங்கல் குறியீடுகள் வழியாக கையாள வழிவகை செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாரமும் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் கல்வி தொலைக்காட்சி வாயிலாக எண்ணும் எழுத்தும் மாதிரி வகுப்புகள் ஒளிபரப்பப்படுகின்றன. எண்ணும் எழுத்தும் திட்டம் மூலமாக 72,000 தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். மாணவர்களின் கற்றல் அடைவு மேம்படுத்திட, 13,75,780 குழந்தைகளின் கற்றல் நிலை, செயலி மூலமாகத் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2023-2024ஆம் கல்வியாண்டில் 4 மற்றும் 5ஆம் வகுப்புகளுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

❖ நான் முதல்வன் திட்டத்தின்கீழ் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் : நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளிலும் 9-12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி, தொழில் மற்றும் வேலை வாய்ப்பு வழிகாட்டும் ஆலோசனை மையம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கெனத் தனியே பாடத்திட்டம் மற்றும் கையேடுகள், உயர்கல்வி, தொழில் மற்றும் வேலைவாய்ப்பிற்கு வழிகாட்டும் வல்லுநர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

❖ இத்திட்டத்திற்கென தனியாக "நான் முதல்வன்" என்ற இணையதளம் உருவாக்கப்பட்டு, அதில் மாணவர்களுக்குத் தேவையான உயர்கல்வி தொழில் மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த அனைத்துத் தகவல்களும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்தரவுகளை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கண்டு பயன்பெற்று

வருகிறார்கள். இரண்டு அல்லது மூன்று வட்டாரங்களை ஒருங்கிணைத்து உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பிற்கான வழிகாட்டுதல் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 13,19,742 மேல்நிலை மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

- அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு செய்யப்பட்டு, குழு உறுப்பினர்களுக்கு அவர்களின் பங்கும் பொறுப்புகளும் சார்ந்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இது பள்ளியின் மேம்பாட்டு திட்டங்களை வகுப்பதில் சம்பந்தப்பட்ட குழு உறுப்பினர்களுக்கு அதிகாரமளிக்க உதவுகிறது.

- சிறந்த, சமத்துவ மற்றும் முற்போக்கு கல்விக்கான அளவுகோல்களை உறுதி செய்யும் வகையில் உண்டு உறைவிட பள்ளிகளாக "மாதிரிப் பள்ளிகள்" செயல்பட்டு வருகின்றன. 2021-2022ஆம் கல்வியாண்டில் 10 புதிய மாதிரி பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் கல்வியாண்டில் 15 புதிய மாதிரிப் பள்ளிகள் மற்றும் ஒரு கல்விசார் சிறந்து விளங்கும் ஒரு தகைசால் கல்வி மையம் ரூ.125.32 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

- அரசுப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடையே அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகியவற்றில் ஆர்வத்தையும் திறனையும் தூண்டும் வகையில் நடமாடும் அறிவியல் ஆய்வகத் திட்டம் (வானவில் மன்றம்) ரூ.19 கோடி செலவில் 25 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- டிஜிட்டல் வளங்களை ஒருங்கிணைத்து கணிதம் கற்பிக்க, 6 முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள கணித ஆசிரியர்களுக்கு மாநில அளவிலான அடிப்படை Geogebra இணையவழி பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. மேலும் இரண்டாம் கட்ட பயிற்சியாக, வகுப்பறையில் கணிதத்தினை திறம்பட கற்பிக்க Geogebra பயன்படுத்துவது குறித்து ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

- 2,713 அரசு நடுநிலைப் பள்ளிகளில் 10 இலட்சம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர் பயன்பெறும் வகையில் உயர்தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள் (Hi-Tech lab) ரூ.370 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

- அரசுப் பள்ளிகளில் 12,500 திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class room) ரூ.250 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

- மாநிலத்தில் உள்ள அரசுப் பள்ளிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக சமூக ஈடுபாட்டினை திரட்டும் வகையில் தனிநபர் / முன்னாள் மாணவர்கள் மற்றும் பெருநிறுவனங்கள் ஆகியவற்றின் ஆதரவைத் பெறும் பொருட்டு "நம்ம ஸ்கூல், நம்ம ஊர் பள்ளி" எனும் திட்டம் அரசால் தொடங்கப்பட்டுள்ளது.

- பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும், துன்புறுத்தல்களில் இருந்து பாதுகாக்கவும் மாணவர் மனசு என்ற புகார்/ஆலோசனைப் பெட்டி மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு பதாகைகள் அமைக்கப்பட்டு உள்ளது.

- தகவல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி வகுப்பறை நிகழ்வுகளான கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை கண்காணிக்கவும், பெறப்படும் தரவுகளை ஆய்வு செய்யவும் வகுப்பறை உற்று நோக்கல்செயலி (Observation App) உருவாக்கப்பட்டு பயனுள்ள முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறன்களை வெளிக்கொணர, கலை அரங்கம் என்ற கலை மற்றும் பண்பாடு செயல்பாடுகள் ரூ.5 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- அரசுப்பள்ளியில் 6 – 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பள்ளி அளவில், வட்டார அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் நடத்தப்பட்டுள்ளது. 206 வகை கலைப் போட்டிகளில் 13,210 அரசுப்



பள்ளிகளிலிருந்து 28,52,993 மாணவ மாணவிகள் பங்குபெற்றனர். மாநில அளவில் வெற்றி பெற்ற 1,759 மாணவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் மற்றும் கலையரசன், கலையரசி என்ற விருதுகளும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவர்களில் தர வரிசையில் முதன்மை பெற்ற 20 மாணவர்கள் வெளிநாடுகளுக்கு கல்வி சுற்றுலா அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

- மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்விப் பாடத்திட்டம் சீரமைத்தல்: 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான தொழிற்கல்வி பாடத்திட்டங்கள் மாணவர்களுக்கான NSQL சான்றிதழை செயல்படுத்தும் வகையில் மறுசீரமைக்கப்பட்டும், மேம்படுத்தப்பட்டும் உள்ளது.
- கருணை அடிப்படையில் 269 பணிநாடுநர்களுக்கு இளநிலை உதவியாளர்களாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது.
- அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்ட, மாவட்டக்கல்வி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்ட 20 மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு பயிற்சிபட்டறை நடத்தப்பட்டுள்ளது.
- சிறப்பு கட்டண சலுகை: அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் மாணவர்களிடம் வசூலிக்கப்பட்டு வந்த கணினி அறிவியல் பாடப்பிரிவிற்கான சிறப்பு கட்டணம் ரூ.200/- இரத்து.
- அரசுப் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு முடித்துள்ள மாணவர்களில் கல்வி, இலக்கியம், அறிவியல், வினாடி வினா போட்டிகளில் சிறந்து விளங்கிய 1,250 மாணவர்களை தேர்வு செய்து, நீலகிரி மாவட்டத்தில் சிறப்பு பயிற்சி முகாம் ரூ.72.18 இலட்சம் செலவில் நடத்தப்பட்டுள்ளது.
- தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு "ஊஞ்சல்" இதழும், உயர்வகுப்பு மாணவர்களுக்கு "தேன்சிட்டு" இதழும்: ஆசிரியர்களுக்கான சிறந்த கற்றல் கற்பித்தல் முறைகளைப் பரிமாறிக் கொள்ள "கனவு ஆசிரியர்" என்ற மாதஇதழும், ரூ.7.15 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அன்று வெளியிடப்பட்டுள்ளன.
- விரிவான பள்ளிக் கட்டமைப்புத் திட்டத்தின் கீழ், 1,000 மாணவர்களுக்கு மேல் பயிலும் அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் அனைத்து தேவைகளையும் வசதிகளையும் உள்ளடக்கிய முழுமையான கட்டமைப்பு ரூ.90 கோடி செலவில் ஏற்படுத்த நடவடிக்கை.



- பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.800 கோடி மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 6,000 புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் உட்கட்டமைப்புகளுக்காக ரூ.1,200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது தவிர, ரூ.400 கோடி பள்ளி பராமரிப்பு பணிகளுக்காக ஒதுக்கீடு.

- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ், மாநகராட்சி, நகராட்சி, ஊரக மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியருக்கு ரூ.33.56 கோடி முதற்கட்டமாகக் காலை உணவு வழங்கும் ஒரு முன்னோடித் திட்டத்தை செலவினத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், அனைத்து தொடக்கப்பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

- அரசு பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பொது மாறுதல், பதவி உயர்வு மற்றும் பணி நிரவல் கலந்தாய்வு இணைய வழியில் EMIS மூலம் நடத்தப்பட்டுள்ளது.

- 4,989 இடைநிலை ஆசிரியர், 5,154 பட்டதாரி ஆசிரியர் மற்றும் 3,876 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 14,019 ஆசிரியர் பணியிடங்கள் முறையே தற்காலிக அடிப்படையில் நியமனம்.

- 15 நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு வட்டாரக் கல்வி அலுவலர்களாக பதவி உயர்வு. 61 நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு வட்டாரக் கல்வி அலுவலர் பதவி உயர்வு.

- 10 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகள் மே 2022ல் நடத்தப்பட்டு, இரண்டு தேர்வு முடிவுகளும் ஒரே நாளில் 17.50 இலட்சம் மாணாக்கர்களுக்கு குறுஞ்செய்தியாகவும் / இணையதளத்திலும் வெற்றிகரமாக வெளியிடப்பட்டுள்ளது.

- பள்ளி மாணவர்களின் தமிழ் மொழி இலக்கியத் திறனை மேம்படுத்தும் வகையில், தமிழ் மொழி இலக்கியத் திறனறித் தேர்வு நடத்தப்பட்டது, இத்தேர்வில் மொத்தம் 1,500 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஊக்கத்தொகையாக மாதம் ரூ.1,500 வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

ஆசிரியர் தேர்வு வாரியம் :

- முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை 1 / கணினி பயிற்றுநர் நிலை



1 ஆகிய பணியிடங்களுக்கான கணினி வழியாக போட்டித்தேர்வு நடத்தப்பட்டு, 3,043 முதுகலை ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு பணி நியமனம்.

- 97 வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்களுக்கு இணைய வழியாக தேர்வுகள் நடத்தப்பட்டு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.
- பல்தொழில்நுட்பக் கல்லூரி (பாலிடெக்னிக்) களில் 1060 விரிவுரையாளர் பணியிடங்களுக்கு கணினி வழியாக (CBT) போட்டித் தேர்வு நடத்தப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட 1,030 நபர்களின் பட்டியல் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்திற்கு அனுப்பப்பட்டன.
- ஆசிரியர் தகுதித் தேர்வுக்கான தாள் 1-க்கான தேர்வுகள் இணையவழியில் (CBT) நடத்தப்பட்டுள்ளன. மேலும் தாள் 2-க்கான தேர்வு இணையவழியில் (CBT) பிப்பரவரி 2023ல் நடத்தப்பட்டது.
- ஆசிரியர் தேர்வு வாரியத்தினை மறுசீரமைக்கவும், வலுப்படுத்தவும் மற்றும் அதன் தரம் மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காகவும் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி மறுசீரமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.7.19 கோடி செலவில் முற்றிலும் எழுத, படிக்கத்தெரியாத வயது வந்தோர்களுக்கு அடிப்படை எழுத்தறிவை வழங்கிடும் பொருட்டு, கற்போம் எழுதுவோம் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. 3.19 இலட்சம் கற்போர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.
- புதிய அணுகு முறைகளைக் கையாண்டு சிறப்பாகச் செயல்படுத்திய 114 சிறந்த கற்போர் மையங்களைத் தெரிவு செய்து, அம்மையங்களுக்கு பாராட்டுச் சான்றிதழ், கேடயம் மற்றும் பதங்கங்களை உள்ளடக்கிய "மாநில எழுத்தறிவு விருது" அரசால் வழங்கி சிறப்பிக்கப்பட்டு வருகிறது.
- 15 வயதுக்கு மேற்பட்ட முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாத 4.80 இலட்சம் நபர்களுக்கு அடிப்படை எழுத்தறிவுக் கல்வியை வழங்கும் பொருட்டு புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.9.83 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி, 5.28 இலட்சம் நபர்களுக்கு அடிப்படை எழுத்தறிவு வழங்கப்பட்டுள்ளது.
- வளர்ச்சியில் முன்னுரிமை பெறும் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் ரூ.6.23 கோடி செலவில் சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 3 கட்டங்களையும் சேர்த்து மொத்தமாக 1,68,944 கற்போர்கள் பயனடைந்துள்ளனர்.
- மாணவர்களின் மனவெழுச்சி நலத்தையும் வாழ்க்கைத் திறன்களையும் மேம்படுத்துவதற்காக, அரசால், யுனிசெப் அமைப்புடன் இணைந்து மாணவர் பயிற்சியேடு, ஆசிரியர் கையேடுகள்

உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் ரூ.1 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக ரூ.40 இலட்சம் செலவில் மாநில மதிப்பீட்டுப் புலம் உருவாக்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமும் (IIT-Madras) மற்றும் சீடாக் (CDAC) நிறுவனமும் இணைந்து உருவாக்கிய மென்பொருளைப் பயன்படுத்தி அனைத்து அரசுப் பள்ளிகளிலும் உள்ள அந்தந்த பள்ளியின் ஆசிரியர்களே வினாத்தாள்களைத் தயாரித்து மாணவர்களுக்குத் தேர்வு நடத்தி வருகின்றனர்.
- பள்ளிக் கல்வித்துறையில் பணிபுரியும் இணை இயக்குநர்கள், முதன்மைக்கல்வி அலுவலர்கள், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் விரிவுரையாளர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் என சுமார் 12,000 அலுவலர்களுக்கு நாட்டின் தலைசிறந்த கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்கள் உதவியுடன் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- 1 முதல் 3ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் 83,000 ஆசிரியர்களுக்கு எண்ணும் எழுத்தும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை கற்பிக்கும் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் என 1,53,000 பேருக்கு குறுவளமைய பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மூலம் வெளியிடப்பட்ட நூல்கள்

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திசைதோறும் திராவிடம், முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம், இளந்தளிர் இலக்கியத் திட்டம், நாளைய தலைமுறைக்கு நாட்டுடைமை நூல்கள், கலைக் களங்சியங்கள் ஆகியவற்றின்கீழ் 149 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதிய நூல்களில், இரண்டு தொகுதிகள் அவரின் 150ஆவது பிறந்த ஆண்டினை முன்னிட்டு வெளியிடப்பட்டது. மீதமுள்ள இரண்டு தொகுதிகள் சென்னை இலக்கிய திருவிழா 2023இல் வெளியிடப்பட்டது. இவை பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சிகளில் நல்ல வரவேற்பைப் பெற்று ரூ.1,03,550/- மதிப்பிலான நூல்கள் விற்பனைச் செய்யப்பட்டுள்ளன.
- கீழடி, பொருநை என்ற தலைப்பில் பழந்தமிழ் தொல்லியல் மற்றும் பண்பாடு சார்பான இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவை 45ஆவது சென்னை புத்தகக் கண்காட்சியில் ரூ.18 இலட்சம் மதிப்பிலான நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- நாட்டுடமையாக்கப்பட்ட நூல்கள் வரிசையில் இதுவரை 23 நூல்கள் வெளியிடப்பட்டு, சென்னை, திருநெல்வேலி, திருவள்ளூர், சிவகங்கை மற்றும் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சிகளில் மக்களிடம் நல்ல வரவேற்பைப்பெற்று ரூ.2.43 இலட்சம் மதிப்பிலான புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் பணியாற்றி பணிக்காலத்தில் மரணமடைந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு 27 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளன.
- பொது நூலக இயக்ககம் மற்றும் மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு பணிமாறுதல் கொள்கை வகுக்கப்பட்டு அவர்களது விருப்பத்தின் அடிப்படையில் பணியிட மாறுதல் வழங்கப்பட்டுள்ளன.
- பொது நூலகங்களுக்கு நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் கொள்முதல் செய்திட நிதி 6.5 சதவீதத்திலிருந்து 15 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது.



- அண்ணா நூற்றாண்டு நூலகம் மற்றும் மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு அரசுப் பணியாளர்களுக்கான சலுகைகள் மற்றும் பணப்பயன்கள் வழங்கிட ஆணை.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமான டிசம்பர் 3 அன்று மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் உள்ள பணியிடங்களுக்கு 31 பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

- பல்துறைச் சார்ந்த பரந்துபட்ட அறிவை இளைய சமுதாயம் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கில் பொது நூலக இயக்ககத்தின் மூலம் மின்நூலகம் (Digital Library) அமைக்கப்பட்டு, 29,000க்கு மேற்பட்ட நூல்கள் (40 இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்கங்கள்) மற்றும் 2,54,694 அரிய ஓலைச் சுவடி பக்கங்கள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன. இதனை https://tamilnadupubliclibraries.org என்ற இணையதளம் மூலம் பொது மக்கள் பயன்படுத்திட முடியும். Meta data தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

- 32 மாவட்ட மைய நூலகங்கள், அண்ணா நூற்றாண்டு நூலகம் மற்றும் பிற அரசு உதவி பெறும் நூலகங்களுக்கான ஒவ்வொரு நூலகத்தின் இருப்பு விவரங்களையும் அறிய, ஒருங்கிணைந்த நூற்பட்டியல் தொடங்கப்பட்டு, 7 இலட்சம் நூல்களின் விவரங்கள் தரப்படுத்தப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த நூற்பட்டி (Union Catalogue) https://tamilnadupubliclibraries.org என்ற இணையதளத்தின் மூலம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் 28 இலட்சம் நூல்கள் விரைவில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட உள்ளது.

- "உங்கள் நூலகம் உள்ளங்கையில்" என்ற திட்டத்தின்படி, "TN Employment News" (Mobile App) மற்றும் www.tnemployment.in என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் / வேலைவாய்ப்பு தேடும் இளைஞர்கள் பயனடைந்து வருகின்றனர்.

- கிராமப்புறங்களில் உள்ள நூலகங்களுக்கும் மின் நூலக சேவை வழங்கும் வகையில் முதல் கட்டமாக 500 நூலகங்களில் wi-fi இணைய வசதி ஏற்படுத்த நடவடிக்கை.

❖ நூலகங்களைப் பயன்படுத்தும் குழந்தைகள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் 38 மாவட்டங்களில் உள்ள 76 நூலகங்களில் 152 மெய்நிகர் தொழிற்நுட்ப கருவிகள் (Virtual Reality Library) ரூ.57.20 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

❖ TN talk : பல்வேறு துறைகளில் ஏற்படும் நவீன மாற்றங்களைப் பற்றிய அறிவு அனைத்து வாசகர்களுக்கும் பொதுமக்களுக்கும் சென்றடையும் பொருட்டு, "TN Talk" என்ற தனித்துவமான நிகழ்ச்சி ரூ.37.50 இலட்சம் செலவில் 25 நிகழ்ச்சிகள் நடத்திட திட்டமிடப்பட்டு, நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

❖ பொது நூலகங்களுக்கு நூல்கள் கொள்முதல் செய்தலில் ஒவ்வொரு படிநிலையிலும் ஒளிவு மறைவின்றி வெளிப்படைத் தன்மைக்கான நெறிமுறைகளை உருவாக்க குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, நூலகங்களுக்கு புத்தகங்கள் கொள்முதல் செய்யப்படும்.

❖ தமிழ்நாடு பொது நூலகச்சட்டம் 1948 மற்றும் தமிழ்நாடு பொது நூலக விதிகள் 1950 ஆகியவைகளுக்கு தற்போதுள்ள பணிச்சுழலுக்கு ஏற்ப தேவைப்படும் இனங்களுக்கு தக்க திருத்தங்கள் மேற்கொள்ளவும் மற்றும் நூலகங்களின் செயல்பாடுகளை மேம்படுத்தியும் ஓர் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டு உயர்மட்டக் குழுவின் அறிக்கை அரசால் பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

❖ பொது நூலகங்களுக்கு நாளிதழ்கள் / பருவ இதழ்களை கொள்முதல் செய்வது குறித்து ஆய்வு செய்ய குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையின்படி தேர்வு செய்யப்பட்ட நாளிதழ்கள் / பருவ இதழ்கள் மாவட்ட நூலகங்களுக்கு கொள்முதல் செய்து வழங்கப்பட்டு வருகிறது.

❖ நூலக சேவை கிடைக்கப்பெறாத இடங்களில் 15 இலட்சம் வாசகர்கள் பயன்பெறும் வகையில் 2,500 நூலகங்களில் மொத்தம் 12,500 தன்னார்வலர்களைக் கொண்டு ரூ.56.25 இலட்சம் செலவில் நூலக நண்பர்கள் என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. திண்டுக்கல்



மாவட்டத்தில் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ புத்தக வாசிப்பை ஒரு மக்கள் இயக்கமாக ஊக்குவிக்க சென்னை புத்தகக்கண்காட்சி போன்று தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.4.96 கோடி செலவில் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட உள்ளது. அதன்படி, இதுவரை 31 மாவட்டங்களில் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. மீதம் உள்ள மாவட்டங்களில் விரைவில் நடத்துவதற்கான நடவடிக்கை.

❖ சென்னை, வைகை, காவேரி, பொருநை மற்றும் சிறுவாணி என்ற பெயரின் ஐந்து இலக்கியத் திருவிழாக்கள் ரூ.63.50 இலட்சம் செலவில் நடத்தப்பட்டுள்ளன. பொருநை இலக்கியத் திருவிழா திருநெல்வேலி மாவட்டத்திலும், சென்னை இலக்கியத் திருவிழா அண்ணா நூற்றாண்டு நூலகத்திலும் காவேரி இலக்கியத் திருவிழா தஞ்சாவூர் மாவட்டத்திலும், சிறுவாணி இலக்கியத் திருவிழா கோயம்புத்தூர் மாவட்டத்திலும், வைகை இலக்கியத் திருவிழா மதுரையிலும் நடத்தப்பட்டுள்ளன.

❖ 24க்கும் மேற்பட்ட நாடுகளின் பங்கேற்புடன் சென்னையில் 16.01.2023 முதல் 18.01.2023

வரை நடைபெற்ற சென்னை சர்வதேச புத்தக கண்காட்சியில் தமிழ் பதிப்பாளர்களுக்கும், உலகளாவிய பதிப்பகத் துறைகளுக்கும் இடையே அறிவுப் பரிமாற்றம், பதிப்புரிமைப் பரிமாற்றம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் பொருட்டு, சுமார் 355 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

❖ ரூ.120.75 கோடி செலவில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் சர்வதேசத் தரத்திலான நவீன நூலகம் ரூ.120.75 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்நூலகம் மாணவர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், போட்டித் தேர்வுகளுக்குத் தயார்படுத்திக் கொள்ளும் இளைஞர்கள், பள்ளிச் சிறார்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களுக்கும் அறிவொளி அளிக்கும் கலங்கரை விளக்கமாக அமையவுள்ளது.

❖ ரூ.37.82 கோடி செலவில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை புதுப்பிக்கும் பணி நிறைவடைந்துள்ளது.

❖ குழந்தைகளின் எழுத்தார்வத்தை ஊக்குவிக்கும் வண்ணம் 18 வயதிற்குட்பட்ட மூன்று சிறந்த இளம் எழுத்தாளர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் ரூ.25,000 ரொக்கப்பரிசு, கவிமணி விருது 2021-2022 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

❖ அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ரூ.40 இலட்சம் செலவில் "செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்" அமைக்கப்பட்டு வருகிறது. இந்த அரங்கத்தில் சாகித்ய அகாதமி விருது, ஞானபீட விருது போன்ற உயரிய விருதுகளைப் பெற்ற தமிழ் எழுத்தாளர்களின் புகைப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் படைப்புகள் காட்சிப்படுத்தப்பட உள்ளது,

❖ அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு ரூ.6.5 கோடி மதிப்பிலான புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளது. 2021-2022 மற்றும் 2022-2023ஆம் ஆண்டுகளுக்கு ரூ.3.90 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு மின்-புத்தகங்கள், மின்-பத்திரிகைகள் மற்றும் மின்ஆராய்ச்சி இதழ்கள் கொள்முதல் செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ இந்திய நூலகத் தந்தை முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் அவர்களை நினைவு கூறும் வகையில் அவர் பிறந்த இடமான சீர்காழியில் ரூ.1.32 கோடி செலவில் ஓர் நூலகம் அமைக்கப்பட்டு வருகிறது.

❖ செந்நாப் புலவர் ஆ.கார்மேகனார் அவர்கள் தமிழக்கு ஆற்றிய சேவையினை போற்றும் வகையில் ரூ.40 இலட்சம் செலவில் புதிய நூலக கட்டடம் கட்டப்படுகிறது.

❖ ரூ.3.19 கோடி செலவில் பழம்பெரும் நூலகங்களுள் ஒன்றான கன்னிமாரா பொது நூலக கட்டடத்தின் பாரம்பரிய மதிப்பு மாறாத வகையில், கட்டமைப்புகள் வலுப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

❖ பல்வேறு உள்நாட்டு மற்றும் பன்னாட்டு பதிப்பகங்களோடு இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

"மாணவச் செல்வங்களே! பள்ளிப் பிள்ளைகளே! கல்லூரி மாணவ மாணவியரே! நீங்கள் அனைவரும் உரக்கச் சொல்லிப் பாருங்கள்! 'நான் முதல்வன்', நான் முதல்வன், நான் முதல்வன் என்று சொல்லிப்பாருங்கள்! உங்களுக்குள் ஒரு சக்தி பிறக்கும். உங்களுக்குள் ஒரு நம்பிக்கை பிறக்கும். உங்களுக்கு ஒரு தைரியம் பிறக்கும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத்துறை

திரு. சிவ.வீ.மெய்யநாதன்

அவர்கள்

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை

❖ சுற்றுச்சூழல் குறித்த பிரச்சினைகள், கொள்கைகள் மற்றும் செயல்பாடுகள், குறிப்பாக காலநிலை அறிவியல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் சுற்றுச்சூழல் துறையை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை என மறு பெயரிடப்பட்டுள்ளது.

கடற்கரை சூழல் மற்றும் அழகியல் மேலாண்மை சேவைகள் திட்டம்

❖ கடற்கரைகள் மற்றும் படகுத்துறைகளில் நீலக்கொடி சான்றிதழானது, சர்வதேச, அரசு சாரா, இலாப நோக்கமற்ற



சுற்றுச்சூழல் கல்வி நிறுவனத்தால் அளிக்கப்படுகிறது.

- செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள, கோவளம் கடற்கரையானது, நீலக்கொடித் திட்டத்தின் கீழ், நீரின் தரம் மற்றும் பாதுகாப்பு அளவுகளை நிறைவு செய்யும் வகையில், தமிழ்நாட்டில் ஒரு முன்னோடித் திட்டமாக செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டு, ஒன்றிய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின், ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மைச் சங்கம் மூலமாக செயல்படுத்தப்பட்டது.
- கோவளம் கடற்கரையில் நீலக்கொடி கடற்கரைத் திட்டத்தைக் கண்காணிக்கவும், மேற்பார்வையிடவும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தலைமையில் கடற்கரை மேலாண்மைக் குழு (Beach Management Committee) அமைக்கப்பட்டுள்ளது. இந்த கோவளம் கடற்கரைக்கு அக்டோபர் 2021 முதல் மே 2022 வரை 21.09.2021 அன்று நீலக்கொடி சான்றிதழ் வழங்கப்பட்டு 2022 -2023 ஆண்டு வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில், சென்னை மாவட்டம், மெரினா கடற்கரை - புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி கடற்கரை - இராமநாதபுரம் மாவட்டம், குஷி கடற்கரை - கடலூர் மாவட்டம், வெள்ளி கடற்கரை - புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் கடற்கரை - செங்கல்பட்டு மாவட்டம், நீலாங்கரை கடற்கரை - நாகப்பட்டினம் மாவட்டம், காமேசுவரம் கடற்கரை - விழுப்புரம் மாவட்டம், நாரவாக்கம், மரக்காணம் கடற்கரை - தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினம் கடற்கரை - நாகப்பட்டினம் மாவட்டம், நெய்தல் நகர் கடற்கரை - ஆகிய 10 கடற்கரைகளில் நீலக்கொடி சான்றிதழ் பெறுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், அடிப்படை ஆய்வுகள் மேற்கொள்ளவும், சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள கடலோர நிலைத்திட்ட மேலாண்மைக்கான தேசிய மையத்திடம் (NCSCM) மூலம் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வுக்கு பிறகு திட்டம் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு நீர்நிலைகளை சூழல் மறுசீரமைத்தல்

- சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையானது சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை மற்றும் உரிய பிற துறைகளுடன் இணைந்து நிர்நிலைகளில் சூழல் மிட்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.
- செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தாலுக்காவில் உள்ள சிட்டலபாக்கம் ஏரியில் துர்வாருதல், கரைகளைப் பலப்படுத்துதல் பிளாஸ்டிக் குவியல்களை அகற்றுதல் போன்ற முக்கிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- இந்த ஏரியின் சூழல் மறுசீரமைப்பு பணிகளுக்காக ரூ. 25 கோடி ஒதுக்கப்பட்டு, ரூ.12 கோடி மதிப்பீட்டில் ஆதம்பாக்கம் ஏரி சூழல் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் பெரும்பாக்கம், வேங்கைவாசல் ஏரி முடியும் தருவாயில் உள்ளது.
- திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் உள்ள சூரியகுளத்திற்கு ரூ. 6.47 கோடி மதிப்பீட்டில் சூழல் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- தமிழ்நாட்டிற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் 1:25000 என்ற அளவில் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2019இன் படி தயாரிக்கும் பணி, ரூ.1.82 கோடி செலவில், ஒன்றிய அரசின் தேசிய கடலோர நிலையான மேலாண்மை மையத்திற்கு 26.07.2021 அளிக்கப்பட்டுள்ளது.



ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட வரைபடமானது மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தின் ஆணைப்படி வரைபடம் தமிழில் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

❖ தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம்: 7 கூட்டங்களை நடத்தி, கடலோர மண்டல ஒழுங்குமுறை அறிவிக்கை, 2011இன் கீழ் அனுமதி கோரி பெறப்பட்ட 49 திட்டங்களை ஆய்வு செய்துள்ளது. இந்த 49 திட்டங்களில், தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம், 5 திட்டங்களுக்கு அனுமதி அளித்தும், 41 திட்டங்களை தேசிய கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், மற்றும் உள்ளூர் திட்டக் குழுமங்களுக்கு பரிந்துரையும் செய்துள்ளது.

❖ இதர 3 திட்டங்களுக்காக, கூடுதல் விபரங்கள் தொடர்புடைய திட்ட பிரேரணையாளரிடம் கோரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்

❖ பசுமை தமிழ்நாடு இயக்கம் தமிழ்நாடு சதுப்புநில இயக்கம் மற்றும் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் ஆகிய மூன்று முக்கிய செயல் திட்டங்களை செயல்படுத்த ஏதுவாக "தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம் ஒன்றை நிறுவி அரசாணை வெளியிட்டுள்ளது. இந்த அமைப்பின் அங்கீகரிக்கப்பட்ட நிதி ரூ.5 கோடியாகும்.

❖ மாநிலத்தின் காலநிலை மாற்றம் தொடர்பான பிரச்சனைகளை கண்காணிக்கவும் ஒருங்கிணைக்கவும், அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் இந்த அமைப்பு செயல்படும்.

❖ இந்த செயல் திட்டங்கள் அரசின் சுற்றுச்சூழல், காலநிலைமாற்றம் மற்றும் வனத்துறையின் கீழ் செயல்படுத்தும் வேளையில், காலநிலைக்குகந்த நிலைபாடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முக்கியத்துவம், நிலைத்த மற்றும் விரிதிறன் கொண்ட கட்டமைப்புகள், வேளாண்மை, வனத்தின் மேலாண்மை மற்றும் பாதுகாத்தல் காலநிலையின் தாக்கத்திற்கு உகந்த நிலைபாடு ஆகிய மேம்பாடுகளுக்கு கல்வியாளர்கள், தனியார் துறைகள் மற்றும் சமுதாயத்தையும் இணைப்பதும் முக்கியத்துவமாக அமைகிறது.

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்

❖ காலநிலை மாற்றத்தை தழுவுதல், மட்டுப்படுத்தல் குறித்த செயல்பாடுகளில் கவனம் செலுத்த ஏதுவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்ககம் ரூ.500 கோடி மதிப்பில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டு,

38 மாவட்டங்களில் பங்குதாரர்களின் கருத்துப்பட்டறை, கடலோர வாழ்விடங்களை மறுசீரமைத்தல், கார்பன் செரிவுத் திட்டம், நிலையான வாழ்விடம், காலநிலைக் கல்வி மற்றும் பன்னாட்டு காலநிலை மாற்ற மாநாடு, காலநிலை திறன்மிகு கிராமங்கள், காலநிலைத் திறன்மிகு பசுமைக் கோயில்கள் என பல்வேறு திட்டங்கள் ரூ.7.35 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு செயலாகத்தில் உள்ளது.

❖ 38 மாவட்டங்களில் பங்குதாரர்களின் கருத்துப்பட்டறை, கடலோர வாழ்விடங்களை மறுசீரமைத்தல், கார்பன் செரிவுத் திட்டம், நிலையான வாழ்விடம், காலநிலைக் கல்வி மற்றும் பன்னாட்டு காலநிலை மாற்ற மாநாடு, காலநிலை திறன்மிகு கிராமங்கள், காலநிலைத் திறன்மிகு பசுமைக் கோயில்கள்.

❖ காலநிலை மாற்றம் குறித்த உச்சி மாநாடு 08.12.2022 மற்றும் 09.12.2022 ஆகிய தினங்களில் சென்னையில் பல்வேறு வல்லுநர்களை கொண்டு நடைபெற்றது.

பசுமை பள்ளிக் கூடம்

❖ காலநிலை மாற்றத்தின் விளைகளை தழுவி மட்டுபடுத்தவும் செயல்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தி தயார் செய்யும் நோக்கில் பள்ளிக்கூடத்திற்கு ரூ.20 இலட்சம் செலவில் 25 பள்ளிகளில் ரூ.5 கோடியில் பசுமை பள்ளிக்கூடம் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சரின் பசுமைப் புத்தாய்வுத் திட்டம்

❖ காலநிலை மாற்றம் குறித்த பல்வேறு செயல்பாடுகளில் முன்னெடுப்பில் இளைஞர்களை ஊக்குவித்து ஈடுபடுத்த ஏதுவாக மாண்புமிகு முதலமைச்சரின் பசுமைப் புத்தாய்வுத் திட்டம் ரூ 6.கோடி மதிப்பில் சென்னை அண்ணா பல்கலை கழகத்தில் உள்ள ஆற்றல் சார் கல்வி நிறுவனம் மூலமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மாவட்டங்களில் காலநிலை மாற்றம் குறித்த செயல்திட்டங்களை செயல்படுத்தவும் கண்காணிக்கவும் இப்பசுமை தோழர்கள் உதவியாக அமைவார்கள்

மாவட்ட அளவிலான காலநிலை மாற்ற இயக்கம்

❖ தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தை வலுப்பட்டுத்துவதற்கு மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராவும் மாவட்ட வன அலுவலரை மாவட்ட காலநிலை அலுவலராகவும் கொண்ட காலநிலை மாற்றத்திற்கான அலகு அனைத்து மாவட்டங்களிலும் ரூ3.80 கோடி ஒதுக்கிட்டில் அமைப்படும் பணிகள் நடைபெற்று வருகின்றன,

தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்

❖ அதிகமாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் அதிகம் உள்ள பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளை கண்காணிப்பதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் விசாரணை/ புகார்களை கையாளுதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் மேலாண்மைக்காக மணலி, இராணிப்பேட்டை மற்றும் மேட்டூரில் மூன்று புதிய உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் ரூ.2.55 கோடியில் நிறுவப்பட்டு 29.12.2021 முதல் செயல்பட்டு வருகின்றன.

❖ தொழிற்சாலை கழிவுகள், கழிவுநீர் மற்றும் நகராட்சி திடக்கழிவுகளை வெளியேற்றுவதில் இருந்து நீர்நிலைகளை பாதுகாத்தல் மற்றும் கண்காணிப்பை மேம்படுத்த சென்னை, வேலூர் மற்றும் சேலத்தில் பறக்கும் படை ரூ.1.72 கோடி செலவில் நிறுவப்பட்டு மற்றும் அவை 29.12.2021 முதல் செயல்பட்டு வருகின்றன.

❖ 25 மின்-வாகனங்கள் வாங்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உலக சுற்றுச்சூழல் தினத்தில் கொடியசைத்து துவங்கி வைக்கப்பட்டது. பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைப்பதன் ஒரு பகுதியாக



வாரியத்தில் மின்-வாகனத்தைப் பயன்படுத்துவது மற்ற அரசாங்கத் துறைகளால் பின்பற்றப்பட ஒரு முன்மாதிரியான நடவடிக்கையாகும்.

- தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் தமிழ் நாடு அரசின் எளிதாக வணிகம் செய்வதற்கான கொள்கையின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் இசைவாணை வழங்குவதற்குப் பதிலாக ஒரு தொகுப்பாக செயல்பாடு மற்றும் புதுப்பிப்பதற்கான இசைவாணையை வழங்குகிறது.
- டிசம்பர் 2021 முதல் 20 மார்ச், 2023 வரை மொத்தம் 13,276 தொழிற்சாலைகளுக்கு இசைவாணை தொகுப்பாக வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடுமாசுகட்டுப்பாடுவாரியம்,சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையாக இராணிப்பேட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு குரோமேட்ஸ் மற்றும் கெமிக்கல் லிமிடெட் நிறுவனத்தில் முறையின்றி கொட்டப்பட்டுள்ள அதிகதீங்கு விளைவிக்கும் கழிவினை ரூ.12 கோடி செலவில் மாசு ஏற்படுத்தாத வண்ணம் விஞ்ஞான முறையில் மூடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் துவங்கியுள்ளது.
- வாரியத்தில் பல்வேறு தகவல் தொழில் நுட்ப இணைய வழி பயன்பாடுகளை உருவாக்குவது மற்றும் பராமரிப்பதற்காக தகவல் தொழில் நுட்ப பிரிவு (IT Wing) உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த சுற்றுசூழல் கண்காணிப்பு மையம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்றுவருகின்றன. இக்கண்காணிப்பு மையத்தில் தொழிற்சாலைகளின் புகை மற்றும் கழிவு நீரின் காரணிகள், சுற்றுப்புற காற்றின் தரம் மற்றும் நீர் நிலைகளின் தரம், தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மற்றும் மருத்துவ கழிவுகளை எடுத்து செல்லும் வாகனங்கள் முதலியவை கண்காணிக்கப்படும்.
- தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய சுற்றுச்சூழல் பயிற்சி மையம் மூலம், அரசாங்க அலுவலர்கள், வாரிய பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு சுற்றுச்சூழல் குறித்த புதிய தொழில்நுட்பங்கள், சுற்றுச்சூழல் சட்டங்கள் பற்றிய விளக்கங்கள் மற்றும் சுயமுன்னேற்றம் / நேர மேலாண்மை / மன அழுத்த மேலாண்மை பற்றிய பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- வாரியத்தின் செயல்பாடுகளை மிகவும் வெளிப்படையானதாகவும், பங்குதாரர்களிடையே புரிதலையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துவதற்காகவும், வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை அதிகரிப்பதற்காகவும் ஏதுவாக வாரியம் ஒவ்வொரு மாதமும் 5ஆம் தேதி அன்று 'நேரடிகலந்தாய்வு அமர்வு' நடத்தப்பட்டு வருகின்றன. இதில் பங்கேற்போர்

இணையவழி மூலம் பதிவு செய்ய ஒரு செயலியும் உருவாக்கம்.

- ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் மீதான தடையை அமல்படுத்தும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 23.12.2021 அன்று சென்னையில் "மீண்டும் மஞ்சப்பை" பிரச்சாரத்தை தொடங்கிவைத்தார்.
- ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றான சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் மற்றும் ஸ்டார்ட்அப் மாநாட்டின் தேசிய கண்காட்சி சென்னை வர்த்தக மையத்தில் நடத்தப்பட்டது.
- முதன்முறையாக தமிழ்நாட்டில் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கான சுற்றுச்சூழல் மாற்றுப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகிப்பவர்களின் தகவல் அடங்கிய தொகுப்பு வெளியிடப்பட்டது.
- அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் ஒருங்கிணைப்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, வணிக/ கடைகள், நிறுவனங்களில் தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பயன்படுத்தப்படுகிறதா என்பதை உள்ளாட்சி அமைப்புகளால் ஆய்வு செய்யப்பட்டு தடை செய்யப்பட்ட பொருட்கள் பறிமுதல்.
- ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் மீதான தடையை அமல்படுத்துவதன் ஒரு பகுதியாக, மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கோயில்களுக்கு அருகிலுள்ள வணிக நிறுவனங்கள் மற்றும் பிற உள்ளூர் சந்தைகளில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- பிரச்சாரத்திற்கு ஆதரவாகவும், மஞ்சப்பை பொது மக்களுக்கு எளிதில் கிடைக்கவும் தமிழ்நாடு அரசு முதன்முதலில் துணிப்பை விற்பனை இயந்திரத்தை கொண்டு வந்து சந்தைகள், பொது கட்டிட வளாகங்கள், சென்னை உயர் நீதி மன்றம் மற்றும் மதுரை அமர்வு வளாகங்கள் போன்ற இடங்களில் நிறுவியுள்ளது.
- 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் உலக சுற்றுச்சூழல் தினத்தன்று, மாநிலம் முழுவதும் செல்லும் வகையில் மஞ்சப்பை விரைவு இரயில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இதுவரை 59 துணிப்பை விற்பனை இயந்திரங்கள் மாநிலத்தின் வெவ்வேறு முக்கிய இடங்களில் நிறுவப்பட்டு, 43,000 துணிப்பைகள் வழங்கப்பட்டுள்ளது.
- ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பயன்படுத்துவதைத் தவிர்த்து சிறந்த முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் 3 சிறந்த பள்ளிகள், 3 சிறந்த கல்லூரிகள் மற்றும் 3 சிறந்த வணிக வளாகங்களுக்கு வெகுமதி அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு மஞ்சப்பை விருதுகளை வழங்க உள்ளது.
- ரூ.25 கோடி செலவில், கோயம்பேடு வணிக வளாக மேலாண்மை குழு மற்றும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் இணைந்து கோயம்பேடு மொத்த சந்தையை கார்பன் குறைவாக வெளியேற்றும் சந்தையாக மாற்ற ஆய்வுகள் தொடக்கம்.
- தமிழ்நாடு மாசுகட்டுபாடு வாரியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு முன்மாதிரியான பங்களிப்பைச் செய்த அமைப்பு/ கல்வி நிறுவனங்கள்/ பள்ளிகள்/ கல்லூரிகள்/ குடியிருப்பு நலச் சங்கங்கள்/ தனிநபர்கள்/ உள்ளாட்சி அமைப்புகள்/ தொழிற்சாலைகளுக்கு பசுமை சாம்பியன் முதன்மையாளர் விருதை ஒவ்வொரு ஆண்டும் 100 நபர்கள்/நிறுவனங்களுக்கு ரூ.1 இலட்சம் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு அரசு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் மூலம் தொழிற்சாலைகளுக்கு பசுமை மதிப்பீடு செய்யும் திட்டம் அறிமுகம்.

- சர்வதேச கடலோர தூய்மை தினத்தையொட்டி நீலாங்கரை கடற்கரையில் மாநில அளவிலான கடலோர தூய்மைப்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொக்கம்.

முன்னாள் இராணுவத்தினர் நலன்

முன்னாள் படைவீரர் நலன்

- திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் முன்னாள் படைவீரர்கள் மையத்துடன் கூடிய மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகம் ரூ.70.75 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது.
- மதுரை இரயில்வே சந்திப்பு அருகில் முன்னாள் படைவீரர்கள் மையத்துடன் கூடிய மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகம் ரூ.86.35 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது.
- திருவண்ணாமலையிலிருந்து வேலூர் செல்லும் சாலையில் ரூ.3.03 கோடி செலவில் புதிய படைவீரர் மாளிகை கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது.
- 07.05.2021 முதல் 31.03.2023 வரையிலான காலத்தில், போர் மற்றும் போரை யொத்த நடவடிக்கைகளில் உயிர்நீத்த 16 படை வீரர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.20 இலட்சம் வீதம் ரூ.3.20 கோடி கருணைத் தொகை கார்கில் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது.
- படைவீரர் எண். 15139118Y Hav (லேட்) K. பழனி அவர்கள் இந்திய – சீனா எல்லையில், லடாக் பகுதியில் இந்திய மற்றும் சீன இராணுவத்திற்குமிடையே ஏற்பட்ட மோதலின் போது, கடந்த 16.06.2020 அன்று வீரமரணமடைந்தார். இப்படைவீரரின் வீரதீர செயலை பாராட்டி ஒன்றிய அரசின் உயரிய வீரவிருதான வீர்சக்ரா அறிவிக்கப்பட்டது. இவ்வீரவிருது பெற்றமைக்காக தமிழ்நாடு அரசின் பணமுடிப்பு ரூ.10 இலட்சம் படை வீரரின் வாரிசுதாரருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.
- முன்னாள் படைவீரர்களுக்கு தமிழ்நாடு அரசு பணிகளில் ஒதுக்கப்பட்ட சிறப்பு இடஒதுக்கீட்டின் கீழ் 'சி' பிரிவு பணியிடங்களில் 540 நபர்களுக்கும், 'டி' பிரிவு பணியிடங்களில் 386 நபர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகள், உள்நாட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பணியின் போது மரணமுற்ற / ஊனமுற்ற படைவீரர்களின் 85 வாரிசுதாரர்களுக்கு தமிழ்நாடு அரசுத்துறைகளில் கருணை அடிப்படையில் பணி நியமனம்.
- முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு பல்வேறு மாதாந்திர நிதியுதவிகள், மருத்துவ நிதியுதவிகள் மற்றும் கல்வி உதவித் தொகை வழங்கிய வகையில் ரூ. 76.94 கோடி நலநிதிகளிலிருந்து செலவிடப்பட்டு, 30,010 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்கள் பயன்.
- போர் மற்றும் போரையொத்த நடவடிக்கையில் வீரமரணம் அடைந்த படைவீரர்களின் குடும்பத்தினர் மற்றும் போரில் ஊனமுற்ற படைவீரர்களுக்கு வருடாந்திர பாரமரிப்பு மானியம் ரூ. 25,000/- வழங்கிய வகையில் ரூ.2.40 கோடி தொகுப்பு நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டு பின்னர் அரசிடமிருந்து மீளப் பெறப்பட்டது, 946 பயனாளிகள் பயன்.
- போரில் வீரமரணமடைந்தோரின் சார்ந்தோர்கள் மற்றும் உடல் ஊனமுற்ற படைவீரர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை இரண்டு மடங்காக உயர்த்தியும், வீரதீர மற்றும் போற்றத்தக்க பணிபுரிந்தவர்களுக்கு வழங்கப்படும் பணமுடிப்பு தொகை நான்கு மடங்காக உயர்த்தியும் வழங்க ஆணை.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ)

- இக்கழகம், முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்துள்ள முன்னாள் படைவீரர்களைப் பல்வேறு ஒன்றிய / மாநில அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், ஏனைய வாரியங்களில் பாதுகாப்புப் பணியாளர்கள், ஓட்டுநர்கள், இளநிலை உதவியாளர்கள், தொலைபேசி இயக்குபவர்கள், சுற்றுலாக் காவலர்கள், செவிலிய உதவியாளர்கள்,

தீயணைப்பாளர்கள், துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்கள், காப்பாளர்கள் நிலையில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி மறுவேலைவாய்ப்பு வழங்கும் "மனித வள முகமையாக" செயல்பட்டு, 8,226 முன்னாள் படைவீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

- 5,685 முன்னாள் படைவீரர்கள் மாநில / ஒன்றிய அரசுத் துறை, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் வாரியங்களில் ஒப்பந்த அடிப்படையில் பாதுகாவலர்கள், தலைமைப் பாதுகாவலர்கள், உதவிப் பாதுகாப்பு அலுவலர்கள், ஓட்டுநர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் போன்ற பணியிடங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- 387 புதிய பணித்திட்டங்களில் 690 பாதுகாவலர்கள், 27 தலைமை பாதுகாவலர்கள், 69 உதவி பாதுகாப்பு அதிகாரிகள், 270 ஓட்டுநர்கள் 61 இளநிலை உதவியாளர்கள் மேலும் இதர பணியிடங்களில் 43 முன்னாள் படைவீரர்கள் என மொத்தம்1,160 முன்னாள் படைவீரர்கள் புதிதாக பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.
- தற்போதைய நடப்பு கேட்புத்தொகையான ரூ.562.41 கோடியில், ரூ.502.83 கோடி மற்றும் நிலுவையிலுள்ள கேட்புத் தொகையான ரூ.99.22 கோடியில், ரூ.80.52 கோடி ஆக மொத்தம் ரூ. 583.35 கோடி மேற்குறிப்பிட்டுள்ள காலத்தில் வசூல் செய்யப்பட்டுள்ளது.
- பல்வேறு இடங்களில் பணிபுரியும் 16,651 முன்னாள் படைவீரர்களுக்கு விபத்து காப்பீட்டு திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.3 இலட்சம் வழங்கும் பொருட்டு காப்பீட்டுக் கட்டணத்தொகையாக ரூ.27.49 இலட்சம் செலுத்தப்பட்டு, 10 பயனாளிகளுக்கு ரூ.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- 2021 - 2022 மற்றும் 2022-2023 ஆகிய நிதியாண்டுகளில் முறையே ரூ.103.68 இலட்சம் மற்றும் ரூ.107.52 இலட்சம் ஆக மொத்தம் ரூ.211.20 இலட்சம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியின் பங்களிப்புத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
- சமூகக்கூட்டாண்மை பொறுப்பு (CSR) நிதியிலிருந்து 2021-2022ஆம் நிதியாண்டில் ரூ.63.52 இலட்சம். தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு இடங்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு பாதுகாப்பான குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்பாடு செய்யும் பொருட்டும் மற்றும் 2022-2023ஆம் நிதியாண்டில் ரூ.43 இலட்சம் "நம்ம ஸ்கூல் பவுண்டேஷன்" திட்டத்தில் மாநில அரசு பள்ளிகளை தரம் உயர்த்தும் பொருட்டும் வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக நல நிதியிலிருந்து இக்கழகத்தின் மூலம் பணிபுரியும் அனைத்து ஒப்பந்தபணியாளர்களுக்கும் மாதச்சந்தா ரூ.250/- செலுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு, ரெப்கோ வங்கியில் மேற்கண்ட காலத்திற்கு ரூ.8.33 கோடி பணியாளர்களின் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் மூலம் பணிபுரியும் 64 குடும்பங்களுக்கு ரூ.5,000வீதம் மொத்தம் ரூ.3.20 இலட்சம் ஈமச்சடங்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

"இது எனது அரசல்ல, நமது அரசு,
இந்த அரசு ஒரு கட்சியின் அரசாக இல்லாமல்,
ஒரு கொள்கையின் அரசாக,
ஓர் இனத்தின் அரசாக இருக்கும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

மாண்புமிகு தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. சி.வி.கணேசன் அவர்கள்

- 05 நிறுவனங்களில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் சமரச பேச்சுவார்த்தையின் மூலம் சுமூகமான முறையில் தீர்வு காணப்பட்டது.
- 4,899 தொழிற்தாவாக்கள் முடிக்கப்பட்டு அவற்றுள் 1,821 வழக்குகள் சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.
- கடை மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இருக்கை வசதி ஏற்படுத்தித் தர தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தம்) சட்டத்தில் திருத்தங்கள்.
- 19 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் புதியதாக நிர்ணயம் செய்யப்பட்டு, 29 தொழில்களுக்கு மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.







- 348 குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டு குழந்தைகள் நலக் குழுவினரிடமும், பெற்றோர்களிடமும் ஒப்படைப்பு.
- 399 மீட்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர்களுக்கு ரூ.97 இலட்சம் நிவாரணத் தொகை.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.02.2023 அன்று தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள "கொத்தடிமைத் தொழிலாளர்கள் முறை ஒழித்தல் – தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்" மற்றும் "குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் – தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்" ஆகிய புத்தகங்கள் வெளியிடப்பட்டன.
- கோவிட்-19, 2ஆம் அலை ஊரடங்கு காலத்தில் வேலையிழந்தமற்றும்குடும்பஅட்டைஇல்லாத 1,26,867 வெளிமாநில தொழிலாளர்களுக்கு ரூ.6.53 கோடி நிதி ஒதுக்கீட்டில் 15 கிலோ அரிசி, 1 கிலோ சமையல் எண்ணெய் மற்றும் 1 கிலோ பருப்பு அடங்கிய உணவுப் பொருள் தொகுப்பு.
- தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் 2,614 தொழிலாளர்களுக்கு ரூ.1.28 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்.
- 18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியத்தில் 12,92,286 தொழிலாளர்கள் புதியதாகப் பதிவு.
- 9,55,701 பயனாளிகளுக்கு ரூ.563.95 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்.
- தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம் அறிமுகம்.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

- 3,819 தொழிற்சாலைகள் புதியதாகப் பதிவு.
- கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகளின்கீழ், 1,984 கட்டுமான நிறுவனங்கள் புதியதாகப் பதிவு.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

- தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாக நடத்தப்பட்ட போட்டித் தேர்வுக்கான பயிற்சிகளில், பயிற்சிபெற்ற 2,824 நபர்கள் தேர்ச்சி.
- வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தின்கீழ் 1,21,122 பதிவுதாரர்களுக்கு ரூ.51.29 கோடி உதவித்தொகை. 27,311 மாற்றுத்திறனாளி பதிவுதாரர்களுக்கு ரூ.26.56 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.
- மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் நடத்தப்படும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் வாயிலாக 1,41,595 நபர்கள் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.
- மாநிலத்தில் தொழிற்பயிற்சி நிலையங்கள் இல்லாத பதினோரு இடங்களில் திறன் பயிற்சி அளிப்பதற்காக புதிய பதினோரு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.97.55 கோடி செலவில் துவங்கப்பட்டு, மாணவர்கள் திறன் பயிற்சி பெறுவதற்கு 1,104 இருக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- பல்வேறு வகையான போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் கல்வித் தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பப்படுகிறது.
- நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் உதவியுடன் நெய்வேலியில் புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் துவக்கம். நான்கு தொழிற்பிரிவுகளில் மாணவர்களுக்குப் பயிற்சி.
- ரூ.9.60 கோடி செலவில் சிவகங்கை, காரைக்குடி மற்றும் திருச்சிராப்பள்ளி அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் விடுதி கட்டடங்கள்.
- அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 76.12 சதவிகிதம் மாணவர்கள், வளாக நேர்காணல் மூலம் பணி நியமனம்.
- தென்காசி, செங்கல்பட்டு, திருவாரூர் மற்றும் இராணிப்பேட்டையில் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள்.
- 57 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்க ரூ.20 கோடி ஒதுக்கீடு.
- தமிழ்நாட்டில் உள்ள 71 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில், டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து தொழில் 4.0 தரத்தில் உள்ள தொழிற்பிரிவுகள் 5,140 கூடுதல் இருக்கைகளுடன் ரூ.2,877.43 கோடி மதிப்பில் துவங்கப்பட உள்ளன.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொ.அ.ஈ.)

- காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பயனடையும் வகையில், பவானி, பூதலூர், பட்டுக்கோட்டை, துரைசாமிபுரம், பரமக்குடி, பர்கூர், மண்ணச்சநல்லூர், பெரம்பலூர், ஏற்காடு மற்றும் அரவக்குறிச்சி ஆகிய 10 இடங்களில் புதியதாக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்.
- திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் பகுதியில் 01.12.2022 அன்றும், திருவள்ளூர் மாவட்டம் அத்திப்பட்டு மற்றும் ஊத்துக்கோட்டை பகுதிகளில் 01.02.2023 அன்றும் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் துவங்கப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

> “அனைவருக்கும் ஏதோ ஒரு வேலை அல்ல,
> அனைவருக்கும் அவரவர் படிப்புக்கு ஏற்ற,
> தகுதிக்கு ஏற்ற வேலை வழங்கப்பட்டாக வேண்டும்.
> அதுதான் இந்த அரசினுடைய இலட்சியம்.
> இந்த அரசினுடைய இலக்கு.”
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாடல் - 21.05.2022



ஊதா அங்காடி மற்றும் நவீன உதவி உபகரணங்களுக்கான கண்காட்சியினை திறந்து வைத்து பார்வையிடல் - 03.12.2022



தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

மாண்புமிகு
தகவல் தொழில்நுட்பவியல்
மற்றும் டிஜிட்டல் சேவைகள்
துறை அமைச்சர்
திரு. த.மனோ தங்கராஜ்
அவர்கள்

- தமிழ்நாடு மின்னணு நிறுவனம் வாயிலாக 8 தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (SEZ) சென்னை, கோயம்புத்தூர், மதுரை (2 இடங்கள்), திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஓசூர் ஆகிய நகரங்களில் ரூ.844.57 கோடி முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.
- ரூ.114.16 கோடியில் கோயம்புத்தூர் மற்றும் ரூ.48.10 கோடியில் திருச்சிராப்பள்ளியில் தகவல் தொழில்நுட்ப கோபுரத்தின் கட்டமைப்புப் பணிகள்.
- தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த முதலீடுகளுக்கான விருப்பமான இடமாக தமிழ்நாட்டை ஊக்குவிக்க,



- ரைஸ் எமர்ஜ் லண்டன் உச்சிமாநாடு" 05 மே 2022 முதல் 07 மே 2022 வரை இங்கிலாந்திலும்,
- நாஸ்காம் "தி நெக்ஸ்ட்" உச்சிமாநாடு 07 ஜூன் 2022 அன்று சென்னையிலும்,
- GITEX GLOBAL 2022 நிகழ்வு துபாயில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் துபாய் உலக வர்த்தக மையத்தில் 10 அக்டோபர் 2022 முதல் 14 அக்டோபர் 2022 வரையிலும்,
- பெங்களூர் டெக் 2022 உச்சிமாநாடு 16 நவம்பர் 2022 முதல் 18 நவம்பர் 2022 வரை கருநாடகாவின் பெங்களூரில் உள்ள பெங்களூரு அரண்மனையிலும்,
- SLUSH 2022, 17 நவம்பர் 2022 முதல் 18 நவம்பர் 2022 வரை பின்லாந்தின் ஹெல்சின்கியிலும், மற்றும் TN Web3 - Build Ahead நிகழ்வு 25 நவம்பர் 2022 அன்று சென்னையிலும் எல்காட் பங்கேற்றுள்ளது.
- UMAGINE" 2023, CII உடன் இணைந்து நடத்தும் உலகளாவிய தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு உச்சிமாநாட்டின் முதல் பதிப்பு 2023 மார்ச் 23 முதல் 25 வரை சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது.
- தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் இணைய அலை வரிசை 4 ஜிபிபிஎஸ் (4 GBPS) ஆகவும் மற்றும் இதர தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வலைப்பின்னல் 10 ஜிபிபிஎஸ் (10 GBPS) ஆகவும் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் அலை வரிசையை 30 DHQsஇல் 16 Mbps வரை உயர்த்தியும், 112 Tier II PoPsஇல் 8 Mbps வரையும் உயர்த்தப்பட்டுள்ளது.
- சேமிப்பு பரப்பு வலையமைப்பு (SAN) 500 TB பயன்படுத்தக் கூடிய திறனாக மேம்படுத்தப்பட்டுள்ளது.
- அரசுத்துறைகளுக்காக, சுமார் 306-லிருந்து 325 வரையிலான புதிய பயன்பாடுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு இணையப் பாதுகாப்பு கட்டமைப்பு, மாநில இயக்க மையக்கருவிகளில் தமிழ்நாடு அரசுத் துறைகளின் சுமார் 240 முக்கிய சொத்துகள் சேர்க்கப்பட்டுள்ளன.
- இணையப் பாதுகாப்பு குறித்து அரசு அலுவலர்களுக்கு சுமார் 40 பயிற்சி வகுப்புகள் வழங்கப்பட்டுள்ளது.
- ELCOT ஆனது பல்வேறு அரசாங்கத் துறைகளுக்கான மின் ஆளுமைத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் தொடர்ந்து ஈடுபட்டு, அவற்றின் செயல்பாட்டின் திறன் மற்றும் செயல்திறனை அதிகரிக்கச் செய்கிறது.
- குன்றத்தூர், திருநின்றவூர், பொன்னேரி, ஊத்துக்கோட்டை மற்றும் ஆரணி ஆகிய இடங்களில் 5 புதிய ஆதார் நிரந்தர பதிவு மையங்கள் (PEC) அமைக்கப்பட்டுள்ளன. 20,54,187 பயனாளிகள் PEC-களைப் பயன்படுத்தியுள்ளனர்.
- பள்ளி மாணவர்களுக்கு ஆதார் தொடர்பான சேவைகளை வழங்குவதற்காக அனைத்து 385 கல்வி மண்டலங்களிலும் 505 மையங்களில் ஆதார் பதிவு மையத்தை நிறுவ பள்ளிக் கல்வித்துறையின் "சமக்ராசிக்க்ஷா" திட்டத்தின் கீழ் சேர்க்கை முகமையாக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தேர்ந்தேடுக்கப்பட்டுள்ளது. 120 ஆதார் சேவை மையங்கள் நிறுவப்பட்டு, 4,89,485 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.
- 2021இல் மேற்கொள்ளப்பட்ட தேசிய மின்-ஆளுமை சேவை வழங்கல் (NeSDA) மதிப்பீட்டில், தமிழ்நாடு 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.
- முதலமைச்சரின் தகவல் பலகை துவங்கப்பட்டு, தற்போது 25 துறைகளின் 110 நிகழ்நிலை தகவல் பலகைகள் உள்ளன. ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்கள் முதலமைச்சரின் தகவல் பலகைத் திட்டத்தை வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.
- தமிழ்நாடு முழுவதும் 9,455 இ-சேவை மையங்கள் இயங்கி வருகிறது. இ-சேவை மையம் அமைக்க 9,720 இ-சேவை பயனர் குறியீடுகள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் வழங்கப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களில் இ-சேவை மையம் அமைக்க 234 இ-சேவை குறியீடு வழங்கப்பட்டுள்ளது.



- தலைமைச் செயலகத்தின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு 1,348 கணினிகள் 60 உயர் தொழில்நுட்ப ஸ்கேனர் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளது.

- தலைமைச் செயலகத்தின் இணைய அலைக்கற்றை அளவு (bandwith) 2 Gbpsஆக உயர்த்தப்பட்டுள்ளது.தலைமைச்செயலகத்தின் 38 துறைகளில் "மின் - அலுவலகம்" செயல்படுத்தப்பட்டுள்ளது.

- IT பாதுகாப்பு தணிக்கை ரூ.1.76 கோடியில் CERT-IN அங்கீகரிக்கப்பட்ட தகவல் பாதுகாப்பு தணிக்கையாளர்கள் மூலம் அரசாங்க இணையதளங்கள்/ மொபைல் செயலிகளின் பாதுகாப்பு தணிக்கையை TNEGA மேற்கொள்கிறது. வரப்பெற்ற 92 பாதுகாப்பு தணிக்கை கோரிக்கைகளில், 72 தணிக்கைகள் நிறைவுபெற்று, மீதமுள்ள 20 இனங்களில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- பல்வேறு அரசு அலகுகளில் பல்வேறு பதவிகளில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும் 'tn.gov.in' என்ற இணையதள முகவரி (domain) பெயருடன் கூடிய மின்னஞ்சல் முகவரிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.2022-2023ஆம் ஆண்டில் சுமார் 65,516 மின்னஞ்சல் முகவரிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

- பாரத்நெட் திட்டம் மாநிலத்தில் உள்ள 12,525 கிராம பஞ்சாயத்துகளுக்கும் கண்ணாடி கம்பிவடம் மூலம் 1Gbps அலைக்கற்றை இணைப்பினை வழங்கும் திட்டம். மாவட்டங்கள் அடிப்படையில் A, B, C மற்றும் D என நான்கு தொகுப்புகளாக பிரிக்கப்பட்டுள்ளது.1,209கிராமபஞ்சாயத்துக்கள், கண்ணாடி இழை வடம் மூலம் (OFC) இணைக்கப்பட்டுள்ளது.

- ஒன்றிய அரசின் 2022-2023ஆம் ஆண்டிற்கான மூலதன முதலீட்டிற்கான மாநிலங்களுக்கான சிறப்பு உதவி திட்டத்தின்கீழ் (பகுதி-V OFC) பாரத்நெட் இறுதிக் கட்ட இணைய இணைப்பு (Last Mile Connectivity) திட்டம் ரூ.184 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- தமிழ் இணையக்கல்விக்கழகம், இணையவழித் தமிழ்க்கல்வியை வழங்க உலகநாடுகளில் தொடர்பு மையங்கள் ஏற்படுத்தி வருகிறது. இத்தாலி, மொசாம்பிக், அமெரிக்கா, ஓமன், மியான்மர் மற்றும் இந்தியா முதலான நாடுகளில் 27 தொடர்பு மையங்கள் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளன. ஜப்பான், மாலத்தீவு, நெதர்லாந்து, நைஜீரியா, தாய்லாந்து, ஸ்காட்லாந்து, துபாய், தென்கொரியா ஆகிய நாடுகளில் தொடர்பு மையங்கள் தொடங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- இணைய வழி தமிழ்கல்வி 5 நிலைகளாக மாற்றி அமைக்கப்பட்டு, அதற்கான பாடங்கள் எழுதும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- "தமிழைப் பிழையின்றி எழுதுவோம்" என்ற தமிழ் இலக்கண புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது.
- புதியதாக முதுகலை தமிழ் பட்டக் கல்விக்கான பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்திற்கான (SKOCH) மின் ஆளுமை தங்க விருது 2022.
- பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன்படும்வண்ணம் "கணினி தமிழ் வளர்ச்சியும் சவால்களும்" என்ற நூல் வெளியிடப்பட்டது.
- தமிழ்கற்கும் மாணவர்களுக்கு நிலை-1 முதல் பருவத்திற்கான பாடநூல்கள், துணைக்கருவிகள் வெளியீட்டு விழாவும், தமிழ்ப்பரப்புரைக்கழகச் செயல்பாடுகளில் தொடக்கவிழாவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.
- தமிழ்நாட்டில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குத் திருக்குறள் பொருண்மையைக் கொண்டு குறளோவியம் என்ற பெயரில் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, அதில் 365 சிறந்த ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, திருக்குறள் குறளோவியம் தினசரி நாட்காட்டிப் புத்தகமாக அச்சிடப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வெளியிடப்பட்டுள்ளது.
- திருக்குறள் குறளோவியக் கண்காட்சி சென்னை மற்றும் மதுரையில் நடைபெற்றது.
- தமிழ் இணையக் கல்விக்கழகம் அரிய ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் இதழ்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மின் நூலகம் ஒன்றை (www.tamildigitallibrary.in) உருவாக்கியுள்ளது.
- இ-முன்னேற்றம் பயன்பாட்டிற்கான (SKOCH) மின் ஆளுமை வெள்ளி விருது 2022.
- மின் நூலகத்தை பார்வை குறைபாடுடையவர்களும் பயன்படுத்தும் வகையில் ரூ.1 கோடி செலவில் உள்ளடக்க தமிழ் மின்நூலகமாக மாற்றவும், அரிய ஒலி-ஒளி, ஒளிப்படங்கள் மற்றும் பிற வரலாற்று ஆவணங்களை ரூ.1 கோடி செலவில் மின்னுருவாக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ. சிதம்பரனார் அவர்கள் 150ஆவது பிறந்தநாள் – நூல்கள், கையெழுத்துப் பிரதிகள் மின்மயமாக்கம். 127 நூல்கள், கையெழுத்துப் பிரதிகள், ஒளிப்படங்கள், ஆவணங்கள் மற்றும் பல்லூடக ஆவணங்கள் மின்னுருவாக்கப்பட்டுள்ளன. வ.உ. சிதம்பரனார் 150ஆவது பிறந்தநாள் சிறப்பு இணையப்பக்கம் (https://www.tamildigitallibrary.in/voc) உருவாக்கப்பட்டுள்ளது.
- தமிழ் இணையக் கல்விக்கழகம் தொல்லியல் மற்றும் வரலாறு சார்ந்த தொல்பழங்காலம், அகழாய்வுகள், கல்வெட்டுகள், சிற்பங்கள், வழிபாட்டுத்தலங்கள், நாணயங்கள், செப்பேடுகள், வரலாற்றுச் சின்னங்கள், ஓவியங்கள் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய தகவலாற்றுப்படை இணையதளம் (www.tagavalaatruppadai.in) ஒன்றை உருவாக்கியுள்ளது. 3,363 தொல்லியல் மற்றும் வரலாறு சார்ந்த இடங்களும் 31,158 ஒளிப்படங்களும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.
- ரூ.7.5 கோடி செலவில் தமிழக வரலாறு மற்றும் பண்பாடு சார்ந்த மெய்நிகர் அருங்காட்சியகம் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- தமிழ் இணையக் கல்விக்கழகம் கணினித் தமிழ் தொடர்பான எண்ணற்ற மென்பொருள்களை உருவாக்கி இலவசமாகப் பொதுப் பயன்பாட்டிற்கு வழங்கி வருகிறது. "கீழடி - விசைப்பலகை - (Keezhadi - Keyboard)" மற்றும் "தமிழி - ஒருங்குறி மாற்றி (Tamizhi - Unicode converter)" என்ற இரு மென்பொருட்களை உருவாக்கி வெளியிட்டுள்ளது.
- 10 கல்லூரிகளில் கணினித் தமிழ் பேரவைகள் தொடக்கம்.

❖ ❖ ❖



வனம்

மாண்புமிகு
வனத்துறை அமைச்சர்
டாக்டர் **மா.மதிவேந்தன்**
அவர்கள்

வனத்துறை

- மனித உயிரிழப்பு மற்றும் நிரந்தர ஊனத்திற்கான நிவாரணத் தொகை ரூ.4 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்வு.
- மன்னார் வளைகுட உயிர்கோள காப்பகம் மற்றும் பாக். பகுதிகளில் சிறப்பு கடல் சார் உயர் இலக்கு படை உருவாக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இது நாட்டின் முதல் சிறப்பு கடல் சார் உயர் இலக்கு படை ஆகும்.
- பழங்குடியினரின் வாழ்வாதார நிலையை மேம்படுத்த 17 மாவட்டங்களில் உள்ள பழங்குடியின கிராமங்களில் ரூ.57.94 கோடி செலவில் 516 குடிநீர் வசதிகள், 1,009 தெரு விளக்குகள் மற்றும் 424 சூரியமின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது.



- தமிழ்நாடு மாநில ஈரநில ஆணையத்தால் அனுப்பப்பட்ட ராம்சார் முன்மொழிவுகளின் அடிப்படையில், ராம்சார் தலைமையகம் ஜூலை 2022 – ஆகஸ்டு 2022 வரையிலான கால கட்டத்தில் புதிதாக 13 ராம்சார் தளங்களை தமிழ்நாட்டில் அறிவிக்கை செய்து, இந்தியாவில் தமிழ்நாடு அதிக ராம்சார் தளங்களைக் (அதாவது 14 ராம்சார் தளங்கள்) கொண்ட மாநிலமாக திகழ்கிறது.
- 100 கிராமங்களில் மரகதப் பூஞ்சோலைகள் உருவாக்க ஆணை,
- நபார்டு வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாட்டிலுள்ள தரம் குன்றிய காடுகளை மீட்டெடுப்பதற்கான திட்டத்திற்கு முதல் கட்டமாக ரூ. 481.148 கோடி மதிப்பீட்டில் 2021-2022 முதல் 2025-2026 வரை செயல்படுத்த ஒப்புதல்.
- கிண்டி குழந்தைகள் பூங்காவை மறுவடிவமைத்து பறவைகள், வண்ணத்துப் பூச்சிகள் விலங்குகள் உள்ளடங்கிய இயற்கை பூங்காவாக ரூ.20 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த ஒப்புதல்.
- களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் மற்றும் கன்னியாகுமரி வனவிலங்கு சரணாலயத்தினை உள்ளடங்கி 1,19,748.26 ஹெக்டேர் பரப்பளவில் அகஸ்தியமலை யானைகள் காப்பகம் உருவாக்கம்.
- திருப்பூரின் ஊத்துக்குளி மற்றும் திருப்பூர் வடக்கு தாலுகாக்களில் 125.86.5 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள நஞ்சராயன் குளத்தை நஞ்சராயன் பறவைகள் சரணாலயமாக அறிவிப்பு.
- "கடற்பசு பாதுகாப்பகம்" மன்னார் வளைகுடா, பாக். நீரினை பகுதியில் ஏற்படுத்தப்பட்டு, இந்தியாவின் முதல் கடற்பசு பாதுகாப்பகம் ஆகும்.
- கரூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களை உள்ளடங்கி 11,806.56 ஹெக்டேர் பரப்பளவில் கடவூர் தேவாங்கு வன உயிரின சரணாலயம் அறிவிக்கை செய்யப்பட்ட இந்தியாவின் முதல் தேவாங்கு வன உயிரின சரணாலயம் ஆகும்
- கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் 686.406 ச.கிமீ வனப்பகுதியில் காவிரி தெற்கு வன உயிரின சரணாலயம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.
- நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் உள்ள லாங்வுட் ஷோலா, 2015 இல் துவங்கிய வனப்பாதுகாப்பு முயர்ச்சியாண குயின்ஸ் காமன்வெல்த் (QCC) அங்கீகாரத்தை பெற்றுள்ளது.
- 147 பெரிய உயிரியல் பூங்காவில், மாநிலத்தில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா 82% மதிப்பீட்டுடன் முதலிடம் வகிக்கிறது.
- வன மற்றும் வன விலங்கு குற்றங்களை கண்டறிதல் மற்றும் தடுப்பதற்காக சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய நான்கு மண்டலங்களில் தமிழ்நாடு வனம் மற்றும் வனஉயிரினக் குற்றக் கட்டுப்பாட்டுத் தகவலகம் உருவாக்க நிர்வாக ஒப்புதல்.
- 2022-2023ஆம் ஆண்டிற்கான ஈடுசெய் காடு வளர்ப்பு நிதியின் வருடாந்திர செயல்பாட்டுத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பணிகளை ரூ.38.22 கோடியில் மேற்கொள்வதற்காக நிர்வாக மற்றும் நிதி அனுமதிக்கான அரசாணை.
- மாநிலத்தின் பசுமை பரப்பினை தேசிய வனக்கொள்கை இலக்கான 33 சதவீதத்திற்கு அதிகப்படுத்த "பசுமை தமிழ்நாடு இயக்கம்" தமிழ்நாடு அரசால் துவக்கம்.
- மதுரை மாவட்டத்திற்கு உள்பட்ட அரிட்டாபட்டி மற்றும் மீனாட்சிபுரம் ஆகிய கிராமங்களில் இருக்கும் 193.215 ஹெக்டேர் பரப்பளவுள்ள பகுதிகளை தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர் பாரம்பரிய தலமாக அறிவிப்பு.
- நீலகிரி வரையாடு திட்டம் ரூ.25.13 கோடி செலவில் செயல்படுத்த அரசாணை.
- சென்னை கிண்டியில் உள்ள தேசிய பூங்கா வளாகத்தில் கடல் ஆமைகள் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு மையம் ரூ.6.30 கோடி செலவில் அமைக்க அரசாணை.
- செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கடம்பூர் கிராமத்தில் 137.65.0 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் தாவரவியல் பூங்கா அமைக்க நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ரூ.1 கோடி விடுவிப்பு.
- தமிழகத்தில் வனப்படையினை நவீனமயமாக்கும் திட்டத்தை 2022 முதல்



2025ஆம் ஆண்டு வரை ரூ.52.83 கோடி செலவில் செயல்படுத்த அரசாணை.

- வனத்துறையின் வீரர்கள் வனத்தீயினை கட்டுப்படுத்தும் போது துரதிருஷ்டவசமாக உயிரிழக்க நேர்ந்தால் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து அவர்களுக்கு ரூ.25 இலட்சம் வழங்க அரசாணை வழங்கப்பட்டுள்ளது.
- நீலகிரி வரையாடு அச்சிடப்பட்ட அஞ்சல் தலையை தபால் துறையால் வெளியிடப்பட்டுள்ளது.
- ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலைமாற்ற அமைச்சகத்தின் யானைகள் திட்ட பிரிவின் 'கஜ் கௌரவ் விருதை' ஆனமலை மலைப்பகுதியைச் சேர்ந்த மலசார் பழங்குடியின மக்கள் பெற்றனர்.
- MDT23 புலியை உயிருடன் மீட்க உறுதுணையாக இருந்த முதுமலை புலிகள் காப்பக முன்களப் பணியாளர்களுக்கு உலகளாவிய புலிகள் தினம் 2022இல் வெகுமதிகள் வழங்கப்பட்டுள்ளது.
- ஈரோடு சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்திற்கு புலிகளின் எண்ணிக்கை இரு மடங்காக உயர்த்தப்பட்டதற்கான சர்வதேச TX2 விருது பெறப்பட்டது.
- வன விலங்கு வாரவிழா 2022இல் யானை இறப்பு தணிக்கை அறிக்கை சட்டமைப்பு வெளியிடப்பட்டது.
- காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் (TBGPCCR)» எனும் புதியதிட்டத்தினை 2022-2023 முதல் 2029-2030 வரையிலான 8 ஆண்டு காலத்தில் ரூ.920.52 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஒப்புதல்.
- வனப் பாதுகாப்பு, பசுமைப் பரப்பை விரிவுபடுத்துதல், வன மேலாண்மையில் பழங்குடியினரின் பங்கேற்பு, மனித விலங்கு மோதல்களைத் தடுப்பது போன்றவற்றில் தேவையான கொள்கை மாற்றங்களை பரிந்துரைக்க வன ஆணையம் ஒன்று அமைக்க ஒப்புதல்.
- களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் (காக்காச்சி, அம்பாசமுத்திரம் சரகம் சிங்கம்பட்டி) உயிர்ப்பன்மை – ஆய்வகம் மற்றும் சூழல் பூங்கா ரூ.7 கோடி செலவில் ஏற்படுத்த ஒப்புதல்.
- தமிழ்நாட்டிலுள்ள 100 கிராமங்களில் மரகதப் பூஞ்சோலைகள் என்ற பெயரில் பசுமை பூங்காக்கள் ரூ.25 கோடி மதிப்பீட்டில்

உருவாக்க நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 83 மரகதப் பூஞ்சோலைகள் உருவாக்க ரூ.19.77 கோடி விடுவிப்பு.

❖ தெப்பக்காடு யானைகள் முகாமில் ஆதரவற்ற யானைக் குட்டிகளை வளர்ப்பதை அடிப்படையாகக் கொண்ட "தி எலிஃபண்ட் விஸ்பரர்ஸ்" என்ற ஆவணப்படம், ஆவணக் குறும்படப் பிரிவின் கீழ், ஆஸ்கர் விருதை வென்றது. இந்த ஆவணப்படத்தின் மூலம், தமிழ்நாடு வனத்துறையின் யானைகளின் பாதுகாப்பு மற்றும் சிறைப்பிடிக்கப்பட்ட மேலாண்மைக்கான பணிகள் உலக கவனத்தைப் பெற்றன.

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆதரவற்ற யானைக் குட்டி பராமரிப்பாளர்களான திரு. பொம்மன் மற்றும் திருமதி பெல்லி ஆகியோருக்கு தலா ரூ.1 இலட்சம் காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினார். மேலும், யானைகள் முகாமில் பணிபுரியும் 91 யானைப் பாகன்கள் மற்றும் காவடிகளுக்கு மாணியமாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 1 இலட்சம் வீதம் நல்கை வழங்கப்பட்டது.

❖ ஆனைமலை புலிகள் காப்பகம் மற்றும் முதுமலையில் உள்ள அனைத்து 91 யானை பராமரிப்பு பணியாளர்களுக்கும், சுற்றுச்சூழல் நட்பு மற்றும் கலாசார இணக்கமான வீடுகள் கட்டித்தரப்படும் என அறிவிப்பு.

❖ ஆனைமலை புலிகள் காப்பகத்தில் கோழிகமுத்தி யானைகள் முகாம் ரூ.5 கோடி செலவில் புதுப்பிக்கப்படும் என்றும், கோவை மாவட்டம் சாடிவயலில் யானைகளை பராமரிக்க தேவையான அனைத்து வசதிகளையும் ரூ.8 கோடி செலவிலும் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிப்பு.

❖ தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆஸ்கார் விருது பெற்ற,ஆவணப்படமான "தி எலிஃபண்ட் விஸ்பரர்ஸ்" படத்தினை உருவாக்கிய செல்வி. கார்த்திகி கொன்சால்வ்ஸ் அவர்களுக்கு, பாராட்டு சான்றிதழும், ரூ.1 கோடிக்கான காசோலையும் வழங்கினார்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்

❖ நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த பணிக்கொடை, விடுப்பு, ஒப்புவிப்பு ஊதியம் உள்ளிட்டவற்றை தீர்வு செய்யும் பொருட்டு செப்டம்பர் 2022இல் அரசு இக்கழகத்திற்கு ரூ.29.38 கோடி நிதி ஒதுக்கீடு.

❖ தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள 573 குடும்பங்களுக்கு, முதற்கட்டமாக, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம்கட்டப்பட்டுபணிநிறைவுறும் தருவாயில் உள்ள வீடுகளை உடனடியாக ஒதுக்கீடு செய்ய ஏதுவாக குடியிருப்புகளின் பயனாளர் பங்களிப்புத் தொகையான ரூ.13.46 கோடி விடுவிப்பு.

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்

❖ இந்நிறுவனம் சுமார் ரூ.47.82 கோடி இலாபமாக ஈட்டியுள்ளது. இதுவரை ஈட்டிய இலாபத்தில் இதுவே, அதிகபட்ச இலாபம் என்பது குறிப்பிடப்பட்டது.

❖ முதன்முறையாக பத்து முந்திரி யூனிட்கள் இருளர் பழங்குடியின சமூகத்திற்கு ரூ.80.55 இலட்சம் நியாயமான விலையில் வனத்தோட்டக் கழகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 10 முந்திரி யூனிட்களில் முந்திரி கொட்டைகளை சேகரிப்பதற்கான ஆணை 04.01.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் குவாகம் இருளர் பழங்குடியினர் சமூகத்திற்கு வழங்கப்பட்டது. இது பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் மேம்பாடடையவழிவகுத்துள்ளது.

❖ ❖ ❖

"தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் தலைசிறந்த மாநிலமாக மாற வேண்டும் என்பதே எனது ஆட்சியின் முழு முதல் இலக்கு ஆகும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



ஆதிதிராவிடர் நலன், மலைவாழ், பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

மாண்புமிகு
ஆதிதிராவிடர் நலத்துறை
அமைச்சர்


திருமதி **என்.கயல்விழி செல்வராஜ்**

அவர்கள்

சமூக மேம்பாடு

- மாநில அளவில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருடைய சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் "தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம்" உருவாக்கம்.

- வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கு ஏற்றவாறு, ரூ.85,000லிருந்து ரூ.8.25 இலட்சம் வரை வழங்கப்பட்டு வந்த தீருதவித் தொகை குறைந்தபட்சமாக ஒரு இலட்சம் ரூபாயும், அதிகபட்சமாக ரூ.12 இலட்சமாகவும், மாநில அரசு நிதி மூலம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.



- தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர்கள் என பட்டியலிடப்பட்டுள்ள குடும்பன், பள்ளன், தேவேந்திரகுலத்தான், கடையன், பண்ணாடி, காலாடி மற்றும் வாதிரியான் ஆகிய ஏழு சாதிகளையும் ஒன்றாக இணைத்து ஒரே பெயரில் தேவேந்திரகுல வேளாளர் என்று அழைப்பது தொடர்பாக அரசாணை.
- 2022-2023ஆம் ஆண்டில் சமபந்தி போஜனம் எனும் பெயர் "சமபந்தி விருந்து" என மாற்றப்பட்டுள்ளது.
- சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் முன்மாதிரி சிற்றூர்களுக்கு ஊக்கத் தொகையாக, வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த அரசு சார்பில் தலா ரூ.10 இலட்சம் வீதம் வழங்கிட அரசாணை.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் தேர்வு செய்யப்படும் சிறந்த எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூ.50,000/-லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தி வழங்கி, தேர்வு செய்யப்பட்ட 21 சிறந்த எழுத்தாளர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கல்.
- வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோரை சமுதாயக் கண்ணோட்டத்துடன் அணுகி, முறையான நிவாரணம், வளமான எதிர்காலத்திற்கான உத்தரவாதம் ஆகியவற்றை வழங்குவதற்கு காவல் துறை, வருவாய்த்துறை அலுவலர்களுக்கு "சமத்துவம் காண்போம்" என்ற தலைப்பில் விழிப்புணர்வுப் பயிற்சிகள்.
- அரசுப் பணிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான காலியிடங்கள் சிறப்பு நியமனங்களின் மூலம் நிரப்ப ஆணை.
- அழிவின் விளிம்பில் உள்ள 6 பண்டைய பழங்குடியினரின் இனவரவியல் குறித்து ஆய்வு செய்திடவும், அவர்களது கலாச்சாரங்களை ஒலி / ஒளி ஆவணங்களாக பதிவு செய்திடவும் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம், தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம் ஆகிய வாரியங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் ஏனைய நலவாரியங்களில் வழங்கப்படும் உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்க ஆணை.

கல்வி மேம்பாடு

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் உயர்கல்வியைப் பெறுவதற்கு அதிக வாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், வெளிநாட்டிற்குச் சென்று கல்வி கற்பதற்கான கல்வி உதவித் தொகைத் திட்டம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் சேர்க்கையினை மேற்கொள்ள தேவையான TOEFL / IELTS / GRE/ GMAT ஆகிய தகுதித் தேர்வுகளில் தேர்ச்சியுறும் பொருட்டு, ஒவ்வொரு தேர்வுக்கும் தலா 125 மாணாக்கர் வீதம் மொத்தம் 500 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும். தகுதித் தேர்வில் வெற்றி பெற்ற மாணாக்கருக்கு தாங்கள் விரும்பும் நாட்டின் கல்வி நிறுவனத்தில் உயர்கல்வியினை தொடர கல்வி உதவித்தொகை வழங்கப்படும். மேலும், இக்கல்வி உதவித் தொகையை பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.8 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- முனைவர் பட்டப் படிப்புகளுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டமும், அதிக எண்ணிக்கையிலான மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் மறுசீரமைக்கப்பட்டு, கல்வி உதவித் தொகை வருடத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் என்ற அளவில் உயர்த்தப்பட்டுள்ளது.
- போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் மாநில அரசின் பங்குத் தொகையாக (40 சதவிகிதம்) 6,94,689 மாணாக்கர்களுக்கு ரூ.441.58 கோடி விடுவிப்பு.
- மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பராமரிப்புப்படி ஒன்றிய அரசு வழங்குவதற்கு இணையாக உயர்வு.

மேம்பாட்டுப் பணிகள்

2021–2022

- ரூ.100 கோடி மதிப்பில் 150 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் 480 புதிய



வகுப்பறைகள் மற்றும் 15 அறிவியல் ஆய்வுக் கூடங்கள்.

- ரூ. 21.09 கோடி மதிப்பீட்டில், 39 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 65 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர்.
- ரூ.10.75 கோடி மதிப்பீட்டில், வேலூர் ஆதிதிராவிடர் முதுகலை கல்லூரி மாணவியர் விடுதி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம், மரவனேரி ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள்.
- 13 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டுதல்.
- ரூ.4.50 கோடி மதிப்பீட்டில், 31 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கழிப்பறைகள்.
- மதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, திருச்சி, தருமபுரி, கரூர், நீலகிரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் 19 புதிய விடுதிகளின் கட்டுமானப் பணிக்காக ரூ.20 கோடி நிதி ஒப்பளிப்பு.

2022–2023

- ரூ.45.45 கோடி மதிப்பீட்டில், 10 ஆதிதிராவிடர் பள்ளிமாணாக்கர் விடுதிகளுக்கு புதிய விடுதிக் கட்டடங்கள்.
- ரூ.28.35 கோடி செலவில், 5 ஆதிதிராவிட மாணாக்கர் கல்லூரி விடுதிகளுக்கு புதிய விடுதிக் கட்டடங்கள்.
- ரூ.10.58 கோடி மதிப்பீட்டில் , விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவியரின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு 83 ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சுற்றுச்சுவர்.
- ரூ.9.24 கோடி மதிப்பீட்டில், 7 மாவட்டங்களில் உள்ள 88 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு வைப்பறையுடன் கூடிய புதிய சமையலறைகள்.
- ரூ.5.70 கோடி செலவில், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்கு கழிவறை மற்றும் குளியலறைகள்.
- ரூ. 40 கோடி செலவில், மரியாதைக்குரிய எம்.சி.ராஜா அவர்களது பெயரிலான விடுதி வளாகத்திற்குள் சுமார் 75,000 சதுர அடிபரப்பளவில் 6 தளங்களுடன் நவீன வசதிகளுடன் கூடிய மாணவர் விடுதி கட்டுதல்.
- ஆதிதிராவிடர் விடுதி மாணாக்கருக்கு விழா நாட்களில் வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவுக் கட்டணம் இரண்டு மடங்காக உயர்வு.
- விடுதிகளில் பயிலும் மாணவர்களின் மாதாந்திர சில்லறைச் செலவினக் கட்டண உதவித் தொகை இரண்டு மடங்காக உயர்வு.

- கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் ரூ.2 கோடி செலவில் மூன்று புதிய கல்லூரி மாணவியர் விடுதிகள்.
- 512 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு ரூ.46 இலட்சம் மதிப்பீட்டில் மின் அரைப்பான்கள் வழங்கப்பட்டுள்ளது.
- 51 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள கணினி ஆய்வகங்களுக்கு ரூ.87 இலட்சம் மதிப்பீட்டில் இன்வர்ட்டர் (Inverter) வழங்கப்பட்டுள்ளது.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள், அறிவுத்திறன் வகுப்பு, கணினிப் பயிற்சி.
- மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் மட்டுமின்றி- பழங்குடியினர் நலப் பள்ளிகளிலும் ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகளும்- அதற்கு தேவையான உட்கட்டமைப்பும் ஏற்படுத்திட ஆணை.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 6 மேல்நிலைப் பள்ளிகளை ரூ.16.26 கோடி செலவில் மாதிரிப் பள்ளிகளாக தரம் உயர்த்திட ஆணை.
- 305 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு தேவையான அறைகலன்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் ரூ.7.46 கோடி செலவில் வழங்கிட அரசாணை.
- 90 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிகளில் ரூ.50 இலட்சம் செலவில் கண்காணிப்புக் கேமராக்கள்.
- 20 ஆதிதிராவிடர் நலக் கல்லூரி விடுதிகள் மற்றும் 2 பழங்குடியினர் நல கல்லூரி விடுதிகளுக்கு ரூ.15 இலட்சம் செலவில் தொலைக்காட்சிப்பெட்டிகள் வழங்கிட ஆணை.
- 126 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள அறிவியல் ஆய்வகங்களுக்கு ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் ஆய்வு உபகரணங்கள் வழங்க அரசாணை.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக் கல்லூரி மாணாக்கர் விடுதிகளில் ஆண்டிற்கு 3 முறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்த அரசாணை.
- 50 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக் கல்லூரி மாணாக்கர் விடுதிகளில் நூலகங்கள் மற்றும் இணைய வழி நூலகங்கள் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்க அரசாணை.

பொருளாதார மேம்பாடு

- 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின் இணைப்புத் திட்டத்தின் (Tatkal Scheme) கீழ் மின் இணைப்புப் பெற ரூ.23.28 கோடி செலவில் 90 சதவீதம் மானியம்.
- 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு நீர்ப்பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் (PVC Pipes) வாங்குவதற்காக தலா ரூ.15,000/- வீதம் ரூ.3 கோடி மானியம்.
- 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு புதிய மின்மோட்டார் வாங்க தலா ரூ.10,000/- வீதம் ரூ.2 கோடி மானியம்.
- 7,500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.1.70 கோடி செலவில் தோட்டக்கலை, வேளாண் காடுகள் (Agro forestry) நர்சரி செடிகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் பயிற்சி.
- 5,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த தொழில் முனைவோருக்கு ரூ.2 கோடி செலவில் தொழில் மேலாண்மைப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.
- பயிற்சி மற்றும் சான்றிதழ் பெற்ற பழங்குடியின பாரம்பரிய சமூக சுகாதார திறனாளர்களுக்கு (Traditional Tribal Healers) சுயமாக தொழில் துவங்க ரூ.50,000/- வீதம் 100 நபர்களுக்கு மானியம்.
- தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் ஏனைய நல வாரியங்களில்



வழங்கப்படும் உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்க ஆணை.

- தாட்கோ கோட்ட செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் மொத்த அளவியல் கருவிகள்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத்திட்டத்தின் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.3 இலட்சமாக உயர்வு.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்காக தொழில்நுட்ப - பொருளாதார ஆய்வு மூலம் ரூ.1 கோடி செலவில் திட்ட அறிக்கை வங்கி ஏற்படுத்திட ஆணை.
- 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் (Tatkal Scheme) மின் இணைப்பு பெற 90 சதவீதம் மானியம் ரூ.23.37 கோடி செலவில் வழங்க ஆணை.
- 10,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளநிலை மற்றும் முதுநிலைப் பட்ட மாணாக்கருக்கு வேலைவாய்ப்பு / போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளத் தேவையான பயிற்சிகள் ரூ.10 கோடி செலவில் வழங்கிடவும், 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2.50 கோடி செலவில் மதிப்புக் கூட்டப்பட்ட தொழில் திட்டங்கள் தொடர்பான பயிற்சிகள் வழங்கவும் அரசாணை.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின கல்லூரி மாணாக்கர் மற்றும் இளைஞர்களுக்கு நிதி சார்ந்த தொழில்களில் பயிற்சி ரூ.50 இலட்சம் செலவில் வழங்கிட அரசாணை.
- 200 நிலமற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாய தொழிலாளர்கள் நிலம் வாங்க ரூ.10 கோடி செலவில் மானியம் வழங்கி அரசாணை.
- 500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் கறவை மாடுகள் வாங்க ரூ.2.25 கோடி மானியம் வழங்கிட அரசாணை.
- 100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவராக ரூ.3 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் விற்பனை நிலையம் அமைக்க ரூ.90 இலட்சம் மானியம் வழங்கிட அரசாணை.
- 50 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஆவின் பாலகம் அமைக்க ரூ.45 இலட்சம் மானியம் வழங்கிட அரசாணை.



- 40 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்திடவும், 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தீவனப்புல் வளர்க்க விதைத் தொகுப்பு மற்றும் புல்கறணைகள் ரூ.1 கோடி செலவில் வழங்கிடவும் அரசாணை.
- 13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டு கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ.1.96 கோடி மதிப்பீட்டில் சுகாதார அங்காடிகள் அமைக்கப்படுவதற்கு ரூ.98 இலட்சம் மானியம் வழங்கி அரசாணை.

உட்கட்டமைப்பு மேம்பாடு

- காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசிக்கும் வீடற்ற 443 இருளர் பழங்குடியின குடும்பங்களுக்கு ரூ.19.38 கோடி செலவில் வீடுகள் கட்ட ஆணை.
- ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் ஆண்டுதோறும் ரூ.100 கோடி மதிப்பீட்டில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.
- பழங்குடியினர் குடியிருப்புகளில் தெரு விளக்குகள், சூரிய ஒளிமின் விளக்குகள் மற்றும் குடிநீர் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட 2021-2022 ரூ.130 கோடி நிதி, 2022-2023ஆம் நிதியாண்டில் இப்பணிகளுக்காக ரூ.135 கோடி நிதி ஒதுக்கீடு.
- 17 மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் 20 சமுதாயக் கூடங்கள் ரூ.24 கோடி மதிப்பீட்டில் கட்ட ஆணை.
- 2022-2023ஆம் ஆண்டில் 11 மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் ரூ.17 கோடி செலவில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திட ஆணை.
- விளிம்பு நிலையில் இருக்கும் இருளர்கள் போன்ற பண்டைய பழங்குடியினருக்கு (Particularly Vulnerable Tribal Groups) வரும் நிதியாண்டில் மேலும், 1,094 புதிய வீடுகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் கட்டித்தர அரசாணை.
- தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற 500 தூய்மை பணியாளர் உறுப்பினர்களுக்கு தகுதியின் அடிப்படையில் தலா ரூ.11 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.55 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடுநகர்ப்புறவாழ்விடமேம்பாட்டுவாரியம் மூலம் கட்டப்படும் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய வீடுகள் வாங்க மானியம் வழங்க அரசாணை.

❖ ❖ ❖

“ஈராண்டு பொற்கால ஆட்சி
ஈடில்லா சாதனைகளே சாட்சி”




திராவிட மாடலின் ஆளுமையில்
ஓர் பார்வை...

திட்டமிட்ட வளர்ச்சி!
தமிழ்நாட்டின் எழுச்சி!!


தொல்லியல் துறை
சிவகங்கை மாவட்டம்
திருப்புவனம் வட்டம்
கொந்தகை கிராமம்
கீழடி அருங்காட்சியகம்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின்
திறந்து வைக்கப்பட்டது.
05.03.2023







தமிழரின் பெருமையை உணர்த்தும் அரசு



ஆர்.பாலகிருஷ்ணன், இ.ஆ.ப (ஓய்வு)
சிந்துவெளி ஆய்வாளர்

தமிழ் சார்ந்த வாழ்வியல் என்பது அகமும் புறமுமான திணைசார்ந்த மெய்யறிவு, பசிப்பிணி மருத்துவம் பேணிய பகிர்தல் அறம், எண்ணையும் எழுத்தையும் கண்ணெனப் போற்றிய அறிவுசார் முன்னுரிமை, அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்; கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே என்ற சமூகநீதியின் அடித்தளம்; அறநெறி முதற்றே அரசின் கொற்றம் என்ற அறம் சார்ந்த அரசியல் தெளிவு; தொல் நிலம், தொல் குடி, தொல் இசை, தொல் புகழ் என்று வேர்களைக் கொண்டாடும் விழுமியம், பாடறிந்து ஒழுகும் பண்பியல், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்த கண்ணோட்டம், கலந்து இனிது உறையும் பன்மியம் புரிந்த பட்டறிவு. தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற முப்பரிமாண கட்டமைப்பின் அடித்தளங்கள் இவை தான்.

பெருமிதம் என்பது தமிழ்நாட்டு மக்களின் உயிர்க்காற்று. பெயரும் பீடும் எழுதி வணங்கிய பண்பியல். அதனால்தான் நம் கைகளில் சங்க இலக்கியம். பெருமையை உணர்த்துவது பழம் பெருமை பேசும் வெற்றுமுழக்கம் அல்ல; தெரிந்து செயல் புரியும் என்ற வினைத்திட்பம்.

ஏப்ரல் 7ஆம் நாள் (2023) எனது முகநூல் சுவரில், உள்பெட்டியில், "வாட்ஸ்ஆப்" புலனத்தில் "கீழடி செயலி" பற்றிய அடுக்கடுக்கான தொடர்பதிவுகள். அதற்கு முதல்நாள்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அச்செயலியைத் தொடங்கிவைத்திருந்தார். அச்செயலியின் புனை மெய்யாக்கத் திறன் (Augmented Reality) அனைவரது கவனத்தையும் குறிப்பாக இளந்தலைமுறையின் கவனத்தைக் கவர்ந்துள்ளது என்பதே அந்தப்பதிவுகளில் தொனிக்கும் பெருமிதத்தில் வெளிப்படை.

அடுத்த ஓரிருநாட்களில் இணையவெளியில் கீழடி பொருட்பண்பாடு, மனிதர்கள், விலங்குகள், அணிகலன்கள் மற்றும் வாழ்வியல் கூறுகள் பற்றி செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) தொழில்நுட்பம் வரைந்த தகவல் சார்ந்த அனுமான ஓவியங்கள் என இணையவெளியில் தமிழ்த்தொல்லியல் ஆர்வலர்கள் பகிர்ந்து மகிழ்ந்தார்கள். தமிழ்ப்பண்பாடு துடிப்புடன் தொடர்ந்து இயங்குவது இதனால் தான்.

கீழடியில் ரூபாய் 18.43 கோடி செலவில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை நிறுவியுள்ள உலகத்தரம் வாய்ந்த மாபெரும் அருங்காட்சியகம்

> **வரலாறு என்பது தவிர்க்க முடியாததும் தப்பிக்கமுடியாததும் ஆகும். தரவுகளால் நமது கடந்தகாலத்தை நாம் கட்டமைக்கவேண்டும்; இல்லையெனில் கட்டுக்கதைகள் நம்மீது கட்டவிழ்த்து விடப்படும். இதற்கான ஒரே வழி அறிவியல் அணுகுமுறையோடு தரவு சார்ந்த வரலாற்றை மீள்கட்டமைப்பதே ஆகும்.**

பற்றிய செய்திகள், காணொளிகளைப் பார்த்து வியப்படைகிறேன். தொல்பொருட்கள், மாதிரிகள், தொடுதிரைகள், சிறு திரையரங்கம், மெய்நிகர் காட்சிக் கூடம், முப்பரிமாணத் தொழில்நுட்பம்.

கீழடி அகழாய்வுகளில் கிடைத்துள்ள தடயங்களும் தரவுகளும் தமிழ்நாட்டில் அரசுருவாக்கம், எழுத்தறிவு, நகர நாகரிகம், சமயச்சார்பற்ற நிலை குறித்த பல்வேறு கருதுகோள்கள் பற்றிய புரிதல்களை அளிக்கிறது. சங்க இலக்கியத்தின் நம்பகத்தன்மையை கீழடி அதிகரித்திருப்பது என்பதில் ஐயமில்லை.

எனக்குத் தெரிந்தவரையில் சங்க இலக்கியம் போன்ற ஒரு செவ்வியல் இலக்கியமும், தொல்பொருட்களும் கீழடியில் ஒரு புள்ளியில் நின்று "கைகுலுக்கி" கொள்வது போன்ற ஓர் அதிசயத்தை இந்தியாவில் நான் வேறு எங்கும் பார்த்ததில்லை. இதைப்போலவே தொடர் அகழாய்வுகள் நடைபெறும் போதே உலகத்தரத்தில் அருங்காட்சியகத்தை ஒரு மாநில அரசு அமைத்திருப்பதற்கும், ஆயிரக்கணக்கான மக்கள் தினம்தோறும் திருவிழாக்கூட்டம் போல சென்று மகிழ்வதற்கும் இன்னொரு இணைச்சான்று இல்லை. கீழடி அகழாய்வுத்தலம் திறந்தவெளித் தலமாக அமைக்கப்பட உள்ளது என்றும் அறிகிறேன். தமிழின் தொல்புகழை நிலைநிறுத்தும் தாங்கரும் மரபின் தமிழ்நாட்டு அரசை வாழ்த்தி வணங்கி மகிழ்கிறேன்.

நான் தொலைதூரத்தில் ஒடிசா மாநிலத் தலைநகர் புவனேஸ்வரத்தில் வாழ்பவன். ஆனாலும், தமிழ்நாட்டு நிகழ்வுகளை உன்னிப்பாக அன்றாடம் கவனிப்பவன். இந்தக் கட்டுரையில் நான் எழுதும் செய்திகளை தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை இயக்குநர் சிவானந்தம், தமிழ்நாடு பாடநூல் நிறுவன இணை இயக்குநர் சங்கர சரவணன் ஆகிய இருவரையும் தொடர்புகொண்டு உறுதிசெய்துகொண்டேன்.

தமிழ்நாடு மாநில அரசின் தொல்லியல் துறை ஒரே நேரத்தில் எட்டு இடங்களில் அகழாய்வு செய்கிறது என்பது தமிழ்நாட்டு வரலாற்றில் முதல்முறை.

அண்மையில் நடைபெற்ற அகழாய்வுகளின் விளைவாக பழமைவாய்ந்த பொருநை ஆற்றங்கரை நாகரிகம் பற்றிய புத்தொளித் தரவுகள் பொதுவெளிக்கு வந்துள்ளன. "பேர் இசை கொற்கை" என்று சங்க இலக்கியத்தால் போற்றப்பட்ட பழங்காலப் பாண்டியர் துறைமுகமான கொற்கையை கண்டறிவதற்கு கடற்கரைப் பகுதிகளில் முன்கள புலஆய்வுகள் நடைபெற்றுள்ளன. மயிலாடும்பாறை அகழாய்வில் 4,200 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் இரும்பின் பயன்பாடு பற்றிய தரவுகள் வெளிப்பட்டுள்ளதாக அறிகிறேன்.

அகழாய்வில் கிடைத்த எலும்புகளை மரபணு சோதனைக்கு உட்படுத்துதல், அகழாய்வு மட்பாண்டங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட நுண்துகளைப் பகுப்பாய்வு செய்து அக்கால உணவுப் பொருட்களை கண்டறிதல், விலங்கு மற்றும் பறவைகளை தொல்லியல் தரவுகள் மூலம் அடையாளம் காணுதல், சங்க காலத்தில் இரும்புத் தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தினர் என்பதை ஆய்வின் மூலம் உறுதிசெய்தல், கடல்வழி வணிகம் நடைபெற்றதை சான்றுகள் மூலம் நிறுவுதல் போன்ற பல முன்னெடுப்புகள் பாராட்டுக்குரியவை.

மக்களின் வாழ்வியல் வரலாறே உண்மையில் வரலாறு. மக்களே வரலாற்றின் உடமையாளர்கள். எனவே, தொல்லியல் மற்றும் வரலாறு சார்ந்த விழிப்புணர்வை பரவலாக்குவது அரசின் கடமையாகும். சென்னை, சிவகங்கை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், ஈரோடு, கரூர், விருதுநகர் ஆகிய இடங்களில் கீழடி மற்றும் பொருநை நாகரிக அகழாய்வுத் தொல்பொருட்கள் பற்றிய கண்காட்சிகள் நடைபெற்றுள்ளன. பள்ளி மற்றும் கல்லூரிகளில் தொல்லியல் மன்றங்கள் அமைத்தல், பொதுமக்கள் இடையே தொல்லியல் குறித்தான விழிப்புணர்வு ஏற்படுத்த மரபு நடைகள், மாணவர்கள் இடையே தொல்லியல் மற்றும் மரபு சார் புரிதலுக்கு பல்வேறு போட்டிகள், உலக மரபு வார விழா கொண்டாடுதல் போன்றவை திட்டமிடப்பட்டுள்ளன என்றும் அறிகிறேன். காத்திருக்கிறோம்.

அதுமட்டுமின்றி, தொல்லியல் மற்றும் கல்வெட்டு குறித்தான கல்வியை மாணவர்களுக்கு கள ஆய்வு, பல்துறை நோக்கோடு அறிவியல் அணுகுமுறையோடு பகுப்பாய்வு செய்து தமிழ்நாட்டின் தொன்மையையும் பண்பாட்டினையும் பண்டைய தொழில்நுட்பங்கள் பற்றிய தரவுகளையும் வரும் தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல தொல்லியல், கல்வெட்டியல், மரபு மேலாண்மை ஆகியவற்றில் ஈராண்டு முதுநிலை பட்டய படிப்புகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக தொல்லியல் துறை மூலம் நடத்தப்பெற்று வருகின்றன. இது ஒரு முன்மாதிரியான நடவடிக்கை.



பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், ஆர்வலர்கள் ஆகியோரிடையே விழிப்புணர்வையும் ஊக்கத்தையும் ஏற்படுத்த "தொல்லியல் ஓர் அறிமுகம்" என்ற தலைப்பில் பணிப்பட்டறைகள் நடைபெற்றுவருகின்றன. பாறை ஓவியங்கள் ஆவணப்படுத்துதல் ஆகியவையும் நடைபெறுகிறது. தமிழ்நாட்டு வரலாற்றினை மீட்டுருவாக்கம் செய்யத் தேவையான முதன்மைத் தரவுகளான கல்வெட்டுகள் நூலாக ஆறு தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆண்டு ஆறு தொகுதிகள் வெளிவரவுள்ளன.

வரலாறு என்பது பயனுள்ளது; முக்கியமானது என்பதையெல்லாம் தாண்டி, வரலாறு என்பது தவிர்க்க முடியாததும் தப்பிக்கமுடியாததும் ஆகும். தரவுகளால் நமது கடந்தகாலத்தை நாம் கட்டமைக்கவேண்டும்; இல்லையெனில் கட்டுக்கதைகள் நம்மீது கட்டவிழ்த்து விடப்படும். இதற்கான ஒரே வழி அறிவியல் அணுகுமுறையோடு தரவு சார்ந்த வரலாற்றை மீள்கட்டமைப்பதே ஆகும்.

எடுத்துக்காட்டாக, பானை செய்தலும், சுட்ட செங்கல் தயாரிப்பும் பண்டைய தொழில்நுட்ப வளர்ச்சியில்

முக்கியமான மைல் கல்கள் ஆகும். குயவர்களை "கலம் செய் கோ", "முதுவாய் குயவ", "வேட்கோ" என்று பலவாறு போற்றுகிறது சங்க இலக்கியம். ஆனால் இடைக்காலத்தில் வந்த சாதியப் படிநிலை அணுகுமுறைகளில் கைவினைக்கலைஞர்களின் சமூகமதிப்பு தாழ்த்தப்பட்டது.

இப்போது கீழடி அருங்காட்சியகத்தில் பழங்காலத்து கருப்பு சிவப்பு பாண்டங்களும், செங்கற்சுவர்களும், எழுத்துப்பொறிப்பு மற்றும் கீறல்களோடு கூடிய மட்பாண்டச் சில்லுகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி கீழடி அருங்காட்சியகத்தில் "கலம் செய் கோ" என்ற தலைப்பில் ஒரு கட்டடம், காட்சிப்பிரிவு அமைந்திருப்பதைக் காணொளியில் பார்த்ததுமே எனக்கு சங்க இலக்கியம் தான் நினைவுக்கு வந்தது.

சங்க இலக்கியத்தை எப்படி மீள்வாசிக்கவேண்டும்; நமது பண்பாட்டு வரலாற்றை எப்படி மீள்கட்டவேண்டும் என்று பாடம் நடத்துகிறது கீழடி. தமிழ்ச் சமூகவரலாற்றின் மறைக்கப்பட்ட அடியாழங்களை அகழ்ந்தெடுத்துக் கொண்டாடும் நெகிழ்வான தருணம் இது. இந்த நாளை வரலாறு குறிப்பெடுத்துக்கொள்ளும்.

சிந்துவெளிக் குறியீடுகளுக்கும் தமிழ்நாட்டு மட்பாண்ட கீறல்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமையை ஆய்ந்தறிந்து ஆவணப்படுத்தும் திட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசு அறிவித்து செயல்படுத்திவருகிறது. சிந்துவெளி எழுத்துகள் மற்றும் வரலாற்றுக் காலகட்டத்தில் இந்தியத் துணைக்கண்டத்தில் தோன்றிய எழுத்து வகைகளுக்கு இடையிலான தொடர்பு மற்றும் இடைவெளியை புரிந்துகொள்வதற்கு இந்த ஒப்பாய்வு மிகவும் உதவக்கூடும்.



> **தமிழ்நாட்டு மக்கள் தங்களது தனித்துவமான விழுமியங்களை அவை சார்ந்த பெருமிதங்களை ஆவணப்படுத்தவும் கொண்டாடவும் தொடர்ந்து போராடவேண்டிய தேவை இருந்துவந்துள்ளது.**

தமிழைச் செம்மொழியாக அறிவிக்கச் சான்றுகளாக அமைந்த தமிழிக் கல்வெட்டுகள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழரின் அடையாளங்களைத் தேடி வெளிநாடுகளிலும் அகழாய்வு நடத்தப்படவுள்ளன. பொருநை அருங்காட்சியகம் ரூ.33 கோடியில் திருநெல்வேலிக்கு அருகே அமைக்கப்படவுள்ளது.

பூண்டி, தர்மபுரி, குற்றாலம் அகழ்வைப்பகங்கள் ரூ.10 கோடியில் புதிய கட்டடங்களுடன் மேம்படுத்தப்படவுள்ளது. கள ஆய்வு மற்றும் அகழாய்வுகளுக்கு ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அடுக்கடுக்காக அடுத்தடுத்து செய்திகள்

கங்கை வெற்றியின் நினைவாக கட்டியெழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம் நகரில் அகழாய்வின் மூலம் அரண்மனையின் அடித்தளம் வெளிக்கொணரப்பட்டன. கங்கை கொண்ட சோழபுரத்தில் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மறைந்த ஆய்வறிஞர் ஐராவதம் மகாதேவன் நினைவாக ஆண்டு தோறும் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்படுகிறது.

ஒரு மொழியின் பண்பாட்டின் எதிர்காலம் அதன் இளந்தலைமுறைகளின் கையில் இருக்கிறது. இப்படி ஒரு தலைமுறை மற்றொரு தலைமுறையிடம் ஒப்படைத்த பெருமிதம்தான் இப்போது நமது கரங்களில் சங்க இலக்கியங்களாகவும் திருக்குறளாகவும் ஏனைய இலக்கியங்களாகவும் மிளிர்கின்றன.

அந்த வகையில் தமிழ்மொழியை மாணவர்களிடம் ஒப்படைக்கும் வகையில் தமிழ்நாடு அரசு நல்ல பல முன்னெடுப்புகளை எடுத்துள்ளது. மாவட்டம் தோறும் புத்தகத் திருவிழா நடத்துவதோடு சென்னை மற்றும் நதிக்கரை நகரங்களான நெல்லை (பொருநை), மதுரை (வைகை), தஞ்சை (காவேரி), கோவை (சிறுவாணி) ஆகிய இடங்களில் இலக்கியத் திருவிழாக்களை நடத்தி மண்ணின் மைந்தர்களான எழுத்தாளர்களை ஊக்குவித்து வருகிறது.

தமிழ்நாடு அரசு முன்னெடுத்திருக்கும் சொற்குவைத் திட்டத்தில் துறைசார் அகராதிகள் வெளியிடும் திட்டம், தமிழ் மற்றும் இந்தோ ஐரோப்பிய மொழிகள் ஒப்பீட்டு அகராதித் திட்டம், எளிய உரையுடன் சங்க இலக்கியங்களை பதிப்பித்தல், உள்ளிட்ட பல்வேறு தமிழ்ப் பணிகள் வாழ்த்தி வரவேற்கத்தக்கவை.

'சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா'. இது ஒரு மாநில அரசின் மாபெரும் முதல் முன்னெடுப்பு. மூன்றே மாதங்களில் திட்டமிட்டு நடத்தப்பட்ட முத்தாய்ப்பான விழா. இதில் முப்பதிற்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றதும், 350க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதும் குறிப்பிட்டுப் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. இது உலக இலக்கியங்களைத் தமிழுக்கும், தமிழ் இலக்கியங்களை உலகுக்கும் கொண்டு சேர்க்கும் ஓர் உன்னத விழா.

கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் 'மாபெரும் தமிழ்க் கனவு' என்ற பெயரில் தமிழ், மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரைகளை சொல்லோர் உழவர்களையும், துறை வல்லுநர்களையும் கொண்டு தமிழ்நாடு அரசு நூறு கல்லூரிகளில் நடத்துவது, எதிர்காலத் தமிழ்ச் சமூகத்திற்கு வளமான வழியைக் காட்டும் நிகழ்வாக அமைந்துள்ளது.

தமிழ்நாட்டு மக்கள் தங்களது தனித்துவமான விழுமியங்களை அவை சார்ந்த பெருமிதங்களை ஆவணப்படுத்தவும் கொண்டாடவும் தொடர்ந்து போராடவேண்டிய தேவை இருந்துவந்துள்ளது. ஆகச்சிறந்த செவ்விலக்கியம், தொன்மையான எழுத்துமுறை, பெயரும் பீடும் எழுதிய நடுகற்கள், ஓலைச்சுவடிகளின் எண்ணிக்கைப் பெருக்கம், முதலில் அச்சேறிய இந்தியத் துணைக்கண்ட மொழி என்ற பெருமிதம், இன்று இணையத்திலும் தொடரும் புத்தெழுச்சி என்று தமிழ் தொடர்ந்து இயங்கிவருகிறது.

ஆனாலும், தமிழ்த்தாய் வாழ்த்தின்போது கட்டாயம் எழுந்து நிற்கவேண்டும் என்று 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தெளிவான அரசாணை பிறப்பிக்கவேண்டிய சூழலும் நிலவுகிறது என்பதுதான் களநிலவரம். அதுவே நம்மை மேலும் விழிப்புடன் செயல்படுத்தத் தூண்டுகிறது.

தமிழ்நாடு என்பது வெறும் பெயர்ப்பலகை அல்ல. தோற்றத்தொன்மையுடன் தொடரும் இளமையுடன் இயங்கும் செம்மொழித் தமிழின் இருப்பின் பெருமிதம். தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் தமிழ் என்பது கூட்டு உளவியலில் நீக்கமற நிறைந்திருக்கும் உணர்வும் பட்டறிவால் பட்டை தீட்டப்பட்ட கருத்தியலும் ஆகும்.

★★★



இது வளமான எதிர்காலத்திற்கு அடித்தளமான அரசு!



கோ.பாலச்சந்திரன், இ.ஆ.ப. (ப.நி)
மேனாள் கூடுதல் தலைமைச் செயலர்,
மேற்கு வங்கம்.

‘சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது’ – குறள் 647

ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளைக் கடந்திருக்கும் முதல்வர் திரு. ஸ்டாலின் அவர்களைக் காணும்போது நமக்குத் தோன்றும் குறள் இதுதான்.

ஆட்சிப் பொறுப்பு வந்தவுடன் “எனக்கு வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்காதவர்களுக்கும்தான் நான் முதலமைச்சர்” என்று கூறிய பெருந்தன்மைமிகு பொறுப்புச் சொற்கள்.

கொரோனா தடுப்பு முயற்சிக் கூட்டங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவரையும் உடன் இணைத்த மாண்பு.

கொரோனாவை வெல்லும் முயற்சிகளில் முன்னின்று பெருமளவு தமிழ்நாடு மீண்டெழுவதற்குக் காரணமான அயரா உழைப்பு.

பெரும் கடன்சுமையை ஏற்று அரசு நடத்த வேண்டிய சூழ்நிலையிலும், தேர்தல் நேரத்தில் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற வேண்டும் என்ற உறுதி.

அந்த உறுதியின் வெளிப்பாட்டாய், உடனே முடிக்கக்கூடிய, நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகளை விரைந்து நிறைவேற்றிய செயலாக்கம், கடன்சுமையால் சோர்ந்திடாமல், அரசின் வருவாய்களைப் பெருக்கி, பெருநிதிச்சுமை உள்ள “வீட்டுப் பெண்டிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய்” என்ற வாக்குறுதியை ஏழை எளிய பெண்குலத்துக்கு அளிக்கவென ஆண்டிற்கு ரூ.12,000 கோடி ஒதுக்கிய கருணை.

தேர்தலில் அறிவிக்காத நல்வாழ்வுத் திட்டங்களையும் (நான் முதல்வன், இன்னும் பிற) சொல்லிச் செயல்படுத்தும் வன்மை.

அடுத்த தேர்தல் எவ்வளவு முக்கியமோ அதைவிடப் பன்மடங்கு முக்கியம் இளைய தலைமுறையின் – தமிழ்நாட்டின் எதிர்காலச் சந்ததியின் முன்னேற்றம் என்ற முனைப்பு.

“பெண் உயர்வு சமுதாயத்தின் உயர்வு” என்ற அசைக்க முடியாப் பெரு நம்பிக்கையின் அடிப்படையில் மலர்ந்த, மலர்ந்து கொண்டிருக்கின்ற பல மகளிர் நலத்திட்டங்கள், சொலல்வல்லன்

ஆதலின் பதவியேற்ற இரண்டு ஆண்டுகளுக்குள் இந்தியாவின் அரசியல் தலைவர்கள் எல்லோருடனும் நல்லுறவு, நாட்டின் எப்பகுதியிலும் நன்றாய் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டால், அதனை நுணுகி ஆய்வதும், அந்த மாநில முதல்வரை வாழ்த்துவதுமான பெருந்தன்மை, அந்தப் பெருந்தன்மை காரணமாய் முகிழ்ந்து மலர்ந்த, மணம் பரப்பும் அரசியல் நல்லுறவு.

சோர்விலான் ஆதலின் களைப்பற்ற கடும் உழைப்பு, சென்னை நீரில் தத்தளித்தால், தயக்கமின்றி வெள்ளப் பகுதிகளுக்கு நேரில் சென்று, தேங்கிய நீரின் நடுவே நடந்து மக்களுக்கு நிவாரண உதவிகள் உடனுக்குடன் கிடைக்கின்றதா என்று பார்க்கும், கண்காணிக்கும் பரிவு.

அஞ்சான் சட்டமன்றத்திலோ மக்கள் மன்றத்திலோ அரசியல் அடிப்படையில் எழுப்பப்படும் வினாக்களுக்கு, அஞ்சாமல் எதிர்நின்று பண்பாய் பதில் உரைக்கும் பக்குவம், எண்ணற்ற பொறுமை, தமிழரின் நலம் கெடுக்கும் செயல்கண்டால், அது எத்தகைய, பலம் பொருந்திய இடத்தில் இருந்து வந்தாலும் சொற்களின் வெளிப்பாட்டில், செயலின் உறுதியில் காட்டும் அஞ்சாமை,

"அவனை இகல் வெல்லும் யார்க்கும் அரிது" எத்தகைய சமர் எவர் புரிந்தாலும் திரு. ஸ்டாலினை வெல்வது மிகக் கடினம்தான் இன்றுள்ள அரசியல் சமுதாயச் சூழ்நிலையில்; ஏனென்றால் திரு. ஸ்டாலின் அவர்கள் வேண்டுவது தமிழ்நாட்டின் ஒன்றிணைந்த வளர்ச்சியினை.

பள்ளிச் சிறார்களுக்கு காலைச் சிற்றுண்டி வழங்கும் திரு. ஸ்டாலின் அவர்களின் நலத்திட்டம், அடுத்த பதினைந்து, இருபது ஆண்டுகளுக்குப் பின் இந்திய ஆசிய உலக பொருளாதார வல்லுநர்களால் உலகின் மிகச் சிறந்த எதிர்காலச் சமச்சீர் பொருளாதாரத்தை வலிமைப்படுத்துகின்ற திட்டமாகக் கணிக்கப்படும்.

'ஏழையென்றும் அடிமையென்றும்
எவருமில்லை நாட்டிலே
இழிவு கொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே'

என்று முழங்கிய பாரதியின் சொற்கள், நீதிக்கட்சி ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த நாளிலிருந்தே செயல்வடிவம் பெறத் துவங்கின.

வறுமைக்கோட்டின்கீழ் வாழ்வோர்க்கு 70, 80 ஆண்டுகளாய் யாராலும் எந்த அரசாலும் மாற்ற முடியாத செயல் திட்டங்களின் அடிப்படையில் நலத்திட்டங்கள் விளங்கின.

இன்று இந்தியாவின் இரண்டாவது பெரும் மாநிலமாக, பொருளாதார வளர்ச்சி கண்டிருக்கும் தமிழ்நாட்டின் எதிர்காலம் பற்றிய திரு. ஸ்டாலின் அவர்களின் திட்டமிடலும், செயல் வேகமும் இந்தியாவின் மிகச் சிறந்த முதல்வர்கள் வரிசையில் அவரை முன்னணியில் அமர்த்தி இருக்கின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்பாட்டுச் செழுமை வாய்ந்த தமிழினம், கடல் வணிகம் உள்ளிட்ட பொருளீட்டும் முயற்சிகளில் முன்னணியில் நின்ற தமிழர்கள் அப்பெருமை மங்கி நின்ற காலம் மாறி மீண்டும் பொருளாதார விரைவு வளர்ச்சி காணும் உயர்வின்போது, அவ்வளர்ச்சி அனைவருக்குமானதாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அமைக்கப்படும் திரு. ஸ்டாலின் அவர்களின் செயல்திட்டமும் செயலாக்கமும், தமிழ்நாட்டின் வளர்ச்சி அனைவருக்குமான வளர்ச்சி என்ற உறுதியான பாதையில், திரு. ஸ்டாலின் அவர்கள் உரைக்கும், திராவிட மாடலாய் மிளிர்ந்து பயணிக்கிறது.

திரு. ஸ்டாலின் அவர்கள் மாநகரத் தந்தையாய், சட்டமன்ற உறுப்பினராய் அமைச்சராய் துணை முதல்வராய் – நிர்வாகத்தின் பல படிகளைக் கடந்து வந்த காரணத்தால் அரசு நிர்வாகத்தின் சாதனைகள், வேதனைகள் அனைத்தையும் பற்றிய புரிந்துணர்வு மிக அதிகமாகக் கொண்டவராய் இருப்பது வெளிப்படை. இதன் காரணமாய் அரசின் செயல்பாடுகளில் காணும் விரைவுத் தன்மையைப் பாராட்டுவதும் அதில் உள்ள குறைகளின் வெளிப்பாடுகள் சமயம் சற்றும் தயக்கமின்றி அவற்றைக் களைவதில் முனைப்பெடுப்பதுவும் காணமுடிகிறது.

நாட்டின் பல்வேறு அரசியல் தலைவர்களுடன் பழகும் அதே பண்புடன் நரிக்குறவர் இல்லங்களில் உணவருந்துகிறார். ஏழை எளியவரிடம் தமிழ்நாட்டின் ஏதோ ஒரு மூலையில் பேருந்து நடத்துனர் மரியாதைக் குறைவு காண்பித்தால் விரைந்து அவர்மேல் எடுக்கப்படும் நடவடிக்கை "எல்லோர் சுயமரியாதையும் காக்கப்படும்" என்ற சேதியை அழுத்தமாய்ப் பதிவு செய்கிறது.

இந்த இரண்டு ஆண்டுகளில் தெளிவாய் திரு.ஸ்டாலின் சொல்லும் ஒரே சேதி: "இது அனைவருக்குமான அரசு, இது தமிழ்நாட்டின் வளமான எதிர்காலத்துக்கான வலிமை மிகு அஸ்திவாரத்தைத் தோற்றுவிக்கும் அரசு, தமிழ்நாட்டின் பொருளாதாரம் உயரத் திட்டமிடும் அரசு, அவ்வுயர்வில் ஏழை எளியவரின் பங்களிப்பும், அவர்தம் உயர்வும் உறுதி செய்யப்படப் பாடுபடும் அரசு."

திரு. ஸ்டாலின் ஆற்றும் உரைகளும் செயல்களும் அவருடைய கனிவு பண்பு, அஞ்சாமை சோர்வின்மை,



அயரா உழைப்பு, ஆற்றல்மிகு செயல்திறன் ஆகியவற்றின் வெளிப்பாடு.

திரு. ஸ்டாலின் அவர்களைச் சுற்றியுள்ளோர், அவருடைய கட்சியினர், அரசுப் பணியாளர்கள், தமிழ்நாட்டின் நலம் விரும்பும் தமிழ்க்குடியினர் அனைவரும் அவர் விழையும் தமிழ்நாட்டு எதிர்காலக் கனவுகளுக்கும், செயல்பாட்டிற்கும் ஒன்றிணைந்து கரம் கோர்த்து அவர் வேகத்தில் பயணித்தால், சங்க காலத் தமிழர் வாழ்ந்த பெரு வாழ்வு மறுபடியும் தமிழ்நாட்டில் நிச்சயம் மலரும்.

★★★





மு.க.ஸ்டாலின்:
நவீன ஆட்சிமுறையின் குறியீடு



ஏ.எஸ்.பன்னீர்செல்வன்
மூத்த பத்திரிகையாளர்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டில் ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது பத்தாண்டுகால சறுக்கல்களிலிருந்து இந்த மாநிலம் ஒரு விடுதலையைப் பெற்றதாக அனைவரும் உணர்ந்தோம். ஆனால் இந்த விடுதலையின் மொத்த பரிமாணத்தை உணர்ந்துகொள்ள இந்த ஆட்சியின் பல்வேறு கூறுகளை ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகிறது.

இந்திய அரசியல் அமைப்பில் உள்ள கூட்டாச்சித் தத்துவத்தை முழுமையாக அறிந்த ஓர் அரசியல் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். ஒன்றிய அரசின் பல்வேறு சதித்திட்டங்களைமீறி தமிழ்நாடு வெற்றிப் பாதையில் இன்று பயணித்துக் கொண்டிருப்பதற்கு முக்கிய காரணம் நம் மாநில முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் தெள்ளிய அரசியல் பார்வைதான். இதன் அடிநாதம் Co-operative Federalism என்று அழைக்கப்படும் கூட்டுறவு கூட்டாச்சி முறையே. இதனைப் புரிந்துகொள்ள சில உதாரணங்களைப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. உதாரணமாக கல்வி மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப் பட்டியலுக்கு மாறியதால் பல்வேறு சட்டச் சிக்கல்களை மாணவச் செல்வங்கள் சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில் உயர்கல்வியின் பாதுகாவலராகச் செயல்படும் பல்கலைக்கழகப் புரவலர் பதவியை ஒன்றிய அரசின் அலுவலரான ஆளுநரிடமிருந்து விடுவித்து முதல்வரிடம் வரும்படி செய்யும் மசோதாவை சட்டப்பேரவையில் தீர்மானமாக இந்த ஆட்சி நிறைவேற்றியது. இந்த மசோதாவிற்கு ஆளுநர் இன்னும் ஒப்புதல் அளிக்காவிட்டாலும் கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலில் கொண்டுவர முடியாவிட்டாலும் மாநில உரிமைகளை நிறைவேற்றும் போராட்டத்தில் ஒரு முக்கிய படியாக இந்த மசோதா திகழ்கிறது.

சமீபத்தில் பிற மாநில முதலமைச்சர்களுக்கு நம் முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதம் Co-operative Federalism–த்தின் மிகமுக்கிய அரசியல் முன்னெடுப்பாகும். சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு உரிய காலத்திற்குள் ஒப்புதல் வழங்க மாநில ஆளுநர்களுக்கு ஒன்றிய அரசும் குடியரசுத் தலைவர் அவர்களும் தகுந்த அறிவுரை வழங்கிட வலியுறுத்தி சட்டமன்றத்தில் ஒரு சிறப்பு தீர்மானத்தை நிறைவேற்றும்படி பிற மாநில முதலமைச்சர்களுக்கும் கடிதம் மூலம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டு உள்ளார்.

அந்தக் கடிதத்தில் இந்தியாவில் மறைந்து வரும் கூட்டாச்சித் தத்துவத்தைப் பற்றியும் மக்களாட்சி இன்று சந்தித்து வரும் சவால்களையும் பட்டியலிட்டுள்ளார். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஆளுநர்களின் கடமைகள் குறித்தும் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் கடமைகளையும் பொறுப்புகளையும்


முரசொலி
சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தின் ஒரு நல் விளைவாக
ஆன்லைன் ரம்மி விளையாட்டு தொடர்பான மசோதாவிற்கு ஆளுநர் ஒப்புதல்!


தினகரன்
ஆளுநருக்கு எதிராக தீர்மானம் நிறைவேறிய ஒரு மணி நேரங்களில்
ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட
மசோதாவுக்கு ஆர்.என்.ரவி ஒப்புதல்



THE TIMES OF INDIA
Tamil Nadu govt notifies anti-online gambling law
Governor Gave Assent On April 7


தினத்தந்தி
சட்டசபை தீர்மானத்தின் நல்விளைவாக
'ஆன்லைன் ரம்மி' தடை மசோதாவுக்கு கவர்னர் ஒப்புதல்
முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்


இந்து தமிழ் திசை
ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்யும்
சட்ட மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல்


தினமணி
உடனடியாக அமல்: முதல்வர் ஸ்டாலின்


தினமலர்
அரசிதழில் உடனே வெளியீடு
முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு


DT NEXT
TN notifies e-gambling ba
Bill hours after Guv's nod
Assembly seeks time frame for Guvs to approve Bills
THE STANDOFF


THE HINDU
Governor gives assent to Bill against online gambling


THE INDIAN EXPRESS
Gazette notification will be issued immedi
MAIN FEATURES OF THE BILL

சரியாக வரையறுத்துள்ள போதிலும் அவைகள் இப்பொழுது மதிக்கப்படுவதோ பின்பற்றப்படுவதோ இல்லை என்பதை அந்தக் கடிதத்தில் எடுத்துக்காட்டிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இதனால் மாநில அரசுகளின் செயல்பாடுகள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெளிவாகக் காட்டியுள்ளார்.

மாநில சட்டமன்றங்களால் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட பல்வேறு மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் சில மாநில ஆளுநர்கள் காலவரையின்றி நிலுவையில் வைத்திருப்பதால் அந்தந்த மாநில நிர்வாக செயல்பாடுகள் முடங்கிப் போயிருப்பதையும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்ட 'ஆன்லைன் ரம்மியைத் தடை செய்வதற்கான மசோதா' உள்ளிட்ட பல்வேறு சட்ட முன்வரைவுகளுக்கு ஒப்புதல் வழங்கும் பொருட்டு ஆளுநர் அவர்கள் எழுப்பிய சந்தேகங்களைப் பலமுறை தெளிவுபடுத்தியும் அம்முயற்சிகள் பலனளிக்கவில்லை என்றும், இதே நிலைதான் பல்வேறு மாநிலங்களிலும் உள்ளன என்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மாநில முதலமைச்சர்களுக்கு ஸ்டாலின் அவர்கள் எழுதிய கடிதம் கூட்டாச்சி அரசியலில் அவருக்கு இருக்கும் தெளிவான பார்வையை எடுத்துக்காட்டுகிறது. இதை நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள அவர் முன்னெடுத்த மற்றொரு செயல்பாட்டையும் கூர்ந்து கவனிக்க வேண்டியது அவசியமாகிறது.

ஏப்ரல் மாதத்தின் துவக்கத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் அகில இந்திய சமூகநீதி மாநாட்டைக் கூட்டினார். இதில் வளர்ச்சிக்கு சமூகநீதி ஏன் அடிநாதமாக இருக்க வேண்டுமென்பதைத் தெளிவாக வலியுறுத்தினார். அந்தக் கூட்டத் தலைமையுரையில் இருந்து அவர் பேசிய சில முக்கிய விசயங்களை மட்டும் இங்குப் பார்ப்போம்:

1. சமூகநீதி என்பது ஒரு மாநிலத்துக்கு மட்டும் சொந்தமல்ல; இந்தியாவுக்கே தேவைப்படக்கூடியது. அதற்காக இந்தியா முழுவதும் உள்ள சமூகநீதி சக்திகள் ஒன்றுபடவேண்டும்.

2. ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஜாதி – வகுப்பு அளவீடுகள் வேறுபடலாம். ஆனால், பிரச்சினை ஒன்றுதான். அதுதான், புறக்கணிப்பு! எங்கெல்லாம் புறக்கணிப்பு – ஒதுக்குதல் – தீண்டாமை – அடிமைத்தனம் – அநீதி இருக்கிறதோ அங்கெல்லாம் அதனை முறிக்கும் மருந்தாக இருப்பதுதான் சமூகநீதி.

3. பாம்பின் விஷத்தை நீக்க விஷமுறிவாக அந்த விஷமே பயன்படுவதைப் போல, ஜாதியால் புறக்கணிக்கப்பட்டவர்களை உயர்த்த அந்த ஜாதியே பயன்படுகிறது. அதுதான் இடஒதுக்கீடு எனப்படும் சமூகநீதிக் கருத்தியல்!

அவருடைய தலைமையுரையில் மாற்றத்திற்கான அரசியலின் குறியீடாக சுயமரியாதை சுடரொளியாக தமிழ்நாடு எப்படி ஒரு முன்னுதாரணமாய் திகழ்கிறது என்பதை அனைவரும் புரிந்துகொள்ளும் மொழியில் எடுத்துரைத்தார்.

"இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 340ஆவது பிரிவில்" socially and educationally' என்பதுதான் வரையரையாக உள்ளது. அதே சொல்தான் அரசமைப்புச் சட்டத்தின் திருத்தத்திலும் சொல்லப்பட்டது. அதாவது சமூகநீதி எனப்படும் இடஒதுக்கீடு என்பதே சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின் தங்கியவர்களுக்குத் தரப்பட வேண்டும் என்பதுதான் இந்திய அரசமைப்புச் சட்ட வரையறை! இந்தத் திருத்தத்துக்குக் காரணமான மாநிலம் அன்றைய சென்னை மாகாணம்! இந்தத் திருத்தத்துக்குக் காரணமான தலைவர்கள் தான் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணா அவர்களும்!"

மேலும், உரிமையுடன் கூடிய நமது வளர்ச்சிக்கான அரசியல் செயல்திட்டத்தை முதலமைச்சர் தெளிவாய் முன்வைத்தார். இளைஞர்கள் கீழ்க்கண்ட செயல்பாடுகளைத் தீவிரமாகச் செய்வதன்மூலமே உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டு சமூகநீதிக்கு பங்கம் வராமல் வளர்ச்சிப் பாதையில் செல்ல முடியும் என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

"இந்தியா முழுமைக்கும் கூட்டாட்சியை, மாநில சுயாட்சியை, மதச்சார்பின்மையை, சமத்துவத்தை, சகோதரத்துவத்தை, சமதர்மத்தை, சமூகநீதியை நிலைநாட்ட நாம் குரல் கொடுத்தாக வேண்டும்.

அது வெறும் குரலாக மட்டும் இருக்க முடியாது. தனித்தனி குரலாக மட்டும் இருந்தால் பயனில்லை. கூட்டுக் குரலாக – கூட்டணிக் குரலாக அமைய வேண்டும்."

இந்தப் பார்வையில் இந்தியாவின் பன்முகத்தன்மையைப் பாதுகாக்கும் அரசியல் மிகத்தெளிவாக இருக்கிறது. பன்முகத்தன்மையைப் பாதுகாக்கும் அரசியல்தான், நவீனமானது.

யாருடைய உரிமையையும் பறிக்காத, எந்தவித எதேச்சதிகாரத் தன்மைக்கும் இடம்தராத, மக்களாட்சியை மேன்மைப்படுத்தும் ஓர் அரசியல் மாற்றாக திரு. ஸ்டாலின் அவர்களின் அணுகுமுறை இருக்கிறது. இந்த அணுகுமுறை இந்தியாவின் எதிர்பார்ப்புகளுக்கும் கனவுகளுக்கும் ஒரு நம்பிக்கையை அளிக்கிறது. 2024இல் இந்தியாவில் ஏற்படப்போகும் சனநாயக மக்கள் புரட்சிக்கு இந்த இரண்டு ஆண்டுகால தமிழ்நாட்டு ஆட்சி ஒரு கட்டியம் கூறுகிறது.

★★★









இல்லம்தேடி வரும் அரசு



ஆர்.விஜயசங்கர்
மேனாள் ஆசிரியர், ஃபிரண்ட்லைன்

சமூக நீதி என்றதுமே இந்தியாவில் அனைவரின் நினைவுக்கு வருவதும் தமிழ்நாடும் திராவிட இயக்கமும்தான். ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக சமூகநீதிக் கொள்கையை முன்வைத்து திராவிட இயக்கம் நடத்திய சமூக, சட்ட, அரசியல் போராட்டங்களும், 55 ஆண்டுகளுக்கு முன் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் அக்கொள்கையை நடைமுறைப்படுத்திய வேகமும் உறுதிப்பாடும்தான் இன்று சர்வதேச அளவில் அங்கீகரிக்கப் பட்ட வளர்ச்சிக் குறியீடுகளில் தமிழ்நாட்டை இந்திய ஒன்றியத்தின் ஒரு முன்னணி மாநிலமாக மாற்றியிருக்கின்றன.

சமூக நீதி என்கிற தத்துவம் ஒரு நிலப்பிரபுத்துவசாதீய அமைப்பினால் பல ஆயிரம் ஆண்டுகளாக வஞ்சிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதை நோக்கமாகக் கொண்டது. இதனால் இந்தியாவின் வளர்ச்சிப் போக்கில் பொருளாதார ரீதியாகவும் பின் தங்கிவிட்ட ஏழைகளும் பயன் பெற்றனர் என்பதுதான் வரலாறு.

கலைஞர் மு.கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் சமூக நீதியின் முக்கிய அங்கமான இட ஒதுக்கீட்டுக் கொள்கை மேலும் வலுவுற்றது. இந்தியா விடுதலையடைந்த முதல் 40 ஆண்டுகளில் பொதுத் துறை, சமூக நல அரசு, கலப்புப் பொருளாதாரம் போன்ற கருத்தங்கள் வலுவாக இருந்த சூழலில் ஒரு மாநிலத்திற்கு இருக்கும் குறைந்தபட்ச அதிகாரங்களை வைத்துக் கொண்டு சமூக நீதிக்கு பொதுக் கல்வி, பொது மருத்துவம், பொது வினியோகத் திட்டம் என புதிய பரிமாணங்களைக் கொடுத்து சாதனை புரிந்தவர் கலைஞர்.

திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் இன்றைய சூழல் வேறு என்பது மட்டுமல்ல, சமூக நீதி, சமூக நலம், பன்மைக் கலாச்சாரம், மொழியுரிமை, மாநில உரிமை ஆகிய கருத்தாக்கங்களுக்கும், நடைமுறைகளுக்கும் எதிரான கொள்கையைக் கொண்டிருக்கும் ஒரு இயக்கத்தின் உடும்புப் பிடியில் ஒன்றிய அரசு இருக்கிறது. முன்னெப்போதும் இந்தியா கண்டிராத ஒரு மோசமான அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சாரச் சூழலில் சமூக நீதியை முன்னெடுத்துச் செல்லும் சவால், முதல்வர் பொறுப்பேற்ற தருணத்தில் இருந்தது.

காலியான அரசு கஜானா, வரி வருவாய்ப் பங்கீட்டில் மாநிலங்களுக்கு ஓர வஞ்சகம் செய்யும் ஒன்றிய அரசு, முன்னேற்றத் திட்டங்களுக்கு முட்டுக் கட்டை போடும் மத்திய அதிகார வர்க்கம் போன்ற பிரச்சினைகள்



போதாதென்று கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸ் தாண்டவம் நடத்திக் கொண்டிருந்தது. மக்களின் உயிரைக் காப்பாற்ற நேரடியாகக் களத்தில் இறங்க வேண்டிய ஒரு போர்ச் சூழலில்தான் திரு. ஸ்டாலின் அவர்கள் முதல்வரானார். களத்திலும் இறங்கினார்.

கொரொனாவின் கொடுமை சற்று குறைந்த போதிலும் அதன் பொருளாதாரத் தாக்கம் ஏற்கெனவே இருந்த நிதிச் சூழலைக் கடுமையாக்கியது.

இந்த நேரத்தில்தான் வேலையிழப்பு, வேலையில்லாத் திண்ட்டாட்டம், விலைவாசி உயர்வு, தொடர்ந்து வீழும் உண்மையான சம்பளம், அதிகரிக்கும் கல்வி, மருத்துவச் செலவுகள் ஆகியவற்றால் அல்லலுற்ற மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் திட்டங்கள் தீட்டப்பட்டன. அவை அனைத்தும் சமூகநீதிக் கருத்தாக்கத்தை மேலும் உயர்ந்த ஒரு தளத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டன. இந்தத் திட்டங்கள் அனைத்தும் பொருளாதார ரீதியாக அடித்தட்டில் இருக்கும் மக்களுக்குத்தான் பலனளித்துக் கொண்டிருக்கின்றன என்பதை புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

பெண்களுக்கும் சமூகநீதி

இலவச பஸ் பாஸ்: சமூகநீதி மறுக்கப்பட்டது சூத்திரர் என்றழைக்கப்பட்டு பிற்படுத்தப்பட்டோருக்கு மட்டுமல்ல, மக்கள் தொகையில் சரிபாதியாக இருக்கும் பெண்களுக்கும் என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு, அவர்களுக்கு இலவச பஸ் பாஸ் திட்டத்தை அறிவித்தது. கல்வியும் வேலைவாய்ப்பும் கிடைத்தாலும் கூட பெண்கள் போக்குவரத்துக்கு கணிசமாக செலவிடுகிறார்கள். அரசின் திட்டத்தினால் அவர்கள் தம் மாத வருமானத்தில் சுமார் 11 விழுக்காடு சேமிக்க முடிகிறது என்று திட்டக் குழு நடத்திய சர்வே தெரிவிக்கிறது.

இந்த இலவச பாஸ் அறிமுகமானதைத் தொடர்ந்து வேலைகளில் பெண்களின் பங்கு அதிகரித்தது மட்டுமின்றி, அவர்கள் சுய தொழில் நடத்துவதையும் ஊக்கப்படுத்தியிருக்கிறது. பொருளாதார அடுக்கின் அடிமட்டத்தில் இருக்கும் கட்டுமானத் தொழிலாளர்கள், விவசாயக் கூலி வேலை செய்வோர், தெருவில் சென்று பொருட்களை விற்போர் எனப் பல தரப்பு மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறது என ஆய்வு கூறுகிறது. கிராமப்புற பெண்கள் நகரங்களில் கிடைக்கும் கல்வி வாய்ப்பைப் பெறவும் இது வழி செய்திருக்கிறது.

புதுமைப் பெண் திட்டம்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உத்தரவாதத் திட்டம் என்ற பெயரில் வந்திருக்கும் இந்த முன்னெடுப்பின்படி அரசுப் பள்ளிகளில்



6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து வென்றிருக்கும் பெண்கள் உயர்கல்வியை முடிக்கும் வரையில் மாதமொன்றுக்கு ரூ.1000 உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதனால் உயர்கல்விக்கு பதிவு செய்திருக்கும் பெண்களின் எண்ணிக்கை ஒரே கல்வி ஆண்டில் 68,529இலிருந்து 86,487ஆக உயர்ந்திருக்கிறது. அதாவது, 26 விழுக்காடு வளர்ச்சி! இதில் அட்டவணை சமூகங்களைச் சார்ந்த பெண்களின் அளவு 68 விழுக்காடும் பழங்குடியினங்களைச் சேர்ந்தோரின் அளவு 38 விழுக்காடும் ஆகும். இதில் மேலும் மகிழ்ச்சிக்குரிய செய்தி வறுமையின் காரணமாக பாதியில் படிப்பை நிறுத்தியவர்கள் மீண்டும் கல்வியைத் தொடர்கிறார்கள் என்பதுதான்.

குழந்தைகளின் நலன்

பள்ளிகளில் காலை உணவுத் திட்டம்: கல்வியில் சமூகநீதி என்கிற கொள்கை திராவிட இயக்கத்தின் சாதனைகளில் ஒன்று. ஆனால் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் பசியோடு இருந்தால் கல்வி கற்கும் திறன் மற்றும் சமூக, மனநல வளர்ச்சி பாதிக்கப்படும் என்பது ஓர் அறிவியல் உண்மை. இதை உணர்ந்த ஸ்டாலின் அரசு அவர்களுக்கு இலவச காலை உணவு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

உலக அளவில் இந்தியாவில்தான் குறை வளர்ச்சி கொண்ட குழந்தைகள் அதிகம். ஊட்டச்சத்துக் குறைவுதான் இதற்கு முக்கியக் காரணம். எனவே, எதையாவது கொடுத்து குழந்தைகளின் வயிற்றை நிரப்புவது பலனளிக்காது என்பதால் ஊட்டச்சத்து நிறைந்த உணவை அவர்களுக்கு வழங்க அரசு முடிவு செய்தது.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக, 15 மாநகராட்சி, 23 நகரசபை, 11 மண்டலங்கள் மற்றும் பஞ்சாயத்துகள், 6 மலைப் பிரதேசங்களிலிருக்கும் 1,545 ஆரம்பக் கல்வி நிலையங்களில் திட்டம் நடைமுறைக்கு வந்தது. சுமார் 1.14 இலட்சம் குழந்தைகள் பலன் பெற்றதாக புள்ளி விவரம் காட்டுகிறது.

இல்லம் தேடி வரும் சமூகநீதி

ஓர் அரசு சட்டமியற்றி அதற்கான விதிகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தி சமூகநீதியை நிலைநாட்டுவது ஒரு மாடல். கல்வி, மருத்துவத் துறைகளை பாமர மக்களுக்கானதாக மாற்றியதன் மூலம் சமூகத்தில் பின்தங்கியோர் அதற்கான நிறுவனங்களுக்குச் சென்று பலனடைவதும் அந்த மாடல்தான். ஆனால், திரு. ஸ்டாலின் அவர்களின் அரசு கல்வியையும் மருத்துவத்தையும் அவர்களின் இல்லங்களுக்கே தேடிச் சென்று வழங்குவது சமூக நீதியின் புது மாடல்.



> **அரசியல் அதிகாரத்தின் வாயிலாக மாநில அளவில் சமூக நீதி வழங்குவதில் சாதனைகள் புரிந்தாலும், அதிகாரங்கள் குவிந்து கிடக்கும் ஒன்றிய அரசின் கொள்கைகளும் நடைமுறைகளும் அக்கொள்கைக்கு எதிராக இருப்பது ஒரு பெரும் சவாலாக இருக்கிறது என்றும் அவருக்குப் புரிந்ததால் ஒரு முக்கியமான அரசியல் நகர்வை மேற்கொண்டிருக்கிறார்.**
>
> **சனாதனம், வர்ணாசிரமம் எனப் பேசி அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணான செயல்களை மேற்கொள்ளும் ஒன்றிய அரசின் கொள்கைக்கு மாற்றாக சமூகநீதி என்கிற தமிழ் நாட்டில் நிரூபிக்கப்பட்ட தத்துவத்தை முன் வைக்க நினைத்தார்.**

இல்லம் தேடி கல்வி

கொரோனாவின் கோரப் பிடியிலிருந்து மக்களைக் காப்பாற்ற முழு அடைப்பு நடந்த காலத்தில் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் இரண்டு ஆண்டுகள் மூடப்பட்டன. அந்த நேரத்தில் இணையவழிக் கல்விதான் ஒரே வழியாக இருந்தது. ஆனால் இணையத் தொடர்பு, கணினி, ஸ்மார்ட் போன் போன்ற வசதிகள் இருந்த வசதி படைத்த மாணவர்கள் தனியார் நிறுவனங்கள் நடத்திய இணைய வகுப்புகள் மூலம் கல்வி பெற்றனர்.

இருப்போர் இல்லாதோருக்கு இடையில் இருந்த பெரும் பொருளாதார இடைவெளி இணைய உலகிலும் பிரதிபலித்தது. இந்தப் பிரச்சினையை சமாளிக்க பள்ளிக் கல்வித் துறை ஒரு புதுமையான முயற்சியை மேற்கொண்டது. பள்ளி அமைப்புக்கு வெளியே ஏழை மாணவர்களின் வீடுகளுக்கு அருகே குழுக்களை அமைத்து தன்னார்வத் தொண்டர்களின் மூலம் ஒவ்வொரு நாளும் அங்கன்வாடி மையங்களிலும், சமூகநலக் கூடங்களிலும் வகுப்புகளை நடத்தும் திட்டம்தான் அது.

இதனால் பலனடைந்தவர்களில் 90 சதவீதம் பேர் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பழங்குடிப் பிரிவினர் என்கிற உண்மை சமூகநீதியின் ஒரு முற்றிலும் புதிய பரிமாணத்தை வெளிப்படுத்தியது. இந்த முயற்சி கொரோனா காலத்திற்குப் பின்னரும் தொடர வேண்டுமென தன்னார்வத் தொண்டர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும் வேண்டுகோள் விடுத்ததே அதன் வெற்றிக்கு சான்று!

இல்லம் தேடி மருத்துவம்

லாபநோக்கில் செயல்படும் தனியார் மருத்துவமனைகள் பெருகிவிட்ட நிலையில் பெரும்பாலான ஏழைகளுக்கு அரசு மருத்துவமனைகளும், ஆரம்ப சுகாதார நிலையங்களுமே ஒரே ஆறுதல். ஏற்கெனவே, பொது மருத்துவக் கட்டமைப்பில் முன்னணியில் இருக்கும் தமிழ்நாட்டில் அதன் சேவைகளை விரிவாக்கும் நோக்குடன் இல்லம் தேடி மருத்துவம் என்கிற புதுமைத் திட்டமும் கொண்டுவரப்பட்டது.

ரத்தக் கொதிப்பு, நீரிழிவு நோய், வாய்ப் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் போன்ற பொதுவான மருத்துவப் பிரச்சினைகள் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு இருக்கிறதா என்பதை அறிய பொது முகாம்கள் நடத்தப்பட்டன. பாதிக்கப்பட்டோரில் எழுந்து அதிகம் நடக்க முடியாதவர்களுக்கு பெண் தன்னார்வலர்கள் உரிய மருந்துகளை வீடு தேடிச் சென்று கொடுக்கின்றனர்.

முதல் கட்டமாக 1,172 துணை மருத்துவ மையங்கள், 189 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 50 சமூக மருத்துவக் கூடங்களில் இத்திட்டம் நடைமுறைக்கு வந்தது. மருந்துகளை சுகாதார நிலையங்களுக்கும், தேவைப்படும் நோயாளிகளுக்கும் கொண்டு சேர்க்கும் வாகனங்களும் உள்ளன.

அரசியல் களத்தில்

மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கு இத்தகைய முன்னெடுப்புகளை திரு. ஸ்டாலின் அவர்கள் எடுத்தாலும் அது மட்டுமே ஒரு நீண்டகாலத் தீர்வாகாது என்கிற உண்மையை நன்கே அறிந்திருக்கிறார். அரசியல் அதிகாரத்தின் வாயிலாக மாநில அளவில் சமூகநீதி வழங்குவதில் சாதனைகள் புரிந்தாலும், அதிகாரங்கள் குவிந்து கிடக்கும் ஒன்றிய அரசின் கொள்கைகளும் நடைமுறைகளும் அக்கொள்கைக்கு எதிராக இருப்பது ஒரு பெரும் சவாலாக இருக்கிறது என்றும் அவருக்குப் புரிந்ததால் ஒரு முக்கியமான அரசியல் நகர்வை மேற்கொண்டிருக்கிறார்.

சனாதனம், வர்ணாசிரமம் எனப் பேசி அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணான செயல்களை மேற்கொள்ளும் ஒன்றிய அரசின் கொள்கைக்கு மாற்றாக சமூகநீதி என்கிற தமிழ் நாட்டில் நிரூபிக்கப்பட்ட தத்துவத்தை முன் வைக்க நினைத்தார்.

அதன் தொடர்ச்சியாக, எதிர்கட்சிகளின் ஒற்றுமையைக் கட்டுவதற்காக சென்ற ஆண்டு சமூகநீதி முன்னணி (Social Justice Front) என்கிற ஒரு அமைப்பை உருவாக்கியிருக்கிறார். அரசியல் மாற்று என்பது ஒரு கொள்கைத் திட்டத்தின் அடிப்படையிலான மாற்றாக இருக்க வேண்டும் என்பதே அரசியல் ஆர்வலர்களின் உறுதியான எண்ணம். முதல்வர் ஸ்டாலின் உருவாக்கிய சமூகநீதி முன்னணி அதற்கு ஒரு வலுவான அடிப்படையாக இருக்கும் என்பதையே தமிழ்நாட்டின் வரலாறு காட்டுகிறது.

★★★


CPI(M) 23rd PARTY CONGRESS 2022

சமூகநீதியே அரசின் சுவாசம்!



ஜென்ராம்
மூத்த பத்திரிகையாளர்

"திரு. ஸ்டாலின் அவர்களே! மாற்றத்திற்கான நேரம் வந்துவிட்டது இந்திய அரசியலுக்கு நீங்கள் வாருங்கள். இந்த மாநிலத்தைக் கட்டமைத்தது போல இந்தியாவைக் கட்டமையுங்கள். எல்லோரோடும் இணைந்து பணியாற்றக் கூடியவர்கள் இன்று நாட்டுக்குத் தேவை."

கடந்த மார்ச் முதல்நாள் சென்னையில் நடைபெற்ற மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழாவில் காஷ்மீர் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் ஃபாரூக் அப்துல்லா இப்படி ஓர் அழைப்பை முதலமைச்சர் ஸ்டாலினுக்கு விடுத்தார்.

இந்த பேச்சில் இருந்து நமக்கு தெரிகின்ற உண்மைகள் என்ன? முதலாவதாக தமிழ்நாட்டைப் போல் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை இந்தியாவில் பல மாநிலங்கள் பெற்றிருக்கவில்லை. அதனால்தான் ஃபரூக் அப்துல்லா தமிழ்நாட்டு முதலமைச்சரை தேசிய அரசியலுக்கு வாருங்கள் என்று அழைக்கிறார்.

இரண்டாவதாக, டெல்லியில் எல்லோரோடும் இணைந்து பணியாற்றக்கூடிய தலைவர்கள் இல்லை அல்லது மிகவும் குறைவு என்று இன்னொரு உண்மை நமக்கு புரிகிறது.

இந்திய அரசியலில் இன்று ஆட்சி நடத்திக் கொண்டிருப்பவர்கள், எல்லோரோடும் இணைந்து பணியாற்றக்கூடியவர்கள் இல்லை என்பதையும் ஃபரூக் அப்துல்லா சுட்டிக்காட்டுவது போல் தெரிகிறது.

ஒரே நாடு, ஒரே அது, ஒரே இது என்று ஒற்றைப் பார்வையை நாட்டின் மீது திணிக்கும் பண்பாட்டுக்கு மாற்றாக மாநிலத் தலைவர்களுடைய முன்னணித் தலைவர்கள் இணைந்த கூட்டாட்சியின் அவசியத் தேவை குறித்தும் அவர் அழைத்திருக்கக் கூடும்.

தேசிய அரசியலுக்கு வாருங்கள், தமிழ்நாட்டைப் போல் இந்தியாவையும் ஒருங்கிணைந்த வளர்ச்சி கொண்ட நாடாக மாற்றுவோம் என்று அவர் அழைப்பதில் இருந்து நாம் என்ன புரிந்து கொள்கிறோம்?

தமிழ்நாட்டின் முதலமைச்சராக மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு ஏராளமான திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறது. மக்களுக்கு பலன் அளிக்கக்கூடிய நல்ல திட்டங்களை மிகக் குறுகிய காலத்தில் செயல்படுத்தும் இந்த அரசை முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள், தி.மு.க. அரசு என்று சொல்லவில்லை. எனது அரசு என்றும் பேசவில்லை. திராவிட மாடல் அரசு என்று கூறுகிறார்.

எல்லோர்க்கும் எல்லாம் என்ற சமூக நீதிக் கோட்பாடு எங்களை வழி நடத்துகிறது என்று முழங்குகிறார். நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அவருக்கு வாக்களிக்காதவர்கள் கூட இப்போது இந்த அரசை தீவிரமாக ஆதரிக்கிறார்கள் என்ற உண்மையையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சமூக நீதி அரசு என்று சொல்வதோ திராவிட மாடல் அரசு என்று சொல்வதோ சர்ச்சைக்குரிய ஒன்றல்ல. மாநிலத்தில் இருக்கக்கூடிய அனைத்து மக்களையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்காக பாடுபடும் அரசு என்று முதலமைச்சர் குறிப்பிடுவதில் எந்த தவறும் இல்லை. இந்திய அரசமைப்புச் சட்டம் இந்திய மக்களுக்கு எவற்றை உறுதி செய்ததோ அவற்றை வழங்குவதே தி.மு.க. அரசின் லட்சியம் என்பதை முதலமைச்சர் ஸ்டாலின் சொல்லிலும் செயலிலும் மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறார்.

தி.மு.க. அரசு செயல்படுத்தும் சமூக நீதியை, அநீதி என்று சொல்பவர்கள் அநீதியான ஒரு சமூக அமைப்பைக் காப்பாற்ற முயல்பவர்கள் என்றே நான் புரிந்து கொள்கிறேன். சமூகத்தின் பெரும் பகுதி மக்களுக்குப் படிநிலை அதிகாரம் மூலம் அநீதி இழைப்பது இயற்கை நீதியை குழிதோண்டிப் புதைப்பதாகும்.

சமூக நீதிக்குப் பொருள், ஒரு சமூகத்தில் அரசு எல்லோரையும் சம நிலைக்குக் கொண்டு வருவதற்காக சிலரை பெரும்பாலானவர்களுக்குச் சமமில்லாமல் நடத்துவதாகும். இப்படி நடத்துவதை அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது என்று உச்சநீதிமன்றம் சொன்ன காரணத்தால்தான் இந்தியாவில் முதல் அரசமைப்பு சட்டத் திருத்தமே கொண்டுவரப்பட்டது.

ஏற்கனவே வசதிகளையும் வாய்ப்புகளையும் கூடுதலாக அனுபவித்தவர்கள் இந்த உண்மையை புரிந்து கொள்வது அவசியம். பெரும்பகுதி மக்கள் மீதான ஒடுக்குதலும் சிறு எண்ணிக்கையில் உள்ள மக்களுடைய சலுகைகளும் எந்தப் புள்ளியில் இருந்து தொடங்குகின்றன என்பதை அறிந்து, அரசு நீதி வழங்கியே ஆக வேண்டும். அதுதான் ஒரு ஜனநாயக நாட்டில் அரசு செய்ய வேண்டிய கடமை. அந்தக் கடமையைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு செய்து வருகிறது.

நன்றாக இயங்கும் ஒரு ஜனநாயக சமூகத்திற்கான இலக்கணமே சமூக நீதியும் நியாயமான பொருளாதார அமைப்பும் எளிய மனிதர்களுக்கும் எல்லாவகை நீதி கிடைக்கும் அமைப்பும் கொண்டதாக அந்த சமூகம் இருக்க வேண்டும் என்பதுதான்! சமூகத்தின் அடித்தட்டில் இருக்கும் எந்தப் பிரிவினருக்கும் வாய்ப்புகள் மறுக்கப்பட்டுவிடக் கூடாது. எங்காவது ஒரு மூலையில் நடக்கும் அநீதி கூட மற்ற இடங்களில் கிடைக்கும் நீதிக்கு அச்சுறுத்தலாக மாறிவிடக் கூடும்! அதனால், எந்த மூலையிலும் அமைப்பு ரீதியான அநீதி நடக்கக் கூடாது! வறுமையை ஒழிப்பதற்கும் வளர்ச்சிக்கும் அர்த்தம் பணத்தைக் குவிப்பதல்ல; அனைத்து மக்களுக்கும் நீதியை வழங்குவதே!

இப்படிப்பட்ட சமூக நீதியை கொள்கையாகக் கொண்ட ஓர் அரசைத் தான் முதலமைச்சர் ஸ்டாலின் நடத்தி வருகிறார். அரசின் கொள்கை என்று அவர் சொன்னாலும், சமூகநீதி அவருக்கு சுவாசமாகவே இருக்கிறது; அவருடைய நாடி நரம்புகளிலும் ரத்த நாளங்களிலும் சமூக நீதி உணர்வே நிறைந்திருக்கிறது.



“உன் தாய் உன்னை கர்ப்பத்தில் தாங்கிய அந்த நாட்களில் சாம்பலை அல்ல, அக்னி துண்டுகளையே விழுங்கி இருக்கவேண்டும்” என்று மா சேதுங் குறித்து கவிஞர் ஈரோடு தமிழன்பன் ஒரு கவிதை எழுதியிருந்தார். அதைப்போல், நமது முதலமைச்சர் குறித்து என்ன எழுத முடியும்? அவர் வீட்டில் சமூகநீதிக் காற்றைத்தான் அவர் சுவாசித்திருக்க முடியும்! செவிக்கும் வயிற்றுக்கும் உணவாக சமூகநீதிதான் உள்ளே சென்றிருக்கும்!

“உங்கள் ரத்தத்தில் கலந்து விட்ட உணர்வுகளின் அடிப்படையில் நீங்கள் செயல்படுவதாக இருந்தால், நீங்கள் செயல்படுவதற்கு உங்களை உந்தித் தள்ளும் ஒரு சக்தி தேவை இல்லை”என்பார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் ஒவ்வொரு நாளும் முதலமைச்சர் நிறைவேற்றும் திட்டங்கள் அனைத்தும் மிக இயல்பாக அவர் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் என்பது புரிகிறது.

அதனால்தான் முதலமைச்சர் ஸ்டாலினுக்கு ஆதரவு பெருகிக் கொண்டு இருக்கிறது. கடந்த காலங்களில் திரு. ஸ்டாலின் அவர்களை ஆதரிக்காதவர்கள் கூட இன்று அவரை ஆதரிக்கிறார்கள். அவர்களுக்கு ஸ்டாலின் முன்வைக்கும் அரசியல் கொள்கை அளவில் வேறு சில அரசுகள் செயல்படுத்தும் அரசியலை விட உயர்ந்தது என்பது தெரியாமல் இருக்கலாம். ஆனால், அவர்களுக்கு மக்களுக்குள் மோதல் ஏற்படுவதையும் வெறுப்பு வளர்வதையும் திரு. ஸ்டாலின் அவர்கள் விரும்பவில்லை என்ற புரிதல் இருக்கிறது.

மதவாத அரசியலில் இருக்கும் வன்முறை, சமூகநீதி அரசியலில் கிடையவே கிடையாது. சமூகநீதி அரசியலில் வெறுப்புக்கு இடமில்லை. வெறுப்புதான் தீண்டாமையின் உச்சம்! வெறுப்புதான் சமூகத்தைக் குறுகிய வட்டத்துக்குள் முடக்குகிறது. சாதி, மதம், இனம் போன்றவற்றால் உருவாக்கப்படும் வெறுப்பு ஒருநாளும் வளர்ச்சிக்கு உதவாது. இதையெல்லாம்



செய்பவர்கள் தங்கள் முகமூடியாக வளர்ச்சி குறித்துப் பேசினால் மக்கள் ஏமாறாமல் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த வெறுப்புக்கு மாற்றாகத்தான் சமூகநீதியும் சமத்துவமும் இருக்கின்றன. அனைத்து மக்களின் மீதான அன்பே, இவற்றிற்கான அடிப்படை உணர்வு. மனிதநேயமே இந்த அரசியலின் அடித்தளம். இந்த அடிப்படைகள் எதுவுமே தெரியாதவர்கள் தான் தமிழ்நாட்டில் பிரிவினைவாதம், சாதி வெறுப்பு எல்லாவற்றையும் தி.மு.க. பரப்பிக்கொண்டிருப்பதாகக் கதை கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் நிர்வாகத்திலும் தங்கள் வாய்ப்பு பறிபோவதாக உணர்பவர்கள் தான் காழ்ப்புணர்வில் சமூக நீதிக்கு எதிராக இப்படிப் பேசுகிறார்கள்! ஒரு குறிப்பிட்ட சாதியினர்க்கு எதிராக தி.மு.க. அரசு செயல்படுகிறது என்று ஒரு செய்தியை பரப்ப முயல்கிறார்கள். ஆனால், அதில் எள்முனை அளவு கூட உண்மையில்லை! உண்மை என்னவென்றால், உத்தரப் பிரதேச மாநிலத்தைவிட, இங்கு அந்த சாதியினர் பாதுகாப்பாகவும் வசதி வாய்ப்புகளுடனும் வாழ்ந்து வருகிறார்கள்!

சமூகநீதி என்னும் கோட்பாடு ஒரு சமூகத்தில் வாழக்கூடிய அனைத்து மக்களும் அரசால் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. நாட்டின் வளங்களும் வாய்ப்புகளும் அனைவருக்கும் சமமாக பங்கிடப்பட வேண்டும் என்பதையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது. கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, குடியிருப்பு வசதி, கண்ணியமான வாழ்நிலை ஆகியவற்றை அனைத்து மக்களும் சாதி மத வேறுபாடு இல்லாமல் பெற வேண்டும் என்பதை லட்சியமாக முன்னிறுத்துகிறது. எந்தப் பகுதியையும் திரை போட்டு மூடவோ, சுவர் கட்டி மறைக்கவோ அவசியம் இல்லாத பகுதிகளாக மக்கள் வாழ்விடங்களை சமூகநீதி உருவாக்குகிறது.

சமூகநீதிக் கருத்தியலை இன்னும் விளக்கிக் கொண்டே போகலாம். ஆனால் தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளைப் புரிந்துகொள்வதற்கு இந்த அளவு விளக்கங்கள் உதவி செய்யும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு இந்த இரண்டாண்டுகளில் என்ன என்ன சமூகநீதித் திட்டங்களை செயல்படுத்தி இருக்கிறது என்று பார்க்கலாம். எல்லா துறைகளிலும் நிறைவேற்றப்படும் திட்டங்கள் அனைத்திற்கும் அடித்தளமாக இருப்பது அரசின் சமூகநீதிப் பார்வைதான் என்பது வேறு விஷயம்!

பெரும் பண்ணையார் ஒருவரிடம் பணிபுரியும் கூலி விவசாயியை விட, ஒரு முதலாளியிடம் வேலை



தினத்தந்தி
முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தேசிய அரசியலுக்கு வரவேண்டும்
பரூக் அப்துல்லா விருப்பம்

செய்யும் ஒரு தொழிலாளியை விட, ஓர் அலுவலகத்தில் அதிகாரியிடம் அடிபணிந்து நடக்கும் அலுவலக ஊழியரை விட ஒரு குடும்பத்தில் ஆணுக்குப் பெண் அடங்கி நடக்கிறார். மிகப் பெரும்பாலான குடும்பங்களில் இதுதான் பெண்களின் நிலை.

இந்த இறுக்கமான நிலையில் இருந்து பெண்களை விடுவிப்பதற்கு பல திட்டங்களை முதலமைச்சர் ஸ்டாலின் செயல்படுத்தியிருக்கிறார். முதலமைச்சராக ஸ்டாலின் பதவியேற்ற அன்றே பெண்களும் திருநங்கைகளும் கட்டணம் இல்லாமல் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யலாம் என்ற திட்டத்துக்கு அவர் கையொப்பமிட்டார்.

ஆறாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து உயர் கல்வி கற்பதற்காகக் கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவிகளுக்கு மாதம் ரூபாய் 1,000 அரசு கொடுக்கிறது. மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டம் என்ற திட்டத்தின் மூலம் மாணவிகளின் உயர்கல்விக்கான கதவு திறக்கப்பட்டிருக்கிறது.

அதிகாலை எழுந்ததில் இருந்து இரவு உறங்கச் செல்லும்வரை குடும்பம் பராமரிக்கப்படுவதற்குத் தேவையான அனைத்துப் பணிகளையும் செய்யும் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூபாய் 1,000 கொடுக்கும் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் வரும் செப்டம்பர் 15 முதல் செயல்படத் தொடங்குகிறது.



THE NEW INDIAN EXPRESS

NATION ROLLS OUT RED CARPET FOR ITS DRAVIDIAN SON

Former chief ministers of Jammu and Kashmir & UP, who came down to Chennai to celebrate Stalin 's 70th birthday, urge the TN CM to come to national arena

21 months in power: A tale of success

EXPRESS NEWS SERVICE @Chennai

ON August 6, 2021, at the iconic Hajeti Hall in Chennai, where Mutthuvel Karunanidhi's body was placed in a glass casket draped in the national flag, amid the slogan shouting. His son, MK Stalin, broke down when the news trickled in about the Madras High Court's move to allow his father's burial at Marina Beach, behind Anna Samadhi. A Raja hugged him first. As the crowd cried in relief, Stalin's elegy with a humble request wrapped up his personal eulogy: "At least now, can I go and see Appa, my leader?"

Nearly five years on, the urgency in him has walked a long distance, leaving his father's shadow far behind. Over the last few years, he made two things abundantly clear. One, he has the ability to design and deliver governance schemes that would benefit every citizen irrespective of caste, creed and religion. Two, he can lead a great political opposition unity to dislodge BJP. He has carved a niche for himself in the otherwise chaotic and star-studded national politics.

Stalin's journey to the top has been one of hard work, dedication, and perseverance. From a young age, he was involved in political activities, and in 1968, he started a youth forum for the DMK in Gopalapuram. Over the years, he climbed up the ranks, taking on various positions in the party and government, including mayor of Chennai Corporation, minister, and deputy chief minister.

Having patiently worked in various positions in the party and government over the past five decades, he has risen to his current stature. When he took over the party leadership after his father's demise in August 2018, the DMK had just two state assembly elections and had been out of power for seven years. However, since the 2019 Lok Sabha poll victory, Stalin has delivered two more electoral victories in the state assembly polls and local body polls. During his 21 months as chief minister, he initiated several welfare schemes that benefited various sections of society. While the opposition parties point out that the DMK government failed to implement its poll promises, such as the Rs 1,000 monthly financial assistance to every ration cardholder, the government has implemented many schemes that reached the masses.

Those include free bus rides for women, an exclusive budget for agriculture, Makkalai Thedi Maruthuvam (healthcare at the doorstep), loan waiver for 13.30 lakh families who have availed jewel loans up to five sovereigns, and free power connection to 1.30 lakh farmers.

Despite facing challenges such as the Corona epidemic, financial constraints, and penalising central funds, the Stalin government has achieved several milestones during its first year. He has taken several initiatives to improve the state's education system, protect the environment and forest wealth, and maintain good governance.

However, his government has faced criticism with regards to law and order and instances of alleged intelligence failure. The Kallakurichi riot and Coimbatore blast are some episodes that his political opponents point to as signs of poor governance. On the political front, he has been leading the Secular Progressive Alliance and managed to keep the diverse set of allies intact for five years. At the national level, DMK has become the most solid voice on issues like reservation and federalism. Many leaders have spoken of Stalin's potential to grow beyond state politics and wider the national arena. Will he do it?

UNIQUE STYLE

Stalin's style of functioning has been unique. Key MDA governments in many states, including the least of the central agencies, but DMK has managed to steer itself from such harassment, while also projecting itself as an anti-BJP force. One of the few areas where the Stalin-led government is facing a challenge is the pendency of bills at the Raj Bhavan, while facing cordial relations with the union government on the governance side. Stalin has set a precedent on how a regional party can put up a fight in protecting its rights.

பல்வேறு பாடத்திட்டங்கள் நடைமுறையில் இருக்கக்கூடிய ஒரு நாட்டில் ஒரு பாடத்திட்டத்தின் அடிப்படையில் பொது நுழைவுத் தேர்வு என்பது சமூக நீதிக்கு எதிரானது. இந்த அடிப்படையில் மருத்துவ மாணவர்களுக்கான நீட் நுழைவுத்தேர்வில் இருந்து தமிழ்நாட்டு மாணவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்ற மசோதாவை தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்திருக்கிறது. அவர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி இருக்கிறார்!

பள்ளிக் கல்வித்துறையில் அரசுப் பள்ளிகளின் மேம்பாடு, பெருந்தொற்று காலத்தில் ஏற்பட்ட கற்றல் இடைவெளியை இட்டு நிரப்புவதற்கான திட்டம் உள்ளிட்ட ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் மிகவும் முக்கியமானதாக, அரசுப் பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தைச் சொல்லலாம். இதன் பலனை எதிர்காலத்தில் நம் சமூகம் நன்றாக உணரும்.

கோவில் என்றால் கோபுரம் காட்டும் பண்பாட்டில் இருந்து வெகுதூரம் பயணப்பட்டிருக்கும் தமிழ்நாட்டில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்பதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டு இருக்கின்றன. ஆதிதிராவிடர் ஆணையம், சமூகநீதி ஆணையம், சமூகநீதி கண்காணிப்புக் குழு என்று முக்கியமான தேவைகளை பார்த்துப் பார்த்து திரு.ஸ்டாலின் அவர்கள் அரசு செய்து வருகிறது.

தமிழ்நாடு அரசு செயல்படுத்திய சமூக நீதித் திட்டங்கள் மட்டுமல்ல, சமூக நீதிக்காக அகில இந்திய அளவில் அரசியல் கட்சிகளை ஒருங்கிணைக்கவும் முதலமைச்சர் ஸ்டாலின் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறார். மருத்துவக்கல்லூரி அனுமதியில் அகில இந்திய ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடு தேவையான சட்ட நடவடிக்கைகள் மூலம் பெறப்பட்டது.

சாதிவாரி கணக்கெடுப்பு, தனியார் துறையில் இட ஒதுக்கீடு, பொருளாதார அடிப்படையில் ஒதுக்கீட்டுக்குத் தொடர்ச்சியான எதிர்ப்பு, கர்நாடக மாநிலத்தில் இஸ்லாமியர்களுக்கான இட ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு என்று முதலமைச்சர் ஸ்டாலினின் செயல்பாடு இந்திய மக்களை திரும்பிப் பார்க்க வைக்கிறது. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பார்கள். அதுபோல், தமிழ்நாட்டு மக்களுக்கு திராவிட மாடல் அரசு செய்த பல்வேறு வளர்ச்சிப் பணிகள் விரைவில் இந்திய மக்களுக்கும் கிடைக்க வேண்டும். இந்திய மக்களின் முன்மாதிரி மாநிலமான தமிழ்நாட்டின் இன்றைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இரண்டு ஆண்டுகள் நிறைவு செய்கிறார். அவர் 'எண்ணிய முடிதல் வேண்டும்'!

★★★


தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்
7
ஏற்றமிகு
ஏழு திட்டங்கள்
புதிய திட்டங்கள் தொடக்க விழா
பணி ஆணைகள் – அரசு நலத்திட்ட உதவிகள் வழங்
ரூ.1,136 கோடியில் 44 பல்வேறு மருத்துவமனை கட்ட
அடிக்கல் நாட்டு விழா
நாட்டுபவர்
மு.க.டாலின்
மாண்
நாடு முதல
ர்

அடுத்த பத்தாண்டு வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட இரண்டாண்டுகள்!



சுரேஷ் சம்பந்தம்,
தலைமைச் செயல் அதிகாரி, Kissflow,
ஒருங்கிணைப்பாளர், கனவு தமிழ்நாடு

இந்தியாவின் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாடு கடந்த இரண்டு வருடங்களில் எண்ணற்ற முதலீடுகளையும் ஒப்பற்ற தொழிற்வளர்ச்சியினையும் பெற்று உயர்ந்து நிற்கின்றது. இத்தகைய அபார வளர்ச்சிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். சமூக மாற்றத்தினை மையமாக கொண்டு புதுமைப்பெண் போன்ற பல சிறப்பான திட்டங்களை அறிமுகப்படுத்தி அதனை செயல்படுத்தியும் உள்ளார். இனி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது தலைமையில் தமிழ்நாட்டில் நடந்த தொழில்வளர்ச்சியினை அதனைப்பற்றி காண்போம்.

உலகத்தர நிபுணர்கள் குழு

மாநிலத்தின் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற மறுகணமே நிதித்துறையில் முன்னனுபவம் மற்றும் திறமை வாய்ந்த பழனிவேல் தியாகராஜன் அவர்களை நிதியமைச்சராக நியமித்தது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு. அடுத்ததாக, ஆர்.பி.ஐ முன்னாள் கவர்னர் ரகுராம் ராஜன், பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற்ற எஸ்தர் டஃப்லோ போன்ற உலகத்தரம் வாய்ந்த நிபுணர்களை கொண்டு பொருளாதார ஆலோசனைக் குழு அமைத்தது. மேலும், ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள் தலைமையில் மாநில திட்டக்குழுவில் துறை சார்ந்த அனுபவம் கொண்ட திறமையான நபர்களை நியமித்தது. இவ்வாறான ஆரம்பகால செயல்கள் மாநிலத்தின் வளர்ச்சியை மட்டுமே கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுகிறார் என்பதை தெள்ளத்தெளிவாக வெளிப்படுத்தியது.

ஒரு டிரில்லியன் டாலர் கனவு

இந்தியாவில் எந்தவொரு மாநிலமும் வைத்திருக்காத ஓர் உறுதியான குறிக்கோளை தமிழ்நாடு மட்டும் முன்னெடுத்து தனித்து நிற்கின்றது. அது தான் "ஒரு டிரில்லியன் டாலர் கனவு". இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியே 3.40 டிரில்லியன் டாலராக இருக்கும் நிலையில், தற்போது 341 பில்லியன் டாலராக இருக்கும் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 2030ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலராக மாற்ற வேண்டுமென்ற உயர்ந்த நோக்கமே அது. இந்த இலக்கை அடைய ஒவ்வொரு வருடமும் 10 சதவீதத்துக்கும் மேல் பொருளாதார வளர்ச்சி தேவை என்னும் நிலையில் கடந்த இரண்டு வருடங்களாக



அதில் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு தொடர்ந்து வெற்றியடைந்தும் வருகிறது.

கல்வி, மருத்துவம் போன்ற துறைகளில் வளர்ச்சியை கண்ட தமிழ்நாட்டிற்கு அடுத்து பெரும் சவாலாக அமைய இருப்பது வேலைவாய்ப்பின்மையே. இந்த பிரச்சினையை களைய ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்பது பெரும் உதவியாக அமையும். இந்த கனவை முன்னெடுத்து செல்லவும், மாநிலத்தில் தொழிற்வளர்ச்சியை ஏற்படுத்தவும் Startup TN, Umagine, Guidance Tamil Nadu போன்ற பல முன்னெடுப்புகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். இதனை வெறுமனே ஓர் கொள்கையாக மட்டும் பார்க்காமல் இதன்மூலம் தமிழ்நாடு அடையும் நன்மைகளை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகள் உண்மையில் பாராட்டுக்குரியதாகும்.

அனைத்து மாவட்டங்களுக்கும் வளர்ச்சி

கடந்த இரண்டு வருடங்களாக பொருளாதாரம் மற்றும் தொழிற்வளர்ச்சியில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக தமிழ்நாடு அரசு திகழ்ந்து வருகிறது. பெருமளவில் முதலீடுகளை ஈர்த்து, இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிடவும், 2030 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் டாலராக மாற்ற பல விதமான முயற்சிகளையும், திட்டங்களையும் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு அரசு, அதனை சென்னை போன்ற குறிப்பிட்ட பகுதியில் மட்டும் செயல்படுத்த நினைக்காமல், தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலும் செயல்படுத்த நினைப்பதே இந்த அரசின் சிறப்பம்சமாகும்.

பெருமளவில் வளர்ச்சியை காணாத பெரம்பலூர் போன்ற மாவட்டங்களில் வளர்ச்சியை வேகப்படுத்தவும் தொழில்முனைவை ஊக்கப்படுத்தவும் சிட்கோ, சிப்காட் போன்ற தொழிற்பூங்காக்களை அமைத்தது, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, ஈரோடு, சேலம், ஓசூர் போன்ற இரண்டாம் அடுக்கு மற்றும் மூன்றாம் அடுக்கு நகரங்களில் தகவல்தொழில்நுட்பம் மற்றும் தொழில்துறையை மேம்படுத்த டைடல் பார்க், மெட்ரோ, ஜவுளிப்பூங்கா போன்ற திட்டங்களை பட்ஜெட்டில் அறிவித்துள்ளது முக்கியமானதாகும். இதன்மூலம்



தமிழ்நாட்டின் பிற பகுதிகளும் வளர்ச்சியடைந்து 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்னும் இலக்கை அடைய பெரும் உதவியாக அமையும்.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி

தமிழ்நாடு 2030ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை அடைய பெண்களின் பங்கு மிக முக்கியமானது. இதனை உணர்ந்த தமிழ்நாடு அரசு 2023–24 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் பெண்களின் தொழில்முனைவு திறனை ஊக்கப்படுத்த பிரத்யேக 'ஸ்டார்ட் அப் மிஷன்' நிறுவும் திட்டத்தினை அறிவித்தது. இத்திட்டத்தின் மூலமாக பெண் தொழில்முனைவோருக்கு கணிசமான ஆதரவையும் வசதிகளையும் வழங்குவதை தமிழ்நாடு அரசு நோக்கமாக கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மாநிலத்தில் ஸ்டார்ட் அப் சூழலுக்கு குறிப்பிடத்தக்க வளர்ச்சி கிடைக்கும். தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கையானது பெண்களின் தொழில்முனைவை மேம்படுத்துவது மட்டுமின்றி பாலின சமத்துவத்தை அடைவதற்கும் பெருந்துணையாக இருக்கும்.

இந்தியாவிலேயே அதிக தலித் தொழில்முனைவோரைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு இருக்கும் நிலையில் கூட, மாநிலத்தில் பிற வகுப்பு மக்களை விட தலித் தொழில்முனைவோரின் எண்ணிக்கை மிகக்குறைவாக இருக்கிறது. இதை கருத்தில் கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, அதன் எண்ணிக்கையை அதிகரிக்க பல திட்டங்களை முன்வைத்தும் செயல்படுத்தியும் வருகிறது. அதில் குறிப்பிடத்தக்க ஒன்று "அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்". இதன்மூலம் மாநிலத்தில் சமத்துவமான ஓர் தொழில்துறையை உருவாக்கும் முயற்சிகளை செய்து வருகிறது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு.

தொலைநோக்கு சிந்தனை

மாநிலத்தில் வலுவாக உள்ள ஒரு சில குறிப்பிட்ட துறைகளில் மட்டும் கவனம் செலுத்திவிட்டு நின்றுவிடாமல் எதிர்காலத்தில் இருக்கும் வாய்ப்புகளையும், வளங்களையும், அதன்மூலம் கிடைக்கும் வேலைவாய்ப்புகளையும் கருத்தில்கொண்டு, புதிது புதிதாய் உதிக்கும் துறைகளில் அதிக கவனம் செலுத்தி தொலைநோக்கு சிந்தனையுடன் செயல்பட்டு வருகிறது தமிழ்நாடு அரசு. அதிலும் முக்கியமாக மின்சார வாகன உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க ஆற்றலை பயன்படுத்தி மின்சாரம் தயாரித்தல், மருந்து மற்றும் ரசாயன உற்பத்தி, ஃபின்டெக், லெதர் அல்லாத காலணிகளை தயாரித்தல் போன்ற துறைகளில் அதிக கவனம் செலுத்தி பல்லாயிரம் கோடி மதிப்பிலான முதலீடுகளையும் பெற்று மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து வருகிறது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு.

மாநில சுயாட்சியின் அடையாளம்

மாநிலத்தின் வளர்ச்சிக்கு ஒன்றிய அரசின் திட்டங்களையும், நிதியையும் மட்டுமே சார்ந்து நில்லாமல் தொழில்வளர்ச்சியை மேம்படுத்த உலக முதலீட்டாளர்கள் மாநாடு, வெளிநாட்டு பயணம், நூற்றுக்கணக்கான நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், பல்லாயிரம் கோடி மதிப்பிலான முதலீடுகள், புதிய தொழிற்பூங்காக்கள் என மாநிலத்தின் எதிர்கால வளர்ச்சியினையும், வேலைவாய்ப்பின்மை இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டினை உருவாக்கும் முயற்சியிலும் ஓய்வறியாமல் செயல்பட்டு வருகிறது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு.

★★★



முன்னேற்றங்களின் முதல்வர்



சூர்யா சேவியர்

ஒரு ஆட்சியின் செயல்பாட்டை மதிப்பீடு செய்வதற்கான அளவுகோல் எது? அரசமைப்புச் சட்டம் உருவாக்கிக் கொடுத்த வழிகாட்டுதலின்படி, அன்றைய சமூகத்தை முன்னோக்கி நகர்த்திச் செல்லும் முயற்சி தான். மனித சமூகத்தை முன்னோக்கி நகர்த்துபவர்களுக்கும், பின்னோக்கி இழுப்பவர்களுக்குமான போராட்டமே உலகமெங்கும் அரசியல் வரலாறாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வரலாறு மூன்று முக்கியமான தளங்களில் செயல்படுகிறது. 1.அரசியல் 2.சமூகம் 3.பொருளாதாரம். இம்மூன்று தளங்களிலும் ஆட்சியின் செயல்பாட்டை மதிப்பீடு செய்ய வேண்டும். இம்மதிப்பீட்டிற்கு அடிப்படையாக, முந்தைய தமிழ்நாடு மற்றும் ஒன்றிய அரசுகளின் செயல்பாடுகளால் மக்களுக்கு ஏற்பட்ட சாதகபாதக அம்சங்களைக் கணக்கில் கொள்வது அடிப்படையானது. இதிலிருந்து தி.மு.க. அரசாங்கத்தையும், அதை தலைமையேற்று வழிநடத்தும் முதலமைச்சரின் முன்னெடுப்புகளையும் மதிப்பிடலாம்.

சமூகத்தளத்திலும், பொருளாதாரத்தளத்திலும் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளுக்கு அடிப்படையே அரசியல் தளம் குறித்த தெளிவான பார்வை தான். 1967க்கு பிந்தைய 55 ஆண்டுகளில் இல்லாத வகையில் 2021 தமிழ்நாடு தேர்தல் களமானது அரசியல் ரீதியாக முற்றிலும் மாறியிருந்தது. வலதுசாரி பிற்போக்குவாத சிந்தனையுடன் செயல்பட்ட ஒன்றிய ஆட்சியாளர்களின் அழுத்தத்திற்கு, மாநில நலன்களை முற்றிலும் காவு கொடுக்கும் வகையில் முந்தைய அரசாங்கத்தின் செயல்பாடுகள் அமைந்திருந்தது. இவ்விரண்டு ஆட்சியாளர்களின் செயல்பாட்டால் தமிழ்நாடு மக்கள் மத்தியில் கோப ஆவேசம் பலவகைகளில் எழுந்தது. எனவே தான் "தமிழகம் மீட்போம்" என்ற முழக்கத்தை இன்றைய முதல்வர் உயர்த்திப் பிடித்தார். அவரது முழக்கம் தமிழ்நாடு மக்களின் முழக்கமாகவும் மாறியது.

மாநில சுயாட்சி, பகுத்தறிவு, சமூகநீதி அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, பெண் விடுதலை உள்ளிட்டப் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதே "தமிழகம் மீட்போம்" என்ற ஒற்றை வரிக்குள் அடங்கியிருந்தது. திராவிட இயக்கமும், அதன் அனைத்துப் பரிமாணங்களையும், முழுமையான அரசியல் வடிவம் கொடுக்கும் இயக்கமாக தி.மு.க. செயல்பட்டு வந்துள்ளதே தமிழ்நாடு அரசியல் வரலாறு. தமிழ் சமூகத்தின் நியாயமான சமூகத் தேவையிலிருந்து முகிழ்த்த இயக்கம் தி.மு.க.வும், அதன் தலைமையில் உருவான ஆட்சியும்.



தமிழர்கள் தன்மானம் இழந்து, மூட நம்பிக்கைகள், ஜாதி இழிவுகள், ஏற்றத்தாழ்வுள்ள சமூக சூழ்நிலையில் வாழ்ந்த போது, அவர்களை தன்மானவுள்ளவர்களாக மாற்றியப் பெருமை முழுக்க முழுக்க திராவிட இயக்கத்தையே சாரும். இத்தகைய கொள்கை தொடர்ச்சியின் வெளிப்பாட்டைத்தான் கடந்த 2021 முதல் 2023 வரையிலான மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சி செயல்பட்டுள்ளது.

ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகள் என்ன? உணவு, உடை, உறைவிடம், கல்வி, மருத்துவம், சுகாதாரம், வேலை வாய்ப்பு, சமூகப்பாதுகாப்பு ஆகியவை. இவற்றை மையமாகக் கொண்டு, கடந்த இரண்டு ஆண்டு ஆட்சியும், தொடரும் முயற்சிகளும் அமைந்துள்ளதை இந்தியாவின் பிற மாநிலங்கள் பாராட்டுவதும், தவிர்க்கவே முடியாமல் இந்திய ஒன்றிய ஆட்சியாளர்களும் கூட பாராட்டுவதும் இக்காலத்தில் நடந்துள்ளது. அதே நேரத்தில் மாநில நலன் என்பது இந்திய நலனோடு இணைந்த ஒன்று என்ற புரிதலை உருவாக்குவதற்கான போராட்டத்தையும், அதற்கு எதிராக ஆளுநர் போன்றவர்களால் செய்யப்படும் அரசியலுக்கு எதிராக மக்கள் மன்றத்தை தயார்படுத்துவதுமாக தமிழ்நாடு அரசியல் களம் இருந்துள்ளது.

தமிழ்நாடு அமைதிப்பூங்கா என்பது அனைவரின் மனங்களிலும் பதிந்த ஒரு சொல்லாடல். அமைதி எப்படி



உருவானது? எப்போது அமைதி ஏற்பட்டது? யாரால் ஏற்படுத்தப்பட்டது? அமைதியில்லாமல் இருந்தால் தானே அமைதி ஏற்பட்டிருக்கும்? அமைதி இல்லாமல் செய்தது யார்? கேள்விகளின் களமாகவும் அரசியல் தளம் தொடர்கிறது. அமைதியின் பொருளானது, அரசியல் அமைதி, சமூக அமைதி, பொருளியல் அமைதி தான். இம்மூன்றில் எந்தவொன்றும் நேர்கோட்டில் பயணிக்காவிட்டால் அமைதி கெடும். அத்தகைய நேர்வழியில் பயணம் தொடர்வதாலேயே அமைதிப்பூங்காவாக இருக்கிறது. அமைதிப்பூங்கா என்ற சொல்லைக் கூட சட்டசபையில் சொல்வதற்கு தவிர்ப்பவர்களால் அமைதி கெடுகிறது. இதை தமிழ்நாடு மக்கள் உணர்ந்தே இருக்கிறார்கள். அதை

> **ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகள் என்ன? உணவு, உடை, உறைவிடம்,கல்வி, மருத்துவம், சுகாதாரம், வேலை வாய்ப்பு, சமூகப்பாதுகாப்பு ஆகியவை. இவற்றை மையமாகக் கொண்டு, கடந்த இரண்டு ஆண்டு ஆட்சியும், தொடரும் முயற்சிகளும் அமைந்துள்ளதை இந்தியாவின் பிற மாநிலங்கள் பாராட்டுவதும், தவிர்க்கவே முடியாமல் இந்திய ஒன்றிய ஆட்சியாளர்களும் கூட பாராட்டுவதும் இக்காலத்தில் நடந்துள்ளது.**

உணர்த்தும் முதல் கடமையை மாண்புமிகு முதல்வர் முன்னின்று செய்து வருகிறார்

ஈராயிரம் ஆண்டுகளாக நீடிக்கும் சமூகக் கொடுமைகளுக்கு எதிராக உருவானதே திராவிட இயக்கம். சமூகக் கொடுமைகளுக்கு எதிராகப் போராடிய தலைவர்களுக்கு உரிய மரியாதை அளிக்கும் வகையிலான பல செயலாக்கங்கள் நடந்துள்ளது. வள்ளலார், அயோத்திதாசப் பண்டிதர், நாராயணகுரு, தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் உள்ளிட்ட மகத்தான மனிதர்கள் மக்களின் மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். திராவிட இயக்கக் கருத்தியலில் பயணிக்கும் முதல்வரின் சமூக நலத்திட்டங்களால் தமிழ்நாடும், தமிழர்களும் பெரும் பயனடைந்துள்ளனர். இந்நலத்திட்டங்களினால் இந்தியாவிலேயே இன்று தமிழ்நாடு அனைத்து மனித வளக் குறியீடுகளிலும் முன்னோடி மாநிலமாக இருக்கின்றது.

தமிழ்நாடு சமூக நலத்திட்டங்களின் தொடக்கத்தை மூன்று பகுதிகளாக பிரிக்கலாம். முதலாவது பகுதியில் நீதிக்கட்சியும், இரண்டாவது பகுதியில் பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியும், மூன்றாவது பகுதியில் தற்போதைய ஆட்சியும் தொடர்கின்றன.

ஒடுக்கப்பட்ட, விளிம்புநிலை மக்களின் உரிமைக்காகவும், சமூகத்தில் பின்தங்கிய மக்களின் முன்னேற்றத்திற்காகவும், சமூக நலத்திட்டங்களை செயல்படுத்துவதிலும், மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதிலும் இந்த ஆட்சியானது இந்திய அளவில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை கொண்டு வந்திருக்கின்றது. கல்வி, சுகாதாரம், சமூக நலன் போன்ற துறைகளில் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும் அளவிற்கு வளர்ச்சிக் குறியீடுகளில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. கடந்த இரண்டாண்டு கால ஆட்சியில், முதல்வரின்











முழுவேகச் செயல்பாட்டால் சமூகநலத்திட்டங்களின் அணிவகுப்பாக அனுதினமும் கடந்தது.

சிறுபான்மை மக்கள் பாதுகாப்பாக வாழ்வதிலும், சாதி மோதல்கள் நிகழாமல் கண்காணிப்பதிலும், சாதிக் கொடுமைகள் ஒரு சில இடங்களில் ஏற்பட்ட போது, அதை சட்ட ஒழுங்குப் பிரச்சினையாக அணுகாமல், சமூகப் பிரச்சினையாக அணுகியதும் இக்காலத்தில் நடந்தது. வரலாற்றில் ஒடுக்கப்பட்ட, விளிம்புநிலை மக்கள் அரசுப் பணிகளிலும், ஆட்சி அதிகாரத்திலும் பங்கு பெறும் அளவிற்கு சமூக கட்டமைப்பை உருவாக்கவும்,

பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட, விளிம்புநிலை மக்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் அவர்களின் முன்னேற்றம், பெண் சமத்துவம், கல்வி, வேலைவாய்ப்புகளில் அனைவருக்கும் சம வாய்ப்பு என்பனவற்றை ஏற்படுத்தவும், தமிழ்நாட்டை இந்தியாவின் மற்ற மாநிலங்களும் முன் மாதிரியாக எடுத்துக் கொள்ளும் அளவிற்கு முன்னேறிய மாநிலமாக மாற்றிய கலைஞர் காலச் செயல்பாடுகள் முழு வேகத்துடன் தொடர்கிறது.

2011–2021 ஆகிய பத்தாண்டுகளில் தமிழ்நாடு பொருளாதாரம் மற்றும் கடன் சுமை குறித்த முழு விபரங்கள் வெள்ளை அறிக்கையாக வெளியிடப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில் கடன் சுமை குறைக்கப்பட்டு, பொருளாதார உறுதித்தன்மை உருவாக்கப்பட்டுள்ளது. தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்பு, உள் கட்டமைப்புகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

சென்னை, கோவை, தூத்துக்குடி மற்றும் அமீரகத்தில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டு இதுவரை 200க்கும் மேற்பட்ட ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளது.

சென்னையில் ஏற்றுமதியாளர் மாநாடு

தமிழ்நாடு நிதி நுட்பக் கொள்கை, தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை, ஒற்றைச் சாளர இணையம் தமிழ்நாடு உயர் அறிவியல் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை, தமிழ்நாடு விண்வெளி பாதுகாப்புத் தொழில் கொள்கை, பசுமை ஹைட்ரஜன் மின்வாகனங்களுக்கான கொள்கைகள் உருவாக்கப்பட்டது. சிறு – குறு நிறுவனங்களுக்கு ரூ.360 கோடி மூலதன மானியம், துணிநூல் துறைக்கு தனியாக ஆணையரகமும் உருவாக்கப்பட்டுள்ளது. மதுரையில் டைடல் பார்க் மற்றும் ஏழு இடங்களில் மினி டைடல் பார்க் உருவாக்கும் பணிகளும் நடைபெறுகிறது.

தொழில் வளர்ச்சிக்கு அடிப்படை ஆதாரங்களுள் ஒன்றான மின்துறையில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு, மின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 23,780 புதிய மின் விநியோக மின் மாற்றிகள். காற்றாலை மின்உற்பத்தி, சூரியஒளி மின்உற்பத்தி, மரபுசாரா எரிசக்தி என மின் தேவையைப் பூர்த்தி செய்து இந்தியாவில் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை, பாசனப் பரப்பு விகிதம் உயர்த்துதல், குறுவை சாகுபடிக்கு ரூ.60 கோடியில் இடுபொருள்கள் மானியம், பனை பாதுகாப்புத் திட்டம், சிறு தானியங்கள் இயக்கம், ஜெயராமன் மரபு சார் நெல்ரகம் பாதுகாப்பு இயக்கம் உள்ளிட்ட திட்டங்களோடு, ஒரு இலட்சம்

உழவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டமும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் விவசாயம் சார்ந்த பணிகளின் மற்றொரு பிரிவு உள்கட்டமைப்பை மேம்படுத்துவது. சென்னை துறைமுகம் – மதுரவாயல் உயர்மட்ட பாலம், ரூ.1000 கோடியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்.

புதிய கூட்டுக் குடிநீர் திட்டங்கள், சிங்காரச் சென்னை 2.0, சென்னை பெருநகர எல்லை ஐந்து மடங்காக விரிவுபடுத்துதல், சென்னை பெருநகரப் போக்குவரத்து கழகத்தை மேம்படுத்துதல், சென்னை மாடம்பாக்கத்தில் புறநகர் வளர்ச்சிப் பணிகள், மாமல்லபுரத்தில் துணை நகரம், ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டங்கள், 20 ஆயிரம் கிலோமீட்டர்க்கு நகர்ப்புற சாலைகள் அமைக்கும் பணிகள் தொடக்கம்.

புதிய தரைப்பாலங்கள், ரூ.142 கோடி மதிப்பில் புறவழிச்சாலைகள், ரூ.1,133 கோடியில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு பணிகளும் இரண்டு ஆண்டுகளில் முழு வேகத்தில் முடுக்கிவிடப்படுள்ளது.

18 இலட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்களின் அகவிலைப்படி அதிகரிப்பு. கூட்டுறவு வங்கிகளில் 5 பவுனுக்கு கீழே நகைக்கடன் பெற்ற 13.50 இலட்சம் குடும்பங்களுக்கு கடன் ரத்து, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான 2 ஆயிரம் கோடி மதிப்பிலான கடன்கள் ரத்து, மேலும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.15 ஆயிரம் கோடி கடன். 42 ஆயிரம் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைப்பு.

மாணவர்களுக்கு காலைச்சிற்றுண்டி, 1.50 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள், இல்லம் தேடிக் கல்வி திட்டம், நான் முதல்வன் திட்டம்,

பேராசிரியர் அன்பழகனார் பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டம். பெருந்தலைவர் காமராசர் கல்லூரிகள் மேம்பாட்டுத் திட்டம், எழுத்தாளர்களுக்கு கனவு இல்லம்.

பெரியார் பிறந்தநாள் சமூகநீதி நாள், அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் சமத்துவ நாள், வள்ளலார் பிறந்தநாள் தனிப்பெரும் கருணை நாள் என அறிவிக்கப்பட்டு உறுதி மொழி ஏற்கப்பட்டது.

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

ஆலயங்களில் தமிழில் அர்ச்சனை, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர், மாவட்டம் தோறும் புத்தகச் சந்தைகள், ரூ3000 கோடி மதிப்புள்ள கோவில் நிலங்கள் மீட்பு, புதிதாக 10 கலை அறிவியல் கல்லூரிகள், காவல் ஆணையம் அமைப்பு. வேலைவாய்ப்பு முகாம்கள், தமிழ்ப் பரப்புரைக் கழகம், இராசராசன் பிறந்தநாள் அரசு விழா, பரந்தூரில் புதிய விமான நிலையம், ஆன்லைன் ரம்மி ஒழிப்பு சட்டம், ஒரு இலட்சம் மாணவியருக்கு மாதம் தோறும் ரூ.1,000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம், நீட் தேர்வு விலக்குச் சட்டம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம்,

வழக்கறிஞர் சேமநல நிதி ரூ.10 லட்சமாக உயர்வு, பொறியியல் கல்லூரியில் 7.5 இடஒதுக்கீட்டில் சேரும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு கட்டணத்தை அரசே செலுத்துவது, நகர குடியிருப்பு வாசிகள் 1 இலட்சம் பேருக்கு குடியிருப்புகள், பத்திரிக்கையாளர் வாரியம் என அனைத்து தரப்பு மக்கள் நலனிலும் அக்கறை செலுத்தும் ஆட்சியை வழிநடத்துகிறார் முதல்வர்.

ஒரு சமூகத்தின் மொழியையும், அம்மொழியால் நீடித்து நிலைத்தப் பண்பாட்டையும் அழிக்க வேண்டுமென்றால், அங்குள்ள நூலகங்களை அழிப்பார்கள். நாலாந்தா நூலகமும், யாழ்ப்பாணம் நூலகமும், ஈராக்கின் நூலகமும் அழிக்கப்பட்ட வரலாறு உண்டு. இதிலிருந்து நூலகத்தின் தேவை எதுவென உணரலாம். அண்ணா நூற்றாண்டு நூலகம் புதுப்பிப்பு, மதுரையில் கலைஞர் நூலகம், மாவட்டங்கள் தோறும் புத்தக விழாக்கள், பாரம்பரியக் கலைகளின் விழாக்கள், காவிரி, வைகை, பொருநை, சிறுவாணி என ஆறுகளின் பெயர்களில் இலக்கிய விழாக்கள் என தமிழ்நாடு களைகட்டி நிற்கிறது.

கடந்த இரண்டாண்டு ஆட்சியின் முதல் தொடக்கம் முழுமையான தொடக்கமாக இருந்தது. அத்தொடக்கம் தொடர்ந்து தொய்வின்றி பயணிக்கிறது. கொரோனாவால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்பத்துக்கு தலா ரூ. 4,000 ஆயிரம் என்ற வகையில் 2.14 கோடி குடும்பங்களுக்கு பணம் தரப்பட்டது. மேலும், கொரோனா கால நிவாரணமாக 13 பொருட்களும் மக்களுக்கு வழங்கப்பட்டது. ஆவின் பால் விலை, லிட்டர் ஒன்றுக்கு மூன்று ரூபாய் வீதம் குறைக்கப்பட்டது.

அரசுப் பேருந்துகளில் பெண்கள் கட்டணம் இல்லாமல் பயணம் செய்வதற்கான உத்தரவால் 180 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொகுதிகள் தோறும் மக்கள் குறைகளைத் தீர்க்க "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற புதிய துறை உருவாக்கப்பட்டது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறவர்களின் கட்டணத்தை தமிழ்நாடு அரசே காப்பீட்டுத் திட்டம் மூலம் உயிர்காத்து நின்றது. இதற்கான கையெழுத்துகளைப் போட்டு தனது ஆட்சியைத் தொடங்கிய முதல்வரின் பயணம் முன்னேற்றப் பயணம். இவர் முன்னேற்றங்களின் முதல்வர்.

★★★





எளிய மனிதர்களை முன்னிறுத்தி நடைபெறும் நல்லாட்சி



ம.மதிவண்ணன்

பொது நல அரசு என்கிற கோட்பாடு இந்திய துணைக் கண்டத்திற்கு அந்நியமான ஒன்றல்ல. சொல்லப் போனால் இப்பகுதியின் மரபார்ந்த அரசின் அடையாளமே அதுதான். எடுத்துக்காட்டிற்குச் சொல்வதென்றால், அசோகருடைய அரசைக் குறித்துத் தெரிய வருவது ஒரு இலட்சிய நோக்கிலான பொதுநல அரசின் வகை மாதிரியாக அது இருந்தது என்பதுதான். அவனது பாறைக் கல்வெட்டு பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"கடவுளுக்குப் பிரியமானவனான அரசன் பிரியதர்சின் (அசோகன்) தனது பேரரசு முழுவதிலும், தனது அண்டை நாட்டுப் பகுதியான சோழ, பாண்டிய, சத்தியபுத்திர, கேரள புத்திர, தாமிரபரணி முதலிய ராஜ்யப் பகுதிகளிலும், யோன அரசன் அம்தியோகன் என்பவனது ஆட்சிப் பகுதியிலும், அவனுக்குக் கீழிருக்கும் சிற்றரசர்களின் ஆட்சிப் பகுதிகளிலும் – என எல்லா இடங்களிலும், மனிதருக்கு ஒன்று, விலங்குகளுக்கு ஒன்று என இருவிதமான மருத்துவமனைகளை நிறுவியுள்ளான். மனிதர்களின் சிகிச்சைக்கும், விலங்குகளின் சிகிச்சைக்கும் தேவைப்படுகின்ற மூலிகைகள் கிடைக்காத இடங்களில் அரசனின் உத்தரவுப்படி, அம்மூலிகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டது மட்டுமன்றி, அவை விதையூன்றி வளர்க்கப்படவும் செய்யப்பட்டுள்ளன. மனிதர்களும், விலங்குகளும் பயனுறும் விதத்தில் அரசனது உத்தரவுப்படி கிணறுகளும் தோண்டப்பட்டுள்ளன."

ஷாபஜ்கரியில் உள்ள அசோகரின் பாறைக் கல்வெட்டில் ஒரு பகுதி

Epigraphia Indica – Vol II பக் 466.

உரிமைக்குரலெழுப்பி, தனக்காக உரத்த குரலில் வாதிடும் வலிமை உள்ள மனிதர்களுக்கு மட்டுமின்றி, வாயற்ற ஜீவன்களின் நன்மைகளையும் உத்தேசித்து நடவடிக்கைகள் எடுத்தது இப்பகுதியின் பெருமைதான். அந்த அறவிழுமியம் பேணப்படுவதுதான் ஒரு நல்லாட்சியின் அடையாளமாக இருக்கும்.

ஜனநாயக அரசுகள் என்றழைக்கப்படுகிற நவீன கால அரசுகள், அழுத்த குழுக்களால் நிர்பந்திக்கப்பட்டு அதனடிப்படையில் தனது செயல்பாடுகளை அமைத்துக்கொள்வது உலகெங்கிலும் நாம் பார்க்கும் நடைமுறைதான்.



முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பதவியேற்ற நாளிலிருந்தே இப்பிரிவினர் மீது மிகுந்த அக்கறையுடன் செயலாற்றுவது போற்றுதலுக்குரியது. அந்த உயரிய நோக்கிலான அரசு பதவியேற்று இரண்டாண்டுகள் முடியப்போகும் நிலையில் இவர்களுள் ஒவ்வொரு பிரிவினருக்கும் திராவிட மாடல் அரசு செய்த நன்மைகளை அலசுவது நெடுநாள் நோக்கில் பயன்தருகிற ஒன்றாக அமையும்.

நல்லரசு என்பது இந்நடைமுறைக்கு முற்றிலும் எதிரானது. எந்நிலையிலும் குரல் எழுப்ப முடியாது. மிகச் சிறுபான்மையினரையும், ஒருங்கிணைய முடியாத வலுவற்றவர்களையும், வரலாற்றில் ஓரங்கட்டப்பட்ட விளிம்புநிலை மனிதரையும் முதன்மைப்படுத்தி, அவர்களின் நலன்களைப் பேணும் அரசே நல்லரசு எனச் சொல்லத்தக்கது.

தமிழ்ச் சமூகத்தில் விளிம்புநிலை மனிதர்கள் என்போர் யாரென்றால், மிகச் சிறிய மக்கள் தொகை உடைய, கல்வி முதலான புலங்களில் பின்தங்கிய, பொருளாதார வலுவும் அற்றவர்களே ஆவர்! 1) திருநங்கைகள், 2) இலங்கைத் தமிழ் அகதிகள், 3) மாற்றுத்திறனாளிகள், 4) புதிரை வண்ணார்கள், 5) இருளர், 6) நரிக்குறவர், 7) காட்டு நாயக்கர் போன்றோரை இத்தகைய விளம்புநிலை மக்களாக நாம் கருத முடியும்.

மேற்சொன்ன மக்கட் பிரிவினருக்குப் பெரிய எண்ணிக்கையிலான மக்கள் தொகை கிடையாது. அவர்களுள் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு வாக்குரிமையே கிடையாது. மக்கள் ஆதரவைப் பெற்று



ஆட்சிக்கு வர வேண்டிய நிலையில், இப்பிரிவினர் குறித்து கவனம் குவிப்பது உடனடிப் பலன்களைத் தராது. ஆயினும் ஒரு மக்கள் நல அரசின் பார்வை இப்பிரிவினர் மீதுதான் முதன்மையாக இருக்க வேண்டும்.

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பதவியேற்ற நாளிலிருந்தே இப்பிரிவினர் மீது மிகுந்த அக்கறையுடன் செயலாற்றுவது போற்றுதலுக்குரியது. அந்த உயரிய நோக்கிலான அரசு பதவியேற்று இரண்டாண்டுகள் முடியப்போகும் நிலையில் இவர்களுள் ஒவ்வொரு பிரிவினருக்கும் திராவிட மாடல் அரசு செய்த நன்மைகளை அலசுவது நெடுநாள் நோக்கில் பயன்தருகிற ஒன்றாக அமையும்.

திருநங்கைகள்

இவர்களே சமூகத்தின் உடனடிக் கவனம் தேவைப்படும் ஒரு பிரிவினர். ஆனால் சமூகத்தால் விரட்டி விரட்டி வேட்டையாடப்படும் ஒரு பிரிவினராக இவர்களே அமைகிறார்கள். சமூகத்தில் அதிகபட்ச புறக்கணிப்புக்கும் இழிவுக்கும் உள்ளாக்கப்படும் பிரிவினராக இந்திய சமூகத்தில் நெடுங்காலமாக இவர்களே இருக்கிறார்கள்.

அவர்களது அடையாளமே அவர்களது திறந்தவெளி சிறை வாழ்வுக்குக் காரணமாய் அமைந்துவிடுகிறது. அவர்களுள் பெரும்பாலானோரின் கதை ஒன்றே ஒன்றுதான். பாலின மாற்று அறுவை சிகிச்சைக்கான கட்டணத்தைக் கட்டுவதற்காகப் பாலியல் தொழில், பிச்சை எடுத்தல் என்று ஈடுபட வேண்டிய மோசமான சூழலில் அவர்கள் இருக்கிறார்கள்.

அரசு மருத்துவமனைகளில் இந்தச் சிகிச்சை அளிக்கப்படுதல் அவர்களுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும். அந்த வகையில், சென்னையைத் தொடர்ந்து மதுரை ராஜாஜி அரசு மருத்துவக் கல்லூரி



மருத்துவமனையிலும் இச்சிகிச்சை வழங்கப்படும் நிலை இந்த அரசு பதவியேற்றபின் உருவாகியிருக்கிறது. சிகிச்சை தொடங்கப்பட்டது மட்டுமல்லாமல் கடந்த பிப்ரவரி மாதக் கடைசிவரைக்கும் 232 பேருக்கு பாலின மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இவ்வளவு அதிக அளவிலான அறுவை சிகிச்சைகள் இந்தியாவிலேயே வேறெங்கும் நடக்கவில்லை என அத்துறையின் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவிக்கிறார்.

அதோடு, 40 வயதுக்கு மேற்பட்ட மூன்றாம் பாலினத்தவர்க்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தையும் தமிழக அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. திருநங்கைகளுக்கான நல வாரியம் முத்தமிழறிஞர் கலைஞரால் 15.04.2008இல் அமைக்கப்பட்டது. அவ்வாரியத்தின் மூலம் பல்வேறு நலத்திட்டங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

சமூக நல அமைச்சகம் ஒரு பொது நல வழக்கில் வெளியிட்ட அறிக்கையில் தமிழகத்தில் 12,116 மாற்றுப் பாலினத்தவர் இருப்பதாகவும், அவர்களுள் 9,277 பேருக்கு அடையாள அட்டையும், 2,762 ரேஷன்கார்டுகளும், 1,743 வீட்டுமனைப் பட்டாக்களும், 515 பேருக்கு வீடுகளும், 1,489 பேருக்கு மருத்துவக் காப்பீடுகளும் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கிறது. இச்செய்தி இந்து தமிழ்த்திசை நாளிதழில் 27 டிசம்பர் 2021 அன்று வெளியிடப்பட்டிருந்தது.

இவ்வரசு அமைந்ததும் சிறப்பு முகாம்கள் மூலம் இவர்களுக்கு ரேஷன் கார்டுகள் வழங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதைக் காண முடிகிறது. கல்வி, வேலை வாய்ப்பில் சிறிய அளவுக்கென்றாலும் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பது அம்மக்களின் கோரிக்கையாய் இருக்கிறது. மானுட நேயம் போற்றும் இவ்வரசு அதற்கும் நடவடிக்கை எடுக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

மாற்றுத்திறனாளிகள்

கலைஞரைப் போலவே மாற்றுத் திறனாளிகள் நலத்துறை தமது நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்ற முனைப்பில் தம் வசம் வைத்துக்கொண்டு அத்துறையில் சீரிய திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்துறையின் மூலம் மூன்று சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலிகள், அலுமினியத் தாங்கிகள் முதலான கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாத ஓய்வூதியம், பராமரிப்புத் தொகை, திருமண உதவித் தொகை, அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை, கல்வி உதவித் தொகை முதலியன மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி ஜூன் 6, 2022இல் வெளியிட்ட செய்திக் குறிப்பிலிருந்து

கீழ்க்கண்ட தகவல்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது. இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் 1,228 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன. 2,11,505 பேருக்குப் பராமரிப்பு உதவித்தொகையாக 360 கோடியே 21 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளி மற்றும் அவருடன் பயணம் செய்யும் உதவியாளர் ஆகிய இருவருக்கும் அரசுப் பேருந்துகளில் கட்டணமின்றிப் பயணம் செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருமண மண்டபங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச திருமணத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேற்சொன்ன தேதிவரை 37,660 பேருக்கு 70 கோடியே 76 இலட்சம் செலவில் உபகரணங்கள் அளிக்கப்பட்டுள்ளதாக அச்செய்திக்குறிப்பு கூறுகிறது.

அண்மையில் நவம்பர் 27, 2022இல் மெரீனா கடற்கரையில் இந்நாளைய அமைச்சர் திருமிகு. உதியநிதி ஸ்டாலின் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு நடைமேடை இந்த அரசு அம்மக்கள் குறித்து காட்டுகின்ற கரிசனத்தின் குறியீடாய் விளங்குகிறது எனலாம்.

இலங்கைத் தமிழ் அகதிகள்

"இலங்கைத் தமிழர் என்பது ஒரு அடையாளச் சொல்தான். மற்றபடி தமிழர் எங்கிருந்தாலும் ஒருதாய் மக்கள்தான்" என்பது சட்டமன்றத்தில் இம்மக்கள் குறித்து மாண்புமிகு. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சொன்ன வார்த்தைகள். இதைச் சொன்னதோடு நிற்காமல், 110 விதியின்கீழ் அகதிகள் முகாம் என்பதை இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்று மாற்றி அறிவித்தார். இது வெறும் பெயர் மாற்றம் மட்டுமன்று. அரசின் கண்ணோட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்பது வெள்ளிடை மலை.

மாநில அரசு அதிலும் குறிப்பாக ஸ்டாலின் அரசு, தாயுள்ளத்தோடு இம்மக்களுக்குக் குடும்ப அட்டை வழங்கியுள்ளது. குடும்பத் தலைவருக்கு, குழந்தைகளுக்கு, இளைஞருக்கு என மாதந்தோறும் உதவித்தொகை வழங்குகிறது. வீடுகள் கட்டித் தருகிறது. வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துகிறது. இவையெல்லாம், இம்மாநில முதல்வரின், இம்மாநில மக்களின் மீதான அன்பைக் காட்டுகிறது அல்லாமல், ஒன்றிய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையால் அவர்கள் இரண்டாந் தரக் குடிமக்களாக நடத்தப் பெறுவது முடிவடைந்துவிடவில்லை.

பல பத்தாண்டுகளாக இம் மண்ணிலே வசித்து வந்தாலும் அவர்களுக்குக் குடியுரிமையும் வாக்குரிமையும் இல்லை. அவர்களுக்குக் குடியுரிமை பெற்றுத் தர முயலும் முதல்வரின் முயற்சிகள் வெற்றியடைந்தால்தான் இலங்கைத் தமிழ் அகதிகளின் வாழ்வு சிறக்கும்.

பிற விளம்புநிலை மக்கள்

புதிரை வண்ணார் சமூக மக்களின் எண்ணிக்கை 28,351 என்கிறது 2011 மக்கள் தொகை அறிக்கை. இந்த எண்ணிக்கை இன்னும் கொஞ்சம் அதிகமாகக்கூட இருக்கலாம். இந்த மக்களுக்காக ஒரு நல வாரியம் 18.10.2009லேயே முத்தமிழறிஞர் கலைஞரால் ஏற்படுத்தப்பட்டது என்பது எவ்வளவு அற்புதமான செய்தி!

அதேபோன்று நரிக்குறவர் நல வாரியமும் 2008ஆம் ஆண்டிலேயே அப்போதைய முதல்வர் கலைஞரால் கொண்டுவரப்பட்டது. அது மட்டுமல்லாமல் அம்மக்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவாவால் தனிநபர் மசோதா கொண்டுவரப்பட்டது இம்மக்கள் மீதான அன்பைக் காட்டுவதாக அமைகிறது.

திருக்கோயில் அன்னதானத்தில் அவமதிக்கப்பட்ட அஸ்வினி என்ற நரிக்குறவர் வகுப்பைச் சேர்ந்த பெண் முறையிட்ட செய்தி சமூக ஊடகங்களில் பரவியது. 2021ஆம் ஆண்டின் அக்டோபர் மாதத்தில் நடந்த இந்நிகழ்வு தெரிந்தவுடன் அறநிலையத்துறை அமைத்த அதே பந்தியில் அப்பெண்ணுடன் மாண்புமிகு அமைச்சர்கள் உட்கார்ந்து சாப்பிட்டது நாளிதழ்களில் செய்தியானது. அதைத் தொடர்ந்து சில நாட்களில் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நரிக்குறவர் குடியிருப்புக்கு நேரில் சென்று நலத்திட்ட உதவிகளை அளித்ததோடு அவர்கள் அன்போடு அளித்த உணவை உண்டார். செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வட்டத்தில் உள்ள பூஞ்சேரியில் 2021ஆம் வருடத்தின் நவம்பர் 3ஆம் தேதி இது நடந்தது.

ஜனநாயகம் என்பது அனைத்து மக்களையும் உள்ளடக்கியது என்ற உண்மையைப் புலப்படுத்துவதாகத் திராவிட மாடல் ஆட்சியின் நடைமுறை இருக்கிறது. எளிய மனிதர்களை முன்னிறுத்தி நடைபெறுவதே நல்லாட்சி. நான் உறுதிபடக் கூறுவேன்! இது நல்லாட்சி.

★★★



இனி எவரெஸ்ட் எட்டிப் பிடிக்கும் உயரம்தான்!



சி.முருகேஷ் பாபு

எங்கள் பள்ளிக்கூடத்தில் உடற்பயிற்சிக்கென்று இரண்டு ஆசிரியர்களும் ஓர் ஆசிரியையும் இருந்தார்கள். அவர்களுக்கென்று தனியான அறை உண்டு. அந்த அறையில் எல்லா விளையாட்டுக்கான உபகரணங்களும் இருக்கும், எல்லாமே புத்தம் புதுசாக!

எங்கள் பள்ளியில் ஒரு நடைமுறை உண்டு. கல்வியாண்டின் தொடக்கத்தில் ஆறாம் வகுப்பில் வந்து சேரும் மாணவனுக்கு விளையாட்டு சார்ந்து அடிப்படையாக சில தகுதித் தேர்வை வைப்பார்கள். அதாவது, புல் அப்ஸ் எடுப்பது, சிட் அப்ஸ் எடுப்பது போன்றவற்றில் எல்லா மாணவர்களையும் ஈடுபடுத்துவார்கள்.

புல் அப்ஸ் எடுக்கும் கம்பி எல்லோருக்கும் ஏற்ற உயரத்தில் இருக்காது. அதனால் பெரிய வகுப்பு அண்ணன்கள் நின்று தூக்கி விட நாங்கள் கம்பியைப் பிடித்து புல் அப்ஸ் எடுக்க வேண்டும். அண்ணன்கள் தூக்கிவிட்ட வேகத்தில் முதல் புல் அப்ஸை எடுத்துவிடுவோம். அடுத்ததற்கு எவ்வ முடியாமல் தத்தளித்து கீழே குதித்து விடுவோம். ஆனாலும் ஆசிரியர் கணக்கில் ஒன்று என்று குறித்துக் கொள்வார்.

சிட் அப்ஸும் அதே போலத்தான் கால்களைப் பிடித்து அழுத்தும் வேகத்தில் மேலே வந்து புறங்கை முட்டியால் கால் முட்டியைத் தொட்டுவிடுவோம். அதன்பிறகு மேலெழ முடியாது. ஆக, அதையும் ஒன்று என்று குறித்துக் கொள்வார்.

இந்த தகுதித் தேர்வு வைபவத்துக்குப் பிறகு யாருக்கு என்ன விளையாட்டில் ஆர்வம், யார் எதில் கவனம் செலுத்த வேண்டும் என்ற எதையும் எங்களிடம் உடற்பயிற்சி ஆசிரியர் கேட்க மாட்டார். கேட்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்காது.

ஏனென்றால் பள்ளிக் கால அட்டவணையில் விளையாட்டுக்காக ஒதுக்கப்பட்ட வகுப்புகளை கணக்கு ஆசிரியர் கடன் வாங்குவார், அறிவியல் ஆசிரியர் ஆய்வு நடத்தக் கேட்பார், வரலாற்று ஆசிரியர் வழிப்பறி செய்வார், ஆங்கில ஆசிரியர் ஆக்ரமிப்பு செய்வார் இப்படி எல்லோராலும் விளையாட்டுக்கான வகுப்பு வேறொன்றாக மாற்றப்படும்.

பள்ளி ஆண்டுவிழாவில் தனிப்பட்ட முயற்சியில் விளையாடும் சிலர் கோப்பைகளை வாங்க, நாங்கள் வெறுமனே கைதட்டிக் கொண்டு



நிற்போம், எங்கள் ஆர்வத்தை யாருமே அறிந்து கொள்ள மாட்டார்களா என்ற ஏக்கத்தோடு!

அப்போதுதான் எங்கள் பள்ளிக்கு புதிய தலைமையாசிரியர் வந்தார். விளையாட்டு வகுப்புகள் என்பது வெறுமனே கணக்கு காட்டுவதற்காகவும் கடன் கொடுப்பதற்காகவும் இல்லை, மாணவர்கள் விளையாடும் நேரத்தில் புது இரத்தம் ஊறியவர்களாக புத்துணர்ச்சி பெற்றவர்களாக மாறுகிறார்கள். அது அவர்களின் கல்வி கற்கும் திறனை ஊக்கப்படுத்துகிறது என்பதை உணர்த்தினார். விளையாட்டு வகுப்புகள் கட்டாயம் என்றார். அந்த ஆண்டு பள்ளி ஆண்டுவிழாவில் நானும் கபடி ஆட்டத்தில் ஒரு பரிசினைப் பெற்றேன்.

அப்படியொரு தலைமையாசிரியராக வந்திருக்கிறது இந்த அரசு!

சுய ஆர்வத்தாலும் சுற்றியிருப்போரின் ஊக்கத்தாலும் பரிசுகளைப் பெறும் விளையாட்டு வீரர்கள் அரசின் அரவணைப்பில் புது உற்சாகத்தோடு பயணிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

எல்லா அமைச்சரவைகளிலும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை என்று ஒன்று இருக்கும். ஆனால், அது எத்தனை வீரியமாகச் செயல்படும் என்பதைச் சொல்ல முடியாது. இந்த அரசுதான் இது விளையாட்டுக் காரியமில்லை சீரியஸான விஷயம் என்று உணர்த்தியிருக்கிறது. இந்த அரசு விளையாட்டுத் துறையின் மீது எத்தனை



ஆர்வத்தோடு இருக்கிறது என்பதை ஆரம்பத்திலேயே அறிவித்துவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர். தமிழ்நாட்டின் அத்தனை தொகுதிகளிலும் விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் தலா மூன்று கோடி ரூபாய் செலவில் எல்லா வசதிகளுடன் கூடிய தரமான ஸ்டேடியம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் பொறுப்பினை ஏற்றிருக்கும் மாண்புமிகு அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களும் அந்தப் பணியை விரைந்து முடிப்போம்ஞ் விரைவிலேயே விளையாட்டின் மேம்பாட்டினை நம் மாநிலம் அடையும் என்றும் உறுதி அளித்திருக்கிறார். சொல் என்பது செயல் என்ற அடிப்படையில் செயல்பட்டு வரும் அமைச்சரின் சொல் நிச்சயம் செயலாகும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

எந்த ஒரு செயலையும் கடமைக்காகச் செய்கிறோமா அல்லது கருத்து ஊன்றிச் செய்கிறோமா என்பது அதன் விளைவில் விளையும் பயனில் தெரியும். உலகமே வியந்து பாராட்டிய செஸ் ஒலிம்பியாட் என்பது நம் தமிழ்நாடு அரசு விளையாட்டுத் துறையின் மீது எத்தனை கருத்து ஊன்றிச் செயல்படுகிறது என்பதற்கான உதாரணம்.

திராவிட இயக்கத்தின் முக்கிய தளகர்த்தரான பேரறிஞர் அண்ணா தன் தளபதிகளை விளித்த வார்த்தை தம்பி என்பதுதான்... அந்த வார்த்தையையே



எரி சக்தியாக எடுத்துக் கொண்டு குதிரைப் பாய்ச்சலில் ஓடியது இளைஞர் பட்டாளம். அந்தச் சரித்திரத்தின் நீட்சியாக இருப்பதனால்தான் மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலினும் செஸ் ஒலிம்பியாட்டின் வடிவத்துக்கு தம்பி என்று பெயரிட்டார். குதிரைப் பாய்ச்சலில் ஓடிய தன் உடன்பிறப்புகளைக் குறிக்கும் வகையில் வேட்டி சட்டை அணிந்த குதிரையே தம்பியாக நின்றது. செஸ் விளையாட்டில் குதிரை மிக முக்கியமான அம்சம் என்றாலும் நம் செயலின் அடையாளமாகவே அதைத் தேர்வு செய்திருக்கிறார் நம் முதல்வர்.

எந்தச் செயலையுமே எடுத்தோம் கொடுத்தோம் என்று இல்லாமல் அதற்குள் பல படிமங்களையும் பரிமாணங்களையும் பொதிந்து வைப்பதுதான் சிறப்பான தலைமைக்கு அழகு! அந்த வகையில் செஸ் ஒலிம்பியாட்டின் சின்னமான தம்பி அழகுற அமைந்தான் என்பது சிறப்பான விஷயம்தான்!

உலகமே திரும்பிப் பார்க்கும் வகையில் சென்னையின் திருவிழாவாக அமைந்தது அந்தப் போட்டி.

நாம் பெற்ற செல்வம் நமக்குப் பெருமைதான்... ஆனால், அந்தப் பிள்ளையை ஊரார் உச்சி முகரும்போது கிடைக்கும் பெருமிதம் அலாதியானது. அப்படித்தான் உலகெங்கும் இருந்து வந்திருந்த செஸ் விளையாட்டு வீரர்கள் நம் ஏற்பாடுகளையும் நிகழ்ச்சி அமைப்பையும் பாராட்டினார்கள்.

அதையும் தாண்டிய பாராட்டு நாமே எதிர்பாராதது. மிகச் சமீபத்தில் உலக செஸ் போட்டிக்காக



டெல்லி வந்திறங்கிய கஜகஸ்தான் நாட்டு செஸ் வீராங்கனை ஸான்சாயா அபுமாலிக் டெல்லியில் கிராண்ட் பிரிக்ஸ் போட்டிக்கான அமைப்பாளர்கள் மீது அதிருப்தி கொண்டு பேசும்போது, தமிழ்நாட்டில் எங்களுக்கு கிடைத்த வரவேற்பும் உபசரிப்பும் என்றும் நினைவில் நிற்கக் கூடியது. இத்தகைய வருத்தமான சூழலில் அதை நினைத்துக் கொள்கிறோம் என்ற ரீதியில் கருத்து தெரிவித்தது நாம் எதையுமே கடமைக்காக செய்பவர்கள் இல்லை, கருத்தில் ஊன்றிச் செய்பவர்கள் என்பதை எடுத்துக் காட்டியது. அவர் மட்டுமல்லாது ஜெர்மனி நாட்டு கிராண்ட் மாஸ்டரான எலிசபெத் பீட்ஸ் கூட இதே போன்ற மனநிலையையே வெளிப்படுத்தியிருந்தார்.

நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பார்கள். இது நிழல்ல நிஜத்தின் அருமை வெளிப்பட வேண்டிய தருணத்தில் வெளிப்பட்டே தீரும். இது என்றென்றைக்கும் நமக்கு விளையாட்டு மீது இருக்கும் ஈடுபாட்டுக்கான அத்தாட்சி!

வெறும் வார்த்தையாக உடன் பிறப்பு என்று சொல்லாமல் அன்போடு அரவணைத்துக் கொள்ளும் உண்மைச் சகோதரனாக அமைச்சரும் முதலமைச்சரும் இருப்பது உண்மையிலேயே நம் பிள்ளைகளுக்கு உற்சாகம் தரும் விஷயம்தான்!

கைப்பந்து விளையாட்டு வீராங்கனையான சிந்து தன் 12ஆம் வகுப்புத் தேர்வை ஒட்டி ஓர் உதவியைக் கேட்டார். இந்த அரசிடம் மாடியில் இருந்து தவறி விழுந்து விபத்தைச் சந்தித்திருக்கும் நிலையில் நான் படுக்கையில் இருந்தபடியே 12ஆம் வகுப்புத் தேர்வை எழுத அனுமதிக்க வேண்டும் என்ற விண்ணப்பம்தான் அந்த உதவிக் கோரிக்கை!

தேர்வுக்கு முன்னதாக விபத்தைச் சந்தித்து கிட்டத்தட்ட பத்து அறுவை சிகிச்சையினை மேற்கொண்ட நிலையிலும் படிக்கும் ஆர்வத்தோடு கோரிக்கை விடுத்த சிந்துவுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிகிச்சைக்கான செலவுகளையும் ஏற்றுக் கொள்வதாக அறிவித்திருக்கிறார். கால்கள் உடைந்திருந்த நிலையிலும் நம்பிக்கை உடையாத சிந்துவுக்கு இந்த அரசு இருக்கிறது துணையாக அவர் மீண்டும் வாலிபால் விளையாடும் வரை அவர் அரசின் பொறுப்பு என்று சொல்லியிருக்கும் முதல்வரின் வார்த்தைகள் எத்தனை எத்தனை விளையாட்டு வீரர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தியிருக்கும்?

வீரர்களுக்கு நம்பிக்கை தருவது மட்டுமல்ல வீரர்களின் வீராங்கனைகளின் இல்லாமையில் அவர்களின் குடும்பத்துக்கு ஆறுதலாகவும் அரணாகவும் நிற்க வேண்டியதும் அரசின் கடமைதான். கால்பந்து வீராங்கனை ப்ரியாவின் மறைவின்போது அந்தக் குடும்பத்துக்கு ப்ரியா இருந்திருந்தால்



எத்தனை விஷயங்களைச் செய்திருப்பாரோ அதற்கு ஒப்பான நிலையில் இந்த அரசு நின்றது.

இழப்பீட்டுத் தொகையாக பத்து இலட்ச ரூபாய், ப்ரியாவின் அண்ணனுக்கு அரசு வேலை, அவருடைய குடும்பத்துக்கு ஒரு வீடு என்று எல்லா வகையிலும் தோள் கொடுத்து நின்றது அரசு.

விளையாட்டைத் தொழிலாக எடுத்துக் கொண்ட என் பிள்ளையின் இழப்பால் இன்று நாங்கள் நலிந்து போய்விட்டோம் என்று ஒரு சொல் வந்தால் அது ஒட்டுமொத்த விளையாட்டுத் துறையையும் பலவீனமாக்கும் என்று அவருக்குத் தெரியும். அதனால்தான் அவர் பேசும்போது ப்ரியாவின் இழப்பு அவர் குடும்பத்து பேரிழப்பு மட்டுமல்ல... நம் மாநில விளையாட்டுத் துறைக்கும் மாபெரும் இழப்பு என்று தன் இழப்பாக வருந்தினார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

வெற்றியின்போது பங்கிட்டுக் கொள்வது மட்டுமல்ல துயரத்தின்போது தோள் கொடுத்து நிற்பதுதான் நம் பண்பு. அதை அரசு முன்னிறுத்துவதில் வியப்பேதும் இல்லை!

விளையாட்டு என்றுமே வாழ்க்கைக்கு உதவாது என்றொரு கருத்தைச் சொல்லிச் சொல்லித்தான் பெற்றோர்கள் பலரும் பிள்ளைகளை விளையாட்டில் இருந்து விலக்கி வைக்கப் பார்க்கிறார்கள். அப்படியெல்லாம் இல்லை என்று அடித்துச் சொல்லும் அளவுக்கு அரசு பிள்ளைகள் பக்கம் பெரும்பாலும் நிற்பதில்லை.

ஒரு போட்டிக்குச் செல்ல விமான கட்டணம் உள்ளிட்ட செலவுகளுக்காக வீரர்கள் பலரும் ஸ்பான்சர்களை எதிர்பார்த்து நிற்கும் அவல நிலை பலகாலமாக இருந்து வந்தது பெற்றோரின் கருத்துக்கு பொருள் சேர்ப்பதாகவே இருந்தது. பிள்ளைகளால் நான் சாதிப்பேன் என்று உரக்கச் சொல்லும் நிலை உருவாகவில்லை.

ஆனால், இன்று அந்த நிலை மாறிவிட்டது. பிள்ளைகளின் கனவுகளை நிஜமாக்க இந்த அரசு இருக்கிறது. உலகின் உயர்ந்த சிகரமான எவரெஸ்டில் ஏறும் கனவோடு இருந்த முத்தமிழ்ச் செல்விக்கு முட்டுக்கட்டையாக இருந்தது அதற்கான செலவுகள். ஆசிய டிரக்கிங் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த அந்த மலையேற்றத்துக்கான செலவுத் தொகையாக பத்து லட்ச ரூபாயைக் கொடுத்து முத்தமிழ்ச் செல்வியை உற்சாகப்படுத்தியிருக்கிறார் மாண்புமிகு விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

இப்போது அதுவும் போதாது என்ற நிலை ஏற்பட்டபோது தன் தேவையை அவருக்குச் சொன்ன முத்தமிழ்ச் செல்விக்கு கூடுதலாக பதினைந்து இலட்ச ரூபாயை வழங்கி, உன் கவனமெல்லாம் சிகரத்தை நோக்கித்தான் இருக்க வேண்டும், காலைப் பிடித்து இழுக்கும் எந்தக் கவலைக்கும் இடம் கொடுக்காதே சகோதரி என்று உற்சாகம் கொடுத்திருக்கிறார்.


இப்படியொரு அரசும், முதல்வரும், விளையாட்டுத் துறை அமைச்சரும் இருந்தால் எவரெஸ்ட் எல்லாம் எட்டிப் பிடிக்கும் உயரம்தானே!

★★★









மகளிர் நிலை உயர, மாநிலம் உயரும்!



வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி
சமூக செயற்பாட்டாளர்.

செல்லும் திசை தெரியாமல் ஆழ்கடலின் நடுவே சிக்கிக்கொண்ட கப்பல் போல், ஜாதி, மதம், புராண இதிகாசங்கள், ஆணாதிக்கம், ஆதிக்க மனநிலை கொண்ட குடும்பக் கட்டமைப்பு, சமூக சிக்கல்கள் என்று அனைத்து நிலையிலும் சிக்குண்டு, வாழ்க்கையின் மகிழ்ச்சியை அடைய எது திசை என்று அறியாமல் தவித்த பெண் இனத்திற்கு, புது வெளிச்சம் தந்து, புத்துயிர் வழங்கிய இயக்கம், திராவிடர் இயக்கம்.

அடிமையாய் இருக்கிறோம், எங்களை காப்பாற்றுங்கள் என்று குரல் வரும் திசை நோக்கி பயணித்து, அவர்களை காப்பாற்றுவது சுலபம். ஆனால், பன்னெடுங்காலமாய் அடிமையாய் கிடக்கிறோம் என்ற உணர்வற்று கிடந்த சமூகத்தை காப்பற்ற முயற்சி செய்வது, நாமும் சேர்ந்து அடிமை குழிக்குள் விழும் முயற்சி. இம்முயற்சியில் தாங்களும் கீழே விழாமல், அதலபாதாள குழிக்குள் இருக்கிறோம் என்று அறியாமல் சுகமாய் இருந்தவர்களையும் சேர்த்தே மீட்டனர் திராவிட இயக்கத் தலைவர்கள்.

அக்குழியின் அடி ஆழத்தில், இனி இழப்பதற்கு ஒன்றும் இல்லை உயிரைத் தவிர என்று மூச்சு திணறி இருந்தவர்கள், பெண்கள். அந்தப் பெண்களுக்கு செயற்கை சுவாசமாய் கிடைத்த சுவாசக் காற்று தான், தந்தை பெரியாரின் சமத்துவ, சமூகநீதி தத்துவங்கள். அவசரகால உதவியாய் கிடைக்கப்பெற்ற தந்தை பெரியாரின் பெண்ணுரிமை சிந்தனைகளை அனைவரிடமும் கொண்டு சேர்க்க பெரும் வாய்ப்பாய் கிடைக்கபெற்றது தான், தற்போது நடைபெறும் ஆட்சி.

ஜாதிய, ஆதிக்க சமூகக் கட்டமைப்பில், 'நீங்கள் அடிமைகளாக உள்ளீர்கள்' என்பதை பெண்களை உணர செய்து, அடிமை விலங்கொடித்தார் பெரியார். விலங்கொடிக்கப்பட்ட பெண்கள், சுதந்திர வானில் பறக்க விரும்பியபோது, சமூகநல திட்டங்கள் என்ற மகளிர் சார்ந்த உரிமைத் திட்டங்களை சிறகாய் தந்தது இவ்வாட்சி.

அண்ணா கண்ட புதுமைப் பெண்கள்

ஆட்சிக்கு வந்தபின் சமூகநல அரசியலை பேசியவர் அல்ல, சமூகநல அரசியலை பேசியதால் ஆட்சிக்கு வந்தவர் தான், பேரறிஞர் அண்ணா. பெரியாருடன் இருந்த காலந்தொட்டு தனது அனைத்து படைப்புகளிலும் மகளிர் விடுதலை, பெண் கல்வி, திருமண உரிமை, விதவை மறுமணம், வரதட்சணைக் கொடுமை, பெண்களின் பொருளாதார

முன்னேற்றம், சொத்துரிமை என்று பெண்கள் வாழ்வில் அடைய வேண்டிய புதுமைகளை, புரியும் மொழியில் எடுத்துரைத்தார்.

வரலாற்றில் திராவிட இயக்க கோட்டையின் அரசியல் சுவர், அண்ணாவின் ஈராண்டு ஆட்சியில் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டது. புரியாத மொழியில் நாம் அறியாத வகையில் பெண்களின் சுயமரியாதையை, தங்களின் மந்திரங்கள் மூலம் விற்று தீர்த்த நரியார் கூட்டத்திற்கு எதிராக பெரியார் முன்னிறுத்திய சுயமரியாதை திருமண முறைக்கு சட்ட வடிவம் கொடுத்து, மகளிர் மாண்பினை சட்டத்தின் மூலம் உறுதி செய்தார் பேரறிஞர் அண்ணா.

நாற்பது வருடமானாலும் தந்தையின் எண்ணத்தை ஈடேற்ற, ஒரு தலைமகன் வந்த காட்சியை தமிழ்ச்சமூகம் அதிசயித்து பார்த்தது. வரலாறு நெடுகிலும் சடங்கு, சம்பிரதாய புனைவுகளால், சுயமரியாதை கேள்விக்குள்ளாக்கப்பட்ட பெண்களுக்கு, பெரியார் 1928ஆம் ஆண்டு முதல் சமூகத் தளத்தில் விடுதலை தந்தார்; 1968 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா சட்ட வடிவில் சமத்துவம் தந்தார். அண்ணாவின் படைப்புகளில் காணப்பட்ட புதுமைப் பெண்கள் சமூகத்திலும் வாழ தொடங்கியதை காணும் வாய்ப்பை அண்ணாவின் மரணம் தடுத்து நிறுத்தியது.

பாதுகாக்கப்பட்ட பெண்கள் வாழ்க்கை

ஒலிம்பிக் ஒளிச்சுடர் கை மாறுவதுபோல், திராவிட இயக்க அரசியல் தளத்தில் பெரியாரிடமிருந்து அண்ணா பெற்ற பகுத்தறிவு, சுயமரியாதை, சமத்துவ ஒளிச்சுடர்கள், அண்ணாவின் மறைவால் முத்தமிழறிஞர் கலைஞரின் கைகளுக்கு மாற்றம் பெற்றது. பிறந்த நொடி முதல், திருமணத்திற்கு தயாரிக்கும் பொருளாக பெண்களை பார்த்த சமூகம்; பெண்ணுக்கு பாதுகாப்பு கணவனின் வீடுதான் என்பதில் அசைக்க முடியா நம்பிக்கை கொண்ட சமூகம்; பெண்கள் என்ன பாலியல் பொருளா? படிப்பறிவற்ற பெண்கள் சமூகத்தில் வாழ்ந்து என்ன பயன் என்று தமிழ்நாட்டின் வீதிதோறும் பெரியார் எழுப்பிய கேள்விகளுக்கு, சட்டமன்றத்தில் விடை கண்டார் கலைஞர்.

சமூகம், பெண் கல்வியைப் போற்ற தவறிய நிலையில், அடிமை சிந்தனையும் ஆதிக்க மனோபாவமும் புரையோடி கிடந்த இச்சமூகத்தில், அவர்கள் வாழ்வின் முக்கிய அங்கமாய் பாவித்த திருமண முறையின் வழியே பெண்களுக்கு கல்வியைக் கொண்டு சேர்த்தார், கலைஞர். எண்ணற்ற திருமண உதவித் திட்டங்களை செயல்படுத்தினார். ஆனால், அந்த திட்டத்தில் பயனடைய நினைத்தால், தங்கள் பெண்களை படிக்க வைத்திருக்க வேண்டும் என்ற நிர்பந்தம் பெண் கல்வியின் சதவிகிதத்தை தமிழ்நாட்டில் அதிகரித்தது.

பெண்களுக்கு பாதுகாப்பு திருமணமும், கணவன் வீடும், குடும்பமும் என்ற நிலையினை மாற்றி கல்வி, வேலைவாய்ப்பு, சொத்துரிமை, பொருளாதார விடுதலைக்கு சுயஉதவிக் குழுக்கள் இவையனைத்துமே வாழ்க்கைக்கு பாதுகாப்பு என்ற உணர்வினை தனது சட்டங்கள் மூலம் கலைஞர் உறுதிப்படுத்தினார். இமை மூடி சிந்தித்தால் மலைப்பைத் தரும் அளவிற்கு மகளிருக்கான சமூக, பொருளாதார, அரசியல் சட்டத்திட்டங்களை தமிழ்நாட்டில் இயற்றி, மகளிரின் நெடுந்தூர வளர்ச்சி பாதைக்கு அடித்தளமிட்டார், கலைஞர்.

சமன்படுத்தும் திராவிட மாடல் அரசு

அனைவரையும் சமமாக நடத்த வேண்டும் என்பதே திராவிட இயக்கத்தின் அடிப்படை கொள்கை. ஆனால், இச்சமூகம் சமநிலையில் இல்லை. சமநிலை அற்ற சமூகத்தில் ஆழமாக நாம் புரிந்துகொள்ள வேண்டிய ஒன்று, “The unequals cannot be treated equally” – சமமற்றவர்களை சமமாக நடத்த முடியாது. மேற்சொன்ன நோக்கில் ஆராய்ந்தால், திராவிட இயக்கத்திற்கும், குறிப்பாக திராவிட அரசுகளுக்கும் முதன்மை பணி என்பது, சமமற்றுக் கிடக்கும் சமூகத்தை சமன்படுத்துவது. தமிழ் சமூகத்தில் வேரூன்றி நிற்கும் வர்ணாசிரம படிநிலை மட்டுமன்றி, பாலின படிநிலையையும், ஏற்றத்தாழ்வையும் சமன் செய்யும் தேவை, அறிவின்பால் நம்பிக்கை கொண்ட பொது சமூகத்திற்கு இருக்கிறது.

ஆனால், பாலின படிநிலையில் மேலே நிற்கும் ஆண்களால் ஆணும் பெண்ணும் அனைத்திலும் சமம் என்ற நிலையை கனவிலும் நினைத்து பார்க்க இயலவில்லை. இனி கனவுகள் தேவையில்லை, நிகழ்கால வாழ்வில் அதனை சாதித்து காட்டுவோம் என்ற மன உறுதியின் வெளிப்பாடாய் கடந்த மே 6,2021 அன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக களம் இறங்கினார், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

முதன்முதலாக பெண்களுக்கான சட்டங்களையும், திட்டங்களையும் இந்த அரசுதான் கொண்டு வந்தது என்று நாம் சொல்ல முடியாது. ஆனால், ஒன்றை அறுதியிட்டு கூறலாம், இந்திய துணைக் கண்டத்தில், வர இருக்கும் காலக்கட்டங்களில், சமூக, பொருளாதார, அரசியல் நோக்கில் மகளிர் முன்னேற்றத்திற்கான திட்டம் வகுக்க எண்ணும் எவராய் இருப்பினும் பின்பற்ற தக்க மாடல், தற்போதைய ஆட்சியின் “திராவிட மாடல்” தாம்.

மகளிர் நலம் என்பதில் பெண்களின் சுயமரியாதையே உயிர் நாடியாக இருக்க வேண்டும். சுயமரியாதை உணர்வை பெண்கள் பெறவும், இதுகாறும் திராவிட இயக்கத்தால் பெற்ற தன்மான



உணர்வுகளை தற்காத்து, பாதுகாப்பதும் அதி அவசியம். இந்த இரண்டினையும் தனிமனிதர் செய்வது வேறு; ஒரு மாநில அரசே முன்னின்று செய்வது வரலாற்று சிறப்பு. அத்தகைய வரலாற்று சிறப்பினை பெற்றுள்ளது, தமிழ்நாடு அரசு.

தேர்தல் வெற்றிக்காக கண் கவரும், மனம் குளிரும் அறிவிப்புகள், அறிக்கைகள் அனைத்து கட்சிகளிலிருந்தும் அடுக்கடுக்காய் வந்தன. ஒன்றிய அரசின் தேர்தல் அறிக்கையும், கடந்த காலங்களில் மாநில அரசின் அறிக்கையும் தேர்தல் பிரச்சாரத்தில் எழுப்பப்பட்ட வெற்றுக் கூச்சலாக மட்டுமே மாற்றப்பட்டன. ஆனால், இன்றைய திராவிட மாடல் அரசு, ஆட்சி பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் மகளிர் நலனுக்கான திட்டங்களில் தாங்கள் சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்து பாலின சமத்துவத்தின் அடுத்த கட்டத்தை அடைய வழி வகுத்துள்ளது.

விரிந்த சிறகுகள்!

வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பெண்களின் வளர்ச்சிக்கு தங்களால் இயன்ற அளவு முட்டுக்கட்டையிட இச்சமூகம் முனைப்பாய் இருக்கும். அவ்வகையில் பள்ளி, கல்லூரி செல்லும் பெண்களுக்கும், வேலைக்கு செல்லும் பெண்களுக்கும் இருக்கும் பெருந்தடைகளில் ஒன்று, பயணம். தனிப்பட்ட ரீதியில் மோட்டார் வாகனங்களை பயன்படுத்துவதில் ஆண்களைவிட பெண்கள் குறைவான எண்ணிக்கையில் இருப்பதாலும், பாதுகாப்பு என்ற நோக்கிலும், பெண்கள் பெரிதும் பொது போக்குவரத்தை நம்பி நிற்கும் சூழல் நிலவுகிறது.

பெண்கள் பொது போக்குவரத்தை பயன்படுத்துவதை சமூகக் கட்டமைப்புடனோ அல்லது பொருளாதார கண்ணோட்டத்துடனோ இதுவரை எந்த அரசாங்கமும் அணுகவில்லை. "சம்பாதிக்கும் பணத்தில் பாதி பேருந்துக்கு செலவாகுது, வீட்டில் இரு, இனி வேலைக்கு போ வேண்டாம்", "கல்லூரி முடிஞ்சு நேரா வீட்டுக்கு வா, இன்னொரு இடத்துக்கு கூடுதல் வகுப்புக்கு போனா இன்னும் பேருந்துக்கு செலவாகும்" என்ற குரல்கள் பெண்களுக்கும் சமூக வளர்ச்சிக்குமான தொடர்பைத் துண்டிக்கும் குரலாய் அமைந்தன.

ஊர்ப் பகுதிகளில் பல நெடுத்தூரம் தனிப்பட்ட வாகனத்தை பயன்படுத்தாமல் நடந்து செல்ல பெண்கள் பழக்கப்படுத்தப்பட்டிருப்பார்கள். கூலி வேலை செய்து கிடைக்கும் பணத்தை, ஏன் வீணாய் போக்குவரத்துக்கு செலவிட வேண்டும் என்ற மனநிலையில் வளர்க்கப்பட்டிருப்பார்கள். கடுமையாக வேலையிடத்திலும் உழைத்து, அந்த களைப்பு தீரும் முன் வீட்டிற்கு நடக்க ஆரம்பிக்கும் பெண்கள் ஏராளம். பெண்களின் பேருந்து பயன்பாடு அவர்களின் தனிமனித வளர்ச்சி சார்ந்தது அல்ல. அதில் ஒரு மாநிலத்தின் சமூக,பொருளாதார வளர்ச்சி அடங்கியுள்ளது என்ற பரந்துப்பட்ட பார்வையில், தமிழ்நாட்டின் முதல்வரால் "அரசு நகர்புற பேருந்துகளில் பயணிக்கும் பெண்களுக்கு கட்டணமில்லா பயணம்" என்ற திட்டம் கொண்டு வரப்பட்டது.

ஆட்சி பொறுப்பேற்றவுடனே இப்படி ஒரு திட்டமா என்ற மகிழ்ச்சி பெருங்கடலில் பெண்கள் மிதந்தனர். அறிவிப்பு வந்த மறுநொடியே, ஆதிக்க மனநிலையில் சிக்கித்தவிக்கும் அறிவிலிகள் விமர்சன கணைகளைத் தொடுத்தனர். அதுவரை அதள பாதாளத்திற்கு சென்ற பொருளாதார பின்னடைவு பற்றி சிந்திக்காதவர்கள், அன்று ஒருநாள் பொருளாதார நிபுணர்கள் ஆனார்கள். அப்படி விமர்சித்தவர்களுக்கான விடையை போக்குவரத்து மற்றும் மேம்பாட்டுக் கொள்கை நிறுவனத்தின் (ஐ.டி.டி.பி) (Institute for Transportation and Development Policy (ITDP)) தெற்காசிய திட்டத்



தலைவர் ஸ்ரேயா கடேபள்ளி (Shreya Gadepalli) தருகிறார். 2020ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஐ.டி.டி.பி இந்தியா திட்டத்தின் ஆய்வின்படி, சென்னையில் உள்ள பெண் பேருந்து பயணிகள், மலிவு விலை மற்றும் பாதுகாப்பை தங்கள் மிகப்பெரிய கவலைகளாக எடுத்துரைத்தனர்.

"அவர்கள் ஆண்களை விட தனிப்பட்ட மோட்டார் வாகனங்களை குறைவாக அணுகுகிறார்கள் மற்றும் பொது போக்குவரத்தை அதிகம் சார்ந்துள்ளனர். இலவச பொது போக்குவரத்து பெண்களுக்கு அதிகாரமளிக்கும் அவர்களுக்கு வேலைகள் மற்றும் கல்விக்கு அதிக அணுகலை வழங்கும் மேலும் அவர்களை சமூகத்தின் அதிக உற்பத்தித்திறன் கொண்ட உறுப்பினர்களாக மாற்றும்," என்கிறார்.

எவ்வகையில் இத்திட்டம் பெண்களுக்கு அதிகாரமளிக்கும் என்று இதனை வாசிப்பவர்கள் சிந்திக்கக்கூடும். 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பு தரவுகளின்படி, வேலைக்குச் செல்லும் பெண்கள் வேலை பங்கேற்பு விகிதத்தில் 31.8% மட்டுமே பங்களிக்கிறார்கள், அதே நேரத்தில் ஆண்கள் வேலை பங்கேற்பு விகிதத்தில் 59.3% உள்ளனர். பெண்களின் வேலை பங்கேற்பு விகிதத்தை அதிகரிப்பதன் மூலம், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க முடியும். பெண்களின் உயர்கல்வித் தேவைகளுக்கு போக்குவரத்து அதி முக்கியமான ஒன்று, அதனை எளிதாக்குவதன் மூலமாகவும், பொருளாதார ரீதியாக போக்குவரத்து செலவை சேமிப்பதன் மூலமாகவும், பெண்களின் சமூகபொருளாதார நிலை மேம்படும். அது மறைமுகமாக மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும்.

குடும்பம், சமூகம், மனத்தடை ஆகியவற்றின் காரணமாய் முடங்கியிருந்த பெண்கள், மாற்று திறனாளிகள், மாற்று பாலினத்தவர்கள் என்று அனைவரின் சிறகுகளும் "ஸ்டாலின் பஸ்" வருது என்ற ஒலியில் விரிந்து பறக்கின்றன.

சுதந்திர கதவுகள் திறந்தன

தங்கள் அடிமைகளுக்கு கேள்வி கேட்கும் உணர்வு வர நேர்ந்தால், சுயமரியாதை அடைவார்கள் என்ற அச்சத்தில்தான் இம்மண்ணின் உரிமையாளர்களான திராவிட மக்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. இதே காரணத்தின் வெளிப்பாடாய், ஆணாதிக்க சிந்தனை படைத்த கூட்டத்தால் பெண்களின் கல்விக்கு தடை விதிக்கப்பட்டது. தடைகளை கடந்து பெண்கள் படிக்க வந்தாலும், இன்றும் வீட்டின் வறுமைக்கு முதல் பலியாகும் ஒன்று, பெண்களின் கல்வியே. காரணம், படிப்பு இல்லையெனினும் அதிக நகை கொடுத்து பெண்ணை திருமணம் செய்து வைத்துவிடலாம் என்ற எண்ணம் ஒருபுறமும், மற்றொரு புறம் இன்னொருத்தர் வீட்டிற்கு போக இருக்கும் பெண்ணுக்கு ஏன் கல்விக்காக செலவிட வேண்டும் என்ற எண்ணமுமே. சமூகத்தின் அனைத்து வகை எண்ண ஓட்டத்திற்கும் முற்று புள்ளி வைத்தது மாண்புமிகு முதல்வர் அவர்களின் "புதுமைப் பெண் திட்டம்".

மக்கள் தொகையில் சரி பகுதியாக உள்ள பெண்களின் கல்வி விகிதம் குறைந்தால் பெண்களின் வாழ்க்கை தரம் மட்டுமன்றி நாட்டின் வளர்ச்சி குறியீடும் குறையும் என்ற புரிதலுடன், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்த மாணவிகளுக்கு உயர் கல்வி உறுதித் திட்டத்தின்கீழ் மாதம் தோறும் ரூ.1,000 உயர் கல்வி உறுதித்தொகை வழங்கி, கல்வி எனும் சுதந்திர கதவை திறந்துவிட்டுள்ளது, நம் தமிழ்நாடு அரசு.

முதல் கட்டமாக இந்த திட்டத்துக்காக கடந்த 5 மாதங்களில் 69.44 கோடி ரூபாய் அரசின்



சார்பில் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், இடைநின்ற 12,000 மாணவிகள் மீண்டும் உயர்கல்வி படிப்பை தொடர்ந்துள்ளனர். கடந்த அய்ந்தாண்டுகளில் பள்ளி படிப்பை முடித்தும் குடும்ப வறுமையின் காரணமாக உயர்கல்வி பயில இயலாமல் தவித்த 10,146 மாணவிகள் இந்த திட்டத்தின் மூலம் (மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்) உயர்கல்விப் பயில தொடங்கியிருக்கிறார்கள். அனைத்திற்கும் மேலாய், இத்திட்டத்தின் பலனாய் உயர்கல்வி சேரும் மாணவிகளின் எண்ணிக்கை 29 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இத்திட்டத்தின் வெற்றிக்கு இதுவன்றோ சான்று!

இத்திட்டத்தின் பலனும், சமூக வளர்ச்சிக் குறியீட்டில் ஏற்பட இருக்கும் மாற்றமும் இன்னும் பத்தாண்டுகளில் தமிழ்நாட்டு மக்களை வியப்பில் ஆழ்த்தும் என்பதில் சிறிதும் அய்யம் இல்லை. காரணம், இத்திட்டம் குழந்தை திருமணத்தை தடுக்கும், அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகப்படுத்தும்,

அரசுப் பள்ளிகளில் இருந்து உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் பெண் குழந்தைகளின் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கும், பெண்களின் தன்னம்பிக்கையை உயர்த்தும், உயர்கல்வி சென்ற பெண்கள் வேலைக்கு செல்வதின் மூலம் சமூகநல குறியீடு மட்டுமன்றி, பொருளாதார வளர்ச்சியும் உயரும்.

உலக அரங்கில் உரக்க பேசப்படும் திட்டம்

பெண் விடுதலை பயணத்தில் முதன்மையானது, பெண்களின் திறமையை, உழைப்பை, சிந்தனையை, செயல்பாடுகளை அங்கீகரிப்பதே. வரலாறு நெடுகிலும் குடும்பம், சமூகம் என்று எந்த திசையிலிருந்தும் வீட்டில் உழைக்கும் பெண்களுக்கான அங்கீகாரம் கிடைக்கபெற்றதில்லை. விடியும் முன் தொடங்கி, பின் இரவு வரை வீட்டுப் பணிகளை செய்தாலும் "வீட்டில் சும்மா இருக்கா" என்ற பெயரிட்டனர்.

இப்படியாக குடும்ப வேலைகளை, தன் வீட்டுப் பராமரிப்புகளை செய்து வரும் பெண்களை "ஊதியமில்லா பராமரிப்பு பணிகளை செய்பவர்கள்" (Unpaid care workers) என்று சர்வதேச தொழிலாளர் அமைப்பு வகைப்படுத்துகிறது. எவ்வகையிலும் இப்பெண்கள் செய்யும் வேலைகள் உழைப்பாய் அங்கீகரிக்கப்படுவதில்லை. குடும்பமும், சமூகமும் அதனை செய்ய தவறிய நிலையில், தமிழ்நாடு அரசு "குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 உரிமைத் தொகை" என்று அறிவித்திருப்பது மிக நுணுக்கமான சமூகப் பண்பாட்டு பார்வை.

மேலும், இத்தகைய பெண்களின் உழைப்பு இதுவரை உள்நாட்டு உற்பத்தியின் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. எனவே, இத்திட்டம் பொருளாதார நோக்கிலும் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் மட்டுமின்றி, உலக அரங்கில் பேசு பொருளாகி இருப்பது, திராவிட மாடல் அரசின் சாதனையின் உச்சம்.

சலுகை அல்ல உரிமையும், வளர்ச்சியும்!

ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாள் தொடங்கி "நான் இருக்கிறேன், நீங்கள் முன் செல்லுங்கள்" என்று மகளிருக்கான அனைத்து வகை திட்டங்களையும் வகுத்து, அவற்றிற்கு செயல்வடிவம் கொடுத்து வருகிறார், தமிழ்நாட்டின் முதல்வர். வழங்கப்படும் திட்டங்கள் எவ்வகையிலும், யாராலும் சலுகை என்ற பொருளில் நினைக்கப்படவோ, பேசப்படவோ கூடாது என்ற திராவிட இயக்கத்திற்கே உரித்தான சிந்தனையில் ஒவ்வொரு திட்டத்தின் போதும், "மகளிர் உயர, மாநிலம் உயரும்" என்று உரக்க சொல்கிறார்.

- ★ புதிய மகளிர் கல்லூரிகள்
- ★ புதிய மகளிர் காவல் நிலையம்
- ★ அரசுப் பணிகளில் 40% இட ஒதுக்கீடு
- ★ பெண்களுக்கு ரூ.25,000 கோடி கடன்
- ★ சுய உதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி
- ★ உள்ளாட்சி தேர்தலில் 50% பெண்களுக்கு இட ஒதுக்கீடு
- ★ 11 மாநகராட்சியில் பெண் மேயர்
- ★ 12 மாத பேறு கால விடுப்பு
- ★ பணிபுரியும் பெண்களுக்கு விடுதி வசதி

என்று எண்ணிலடங்கா திட்டங்களை பெற்று மகளிர் நிலை அனுதினமும் உயர்கிறது.

எந்த நிலை அடைந்தாலும், பாலியல் வன்புணர்வு, பாலியல் சீண்டல்கள் என்று பெண்களை அச்சுறுத்தும் சமூகத்தில், கட்சிக்காரராக இருப்பினும் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் நடப்பின், தண்டனை நிச்சயம் என்று சட்டமன்றத்தில் முதல்வர் எழுப்பிய குரல்தான், அவரின் துணிச்சல்மிகு ஆட்சி முறை தான் பெண்கள் பாதுகாப்பாக வாழும் மாநிலங்களில் தமிழ்நாடு முதல் இடத்தை பெற முதன்மை காரணம். பெண் உரிமை மீட்புப் போரில் நாம் வெற்றியடைய, என்றும் தமிழ்நாடு அரசு நம்முடன் கரம் கோர்த்து நிற்கும் என்ற உறுதி பெற்று நிற்கிறது, தமிழ்நாடு.

உயரட்டும் மகளிர் நிலை!

தொடரட்டும் திராவிட மாடல் அரசு!

★★★





‘அனைவருக்கும் அனைத்தும்’ உள்ள நலமான தமிழ்நாடு



மருத்துவர். ப.மீ.யாழினி,

‘**அனைவருக்கும் நலவாழ்வு**’ என்ற உயரிய இலக்கை அடைய மக்களின் வீடுகளுக்கே சென்று சுகாதார சேவைகளை வழங்கிடும் “மக்களைத் தேடி மருத்துவம்” என்ற புதிய திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 5 ஆகஸ்ட் 2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளி கிராமத்தில் தொடங்கி வைத்தார்.

29 செப்டம்பர் 2021 அன்று கலைஞரின் ‘வருமுன் காப்போம்’ திட்டத்தை மீண்டும் புதுப்பொலிவுடன் சேலம் மாவட்டம் வாழப்பாடியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, குடல் நோய், குழந்தை நலம், கண், காது – தொண்டை – மூக்கு மருத்துவம், மனநலம் என 16 சிறப்புத் துறை மருத்துவர்களுடன் இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் 75ஆம் ஆண்டு சுதந்திர தின பெருவிழாவை முன்னிட்டு, நவம்பர் 16 முதல் டிசம்பர் 12 வரை, 2021ஆம் ஆண்டு, நாடு முழுவதும் தொற்றா நோய்களுக்கான (Non Communicable Disease) பரிசோதனைகள் அனைத்து மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் மேற்கொண்டன. அதன்படி, இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான தொற்றா நோய்களுக்கான (Non Communicable Disease) பரிசோதனைகளை, சுமார் 29.8 இலட்சம் பரிசோதனைகளை மேற்கொண்டமைக்கான பரிசினை தமிழ்நாடு அரசு பெற்றது.

மேற்சொன்ன மூன்று செய்திகளில், நம் மாநிலத்தின் மருத்துவத் துறை சிறப்பாக செயல்படுகிறது என்பதையும் தாண்டி ஒரு முக்கியமான செய்தி பொதிந்துள்ளது. அது என்னவெனில், இம்மூன்று செய்திகளும் தமிழ்நாடு அரசின் தொலைநோக்குப் பார்வைக்கான அத்தாட்சி.

மாறிவரும் தமிழ்நாடும் முதலமைச்சரின் கொள்கை முழக்கமும்

இந்தியாவை பொறுத்த வரை பெரும் நகரமயமாக்கம் (urbanization) நடந்து வரும் பெரும் மாநிலங்களில் முதன்மையானது தமிழ்நாடு. மாறி வரும் வாழ்க்கை சூழல்களாலும் கடந்த பல பத்தாண்டுகளில் தொற்று நோய் தடுப்பினில் (prevention of communicable diseases) அரசு பெரும் நாட்டம் காட்டியமையாலும் தொற்று நோய்களால் இறப்பவர்களை விட தொற்றா நோய்களால் பாதிக்கப்படுபவர்களின், இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகி உள்ளது.



இந்த மாற்றத்தை தெளிவாக உணர்ந்த முத்தமிழறிஞர் கலைஞரின் தலைமையிலான அன்றைய தி.மு.க. அரசு, ஆட்சிக்கு வந்த 2006ஆம் வருடம், டிசம்பர் 30ஆம் நாள் அன்று 'வருமுன் காப்போம்' திட்டத்தினை தொடங்கினார்கள். 2006 முதல் 2011 வரை, 18,742 மருத்துவ முகாம்கள் மூலம் ஒரு கோடியே 72 இலட்சத்து 5 ஆயிரம் மக்கள் பயனடைந்தனர்.

2017ஆம் ஆண்டு புகழ்பெற்ற லான்செட் மருத்துவ இதழில் வெளியான கட்டுரை, "Nations within a nation: variations in epidemiological transition across the states of India, 1990-2016 in the Global Burden of Disease Study"இன் படி, தொற்று மற்றும் ஊட்டச்சத்து குறைபாடினால் ஏற்படும் நோய்கள், மகப்பேறின் போது ஏற்படும் சிக்கல்கள், பச்சிளம் குழந்தைகளுக்கு ஏற்படும் உடல்நலச் சிக்கல்களினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை மற்றும் தொற்றா நோய்களினால் பாதிக்கப்படுவோரின் எண்ணைக்கையின் விகிதம், 1990களில் ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம், ஒடிஷா போன்ற மாநிலங்களில் கிட்டத்தட்ட 2 ஆகவும், தமிழ்நாட்டில் 1.02 ஆகவும், கேரளத்தில் 0.42 ஆகவும் இருந்தது. 2016ஆம் ஆண்டில், இந்த விகிதம், ராஜஸ்தானில் 0.66 ஆகவும், மத்திய பிரதேசத்தில் 0.60 ஆகவும், உத்தர பிரதேசத்தில் 0.68 ஆகவும், ஒடிஷாவில் 0.58 ஆகவும், தமிழ்நாட்டில் 0.26 ஆகவும் கேரளத்தில் 0.16 ஆகவும் இருந்தது.

இதிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், இந்தியா முழுவதும் தற்போது மக்கள் பெருமளவில் தொற்றா நோய்களாலேயே பாதிக்கப்படுகின்றார்கள்.

இப்படிப்பட்ட சூழலில், நாம் நம் எதிர்கால தமிழ்நாட்டு வாழ் மக்களுக்கான சுகாதார கட்டமைப்பினை உருவாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. அத்தகைய மாபெரும் செயலினை கையில் எடுத்துள்ளது நம் அரசு.

இப்பொழுது நாம் இருக்கும் நிலையினை சற்று விளக்கமாக பார்க்கலாம்.

- நம் மக்கள் தொகையில் இனி 60 வயதினை கடந்தவர்கள் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்துக்கொண்டே இருக்கப்போகிறது.
- பிள்ளைப்பேறு கடந்த சில பத்தாண்டுகளில் கணிசமான அளவு குறைந்துள்ளதால், வயதான பெற்றோரினை பார்த்துக்கொள்ளும் கடமை கொண்ட இளம் வயதினரின் எண்ணிக்கையும் அதிகரிக்கப் போகின்றது.
- தங்கள் முதல் குழந்தையினை பெற்றுக்கொள்ளும் தம்பதியினரின் வயதும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது.
- 70 – 80 வயது தாண்டி வாழும் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகின்றது. மேலும் தொற்றா நோய்களினால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது.

இத்தகைய சூழலில், மூப்பின் காரணமாகவும் தொற்றா நோய்களின் காரணமாகவும் ஏற்படும் சிக்கலான உடல்நலக்குறைவினை எதிர்கொள்ள நமக்குத் தேவையான சுகாதார கட்டமைப்பென்பது, வெறும் கட்டடங்களை கட்டுவதோடு நிற்கப்போவதில்லை.



- மாவட்டம் தோறும் உயர் சிகிச்சை வழங்குவதற்கான மருத்துவமனை உள்கட்டமைப்கட்டமைப்பை முன்னேற்றுவதற்கான திட்டங்கள்
- சிறப்பாக வடிவமைக்கப்பட்ட அரசாங்க காப்பீட்டுத் திட்டங்கள்
- மருத்துவ உயர் கல்வியினை அரசு மருத்துவக் கல்லூரிகளில் வழங்கி அப்படிப்பட்ட உயர் பயிற்சியினைக் கொண்ட மருத்துவர்களை அரசு மருத்துவமனைகளில் பணியாற்ற வைக்கும் திட்டங்கள்
- தொற்றா நோய்களை ஆரம்பக்கட்டத்திலேயே கண்டறிந்து சிகிச்சை வழங்கும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் மற்றும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்
- இந்தியாவிலேயே முன்னோடியான இன்னுயிர் காப்போம் திட்டம் என்பது போன்ற தொலைநோக்குடனான முன்னெடுப்புகளை, "அனைவருக்கும் அனைத்தும்" என்ற மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முழுக்கத்துடன் பொருத்திப் பார்க்க வேண்டியுள்ளது.

திராவிட மாடல்

தமிழ்நாடு மாநில திட்டக்குழுவின் துணைத் தலைவர் முனைவர். ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள் திராவிட மாடல் பற்றிப் பேசும்போது, வாய்ப்புகள் எந்த வகையினில் மக்களுக்கு மறுக்கப்பட்டிருந்தாலும் அந்த வாய்ப்பை உருவாக்கித் தருவது தான் அரசியல் நடைமுறை என்றும் நிலம், குடியிருப்பு, கல்வி, உணவு, கலை என்பவற்றை உள்ளடக்கி, இவைகளில் அனைவரையும் பங்குபெற வைத்து, இதன் வழியாக சமூக மாற்றத்தை உருவாக்கி, அந்த மாற்றத்தின் விளைவாக பொருளாதாரத்தை உயர்த்தி காட்டியுள்ள இயக்கம், தி.மு.க. என்று கூறினார்.

மேலும், தமிழ்நாட்டின் 50 ஆண்டு கால வளர்ச்சியை எண்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியாது என்பதைக் கூறிய அவர், சமுதாய மாற்றங்கள் வழியாக இந்த வளர்ச்சி எப்படி ஜனநாயகப் படுத்தப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொண்டு இந்த இயக்கத்தின் இயங்கு தத்துவத்தை புரிந்து கொண்டால் தான் தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசியலாக்கி வரும் திராவிட மாடல் என்பதன் அர்த்தம் புரியும் என்று திராவிட மாடல் என்றால் என்ன என்பதை அடிக்கோடிட்டு காட்டியுள்ளார்.

மருத்துவ கட்டமைப்பு மற்றும் தொடர் சட்டப் போராட்டம்

திராவிட மாடலின் வெற்றியினை அறிந்துகொள்ள நாம் வெகு தூரம் செல்ல வேண்டியதில்லை. நம் அரசாங்க மருத்துவமனைகளும் ஆரம்ப சுகாதார மையங்களும் என்றும் மனித வளக் குறைவினால் பாதிக்கப்பட்டதில்லை. காரணம், திராவிட மாடல் அரசாங்கத்தில் 'மெரிட்' (தகுதி) என்றால் என்ன என்பது குறித்த சமூக நன்மையோடு பின்னிப்பிணைந்த தெளிவான வரையறை இருக்கிறது.

நம் மாடலின்படி, எம்.பி.பி.எஸ். படித்த பின், அரசு வேலையில் இணைந்து ஆரம்ப சுகாதார மையத்தில், கிராமப்புறங்களில் வேலை செய்வோருக்கு முதுகலை பட்டப்படிப்பு (M.D./M.S.) மற்றும் சூப்பர் ஸ்பெஷாலிட்டி படிப்புகளில் (D.M./M.Ch.), 50% இடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இதனால், மனித வளமும் மேம்பாடு அடைந்தது, நம் மருத்துவ கட்டமைப்பிற்கு தொடர்ச்சியான மனித வளமும் கிடைத்தது மேலும் நம் மக்களுக்கு உயர் சிகிச்சையானது அருகாமையிலேயே கிடைத்தது. இதனால் தான் பல்நோக்கு உயர் சிகிச்சை அளிப்பதற்கான மருத்துவர்கள், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற பெரு நகரங்களைத் தாண்டி இரண்டாம் நிலை நகரங்களிலும் இன்று இருக்கின்றார்கள்.

இந்த கட்டமைப்பை உருக்குலையாமல் காப்பாற்றவே, ஒன்றிய அரசாங்கத்தின் தலையீடு மாணவர் சேர்க்கையில் இருக்கக்கூடாது என நமது தமிழ்நாடு அரசு தொடர்ச்சியான சட்டப்போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றது. மேலும், திமுக தொடர்ச்சியாக அகில இந்திய மருத்துவ மாணவர் சேர்க்கையில் சமூக நீதி ஒழுங்குடன் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக சட்டப்போராட்டத்தினையும் நடத்தி வருகின்றது.

எம்.பி.பி.எஸ். படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வினை தமிழ்நாடு அரசும் தி.மு.க.வும் வலுவாக எதிர்ப்பதற்கான காரணமும் இது தான். தகுதி என்ற பெயரில், முதல் தலைமுறை மருத்துவர்கள் உருவாவதற்கான சூழலை இந்த தேர்வு குலைக்கிறது, ஏழை மற்றும் கிராமப்புற, சிறுநகர மாணவர்களை தேர்வுக்காக பணத்தையும் நேரத்தையும் செலவழிக்க வைக்கிறது. அதிலும் குறிப்பாக பிறப்படுத்தப்பட்ட, பட்டியல் இனத்தவர்கள் மற்றும் பழங்குடிகளில் உள்ள பெரும்பான்மையானவருக்கு, குறிப்பாக பெண் மாணவர்களுக்கு இந்த தேர்வு முறை எதிராகவே இருக்கின்றது.

உச்சநீதிமன்ற நீதிபதிகளான ஜஸ்டிஸ் D.Y.சந்திரசூட் மற்றும் ஜஸ்டிஸ் A.S.போபண்ணா, இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ மற்றும் பல் மருத்துவப் படிப்புகளுக்கான அகில இந்திய கோட்டாவில் (All India Quota) உள்ள இடங்களில் இதர பிற்படுத்தப்பட்டவருக்கான இட ஒதுக்கீடு பின்பற்றப்படவேண்டும் என்று தீர்ப்பளித்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பில் தகுதி (Merit) குறித்து

ஒரு முக்கிய செய்தியினை சொல்லியிருப்பார்கள் அது என்னவெனில், “Merit should be socially contextualised and reconceptualised as an instrument that advances social goods like equality that we as a society value”.

ஆக, தமிழ்நாடு அரசு மற்றும் திமுக எதிர்க்கும் நீட் தேர்வு, சமூக நீதிக்கு எதிரானது என்பதோடு அது நம் மருத்துவ கட்டமைப்பிற்கும் எதிரான தேர்வு முறை.

சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவப் படிப்பிற்கான இடங்களில் அரசு மருத்துவர்களுக்கான 50% இடஒதுக்கீடு என்பது முன் சொன்னது போல சிறப்பான மனித வளம் நம் மாநிலத்திற்கு தொடர்ச்சியாக கிடைக்க வேண்டி, தமிழ்நாடு அரசு எடுத்த கொள்கை முடிவு. இதனை ஒன்றிய அரசின் கொள்கை முடிவுகள் நீக்கியதால் எழுந்த சிக்கலை எதிர்கொள்ள தமிழ்நாடு அரசு உறுதியான சட்டப் போராட்டத்தில் ஈடுபட்டு தனது கொள்கை முடிவின் இருப்பை நிலைநாட்டியது.

இதில் குறிப்பிடத்தகுந்த இன்னொரு செய்தி என்னவென்றால், கடந்த 2011 முதல் 2021 வரை எதிர்க்கட்சியாக இருந்த போதும் ஒன்றிய அரசின் இடையீடுகளை, குறிப்பாக மருத்துவ கட்டமைப்பில் அவர்களின் இடையீடுகளை தீவிரமாக எதிர்த்ததோடு அன்றிருந்த ஆளும் கட்சியையும் நம் மாநில உரிமைகள் பறிபோகாமல் இருக்கும் வகையினில் தெளிவான, ஆணித்தரமான கொள்கை முடிவுகளை எடுக்கப் பணித்தனர்.

நீட் தேர்வு மற்றும் முதுகலை மருத்துவ படிப்புகளிலும், சூப்பர் ஸ்பெசாலிட்டி படிப்புகளிலும் மாணவர் தேர்வு சமூக நீதியின் படி இருக்கவேண்டும் என்பதிலும், உருவாக்கப்படும் மனித வளம் தமிழ்நாட்டிற்கு பயன்படும் வகையினில் இருக்கும் திட்டங்கள் எந்த வித இடையீட்டினாலும் நீக்கப்படக்கூடாது என்பதிலும் எதிர்க்கட்சியாக இருக்கும்போது இருந்த அதே தீவிரத்துடன் ஆளும் கட்சியாக இருக்கும் போதும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலினின் தலைமையிலான திமுகழகம் உறுதியான முடிவுகளை எடுத்துவருகிறது இந்தியாவுக்கே முன்னுதாரணமாக ஏன் நீட் தேர்வு நீக்கப்படவேண்டும் என்பதற்கான அறிக்கையை ஜஸ்டிஸ் கிரிராஜன் கமிட்டி வழி உருவாக்கி நீதிமன்றத்துக்கும் சமர்ப்பித்து மக்கள் மன்றத்திடமும் சமர்ப்பித்துள்ளது.

கொரோனா பெருந்தொற்றும் அரசின் சீரிய மேலாண்மையும் கழக ஆட்சி வந்த முதல் நாளில் இருந்தே கொரோனா பெருந்தொற்றினை வீறுடன் எதிர்கொண்டது நம் தமிழ்நாடு அரசு. திமுகழகம் எதிர்க்கட்சியாக இருக்கும் போதே, பெரும் தொற்று காலத்தில், ‘ஒன்றிணைவோம் வா’ என்ற முழக்கத்தின் வழி, உதவி தேவைப்படும் மக்களுக்கு உதவிகளை கட்சிக் கட்டமைப்பின் வழி அளித்தது.



ஆட்சிக்கு வந்த உடனேயே கோவிட் பெருந்தொற்றினை வீறுடன் எதிர்கொள்ள மருத்துவமனைகளின் படுக்கை எண்ணிக்கை அதிகரிப்பு, பெருந்தொடரினால் பாதிக்கப்பட்ட மக்களின் சிகிச்சைக்கான கோவிட் வார்டு உருவாக்கம், மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவ ஒவ்வொரு குடும்ப அட்டைக்கு 4,000 ரூபாய் உதவித்தொகை, மக்களுக்கு வழங்க உயிர் காக்கும் மருந்துகள் கொள்முதல், மற்றும் குறிப்பாக கோவிட்டினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைக்கான மருத்துவத் தரத்திலான ஆக்சிஜன் உற்பத்தி மற்றும் விநியோகம், அரசிற்கு இப்பெருந்தொற்று குறித்து ஆலோசனை வழங்க அனைத்துக் கட்சி பிரதிநிதிகளுடன் கூடிய குழு என பல முனை செயல்பாட்டினை தி.மு.கழக அரசு எடுத்தது.

அதோடு கோவிஷீல்டு மற்றும் கோவாக்சின் தடுப்பூசியினை மக்கள் எடுத்துக்கொள்ள அரசு இயந்திரம் முடுக்கிவிடப்பட்டு, ஒன்றிய அரசில் இருந்து பெறப்படும் தடுப்பூசியினை கேட்டுப்பெற்று, பரவலான



தடுப்பூசி பயன்பாட்டின் வழி மக்களின் ஆரோக்கியம் பெருந்தொற்றின் போது காக்கப்பட்டது.

அதோடு உயிர் காக்கும் மருந்துகளும் ஆக்சிஜனின் விநியோகத்தையும் உறுதி செய்து, தனியார் மருத்துவமனைகளில் பெருந்தொற்று காலத்தில் சிகிச்சைக்கான கட்டணத்தை பெரிதும் உயர்த்தாமல் உறுதி செய்து மக்களை காத்தனர். மேலும் கோவிட் பெருந்தொற்றின்போது சென்ற ஆட்சியில் நிகழ்ந்த கொள்முதல் சார் முறைகேடுகளை கண்டறிந்து, சரி செய்து அரசின் செலவை மக்களை நோக்கி செலுத்தியதும் பெரும் சாதனை.

கோவிட் பெருந்தொற்று பெருமளவில் கட்டுக்குள் கொண்டுவந்த அதே வேளையில், கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு மாரடைப்பு, இதய கோளாறு போன்றவற்றால் ஏற்படும் மரணங்கள் அதிகரித்துள்ளது என்பதை கண்டறிந்த சுகாதாரத்துறை, இது குறித்த ஆய்வினை மேற்கொள்ளும் என்று அண்மையில் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் திரு. மா.சுப்ரமணியம் அவர்கள் அறிவித்துள்ளார்.

மேலும் கோவிட் பெருந்தொற்று அலையினை எதிர்கொள்ள சுகாதாரத் துறையின் நிர்வாக இயந்திரம் சீராக இருப்பதை நடந்துகொண்டிருக்கும் சட்டப்பேரவை விவாதங்களில் உறுதி செய்த அமைச்சர், பின் செய்தியாளர்களிடம் பேசும்போது, நம்மிடம் 64,281 பெட்கள் தயாராக இருக்கிறது என்றும் அதில் ஆக்சிஜன் சப்ளை உடன் கூடிய பெட்கள் 33,644 என்றும் ஆக்சிஜன் சப்ளை இல்லாத பெட்கள் 22,820 என்றும் தீவிர சிகிச்சைப் பிரிவில் 7,797 பெட்கள் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

அதோடு நம்முடைய ஆக்சிஜன் உற்பத்திக்கான திறன், தற்பொழுது 2,067 மெட்ரிக் டன்னாக இருக்கின்றது என்று கூறிய அதே வேளையில், கோவிட் தொற்றினை கண்டறிய மாநிலம் முழுமைக்கும் 342 ஆர்டி – பிசிஆர் (RT - PCR) பரிசோதனை மையங்கள் இருப்பதாகவும் அதன் வழி ஒரு நாளில் 3 இலட்சம் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என்றும் உறுதியளித்துள்ளார்.

தொலைநோக்குக் கொண்ட திராவிட மாடல் பார்வை

மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப நம் அரசு அதன் அரசு இயந்திரத்தை செலுத்தி, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் கொள்கை முழக்கத்தினை ஒவ்வொரு அரசு துறையும் கடைபிடித்து வருகின்றது. அதன் வழி:

- தொற்றா நோய்களை கட்டுப்படுத்தும் நோக்கில், இவ்வகை நோய்களை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து உடல்நலச் சிக்கலை தடுத்தல், 45 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு இரத்த அழுத்தம்/நீரிழிவு நோய்களுக்கான மருந்துகளை வீடு சென்று வழங்குதல், சிறுநீரக நோயாளிகளை பராமரித்தல், குழந்தையின் பிறவிக் குறைபாட்டினை கண்டறிந்து தெரிவித்தல் என, குடும்பத்தின் உடல்நலம் குறித்த 360 டிகிரி கோணத்தை வழங்க தொடங்கப்பட்டதே 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம்.

  இவ்வகையில் மருத்துவம் வீடு சென்று வழங்கப்படும் போது மக்களுக்கு மருத்துவம் மீது நம்பிக்கை ஏற்படுவதோடு, தங்களின் உடல்நலம் குறித்தும் பயமில்லாமல் தெரிவிப்பார்கள் என்பது மேல்நாட்டு ஆராய்ச்சியாளர்களின் ஆய்வு முடிவு. அதனை பிரதிபலிக்கும் வகையினில், தொற்றா நோய்களை கட்டுப்படுத்த திட்டம் தீட்டிய அரசு, இதன் வழி மக்களின் வாழ்க்கை தரத்தினை (Quality of Life) மேம்படுத்துதல், அதன் மூலம் உடல்நலத்திற்காக தங்கள் கை காசினை செலவு (Out of Pocket) செய்வதை தடுத்தல், அவர்களை பார்த்துக்கொள்ளும் குடும்பத்தினரின் பொருளாதார நிலைக்கு பங்கம் வராமல் பார்த்துக்கொள்ளல் போன்ற சிறப்பான முடிவுகளை அடைய பணிகளை மேற்கொள்ளுகிறது.

- ஏழை, எளிய மக்களுக்கு ஏற்படும் நோயை முன்னமே சிறப்பு மருத்துவர்கள் வழி கண்டறிந்து அதற்கான சிகிச்சையினை தருவதற்காக கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- சாலை விபத்தினால் ஏற்படும் உயிர் இழப்புகளையும் அதனால் குடும்பங்களுக்கு ஏற்படும் எதிர்பாராத, சமாளிக்க முடியாத செலவினங்களைக் குறைக்கவும்



தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கப்பட்ட உயிர் காக்கும் திட்டமே, இன்னுயிர் காப்போம் திட்டம். இதில் உள்ள 'நம்மைக் காக்கும் – 48 திட்டம்' விபத்திற்குப் பின் சிகிச்சை அளிக்க ஏற்படும் காலதாமதத்தை உரைத்து உடனடி சிகிச்சை அளிப்பதே. இதன் மூலம் உயிரிழப்பு பெருமளவில் குறைக்கப்படும்.

மேலும், தமிழ்நாடு எல்லைக்குள் நிகழும் சாலை விபத்தினால் பாதிக்கப்படும் அனைவரும், அதாவது தமிழ்நாடு சார்ந்தவர்களோடு, பிற மாநிலத்தவர், புலம் பெயர்ந்தவர் மற்றும் வெளிநாட்டினர் என அனைவரும் இந்த திட்டத்தின் வழி பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. வள்ளலார் போதித்த ஜீவ காருண்யத்தின் நவீன வடிவமாகவே இந்த இன்னுயிர் காப்போம் திட்டம் பார்க்கப்படுகின்றது.

- முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தினால் மக்கள் பெரிதும் பயன்பெறுவதால், நம் அரசு இத்திட்டத்தினை மேலும் 5 வருடம் நீடித்துள்ளது. அதோடு, இத்திட்டத்தில் பெரும்பாலானோர் உறுப்பினராகச் சேர்ந்து வகையினில் குடும்ப ஆண்டு வருமானத்திற்கான உச்சவரம்பு, ரூபாய் 72,000/– லிருந்து ரூபாய் 1,20,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- மக்களுக்கு உயர் சிகிச்சையினை வழங்க வேண்டி தென் சென்னையில் புதிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, முதலமைச்சரால் 21 மார்ச் 2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

- உயர் ரக நவீன சிகிச்சை எளிய மக்களுக்கு கிடைக்க வேண்டி அரசு தொடர்ச்சியாக முதலீடு செய்து வருகின்றது. அதன் நீட்சியாக சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரியில் அமைந்துள்ள ஸ்டெம் செல் ஆராய்ச்சி மையம் (Stem Cell Research Centre), Department of Regenerative Medicine and Research ஆக மேம்படுத்தப்பட்டுள்ளது. இதனோடு கடினமான அறுவை சிகிச்சைகளை துல்லியமாக செய்ய நவீன ரோபோடிக் அறுவை சிகிச்சை மையம், சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் மாண்புமிகு முதலமைச்சர், 15 மார்ச் 2022 அன்று தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

- தாய் மற்றும் சேய் நலத்தில் தமிழ்நாடு சிறந்து விளங்குவது அனைவரும் அறிந்ததே. அதன் நீட்சியாக, அனைத்து கர்ப்பிணிப் பெண்களுக்கும் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கும் திட்டவட்டமான அவசர சேவைகளை வழங்க விரிவான அவசரகால மகப்பேறியல் மற்றும் பிறந்த குழந்தை பராமரிப்பு மையங்கள் தொடங்கப்பட்டது. இந்த அரசு சுகாதாரத் துறையின் இக்கொள்கை முடிவுகளுக்கு உறுதியாக தன்னுடைய ஆதரவைத் தந்து கொண்டிருக்கிறது. மேலும் சுகாதாரக் குறியீடுகளான குழந்தை இறப்பு விகிதம் மற்றும் மகப்பேறின் போது தாய்மார்கள் இறப்பு விகிதத்தில் தமிழ்நாடு சிறப்பான செயல்பாட்டினை வெளிப்படுத்தி வருகின்றது. தமிழ்நாட்டில் உள்ள 1,804 ஆரம்ப சுகாதார மையங்களில், 1,776 ஆரம்ப சுகாதார மையங்களில், 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

- முக்கியமாக, ஒன்றிய அரசின் செயல்பாடுகளினால் மாநில உரிமைகள் பறிபோகும் இவ்வேளையில், நம் மருத்துவ உள்கட்டமைப்பு சிதையாமல் பாதுகாத்து, மருத்துவத் துறையில் என்றும் அனைவருக்குமான சூழல் அமைய, என்றும் நம் மருத்துவத்துறை அனைவருக்குமான உயர் மருத்துவ சேவைகளை வழங்க தொடர் சட்டப்போராட்டங்களில் நம் தமிழ்நாடு அரசு ஈடுபட்டுவருகின்றது.

இவ்வாறு, திராவிட மாடல் ஆட்சியினை செயல்படுத்தி வரும் நம் முதலமைச்சர் மற்றும் தி.மு.கழகத் தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் முழக்கமான 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற கொள்கை முழக்கத்தை சிரமேற்கொண்டு முன்னெடுத்து, தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவின் சிறந்த மருத்துவ கட்டமைப்பினை கொண்ட மாநிலமாக உருவெடுக்க தமிழ்நாடு வீறு நடைப் போட்டு சென்று கொண்டிருக்கிறது.

நம் தமிழ்நாடும் நம் தமிழ் மக்களும் சிறப்பான உடல்நலத்துடன் சிறந்த வாழ்க்கைத் தரத்துடன் வாழ, சுகாதாரத்துறையில் அரசு முதலீடுகளை அதிகப்படுத்திக் கொண்டிருக்கும் அதே வேளையில், சாலை உட்கட்டமைப்பை சீராக்கி, பொதுப் போக்குவரத்து (பேருந்து, மெட்ரோ) தரத்தினை மேம்படுத்தி, காடுகள் வளர்த்தல், நகரங்களில் அடர்வனங்கள் உருவாக்குதல், நீர் நிலைகளை பாதுகாத்தல், வறட்சியை எதிர்கொள்ள கடல் நீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவு நீர் மறுபயன்பாட்டிற்கான உள்கட்டமைப்பை உருவாக்குதல், நீர் வழங்குதல், கழிவுநீர் அகற்றல் மற்றும் வெள்ள நீர் அகற்றலில், திடக்கழிவு மேலாண்மையில் பெரும் உழைப்பை, முதலீட்டினை நல்கி சிங்காரச் சென்னை தந்த நம் கழகத் தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 'எல்லோருக்கும் எல்லாம்' உள்ள நாளைய தமிழ்நாட்டினை, அனைவருடன் இணைந்து உருவாக்கிக் கொண்டிருக்கின்றார் என்றால் அது மிகையல்ல.

★★★



இரு நூற்றாண்டு கனவும், ஈராண்டு கால திராவிட மாடல் அரசும்



சூரியா கிருஷ்ணமூர்த்தி

இந்திய நிலப்பரப்பில் மிகப்பெரும்பகுதியை தன் ஆளுகைக்கு கீழ் கொண்டு வந்த கிழக்கிந்திய கம்பெனி, நிர்வாக வசதிக்காக சென்னை, பம்பாய் மற்றும் கல்கத்தா என மூன்று மாகாணங்களை உருவாக்கி, அதனை நிர்வகிக்க தனித்தனி கவர்னர்களை நியமித்தது.

இதனை தொடர்ந்து 1773 ஆம் ஆண்டு பிரித்தானிய நாடாளுமன்றம் ஒழுங்குமுறை சட்டம் ஒன்றை கொண்டு வந்தது. இச்சட்டத்தின் அடிப்படையில் கல்கத்தா மாகாணம் மத்திய மாகாணமாக்கப்பட்டு, சென்னை மற்றும் பம்பாய் மாகாணங்கள் அதன் ஆளுகைக்கு கீழ் கொண்டு வரப்பட்டன. கல்கத்தா மாகாண கவர்னர் இந்தியாவின் கவர்னர் ஜெனரலானார், மற்ற மாகாண கவர்னர்கள் அவர்களின் அதிகாரங்களை இழந்து, அவரது ஆளுகைக்கு உட்பட்டவரானார்கள். அதுவரையில் சட்டமியற்றும் அதிகாரங்களை பெற்றிருந்த சென்னையும், பம்பாயும் கல்கத்தா மத்திய மாகாணத்திடம் தங்கள் அதிகாரங்களை பறிகொடுத்தன.

மாகாணங்கள் உருவாக்கத்திற்கு பிறகு நடைபெற்ற முதல் உரிமை பறிப்பும், அதிகார குவிப்புமான இந்நிகழ்வு நடந்தேறி இரண்டரை நூற்றாண்டுகள் கடந்துவிட்டன.

அதிகாரங்களை இழந்த சென்னை மற்றும் பம்பாய் மாகாணங்கள் உரிமைக்குரல் எழுப்பின, அவை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் எதிரொலித்தன. விளைவாக 1853ஆம் ஆண்டில், மத்திய மாகாண நிர்வாக உறவுகளை ஆராய விசாரணைக் குழுவை அமைத்தது பிரிட்டிஷ் பாராளுமன்றம்.

மாகாண உரிமை தொடர்பான வரலாற்றை இந்நிகழ்விலிருந்து தொடங்கினால் கூட, மாநில உரிமைக் குரலுக்கு 170 ஆண்டு கால நெடிய வரலாற்றை நாம் பேச முடியும். விக்டோரியா ராணியின் பிரகடனத்தின் பேரில், கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியிலிருந்து பிரிட்டிஷ் அரசின் நேரடி கட்டுப்பாட்டிற்கு இந்தியா வந்து சேர்ந்தது 1858 ஆம் ஆண்டு தான். அவ்வகையில் பிரிட்டிஷ் இந்தியாவின் வரலாற்றை விடவும் நீளமானது மாகாண / மாநில உரிமை போராட்டங்களின் வரலாறு.

பிரிட்டிஷ் ஆதிக்க கவர்னர் ஜெனரலுக்கும், பிரிட்டிஷ் மாகாண கவர்னர்களுக்கும் இடையேயான போராட்டம், பிரிட்டிஷ் இந்திய அரசுக்கு எதிராக இந்தியமயமாக்கலின் இணை கோரிக்கையாக அரசியல் நிர்ணய

> **மாநில சுயாட்சி தான் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும் என்கிற செய்தியை, இந்நாட்டிற்கு கவுன்சில் கூட்டத்தின் வழியாக விளக்கியிருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.**

சபை விவாதம் வரையில் காங்கிரஸ் கோரிய மாகாண சுயாட்சி, அரசியல் நிர்ணய சபை விவாத காலத்தில் பேசப்பட்ட மாகாண / மாநில சுயாட்சி, ஒன்றியத்திலும் மாநிலங்களிலும் வெவ்வேறு அரசுகள் பெருமளவு அமையத் தொடங்கிய 1967க்கு பிறகான காலத்தில் எழுப்பப்பட்ட மாநில சுயாட்சி என காலந்தோறும் இந்த உரிமைக் களத்தின் துருவங்களும், முகங்களும், வடிவங்களும், உள்ளீடுகளும் மாறிக்கொண்டே வந்திருக்கின்றன.

அன்று கல்கத்தாவுக்கும், சென்னைக்கும் இடையேயான சமர், இன்று டெல்லிக்கும் சென்னைக்கும் நடைபெறுகிறது. மத்திய அரசுக்கும் மாகாண அரசுகளுக்கும் இடையேயான விவாதம் ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையே நிகழ்கிறது. மாகாண கவர்னர்கள் எழுப்பிய குரலை இன்று மாநில முதல்வர்கள் எழுப்பி வருகிறார்கள்.

வேறெந்த மாற்றமும் பெரிதாக நிகழ்ந்துவிடவில்லை, மாறாக நெருக்கடிகள் அதிகரித்துள்ளன. மாகாண கவர்னர்களின் உரிமைக்குரலை மதித்து, 1853ஆம் ஆண்டு விசாரணைக்குழு கவர்னர் ஜெனரலின் நிர்வாகக் குழுவில் மாகாண பிரதிநிதிகளையும் இணைத்தது. ஆனால், அப்படியான வெற்றிகளை நினைத்து பார்க்க இயலாத காலத்தில் இன்று நாம் வாழ்கிறோம்.

மாநில உரிமை செயற்களத்தில் வலிமை மிக்க குரல்கள் முற்றாக மங்கிவிட்ட சூழலில், நிராதரவும், அவநம்பிக்கையும், கைவிடப்பட்ட உணர்வும் சூழ்ந்து அச்சமூட்டிய ஓர் நாளில், தமிழ்நாட்டின் அரசு பொறுப்பேற்று 'திராவிட மாடல்' அரசை நிறுவினார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

வரலாற்றின் ஒட்டுமொத்த மாநில சுயாட்சி குரலுக்கும் முகமாக, மாநில சுயாட்சி சமர்க்களத்தை உயிர்ப்பித்து, தலைமையேற்று வழிநடத்தும் இடத்திற்கு இந்த ஈராண்டுகளில் வந்து சேர்ந்திருக்கிறார் நம்முடைய முதலமைச்சர்.

மாநில சுயாட்சி என்கிற சொல் தமிழ்நாட்டிற்கு புதியது அல்ல, தமிழ்நாட்டு அரசியலின் எழுபது ஆண்டு கால மையச்சரடு அது.

அரசியல் நிர்ணய சபையில் எங்களுக்கு என்ன பங்கு என்று கேட்டார் பெரியார், ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையேயான அதிகார பகிர்வு பிரிட்டிஷ் இந்தியாவின் ஏற்பாட்டை விட மோசமாக உள்ளதாக குறைபட்டுக்கொண்டார், மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள குறைந்தபட்ச அதிகாரங்களும் கூட ஆளுநரின் பெயரில் வழங்கப்பட்டுள்ளது, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை பொம்மையாக்கும் நடவடிக்கை என்று கடுமையாக கண்டித்தார்.

ஆட்சிக்கு வந்ததே இந்த அதிகாரமற்ற அமைப்பின் சிக்கல்களை மக்களிடம் எடுத்துச்சொல்ல தான் என்கிற அளவுக்கு மாநில சுயாட்சியை பெரிதென நினைத்தார் பேரறிஞர் அண்ணா. இந்திய நாடாளுமன்றத்தின் நிறைந்த அவையில், டெல்லி ராஜபாதைகள் நடுங்கும் வகையில் சுயநிர்ணய உரிமை கோரினார் அவர். அதிகார மட்டத்திலான விவாதங்களை மக்கள் மயப்படுத்தி, தமிழ்நாட்டு அரசியலின் பிரதான பேசுபொருளாக அதனை மாற்றியவரும் அவர் தான். எல்லாவற்றையும் விட அவரது மரண சாசனமே மாநில சுயாட்சிதான்.

திசைக்கொன்றாய், தன்னியல்பாய், ஒழுங்கற்று பேசப்பட்ட வாதங்களுக்கு ராஜமன்னார் ஆணையத்தின் வழியாக முறையான வடிவம் கொடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி மாநில சுயாட்சியை அரசு ஆவணமாக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர்.

ராஜமன்னார் ஆணையம் மற்றும் அது தொடர்பான கொந்தளிப்பான வாதப் பிரதிவாதங்களின் பொன்விழாவை எதிர்கொண்டிருக்கிறோம் நாம்.

இந்த அரை நூற்றாண்டில் மாநில சுயாட்சி வாதங்களின் உள்ளீட்டுகளில் பெருமளவு மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

அரசமைப்பு சாசனத்தின் 356ஆவது பிரிவை கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை துச்சமாய் எண்ணி கலைத்தது அன்று மிகப்பிரதானமான வாதமாக இருந்தது. எஸ்.ஆர்.பொம்மை வழக்கின் தீர்ப்புக்கு பின்னர் அந்த நிலை மாறியிருக்கிறது.

மாநிலங்களின் வரிவிதிப்பு உரிமைகளை கூட்டுவது தொடர்பான கோரிக்கைகள் அன்று முதன்மையாக இடம்பிடித்தன, இன்று வரி விதிப்பு உரிமைகளையே மாநில அரசுகள் இழந்து நிற்கின்றன. ஏறக்குறைய நாடாளுமன்றமும் கூட அந்த உரிமையை இழந்துவிட்ட கொடுங்காலத்தில் நாம் இருக்கிறோம்.

பொருளாதாரத்தில் தொண்ணூறுகளுக்கு பிறகான நவதாராளமய அலை, அரசியலில் மத அடிப்படைவாத எழுச்சி என்கிற இரண்டு பெரும் மாற்றங்களை நாம் சந்தித்திருக்கிறோம்.

எனவே ஐம்பது ஆண்டுகளை கடந்துவிட்ட நம்முடைய மாநில சுயாட்சி வாதங்களை மறுவரையறை செய்ய வேண்டிய காலம் வந்து சேர்ந்திருக்கிறது.



காலம் கோருகின்ற உள்ளீட்டு மாற்றங்களை முன்வைப்பவராகவும், அதனை நாடெங்கிலும் முன்னெடுத்து செல்பவராகவும் இருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அதற்கான செயற்களமாக, 'திராவிட மாடல்' அரசு இந்த இரண்டு ஆண்டுகளில் செயல்பட்டிருக்கிறது.

தென்மண்டல கவுன்சில் கூட்டம்

03, செப்டம்பர் 2022 அன்று திருவனந்தபுரத்தில், 30வது தென்மண்டல கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரை, நவீன கால மாநில சுயாட்சி உரையாடலுக்கு அடிப்படை ஆவணம். இவ்வுரையில் மூன்று பிரதான அம்சங்கள் முன்வைக்கப்பட்டது.

1) மாநிலங்களுக்கான நிவாரண நிதி மற்றும் ஜி.எஸ்.டி இழப்பீட்டு தொகையை நீட்டிப்பது.

தமிழ்நாடு உள்ளிட்ட உற்பத்தி மாநிலங்களுக்கு, 2015–2016ஆம் ஆண்டில் கிடைத்த வருவாயை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு நிதியாண்டிற்கும் 14% வளர்ச்சி கணக்கிட்டு ஐந்து ஆண்டுகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்கிற உத்திரவாதத்தின்

அடிப்படையில் நமது வரிவிதிப்பு உரிமைகள் பறிக்கப்பட்டன.

ரூ.40,000 கோடி அளவிற்கு இழப்பீடு பெற்ற வகையில், நாட்டிலேயே அதிக வருவாய் இழப்பை எதிர்கொண்ட மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.

வரி விதிப்பு உரிமையை மாநிலங்கள் ஐந்து ஆண்டுகளுக்கு மட்டும் இழக்கவில்லை என்கிறபோது, இழப்பீட்டை ஐந்து ஆண்டுகளுக்கு மட்டும் வழங்குவது என்ன நியாயம் என்று கேட்கிறது தமிழ்நாடு. ஜி.எஸ்.டி இழப்பீட்டை மேலும் நீட்டித்து வழங்க கோருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

2) தனியாருக்கு விற்கப்படும் அரசு சொத்துக்களில், மாநிலங்களுக்கான பங்கை கோருவது.



பல ஆண்டுகளாக, படிப்படியாக உருவாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள், விமான நிலையங்கள் உள்ளிட்ட தேசிய சொத்துக்களை விற்கும் சூழல் கடந்த சில வருடங்களாக ஒன்றிய அரசால் தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது.

மேற்கண்ட சொத்துக்களின் உருவாக்கத்தின்போது, அவற்றுக்கான நிலங்களை கையகப்படுத்தி கொடுத்தது மாநில அரசுகள். எனவே அவற்றை தனியாருக்கு விற்கும்போது, அந்நிலங்களுக்கான மதிப்பையும், பங்கையும் மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் சிந்தனைக்கே வராதவற்றை முன்வைத்து, நாடெங்கிலும் மிகப்பெரிய விவாதங்களை இதன் வழியாக ஏற்படுத்தியுள்ளது 'திராவிட மாடல்' அரசு.

3) வெளிநாடுகளுடனான தொழில் முதலீட்டு ஒப்பந்தங்களுக்கு உரிய காலத்தில் அனுமதி வழங்க கோருவது.

மாநில அரசுகளுக்கும் வெளிநாட்டு முகமைகளுக்கும் இடையேயான தொழில் உள்ளிட்ட ஒப்பந்தங்களை மாநில அரசுகளே மேற்கொள்ள வழிவகை செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்.

"வெளிநாட்டு நிறுவனங்கள், தூதரகங்கள், அமைச்சர்கள் சில நேரங்களில் மாநிலங்களுக்கு இடையேயும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்வதற்கான செயல்முறை திட்டத்தை உருவாக்க வேண்டும். அதே நேரத்தில் இதற்கான உரிய அனுமதி, தடையில்லா சான்று ஆகியவற்றை வெளியுறவு அமைச்சகம் தாமதமில்லாமல் தர வேண்டும். தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள், தொழில் மேம்பாடுகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்வதை எளிமைப்படுத்தும் வகையில் செயல்முறை திட்டம் இருக்க வேண்டும்" என்பது அவரது வலிமையான வாதம்.

மாநில சுயாட்சிதான் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும் என்கிற செய்தியை, இந்நாட்டிற்கு கவுன்சில் கூட்டத்தின் வழியாக விளக்கியிருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

பிரதமருடனான பொதுவெளி உரையாடல்கள்

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு முதல்முறையாக, மே 26, 2022 அன்று அரசு நிகழ்ச்சியில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையேயான நிதி பங்கீடுகள் குறித்து விவாதிக்கும் களமாக இருந்த திட்டக் குழு கலைக்கப்பட்ட பிறகு, மாநிலங்கள் தங்கள் கோரிக்கையை விவாதிப்பதற்கான இடம் அருகிப் போயிருந்தது.

இந்தியாவின் வளர்ச்சிக்கும், ஒருமைப்பாட்டிற்கும், மாநிலங்களின் சுயமரியாதைக்கும் தமிழ்நாடு பரிந்துரைத்த அரசியலமைப்பு தீர்வு 'மாநில சுயாட்சி'. அதற்காக நாளெல்லாம் போராடும் பணியை தனதாக்கிக் கொண்டுள்ளார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

இந்தச் சூழலில் அரசு நிகழ்ச்சியில், மாண்புமிகு பிரதமர் அவர்களிடம், பொதுமக்களின் முன்னிலையில் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கான பல்வேறு கோரிக்கைகளை எடுத்து வைத்தார் முதலமைச்சர் அவர்கள்.

அந்த கோரிக்கைகள் ஒவ்வொன்றையும் மாநில சுயாட்சி என்கிற பெரும் பயணத்தில் அசைக்க முடியாத மைல்கற்களாக வரலாறு பதிவு செய்துக்கொண்டது.

1) அதிகம் பங்களிக்கும் தமிழ்நாட்டிற்கு குறைவான நிதி ஒதுக்கீடு.

"நமது நாட்டின் வளர்ச்சியிலும் ஒன்றிய அரசின் நிதி ஆதாரங்களிலும் தமிழ்நாடு முக்கிய பங்களிப்பை தருகிறது என மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்குத் தெரியும். இந்தியாவின் மொத்த உள்நாட்டு வளர்ச்சியில் தமிழ்நாட்டின் பங்கு 9.22 விழுக்காடு. ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 6 விழுக்காடு. இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 8.4 விழுக்காடு. ஜவுளித்துறை ஏற்றுமதியில் 19.4 விழுக்காடு. தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 33 விழுக்காடு. ஆனால் ஒன்றிய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் பங்கு 1.21% மட்டுமே, இதனை அதிகப்படுத்த வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிற்காக வாதிட்டார்.

'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்கிற திராவிட இயக்கத்தின் அந்நாளைய குரலில், 'வாழவைக்கும் தெற்குக்கு வஞ்சனை செய்வது தகுமோ' என்று உறுதியோடு அவர் கேட்டார்.

2) ஒன்றிய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் திட்டங்கள்.

இந்திய அரசியல் சாசனத்தில் பிரிவு 282 அடிப்படையில், ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் தங்கள் பட்டியலுக்கு வெளியே உள்ள அதிகாரத்தில் கூட, அந்த அதிகாரத்திற்கு உரிய அரசுகளோடு இணைந்து திட்டங்களை செயல்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மாநில பட்டியல் அல்லது ஒத்திசைவு பட்டியலில் உள்ள அதிகாரங்களில், ஒன்றிய அரசு நிதி வழங்கி, ஒன்றிய – மாநில அரசின் இணைவு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

ஒரு வகையில் மாநிலங்களின் அதிகாரங்களை நிதியுதவி வழியாக கட்டுப்படுத்தும் முயற்சி இது. மிக குறைவான அளவில் இருந்த இந்த திட்டங்கள் கடந்த 2021–2022 நிதியாண்டில் ஒட்டுமொத்த நிதி பங்கீட்டில் 23 விழுக்காடு என்கிற அளவிற்கு வளர்ந்து நின்றது.

இந்த நிலையில்தான் இந்த இணைவு திட்டங்களில், திட்டத் தொடக்கத்தில் ஒன்றிய அரசு உறுதியளிக்கும் தொகையை படிப்படியாக குறைத்து மாநிலங்களுக்கு அதிக நிதிச் சுமையை ஏற்படுத்தும் போக்கு தொடங்கியது.

இதனை சுட்டிக்காட்டி உறுதி அளிக்கப்பட்ட தொகை திட்டத்தின் இறுதி வரையில் வழங்கப்படுவதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்.

மாண்புமிகு பிரதமர் அவர்கள் பெயரிலான பயிர் காப்பீட்டுத் திட்டம் 49 விழுக்காடு ஒன்றியத்தின் பங்கு, 49 விழுக்காடு மாநிலத்தின் பங்கு, 2 விழுக்காடு பயனாளரின் பங்கு என வரையறுக்கப்பட்டு தொடங்கப்பட்டது. இன்றைக்கு ஒன்றிய அரசின் பங்குத்தொகை 25 விழுக்காடாக குறைந்திருக்கிறது, இதனால் ஏற்படுகிற நிதிச் சுமையை மாநில அரசுகள் ஏற்க வேண்டிய சூழல் நிலவுகிறது.

ஏறக்குறைய ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் அனேக திட்டங்களில் இதுதான் நிலை.

யாரும் பேசாமல் மௌனமாக இருந்த இந்தப் பொருண்மையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுவெளியில் பேசி, மாநில சுயாட்சியின் வலிமைமிக்க குரல் 'திராவிட மாடல்' அரசின் குரல் என்பதை உறுதி செய்தார்.

3) ஜி.எஸ்.டி நிலுவைத் தொகை

மாநிலங்கள் வரி விதிப்பு உரிமையை இழந்த பிறகு ஜி.எஸ்.டி தொகை பங்கீடு மற்றும் இழப்பீட்டுத் தொகை ஆகியவற்றில் பெருமளவு நிலுவைத் தொகை ஒன்றிய அரசால் தொடர்ந்து வைக்கப்பட்டு கொண்டே வருகிறது.

இதனை சுட்டிக்காட்டி 15.05.2022 வரையில் தமிழ்நாட்டரசிற்கு ஒன்றிய அரசிடமிருந்து ரூ.14,006 கோடி ரூபாய் ஜிஎஸ்டி நிலுவைத் தொகை வர வேண்டி உள்ளது, அதனை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

அடுத்த நான்கு நாட்களில், மொத்தமாக மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய ஜிஎஸ்டி இழப்பீட்டு

நிலுவைத் தொகையான ரூ.86,912 கோடியை விடுவித்தது ஒன்றிய அரசு. திராவிட மாடல் அரசின் உரிமைக்குரல், இந்தியாவில் அனைத்து மாநிலங்களுக்கும் நிதியை பெற்றுக்கொடுத்தது.

தொடர்ந்து 11.07.2022 அன்று காந்திகிராம பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு பிரதமர் அவர்களிடம், கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்கிற கோரிக்கையை முதலமைச்சர் அவர்கள் முன்வைத்தார். இதே கோரிக்கையை வலியுறுத்தி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன் அவர்கள் தனியார் அறக்கட்டளை வழியாக வழக்கு தொடர்ந்திருக்கிறார். திமுக நாடாளுமன்ற உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ அவர்கள் இவ்வழக்கில் வாதிட்டு வருகிறார்.

நெருக்கடி நிலை கால அநீதியின் வீரியமிக்க அடையாளமாக இன்றைக்கும் கல்வி ஒத்திசைவு பட்டியலில் இருந்து வருகிறது. இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளும் விளைவுகளும் பாரதூரமானவை, அதனால் கல்வி மாநில பட்டியலுக்கு மீண்டும் மாற்றப்பட வேண்டும் என, அதே நெருக்கடி நிலை கால போராட்டங்களின் வலிமைமிக்க அடையாளமாகவுள்ள முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

தற்போது 08.04.2023 அன்று தமிழ்நாட்டிற்கு அலுவல்ரீதியாக சுற்றுப்பயணம் வந்த மாண்புமிகு பிரதமர் அவர்களிடம், ‘‘ஒன்றியத்தில் உண்மையான கூட்டாட்சி இருக்க வேண்டும் என்றால் மாநிலங்கள் சுயாட்சி தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்பதை எங்களை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் வலியுறுத்தி வந்தார்கள்.

ஒரு மண்டபத்தின் மேல் பகுதியில் அனைத்து வலுவையும் வைத்துவிட்டு, பலமற்ற தூண்களை மண்டபத்தை தாங்குவதற்காக வைப்பது கேலிக்கு உரியது அல்லவா? என்று கலைஞர் கேட்டார்.

மக்களுக்கு நெருக்கமானது மாநிலங்களாக இருப்பதால் மக்கள் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய கடமை மாநிலங்களுக்கே அதிகம் உள்ளது. எனவே மாநிலங்களுக்கு நிதி தேவையும், மாநில மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதிலும் ஒன்றிய அரசின் ஒத்துழைப்பு மிக மிக தேவை’’ என்று மாநில சுயாட்சியின் அடிப்படைத் தேவைகள் குறித்து, திராவிட இயக்கத்தின் காலா காலமான குரலை பதிவு செய்திருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

ஒவ்வொரு முறை மாண்புமிகு பிரதமர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு வரும்போதும், பிரதமரை முதலமைச்சர் சந்திக்கிற போதும் இந்தியா முழுமைக்கும் மாநில சுயாட்சி பாடத்தை எடுத்துக் கொண்டே இருகிறார் ‘திராவிட மாடல்’ அரசின் மாண்புமிகு. முதலமைச்சர் அவர்கள்.

இந்தியா முழுமையும் உள்ள சட்டமன்றங்களின் கண்ணியத்தை காப்பாற்ற, விடுதலை இந்திய வரலாற்றில் அழுத்தமான குரலை பதிவு செய்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

‘‘சட்டத்தை உருவாக்கி நிறைவேற்றும் அதிகாரத்தைச் சட்டமன்றத்துக்கு வழங்கிவிட்டு, அதற்கு ஒப்புதல் கையெழுத்து போடும் உரிமையை ஒரு நியமன ஆளுநருக்கு வழங்கியது மக்களாட்சி மாண்பல்ல’’ என்று சட்டமன்றங்களின் இறையாண்மைக்காக உரிமைக்குரல் எழுப்பியுள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

மாநில சுயாட்சி என்கிற தத்துவம் அதிகாரம் தொடர்புடையது மட்டுமல்ல, மாநிலங்களின் கண்ணியம் தொடர்புடையது, இன்னும் நீட்டித்து பார்த்தால் மாநில மக்களின் சுயமரியாதை தொடர்புடையது.

நூற்றாண்டுகளுக்கு முன்பே சுயமரியாதைக்காக இயக்கம் கண்டவர்களின் வழித்தோன்றலாக வீற்றிருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அதனால் தான் மாநில சுயாட்சி என்கிற இலட்சியத்தின் தலைமகனாக உயர்ந்து நிற்கிறார்.

பல்லாயிரம் பக்கங்களில் எழுதி குவிக்கப்பட்ட மாநில சுயாட்சி வாதங்களை, ‘ஒன்றியம்’ என்கிற ஒற்றைச்சொல்லில் அடக்கியவர் அவர்.

‘தமிழ்நாடு’ என்று அண்ணா அழைத்தபோது பதறியவர்களின் வழித்தோன்றல்கள், ‘ஒன்றியம்’ என்று அவரது தம்பி அழைக்கும்போதும் பதறுகிறார்கள். தமிழ்நாடு என்ற அரசியலால் தமிழ்நாடு வளர்ந்ததை போல, ஒன்றியம் என்னும் அரசியலால் இந்தியா வளரப்போகும் நாள் தொலைவில் இல்லை.

இந்தியாவின் வளர்ச்சிக்கும், ஒருமைப்பாட்டிற்கும், மாநிலங்களின் சுயமரியாதைக்கும் தமிழ்நாடு பரிந்துரைத்த அரசியலமைப்பு தீர்வு ‘மாநில சுயாட்சி’. அதற்காக நாளெல்லாம் போராடும் பணியை தனதாக்கிக் கொண்டுள்ளார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் தொடங்கிய, மாநில சுயாட்சி குரலின் தொடர் ஓட்டம் அவர் காலத்திலேனும் வெற்றி பெறுவது தான், மக்களாட்சி என்ற சொல்லுக்கு நாம் செய்யும் நியாயமாக அமையும்.

★★★